# விதைத்ததில் விளைந்தது

வலிகிழக்கு வலம் - பாகம் 1



மா. ஞானலிங்கம்

# விதைத்ததில் விளைந்தது.

## வலிகிழக்கு வலம் - பாகம் 01


மாணிக்கம் ஞானலிங்கம்.

"அபிராமி மகால்"
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.



அபிராமி பதிப்பகம்
2014

# நூல் விபரப்பட்டியல்


| | | |
|---|---|---|
| நூல் | : | "விதைத்ததில் விளைந்தது"<br>வலி கிழக்கு வலம் - பாகம் 01 |
| விடயம் | : | வலி கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில்<br>உள்ள அமைப்புகளின் வரலாறு |
| ஆசிரியர் | : | மாணிக்கம் ஞானலிங்கம் |
| முதற்பதிப்பு | : | 2014 நவம்பர் 18 |
| வெளியீடு | : | அபிராமி பதிப்பகம், அச்சுவேலி<br>077 2411504 |
| பக்கங்கள் | : | XII + 388 |
| தாள் | : | 80 gsm |
| பிரதிகள் | : | 400 |
| ஆக்கப் பெறுமதி | : | 740/= |
| அச்சமைப்பு | : | அன்ரா பிறிண்டேர்ஸ்<br>356^A, கஸ்தூரியார் வீதி,<br>யாழ்ப்பாணம்.<br>தொ.பே.இல - 021 221 7279 |

அறிவுதந்து, ஆற்றல் நிரவி,
எக்கணமும் தேயாத செயல் வலியுடன்
அறன் வலியுறுத்திய
எந்தையும் - தாயும்.
**மாணிக்கம் - அன்னம்**





மற்றும்
ஆய்தமாகிடும் எழுத்தெனும் உண்மையை
நேர்மைத்திறம் நிகரிடச் செய்து
ஊடகப் பணிக்குள் எனைச் சேர்த்த
சொல்லாளன்
இன்னரும் தாய்மாமனார்
**வீரகேசரி - சி.செல்லத்துரை**

ஆகிய

# வானோர்க்கான அன்புப் படையல்




# பிரதேச செயலகம், வலிகாமம் கிழக்கு – கோப்பாய்.
# ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය, වැලිකාමම නැගෙනහිර – කෝපායි.
# Divisional Secretariat, Valikamam East – Kopay.

Divisional Secretary: 021 223 0013 Fax : 021 223 1211 E-mail: valiesast@gmail.com


| | | |
|---|---|---|
| எனது இல / මගේ අංකය / My No : VE/DS/General/2014 | உமது இல / ඔබේ අංකය / Your No : | திகதி / දිනය / Date : 27.10.2014 |

## கோப்பாய் பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலக பிரிவின் பெருமையும் சிறப்பும் வாய்ந்த பிரசித்தமான இடங்களின் வரலாற்றை நூல் வடிவில் வடிவமைக்கும் பெருமை போற்றுதற்குரியது. இன்றைய காலத்தில் பண்பாட்டினை அழியவிடாது பேணிப்பாதுகாக்கும் கடமை ஒவ்வொருவருக்கும் உரியது. அந்த வகையில் எமது பண்பாட்டு விழுமியம் ,நெறிமுறைகள் ,பழக்க வழக்கங்கள் என்பன பண்பாட்டு மாற்றத்தினால் இன்று அருகி வருகின்றது. இதனை கட்டியெழுப்பும் முகமாக எமது பிரதேசத்தின் உண்மைத்தன்மையினை வெளிப்படையாக சிறப்புடன் வெளிக்கொணரும் இந்நூல் சிறப்புக்குரியதாகும்.

திரு.மா.ஞானலிங்கம் அவர்கள் ஆசிரியராக பணியாற்றி ஒய்வு பெற்று பத்திரிகையாளராக கடமையாற்றி வருபவர். தனது ஒய்வுக் காலத்தில் எமது பிரதேசம் சார் விடயங்களை நினைவில் நிறுத்தி இளைய தலைமுறையினருக்கு வெளிப்படுத்தும் , ஆவணப்படுத்தும் செயற்பாட்டை நூல் வடிவில் முன்னெடுத்துள்ளார். இதன் மூலம் எமது பிரதேச மண்ணின் பெருமை நிலைபெறும் என்பதில் ஐயமில்லை.

இந்நூல் எமது பிரதேசத்தில் சிறப்புற காணப்பட்ட பழமையான விடயங்களையும் தற்போது காணப்படுகின்ற தன்மையினையும் கொண்டிருப்பதுடன் எதிர்கால சந்ததி வலிகாமம் கிழக்கு பெருமையினையும் சிறப்பினையும் உய்த்துணர்ந்து கொள்வதற்கும் வழிவகுக்கும்.

திரு.மா. ஞானலிங்கம் அவர்களுடைய இந்நூல் ஆக்க பணி தொடந்து வளர்ச்சியடைய எனது உளமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

மருதலிங்கம் பிரதீபன்
பிரதேச செயலர்,
பிரதேச செயலகம்.
கோப்பாய்.

ம.பிரதீபன்
பிரதேச செயலர்


Asst.Divisional Secretary : 021 223 0014 Accountant: 021 223 0012 Asst.Director Planning : 021 321 6421
Administrative officer : 021223 0015 General : 021 223 0011 Samurdhi Manager : 021 223 0489

உதயன்

උදයන් | Uthayan



# சமூகப் பெறுமானம் மிக்க கனதியான படைப்பு

காலத்தின் கண்ணாடிகளாக விளங்குவன ஊடகங்கள். கடந்த மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் எமது நாட்டில், மிகக் குறிப்பாகத் தமிழர் பிரதேசங்களில் அச்சு ஊடகமே உயர்ந்தும் முன்னணியிலும் நின்று, மக்கள் சார்பில் அவர்களது அனைத்து வாழ்வியல், அரசியல் தேவைகளையும் எடுத்தியம்பி பல வகைகளிலும், வழிகளாலும் குரல் கொடுத்து வந்தன; வருகின்றன.

கடந்த மூன்று தசாப்தங்களாக, உதயன் தனக்குரிய மக்கள் பணியை பழுதில்லாத் திறனுடன் ஆற்றி வருகிறது. அதற்கு ஆணிவேராக விளங்குபவர்களில் முன்னணி பெறுபவர்களில் ஊடக வெளிக்கள பணியாளர்களான செய்தியாளர்களும் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

உதயன் (நாளேடு) உதித்த முதல் நாள் (1985 நவம்பர் 27) தொடக்கம் இன்று வரை இடைவிடாது ஊடகப்பணி ஆற்றி வரும் எமது அச்சுவேலிப் பிரதேச செய்தியாளர் மாணிக்கம் ஞானலிங்கம், எங்கள் குடும்பத்தின் மிக மூத்த உறுப்பினர்கள் சிலரில் ஒருவராவார். இவர் அதற்கு நான்கு வருடங்களுக்கு முன்னரே கொழும்பில் அச்சான தினபதி, சிந்தாமணி பத்திரிகைகளின் அச்சுவேலிப் பிரதேச செய்தியாளராகச் சேர்ந்து பணி புரிந்தவர். ஒரு காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்ட முதலாவது தமிழ் நாளேடான "ஈழநாடு" பத்திரிகையிலும் பிரதேச செய்தியாளராக சேவை ஆற்றியவர்.

எங்கள் பிரதேசங்களின், கிராமங்களின் வளங்களையும் மக்களின் தொழில்சார், கல்வி சார், சமயம்சார்ந்த வரலாறுகளையும் பதிவு செய்வது, மக்கள் ஊடகமான உதயன் நாளேட்டின் முக்கிய பணிகளில் ஒன்றாக அமைய வேண்டும் எனக் கருதினோம்.

அதன்பால், வாரம் தோறும் பிரதேசவலம் என்ற சிறப்பு அம்சத்தை ஆரம்பித்தோம். அது தொடங்கப்பட்ட காலத்திலிருந்து 2010, 2011, 2012, 2013 ஆம் ஆண்டுகளில் வலி. கிழக்குப் பகுதியை திரு. மாணிக்கம் ஞானலிங்கம் எழுதி வந்தார். அதன் தொகுப்பு நூலை இப்போது வெளியிடுகிறார்.


New Uthayan Publication (Pvt) Ltd.
361, KASTHURIYAR ROAD, JAFFNA.
Telephone & Fax
021-222-22030, 2083, 3837.

උදයන් **உதயன்** *Uthayan*

இந்தத் தொகுப்பு நூலில், வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் அடங்கும் கல்விக் கூடங்கள் (25), வழிபாட்டுத் தலங்கள் (24), சேவை நிலையங்கள் (10), அரச நிர்வாக அலகுகள் (05), கூட்டுறவு அமைப்புகள் (05) கிராமங்கள், அவற்றின் சனசமூக நிலையங்கள் (10), மருத்துவ சேவை அலகுகள் (03) ஆகியவை வெளிச்சத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. மொத்தத்தில் எண்பத்தியிரண்டு (82) அமைப்புகளின் வரலாறும் வளர்ச்சியும் கனதியான வகையில் நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

நமது பிரதேசங்களின் பல்வகைசார் சிறப்புகளையும், அவற்றின் வளர்ச்சிப் பாதைகளையும், அதே வேளை பலவீனங்களையும் வெளிப்படுத்தி, மேன்மேலும் அவை மக்கள் நலன் நாடிச் சேவை ஆற்றுவதற்கு இவ்வகைப் படைப்புகள் பல்லாற்றானும் உதவும்.

கிராமங்கள் பல சேர்ந்ததே பிரதேசம். ஒவ்வொரு பிரதேசத்திற்கும் பல சிறப்புக்களும், வெவ்வேறு வகைசார் தனித்துவங்களும் உண்டு. அவற்றைப் பதிவுகளாக்குவதில் நாட்டம் கொள்வது, எமது மாவட்டத்தில் ஒப்பீட்டளவில் மிகவும் குறைவு. ஒவ்வொரு பிரதேசத்தினதும் கல்வி, கலாசார, வாழ்வாதார, தொழில் முறைகள் அடுத்த சந்ததியினருக்கு எடுத்துச் செல்லப்பட வேண்டியது அவசியம்.

அவ்வாறு செய்வதன் ஊடாகவே, எதிர்காலச் சந்ததியினருக்கு இப்போதைய வாழ்க்கை இயல்புகளையும், சமகால மாற்றங்களையும் அவர்களுக்கு அறிமுகப்படுத்த இயலும். அதன் பெறுபேறாக அந்தந்தப் பிரதேசங்கள் அடைந்த முன்னேற்றங்களையும் வளர்ச்சிகளையும் அடிப்படையாக வைத்து புத்தாக்கங்களை வெளிக்கொணர வழி பிறக்கும்.

நன்றே செய்வீர அதனை இன்றே செய்வீர என்ற உணர்வையும் உந்து தலையும் இயல்பாகவே இந்தப் பணி உற்பவிக்கும்.

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் மக்கள் சேவை ஆற்றும் பிரதான அமைப்புக்கள் குறித்து, இந்நூல் தெளிவுடன் எடுத்து இயம்புகிறது. இந்தக் காத்திரமான படைப்பு எதிர்காலத்தில் மாணவர் சமூகத்தின் ஆய்வு முயற்சிகளுக்குப் பெரிதும் கைகொடுத்து உதவும் எனின் தப்பன்று.

ஞான.ஆதவன் என அறியப்பட்ட நூலாசிரியர், தமது நாற்பது ஆண்டு ஆசிரியர் பணியின் விம்பத்தை தமது நூலில் ஒளிர வைத்திருப்பது பெரும் பாராட்டுக்கு உரியதாகும்.

முப்பத்துமூன்று ஆண்டுகால தொடர் ஊடகத்துறை சேவையைக் கடந்து நிற்கும் மூத்த ஊடகவியலாளரான அவரினது படைப்பு மெச்சத் தக்கதும் பாராட்டுக்கு உரியதும் ஆகும். சமுகப் பெறுமானம் பெரிதும் கொண்ட கனதியான இந்தப் படைப்பு, இத்தகைய பணியில் மற்றவர்களும் பயனுள்ள காத்திரமான பங்களிப்பை நல்க உந்து சக்தியாக விளங்கட்டும், அமையட்டும்.

ம.வ.கானமயில்நாதன்,
பிரதம ஆசிரியர்,
உதயன்.

New Uthayan Publication (Pvt) Ltd.
361, KASTHURIYAR ROAD, JAFFNA.
Telephone & Fax
021-222-22030, 2083, 3837.

# நினைவுகளில்......



எமது பிரதேசத்தின் வாழ்வுக்கும், வளத்துக்கும் நிலைக்களன்களாக இருந்து, சமூகமேம்பாட்டிற்கும் - விழுமியக் காப்பிற்கும் - பொருண்மிய உயர்விற்கும் உதவிய நிறுவனங்கள் இன்று முன்னரிலும் உயர்வுபெற்றுள்ளபோதிலும் அவற்றின் சரித்திரம் உரியமுறையில் ஆவணப்படுத்தப்படாத அவலம் தொடர்கிறது. வரலாற்றின் உண்மை விளம்பலோடு, அதனதன் பூர்வீகத்தின் வெளிப்படையறிவித்தலோடு பாதுகாக்கின்ற முறையில் அவ்வாறானவற்றை தக்கமுறையில் ஆவணப்படுத்தி எதிர்காலத் தலைமுறையின் வாசிப்புக்காகக் கையளிப்பதையும் சமூகக் கடமைகளில் ஒன்றாகக் கொள்ளலாம். "வரலாற்றுச் சபிப்பிற்குரிய" ஈழத்தமிழினத்தின் ஆவணப்படுத்தற் குறைபாடுகள் காரணமாகவே, வரலாற்றுச் சிறப்புக்களின் மீதான மேலாதிக்கத் திணிப்பும், உண்மைக்குப் பிறழ்வான திரிபுகளும் எம்மீது சுலபமாக ஏவப்பட்டன, இன்னமும் ஏவப்படுகின்றன. இந்நிலைமைகளுக்கு எதிராக சிறிய முயற்சியுடைய ஆவணப்படுத்தல்களினால்கூட வலிந்த எதிர்ப்பினை ஈட்டமுடியும் என்ற நம்பிக்கையை எம்மண்ணின்பால் அன்புடைய யாவரிடமும் கொண்டு சேர்த்திடல் அவசியமானதாகும்.

இந்தவகையில் வலிகாமம் கிழக்குச்சீமையின் இற்றைக்குரிய சமூக நிறுவனங்களின் வரலாற்றை எழுத்துருவாக்கி ஆவணப்படுத்தும் முயற்சிகள் வெவ்வேறு அமைப்புக்களால் காலத்துக்குக் காலம் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இருப்பினும்,நோக்கங்களிலும், கட்டமைப்புக்களிலும், நீடிப்பிலும் காணப்படுகின்ற வித்தியாசங்கள் நிறைந்த வேற்றுமைகளினால் பலப்பல சமூக நிறுவனங்களின் தேவையுடைய பணிகள், வெளித் தெரிவிக்கப்படுவதில் இருந்து தவிர்க்கப்பட்டதுடன் தவிக்கவும் விடப்பட்டன. ஒவ்வொரு தளமாக தகவல் திரட்டலுக்காக இறங்கிய வேளைகளில் இவை தொடர்பான உண்மை நிலையினை அவதானிக்க முடிந்தது. "கையெழுத்துப் பிரதிகளாக இருந்தவைகள்", "1987, 1990, 1995 ஆகிய இடப்பெயர்வுகளின்போது அழிக்கப்பட்டவைகள்", "போதிய பாதுகாப்பு பொறிமுறை இன்மையால் தொலைக்கப்பட்டவைகள்", "தொடர்புடையவர்களின் புலம்பெயர்வு அல்லது மரணம்" போன்ற காரணங்கள், தேடலின் இடையிடையே எழுந்தன.

இத்தொடருக்கான பத்திகளை எழுத முனைந்தபோது தகவல் பெற்றுக்கொள்ளல், பெற்றுக்கொண்ட தகவல்களை உறுதிப்படுத்தல், வேறுபாடுடைய தகவல்களை சமநிலைப் படுத்தல் போன்று எதிர்கொண்ட சிரமங்களைப் போலவே, பத்திரிகையில் கட்டுரையாக வெளியாகிய பின்னர், "சொல்லப்பட்டவைகள்" தொடர்பாக தொடர்புடையவர்களிடமிருந்து வந்த மறுப்புக்கள், எதிர்பார்ப்புகள் என்பனவும் தளர்வுறுத்தத் தவறவில்லை. "மறுத்துக்கூற்றுக்கான" தகுந்த ஆதாரங்களை சேகரித்திருந்ததன் மூலம் பெரும்பாலான எதிர்ப்புணர்வுகளின்போதுப் அவர்களுக்கே

உண்மைநிலையை தெளிவுபடுத்தவும் முடிந்தபோது, தேடலின் தீவிரம் பற்றி தனக்குள் திமிர் கொண்டு நிமிர்ந்ததென் பேனா. தொடுக்கப்பட்டுள்ள இவ்வாக்கங்கள் பத்திரிகைத் தொடராக பிரசுரிக்கப்பட்டு வெளியான வேளைகளில் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் - நிர்வாகிகள் - சமகால அறங்காவலர்கள் - உரிமையாளர்கள் மற்றும் குறித்த நிறுவனம் சார் சமூகத்தினரும், ஏந்து பிரதேச மக்களும் பார்த்தும் படித்தும் ஏற்றுக்கொண்டவைகளே என்பதுடன், அவ்வகைக்குரிய வழியில் திருத்தமான தகவல்களைத் தாங்கியவை என்பதில் வெகு நம்பிக்கை கொள்கின்றேன்.

என்னினிய "உதயன்" நாளேட்டில், 'வலி கிழக்கு வலம் பத்தித்' தொடரை எழுது மாறு என்னை அன்பு வலியுறுத்தியதோடு, தக்க களம் கொடுத்தும் உதவியவரான பிரதம ஆசிரியர், உயர்திரு ம.வ. கானமயில்நாதன் அவர்கள் அணிந்துரையும் வழங்கிப் பெருமை கொள்ளச் செய்துள்ளார். அவர்கள் ஞாலப்பெரும் நன்றிக்கு உரியவர். 1982 ஆம் ஆண்டு ஜூலை மாதம் தினபதி - சிந்தாமணி பத்திரிகையில் கோப்பாய் பிரதேச செய்தியாளராக இளைஞனாய் இருந்த எனக்கு நியமனம் வழங்கியதோடு, 1985ல் உதயன் உதித்த வேளையில் தன் கரம் பற்றி பத்திரிகைத் துறையில் என்னை வழிநடத்திய நல்லாசான் அவர். ஊக்கமும், நல்லாதரவும் தந்து ஊடகஅறம் வலியுறுத்தி நூல்வடிவு பெறும் இக்கட்டுரைகள் அனைத்துக்குமான பிற்புலம் உதயனும், ஆசிரியரும் வழங்கியதே! 2010 தொடங்கி 2013 வரையான காலப்பகுதிகளில், 'ஞான ஆதவன், 'ஞானி' என்னும் பேனாப் பெயர்களில் கட்டுரைத் தொகுப்புக்கள் உதயனின் தொடராக வாரந்தோரும் வெளிவந்தன. அவற்றினை தொகுத்து நூலுரு வழங்கும் எண்ணப்பாட்டினை காலம் தாழ்த்தாமல் செயற்படுத்து மாறு அன்புரிமையுடன் வலியுறுத்திய எண்ணற்ற நண்பர்களை பேரன்பு மீதுற மீட்டிக் கொள்கின்றேன். எட்டு இயல்களிலும் 82 ஆக்கங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. உதயன் பத்திரிக்கையில் வெளிவந்த கட்டுரைகளைத் தொகுத்து நூல் வடிவில் வெளியிடுவதற்கான அனுமதியை வழங்கியுதவிய "நியூ உதயன் பப்ளிக்கேஷன் (லிமிட்டட்)" முகாமைத்துவப் பணிப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான உயர்திரு. ஈ. சரவணபவன் அவர்களுக்கும், உதயனின் ஆசிரியரான அன்புக்குரிய தம்பி தே. பிரேமானந்த் அவர்களுக்கும், வாழ்த்துரை வழங்கிய வலி. கிழக்கு பிரதேச செயலர் உயர்திரு. ம. பிரதீபன் அவர்களுக்கும் அறிமுகவுரை வழங்கிய யாழ் பல்கலைக்கழகத்தின் ஊடக பயிற்சிமைய விரிவுரையாளர் ம. ஜனகேஸ்வரன் அவர்களுக்கும் அழகுற அச்சுருவாக்கம் செய்து வழங்கிய "அன்ரா" அச்சகப் பணிப்பாளர் மற்றும் பணியாளர்களுக்கும், மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரும்பான்மையான பேனாக்காரர்களுக்குப் போலன்றி, எனது எழுத்தாக்கங் களுக்கான தொழில்நுட்ப - தொடர்பாடல் இணையுதவிகளையும், முதன்மையான - பொருத்தமான விமர்சனங்களால் முன்வைத்துக் கூடவே நடந்த குடும்பத்தினருக்கும் என்னினிய நன்றிகள்.

மா. ஞானலிங்கம்
"அபிராமி மகால்"
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.
0772411504

# உள்ளுறை

01. வலி கிழக்கு பிரதேச வலம் ஓர் அறிமுகம் ..... 01

**இயல் - 01 மருத்துவசேவை**

02. அச்சுவேலி பிரதேச வைத்தியசாலை ..... 04
03. அச்சுவேலி சுதேச மருந்து உற்பத்தி நிலையம் ..... 09
04. நவக்கிரி அரச மூலிகைத் தோட்டம் ..... 13

**இயல் - 02 சேவை நிலையங்கள்**

05. நீர்வேலி பாலர் பகல் விடுதி ..... 19
06. ஆவரங்கால் சிவசக்தி மணி மண்டபம் - வி.அன்.ரி அறக்கட்டளை ..... 24
07. கோப்பாய் ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டம் ..... 29
08. அச்சுவேலி லங்கா மாதா மடம் ..... 34
09. கோப்பாய் மக்கள் நலன்காக்கும் பிரிவு ..... 38
10. புத்தூர் பரிலூக்கா மெதடிஸ்த திருச்சபை ..... 43
11. வலி கிழக்கு சைவ அருள்நெறி மன்றம் ..... 48
12. உரும்பிராய் கருணை இல்லம் ..... 53
13. அச்சுவேலி செபமாலைதாசர் கன்னியர் மடம் ..... 59

**இயல் - 03 கல்விக் கூடங்கள்**

14. யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி - கோப்பாய் ..... 61
15. கோப்பாய் ஆசிரிய கலாசாலை ..... 66
16. புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி ..... 69
17. அச்சுவேலி மத்திய கல்லூரி ..... 75
18. அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை ..... 80
19. கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி ..... 86
20. இடைக்காடு மகா வித்தியாலயம் ..... 91
21. அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி ..... 97
22. நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி ..... 101
23. ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம் ..... 106
24. சிறுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை ..... 111
25. சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ..... 116

26. வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலயம் .......................................... 121
27. கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாலயம் .......................................... 127
28. பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயம் .......................................... 132
29. புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலை .......................................... 136
30. உரும்பிராய் இந்துக்கல்லூரி .......................................... 141
31. கோப்பாய் மகா வித்தியாலயம் .......................................... 145
32. புத்தூர் பஞ்ஞசீக வித்தியாலயம் .......................................... 148
33. புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம் .......................................... 152
34. கோப்பாய் கந்தவேள் தமிழ்க் கலவன் பாடசாலை .......................................... 157
35. கோப்பாய் வடக்கு றோ.க.த.க. பாடசாலை .......................................... 162
36. இருபாலை சி.சி.த.க. பாடசாலை .......................................... 165
37. அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம் .......................................... 170
38. நீர்வேலி சி.சி.த.க. பாடசாலை .......................................... 174

**இயல் - 4 அரச நிர்வாக அலகுகள்**

39. வலி கிழக்கு பிரதேச செயலகம் .......................................... 179
40. வலி கிழக்கு பிரதேச சபை .......................................... 184
41. வலி கிழக்கு குடிநீர் விநியோகத்திட்டம் .......................................... 193
42. அச்சுவேலி கோழிக்குஞ்சு உற்பத்திநிலையம் .......................................... 196
43. வலி கிழக்கு விதாதா வள நிலையம் .......................................... 200

**இயல் - 05 ஆலயங்கள்**

44. நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் .......................................... 205
45. அச்சுவேலி காட்டுமலைக் கந்தசுவாமிகோவில் .......................................... 209
46. அச்சுவேலி உலவிக்குளம் சித்திவிநாயகர் .......................................... 213
47. நிலாவரை நவசைலேஸ்வரமும் - வற்றாநீர்நிலையும் .......................................... 218
48. நீர்வேலி வாய்க்காற்றரவை மூத்த விநாயகர் .......................................... 223
49. புத்தூர் சிவன் கோவில் .......................................... 229
50. ஆவரங்கால் நடராச இராமலிங்கேஸ்வரர் .......................................... 235
51. புத்தூர் காரைக்கூடல் வைரவர் .......................................... 239
52. உரும்பிராய் மூன்று கோயில்களில் கருணாகரப்பிள்ளையார் .......................................... 243
53. மூன்று கோயில்களில் முருகன் .......................................... 247
54. மூன்று கோயில்களில் பர்வத வர்த்தினி அம்மன் .......................................... 251
55. சிறுப்பிட்டி மனோன்மணி அம்பாள் .......................................... 256

56. மாசிவன் ஸ்ரீ மீனாட்சி அம்மன் ....................................................261
57. சிறுப்பிட்டி ஸ்ரீ விஸ்ணு துர்க்கா....................................................265
58. சிறுப்பிட்டி சப்த கன்னியர் ஆலயம் ....................................................270
59. வளலாய் பெரிய நாகதம்பிரான்....................................................274
60. இருபாலை கற்பக விநாயகர்....................................................278
61. அச்செழு சிவகாமி அம்பாள் ....................................................283
62. இடைக்காடு புவனேஸ்வரி அம்பாள்....................................................288
63. ஆவரங்கால் கன்னாரை ஸ்ரீ ராஜராஜேஸ்வரி ....................................................294
64. சிறுப்பிட்டி மேற்கு ஞானவைரவர்....................................................298
65. வளலாய் பிள்ளையார்....................................................304
66. அச்சுவேலி புனித சூசையப்பர்....................................................310
67. அச்சுவேலி புனித அந்தோனியார்....................................................315

**இயல் - 06 கூட்டுறவு அமைப்புக்கள்**

68. வலி கிழக்கின் வாழ்வாதாரத்தில் கூட்டுறவு....................................................320
69. நீர்வேலி ஐக்கிய வாழைக்குலை கூட்டுறவுச் சங்கம்....................................................330
70. யாழ் மாவட்ட புடைவை நெசவாளர் சங்கம் ....................................................334
71. நீர்வேலி ஸ்ரீ முருகன் மாதர் சி.க.வ.கூ. சங்கம்....................................................338
72. அச்சுவேலி ப.தெ.அ.கூ. சங்கத்தின் தும்புப்பொருள் உற்பத்தி....................................................342

**இயல் - 07 கிராமங்களும் சனசமூக நிலையங்களும்**

73. அச்சுவேலி செல்வநாயகபுரம் ....................................................346
74. வாதரவத்தை கிராமம்....................................................350
75. புத்தூர் மேற்கு கலைமதி....................................................355
76. சிறுப்பிட்டி ஜனசக்தி....................................................359
77. இடைக்காடு மாணிக்க இடைக்காடர் சனசமூகநிலையம் ....................................................364
78. கல்வியங்காடு ஞான பாஸ்கரோதயா....................................................370
79. வளமோடு வாழ்வதற்காக வளலாய்....................................................372

**இயல் - 08 நிலவரைகள்**

80. கோப்பாய் குதியடிக் குளம்....................................................378
81. வல்லைப் பரவைக்கடல் மீன்பிடி....................................................382
82. யாழ். மாவட்டத்தில் முதலாவது இருவழிப்பாதை ....................................................386

# 01 வலி. கிழக்குப் பிரதேச வலம் ஓர் அறிமுகம்

யாழ் மாவட்டத்தின் பிரதேச செயலகப் பிரிவுகளில் ஆகக்கூடிய மக்கள் வாழும் பிரிவாக விளங்குவது வலி. கிழக்குப் பிரதேச செயலகப் பிரிவாகும். வலிகாமம் பெரும் பிரிவின் கிழக்குத் திசையில் அமைந்திருப்பதால் வலி. கிழக்குப் பிரிவு என அழைக்கப்படும். இந்தப் பிரதேசம், உள்ளூராட்சி அமைப்பில் வலி. கிழக்குப் பிரதேச சபையின் அச்சுவேலி உப அலுவலகம். புத்தூர் உப அலுவலகம், நீர்வேலி உப அலுவலகம் , கோப்பாய் உப அலுவலகம் , உரும்பிராய் உப அலுவலகம் என ஐந்து உப அலுவலகங்களைக் கொண்டுள்ளது. நிலப்பரப்பளவில் 104.36 சதுர கிலோ மீற்றரையும் குடித்தொகை அளவில் 2009ஆம் ஆண்டு நவம்பரில் உள்ளபடி 23,145 குடும்பங்களைச் சேர்ந்த 77,407 பேர் வாழ்கின்றனர்.

வலி கிழக்குப் பிரதேச செயலர் பிரிவுக்கான செயலகம் கோப்பாயிலும், பிரதேச சபையின் தலைமை அலுவலகம் புத்தூரிலும் நிரந்தரக் கட்டடங்களில் செயற்படுகின்றன. ·வலி. கிழக்குப் பிரிவின் குடித்தொகையின் பரம்பலுக்கு ஏற்ப இரண்டு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் வலி. கிழக்கு வடபகுதி (அச்சுவேலி) பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் , வலி கிழக்குத் தென்பகுதி (நீர்வேலி) பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இரண்டும் 70இற்கு மேற்பட்ட கிளை நிலையங்களைக் கொண்டு செயற்படுகின்றன. அதேபோன்று பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம் இரண்டிலொன்று அச்சுவேலியைத் தலைமையிடமாகவும் மற்றையது கோப்பாயை தலைமையிடமாகவும் கொண்டு செயற்படுகின்றன.

செம்மண், களிமண், நரைமண் , மணல்மண் என நால்வகை மண்ணையும் அதற்கு ஏற்ற நீர்வளம், நிலவளம் என்பனவற்றையும் கொண்டுள்ள இந்தப் பிரதேசத்தில் பெருமளவு மக்கள் விவசாயிகளாக இருந்தபோதிலும், கல்வியில்

உயர்ந்த பிரதேசமாக விளங்குகின்றது. தொழில் ரீதியாக கணிசமான தொகையினர் அரசாங்க உத்தியோகத்தர்களாகவும் தனியார் துறையில் கடமைபுரிவோராகவும் உள்ளனர்.

உடல் உழைப்பால் உயர்ந்த மக்கள் வாழும் இந்தப் பிரதேசத்தில் நெல், வாழை, திராட்சை, வெங்காயம், லீக்ஸ், மரவள்ளி, புகையிலை உள்ளிட்ட பயிர் வகைகளும் மரக்கறிப் பயிர் இனங்களும் உபஉணவுப் பயிர்களும் மிகப் பெரிய அளவில் செய்கை பண்ணப்பட்டு, குடாநாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் தென்னிலங்கைக்கும் சந்தைப்படுத்தப்படுவது உண்டு. இந்தப் பிரதேசத்தின் தென்னை - பனை வளங்களும் மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு உரிய முறையில் பயன்படுத்தப்படுகின்றன.

கல்வியால் உயர்ந்த வலி. கிழக்குப் பிரிவிலும் ஆசிரியர் பயிற்சி நெறிகளை வழங்குவதற்கான தேசிய கல்வியியல் கல்லூரி, கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை என்பன அமைந்திருப்பது தனிச் சிறப்பாகும். கல்வி நிர்வாக அமைப்பில் கோப்பாய் கல்விக் கோட்டம் என அழைக்கப்படும். இங்கே வண் ஏ.பி.தரத்திலான கல்லூரிகள் 4, வண் சீ தரப் பாடசாலைகள் 3, தரம் 2 பாடசாலைகள் 10, ஆரம்பப் பாடசாலைகள் 20 என 37 கல்விக்கூடங்கள் தற்போது செயற்பட்டுக் கொண்டிருக் கின்றன. 47 கல்விக்கூடங்கள் செயற்பட்ட போதிலும் 1995ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் கோப்பாயில் ஒரு பாடசாலையையும் அச்சுவேலிப் பகுதியில் 5 பாடசாலைகளும் மூடப்பட்டுள்ளன. மூடப்பட்ட பாடசாலைகளை மீள ஆரம்பிப் பதற்கோ அல்லது அந்தப் பாடசாலைகளுக்கு உரிய நிலத்தையும் கட்டடத்தையும் வேறு கல்வித் தேவைக்குப் பயன்படுத்துவதற்கோ கல்விப்புலம் சார்ந்த நிலையில் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாமல் இருப்பது வலி. கிழக்கின் கல்வி வரலாற்றில் கறையாகும். உள்ளூராட்சி அமைப்பில் பதிவு செய்யப்பட்ட பாலர் முன்பள்ளிகள் 70 வரையில் செயற்படுகின்றன.

இந்தப் பிரதேசத்தின் விவசாய நடவடிக்கைக்கு வளமூட்டுவனவாக புத்தூர் கமநல சேவை நிலையமும் உரும்பிராய் கமநலசேவை நிலையமும் அமைந்திருப்பதோடு, இரண்டு கமநல சேவை பெரும்பாக உத்தியோகத்தர்களையும் இரண்டு விவசாயப் போதனாசிரியர்களையும் விவசாய நடவடிக்கைக்கு உரமூட்டுவதாக அமைந்துள்ளன. கால்நடை அபிவிருத்தியைக் கருத்திற் கொண்டு கோப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகம் மற்றும் கால்நடை வைத்திய அதிகாரி உப அலுவலகம் அச்சுவேலியிலும் செயற்படுவதோடு, வலி.கிழக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கமும் அதன் அச்சுவேலிக் கிளையும் செயற்படுகின்றன.

வலி.கிழக்கு மக்களின் வைத்திய வசதியைக் கருத்திற்கொண்டு அச்சுவேலி பிரதேச வைத்தியசாலை, கோப்பாய் பிரதேச வைத்தியசாலை இரண்டும் கணிசமான வைத்திய வளவசதிகளோடு செயற்படுவதுடன், கோப்பாய் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகமும் செயற்படுகின்றது.

வலி. கிழக்குப் பிரதேசத்தின் வகிடு போல் செல்லும் பருத்தித்துறை - யாழ்ப்பாணம் நெடுஞ்சாலை மற்றும் இராச வீதி, சுன்னாகம்-மட்டுவில் வீதி, மானிப்பாய் - கைதடி வீதி என்பன பொது போக்குவரத்துச் சேவைக்கு உரிய வீதிகளாக விளங்குவதோடு வலி. கிழக்கு மக்கள் தமது வாழ்விடத்தில் இருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்தில் போக்குவரத்து வீதிக்குச் சென்று பயணம் செய்யக் கூடிய இயல்புநிலை உள்ளது.

வலி.கிழக்குப் பிரதேச செயவர் பிரிவின் கிழக்கு எல்லையிலுள்ள தொண்டமானாறு குடாக்கடல் நீர் ஏரியில் கணிசமான அளவு கோடை காலத்தில் உப்பு விளைவதோடு மாரி மழையை அடுத்து நீர் தேங்கி நிற்கும் காலப்பகுதியில் மீன்பிடித்தொழில் நடைபெறுவதுண்டு. இந்த வகையில் இந்தப் பிரதேச மக்கள் தமது உணவுத் தேவையைப் பூர்த்திசெய்வதும் இந்தக் குடாக்கடல் நீர்ப்பரப்பில் பிடிக்கப்படும் நண்டு, இறால், மீன்வகைக்கு மாமிச உணவு உண்போர் மத்தியில் நல்ல சந்தைவாய்ப்பும் உண்டு.

வலி.கிழக்கில் வாதரவத்தைப் பிரதேசத்தை மையமாகக்கொண்டு குடிநீர் விநியோகத்திட்டம் நடைமுறையிலுள்ளது. தற்பொழுது குடிநீர் விநியோகத்திட்டம் அச்சுவேலி, புத்தகலட்டி, புத்தூர் கிழக்கு பகுதிக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. குடிநீர் விநியோகத் திட்டத்துக்கான நீர் நிலாவரைப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள குழாய்க்கிணறு மற்றும் புத்தூர் சத்திரத்தடியில் அமைந்துள்ள கிணறுகளின் மூலம் விநியோகிக்கப்படுகின்றது.

வலி.கிழக்குப் பிரதேச மக்கள் குடித்தொகை அளவு மற்றும் வள வசதிகளை அடிப்படையாகக் கொண்டு இரண்டு பிரதேச செயலகப் பிரிவாக ( வலி.கிழக்கு வடபகுதி - அச்சுவேலி ), (வலி.கிழக்கு தென்பகுதி- கோப்பாய் ) பிரிப்பதற்கான முன்மொழிவுகள் வடக்கு மாகாண நிர்வாக மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு நாடாளுமன்றத்திலும் தனிநபர் பிரேரணையாக முன்மொழியப்பட்டுள்ளது. அதனைச் செயல்முறைப்படுத்துவதில் காணப்படும் அசிரத்தை தொடர்பாக மக்கள் மத்தியில் பெரும் கவலை அளிப்பதாக இருந்தபோதிலும், எதிர்காலத்தில் இரண்டு பிரதேச செயலக பிரிவுகளாக மறுசீரமைப்புச் செய்யப்படுவது இந்தப் பிரதேசத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையும்.

உதயன் - 25.02.2010



# 02 அச்சுவேலி பிரதேச வைத்தியசாலை

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவின் அச்சுவேலி தெற்கு கிராம அலுவலர் பிரிவில் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலை அமைந்துள்ளது. யாழ்ப்பாணம் - அச்சுவேலி பிரதான வீதியின் மேற்குப்புறத்தில் வீதியோரத்தில் பொருத்தமான அமைவிடத்தில் வைத்தியசாலை அமைந்திருப்பது நோயாளருக்கு மட்டுமல்ல சகல தரப்பினருக்கும் வசதியாகவே உள்ளது. இந்த அமைவிடம் வலி.கிழக்கு மக்களுக்கு மட்டுமல்ல வடமராட்சி, வலிகாமம், தென்மராட்சி மக்களும் இயல்பு நிலையில் பொதுப் போக்குவரத்து வாகனங்களில் பயணம் செய்து தமது வைத்தியத் தேவையைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு வாய்ப்பாக உள்ளது.

அச்சுவேலி பிரதான வைத்தியசாலையாக இன்று உயர்ந்து நிற்கும் இதன் ஸ்தாபிதம் ஒரு தனிமனிதனின் மக்கள் சேவையின் தீர்க்க தரிசன சிந்தனையின் வெளிப்பாடாகும். அச்சுவேலி மேற்கு அச்சுநகர் வாசியும் அகில இலங்கை ரீதியில் தனது உழைப்பாலும் சேவையாலும் உயர்ந்த சேர்.சிற்றம்பலம் காடினர் அவர்களினால் இந்த வைத்தியசாலை 1946ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. வைத்தியசாலைக்கென அவரால் கொள்வனவு செய்யப்பட்ட 3 ஏக்கர் நிலத்தில் 06.01.1946ஆந் திகதி அடிக்கல் நாட்டப்பட்டு 30.06.1946ஆந் திகதி வைத்தியசாலை திறப்பு விழா நடைபெற்றது.

வைத்தியசாலையின் ஆரம்ப காலகட்டடமானது தற்பொழுதும் முழுமையான பாவனையில் (ஆண்கள் விடுதியாக) உள்ளது. வைத்தியசாலையின் ஆரம்பக் கட்டடத் தொகுதியில் ஆண்களுக்கான விடுதி, பெண்களுக்கான விடுதி, வைத்தியருக்கான அலுவலகம், நிர்வாக அறை, மருந்தகம், சமையல்கூடம் ஆகிய கட்டுமான வசதி களுடன் 40பேர் வரையில் தங்கியிருந்து சிகிச்சை பெறக்கூடிய நிலையில் நிர்மாணிக் கப்பட்டிருந்தது. 1946ஆம் ஆண்டில் இருந்து 1983 வரையும் ஸ்தாபகரினால் நிர்மாணிக்கப்பட்ட கட்டடத் தொகுதியிலேயே வைத்தியசாலை செயற்பட்டது. இன்றும் அவை முழுமையான பயன்பாட்டில் உள்ளன.

கிராமிய வைத்தியசாலையாக, சுற்றயல்கூறாக இருந்து தற்பொழுது பிரதேச வைத்தியசாலையாக மாடிக் கட்டடத் தொகுதியுடன் உயர்ந்து நிற்கும் இதன் வளர்ச்சி மக்களுக்கான வைத்திய சேவை வழங்குவதிலும் உயர்ந்து நிற்கின்றது.

தற்பொழுது காணப்படும் கட்டுமானங்களில் மலேரியாத் தடை சேவை அலகு, தாய்-சேய் சிறுவர் பிரிவு மற்றும் பிரசவ விடுதி, பல்வைத்தியப் பிரிவு, பெண்களுக்கான விடுதி, புதிய நிர்வாக அலகு என்பன காலத்துக்குகாலம் நிர்மாணிக்கப்பட்டு வந்தன வாகும். அத்துடன் பொதுமக்களின் நிதி உதவியுடன் 10 பரப்பு நிலம் 10 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட செலவில் வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினரால் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலையில் கடமையாற்றிய வைத்தியர்கள் என்ற வகையில் டாக்டர் எஸ்.செல்லையா, டாக்டர் எஸ்.சிவபாலன், டாக்டர் ஸ்ரீபிரியதர்சன், டாக்டர் திருமதி. தனேந்திரன், டாக்டர் எஸ்.இராசலிங்கம், டாக்டர் திருமதி கு. பத்மராணி, டாக்டர் எஸ். தர்மலிங்கம், டாக்டர் எஸ்.விமலேந்திரன், டாக்டர் திருமதி எஸ்.ஆனந்தி உள்ளிட்ட பலர் காலத்துக்கு காலம் தமது சேவையை வைத்தியசாலையின் வளர்ச்சி கருதியும் மக்களுக்கான சேவை கருதியும் மேற்கொண்டு வந்துள்ள போதிலும் தற்பொழுது வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியாக டாக்டர் சி. விமலேந்திரன் மற்றும் டாக்டர் திருமதி.எஸ்.ஆனந்தி, பல் வைத்திய அதிகாரியாக டாக்டர் திருமதி கு. பத்மராணி ஆகியோர் கடமையாற்றி வருகின்றனர்.

அச்சுவேலி பிரதான வைத்தியசாலையில் சேர். சிற்றம்பலம் கார்டினர் அவர்களி னால் நிர்மாணிக்கப்பட்ட ஆரம்பகாலக் கட்டடத்துடன், பழைய வெளிநோயாளர் பகுதியும் பிரசவ விடுதியும் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின்

கணக்காளர் க. தம்பிஜயாவினால் அடிக்கல் நடப்பட்டு கட்டியெழுப்பப்பட்டது. 1983 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15ஆந் திகதி தேசியப் பேரவையின் கோப்பாய்த் தொகுதி உறுப்பினர் மு.ஆலாலசுந்தரத்தினால் யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி க. மாணிக்கம் முன்னிலையில் திறந்து வைக்கப்பட்டது. பெண் நோயாளர் விடுதி வைத்தியசாலையின் டாக்டர் ஜே. இராசலிங்கத்தால் அடிக்கல் நடப்பட்டு 03.02.2003ஆந் திகதி யாழ்.பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி செல்வி. உமா சிவபாதசுந்தரத்தால் திறந்து வைக்கப்பட்டது. பற்சிகிச்சை நிலையம் டாக்டர் கு. பத்மராணி அவர்களால் அடிக்கல் நடப்பட்டு 02.03.2000ஆம் திகதி உதவி ஆணையாளர் எஸ். செபநாயகத்தால் திறந்து வைக்கப்பட்டது. மருந்து கட்டுமிடம் யு.என். எச்.ஆர்.நிதி உதவியுடன் நிர்மாணிக் கப்பட்டுள்ளது. இது தற்பொழுது நடமாடும் ஆய்வுகூடத்துக்கான சேவைத்தள மாகவும் மருந்து கட்டும் இடமாகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

வைத்திய அதிகாரியின் விடுதி 01.01.2001இல் அடிக்கல் நடப்பட்டு 01.04.2001ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. தற்பொழுது வைத்தியசாலை பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி சி. விமலேந்திரனின் பயன்பாட்டில் உள்ளது. புதிய மாடிக்கட்டடம் வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினால் பொதுமக்களின் நிதி உதவியுடன் இரண்டு தடவைகளில் 10 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட நிதியில் கொள்வனவு செய்யப்பட்ட 10 பரப்பு காணியில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. 2004ஆம் ஆண்டு வைத்திய கலாநிதி எஸ்.விமலேந்திரனால் அடிக்கல் நடப்பட்டு 21.03.2009ஆம் திகதி சுகாதார சேவைகள் அமைச்சின் செயலாளர் (வடக்கு மாகாணம்) எஸ்.இரவீந்திரன் அவர்களால் யாழ்.மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் முன்னிலையில் திறந்து வைக்கப்பட்டது. வைத்தியசாலையில் மாதாந்தம் 6 ஆயிரம் நோயாளர் வரையில் சிகிச்சை பெறுகின்றனர்.

கடந்த வருடம் (2009ஆம் ஆண்டு) வெளிநோயாளர் பிரிவில் 69768 நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர். வைத்தியசாலையின் அனுமதி பெற்று 3792 நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர். கர்ப்பவதிகளுக்கான சிகிச்சையை 872 பேர் பெற்றுள்ளனர். நீரிழிவு நோய்க்கான சிகிச்சையை 6141 நோயாளர்கள் பெற்று வந்துள்ளனர். 3879 நோயாளர்கள் பல் வைத்திய சிகிச்சை பெற்றுள்ளனர். 7598 நோயாளர்கள் பொதுநோயாளர் சிகிச்சையையும், 672 குழந்தைகளும் சிகிச்சை

பெற்றுள்ளனர். விசர்நாய்கடிக்கு 654 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். வயிற்றோட்ட நோய்க்கு 271 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். 126 குழந்தைகள் பிறந்துள்ளன. வைத்தியசாலையில் 3 பேர் மட்டுமே மரணமடைந்துள்ளனர்.

அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் கடந்த வருடம் சிகிச்சை பெற்றோரின் மாதாந்த சராசரி எண்ணிக்கை 5814 ஆக இருந்த போதிலும் 2009ம் ஆண்டு நவம்பர் - டிசம்பர் மாதங்களில் சிகிச்சை பெற்றோரின் சராசரி எண்ணிக்கை 6693 பேர். இந்த எண்ணிக்கை அளவு 2010ஆம் ஆண்டில் மாதாந்தம் , நாளாந்தம் மேலும் அதிகரித்துச் செல்வதைப் புள்ளிவிபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. இது வன்னிப் பெருநிலப்பரப்பில் இருந்து இடம்பெயர்ந்தோர், மீளக்குடியேறியோர் எண்ணிக்கை அதிகரிப்பதோடு தொடர்புபட்டதாக உள்ளது. வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளர் எண்ணிக்கை அதிகரிப்பினை தற்பொழுது வைத்திய சாலையில் சேவையில் உள்ள ஆளணியினரின் எண்ணிக்கையால் ஈடுசெய்ய முடியாமல் இருப்பதாகப் பொதுமக்கள் தரப்பினால் தெரிவிக்கப்படுகின்றது. இதில் நியாயம் இல்லாமல் இல்லை. வைத்தியசாலையில் உள்ள ஆளணி கடந்த சில வருடங்களுக்கு முன்பு உள்ள சேவை நிலையை கருத்தில் கொண்டு தீர்மானிக்கப்பட்டது. ஆனால் இன்று வைத்தியசாலையை பயன்படுத்தும் நோயாளர் அளவு குறிப்பிடத்தக்களவுக்கு உயர்ந்து உள்ளது.

வைத்தியசாலையில் தற்பொழுது சேவையில் உள்ள ஆளணி என்ற வகையில் மருத்துவர் M.O ஒருவர் (எம்.பி.பி.எஸ்), உதவி மருத்துவர் ஒருவர், தாதியர் நால்வர் உள்ளடங்கலாக சகலதர நிலையிலும் உள்ள பகுதிநேர ஊழியர்களையும் உள்ளடக்கி 43 பேர் மட்டுமே கடமையாற்றுகின்றனர். வைத்தியசாலைக்குச் சிகிச்சை பெறவரும் நோயாளர் தொகைக்கு ஏற்ற வகையில் வைத்தியசாலை ஊழியர் ஆளணியில் மருத்துவர், தாதியர், சிற்றூழியர், பரிசாரகர்கள் எண்ணிக்கை இல்லை என்பது பொதுமக்கள் சார்பில் முன்வைக்கப்படும் பெரும் குற்றச்சாட்டு இது. தேவையைக் கருத்தில் கொண்டு உடனடியாக சீர்செய்யப்படவேண்டும். இந்த இடத்தில் வைத்தியசாலைக்கு சிகிச்சை பெறவந்த 76 வயது முதியவர் ஒருவர் முன்வைத்த கருத்து "சலரோக கிளினிக்குக்கு வருகின்றேன். குறைந்தது 3-4 மணி நேரம் காத்திருந்தே வீடு செல்ல நேருகின்றது. இந்த நேரங்களில் மயக்கம் போட்டு விழுந்து விட நேருகின்றது. ஒரு வைத்தியர்தான் கடமையில் உள்ளார். யாரிடம் புகார் செய்வது என அலுத்துக் கொண்டார்" இந்த இடத்தில் முதியவரின்

உள்ளக் குமுறலில் நியாயம் இல்லாமல் இல்லை. உதவி மருத்துவர் எண்ணிக்கை உடனடியாக அதிகரிக்கப்படவேண்டும். அத்துடன் நாளாந்தம் சேவையில் ஒரு தாதி மட்டும் இருந்து நோயாளர் விடுதியையும் வெளிநோயாளர் பகுதியையும் அவசர சிகிச்சைப் பிரிவையும் கவனிப்பதும் கருத்தில் கொள்ளப்பட்டு உடனடியாகச் சீர்செய்யப்படவேண்டும்.

வைத்தியசாலையின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அவர்களும் மாகாண சுகாதார சேவைகள் அமைச்சு உயர்அதிகாரிகளும் ஆற்றிவரும் பங்கு பணிகள் நன்றியறிதலோடு பாராட்டுக்குரியன. அந்த வகையில் அவர்கள் ஆளணித் தேவையை உடனடியாகக் கருத்திற் கொண்டு நடவடிக்கை எடுப்பார்கள் என வைத்தியசாலை அபிவிருத்திச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன. வைத்தியசாலையின் உடனடித் தேவை என்ற வகையில் பிரேதஅறை நிறுவப்படுவதோடு தற்பொழுது பாவனையில் உள்ள ஆண்கள் விடுதி, சமையல்கூடம் என்பனவும் தாதியர் மற்றும் ஊழியர் களுக்கான விடுதியும் நிறுவப்பட வேண்டும். அத்துடன் ஆய்வுகூட வசதி செய்யப்பட வேண்டும். பிரதேச மட்டத்தில் உள்ள வைத்தியசாலைகளில் நம்பிக்கை வைத்து மக்கள் தமது முழுமையான வைத்தியசேவையைப் பெற்றுக்கொள்ளும் வகையில் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலை சேவைக்கூறுகள் எதிர்காலத்தில் மேலும் உயர்வடைய வேண்டும்.

உதயன் - 12.06.2010, 25.06.2010, 01.07.2010




# 03 தரமான ஔடதங்களைத் தயாரித்து வரும் அச்சுவேலி சுதேச மருந்து உற்பத்தி நிலையம்

அச்சுவேலி - சங்கானை வீதியில் இருந்து தெற்கு நோக்கிச் செல்லும் ஜோன் ராஜா வீதியில் சமுர்த்தி வங்கிக்கு அருகில் அமைந்துள்ளது வடக்கு மாகாண சுதேச மருந்து திணைக்களத்தின் அச்சுவேலி சுதேச மருந்து உற்பத்தி நிலையம்.

பசுமை நிற கூரை அமைப்புடன் நிமிர்ந்து நிற்கும் கட்டடத் தொகுதியில் முதற் கட்டடத் தொகுதி 'நிக்கொட்' நிறுவனத்தின் நிதியுதவியுடன் 90 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு 2009 ஆம் ஆண்டு சுதேச வைத்தியத்துறை அமைச்சரால் திறந்து வைக்கப்பட்டது.

வடக்கு மாகாண சுதேச வைத்தியர் திணைக்களத்தின் ஒரே ஒரு தொழிற்சாலை இதுதான். நிறுவனமயப்படுத்தப்பட்ட நிலையில் செயற்படும் முதலாவது தொழிற் சாலை என்ற பெருமைக்கு உரியது. அச்சுவேலி தொழிற்சாலை செயற்படத் தொடங்கு வதற்கு முந்திய காலப்பகுதியில் கரவெட்டியில் உள்ள சுதேச மருத்துவ நிலையத்தின் ஒரு பகுதியில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சுதேச மருந்துகள் தயாரிக்கப்பட்டன.

தற்பொழுது முழுமையாக மருந்து தயாரிக்கும் பணியில் அச்சுவேலி சுதேச மருந்து உற்பத்தி நிலையம் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. தொழிற்சாலை வளாகத்தில் சுதேச மருத்துவ மருந்தகமும் செயற்படுகின்றது. இதில் நோயாளர்

தமக்குரிய நோய்களுக்கான ஔடதங்களைப் பெற்றுக்கொள்கின்றனர். சுதேச வைத்தியசாலையும் மருந்து தயாரிப்பு நிலையமும் ஒரே வளாகத்தில் செயற்படுவது சுதேச வைத்தியத்துறையில் இழந்திருந்த நம்பிக்கையைப் போக்கி புத்தூக்கத்துடன் நோயாளர் மருந்து பெற்றுச் செல்வதையும் தமது நம்பிக்கையை வெளிப்படுத்தும் விதத்தில் உரையாடிச் செல்வதையும் அவதானிக்க முடிகின்றது.

பரந்த பாக்கல்லும் வறள் நிலத் தாவரங்களும் பற்றைக் காடுமாக காணப்பட்ட இந்தக் காணி கற்பாறை அகற்றப்பட்டு இயல்பாக உள்ள செம்மண்ணுடன் சேர்த்து மண் நிரப்பப்பட்டு சுற்றாடலில் மூலிகைப் பயிர்கள் நடப்பட்டு பராமரிக்கப்படுகின்றது.

"வடக்கு மாகாண சுதேச வைத்தியத் திணைக்களத்தின் கீழ் செயற்பட்டுக் கொண்டிருக்கும் சுதேச வைத்திய நிலையங்களுக்கும், சுதேச மருந்தகங்களுக்கும் தேவையான மருந்துகள் அச்சுவேலி சுதேச மருந்து உற்பத்தி நிலையத்தின் தயாரிப்புக்கள் மூலம் நிறைவு செய்ய முடிகின்றது. இதனை 100 வீதத்துக்கு அதிகரிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். நிச்சயம் வெற்றி பெறுவோம். வடக்கு மாகாணத்தில் சுதேச வைத்தியத்துறை எதிர்பார்த்தளவுக்கு மேலோங்கச் செய்வதற்கு நிதிவளம் போதியளவு இல்லாத நிலை காணப்படுகின்றது.

"வடக்கு மாகாணத்தில் சுதேச வைத்தியத்துறையின் மேம்பாட்டுக்கு அரச சார்பற்ற, அரச சார்பு தொண்டு நிறுவனங்கள் மற்றும் புலம்பெயர்ந்து வாழும் உறவுகள் உதவ முன்வர வேண்டும். அத்தகைய ஒரு நிலையில் மேலும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்" என்று வேண்டுகோள் விடுத்துள்ளார் வடக்கு மாகாண சுதேச வைத்தியத் திணைக்களப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சியாமா துரைரத்தினம்.

அச்சுவேலி சுதேச மருந்து உற்பத்தி நிலையத்தில் சுதேச மருந்து வகைகளை உற்பத்தி செய்வதற்கு நவக்கிரி அரச மூலிகைத் தோட்டத்தில் பயிரிட்டு வளர்க்கப்படும் மூலிகைகளும் பொது மக்களிடம் இருந்து கொள்வனவு செய்யப்படும் மூலிகைகளும் மூலப் பொருளாகப் பயன்படுத்தப்படுகின்றன.

மூலிகைகளின் கலப்படம் இல்லாத தன்மையும் மருந்து தயாரிப்பதற்கு அவை பயன்படுத்தப்படும் அளவுப் பிரமாணமும் சுதேச மருந்து வகைகளின் தர நிர்ணயத்தை உறுதி செய்கின்றன. இந்த நிலை தனியாரிடம் இருந்து கொள்வனவு செய்யப்படும் மருந்துவகைகளில் முழுமையாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் அச்சுவேலி சுதேச மருந்து உற்பத்தி நிலையத்தின் தயாரிப்புக்களில் மருந்துகளில் காணப்படும் தர நிர்ணயம் சுதேச மருத்துவத்தின் மீது மக்களை மீண்டும் நம்பிக்கை கொள்ளச் செய்து வருகின்றது. ஆங்கிலேய மருத்துவ முறை ஐரோப்பியரின் ஆட்சிக் காலத்

திலேயே அறிமுகமானது. அதற்கு முந்திய காலத்தில் முழுமையாக சுதேச வைத்திய முறையும் மூலிகை உணவுப் பழக்கமும் மக்களின் உடல் ஆரோக்கியத்துக்கு வளம் சேர்த்தது.

அச்சுவேலி சுதேச மருந்து உற்பத்தி நிலையம் கடந்த இரண்டு வருடங்களாகவே மருந்து உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றது. அதன் முழுமையான உற்பத்தி வீச்சுக்கு மூலப்பொருளான மூலிகைகளின் அளவும் பொருத்தமான கருவி சாதனங்களும் இல்லாத நிலைபெரும் குறையாக இருந்த போதிலும் காலப்போக்கில் அதன் வளர்ச்சி வடக்கு மாகாணத்தின் சுதேச மருத்துவப் பயன்பாட்டிற்கான மருந்து வகைகளை உற்பத்தி செய்யும் என்ற நம்பிக்கை உண்டு. இந்த நம்பிக்கையுடன் தொழிற்சாலை யின் பணி முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அச்சுவேலி சுதேச மருந்து உற்பத்தி நிலையத்தின் செயற்பாடுகள்.மூலிகை தொடர்பாகத் தமிழ் மக்கள் மத்தியில் உறங்கு நிலையில் இருந்த உணர்வுகளை மீண்டும் உயிர்ப்படையச் செய்துள்ளன. உள்ளூர் சூழலில் காணப்படும் மூலிகை களை உரிய முறையில் பேணிப்பாதுகாப்பதிலும் அவற்றைத் தமது நாளாந்த உணவுகளில் சேர்த்துக் கொள்வதற்கும் வகை செய்திருப்பதோடு மூலிகை உணவு வகைகளின் பயன்பாடு மற்றும் தேவையைச் கண்டுணரச் செய்துள்ளன.

அச்சுவேலி சுதேச மருந்து உற்பத்தி நிலையத்துடன் இணைந்த நிலையில் சுதேச வைத்தியசாலையும் செயற்படுகின்றது. வைத்தியசாலையில் நாளாந்தம் 30இற்கு மேற்பட்ட நோயாளர்கள் தமது நோய்களுக்கு மருந்துகளைப் பெற்றுச்செல்கின்றனர். ஐரோப்பிய மருத்துவமுறையில் காணப்படும் பக்க விளைவுகள் மற்றும் இயல்புகளை உணர்ந்து கொண்ட இளைஞர்கள், யுவதிகளும் சுதேச மருந்துகளில் நம்பிக்கை கொண்டு பயன்படுத்த ஆரம்பித்திருப்பதை அவதானிக்க முடிகிறது. தலைமுடி உதிர்தல், முடி நரைத்தல் மற்றும் தோல் நோய் சம்பந்தப்பட்ட இளைஞர், யுவதிகள் கணிசமான எண்ணிக்கையில் சுதேச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர்.

70X40 அடி விஸ்தீரணம் கொண்ட மருந்து உற்பத்தி நிலையத்தில் 40 வகையான மருந்து வகைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதில் குளிகைகள், சூறணங்கள், தைலங்கள், எண்ணெய் வகைகள் உள்ளடங்கும். மருந்து வகை களைத் தயாரிப்பதற்கு சிறிய வகை இயந்திரங்களும் பயன்படுத்தப்படுகின்றன.

மருந்து உற்பத்தி நிலையத்தில் மூலிகைகளைப் பதப்படுத்துதல், வகைப் படுத்துதல், சரக்கு வகைகளை அரைத்தல், தைலங்களை வடித்தல் என்பன தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பதால் அதில் இருந்து வெளிவரும் பல்வேறு விதமான சுகந்த வாசனையே சுவாசிப்போரின் உடலில் உளப்பிணியைப் போக்கிவிடும்.

சுதேச வைத்தியசாலையில் மருந்து தயாரிக்கும் கூடம், சரக்கு மற்றும் மருந்து தயாரிக்கப்படும் மூலிகைகளைக் களஞ்சியப்படுத்தும் களஞ்சியம், மருந்து மற்றும் சாதனங்களை காய்ச்சிப் பதப்படுத்தும் கூடம், மருந்துகள் குளிகைகளை குறித்த அளவுப் பிரமாணத்தில் உள்ளடக்கித் தயாரிக்கும் மண்டபம், மருந்துகளை களஞ்சியப் படுத்தும் கூடம், மருந்தகம், நோயாளருக்குச் சிகிச்சை அளிக்கும்கூடம் என்பன நிறுவப்பட்டுள்ளன.

நிலையத்தின் பொறுப்பதிகாரியாக மருத்துவர் திருமதி ஆ.கமலாதேவியும், துணைப் பொறுப்பதிகாரியாக மருத்துவர் கே.செல்வநாதனும் கடமைபுரிவதுடன் வைத்தியசாலைக்குச் சிகிச்சை பெறவரும் நோயாளர்களுக்கும் இரண்டு வைத்தியர் களுமே சோதனைகளை மேற்கொண்டு மருந்துகளையும் வழங்கி வருகின்றனர். நிரந்தரப் பணியாளர்கள் நால்வர் உட்பட 6 பேர் பணியாளர்களாகக் கடமை புரிகின் றனர். மருந்து உற்பத்தி நிலையத்தின் தற்போதைய செயற்பாட்டுக்கு பணியாளர் எண்ணிக்கையும் போதியதாக இல்லை என்பதை அவதானிக்க முடிந்தது. முழு நிலையில் செயற்படுவதற்கு 20இற்கு மேற்பட்ட பணியாளர்மட்டில் தேவை எனக் கூறப்படுகின்றது.

ஆறு பணியாளர்களின் அர்ப்பணிப்போடுகூடிய பணி முன்னெடுப்பினாலும், சேவை மனோநிலையினாலும் சுதேச மருந்து உற்பத்தி நிலையத்தின் தொழிற்பாடு முன்னெடுக்கப்படுகின்றது.

வைத்தியசாலையின் சுற்றாடலில் கணிசமான அளவு மூலிகைகள் வளர்க்கப் படுவதையும் அவற்றின் கணிசமான அளவு சமகாலப் பகுதியில் பயன்பாட்டிற்கு உள்ளடக்கப்படுவதையும் அவதானிக்க முடிகிறது.

வடக்கு மாகாணத்தில் யாழ்.மாவட்டத்தில் செயற்படும் சுதேச வைத்தியத் திணைக் களத்தின் பரிபாலனத்துக்கு உட்பட்ட வைத்திய நிலையங்களின் பயன்பாட்டுக்கும் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்ட சுதேச வைத்திய சாலைகளுக்கும் அச்சுவேலி சுதேச மருந்து உற்பத்தி நிலையத்தின் தயாரிப்புக்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

எதிர்காலத்தில் மன்னார், வவுனியா ஆகிய மாவட்ட வைத்தியசாலைகளுக்கும் இவற்றை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன.

சுதேச மருந்து உற்பத்தி நிலையம் எதிர்காலத்தில் முழுவீச்சில் செயற்படக்கூடிய ஏதுநிலை ஏற்பட்டு வருகின்றது. இந்த விடயத்தில் வடக்கு மாகாண சுகாதார மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சும் வடக்கு மாகாண சுதேச வைத்தியத் திணைக் களமும் பொருத்தமான நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றன.

அச்சுவேலி சுதேச மருந்து உற்பத்தி நிலையத்தின் உச்சப் பயன்பாட்டோடு கூடிய செயற்பாட்டுக்கு அனைத்துத் தரப்பினரும் ஆவன செய்ய வேண்டும்.

உதயன் 15.09.2011, 22.09.2011




## 04 வடக்கில் சுதேச வைத்தியத்துறைக்கு மீண்டும் புத்துயிர் நவக்கிரி அரச மூலிகைத் தோட்டம் ஒரு வரப்பிரசாதம்

இயற்கைச் சூழலில் வளரும் மூலிகைகள் நிறைந்துள்ள பிரதேசத்தைத் தெரிந்தெடுத்து மேலதிக மூலிகைகளை நட்டு வளர்ப்பது மூலிகைத்தோட்டம் ஆகும். இந்தக் கட்டமைப்புக்கு புறநடையாக கல்லுக்கலட்டியில் கல்லுப்படை அகற்றிப் பயிர்ச் செய்கைக்கான மண் நிரப்பி 250இற்கு மேற்பட்ட மூலிகை இனப் பயிர்களை நட்டு குறுகிய காலத்தில் வளர்ச்சி கண்டுள்ளது நவக்கிரி அரச மூலிகைத் தோட்டம்.

நிலாவரை வற்றா நீர்ஊற்றுக்கு வடக்குப் புறமாக நவக்கிரி வீதிக்கு கிழக்குப் பக்கத்தில் 5 ஏக்கர் நிலப்பரப்பு கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டது. இதனை நீண்ட காலமாக உரிய நோக்கத்துக்குப் பயன்படாமல் இருந்துவந்தது. இந்த நிலப்பரப்பு வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறியின் முயற்சியால் உரிமை மாற்றம் செய்யப்பட்டது. அதில் ஒரு பகுதியில் மூலிகைத் தோட்டச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஒரு பகுதியில் பாதுகாப்புப் படையினர் முகாமிட்டுள்ளனர். அந்தப் பகுதியும் விரைவில் கையளிக்கப்படவிருப்பதால் அரச மூலிகைத் தோட்ட விஸ்தரிப்புக்குப் பயன்படுத்தப்பட வுள்ளது.

தற்பொழுது அரச மூலிகைத் தோட்டத்தின் பயன்பாட்டில் உள்ள 3 ஏக்கர் நிலப்பரப்பு சுற்றிவர உயரமான முட்கம்பி வேலி அமைக்கப்பட்டு முழுமையாகக் கல்லுப்படை அகற்றப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடத்தக்களவு பகுதியில் பயிர்ச்செய்கைக்கான செம்மண் நிரப்பப்பட்டு மூலிகைப் பயிர் இனங்கள் நடப்பட்டுள்ளன. தற்பொழுது 250இற்கு மேற்பட்ட மூலிகைப் பயிர் இனங்கள் நடப்பட்டு நீர்பாசனம் செய்யப்பட்டு வளர்க்கப்பட்டு வருகின்றன. 5 ஊழியர்கள் நிலம் பண்படுத்தல் மற்றும் பயிர்ப் பராமரிப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வலி.கிழக்குப் பிரதேச ஆயுள்வேத பொதுச் சுகாதாரப் பரிசோதகர் வைத்திய கலாநிதி ரி.விஜயகுமார் மூலிகைத் தோட்டத்துக்கான பொறுப்பதிகாரியாகவும் கடமையாற்றி வருகின்றார்.

சுதேச வைத்தியம் தொடர்பாக மூலிகைத் தோட்டப் பொறுப்புக்கான டாக்டர் ரி.விஜயகுமார் கருத்துத் தெரிவிக்கையில் :

"சுதேச வைத்தியமுறை மனிதன் தோன்றிய காலம் முதல் பயன்பாட்டில் இருந்து வந்துள்ளது. இனம், மொழி, மதம்சார் நிலையில் ஆயுள்வேதம், சித்த மருத்துவம், யுனானியம், ஹோமியோபதி எனப் பரம்பரை வைத்தியமுறை பல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்ட போதிலும் அவற்றுக்கான மூலம் மூலிகைகள் மற்றும் சித்தர்கள் ஞானிகள் கூறிய கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டவையாகவே உள்ளன. சிகிச்சை நடைமுறை, பத்தியங்கள் நடைமுறைகள் மாறுபட்ட விதத்தில் இருந்தாலும் அனைத்துக்கும் மூலம் ஒன்றாக இருக்கின்றன. அவற்றினால் பக்கவிளைவோ எதிர்த்தாக்கமோ இல்லாத சிறப்பியல்புகள் பொதுமைப்படுத்தப்பட்டவை. உடல் ஆரோக் கியத்துக்கு உதவும் தன்மை கொண்டவை. அண்மைக்காலச் சூழலில் அவற்றில் மக்கள் அக்கறை செலுத்துவதற்குக் காலம், நேரம் பொருத்தமில்லாமல் போகிறது. சுதேச வைத்தியம் பயின்றவர்கள் ஆங்கில மருந்துகளைப் பிரயோகித்து சிகிச்சை அளிப்பது மக்களை குழப்பத்துக்கு உள்ளாக்கி விடுகின்றது. ஐரோப்பிய மருத்துவக் கூறுகள் அனைத்தும் மூலிகைகளில் உள்ளன. சுதேச வைத்தியமுறைகள் எந்தவித மான பக்க விளைவுகளும் இல்லாதவை. ஆயுள்வேதம் இந்துமதத்தின் அடிப்படை யான உபவேதங்களில் ஒன்றாக அமைந்துள்ளது" எனக் கூறினார்.

நவக்கிரி மூலிகைத் தோட்டம் தொடர்பாக அவர் கருத்துத் தெரிவிக்கையில் :

"கடந்த வருடம் பிற்பகுதியில் மூலிகைப் பயிர்நடுகை செய்யப்பட்டு மூலிகைத் தோட்டத்தின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. ஒரே தினத்தில் 160 மூலிகை இனப்பயிர்கள் நடுகை செய்யப்பட்டன. ஆளுநரின் முழுமையான ஆதரவுடனும் வடக்கு மாகாண சுதேச வைத்தியத் திணைக்கள அதிகாரிகளின் ஒத்துழைப்புடனும்

பயிர்ச்செய்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இங்கு அறுவடை செய்யப்படும் மூலிகைகள் அச்சுவேலி சுதேச மருந்து தயாரிக்கும் தொழிற்சாலைக்கு அனுப்பப்பட்டு அங்கு மருந்து தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும். அடுத்துவரும் மாரிப் பருவத்துடன் இணைந்த நிலையில் மூலிகை அறுவடையை ஆரம்பிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நவக்கிரி அரச மூலிகைத் தோட்டமும் அதனோடு இணைந்த செயற்பாட்டு முன்னெடுப்புக்களும் சுதேச வைத்தியம் தொடர்பாக வடபகுதி மக்கள் மத்தியில் முழுமையான விழிப்புணர்வை ஏற்படுத்தும் பல நோக்கு கொண்டனவாக உள்ளன" எனக் கூறினார்.

- மூலிகைகளை வளர்த்து அவற்றையே மூலப்பொருளாகக் கொண்டு அச்சுவேலி சுதேச மருத்துவ மூலிகை மருந்து உற்பத்தி நிலையத்தில் மருந்துகளைத் தயாரித்தல். சமூகத்தில் மூலிகை மருந்து, மூலிகை உணவு வகைகளைப் பயன்படுத்துவதற்கு ஊக்கமளித்தல், விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
- சமூகத்தில் மூலிகை மருந்து, மூலிகை உணவு வகைகளை பயன்படுத்துவதற்கு ஊக்கமளித்தல், விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
- பாடசாலைகள், வீடுகள் மற்றும் அலுவலக வீட்டுத் தோட்டங்களில் மூலிகைப் பயிர் இனங்களை வளர்த்தல்.
- மூலிகைப் பயிர், வேர், தண்டு மற்றும் இலைகளைச் சேகரித்து வழங்குவதன் மூலம் மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் வருமானத்தை பெருக்குதல்.
- சூழலில் உள்ள மூலிகைப் பயிர் இனங்களை இனங்கண்டு பாதுகாப்பதற்கு உரிய சமூகச் சூழலை உருவாக்குதல் போன்ற பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதற்காக வீட்டுத்தோட்டப் போட்டிகளில் மூலிகைப் பயிர்களுக்கு சிறந்த புள்ளிகள் போடப்பட்டு வீட்டுத்தோட்டப் போட்டி மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. பாடசாலைகளில் மாதிரி மூலிகைத் தோட்டங்கள் நிறுவப்பட்டு, அதற்கு சுதேச வைத்தியத் திணைக்களம் ஊக்குவிப்புத் தொகைகளையும் வேறு உதவிகளையும் வழங்கி வருகின்றது.

இந்த வகையில் வலி.கிழக்கில் உள்ள அச்செழு சைவப் பிரகாச வித்தியாலயம், உரும்பிராய் இந்துக் கல்லூரி, உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம், கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் மாதிரிப் பாடசாலை மூலிகைத் தோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மூலிகை வேர்கள் , தண்டுகள் , இலைகள் ஒரு கிலோ 500ரூபாவுக்கு குறையாத விலையில் கொள்வனவு செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு, பொதுமக்களிடம் இருந்து கொள்வனவு செய்யப்படுகின்றன.

மூலிகை உணவுப் பயன்பாடு என்ற வகையில் நாளாந்த உணவில் சேர்த்துக் கொள்ளக்கூடிய மூலிகைகள் இனங்காணப்பட்டு அறிமுகம் செய்யப்படுகின்றன. சுதேச மருத்துவ முகாம்களை கிராம மட்டத்தில் நடத்தி இலைக்கஞ்சி மூலிகைப் பானம் என்பன மாணவர்கள், பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்றன. அத்துடன் பொது வைபவங்களில் நன்னீர் குளிர்பானம்,மூலிகை பிஸ்கட், மூலிகை போஷாக்கு உணவு என்பன வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தச் செயற்பாடுகள் வடக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களின் நிலையிலும் மற்றும் பிரதேச செயலகங்கள், பிரதேச சபைகள் , வலயக் கல்வி அலுவல கங்கள், பாடசாலைகள் மட்டத்தில் முன்னெடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

மூலிகை உணவுப் பழக்கமும் சுதேச மருந்துப் பாவனையும் உரிய முறையில் பயன்படுத்தப்படும்போது ஆரோக்கியமான ஒரு சமூகத்தை உருவாக்கமுடியும்.

சுதேச மருத்துவம் தொடர்பாக ஓய்வு பெற்ற வடக்கு, கிழக்கு மாகாண சுதேச வைத்தியத்துறை ஆணையாளரும், பரம்பரை சுதேச மருத்துவரும், சுதேச மருத்துவ மற்றும் விஞ்ஞானப் பட்டதாரியுமான வைத்திய கலாநிதி எஸ். உரோமகேஸ்வரன் (சுதுமலை வைத்தியர்) கருத்துத் தெரிவிக்கையில் :

"மனிதன் உள்ளிட்ட அனைத்து உயிர் இனங்களின் ஆரோக்கியமான நல்வாழ்வுக்காக இறைவனால் படைக்கப்பட்டவை மூலிகைகள். மூலிகைகளின் பயன்பாடு அமைதியான, ஆரோக்கியமான வாழ்க்கையை வாழ்வதற்கு வழிப்படுத் தும். அந்தவகையில் வாழ்ந்து வந்த சமூகம் இன்று குழப்பத்துக்கு உள்ளாகியுள்ளது. சுதேச வைத்தியத்தில் இன்று மக்களுக்கு முழுமையான நம்பிக்கை இல்லாமல் போனதற்கு ஒரு வகையில் சுதேச மருத்துவர்களும் காரணமாகின்றனர்.

சுதேச மருத்துவத்தை கற்று வைத்தியச் செயற்பாடுகளை மேற்கொள்பவர்கள் ஆங்கில மருந்துகளை நோயாளர்களுக்கு வழங்குவதும் காரணமாக அமைகின்றது.

சுதேச மருத்துவம் கற்றவர்கள் பரம்பரை வைத்தியர்கள். முழுமையாக சுதேச மருந்துகளை, மூலிகைகளை பயன்படுத்த முன்வரவேண்டும். அது அவர்களையும் வளரச் செய்து, அவர்கள் கற்றுக்கொண்ட சுதேச வைத்தியத்துறையையும் வளரச் செய்யும்" எனக் கூறினர்.

நவக்கிரி அரச மூலிகைத் தோட்டத்தின் அமைப்பும் அதனோடு இணைந்த செயற்பாட்டு முன்னெடுப்புக்களும் வடபகுதி மக்கள் மத்தியில் சுதேச வைத்தியத்தின் உண்மைத்தன்மையை வெளிப்படுத்தத் தொடங்கியுள்ளன.

நவக்கிரி அரச மூலிகைத் தோட்டம் மற்றும் அதன் செயற்பாடுகள் உள்ளூர் மக்கள் மத்தியில் மூலிகை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது. உள்ளூரில் இயல்பு நிலையில் கிடைக்கும் தாவரங்கள் இயற்கைப் பொருள்கள் எந்த வகையில் உடல் நலத்துக்கும் உள நலத்துக்கும் ஊட்டமளித்து இயற்கையோடு இயைந்து வாழ வழிப்படுத்துகின்றது என்பதையும் தெளிவுபடுத்தியுள்ளது. மூலிகைத் தோட்டத்தில் வடபகுதியின் காலநிலையில் இயல்பாக வளரும் தாவரங்களும் ஏனைய ஈரவலய, இடை வெப்ப வலயங்களில் வளரும் தாவரங்களும் உரிய காலநிலை சூழலில் வளர்வதற்கு ஏற்ற செயற்கை சூழல் உருவாக்கப்பட்டு வளர்க்கப்படுகின்றன.

இந்த வகையில் வளரும் தாவரங்கள் மற்றும் இயல்புகள், அவற்றின் பயன் தொடர்பாக கிராமிய மட்ட சுதேச வைத்திய மருத்துவ முகாம் நடத்தி மக்களுக்கு மூலிகைகள் தொடர்பான செயல்முறை விளக்கம் அளிக்கப்படுகின்றது. மக்கள் மத்தியில் மூலிகைகளைப் பராமரிக்க வேண்டும், தமது உணவில் அவற்றை சேர்த்துக் கொள்ள வழிப்படுத்தி வருகின்றது.

அரச மூலிகைத்தோட்ட நிர்வாகத்தினால் கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்து வைத்த நடமாடும் மூலிகை இலைக் கஞ்சி விற்பனை நிலையத்தின் செயற்பாடுகள் ஆக்கபூர்வமான விளைவுகளை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. நடமாடும் விற்பனை நிலையம் மூலம் வல்லாரை , பொன்னாங்காணி மற்றும் மூலிகை கீரை வகைகள் தீட்டல் பச்சை அரிசி, தேங்காய் பால் மற்றும் இயற்கைச் சுவையூட்டிகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட மூலிகை இலைக் கஞ்சி ஒரு கிண்ணம் ரூபா 20 வீதம் விற்பனை செய்யப்படுகின்றது. இதனை மக்கள் விருப்பத்தோடு வாங்கி அருந்து வதையும் அதேபோன்று தாமும் வீடுகளில் தயாரித்துப் பயன்படுத்தும் பழக்கத்தையும் உண்டாக்கியுள்ளது. இந்த நடமாடும் விற்பனை நிலைய வண்டி சுதேச வைத்திய திணைக்களத்தினால் மூலிகைத் தோட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக வடக்கு மாகாண சுதேச வைத்திய திணைக்களத்தின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சியாமா துரைரத்தினம் கருத்துத் தெரிவிக்கையில் "அரச மூலிகைத் தோட்டம் ஊடாக பல்வேறு செயற்றிட்ட முன்னெடுப்புக்கள் மேற்கொள்வதற்கு திட்ட முன்மொழிவுகள் உள்ளன.

ஆனால் அவற்றை உரிய முறையில் முன்னெடுப்பதற்கும் அரச மூலிகைத் தோட்டத்தை நூற்றுக்கு நூறு வீதம் பயன் உறுதியுடன் மேம்படுத்துவதற்கும் உரிய நிதிவளம் இல்லாமல் இருப்பது பெரும் குறைபாடாக உள்ளது. இதற்கான நிதி வளத்தைத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் உறவுகள் மற்றும் உள்ளூரில் நிதிவளம் படைத்தோர் உதவ முன் வரவேண்டும் "எனக் கூறினார்.

இந்த கோரிக்கை உரிய முறையில் பயன்விளைவிக்குமிடத்து குறுகிய காலத்தில் மக்களுக்கு உடனடியாகப் பயன்தரும் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படலாம்.

இறைவனால் உயிரினங்களில் நல்வாழ்வுக்காகப் படைக்கப்பட்ட மூலிகைகள் மற்றும் சுதேச வைத்திய முறைகள் புத்தாக்கத்துடன் மீண்டும் வளரத் தலைப்பட்டிருப்பது மக்களின் வரவேற்பை பெற்றுள்ளது.

மக்களுக்கு சுதேச வைத்திய முறையில் உள்ள நம்பிக்கையை சுதேச வைத்தியர்கள் காப்பாற்றிக் கொள்ள முன்வராமல் சுதேச வைத்தியத்தை கற்றுவிட்டு ஆங்கில மருந்துகளை மட்டும் பயன்படுத்தி மக்களுக்கு வைத்தியம் செய்யும் துர்ப்பாக்கியமான பாரம்பரியம் முற்றாக மாற்றியமைக்கப்பட வேண்டும். இந்தவகையில் மக்கள் ஏமாற்றப்படுகின்றார்கள் என்ற உண்மை நிலையைச் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் கண்டுகொள்ளவேண்டும். சுதேச வைத்தியர்கள் சுதேச வைத்திய பாரம்பரிய முறைகளில் வைத்தியம் செய்வதற்கு வழிப்படுத்த வேண்டும். சுதேச வைத்தியர்கள் மற்றும் சுதேச வைத்திய முறையில் கற்றுத் தேர்ந்தவர்கள் சுதேச வைத்திய முறைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கின்ற நிலை உருவாக வேண்டும். அப்போதுதான் மக்கள் மனக்குழப்பமின்றி நம்பிக்கையுடன் தமக்கு விருப்பமான துறையூடாக தமது வைத்திய சேவையைப் பெற்றுக் கொள்ளமுடியும். அரச மூலிகைத் தோட்டத்தின் பணிமுன்னெடுப்புக்கள் மேலும் வளர வாழ்த்துவோம்.

உதயன் - 03.06.2011, 07.07.2011, 14.07.2010




# 05 56 வருடங்களாக சேவையாற்றும் நீர்வேலி பாலர் பகல் விடுதி

நீர்வேலி கந்தசாமி கோயில் தெற்கு வீதியில் அமைந்துள்ள வீடுகள் மற்றும் கட்டடத் தொகுதி வரிசையில் மிகப் பெரியதும், வசதியானதுமான கட்டடத்தில் 56 வருடங்களாக "நீர்வேலி பாலர் பகல் விடுதி" செயற்பட்டு வருகின்றது. 2 வயதிலிருந்து 5 வயதுக்கு உட்பட்ட மழலைகள் அங்கு அனுமதிக்கப்பட்டு காலை 7.30 மணியில் இருந்து பிற்பகல் 4.30 மணிவரை தங்கவைக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றனர்.

பாலர் பகல் விடுதியின் தோற்றம் தொடர்பாக விடுதியின் மூத்த நிர்வாகி ஒருவர் தகவல் தெரிவிக்கையில், யாழ். மாவட்டத்தின் புகழ்பூத்த கல்வியாளர்களில் ஒருவரும் யாழ். மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபரும் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றியவருமான நீர்வேலியைச் சேர்ந்த அமரர் ஈ.கே.சண்முகநாதனின் மனதில் ஏற்பட்ட மனிதாபிமான சிந்தனையின் வெளிப்பாடே பாலர் பகல் விடுதியின் தோற்றம்.

"கணவன் - மனைவி உட்பட வயது வந்தவர்கள் எல்லோரும் அரச உத்தி யோகத்துக்குச் செல்லும் நண்பர் ஒருவரின் இல்லத்துக்கு ஈ.கே. சண்முகநாதன் சென்றிருந்தார். அந்தவேளையில் குறித்த குடும்பத்தினர் "தமது பிள்ளைகளைத் தாங்கள் அலுவலகக் கடமைக்குச் செல்லும் வேலைநாள்களில் ஓர் அறையில்

தங்கவைத்து தண்ணீர் மற்றும் உணவு வகையை வைத்து கதவைப் பூட்டி விட்டுச் செல்கின்றனர். அந்தவேளை விருப்பத்துக்கு ஏற்ப உணவுகளைச் சாப்பிடுவதோடு மலசலம் எல்லாவற்றையும் அறையிலேயே கழித்துவிட்டு கழிவுகளின் மத்தியில் உறங்கிக் கிடப்பவர்களைத் தாங்கள் கடமை முடித்து திரும்பிவந்து தட்டி எழுப்பி கழுவிச் சுத்தம் செய்து இயல்பு நிலைக்குக் கொண்டு வருகின்றனர். இந்தவகையில் தொழிலைக் கைவிடுவதா? பிள்ளையைப் பராமரிப்பதா ? என மனப் போராட்டத்துக்கு உள்ளாவதாகக் கூறிக் கவலைப்பட்டனர்" அந்தவேளையில் சிந்தனையில் தோன்றியதே பாலர் பகல் விடுதி.

பாலர் பகல் விடுதிக்கான அடிக்கல்லை ஐம்பது காலப் பகுதியில் கைத்தொழில் சமூக சேவைகள் வீடமைப்பு அமைச்சராக இருந்த சேர். கந்தையா வைத்தியநாதன் நட்டுவைத்தார். 1956ஆம் ஆண்டு ஜூலை 8ஆந் திகதி யாழ். மாவட்ட அரச அதிபர் ம.ஸ்ரீ. கந்தா பாலர் பகல் விடுதியைத் திறந்துவைத்தார். அன்று தொடக்கம் இன்று வரையும் அது தொடர்ந்து செயற்பட்டு வருகின்றது.

ஏறத்தாழ ஐந்து பரப்புக் காணியில் மூன்று பக்கங்களும் கட்டடங்கள் கொண்ட தாகவும், நடுவில் பூந்தோட்டம் மற்றும் சிறுவர் பூங்கா உள்ளிட்ட அமைப்புக்களைக் கொண்டதாகவும் மிக விசாலமான வசதியான சொந்தக் கட்டடத்தில் பாலர் பகல் விடுதி செயற்படுகின்றது.

பாலர்கள் தங்குவதற்கு வசதியான அறைகள் விருப்பம் போல குறித்தநேரத்தில் சயனிப்பதற்கான கூடம், சமையல்கூடம், மேடையுடன்கூடிய உள் அரங்கு, அலுவலகம், வகுப்பறைகள் என பத்து அறைகள் மற்றும் விசாலமான விறாந்தைகளை உள்ள டக்கியதாக அமைக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் திட்டமிட்ட முறையில் அமைக்கப்பட்ட பாலர் பகல் விடுதி களில் முதன்மையானது. அமைப்பு முறையில் சிறுவர்களுக்கு ஏற்றமுறையில் மிக வசதியான நிலையில் திட்டமிட்ட வகையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. பாலர் பகல் விடுதியின் பொறுப்பாளராக செல்வி தியாகேஸ்வரி வல்லிபுரம் கடமை யாற்றுகின்றார். உதவியாளர்களாக செல்வி வெற்றிவேலு கவிதா , செல்வி கோவிந்தராஜன் விஜயகுமாரி, செல்வி மனோரஞ்சினி மனோகரன் , செல்வி சசிகலா கந்தசாமி ஆகியோர் கடமையாற்றுகின்றனர்.

2006 - 2008 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 110-120 பிள்ளைகள் வரையில் அனுமதிக்கப்பட்டு தங்கவைக்கப்பட்டனர். இந்த வருடம் 30 பிள்ளைகள் வரையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இரண்டு வயது தொடக்கம் ஐந்து வயது வரையான பிள்ளைகள் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு அவர்களுக்கான போதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2-3 வயதுப் பிரிவினர், 4 வயதுப் பிரிவினர், 5 வயதுப் பிரிவினராக வகுக்கப்பட்டுள்ளனர். கடும் நீலநிறம் கொண்ட சீருடை விடுதிக்கெனப் பயன்படுத்தப்படுகின்றது.

பாலர் பகல் விடுதியின் நாளாந்த தொழிற்பாடு தொடர்பாக மேற்பார்வையாளர் செல்வி தி.வல்லிபுரம் தகவல் தெரிவிக்கையில், காலை-மாலையில் பசுப்பால் தேநீர், நண்பகல் சோறு, கறி உட்பட போஷாக்கு உணவு, பிற்பகல் தேநீர் வழங்கப்படும் போது திரிபோஷா போன்ற சிற்றுண்டியும் வழங்கப்படும்.

மதிய வேளையில் உணவுக்குப் பின்னர் 12 மணியில் இருந்து 2 மணிவரை நித்திரை கொள்வதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது. காலை மாலை வேளைகளில் சிறுவர்களுக்கான வழிப்படுத்தல் மற்றும் தமிழ் ஆங்கில பாடல்கள் மற்றும் வயது நிலைப் பிரிவுகளுக்கு ஏற்றவகையில் கற்றல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதோடு, ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல் மற்றும் பழக்க வழக்கங்கள் நல்வழிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. சிறுவர்கள் நித்திரைகொள்ளும்போதுகூட உறங்கி இருப்பவர்கள் இடையில் எழுந்து மற்றச் சிறுவர்களுக்கு அடிப்பது, துன்புறுத்துவது போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவார்கள்.

காலையில் பெற்றோர் சிறுவர்களைக் கொண்டுவந்து கையளிப்பார்கள். மாலையில் அவர்கள் வந்து பொறுப்பேற்று வீட்டுக்கு அழைத்துச் செல்லும் வரை காத்திருந்து கையளிப்போம். சிறுவர்களை மகிழ்ச்சியான சூழலில் முழு நாளும் பராமரிப்பதே எமது கடமை எனத் தெரிவித்தார்.

பாலர் பகல் விடுதியின் எதிர்காலச் செயற்பாடுகள் சிறுவர்களின் உடல்,உள வளர்ச்சியையும் ஆரம்பக் கல்விக்கான உறுதியான அடித்தளத்தை இடும் வகையிலும் திட்டமிட்ட முறையிலும் குறித்த வரையறைகளை உள்ளடக்கி முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகளை "நீர்வேலி சமுதாய முன்னேற்றக் கழகம்" மேற்கொண்டு வருகின்றது.

பாலர் பகல் விடுதியின் ஆரோக்கியமான சகல முன்னெடுப்புக்களும் உரிய வழிகாட்டல் ஆலோசனைகளையும் அதற்கான நிதி உதவிகளையும் "நீர்வேலி நலன்புரிச் சங்கம் இங்கிலாந்து" , "நீர்வேலி நலன்புரிச் சங்கம் கனடா", ஆகிய இரண்டு அமைப்புக்களும் மனப்பூர்வமாக முன்வந்து செய்து வருகின்றன. குறித்த அமைப்புக்களில் அங்கம் வகிக்கும் நீர்வேலி புலம்பெயர் உறவுகளில் பெரும்பாலானவர்கள் பாலர் பகல் விடுதியின் பழைய மாணவர்களாவர். பாலர் பகல் விடுதியின் செயற்பாடுகள் 2013 ஆண்டில் இருந்து ஆங்கிலமொழி மூலம் முன்னெடுக்கப்படவுள்ளது. அதற்கான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதோடு கல்வியாளர்கள்,

ஓய்வுபெற்ற அதிபர், ஆசிரியர்களை உள்ளடக்கிய "கலைத்திட்டக் குழு", "விளை யாட்டுக் குழு" இணைப்பாடவிதானக் குழு" எனத் தெரிவுசெய்யப்பட்டு குறித்த விடயத் தலைப்புக்களில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்களை வரையறைசெய்து அறிக்கை செய்துவருகின்றது.

பாலர் பகல் விடுதியின் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பாக "இங்கிலாந்து நீர்வேலி நலன்புரி சங்கத்தின்" தலைவர் மாணிக்கவாசகர் திருவாசகர் தகவல் தெரிவிக்கையில்:- "நாங்கள் எமது மக்களையும் மண்ணையும் மறக்கமாட்டோம்: எமது பெருமை கல்வியால் நிலை நாட்டப்பட்டது: அதில் பின்னடைவு ஏற்படக்கூடாது. அந்தவகையில் இளம் சிறார்களின் கல்விக்கான அடித்தளம் இடப்பட வேண்டும்.

இதற்கு ஏற்ற வகையில் நீர்வேலி பாலர் பகல் விடுதியின் செயற்பாடுகளைக் காத்திரமான முறையில் எதிர்காலத்தில் முன்னெடுப்பதற்குத் தீர்மானித்துள்ளோம். இதற்கு கனடாவில் உள்ள நீர்வேலி நலன்புரிச் சங்கமும் , ஐக்கிய இராச்சியத்தில் உள்ள நீர்வேலி நலன்புரிச் சங்கமும் தேவையான அனைத்து உதவிகளையும் செய்யத் தயாராக உள்ளன' எனக் கூறினார்.

புலம்பெயர்ந்து வாழும் நீர்வேலி வாழ்மக்களில் பெரும்பாலானவர்கள் "நீர்வேலி பாலர் பகல் விடுதியின்" பழைய மாணவர்கள். அவர்கள் வெளிநாடுகளில் இருந்து பகல் விடுதியின் சமகாலச் செயற்பாடு மற்றும் எதிர்கால அபிவிருத்திக்குத் தேவையான நிதி உதவியை, பொருத்தமான ஆலோசனைகளை வழங்க முன்வந்திருப்பது முன்மாதிரியான எடுத்துக்காட்டு. இது ஏனைய கிராமங்களின் வளர்ச்சிக்கும் முன் உதாரணமாக இருந்து உதவும் என்பதில் ஐயமில்லை.

நீர்வேலி சமுதாய முன்னேற்றக் கழகத்தின் முயற்சியினால் 1955ஆம் ஆண்டு டிசம்பர் 4ஆந் திகதி பாலர் பகல் விடுதிக்கு அடிக்கல் நடப்பட்டு ஏழு மாதகால இடைவெளியில் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்தன. பாலர் பகல் விடுதியின் வடிவமைப்பு நிர்மாணம் ஆகியவற்றில் முன்னின்று உழைத்த அமரர் ஈ.கே. சண்முகநாதனின் நினைவுநாளும் பகல் விடுதியின் ஆண்டு நிறைவு விழாவும் ஒரே தினத்தில் டிசெம்பர் 4ஆம் நாள் வருவதால் இரண்டுமே ஒரே தினத்தில் கொண்டாடப்படுகின்றது. பாலர் பகல் விடுதியின் வளர்ச்சிக்கு காலத்துக்குக் காலம் உழைத்தவர்களையும் , பகல் விடுதியை மேற்பார்வைசெய்து கண்காணித்துவரும் நீர்வேலி சமுதாய முன்னேற்றக் கழக நிர்வாகிகளையும் சமூகம் நன்றியறிதலுடன் நினைவு கூருகின்றது. அந்தவகையில் ஆரம்பக்காலம் முதல் சமுதாயக் கழகத்தின் தலைவராக இருந்து உழைத்த ஈ.கே.சண்முகநாதன் (தலைவர் 1955 - 1984) மற்றும் வி.எஸ்.அப்புத்துரை, எஸ்.முத்துவேற்பிள்ளை, எஸ். சுவாமிநாதக் குருக்கள், எஸ். இராசேந்திரக் குருக்கள் , க. இராசதுரை, சி. முருகேசு உள்ளிட்ட நிர்வாகிகளின் சேவைகள் பசுமையுடன் நினைவு கூரப்படுகின்றன.

தற்போதைய நிர்வாகக் குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற ஆசிரியர் ஐ. சிவராசாவும், செயலாளராக வி.சிவநாதனும், பொருளாளராக திருமதி ஆனந்தவல்லி அவர்களுமாக 15 பேர் கொண்ட நிர்வாகக்குழு செயற்படுகின்றது.

நிர்வாகக் குழு மாதாந்தம் குறித்து ஒதுக்கப்பட்ட தினத்தில் கூடி பகல் விடுதியின் தேவைகள், உதவிகள் தொடர்பாகக் கலந்துரையாடி நிறைவுசெய்து வருகின்றது. அத்துடன் பெற்றோருடனான சந்திப்புக்களைக் குறித்து ஒதுக்கப்பட்ட தினத்தில் நடத்தி கலந்துரையாடி வருகின்றது. நிறுவன மயப்படுத்தப்பட்ட ரீதியில் நடத்தப்பட்டுவரும் நீர்வேலி பாலர் பகல்விடுதியில் முழுமையான நம்பிக்கை வைத்து பிள்ளைகளைப் பகல் வேளையில் ஒப்படைத்துவிட்டு தமது கடமைக்குப் பெற்றோர் செல்கின்றனர்.

தற்பொழுது பாலர் பகல் விடுதிக்குப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டிருக்கும் செல்வி தியாகேஸ்வரி வல்லிபுரம் தமிழ், ஆங்கில, சிங்களமொழி புலமை கொண்டவராக இருப்பதோடு கடந்த 20 வருடங்களுக்கு மேலாக பல்வேறு வகைப்பட்ட சிறுவர்களை வழிப்படுத்துவதில் தேர்ச்சி பெற்றவர்.

நீர்வேலி நலன்புரிச் சங்கத்தின் தலைவரும், உதவிக் கல்விப் பணிப்பாளருமான இ. குணநாதன் பகல் விடுதியின் தேவைகள், உதவிகள் தொடர்பாக பொருத்தமான ஆலோசனைகளை வழங்கி அதன் வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமான பங்களிப்பை நல்கி வருகின்றார்.

பகல் விடுதியின் ஆரம்பக்காலக் கட்டுமானப் பணிகளுக்கான நிதி உதவியைக் கைத்தொழில் சமூக சேவைகள் வீடமைப்பு அமைச்சு வழங்கியிருந்தது. இராணுவ நடவடிக்கை மற்றும் ஷெல் வீச்சுக்களால் சேதமடைந்த பகுதிகளைப் புனரமைப்புச் செய்வதற்கு 1997ஆம் ஆண்டு யு.என்.ஏச்.சி.ஆர். நுண் கருத்திட்டத்தின் கீழ் நிதி உதவிகளை வழங்கியது. 2005ஆம் ஆண்டு சிறுவர் பாதுகாப்பு நிதியம் வழங்கிய நிதி உதவி மூலம் புனரமைப்புச் செய்யப்பட்டது. பகல் விடுதியின் நிர்வாகத்துக்குப் பொறுப்பான குழுவின் தலைவர் ஐ.சிவராசா விடுதியின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பாக தகவல் தெரிவிக்கையில், இந்த வருடம் 30 மாணவர்கள் அனுமதிக்கப் பட்டுள்ளனர். 2013 ஆண்டில் ஆங்கில மொழிமூலம் கற்றல் செயற்பாடுகள் முன்னெடுக் கப்படவுள்ளன. 120 குழந்தைகளை (2வயது தொடக்கம் 5வயது வரை) சேர்த்துக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. யாழ். மாவட்டத்தில் எந்தப் பகுதியில் வசிப்பவர் களும் அனுமதி கோரி விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவித்தார்.

உதயன் - 30.11.2012, 07.12.2012



# 06 ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபம் மூலம் வி அன் ரி அறக்கட்டளை நிதியம்

**ஆ**வரங்கால் என்றால் நினைவுக்கு வருவது சிவசக்தி மணிமண்டபம். யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியில் ஆவரங்கால் சிவன் கோயிலுக்கு அருகில் வீதிக்கு மேற்குப் புறத்தில் அழகுற அமைக்கப்பட்டுள்ளது சிவசக்தி மணிமண்டபம். அதன் வருமானம் முழுவதும் வி அன் ரி அறக்கட்டளை நம்பிக்கை நிதியம் மூலம் சமூக மேம்பாட்டுப் பணிக்குப் பயன்படுத்தப்படுகின்றது.

வருமானம் ஈட்டுவதற்கு போட்டி போட்டு மண்டபங்களை அமைத்து வாடகைக்குக் கொடுத்துவரும் யாழ்ப்பாணச் சூழலில் 2003 ஆண்டு 10 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட செலவில் சிவசக்தி மணிமண்டபத்தை தனது தாய் தந்தையரின் நினைவாக 13 பரப்புக் காணியில் நிறுவி வி.அன்.ரி. அறக்கட்டளை மூலம் பொதுச் சொத்தாக்கியவர் பரோபகாரி வேலுப்பிள்ளை சிவசுந்தரம்.

ஆவரங்கால் வேலுப்பிள்ளை தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மூன்று புதல்வர்களில் இளையவர் வே. சிவசுந்தரம். வருமானவரித் திணைக்களத்தில் உயர்பதவி வகித்தவர். 1983ஆம் ஆண்டு லண்டனுக்குச் சென்று தனது சுயமுயற்சி

யாலும் உழைப்பாலும் உயர்ந்தவர். தமது பெற்றோர் நினைவாக ஆவரங்காலில் மணிமண்டபத்தை நிறுவுவதற்குத் தீர்மானித்தார். மண்டபத்தை நிர்மாணிப்பதற்கு 10 மில்லியன் ரூபா செலவாகும் எனத் திட்டமிட்ட வேளையில் வயல்நிலமாக தாழ் நிலமாக இருந்த 13 பரப்பு நிலத்தையும் மண்டபக் கட்டுமானத்துக்குரிய நிலமாக உயர்த்துவதற்கு பல லட்சம் ரூபா செலவு செய்யவேண்டி ஏற்பட்டது.

சிவசுந்தரம் மேற்கொண்ட முயற்சிகள் அனைத்துக்கும் மூத்த சகோதரன் இளையதம்பியும் சகோதரன் வே. கந்தசாமியும் (அகில இலங்கை இந்து மாமன்றத் தின் பொருளாளர்) பூரணமாக ஒத்துழைப்பு வழங்கி களத்தில் இருந்து கட்டுமானப் பணிகளை மேற்கொண்டனர். மண்டபத்தின் நிர்மாணப்பணியின் திட்டமிடல் மேற்பார்வையை சிவசுந்தரத்தின் வேண்டுகோளின் பேரில் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் மேற்கொண்டு வந்தார்.

வி அன் ரி அறக்கட்டளையின் மூலதனச் சொத்தாக சிவசக்தி மணிமண்டபம் மாற்றப்பட்டு மண்டபத்தின் வருமானம் முழுவதும் வி அன் ரி அறக்கட்டளை நம்பிக்கை நிதியம் ஊடாகக் கல்வி, சமய , சமூக மேம்பாட்டுப் பணிகளுக்கு பயன் படுத்த வகைசெய்யப்பட்டுள்ளது. அறக்கட்டளை தொடர்பான உயில் இந்துமாமன்றத் தலைவர் சட்டத்தரணி கந்தையா நீலகண்டன் அவர்களால் எழுதப்பட்டு சட்ட ரீதியிலான நிறுவனமாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மணிமண்டபத்தில் மற்றும் வி அன் ரி அறக்கட்டளையின் செயற்பாடுகளுக்குப் பொருத்தமான முறையில் ஆலோசனைகளை வழங்கி உதவுவதற்கு ஓய்வுபெற்ற அதிபர் வ. ஆறுமுகம் தலைமையில் ஆலோசனைச்சபை நிறுவப்பட்டுள்ளது. அதில் துறைசார் நிலையில் 15 பிரமுகர்கள் நிர்வாக உறுப்பினர்களாக உள்ளனர்.

வி அன் ரி அறக்கட்டளை நம்பிக்கை நிதியத்தின் பணி முன்னெடுப்பு எல்லையாக ஆவரங்கால் மற்றும் அயல் கிராமம் , யாழ் மாவட்டம், அகில இலங்கை என்றவகையில் வரையறை செய்யப்பட்டு விரிவடைந்து செல்கின்றது. சிவசக்தி மணிமண்டபத்தின் 8 ஆவது அகவை நிறைவும் அறக்கொடை வழங்கல் நிகழ்வும் வைபவ ரீதியாக 2011.09.04 ஆம் திகதி சிவசக்தி மணிமண்டப நம்பிக்கை பொறுப்புச் சபையின் செயலாளர் வே. கந்தசாமி தலைமையில் நடைபெற்றது. யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் சி. சிவலிங்கராசா பிரதம விருந்தினராகவும் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர்.

சிவசக்தி மணிமண்டபம் 2003ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் செயற்படத் தொடங்கியதிலிருந்து அதன்மூலம் கிடைக்கும் வருமானம் முழுவதும் வி அன் ரி

அறக்கட்டளையின் மூலதனமாகக் கொள்ளப்படுகிறது. தாபகரின் தாய் தந்தையரான அமரர் வேலுப்பிள்ளை தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் முதல் எழுத்துக்களான வி அன் ரி என்பன அறக்கட்டளையின் பெயராகக் கொள்ளப்பட்டது.

சிவசக்தி மண்டபம் உள்ளவரை நிலைத்து நிற்கக்கூடிய இந்தத்தர்ம கைங் கரியத்தை பிள்ளைகள் மேற்கொண்டு;

"மகன் தந்தை ஆற்றும் உதவி இவன்தந்தை

என்னோற்றான் கொல்எனும் சொல்"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்குக்கு அமைய இருப்பதோடு. இவர்களின் முன்னோடிச் செயற்பாடு ஏனையவர்களுக்கும் முன் மாதிரியாக அமைந்துள்ளது.

வி அன் ரி அறக்கட்டளையின் பணிகள் ஆவரங்கால் பகுதிக்கே என்றல்லாது யாழ். குடாநாட்டுக்கு மட்டுப்படுத்தப்படாமல் ஆவரங்காலில் இருந்து அகில இலங்கை வரை விரிவடைந்து செல்கின்றது.சமூகம், சமயம், கல்வி, அறப்பணி பலநோக்குக் கொண்டதாகப் பரந்து செல்வது தாபகர்களின் பரந்த சிந்தனையையும் தீர்க்க தரிசனமான உணர்வையும் புலப்படுத்தி உள்ளது.

ஆவரங்கால் கிராமத்தின் குறியீடாக அமைந்து சமூக மேம்பாட்டுக்காகப் பணியாற்றிவரும் சிவசக்தி மணிமண்டபமும் வி அன் ரி அறக்கட்டளையும் பரோபகாரி வேலுப்பிள்ளை சிவசுந்தரத்தின் சிந்தனை வழியில் ஏற்பட்ட செயற் பாடாகும்.

இதற்கு உறுதுணையாக இருந்து தமக்குச் சேரவேண்டிய தாய் தந்தைவழி முதுசமான காணியையும் வழங்கி முழுமையாக ஒத்துழைப்பு வழங்கிய மூத்த சகோதரன் வே. இளையதம்பி அறக்கட்டளையின் தலைவராகவும் அடுத்த சகோதரன் வே. கந்தசாமி அறக்கட்டளையின் செயலாளராகவும் இணைந்து அரும் பணியாற்றிவருவது சகோதரர்களின் கருத்தொருமித்த சிந்தனை ஓட்டத்தையும் ஒற்றுமையையும் புலப்படுத்தி நிற்கின்றது.

மணிமண்டபம் மூலம் கிடைக்கும் வருமானம் முழுவதும் அறக்கட்டளையின் மூலதனமாகக் கொள்ளப்பட்டு பணி முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுவரும் அதேவேளையில் அறக்கட்டளையின் வரவு செலவுக் கணக்குகள் பதிவுசெய்யப்பட்ட பட்டயக் கணக்காளர் மூலம் கணக்காய்வு செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட

தரப்பினருக்கு வெளிப்படுத்தப்படுவதோடு, சகல செயற்பாடுகளும் ஜனநாயக பண்புசார் நடைமுறையில் மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இந்த ஆரோக்கியமான நடைமுறை சிவசக்தி மணிமண்டபம் மற்றும் வி அன் ரி அறக்கட்டளையின் வளர்ச்சிக்கும் தொடர்ச்சியான பணிமுன்னெடுப்புக்கும் உறுதிமிக்க அடித்தளமாக அமைந்துள்ளது.

கொழும்பில் வசிக்கும் அறக்கட்டளையின் செயலாளர் வே. கந்தசாமியுடன் தொடர்புகொண்டு மணிமண்டபம் வி.அன்.ரி அறக்கட்டளை தொடர்பாக வினாவிய போது " எந்த நோக்கத்துக்காக இந்த இரண்டு நிறுவனங்களும் நிறுவப்பட்டதோ அந்த நோக்கம் எந்தவிதமான இடைவெளியும் இன்றி ஆரோக்கியமாக நடைபெற்று வருகின்றது. நிதி தொடர்பான பற்றாக்குறையோ அல்லது மேலதிக தேவையோ ஏற்படும்போது அதனைப்பொருத்தமான முறையில்குறைநிரப்பு செய்வதற்கும்மேலதிக மாக வழங்குவதற்கும் தம்பி சிவசுந்தரம் தயாராக இருக்கிறார். எல்லாம் சிவன் அருளால் நல்லபடி நடைபெறுகின்றது. காலவோட்டத்துக்கு ஏற்ப எதிர்காலத்தில் அறக்கட்டளையின் பணிகள் நவீன மயப்படுத்தப்பட்டு மேலும் விரிவுபடுத்தப்பட்ட வகையில் முன்னெடுக்கப்படும் " என மிக அடக்கமான முறையில் கூறினார். சிவசக்தி மணிமண்டபத்தின் நாளாந்த பணி முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளுவதற்கு முகாமையாளர் ஒருவரும் இரண்டு உதவியாளர்களும் நிரந்தரக் கடமையில் உள்ளனர். முகாமையாளராக சின்னையா இராசநாயகம் ஆரம்பகாலத்தில் இருந்து கடமையாற்றி வருகின்றார்.

பல்கனி அமைப்புடன் கூடிய மிகப்பெரிய மண்டபம். ஆயிரத்துக்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் வசதியான முறையில் அமர்ந்து நிகழ்வுகளை அவதானிக்கக் கூடியது. கலை அரங்கம் அதனோடு நிகழ்வுகளை அவதானிக்கக்கூடிய கட்டமைப்புக் கள் சமையல் கூடம், 300இற்கு மேற்பட்டவர்கள் ஒரே நேரத்தில் அமர்ந்து உணவு உண்ணக்கூடிய கூடம், விருந்தினர்கள் தங்கியிருந்து செல்வதற்கு வசதியான விடுதி வசதி, பூந்தோட்டம், வாகனத் தரிப்பிடம் உள்ளிட்ட கவர்ச்சியான கட்டமைப்புக் கொண்ட தோற்றம், வாசல் முகப்பில் யாழ்ப்பாணத்தின் கற்பகதருவான "பனைமரம்" கட்டியங்கூறி வரவேற்கும் சூழல் மண்டபத்துக்கு மேலும் மெருகூட்டுகின்றது.

மண்டபத்தின் அமைவிடம் வடமராட்சி, தென்மராட்சி மற்றும் வலிகாமம் ஆகிய மூன்று பெரும் பிரிவுகளுக்கு மத்தியில் அமைந்திருப்பதும் பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியோரத்தில் அமைந்திருப்பதும் மிக வசதியான கட்டமைப்பும், சலுகைக் கட்டணம் மற்றும் பொதுமக்களுடன் சம்பந்தப்பட்ட நிகழ்வு களுக்கு கட்டணம் பெறப்படாமல் இலவசமாகப் பயன்படுத்தக்கூடிய சலுகையும்


வழங்கப்படுவதால் பிரதேச, சமூக வேறுபாடுகள் இன்றி சகல தரப்பினரும் மிக விருப்பத்தோடு மண்டபத்தைப் பயன்படுத்தி வருகின்றனர்.

வி அன் ரி அறக்கட்டளை மூலம் அறநெறிப் பாடசாலையின் செயற்பாடுகளுக்கான உதவி, 46 மாணவர்களுக்கு கல்விச் செலவுக்கான மாதாந்தக் கொடுப்பனவு ஐந்து மாணவர்களுக்கு பல்கலைக்கழகக் கல்விக்கான கொடுப்பனவு ஆலயப் பணிக்கான நிதி உதவி இயற்கை அழிவுகள், வன்செயல் நடைபெறும் வேளையில் உலர் உணவு, சமைத்த உணவு வழங்கல் மற்றும் நிவாரண உதவிகள், சமூக அமைப்புகளுக்கான உதவிகள் உட்பட பல்வேறு உதவிகள் மற்றும் சேவைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மண்டபத்தின் கடந்தகாலச் செயற்பாடுகள் தொடர்பாக மண்டப முகாமையாளர் சி. இராசநாயகம் கூறுகையில், இதுவரை 510இற்கு மேற்பட்ட திருமண நிகழ்வுகளும் 65இற்கு மேற்பட்ட பூப்புனித நீராட்டு நிகழ்வும் 10இற்கு மேற்பட்ட திருமணப் பதிவும் அரங்கேற்ற நிகழ்வுகளும் நடைபெற்றிருப்பதோடு அரசு, அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பிரதேச செயலகம், பிரதேச சபை தொடர்பான நிகழ்வுகள் இலவசமாக 50இற்குக் குறையாதன நடைபெற்றுள்ளன. மேலும், நிகழ்வுகளின் உரிமையாளர்கள் உணவு வசதி, கட்டணம், மற்றும் களநிலை தொடர்பாக பாராட்டுத் தெரிவித்து மனநிறைவுடன் செல்வதாகவும் தெரிவித்தார்.

ஆவரங்கால் சிவசக்தி மணி மண்டபத்தினதும் வி அன் ரி அறக்கட்டளையினதும் பணிகள் மேலும் சிறப்படைய வாழ்த்துவோம்.

உதயன் - 13.10.2011, 20.10.2013




# 07 கோப்பாய் ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டம்

அமைதியான அமைவிடம். ஆடம்பரம் இல்லாத இரண்டு பக்கமும் விறாந்தையைக் கொண்ட பெரிய வீடு. எங்கு நோக்கினும் ஆன்மீகத்தின் அடையாளச் சின்னங்கள். வடக்குப்பக்க விறாந்தைக்கு முன்னால் பாதங்களும் தண்டும் பிரதிஷ்டை செய்யப்பட்டு பின்னணியில் ஸ்ரீ சுப்பிரமுனிய சுவாமியின் படம் (சுவரில்) உள்ள அழகிய சிறிய ஆலயம், ஆலயத்துக்கு முன்னால் வட்டமாக நிர்மாணிக்கப்பட்ட நீர்த்தடாகத்தில் வெண்தாமரையில் வீற்றிருக்கும் கலைமகளின் தத்ரூபமான சிலை. தெற்குப்புற விறாந்தையில் கதிரை மேசை. எங்கு நோக்கினிலும் ஆன்மீகத்தின் அடையாளங்கள் . அழகான சுவாமிப்படங்கள் .

மாலை வேளையிலும், விடுமுறை நாள்களிலும் வறிய மாணவர்களுக்கு ஆங்கிலம், தமிழ்மொழிப்போதனைகள். அவற்றோடு பஜனை, மாலைகட்டுதல் மற்றும் ஆத்மீகம்சார் போதனைகள். இவைதான் கோப்பாய் ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டத்தின் வெளிப்பார்வை. கோட்டத்தின் அனைத்துச் செயற்பாடுகளையும் தனது 72ஆவது வயதிலும் தளராத மன உறுதியோடு மேற்கொண்டு வருகின்றார் திருமதி சிவலோசனா கனகரத்தினம்.

கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்துக்கு முன்பாக யாழ்ப்பாணம் – பருத்தித் துறை வீதியில் இருந்து பிரிந்து பிரதானவீதிக்கு சமாந்தரமாக தெற்கு நோக்கிச் செல்லும் வீதிதான் கோப்பாய் பழம்றோட். இந்த வீதி இருபாலைச் சந்தியில் மீண்டும் யாழ் – பருத்தித்துறை பிரதான வீதியைச் சந்திக்கின்றது. பழம் றோட்டில் நாவலர் பாடசாலையில் இருந்து 700 மீற்றர் தூரத்தில் வீதிக்குக் கிழக்குப் புறத்தில் ஸ்ரீசுப்பிரமுனிய கோட்டம் அமைந்துள்ளது. வீதியில் இருந்து நோக்கும்போதே ஆன்மீக அடையாளங்கள் தெரியும். கோட்டத்தின் சிறிய கேற்றின் வளைவில் விபூதியின் திரிபுண்டர அடையாளம் . இந்து மதத்தையும் ஆன்மீகத்தையும் வெளிக்காட்டி அழைப்பதைக் காணலாம். ஸ்ரீ சுப்பிரமுனிய சுவாமி என அழைக் கப்படும் ஹவாய் சுவாமியின் முதன்மைச் சீடர்களில் ஒருவனாய் ஹவாயில் இருந்து தொண்டாற்றும் தொண்டுநாத சுவாமிகள். தொண்டுநாத சுவாமிகள் தாய்தான் கோப்பாய் ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டத்தை தற்போது நிர்வகித்துவரும் சிவலோசனி ( வயது 72). இவர் முன்பு வெள்ளவத்தை சைவமங்கையர் கழக பாடசாலையில் கல்வி கற்பித்த ஆசிரியை. தொண்டுநாத சுவாமிகளின் தந்தையார் பெயர் கனகரத்தினம். இவர்களின் 12 பரப்புக் காணியில் அமைந்துள்ளது சுப்பிரமுனிய கோட்டம்.

குடும்பத்தின் குல விளக்காகப் பிறந்த ஒரே ஒரு மகன்தான் இரமேஸ்குமார் (தொண்டுநாத சுவாமிகள்) தீட்சாநாமம். 1962ஆம் ஆண்டு பிறந்த இரமேஸ்குமார் 1979ஆம் ஆண்டு காலப்பகுதியில் கோப்பாயில் சிறுவர் முன்னேற்றக்கழகம் ஒன்றை நிறுவி. சிறுவர்களுக்கான நல்லொழுக்கம். கல்வி வளர்ச்சி. இறை நம்பிக்கை என்பவற்றை ஊட்டுவதில் ஈடுபட்டுவந்தார். பின்னர் மாமனாருடன் மலேசியாவுக்குச் செல்வதற்காக கொழும்புக்கு வந்து இராமகிருஷ்ண மிஷன் விடுதியில் (வெள்ளவத்தையில்) தங்கியிருந்த காலப்பகுதியில் இராமகிருஷ்ண மிஷன் சுவாமிகளுடன் உரையாடிய வேளைகளில் ஆத்மீக பணியில் மேலதிக ஈடுபாடு ஏற்பட்டது. ஹவாய் ஸ்ரீ சுப்பிரமுனிய சுவாமி இலங்கைக்கு வந்திருந்த வேளையில் அவரைக் கோப்பாய்க்கு வரவழைத்து சிறுவர் முன்னேற்றக் கழகத்தின் நிகழ்வில் கலந்துகொள்ள வைத்த இரமேஸ்குமாரை ஸ்ரீ சுப்பிரமுனிய சுவாமி வாகனத்தில் ஏறி திரும்பிச்செல்லும்போது காரில் இருந்தபடியே கட்டியணைத்து தயன தீட்சை வழங்கி விடைபெற்றுச் சென்றார்.

கோப்பாய் ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டத்தின் குருதேவர் சிவா சுப்பிரமுனிய சுவாமி கள் அமெரிக்காவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அமெரிக்கப் பிரஜை 65 பேர் கொண்ட அமெரிக்க நடனக் குழுவின் உறுப்பினராக. குழுவின் இயக்குநராக இலங்கைக்கு வந்தார். எதிர்பாராதவிதமாக யாழ்ப்பாணத்தில் நிகழ்வுகளை

நடத்துவதற்காக வந்திருந்த வேளையில் நண்பர் ஒருவரின் அனுசரணையுடன் அளவெட்டியில் தங்கியிருந்த அவர் யோகர்சுவாமியால் கவரப்பட்டு யோகர் சுவாமி யைத் தனது குருவாக ஏற்றுக்கொண்டார். நடனக் குழுவை விட்டு நீங்கி இந்து சமயத்தில் தன்னை இணைத்துக் கொண்டதோடு ஆத்மீக வளர்ச்சிக்காக அயராது உழைத்தவர். அமெரிக்காவிற்கு அருகில் உள்ள ஹவாய் தீவில் தங்கியிருந்து ஆச்சிரமம் அமைத்து அறப்பணி மேற்கொண்டார்கள்.

சிவா சுப்பிரமுனிய சுவாமிகளின் இந்துமதப் பிரவேசம் அமெரிக்கப் பிரஜைகள் மத்தியில் ஆத்மீகம்சார் ஈடுபாட்டையும் பல நூற்றுக்கணக்கான அமெரிக்கர்களை சுவாமிகளின் சிசியர்களாகவும் மாற்றியது. இந்துசமயத்தின் தத்துவார்த்த உண்மை களைத் தலைமேற்கொண்டு தூய இந்துக்களாக வாழ வழிகாட்டியது. கோப்பாயில் பிறந்த இரமேஸ்குமாரை தொண்டுநாத சுவாமிகள் என்ற தீட்ஸா நாமத்துடன் ஹவாய் தீவில் தங்கியிருந்து அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாட்டுப் பிரஜைகளை இந்து சமயத்தின்பால் ஈடுபாடு கொள்ள வைத்தது. கோப்பாயில் ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டம் என்றபெயரில் அறம் – ஆத்மீகம் – கல்விசார் பணிகளுடன் சமூக மேம்பாட்டுக் கான பணிகளை முன்னெடுக்கும் நிறுவனம் ஒன்றை நிமிர்ந்து நிற்க வைத்தது.

குருஜி சிவா சுப்பிரமுனிய சுவாமிகள் கங்கையில் கண்டெடுத்த சிவலிங்கத்தைத் தனது சொந்தப் பாவனையில் வைத்து பூஜித்து வழிபட்ட ஆத்மீக ஈடேற்றத்துக் கானதுமான " சத்தய சுயம்புலிங்கத்தை" ஆத்மாத்த தரிசனத்துடன் கோப்பாய் ஸ்ரீசுப்பிரமுனிய கோட்டத்துக்கு வழங்கி அதனை கோப்பாய் வீரபத்திரர் கோயில் வெளி வீதியின் தென்கிழக்கு மூலையில் தனது கையாலேயே பிரதிஷ்டை செய்து அழகான ஆலயமும் அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்த ஆலயத்தில் தினசரி ஒரு காலப் பூசை வழிபாடு நடைபெறுகின்றது. சிவராத்திரி விழா உட்பட முக்கிய தினங்களில் சிறப்பு பூஜை வழிபாடு நடைபெறுகின்றன.

சத்திய சுயம்புலிங்கேஸ்வரர் ஆலயம் எனக் குருஜி சிவாசுப்பிரமுனிய சுவாமி களால் நாமம் சூட்டப்பட்ட ஆலயத்தில் நடைபெறும் சிவராத்திரி விழா பூசை வழிபாடு குறிப்பிடத்தக்க சிறப்புவாய்ந்தது. சிவராத்திரி அன்று இருபாலை கற்பகப் பிள்ளையார் கோயிலில் இருந்து ஆண்களும் பெண்களும் பாற்குடம் ஏந்தி ஊர்வலமாக சத்திய சுயம்புலிங்கேஸ்வரர் ஆலயத்துக்கு பாதயாத்திரை மேற்கொண்டு பால் அபிஷேகம் செய்து வழிபடும் காட்சி ஆத்மீக தரிசனமாகும்.

ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டம்சார் பணிகளின் தூய்மையான முன்னெடுப்புக்களையும் ஆத்மீகம்சார் உறுதியையும் வலியுறுத்தும் வகையில் சுவாமிகளின் பிரதம

சிஷ்யன் தொண்டுநாத சுவாமிகளின் பெற்றோரான கனகரத்தினம் - சிவலோசனி தம்பதிகளை சிதம்பரத்துக்கு அழைத்துச் சிதம்பரம் நடராசர் ஆலயத்தில் தீட்சை வழங்கி அவர்களை ஆன்மீக ரீதியாக உள்ளீர்த்து ஆன்மீக அறப்பணி மேற்கொள் வதற்கு வழிசமைத்துள்ளார்.

தற்பொழுது அமெரிக்காவில் தங்கியிருக்கும் தொண்டுநாத சுவாமிகள் தொலைபேசி மூலம் என்னுடன் தொடர்புகொண்டு ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டத்தின் எதிர்காலப் பணிகள் மற்றும் முன்னெடுப்புக்கள் தொடர்பாக உரையாடும்போது ,

ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டம் தொடர்பாக எழுதத்தலைப்பட்டமைக்கு ஆசியும் பாராட்டுக் களும் தெரிவித்ததோடு சுவாமிஜி சிவா சுப்பிரமுனிய சுவாமிகள் அருள் வியாபகம், ஆன்மீகப் பணிகள் தொடர்பாக எடுத்தியம்பினார்.

சுவாமிஜி சிவா சுப்பிரமுனிய சுவாமிகளின் 22 பிரதம சீடர்களில் அடியேனாகிய நானும் ஒருவனாக இருப்பதற்கு அருள் கிடைத்தமை பெரும்பாக்கியம். குருதேவரின் வழியில் மேலைத் தேசத்தில் ஆயிரக்கணக்கானோர் முழுமையாக ஆத்மீகப் பணியில் தங்களை ஈடுபடுத்தி இருப்பதோடு முழுமையான இந்துதர்மத்தைப் பின்பற்றி வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் இந்துதர்மம் வலியுறுத்தும் பஞ்ச நித்திய கரும வழியில் வாழ்கின்றனர் எனக் குறிப்பிட்டார். மேலைத்தேசத்தில் தியானம் ஆரம்ப வகுப்புகளில் பாலர் முன்பள்ளியிலேயே அறிமுகம் செய்யப்பட்டு மாணவர் மத்தியில் வளர்த்தெடுக்கப்படுவதோடு தியானத்துக்கூடாக உடலியல் ரீதியிலான புனிதமும் கல்வியில் ஆர்வமும் கொள்கின்றனர் என வியந்து கூறினார்.

அதேநேரம் தியானம் மற்றும் இந்து தர்ம வாழ்க்கை முறையான பஞ்சநித்திய கரும வாழ்வு என்பன இலங்கை உட்பட மேலைத்தேய நாடுகளில் குறைவடைந்து செல்கின்றது. இந்நிலையில் எதிர்காலத்தில் குறிப்பிடத்தக்களவுக்கு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். கிராமங்கள்தோறும் ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டம் போன்ற ஆச்சிரமங்கள் . அறநிலையங்கள் உருவாக்கப்பட வேண்டும். அவற்றின் ஊடாக இளம் தலைமுறையினருக்குத் தியானம், இந்துதர்ம அறவாழ்வு , பஞ்சநித்திய கரும வாழ்வு உள்ளிட்ட வாழ்க்கைமுறையைப் பின்பற்றுகின்ற சமூகம் உருவாக்கப்பட வேண்டும் எனக்கூறிய தொண்டுநாத சுவாமிகள் இந்த மாத இறுதிப்பகுதியில் இலங்கைக்கு வருகை தரவிருப்பதாகவும் கூறினார்.

கோப்பாய் வீரபத்திரர் கோயில் வெளிவீதியில் தென்கிழக்கு மூலையில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள சாந்திலிங்கேஸ்வரர் ஆலயத்தின் மூர்த்தியின் சிறப்பும் அருள்வியா

பகமும் கோப்பாய் ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டத்தின் மேலான சிறப்பை வலியுறுத்துவனவாக அமைந்துள்ளது. ஒருமுறை என்றாலும் இந்த ஆலயத்தின் சாந்திலிங்கத்தைத் தரிசிப்பது பெரும்பேறாகும்.

கோப்பாய் ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டம் போன்ற கோட்டங்கள் கிராமங்கள் தோறும் உருவாகவேண்டும். இத்தகைய கோட்டங்கள் வறிய மக்களுக்கும், வறிய மாணவர்களுக்கும் வாழ்வாதார முன்னேற்றத்துக்கு வழிகாட்டுவனவாக அமையும். தனவந்தர்கள் தமது தேட்டத்தின் ஒரு பகுதியை இத்தகைய அறப்பணிகளுக்குப் பயன்படுத்துவது அவர்கள் சார்ந்த கிராமத்துக்கும் அவர்களின் சந்தானத்துக்கும் பெருமை சேர்ப்பதாக அமையும்.

உதயன் - 29.07.2010, 05.08.2010, 12.08.2010



# 08 62 வருடங்களாகக் கல்வி , சமூகப் பணியாற்றும் அச்சுவேலி மேற்கு லங்கா மாதா மடம்

**1950**ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் அச்சுவேலி மேற்கில் கல்வி-சமூகப் பணிகளை முன்னெடுப்பதற்காகக் கால்பதித்த அப்போஸ்தலிக்க கார்மேல் சபை கன்னியர் குழுவின் அமைவிடம்தான் "அச்சுவேலி லங்கா மாதா மடம்" அப்போஸ்தலிக்க கார்மேல் சபையின் கன்னியர் மடங்கள் நாடளாவிய ரீதியில் 32 இடங்களில் தமது பணி முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வருகின்றன. அதில் ஒன்றுதான் 'லங்கா மாதா மடம்' என்ற பெயருடன் அச்சுவேலியில் துலங்குகின்றது.

அச்சுவேலி மேற்கு , அச்சு நகரைப் பிறப்பிடமாகக் கொண்ட தேசிய ரீதியில் புகழ்பெற்ற வர்த்தகப் பிரமுகரும் பரோபகாரியுமான செவாலியர் சேர் சிற்றம்பலம் ஏபிரகாம் காடினர் 1950 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் தனது பிறந்த இடத்துக்குத் தன்னால் இயன்றளவு உதவவேண்டும் என்ற பெருநோக்கோடு கல்விக்குப் பாடசாலையையும் உடல்நலத்தைப் பேண அச்சுவேலி கிராமிய வைத்திய சாலையையும் கல்வியையும் ஆத்மீகத்தையும் மக்கள் மத்தியில் முன்னெடுக்க அப்போஸ்தலிக்க கார்மேல் சபையின் கன்னியருக்கான லங்கா மாதா மடத்தையும் ஸ்தாபிதம் செய்தார்.

அந்தவகையில் அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியுடன் இணைந்த நிலையில் லங்கா மாதா மடத்தில் மாணவர்களுக்கான தங்குமிட விடுதியும் நிர்மாணிக்கப்பட்டு பாடசாலை, மாணவர் விடுதி, லங்கா மாதா மடம் மூன்றும் ஒரே வளாகத்தில் செயற்பட்டன. பாடசாலையில் அதிபராகவும் ஆசிரியர்களாகவும் அருட் சகோதரிகளை நியமித்து அவர்கள் ஊடாகக் கல்விப் பணியை முன்னெடுப்பதற்குத் திட்டமிட்ட முறையில் தீர்க்கதரிசனத்துடனான ஏற்பாடுகளையும் சேர் சிற்றம்பலம் ஏபிரகாம் காடினர் செய்தார்.

1962ஆம் ஆண்டு அரசு பாடசாலைகளைப் பொறுப்பேற்ற வேளையில் மாணவர் விடுதியும் லங்கா மாதா மடமும் ஒரே வளாகத்தில் உள்ளடங்க புனித தெரேசாள் மகளிர் கல்லூரி அரசிடம் கையளிக்கப்பட்டது.

15 ஏக்கர் பெருநிலப்பரப்பில் அமைந்துள்ள 'லங்கா மாதா மடம்' கன்னியாஸ்திரிகள் தங்கியிருந்து தமது பணி முன்னெடுப்புக்களை மேற்கொள்வதற்கான தங்குமிட இல்லம். மாணவர்கள் தங்கியிருந்து கல்வியைத் தொடர்வதற்கான மாணவர் விடுதி. பிரார்த்தனை செய்வதற்கான தேவாலயம், விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு போன்றவற்றோடு பாலர்கள் ஆரம்பக்கல்வியை மேற்கொள்வதற்கான குழந்தை இயேசு பாலர் முன்பள்ளியையும் உள்ளடக்கியதாக அமைந்துள்ளது.

வளம்கொழிக்கும் பண்ணைப் பெருநிலத்தில் உள்ளூரில் மேற்கொள்ளப்படும் பயிர்ச்செய்கை நடவடிக்கையும் சுயதேவைக்கான பயன்தரும் மரங்களும் கால்நடை வளர்ப்பு முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

அச்சுவேலி – சங்கானை வீதியில், வீதிக்குத் தெற்குப் புறமாகப் பாடசாலைக்குப் பின்புறம் அமைந்திருக்கும் லங்கா மாதா மடத்துக்கு ஜோன்ராசா வீதியாலும் செல்லலாம். 15 ஏக்கர் நிலப்பரப்புடைய உயரமான சுற்று மதிலால் சூழப்பட்ட நிலையில் அமைதியான சூழலில் விசாலமான மாடிக் கட்டடத் தொகுதியுடன் மடம் அமைந்துள்ளது.

விடுதிகளில் தங்கியிருக்கும் மாணவிகளின் கல்வி தொடர்பான ஆரவாரமும் அருட்சகோதரிகளின் அமைதியான தியானம் , பிரார்த்தனை , ஒழுங்கமைக்கப்பட்ட தனித்துவமான நடைமுறையும் லங்கா மாதா மடத்துக்கு உள்ளே பிரவேசிப்பவர்களை உள்ளூரச் சுதாகரிக்கச் செய்யும். மடத்தின் தலைவியாக அருட் சகோதரி மேரி தெரசில்டா பணியாற்றுகின்றார்.

அப்போஸ்தலிக்க கார்மேல் சபையினால் உருவாக்கப்பட்ட அச்சுவேலி லங்கா மாதா மடம் ஆரம்ப காலத்தில் இறை பணியையும், கல்விப் பணியையும் முன்னெடுத்து வந்தது. தற்போது நாட்டில் ஏற்பட்ட வன்செயல்கள் மற்றும் யுத்த

சூழ்நிலையால் உண்டான பாதிப்புக்களின் அடிப்படையில் சமூகப் பணிக்கு முன்னுரிமை கொடுத்துச் செயற்படுகின்றது.

அந்தவகையில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மற்றும் இழப்புகளால் உறவுகளை இழந்த பாதிக்கப்பட்டவர்களுக்கான மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. லங்கா மாதா மடம் மாணவர் விடுதியில் தங்கியிருக்கும் 56 மாணவி களில் அரைவாசிக்கு மேற்பட்டோர் பெற்றோர் உட்பட உறவுகளை இழந்தவர்கள். அவர்களுக்கு அனைத்து வசதிகளும் வழங்கப்படுகின்றன. சமகாலத்தில் அவர் களுக்கான மேலதிக வசதிகளை வழங்குவதற்கு அரச, அரசசார்பற்ற தொண்டு நிறுவனங்கள் ஆக்கபூர்வமாகக் கைகொடுத்து உதவவில்லை எனக் கவலை தெரிவித்த மடத் தலைவி அருட்சகோதரி மேரி தெரசில்டா அத்தகைய உதவிகளை எதிர்பார்த்திருப்பதாகத் தெரிவித்தார். 15 ஏக்கர் வளாகத்தில் அமைந்துள்ள லங்கா மாதா மடத்தின் பெரும்பகுதி உரியமுறையில் திருத்திப் பயன்படுத்தப்படாமல் புதர் மண்டிய நிலையில் காணப்படுகின்றது. அந்த நிலப்பகுதியையும் உரியமுறையில் புனரமைத்து விவசாயப் பண்ணையாக விஸ்தரிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ள போதிலும் அதற்கான நிதிவளமோ கருவி சாதனமோ இல்லாமையால் நிறைவுசெய்ய முடியவில்லை. இந்த உதவியை யாராவது செய்ய முன்வரும் இடத்து அதனை ஏற்றுக்கொள்வோம் எனத் தெரிவித்தார் மடத்தலைவி.

லங்கா மாதா மடத்தினால் நடத்தப்படும் "குழந்தை யேசு" பாலர் முன்பள்ளி யில் 104 மழலைகள் கல்வி பயில்கின்றனர். வலி.கிழக்கில் ஆகக் கூடுதலான சிறுவர்கள் பயிலிடமாக விளங்குவதோடு, முன்மாதிரியான பாலர் முன்பள்ளி யாகவும் விளங்குகின்றது. அருட்சகோதரி ஒருவரின் தலைமையில் நான்கு ஆசிரியர்கள் கடமை புரிகின்றனர். ஒரே சீருடையில் நூற்றுக்கு மேற்பட்ட மழலைகள் ஒன்று கூடியிருப்பதே தனியழகு. ஆரம்பத்தில் குழந்தைகள் அங்கு கற்றுக் கொள்ளும் ஒழுங்கமைக்கப்பட்ட கற்றல்கள் அவர்களின் எதிர்கால கல்விக்கும் வாழ்க்கைக்கும் நல்ல அடித்தளமாக அமைகின்றன.

குழந்தை யேசு பாலர் முன்பள்ளியில் கல்வி பயிலும் சிறுவர்களில் 75 வீதமானவர்கள் தரம் ஒன்றுக்கான அனுமதியை புனித தெரேசாள் மகளிர் கல்லூரி யில் பெற்றுக்கொள்கின்றனர். குழந்தை யேசு பாலர் முன்பள்ளியில் இணைவதும் தொடர்ந்து புனித தெரேசாள் மகளிர் கல்லூரியில் தமது பிள்ளைகளை சேர்த்துக் கொள்வதும் கணிசமான அளவு பெற்றோருக்குத் தமது பிள்ளைகளின் கல்விக்கான ஆரம்பம் நல்லநிலையில் இடப்படுகின்றது என்ற மனநிறைவைக் கொடுக்கின்றது.

லங்கா மாதா மடம் ஆரம்பகால கட்டடத் தொகுதியிலேயே செயற்பட்டு வந்தது. கடந்த 50 வருடங்களுக்கு முந்திய வசதிநிலைக்கு ஏற்புடையதாக இருந்த கட்டடத்

தொகுதி சமகால நிலைக்கும் வளர்ச்சிக்கும் ஏற்புடையதாக இல்லாமல் இருந்தது. எனவே இதனைக் கருத்திற்கொண்டு கன்னியாஸ்திரிகளுக்கான தங்குமிட விடுதியும், லங்கா மாதா மடத்துக்கான தேவாலயமும் புதிதாக 25 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு கடந்த மே மாதம் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

கார்மேல் அப்போஸ்தலிக்க சபை கன்னியர் பெரும்பாலும் ஆசிரியர் சேவையில் இணைந்து ஆசிரியர்களாக, அதிபர்களாகப் பணியாற்றி வருகின்றனர். இதன் காரணமாக லங்கா மாதா மடத்தின் தலைவிகளாக ஓய்வு பெற்ற அதிபர் தர நிலையில் உள்ளவர்கள் பொறுப்பேற்று நிர்வகித்து வருகின்றனர். இந்தவகையில் அதன் முகாமைத்துவத்திலும் கல்விசார் நிலையின் சிறப்பியல்புகளைக் காணக்கூடியதாக உள்ளது.

62 வருடங்களாக அச்சுவேலியில் லங்கா மாதா மடம் ஆற்றிவரும் சேவை முன்னெடுப்புக்கள் கல்விப் பணியில் - சமூகப் பணியில் குறிப்பிடத்தக்கன. அச்சுவேலிக்கும் அதனோடு இணைந்த அயற் கிராமங்களுக்கும் ஆரோக்கியமான சூழ்நிலையை உருவாக்கி இருப்பதோடு ஆதரவற்ற பெண் குழந்தைகளின் எதிர்கால வாழ்விலும் ஒளியேற்றி உள்ளது. லங்கா மாதா மடத்தின் பணி முன்னெடுப்புக்கள் மேலும் வளம்பெற இறையாசி வேண்டி வாழ்த்துவோமாக.

உதயன் - 16.06.2011, 23.06.2011



# 09 மக்கள் நலன் காக்கும் பிரிவு - கோப்பாய்

மக்களுக்கான மனிதாபிமான உதவிகளை வழங்கி குறித்த பிரதேசம்சார் மக்களின் நல்வாழ்வுக்கான பணிகளை முன்னெடுத்து வரும் பிரதேசம்சார் தொண்டு நிறுவனம் என்ற வகையில் கோப்பாய் மக்கள் நலன் காக்கும் பிரிவின் பணிகள் குறிப்பிடத்தக்கன. 1986ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 03ஆந் திகதி இருபாலை பேச்சியம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற உண்ணாநோன்பு பிரார்த்தனையின் போது இந்த அமைப்பு கால்கோளாயிற்று. ஆரம்பத்தில் இருபாலை நலன் காக்கும் பிரிவு என்ற பெயருடன் செயற்பட்டபோது காலச் சூழலில் தேவையைக் கருத்தில் கொண்டு வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவு முழுவதையும் உள்ளடக்கி தனது சேவையை விஸ்தரித்து கோப்பாய் மக்கள் நலன் காக்கும் பிரிவு என நாம கரணம் பெற்றது. மக்கள் நலன் காக்கும் பிரிவின் செயற்பிராந்தியம் என்ற வகையில் "கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட எல்லாப் பிரதேசம்", "பொதுச் சபையால் தேவைப்படும் போது தீர்மானிக்கப்படும் பிரதேசம்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கோப்பாய் பிரதேச செயலகப்பிரிவு மக்களின் நலன்களைப் பேணி மக்களுக்கு பல்வேறு வகையான உதவிகளையும் செய்து மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக உள்ளூரில் சேவையாற்றும் மக்கள் நலன் காக்கும் பிரிவை

உருவாக்கவேண்டும் என்ற எண்ணத்துக்கு நலன் காக்கும் பிரிவு தோற்றம் பெற்ற காலப்பகுதியில் நிலவிய நாட்டின் நிலைமையும் மக்களின் அவல வாழ்வும் காரணமாக அமைந்திருந்தன.

மக்கள் நலன் காக்கும் பிரிவு உருவாகிய நிலைமை தொடர்பாக நலன்காக்கும் பிரிவின் தற்போதைய தலைவர் கோ. சிவசுந்தரமூர்த்தி அவர்கள் கூறும்போது வீடுகளில் இருக்க முடியாமல் ஏதிலிகளாக இடம்பெயர்ந்த மக்கள் கோப்பாய் கிறீஸ்தவக் கல்லூரி உட்பட இருபாலை பகுதியில் உள்ள பாடசாலைகளிலும் பொது இடங்களிலும் பெருமளவில் தங்கியிருந்த காலப்பகுதியில் அவர்களுக்கான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும் என்ற உயர்நோக்குடன் உருவானது. இந்த வகையில் ஆரம்பத்திலேயே தமது வீடுகளுக்கு திரும்பச் செல்ல முடியாத நிலையில் இந்தப் பகுதியில் தங்கியிருந்த 200இற்கும் மேற்பட்ட குடும்பங்களை பராமரிக்க வேண்டி இருந்தது" எனக் கூறினார். மக்கள் நலன் காக்கும் பிரிவின் நோக்கம் தொடர்பாக அமைப்பு விதியில் "அங்கத்தவர்களிடையே சமூக உணர்வையும் ஒருமைப்பாட்டையும் வளர்த்து முற்போக்கான சமுதாயக் கட்டுக் கோப்புக்கு வித்திடல், பொது அமைப்புக்களுடன் நல்லுறவைப் பேணி பாதுகாத்தல், எமது சமுதாயத்தின் பாரம்பரிய கலை, பண்பாடுகளை பேணிப்பாதுகாத்தலும், அபிவிருத்திக்காகவும் உழைத்தல், சமுதாயத்தின் பின்தங்கியோர் சிறுவர்கள், முதியோர்கள், மகளிர் ஆகியோரின் உரிமையை பாதுகாத்து அவர்களின் நலன்களை மேம்படுத்தல்" எனக் குறிப்பிடப்பட்டிருப்பது மக்கள் நலன் காக்கும் பிரிவின் உயர் செயற்பாட்டை வெளிப்படுத்தியிருக்கின்றன. நலன் காக்கும் பிரிவின் இலச்சனையில் பசு, பசுக்கன்று , பாற்குடம் இடம்பெற்றுள்ளன. மக்கள் நலன்காக்கும் பிரிவின் உறுப்பினர்கள் என்ற வகையில் ஆயுட்கால உறுப்பினர்கள், ஆண்டுச் சந்தா செலுத்தும் உறுப்பினர்கள் என்ற வகையில் பல நூற்றுக் கணக்கானோர் உறுப்புரிமைப் பெற்றுள்ளனர். மக்கள் நலன் காக்கும் பிரிவின் தற்போதைய செயலாளராக சி.உமாசங்கர் கடமையாற்றுகின்றார்.

பிரிவின் பணிமனை அண்மைக் காலம் வரையும் யாழ்ப்பாணம் பருத்தித்துறை பிரதான வீதியில் இருபாலை சந்திக்கு அண்மையில் வீதிக்கு கிழக்குப் புறமாக உள்ள வசதியான கட்டடத்தில் செயற்பட்டு வந்தது. தற்பொழுது இருபாலைச் சந்தியிருந்து பிரிந்து வடகிழக்காகச் செல்லும் (பழைய வீதி )வீதியில் சந்தியில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது.

உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனமான கோப்பாய் மக்கள் நலன் காக்கும் பிரிவு, யாப்பு விதிகளுக்கு அமைய வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவு முழுவதையும்

உள்ளடக்கி தனது சேவையை வழங்கி வருகின்றது. இது ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் இன்றுவரை பல்வேறு இடர்கள் நெருக்கடியைச் சந்தித்த போதிலும் மக்கள் நலன் காக்கும் பணியில் இடையீடு இன்றி செயற்பட்டு வருகின்றது. அமைப்பின் குறிக்கோள் என்ற வகையில் கல்வி அபிவிருத்தி நடவடிக்கையில் ஈடுபடல், பொருளாதார மேம்பாட்டிற்குப் பாடுபடல், நிலம்- வாழ்விடம் என்பவற்றைப் பெற்றுக் கொடுத்தல் , வாழும் உரிமைக்கான உதவிகளை வழங்குதல், சுகாதாரம், போஷாக்கு, வைத்திய உதவிகளை வழங்குதல், விவசாய அபிவிருத்திக்கு உதவுதல், தொழிற்பயிற்சி, தொழில்வாய்ப்புக்களைப் பெற உதவுதல், எதிர்பாராத சூழ்நிலையின்போது ஆலோசனைகள், சேவைகள் மற்றும் அமைப்புக்களுடன் தொடர்பு கொண்டு நிவாரணம் பெற வாய்ப்புக்களை அளித்தல், சேமிப்பு பழக்கத்தை ஊக்குவித்தல், சூழல்சுற்றாடல் பாதுகாப்புக்கு பாடுபடல் என்பவற்றோடு காலத்தின் தேவைக்கு ஏற்ற வகையில் மக்கள் நலன் ஓம்பும் பணிகளை முன்னெடுத்து வருகின்றது.

18 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் அங்கத்தவர்களாக இணைந்து பணியாற்றி வருகின்றனர். அங்கத்தவர்கள் என்ற வகையில் ஆயுட்கால அங்கத்த வர்கள் - ஆண்டுச் சந்தா செலுத்தும் அங்கத்தவர்கள் என இரண்டு பிரிவினர் உள்ள போதிலும் ஆயிரத்து ஐந்நூறிற்கு மேற்பட்டவர்கள் அங்கத்தவர்களாக இணைந்து நலன்காக்கும் பிரிவின் ஒழுங்கமைக்கப்பட்ட முன்னெடுப்புக்களுக்கு உதவிவருவது மக்கள் நலன் காக்கும் பிரிவின் ஆரோக்கியமான செயற்பாட்டுக்கு உதவியான அடித்தளமாக உள்ளது. நிர்வாகக் குழுவில் 11 பேர் உள்ளனர். தற்போதைய நிர்வாகத்தில் தலைவர் கோ.சிவசுந்தரமூர்த்தி, உபதலைவர் திருமதி உ. இந்திரலீலா, செயலாளர் தி. உமாசங்கர், உபசெயலாளர் க. குமாரகுலசிங்கம், பொருளாளர் வ. செல்லத்துரை, நிர்வாக உறுப்பினர்களாக வீ.இராசதுரை, நா. சுந்தரலிங்கம், கி.தங்கவடிவேல், திருமதி அ.வெள்ளியங்கிரிநாதன், இ.அமலன், வி.கஜேந்திரன் ஆகியோர் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். போஷகராக வைத்திய கலாநிதி வை. தியாகராசா அவர்களும் ஆலோசனைச் சபை உறுப்பினர் களாக த.இராசரத்தினம், எஸ்.விவேகானந்தர், க. வேலாயுதப்பிள்ளை ஆகியோர் உள்ளனர். முகாமைத்துவ உதவியாளராக செல்வி.கிருஸ்ணகுமாரி தம்பிராசா பணிபுரிகின்றார்.

நலன்காக்கும் பிரிவின் நிர்வாகம் தனது செயற்பாடுகளைக் காலத்துக்குக் காலம் செயற்பட்டு அறிக்கை என்ற வகையில் அச்சிட்டுப் பொதுமக்களுக்கு பகிரங்கப்படுத்தி வருகின்றது. செயற்பாட்டு அறிக்கை என்ற வகையில் 18.09.2005இல் இருந்து 14.06.2009 வரையிலான அறிக்கை இறுதியாக வெளிவந்துள்ளது.

மக்கள் நலன் காக்கும் பிரிவு ஆரம்பிக்கப்பட்ட நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு 1986 முதல் இன்றுவரை தனது பணிகளை ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் மேற்கொண்டு வருகின்றது. தொண்டு நிறுவனம் என்ற வகையில் உள்ளூரிலே உருவாகி வலி.கிழக்குப் பிரதேசத்தில் உள்ள மக்களின் நலன் ஓம்பியதாக தனது செயல்முறைகளை முன்னெடுத்து வரும் 'அமைப்பின் பணிகள் தேக்க நிலையில் இல்லாமல் கால ஓட்டத்துக்கு ஏற்ப விரைவுபடுத்தப்பட வேண்டும் என்ற உத்வேகம்' புதிய நிர்வாகிகள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

செயற்பாட்டறிக்கை காலத்துக்கு காலம் நலன் காக்கும் பிரிவினால் பொதுமக்களின் பார்வைக்கு வெளியிடப்பட்டு வருகின்றது. அந்த வகையில் இறுதியாக 2005.09.18 -2009.06.14 வரையான செயற்பாட்டு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

**கல்வி ஊக்குவிப்புத் திட்டம்**

பாடசாலை மாணவர்களின் கல்வி இடைவிலகலைத் தடுக்கும் நோக்குடன் தலா 1000ரூபா (ஆயிரம்) பெறுமதியான கற்றல் உபகரணம், சத்துணவு என்பன வழங்கப்பட்டு வருகின்றது. தாய்/தந்தை மற்றும் இருவரையும் இழந்த 30 மாண வர்கள் பயன்பெறுகின்றனர். கடந்த நிஷாப்புயல் அனர்த்தத்தின்போது பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த, தெரிவுசெய்யப்பட்ட 65 மாணவர்களுக்கு 11,436ரூபா பெறுமதியான கற்றல் உபகரணம் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டது.

**வாழ்வாதார ஊக்குவிப்புக் கடன் திட்டம்**

மனிதநேய அமைப்புகளின் ஒன்றியத்தின் நிதி உதவியுடன் கணவனை இழந்த 26 பெண் பயனாளிகளுக்கு 8 ஆயிரம் ரூபாவீதம் சுயதொழில் ஊக்குவிப்புத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. சுழற்சி முறைக் கடன் அடிப்படையில் 56 பயனாளி களுக்கு தலா 5 ஆயிரம் ரூபாவீதம் கடன் வழங்கப்பட்டுள்ளது. இலங்கை வங்கியின் கோப்பாய் கிளையின் நிதி அனுசரணையுடன் 30 பயனாளிகளுக்கு தலா 10ஆயிரம் கடன் வழங்கப்பட்டுள்ளது. நலன்காக்கும் பிரிவின் நிதியில் இருந்து விவசாயம் சுழற்சி முறைக்கடன் வழங்கப்பட்டு வருகின்றது.

**முன்பள்ளிக் கல்வித் திட்டம்**

நலன்காக்கும் பிரிவினால் நடத்தப்படும் முன்பள்ளியில் 33 மாணவர்கள் கல்வியைத் தொடர்கின்றனர். இருபாலைப் பகுதியில் உள்ள 12 முன்பள்ளி ஆசிரியர் கௌரவிக்கப்பட்டனர்.


முன்பள்ளி மாணவர்களுக்கான கல்விச் சுற்றுலா நடைமுறை, முன்பள்ளி விளையாட்டு நிகழ்வு, ஆக்கக் கண்காட்சி என்பன முன்னெடுக்கப்படுகின்றன.

**மலசலகூடம் வழங்கும் திட்டம்**

இருபாலை தெற்கு ஆனந்தபுரம் கிராமத்தில் 19 பயனாளிகளுக்கு தலா 25ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டு மக்கள் பங்களிப்புடன் மலசலகூட வசதியையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

'நலன் காக்கும் பிரிவு - கோப்பாய்' என்பது பெயரைப் பொறுத்தளவில் குறித்த ஒரு கிராமசேவையாளர் பிரிவை அல்லது கோப்பாய் கிராமத்தை மட்டும் அடையாளப் படுத்துவதுபோல இருப்பதால் ஏனைய இடங்களைச் சேர்ந்த பொதுமக்கள் பிரிவுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதில் தயக்கம் காட்டுவதை கண்டுணர முடிகின்றது. ஆனால், நலன்காக்கும் பிரிவின் செயற்பாட்டுப் பிராந்தியம் என்ற வகையில் 'பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட எல்லை'எனக் குறிப்பிடப்பட்டிருப்பதைக் கருத்தில் கொண்டு 'வலி.கிழக்குப் பிரதேச நலன்காக்கும் பிரிவு' என வழங்குவது உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்வதோடு பொதுமக்கள் தயங்காமல் தொடர்பு கொள்வதற்கான ஏது நிலையை ஏற்படுத்தி மக்கள் சேவையே மகேசன் சேவையென மேலும் சேவைகள் தொடரட்டும்.

உதயன் - 09.09.2010, 16.09.2010, 23.09.2010



# 10 கல்வி, சமூகப் பணியை விஸ்தரித்த புத்தூர் பரிலூக்கா மெதடிஸ்த திருச்சபை

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியில் சுன்னாகவீதிச் சந்திக்கு வடமேற்கு மூலையில் 5 ஏக்கர் நிலப்பரப்பில் தேவாலயம் , முதியோர் இல்லம், வைத்தியசாலை உள்ளடங்கியதாக புத்தூர் பரிலூக்கா மெதடிஸ்த திருச்சபை வளாகம் அமைந்துள்ளது. வலிகாமம் கிழக்குப் பிரதேசத்தில் 112 வருட மருத்துவ சேவையை நிறைவுசெய்து உயர்ந்து நிற்கும் வைத்தியசாலை, பழம்பெரும் தேவாலயம், மற்றும் முதியோர் இல்லம் ஆகியன கட்டமைப்புடன் 170 ஆண்டுகளாகத் தனது சேவையைத் தொடர்ந்து கொண்டிருக்கிறது புத்தூர் பரிலூக்கா மெதடிஸ்த திருச்சபை.

கல்வியையும் சமூகப் பணியையும் இலங்கையில் விரிவான முறையில் முன்னெடுக்க வேண்டும் என்ற சேவை நோக்கோடு 1814 ஆம் ஆண்டு யூன் மாதம் 29ஆம் திகதி பல்வேறு இடையூறுகளுக்கு மத்தியில் 6 மாதங்களுக்கு மேல் கடலில் பயணம் செய்து காலித் துறைமுகத்தில் தரை இறங்கியது மெதடிஸ்த தூதுப் பணிக்குழு. மெதடிஸ்த பணிக்குழுவில் இடம்பெற்றிருந்த ஐவரில் திருவுளச் சீட்டு மூலம் தெரிவுசெய்யப்பட்ட ஜேம்ஸ் வின்சன் யாழ். மாவட்டப் பகுதிக்குச் சேவை யாற்றுவதற்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

அப்போது யாழ்ப்பாணத்தில் அரச அதிபராக இருந்த ஜேம்ஸ் முயாட், வின்சன் அவர்களை வரவேற்று யாழ். கோட்டையில் இருந்த ஒல்லாந்தரின் தேவாலயத்தில் தங்கவைத்தார்.

யாழ். வந்த மெதடிஸ்த பணிக்குழுவின் முதலாவது கல்விப்பணி 1816ஆம் ஆண்டு யாழ். மத்திய கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து யாழ் நகருக்கு அண்மையில் உள்ள இடங்களுக்குத் தமது பணி முன்னெடுப்புக்களை விரிவுபடுத்தினார். இந்தவகையில் வண்ணார்பண்ணை, புத்தூர், அச்செழு, தொல்புரம், அல்லைப்பிட்டி உள்ளடங்கலாக யாழ். மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் மெதடிஸ்த பணிக்குழு தனது பணி முன்னெடுப்புக்களை மேற்கொள்ளத் தொடங்கியது. புத்தூர் பரிலூக்கா மெதடிஸ்த திருச்சபையின் பணி முன்னெடுப்புக்காக 1842ஆம் ஆண்டு புத்தூரில் ஒல்லாந்தரால் கைவிடப்பட்ட தேவாலயத்தை வண. பீற்றர் பேர்சிவல் பாதிரியார், பிரிட்டன் அரசுடன் பேச்சு நடத்தி மெதடிஸ்த திருச்சபைக்கு உரிமையாக்கிக் கொண்டார். இந்த ஆலயம் திருத்த வேலைகளுக்கு உட்படுத்தப்பட்டு 1845 ஆம் ஆண்டு பேர்சிவல் பாதிரியாரால் திறந்து வைக்கப்பட்டது. 1844ஆம் ஆண்டு புத்தூரில் பாடசாலை ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டது. 1898ஆம் ஆண்டு குருமனையின் விறாந்தையில் மருத்துவப் பணி ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்தத் திருச்சபை கல்விப்பணியை விஸ்தரிப்பதை நோக்காகக்கொண்டு 1900ஆம் ஆண்டுக்கு பிந்திய காலப்பகுதியில் வாதரவத்தைக் கிராமத்திலும் பாடசாலை ஒன்றை ஆரம்பித்து வைத்தது. அங்கு திருச்சபையால் பணி முன்னெடுப்புக்கான செயற்பாடுகள் மேற்கொள்வதை வாதரவத்தையைச் சேர்ந்த இந்துக்கள் ஏற்றுக் கொள்ளாததால் கல்விச் செயற்பாடுகளைத் தொடரமுடியாமல் கைவிடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இதன்பின்னர் மேற்படி பாடசாலை இந்துப் பாடசாலையாகச் செயற்பட ஆரம்பித்து தற்பொழுது விக்னேஸ்வரா வித்தியாலயம் என்ற பெயருடன் செயற்படுகின்றது. புத்தூர் பரிலூக்கா மெதடிஸ்த திருச்சபையின் கல்வி, சமுதாய மேம்பாட்டு முன்னெடுப்புக்கள் புத்தூர் மற்றும் அதை அண்டிய அயல் கிராமங்களில் வாழும் மக்களுக்கும் ஆறுதல் அளித்ததோடு, வைத்தியசாலைப் பணிகள் இணுவில், மூளாய் போன்ற வைத்தியசாலைகளுக்கு இணையான நிலையிலும் இருந்தன. புத்தூர் ஜீவன் மருத்துவமனையின் (புத்தூர் அம்மாக்கள் வைத்தியசாலை என அழைக்கப்பட்டது) சேவை முன்னெடுப்புக்கள் வறிய மக்களுக்கு வாழ்வளிப்பதாக அமைந்திருந்தது. வலி.கிழக்கில் ஐரோப்பிய வைத்தியமுறையின் அறிமுகம் ஜீவன் மருத்துவமனையூடாகவே ஏற்பட்டது எனக் கூறப்பட்டது.

வலி.கிழக்கில் புத்தூர் பரிலூக்கா மெதடிஸ்த திருச்சபையின் ஸ்தாபிதம் சாதாரண பொதுமக்களின் வாழ்க்கைக்கு அனுகூலமாகவும் ஆறுதல் அளிப்பதாகவும்

அமைந்தது. சமகாலத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட துறைகளில் கல்வி, மருத்துவம், சமூக மேம்பாடு போன்றவற்றில் புதிய களநிலை உருவாக்கப்பட்டது. குருகுலமுறையில் திண்ணைப் பள்ளியாக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் குறிப்பிட்ட ஒரு சிலருக்கு மட்டும் உரியதாக இருந்த கல்விமுறை நிறுவனமயப்படுத்தப்பட்ட நிலையில் புத்தூர் பகுதியில் பன்முகப்படுத்தப்பட்டது.

இந்து சமயத்துடன் இணைந்த கல்விப் பாரம்பரிய மரபுமுறையில் இருந்துவந்த சில பாரம்பரியங்களைத் தகர்த்ததோடு புதிய சமூகக் கட்டுமாணத்தைப் புத்தூரிலும் அதன் அயற் பிரதேசங்களிலும் ஏற்படுத்தியது. 1844ஆம் ஆண்டு தனது கல்விப் பணியை ஆரம்பித்த புத்தூர் மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை வலி. கிழக்கில் மூத்த பாடசாலைகளில் ஒன்றாக விளங்குகின்றது. புத்தூர் மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை யாழ். - பருத்தித்துறை பிரதான வீதியில் புத்தூர் பரிலூக்கா தேவாலயத்துக்கு எதிர்ப்புறத்தில் வீதிக்கு கிழக்குப் பக்கத்தில் அமைந் துள்ளது. கட்டட நிர்மாணத்தில் குறிப்பிடத்தக்க அம்சங்களை உள்ளடக்காவிடிலும் பூர்வீகக் கட்டடம் உள்ளடங்கலாக இரண்டு மண்டபங்களைக் கொண்டுள்ளது. தரம் ஒன்று முதல் 5 வரையான வகுப்புக்களைக் கொண்டதாக ஆரம்பப் பாடசாலைக் கட்டமைப்பில் இது தற்போது செயற்படுகின்றது. "சவுக்கடிப் பாடசாலை" எனச்' செல்லமாகக் கிராம மக்களால் அழைக்கப்பட்டது. காரணம் பாடசாலை முன்பாகத் தேவாலய வாசலில் நூற்றாண்டு கடந்த பெரிய சவுக்கு மரம் மிக உயரமாக வளர்ந்து நின்றது. இது அண்மைக் காலத்தில் அப்புறப்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**பரிலூக்கா மருத்துவமனை**

1898 ஆம் ஆண்டு புத்தூர் பரிலூக்கா மெதடிஸ்த திருச்சபையின் குருமனையின் விறாந்தையில் மருத்துவப் பணி ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் ஜீவன் மருத்துவ மனை என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட வைத்திய சேவையை சகோதரி ஹெர்ரூட் வெர்ரல்ஸிப் ஆரம்பித்து வைத்தார். 1899இல் இரண்டு வைத்தியர்களும் வைத்திய சாலைக்கான பணியாளர்களும் நியமிக்கப்பட்டு வைத்திய சேவை வழங்கப்பட்டது. 1908 ஆம் ஆண்டு பயிற்சி பெற்ற இரண்டு தாதிமாரும் நியமிக்கப்பட்டனர். "அம்மாக்கள் வைத்தியசாலை" எனப் பொதுமக்களால் அழைக்கப்பட்டுவரும் புத்தூர் பரிலூக்கா வைத்தியசாலையின் சேவை முன்னெடுப்புக்கள் குறித்த காலகட்டத்தில் மிகவும் உயர்வாக விளங்கியது. தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமம் பகுதிவாழ் மக்கள் இதன் சேவையைப் பெற்றனர். வலி.கிழக்கில் முதன்முதலாக ஐரோப்பிய வைத்திய சேவையை அறிமுகம் செய்தது புத்தூர் பரிலூக்கா வைத்தியசாலை என்பதில் சந்தேகமே இல்லை. அதற்கு முந்திய காலப்பகுதியில் இந்தப் பிரதேச மக்கள் சுதேச வைத்தியத்தை உள்ளூரில் பெற்றுவந்தனர்.

மேலும் மக்கள் தமது வசதிகளுக்கேற்ப தங்கியிருந்து வைத்திய சேவையைப் பெற்றுக் கொள்வதற்கு விடுதி வசதி செய்யப்பட்டிருந்ததோடு நோயாளரின் குடும்ப உறவினர்கள் தங்கியிருந்து நோயாளிக்கு உதவுவதற்கும் நோயாளரைப் பராமரிப் பதற்கும் வசதியாக தங்குமிட வசதிகள் கொண்ட தனி அறைகள் குறைந்த கட்டணத்தில் வழங்கப்பட்டன. அத்துடன் வசதி குறைவான ஏழைகளுக்கு இலவசமாகவும் மருத்துவ வசதிகள் செய்யப்பட்டன.

**குழந்தை வளர்ப்பு நிலையம்**

புத்தூர் பரிலூக்கா மெதடிஸ்த திருச்சபை வளாகத்தில் குழந்தை வளர்ப்பு நிலையம் 1980ஆம் ஆண்டுக்கு முந்திய காலப்பகுதியில் மிகச் சிறப்பான நிலையில் செயற்பட்டு வந்தது. பிறந்த ஒரு சில தினங்களில் தாயை இழந்த குழந்தைகள் இந்த நிலையத் தால் பொறுப்பேற்கப்பட்டு நியாயமான கட்டணத்தில் வளர்க்கப்பட்டு குழந்தையின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். குறித்த காலப்பகுதியில் கணிசமான எண்ணிக்கையில் குழந்தைகள் வளர்க்கப்பட்டனர்.

குறித்த வயதுப் பருவத்தில் தாயை இழந்த குழந்தைகளை உறவினர்கள் பராமரிப்பதன் மூலம் குழந்தைகளுக்குப் பெருமளவில் பாதிப்புக்கள் ஏற்படுவதோடு உயிரிழக்கக்கூடிய வாய்ப்பும் இருந்தமையினால் இந்தச் சேவையின் மூலம் பல குழந்தைகளின் உயிர் காப்பாற்றப்பட்டதோடு அவர்கள் எதிர்காலத்தில் நல்ல பண்புகளுடன் வாழ்வதற்கும் வாய்ப்பு ஏற்பட்டது. இந்த வசதிகளை யாழ்.மாவட்டம் மற்றும் நாடளாவிய ரீதியில் உள்ளவர்களும் உரியமுறையில் பெற்றுக்கொண்டனர். இந்த வகையில் புத்தூர் பரிலூக்கா மெதடிஸ்த திருச்சபையின் குழந்தை வளர்ப்புச் சேவை நாடளாவிய ரீதியில் பெருமை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

170ஆவது ஆண்டுச் சேவையில் காலடி பதிக்க இருக்கும் புத்தூர் பரிலூக்கா மெதடிஸ்த திருச்சபையின் பணிகள் வயது, பால், வர்க்க வேறுபாடின்றி சமூகத்தின் சகல தரப்பினருக்கும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 1842 ஆம் ஆண்டில் இருந்து இடையறாது மேற்கொள்ளப்படும் பணிகள் சகல தரப்பினாலும் வரவேற்கப்படுவதோடு மக்கள் எந்தவிதமான வேறுபாடுகளும் இன்றி சேவையைப் பெற்று வருகின்றனர்.

**முதியோர் இல்லம்** புத்தூர் பரிலூக்கா மெதடிஸ்த திருச்சபையின் முதியோர் இல்லம் 1994ஆம் ஆண்டு செயற்படத் தொடங்கியது. கடந்த முப்பது ஆண்டு காலப் பகுதியில் நாட்டில் நிலவிய அசாதாரண நிலை யாழ்.மாவட்டத்தின் வாழ்வாதார நிலையில் சகல மட்டத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தியதைப் போன்று முதியோரின் வாழ்வியலிலும் எதிர்பாராத பெரும் பாதிப்பினை ஏற்படுத்தியது. புலம்பெயர்ந்தமை, யுத்த சூழ்நிலையில் உறவுகளை இழந்தமை, உள்ளூர் இடப்பெயர்வு போன்ற பல்வேறு காரணிகள் முதியோரைப் பெருமளவில் பாதிப்படையச் செய்துள்ளன. 60 வயதைக் கடந்தால் முதியோர் என்ற பிரிவில் உள்ளடக்கப்படும் வயது முதிர்ந்த

பிரிவினர் மீண்டும் குழந்தைகளுக்கான மன உணர்வைப் பெற்றுக்கொள்கின்றனர் என்பது உளவியல் ரீதியிலான உண்மையாகும்.

முதியோர்கள் எதிர்கொள்ளும் அசாதாரண வாழ்க்கை நிலையைக் கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்ட முதியோர் இல்லத்தில் தற்பொழுது 24பேர் (ஆண்,பெண் உள்ளடங்கலாக) தங்கியுள்ளனர். இவர்களின் பராமரிப்புக்கு நியாயமான மாதாந்தக் கட்டணம் அறவிடப்படுகின்றது. பரிலூக்கா தேவாலயத்துக்கும் பரிலூக்கா மருத்துவ மனைக்கும் இடையில் உள்ள விசாலமான இல்லம் ஒன்றில் முதியோர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

முதியோர் இல்லத்தை நேரில் பார்வையிட்டு அவர்களுடன் கலந்துரையாடுவதற்கு விரும்புபவர்களுக்கு அனுமதிகள் மறுக்கப்படுவதில்லை. அரச சேவையில் இருந்து ஓய்வுபெற்றவர்கள் , வர்த்தகர்கள் உட்படப் பல்வேறு தொழில் முயற்சிகளில் ஈடுபட்டவர் கள். இளமைப் பருவத்தில் தமக்கே உரிய தனித்துவத்தோடு வாழ்ந்தவர்கள் அங்கு தங்கியிருப்பதை அவதானிக்க முடிந்தது. இவர்கள் தங்களுக்குரிய உணவு, உறைவிடம், ஏனைய வசதிகள் என்பன உரியமுறையில் வழங்கப்படுவதாகக் கூறியபோதிலும் அவர்களிடம் ஒருவிதமான தவிப்பையும், ஏமாற்றத்தையும், உரையாடுவதற்குத் தயங்கும் வைராக்கிய உணர்வையும் அவதானிக்க முடிந்தது. இது யாழ்.மாவட்டத்தில் உறவுகளைப் பிரிந்து தனிமையில் வாழும் முதியோரின் உள்ளுணர்வின் வெட்டு முகத்தோற்றத்தை வெளிப்படுத்துகிறது. அவர்கள் தமது பயன்பாட்டுக்குப் பொருத்தமான நூலகம் தேவை என வலியுறுத்தி வருகின்றனர்.

முதியோரைப் பராமரிக்கும் பணியில் உள்ள முதியோர் இல்லப் பெண் அதிகாரி தாய்மை உணர்வோடு முதியோரின் தேவைகளை நிறைவுசெய்து வருகின்றார். மது அருந்துதல், புகைத்தல் போன்ற தீயபழக்கங்களைப் பின்பற்றக்கூடாது என்ற உறுதியுரையுடன் முதியோர்கள் இந்த இல்லத்தில் அனுமதிக்கப்படுகின்றனர். முதியோரின் வாரிசுகள் மற்றும் உறவினர்கள் தமது வசதிக்கு ஏற்ப சந்தர்ப்பம் ஏற்படும்போது இடையிடையே வந்து இவர்களைச் சந்தித்துச் செல்கின்றனர்.

புத்தூர் பரிலூக்கா மெதடிஸ்த திருச்சபையின் பணி முன்னெடுப்புக்கள் சமயம், கல்வி, சமூகம் என்ற மேம்பாட்டைக் கொண்டது. தற்பொழுது இந்தத் திருச்சபையில் 50பேர் வரையில் உறுப்பினராக உள்ளனர். சபைக்குப் பொறுப்பான குருவாக கிறீஸ்ரிகுமார் தங்கராசா பணியாற்றி வருகின்றார்.

புத்தூர் பரிலூக்கா மெதடிஸ்த திருச்சபையின் பணி முன்னெடுப்புக்கள் நவீன யுகத்துக்கு ஏற்புடையதாக மேலும் விஸ்தரிக்கப்பட வேண்டும் என்ற பெருவிருப்புடன் மக்கள் அதன் சேவைகளைப் பெற்று வருகின்றனர்.

உதயன் - 14.04.2011, 21.04.2011, 22.04.2011




# 11 சமூக வளர்ச்சிக்கு அரும்பணியாற்றும் வலி. கிழக்கு சைவ அருள்நெறி மன்றம்

சமூகத்தோடு இணைந்த நிலையில் சமயத்தையும் மானிட நேயத்தையும் வளர்த்து வயது வேறுபாடு இன்றி அனைத்துத் தரப்பினரையும் மேல் நிலைப் படுத்துவதற்கு தமது பணி முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வருகின்றது வலி. கிழக்கு சைவசமய அருள்நெறி மன்றம். 1966 ஆம் ஆண்டு ஐப்பசித் திங்கள் 23 நாள் இதன் கால்கோள்விழா கோப்பாய் வீரபத்திரர் கோயில் முன் மண்டபத்தில் நடைபெற்றது.

நல்லை திருஞான சம்பந்தர் ஆதினத்தின் முதலாவது குருமஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் கால்கோள் விழாவில் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்ததோடு அதன் பணிதொடர ஆசி வழங்கியிருந்தார். மன்றத்தின் ஸ்தாபகரும் தலைவருமான சிவஸ்ரீ சோ. இ. பிரணதார்த்திஹரக் குருக்கள் தீர்க்க தரிசன சிந்தையோடு ஆரம்பித்த மன்றத்தின் ஆரம்பகால நாமம் 'வலி.கிழக்கு திருவருள் தவநெறி மன்றம்'.

ஈழத்தின் மூத்த பத்திரிகையாளர்களில் ஒருவரும் தமிழ் இன உணர்வாளருமான கோவை மகேசனின் (சுதந்திரன் ஆசிரியர்) உடன் பிறந்த சகோதரன் குருக்கள்

ஐயாவும் ஊடகவியலாளராக ஆரம்ப காலத்தில் பணியாற்றியவர் ஈழநாடு பத்திரிகையில் ஹரன் ஐயா பிரதம ஆசிரியராக கடமையாற்றிய காலத்தில் ஈழநாடு பத்திரிகையின் அலுவலகச் செய்தியாளராக கடமையாற்றியவர். சமூக மேம்பாடு கருதி சமயத்தோடு இணைந்த நிலையில் தனது பணி முன்னெடுப்புக்களை தளராத நிலையில் தனது 68ஆவது வயதிலும் மேற்கொண்டு வருகின்றார்.

திருவருள் தவநெறி மன்றம் என்ற பெயரோடு தமது பணிகளை 46 வருடங்களுக்கு முன்னர் மேற்கொண்டது. மன்றத்தின் செயற்பாடுகள் போர்க்காலச் சூழ்நிலை, மற்றும் நாட்டு நிலை காரணமாக இடைக்காலத்தில் ஸ்தம்பிதம் அடைந்த போதிலும் ஆரம்பகால நோக்கங்களை அடியொற்றி தமது பணி முன்னெடுப்புக்களை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது.

சைவசமய அருள்நெறி மன்றத்தின் அலுவலகம் கோப்பாய் தெற்கு வீரபத்திரர் கோயிலின் வடக்கு வீதியில் உள்ள தலைவர் குருக்கள் ஐயாவின் இல்லத்தில் அமைந்துள்ளது. மன்றத்தின் ஆரம்பகால பெயரான திருவருள் தவநெறி மன்றம் என்பது "சைவ சமய அருள் நெறிமன்றம்" என மாற்றம் செய்யப்பட்டு இந்து கலாசார அலுவல்கள் அமைச்சில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

வலி.கிழக்கு சைவசமய அருள்நெறி மன்றத்தின் சேவைகள் என்ற வகையில் மக்கள் மத்தியில் சைவநெறி ஆன்மிகத்தை வளர்த்தல், சமயம் தொடர்பான பிரசாரம், பிரசங்கம், கருத்தரங்குகளை மக்கள் மத்தியில் ஏற்பாடு செய்து நடத்துதல், சமய அறிவுப் போட்டிகள் மற்றும் சமயம் தொடர்பான போட்டிகளை நடத்துதல் மூலம் மாணவர்களை கல்வி மேம்பாடடையச் செய்தல்.

1. சமய நாயன்மார்கள் பெரியோர்களின் குருபூசைத் தினங்களை கொண்டாடுதல்
2. மாணவர்களுக்கு சமயம், தமிழ், கணினி அறிவினை வளர்க்க இலவசமாக குறித்த துறைசார் நிலையில் வகுப்புக்களை நடத்துதல்.
3. வருடம் தோறும் நடைபெறும் ஆண்டு விழாவில் தமிழ்,சைவம்,கலை,கலாசாரம், சார்நிலையில் தொண்டு செய்பவர்களை அறிஞர்களைப் பாராட்டிக் கௌரவித்தல்.
4. நலிவுற்ற மக்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கான செயற்பாடுகளை முன்னெடுத்தல்.

மன்றத்தின் சேவை நோக்கு சைவ சமயம் சார்நிலையில் மட்டுப்படுத்தப்படாமல் சமூக மேம்பாட்டை உள்ளடக்கியதாக சமயங் கடந்த நிலையில் மேற்கொள்ளப்பட்டு வருவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. துறைசார்நிலை விற்பன்னர்கள் மற்றும் அறிஞர்களைப் பாராட்டி கௌரவித்தல், நலிவுற்ற குடும்பங்களின் வாழ்வாதார

மேம்பாட்டிற்கு உதவுதல், மாணவர்களின் கல்வி அறிவை உயர்நிலை பெறச்செய்தல் என்ற வகையில் சகல மதங்களைச் சேர்ந்தவர்களையும் உள்ளடக்கியதாக மேற்கொண்டு வருவது சகல சன்மார்க்க மேம்பாட்டிற்கு வளம் சேர்ப்பதோடு மனிதநேயம் சார்நிலையில் பணி முன்னெடுப்புக்கள் மேற்கொள்வதையும் வெளிப்படுத்துகின்றது.

வலி.கிழக்கு பிரதேச செயலர், நல்லை ஆதீன முதல்வர் உள்ளிட்ட பிரமுகர் களை மன்றக் காப்பாளராகவும், கல்வியாளர்கள் மற்றும் பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் சமூகப் பிரமுகர்களை ஆலோசகர்களாகவும் கொண்டு செயற்படும் வலி.கிழக்கு சைவசமய அருள்நெறி மன்றத்தின் தலைவராக சிவஸ்ரீ சோ.இ.பிரணதார்த்திஹரக் குருக்களும், உபதலைவராக வைத்திய கலாநிதி வை.தியாகராசாவும், செயலாளராக பிரம்மஸ்ரீ ச.காந்தராஜேஸ்வரசர்மாவும் உபசெயலாளராக சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரனும், பொருளாளராக பிரம்மஸ்ரீ பி.ரவிசங்கரசர்மாவும் கடமை புரிகின்றனர்.

மன்றத்துக்கென தனித்துவமான விதிகளை உள்ளடக்கிய யாப்புடன் செயற்படும் சைவசமய அருள்நெறி மன்றம் வலி.கிழக்கில் அமைந்துள்ள போதிலும் அதன் செயற்பாடுகள் மற்றும் பணி முன்னெடுப்புக்கள் பிரிவுகள் எல்லைகளைக் கடந்த நிலையில் யாழ்.மாவட்டம் சார்நிலையிலும் தமிழினம்சார் நிலையிலும் அமைந் திருப்பதோடு மனித நேயம் சார்நிலையிலும் மேற்கொள்ளப்பட்டு வருவதும் காலத்தின் தேவை அறிந்து காத்திரமான முறையில் செயற்படுவதும் பாராட்டைப் பெற்றுள்ளது.

சைவசமயம்சார் நிலையில் நல்வாழ்வுக்கும் ஆன்மீக மேம்பாட்டிற்கும் வழிகாட்டும் சைவசமய அருள்நெறி மன்றம் மாணவர்களின் கல்வி மேம்பாடு, வறிய மக்களின் வாழ்வாதார மேம்பாடு என்ற வகையில் சமயம் சாராத நிலையில் சகல மதத்த வரையும் சமமாக மதித்து அவர்களுக்கு உதவி வருவதும் மனிதநேயம்சார் நிலையில் வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருவதும் சமரச சன்மார்க்கத்தை வலியுறுத்துவதாக அமைந்துள்ளது.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்ற மகுடவாக்கியத் துடன் சிவலிங்கம் பஞ்சகிருத்திய யோகநிலையில் சிவபெருமான் மற்றும் சூரியன் உள்ளடங்கிய சிவசின்னங்களை இலச்சினையாகக் கொண்ட வலி.கிழக்கு சைவசமய அருள்நெறி மன்றம் விளம்பரம் இன்றி கருமமே கண்ணாகக் கொண்டு செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. கருமங்களுக்கான வழிகாட்டல்களை மன்றத்தின் ஸ்தாபகரும் தலைவருமான சிவஸ்ரீ சோ.இ.பிரணதார்த்தி ஹரக் குருக்கள் மேற்கொண்டு வருகிறார். மன்ற நிர்வாகம் சகல நிலையிலும் தனது ஒத்துழைப்பை வழங்கி வேலைத்திட்டங்களை நிறைவு செய்து வருகின்றது.

நல்லை ஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வரை நினைவுகூரும் வகையில் "அருள் அமுதம்" சஞ்சிகை ஒன்று மன்றத்தினால் 2011 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ளது.

அதன் அட்டையில் கோமாதாவாகிய பசுவின் உடலின் அங்கங்கள் தோறும் அமர்ந்திருக்கும் தேவர்கள், இருஷிகள், தெய்வங்களின் படங்கள் அழகு வர்ணத்தில் அச்சிடப்பட்டிருப்பது சஞ்சிகைக்கு பெருமை சேர்த்திருப்பதோடு கோமாதா தொடர்பான விழிப்புணர்வை சமூகத்திலும் குறிப்பாக இளம்தலைமுறையினர் மத்தியிலும் ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் அதன் உள்ளடக்கமும் மிக மிக காத்திரமானதாக அமைந்துள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற மன்றத்தின் ஆண்டு விழா வைபவத்தை முன்னிட்டு மாவட்ட நிலையில் பல வேலைத்திட்டங்களை நிறைவு செய்தது.

2011ஆம் ஆண்டு நல்லை ஞானசம்பந்தர் ஆதீன முதலாவது குரு மகாசந்நிதானத்தின் 30ஆவது குருபூசை விழா, நாயன்மார்களின் குருபூசை தின விழாக்கள், சிறப்புச் சமயச் சொற்பொழிவுகள், சங்கீத இசைக்கச்சேரி (சங்கீத பூஷணம், ஏ.கே. கருணாகரன்) நவராத்திரி தினங்களில் விழாக்கள், ஆறுமுக நாவலர் குருபூசை, மாணவர் மட்டத்திலான பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, சகலகலாவல்லி மாலை மனனப் போட்டி, அறிஞர்கள், கலைஞர்கள் பாராட்டு விழா, கூட்டுப்பிரார்த்தனை, சமய சார் நிலையில் துண்டுப்பிரசுரங்கள், சமய அறிஞர்களின் வரலாற்றுக் குறிப்பு, நல்லை ஆதீன குரு மகா.சந்நிதான வரலாறு பிரசுரம், உள்ளடங்கலாக 25இற்கு மேற்பட்ட நிகழ்வுகளை நடத்தியுள்ளது. அவற்றோடு கூடிய நிலையில் வெற்றி பெற்ற மாணவர்கள் மற்றும் போட்டியாளர்களுக்கு பரிசில் வழங்கிக் கௌரவித்துள்ளது. இந்த வகைகளில் நியமப்படுத்தப்பட்ட நிலையில் ஆண்டுதோறும் விழாக்களை நடத்தி வருவதோடு நிகழ்வுகளை ஒரே இடத்தில் நடத்தாமல் வலி.கிழக்கில் உள்ள கிராமங்களில் உள்ள ஆலயங்கள் தோறும் நடமாடும் நிலையில் நடத்தி வருகின்றது.

மக்களை தேடிச்சென்று ஆண்டுதோறும் விழாக்கள் மாணவர்களுக்கான போட்டிகள் விழாக்களை கிராமிய மட்டத்தில் நடத்துவது குறித்த விழாக்களில் உள்ளூர் பிரமுகர்கள் மற்றும் கல்விமான்களைக் கௌரவித்து மேல் நிலைப்படுத்துவது மக்களின் வரவேற்பை பெற்றிருப்பதோடு ஏனைய அமைப்புகளுக்கு முன்னோடியாகவும் உள்ளது.

நல்லை ஞான சம்பந்தர் ஆதீனத்தினால் முதலாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாததேசிக ஞானசம்பந்தர் பிரமச்சாரிய சுவாமிகள் காலத்தில் வெளியிட்டு வந்த ஆதீன முதல்வரை ஆசிரியராகக் கொண்ட "அருளமுதம்" இதழ்

சமய சஞ்சிகை கடந்தகால நாட்டு நிலைமைகளினால் வெளிவராத போதிலும் அந்த சஞ்சிகையும் மிக மிக காத்திரமானதாக அமைந்துள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற மன்றத்தின் ஆண்டு விழா வைபவத்தில் யாழ்.மாவட்டத்தின் மூத்த அறிஞர்கள், துறைசார் நிபுணர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டிருப்பதோடு அவர்களுக்கு விருதுகளும் சான்றுப் பத்திரங்களும் மன்றத்தினால் வழங்கப்பட்டுள்ளன.

இந்தப் பாராட்டுகளுக்கான தெரிவுகள் வலி.கிழக்கு பிரதேசம் சார் நிலையில் மட்டுப்படுத்தப்படாமல் யாழ்.மாவட்ட நிலையில் மேற்கொள்ளப்பட்டிருப்பது மன்றத்தின் பணி முன்னெடுப்புக்கள் பிரதேசம்சார் நிலையில் இல்லாமல் மாவட்டம்சார் நிலையில் சமயத்தைக் கடந்து தமிழர்கள் என்ற நிலையில் மேற்கொள்ளப் பட்டிருப்பதைக் கண்டுகொள்ள முடிகின்றது.

மாணவர்களுக்கான கௌரவிப்புக்கள் மற்றும் கல்வி ஊக்குவிப்பு, போட்டிகள் சைவ சமயம் சார் நிலையில் மட்டுப்படுத்தப்படாமல் தமிழ் மாணவர்கள் என்ற நிலையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சைவ மாணவர்களுடன் போட்டியிட்டு கிறிஸ்தவ, கத்தோலிக்க மாணவர்களும் தமது திறமையை நிலைநாட்டி பரிசில் பெற்றுள்ளனர், பாராட்டப்பட்டுள்ளனர். வறிய குடும்பங்களுக்கான வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கைகளும் சமயம் கடந்த நிலையில் சமூக மேம்பாட்டை கருத்தில் கொண்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மாணவர்களுடன் தொடர்பான நிகழ்வுகளில் சமயச் சார்புகளுக்கு அப்பாற்பட்ட நிலையில் கல்வி மேம்பாடு மற்றும் குறித்த போட்டியாளரின் தனிப்பட்ட திறமை தேர்ச்சி என்பவற்றை கருத்தில் கொண்டு முன்னெடுக்கப்படுகின்றது.

மன்றத்தின் பணி முன்னெடுப்புக்கள் மற்றும் தகவல்களை "www.arulneri.com" என்ற இணையத்தளத்தின் மூலம் மேலும் அறியலாம். சமகாலச் சூழலில் மன்றச் செயற்பாடுகளை மேலும் விரிவுபடுத்துவதற்கு புலம்பெயர் உறவுகள் மற்றும் நிதிவளம் கொண்டவர்கள் உதவ முன்வருவது வரவேற்கத்தக்கது என மன்றத்தின் பொருளாளர் பிரம்மஸ்ரீ பி.ரவிசங்கரசர்மா தெரிவித்தார். சைவசமய அருள்நெறி மன்றத்தின் பணிகள் மேலும் வளர வாழ்த்துவோம்.

உதயன்: 25.05.2012, 01.06.2012




# 12 உறவுகளை இழந்த தமிழ் மாணவிகளுக்கு நல்வாழ்வளிக்கும் உரும்பிராய் கருணை இல்லம்

**ப**ல்வேறு வகையிலும் பெற்றோர் மற்றும் உறவுகளை இழந்த தமிழ் மாணவிகளின் நல்வாழ்வுக்காகவும் . சுபீட்சமான எதிர்காலத்துக்காகவும் கல்விக்கு ஊடாக அவர்களுக்கு சுதந்திரமான வாழ்க்கைக்கு வழிப்படுத்தவும் உரும்பிராயில் ஓங்கி உயர்ந்து நிற்கிறது "கருணை இல்லம்". உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட பரோபகாரி பொன் தெய்வேந்திரனின் தீர்க்க தரிசனமான சிந்தனையால் உருவாகியது.

2002ஆம் ஆண்டு உரும்பிராயில் ஆரம்பிக்கப்பட்ட கருணை இல்லத்தில் 50 மாணவிகள் தங்கியிருந்து சைவப் பாரம்பரியம்மிக்க ஆரோக்கியமான சூழலில் கல்வியைத் தொடர்கின்றனர். இங்கு அனுமதிக்கப்படும் மாணவிகளின் ஆரம்ப வயது ஐந்து. அவர்கள் இல்லத்தை விட்டு வெளியேற வேண்டிய வயது 18. ஆனால் க.பொ.த உயர்தரம் கற்பவர்கள் படிப்பு முடியும்வரை தங்கியிருக்கலாம். சகல வசதி களும் எதுவிதமான அறவீடுகளும் இன்றி இலவசமாக வழங்கப்படுகின்றன.

கருணை இல்லம் யாழ்ப்பாணம் - பலாலி நெடுஞ்சாலையில் உரும்பிராய் சந்தியிலிருந்து வடக்கு நோக்கி 200 மீற்றர் தூரத்தில் ஸ்ரீகாமாட்சி அம்மன் ஆலயத் துக்கு முன்பாக பிரதான வீதிக்குக் கிழக்குப் பக்கத்தில் வீதியோரத்தில் உள்ளது.

முன்பக்கத்தில் விசாலமான முற்றத்தைக் கொண்ட நாற்சார் வீடு. அதனோடு இணைந்து 15இற்கு மேற்பட்ட அறைகளைக் கொண்ட புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மாணவிகள் தங்குவதற்கான விசாலமான விடுதி, பயன்தரும் மரங்கள் மற்றும் பூந்தோட்டம், வாழைத்தோட்டம் என்பவற்றை உள்ளடக்கிய பசுமையான சூழல், விசாலமான வளவு , அமைதியான அமைவிடம்.

கருணை இல்லம் தொடர்பான சிந்தனையைச் செயல்வடிவம் செய்வதற்கு பொன் தெய்வேந்திரம் தனது சொந்தச் செலவில் நாற்சதுர வீட்டைக் கொள்வனவுசெய்து அதற்கான அமைப்பு விதிகளை உருவாக்கி பதிவுசெய்து அதன் மேற்பார்வை நிர்வாகப் பொறுப்பு முழுவதையும் 'சேர்மன்' என்ற பதவி நிலையில் உரும்பிராயைச் சேர்ந்த ஆசிரியமணி பஞ்சாட்சரத்திடம் ஒப்படைத்தார்.

அதன்பின் அவர் லண்டனுக்குச் சென்று அதற்குரிய மேலதிக ஏற்பாடுகளைச் செய்வதற்கு புலம்பெயர் உறவுகளின் உதவியுடன் லண்டனில் அதற்கான கட்டமைப்பை உருவாக்கினார். அதற்கூடாக மேலதிக நிதி வளங்களைப் பெற்றுக் கொள்வதற்கு உரிய ஏற்பாடுகளை மேற்கொண்டார்.

ஆசிரியமணி பஞ்சாட்சரம் கருணை இல்லத்தில் 'சேர்மன்' என்ற பதவிநிலையில் தனது உதவியாக நான்கு பிரமுகர்களை இணைத்து கருணை இல்லத்தின் கருமப் பொறுப்புக்களை உரிய முறையில் உயர்நிலையில் பேணி நடத்தினார். ஆசிரிய மணியின் மறைவை அடுத்து 5 பேர் கொண்ட நிர்வாகக்குழு அதன் பணிமுன்னெடுப்பு களை தற்பொழுது மேற்கொண்டு வருகின்றது. நிர்வாகக் குழுவின் தலைவராக ஏ. ஈஸ்வரநாதன் (உரும்பிராய் இந்துக் கல்லூரியின் அதிபர்), செயலாளர்- திருமதி தி. மதுரநாயகி (ஓய்வுபெற்ற ஆசிரியை ), பொருளாளர் எஸ். சிவராம், குழு உறுப்பினர்களாக திருமதி வி. புனிதவதி, திருமதி.ந. உமா ஆகியோரும் உரியமுறையில் பணிபுரிகின்றனர்.

கருணை இல்லத்தில் தற்பொழுது 50 மாணவர்கள் தங்கியிருக்கின்றனர். இவர்கள் தமது கல்விச் செயற்பாடுகளை உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியா லயத்திலும் உரும்பிராய் இந்துக் கல்லூரியிலும் மேற்கொண்டு வருகின்றனர்.

க.பொ.த. உயர்தரத்தில் 4 மாணவிகளும் க.பொ.த. சாதாரண தரத்தில் 12 மாணவிகளும் ஏனைய ஆரம்ப, இடைநிலை வகுப்புக்களில் ஏனைய மாணவி களும் கல்வி கற்கின்றனர். நிலையத்தில் நிர்வாக உதவியாளராக ஓய்வுபெற்ற அரச ஊழியர் கே. சிவசுப்பிரமணியம் முழுநேர ஊழியராக நிலையத்தில் தங்கி யிருந்து கடமை புரிகின்றார். அவருக்கான தங்குமிடம் நிலையத்தின் வாசலில் அமைக்கப்பட்டுள்ளது. மாணவிகளின் விடுதிக்கு மேற்பார்வையாளராக "மேற்றன்"

பெண்மணி பிள்ளைகளுடன் தங்கியிருந்து முழுநேர ஊழியராகக் கடமைபுரிவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சமையல்காரர்கள் (பெண்கள்) மற்றும் உதவியாளர்களும் கடமையில் உள்ளனர். நிலையத்தில் தங்கியிருக்கும் மாணவிகளுடன் கலந்துரையாடும் போது அமைதியான, ஆரோக்கியமான சூழலில் கல்விச் செயற்பாடுகளைத் தொடர்வதாகவும், பாடசாலை கற்றல் செயற்பாட்டுக்கு மேலதிகமாகத் தனிப்பட்ட வகுப்புக்களும் பாடரீதியில் பிற்பகல் வேளையிலும் விடுமுறை நாள்களிலும் நடைபெறுவதாகவும், தையல் பயிற்சி, கணினிப் பயிற்சி மற்றும் உள்ளக விளையாட்டு வசதி அத்துடன் பொழுதுபோக்காகக் குறிப்பிட்டளவு நேரம் தொலைக்காட்சியைப் பார்ப்பதற்கும் வசதிகள் செய்யப்பட்டிருப்பதாக அந்தப் பெண்மணி கூறினார்.

உரும்பிராய் கருணை இல்லம் மகிழ்ச்சியான சூழலில் கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்வதாகக் கூறிய போதிலும் அவர்களின் குடும்ப உறவுகள் பிரிவுகள் தொடர்பாகக் கூறும்போது அவர்களில் சோக உணர்வு வெளிப்பட்டதை அவதானிக்க முடிந்தது.

யாழ்ப்பாணம், திருகோணமலை, கண்டி, கிளிநொச்சி, முல்லைத்தீவு உள்ளடங்கலான தமிழ்ப் பிரதேசங்களைச் சேர்ந்த மாணவிகள் நிலையத்தில் தங்கியிருந்து ஒரே குடும்பத்தினர் போன்று சகோதர பாசத்தோடு கற்றல் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

உறவுகளைப் பிரிந்து அல்லற்படும் தமிழ் பெண் பிள்ளைகளின் வாழ்விடமாகத் திகழும் உரும்பிராய் கருணை இல்லம் பொன் தெய்வேந்திரத்தின் வழிப்படுத்தலில் உள்ளூர் பிரமுகர்களின் நேரடிக் கண்காணிப்பில் முன்னோடி அமைப்பாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

அங்கு தங்கியிருந்து கல்வியைத் தொடரும் 50 பெண்பிள்ளைகளும் சட்டரீதியாக நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமையவும், சிறுவர் நலன் மேம்பாட்டு அதிகாரிகளின் சிபார்சுக்கு அமையவும் அனுமதிக்கப்படுகின்றனர். கருணை இல்லத்தின் அமைப்பு விதியின் பிரகாரம் 10 வயது (தரம் 5 ) வகுப்பில் கல்வி கற்பதற்கு ஏற்ற வயது நிலையில் உள்ள பிள்ளைகளே அனுமதிக்கப்படுகின்றனர். அனுமதி முடிவு வயதெல்லை 18 வயது. அதனால் க.பொ.த. உயர்தரத்தில் கல்வி கற்கின்றவர்கள் கல்வி நிறைவடையும் வரையும் பராமரிக்கப்படுகின்றனர். தங்கியிருப்பதற்கான வயதெல்லை முடிவடைந்தவர்கள் யார் மூலம் அனுமதிக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டார்களோ அவர்களிடம் ஆவண ரீதியாக உரியமுறையில் கையளிக்கப்படுகின்றனர். பாடசாலைகள் செயற்படும் நேரங்களில் சுகயீனம் காரணமாக அல்லது உடல்நலக் குறைவு காரணமாக பாடசாலைக்குச் செல்லமுடியாத ஒன்று இரண்டு

பிள்ளைகளின் நடமாட்டத்தை மட்டும் காணமுடியும். ஆனால் பாடசாலைகள் முடிவடைந்த பின்னரும் விடுமுறை நாள்களிலும் பாடசாலை போன்று தொழிற்பட்டுக்கொண்டிருக்கும்.

கணினி பயிற்சியில் ஈடுபடுபவர்கள் . தையல் பயிற்சியில் ஈடுபடுபவர்கள் மற்றும் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் என்றவகையில் மாணவர்கள் தமது கற்றல் செயற்பாடுகளை முன்னெடுத்துக் கொண்டிருப்பார்கள். பாடரீதியாக எல்லா மாணவர்களுக்கும் பிரத்தியேக வகுப்புக்கள் மூலம் பாடங்கள் போதிக்கப்படுகின்றன. அதற்கெனத் தெரிவுசெய்யப்பட்ட ஆசிரியர்கள் கருணை இல்லத்துக்கு வருகைதந்து அதற்குரிய இடத்தில் வகுப்புக்களை நடாத்திச் செல்கின்றனர். இந்த வகையில் கருணை இல்லத்தின் நோக்கான " ஆதரவற்ற வறுமைக்கு உட்பட்ட பெண் பிள்ளைகளை சமூகப் பொருத்தப்பாடுடைய நற்பிரஜைகள் ஆக்குதல்" உரியமுறையில் நிறைவு செய்யப்படுகின்றது.

கற்றலுக்கும் ஆரோக்கியமான மனோநிலையுடன் கூடிய வாழ்க்கைக்கும் ஏற்புடைய கல்வி நிலையைக் கொண்ட உரும்பிராய் கருணை இல்லத்தில் தங்கியிருக்கும் மாணவிகள் 20 X 10 அகல நீளம் கொண்ட விசாலமான அறைகளில் தனித்தனியாக கட்டில்கள் வழங்கப்பட்டு நான்கு பேர் வீதம் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந்தவகையில் மாணவிகள் தங்குவதற்கு 14 அறைகள் விடுதி அமைப்பில் புதிதாக நிறுவப்பட்டுள்ளன.

அத்துடன் மாணவிகள் உலாவுவதற்கு ஏற்றவகையில் விசாலமான விறாந்தை மற்றும் உரிய நேரத்தில் கற்பதற்கு ஏற்புடைய வகையில் கற்கை மண்டபம் மற்றும் உள்ளக விளையாட்டுக்களுக்கு உரிய உபகரண வசதிகள் , பொழுதுபோக்குவதற்கு தொலைக்காட்சி வசதி என்பன வழங்கப்பட்டுள்ளன. பொருத்தமான வகையில் போஷாக்குள்ள சைவ உணவு , மருத்துவ வசதி என்பன வழங்கப்படுவதாக மாணவிகள் தெரிவித்தனர்.

உறவினர்கள் குறிப்பிட்ட கால இடைவெளியில் வந்து பார்வையிட்டு உரையாடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதோடு மாதாந்தம் மாணவிகளுடன் கலந்துரையாடலை நிர்வாகிகள் நடத்தி மாணவிகளின் தேவைகள் குறைபாடுகளைக் கேட்டு நிவர்த்தி செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதன் மூலம் மாணவிகள் தமது தேவைகள் , வசதிகளை நிர்வாகிகளுக்குத் தெரியப்படுத்தக்கூடியதாக உள்ளது எனத் தெரிவித்தனர்.

தலைவர் ஏ. ஈஸ்வரநாதன் தலைமையிலான ஐந்து பேர் கொண்ட பரிபாலன சபை கருணை இல்லத்தின் அனைத்துச் செயற்பாடுகளையும் கூட்டுப் பொறுப்புடன் நிறைவு செய்து வருவதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. மாணவிகள்

உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாசாலையிலும் உரும்பிராய் இந்துக் கல்லூரியிலும் கற்றுவருகின்றனர்.

உரும்பிராய் கருணை இல்லம் பாடசாலை மாணவிகள் கருணை இல்லத்தில் இருந்து பாடசாலைகளுக்குச் செல்லும்போதும் பாடசாலையில் இருந்து திரும்பி வரும்போதும் உரியமுறையில் மேற்பார்வை செய்து கண்காணிக்கப்படுவதோடு அவர்களின் பாடசாலைத் தேவைகளும் ஏனைய மாணவர்களைப் போன்று நிறைவுசெய்யப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

கருணை இல்லத்தின் பயன்பாட்டிற்கெனச் சொந்தமாக ஹைஏஸ் வாகனமும் வழங்கப்பட்டுள்ளது. ஸ்தாபகர் பொன். தெய்வேந்திரம் ஆண்டுதோறும் லண்டனில் இருந்து வருகைதந்து கருணை இல்லத்தின் செயற்பாடுகளை நேரடியாகக் கண்டு கேட்டு அறிந்து நிவர்த்தி செய்வதோடு கருணை இல்லத்தில் உடனடித் தேவைகளையும் நிறைவு செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

இந்தவகையில் கருணை இல்லத்துக்கு முன்பாக வீதிக்கு மேற்குப் புறத்தில் காமாட்சி அம்பாள் திருமணமண்டபத்தை நிறுவி அதன்மூலம் கிடைக்கும் வருமானத்தில் மூன்றில் ஒன்றை 1/3 கருணை இல்லத்துக்கு வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கருணை இல்லத்தின் ஸ்தாபகர் பொன். தெய்வேந்திரத்தின் முயற்சியும் முன்னெடுப்பும் ஏனையோருக்கு முன்னுதாரணமானவை. நீண்டகாலம் நின்றுநிலைப்பவை.

உரும்பிராய் கருணை இல்லத்தின் சிறப்பான பணி மேம்பாட்டுக்கு அர்ப்பணிப்போடு கூடிய ஐந்து பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் . ஸ்தாபகர் பொன். தெய்வேந்திரத்தின் மதிநுட்பமான பணி முன்னெடுப்பும் உறுதுணையாக இருந்து வருகின்றன.

நாடளாவிய ரீதியில் தமிழர் வாழும் பிரதேசங்களில் இருந்தும் பெண் பிள்ளைகளை சட்ட ரீதியான முறையில் அனுமதிக்கப்பட்டு ஏறத்தாழ பத்து வருடங்கள் வளர்க்கப்பட்டு நற்பிரஜைகளாகச் சமூகத்துக்கு ஏற்றவர்களாக உருவாக்கப்பட்டு வருகின்றனர்.

"ஆதரவற்ற வறுமைக்கு உட்பட்ட பெண்பிள்ளையை சமூகப் பொருத்தப்பாட்டுடன் நற்பிரஜையாக்குதல்" என்ற நோக்கோடு "சகல வசதியும் கொண்ட தங்குமிட வசதியை வழங்குதல்; மகிழ்ச்சியான அன்னியோன்யமான உறவை உருவாக்கல்; நவீன மாற்றத்துக்கு ஏற்ப தையல், கணினி அறிவை வழங்கல், மகிழ்ச்சிகரமான ஓய்வுநேரப் பொழுதுபோக்கு (தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை) வசதி,

உடலுக்கும் மனதுக்கும் மகிழ்ச்சிகரமான விளையாட்டுக்களில் ஈடுபடல், சமய அனுட்டானங்களையும், ஒழுக்கசீலங்களையும் பேணல்" என்ற குறிக்கோளை திட்டமிட்ட முறையில் உயர்தரத்தில் பேணி மாணவிகளை எதிர்கால நல்வாழ்வுக்கு ஏற்றவர்களாக சமூகப் பொறுப்பு , சகிப்புத்தன்மை மிக்கவர்களாக உரும்பிராய் கருணை இல்லம் பிள்ளைகளை வளர்த்து வருகின்றது.

சமகாலத்தில் மாணவர்களைத் திசைதிருப்பும் கையடக்கத் தொலைபேசிப் பாவனை என்ற பேச்சுக்கே இடமில்லை. கல்வி கட்டுப்பாட்டுடன்கூடிய பழக்க வழக்கம், போஷாக்கு உணவு என்பனவும் சமவாய்ப்புடன்கூடிய தரமான கல்வியும் எதிர்பார்த்த இலக்கை எட்டுவதற்கு வகை செய்கின்றது. சமகாலத்தில் தமிழ் மாணவிகள் அனுபவிக்கும் இடர்பாடுகளுக்கு கருணை இல்லத்தில் இடமே இல்லை. இந்த வகையில் கருணை இல்லத்தில் தங்கியிருந்து கல்விகற்பதற்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டும் எனக்கூறுவதில் தவறில்லை. நிர்வாகக்குழுவின் தலைவர் ஏ. ஈஸ்வரநாதன் காலையும், மாலையும் கருணைஇல்லத்துக்குச் சென்று பிள்ளைகளின் வசதிகள் தேவைகள் தொடர்பாக நேரடிக் கண்காணிப்பை மேற்கொண்டு அங்கு கடமை புரியும் பணியாளர்களுக்கு உரிய பணிப்புரைகளை வழங்குவதோடு பிள்ளைகளின் தேவைகளை கண்காணிப்புச் செய்து வருகின்றார்.

கருணை இல்லத்தின் வளர்ச்சியிலும் அங்கு வளரும் பிள்ளைகளின் நல்வாழ்விலும் சமூகச் சூழலிலும் அக்கறையுடன் செயற்படுகின்றது. நிலையத்தில் உள்ள பிள்ளைகளை நினைவில் நிறுத்தி திருமணநாள் நினைவு, தமது உறவினரின் நினைவு தினங்கள் மற்றும் கொண்டாட்டங்கள் உள்ளிட்ட சம்பவங்களை முன்னிட்டு நிலையத்தில் உள்ள பிள்ளைகளுக்கு விசேட உணவு வழங்கலுக்கு உரிய கொடுப்பனவுகளை நிலைய நிர்வாகத்திடம் வழங்கிவருகின்றனர். இது சமூகச் சூழலின் ஆரோக்கியத்தை வெளிப்படுத்தி நிற்கின்றது.

"கருணை இல்லத்தில் கல்விக்காக தங்கி இருக்கும் மாணவிகள் உயர் கல்வி வாய்ப்பை மற்றும் வேலைவாய்ப்பைப் பெறக்கூடிய தகுதி நிலையில் சிறப்புப் பெறுபேறுகளை பொதுப் பரீட்சைகளில் பெற்று வருகின்றனர்" என்று நிலையத்தின் தலைவர் ஏ.ஈஸ்வரநாதன் தெரிவித்தார். கருணை இல்லத்தின் பணி முன்னெடுப்புக்கள் மேலும் சிறப்படைய வாழ்த்துவோம்.

உதயன் : 3.11.2011, 10.11.2011, 17.11.2011



# 13 அச்சுவேலியில் உள்ள செபமாலைதாசர் கன்னியர்மடம் நெல்லிரசத்திற்கு நாடளாவிய ரீதியில் தனியிடம்

அச்சுவேலி மேற்கில் சங்கானை - அச்சுவேலி வீதியோரத்தில் 'அமலிவனம்' அங்கு செபமாலைத்தாசர் கன்னியர்மடம் அமைந்துள்ளது. வெளியார் யாரும் உள்ளே அனுமதிக்கப்படாத அமைதியான சூழல். அங்கு மேற்கொள்ளப்படும் முக்கியமான பணி. செபித்தல் , நவசன்னியாசத்தின் இறுதி இரண்டு வருடத்தை நிறைவு செய்வதற்கான பயிற்சிகள், இயற்கையில் கிடைக்கும் பழங்களைக் கொண்டு நெல்லிரசம், திராட்சைரசம், மாதுளம்பழ ரசம் மற்றும் திராட்சை வைன் என்பவற்றைத் தயாரித்தல்.

பழ ரசத்துக்கான பழங்களை உற்பத்தி செய்யும் பழத் தோட்டங்களைப் பராமரித்தல். உணவுக்கான விவசாய முயற்சியில் ஈடுபடுதல். அமைதியான இயற்கைச் சூழலில் அமைந்துள்ள செபமாலைதாசர் கன்னியர் மடத்தில் வெளியார் சந்திப்புக்கு உரிய இடத்தில் கட்டப்பட்டுள்ள மணியை ஒலிக்கச் செய்ததும் வெளியே வந்த கன்னியாஸ்திரி மடத்தலைவிக்கு எம்மை அறிமுகம் செய்ததை அடுத்து பழரச உற்பத்தியிடத்தை மட்டும் பார்ப்பதற்கு அனுமதியளித்துக் காண்பித்தார்கள். பத்திரிகைக் கண்ணோட்டத்தில் உமா போட்டோ எடுக்க முயன்றபோதிலும் முயற்சி முழுமையாகக் கைகூடவில்லை.

மடத்தின் தலைவி பழரசத் தயாரிப்புத் தொடர்பாக உரிய இடங்களைக் காண்பித்து விளக்கமளித்தபோது அவர்களின் விசுவாசமான உழைப்பின் மேன்மையை உணரமுடிந்தது.

மனித வலுவையே முழுமையாகப் பயன்படுத்தி நெல்லிக்காயை உரலில் இட்டுத் துவைத்து அதை உரியமுறையில் காய்ச்சி, பதப்படுத்தி எடுத்த சாற்றை உரிய தினங்களுக்குப் பாதுகாத்து நெல்லிரசம் தயாரிப்பதை மடத்தலைவி விளக்கினார். அந்தநேரம் உரலில் நெல்லிக்காய் துவைக்கும் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. கணிசமான அளவு இயந்திர சாதனங்களைப் பயன்படுத்துவதால் உற்பத்தி அளவை அதிகரிக்கச் செய்யலாமே ? எனக் கேட்டபோது .

இதற்கான வாய்ப்பு, வசதிகள் எதுவும் எமக்குக் கிடைக்கவில்லை. மிகவும் தூய்மையான முறையில் நெல்லிரசம், மாதுளம்பழ ரசம், திராட்சை ரசம், திராட்சை வைன் என்பனவற்றைத் தயாரித்து நியாய விலைக்கு விற்பனை செய்கின்றோம். எமது தயாரிப்புகளுக்கு நாடளாவிய ரீதியிலும் தனியாரிடமும் நல்ல வரவேற்பும் கிடைக்கின்றது. எந்தவிதமான இரசாயனக் கலவையும் இன்றிமுழுமையாக இயற்கை யான பழங்களைப் பயன்படுத்தியே எமது தயாரிப்புக்களை மேற்கொள்கின்றோம். விற்பனை விலையும் பெருமளவில் லாபம் இல்லாமல் உற்பத்திச் செலவுடன் நியாய விலையில்தான் விற்பனை செய்யப்படுகின்றது எனத் தெரிவித்த மடத்தின் தலைவி, மட்டுப்படுத்திய அளவில் உற்பத்தி செய்யப்படுவதனால் பாவனையாளர்களின் தேவையை நிறைவு செய்யமுடியாத நிலை ஏற்பட்டு விடுகின்றது. எமது உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு இதுவரை யாரும் முன்வரவில்லை. எதிர்காலத்தில் ஏதாவது அமைப்பு எமக்கு உதவ முன் வருமானால் எமது உற்பத்தியை மேலும் அதிகரிக்க முடியும் எனத் தெரிவித்தார்.

உதயன் - 04.03.2010




# 14 கோப்பாய் - யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி

யாழ். மாவட்டத்தில் ஆசிரியர் பயிற்சி வழங்கும் நிறுவனமயப்படுத்தப்பட்ட தொழில்சார் கல்வி அமைப்புக்கள் மூன்றில் இரண்டு நிறுவனங்கள் வலி.கிழக்கில் அமைந்துள்ளன. ஒன்று தேசியக்கல்வியியற் கல்லூரி. மற்றது கோப்பாய் ஆசிரிய கலாசாலை. இந்த அமைப்புக்களில் உயர்தரம்மிக்க சேவை வெளிப்பாட்டினால் வலி.கிழக்கு பெருமைபெறுகின்றது.

தற்பொழுது நடைமுறையில் உள்ள தேசிய கல்விக்கொள்கையில் ஆசிரியர்கள் பட்டதாரிகளாக அல்லது கற்பித்தல் டிப்ளோமா சான்றிதழ் பெற்றவர்களாக இருக்கவேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய பல்கலைக்கழக அனுமதியை பெற்றுக்கொண்டவர்களுக்கு அடுத்த நிலையில் உள்ளவர்களைத் தெரிவுசெய்து மூன்று வருடங்களுக்கு கற்பித்தல் தொடர்பான வதிவிட பயிற்சி வழங்கி இறுதிப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்குத் தேசிய ஆசிரியர் சான்றிதழ் வழங்கி பாடசாலைகளில் கற்பிப்பதற்கு நியமனம் வழங்கப்படுகின்றது. இந்த வகையில் கற்பித்தலுக்கான தொழில்சார் பயிற்சி பெற்றுக்கொண்டவர்கள்தான் மாணவர்களுக்கு கற்பிக்க வேண்டும் என்ற உலகளாவிய ஆசிரியத்துவக் கோட்பாடு இலங்கையிலும் உயர்தரத்தில் பேணுவதற்கு அடித்தளமிடப்பட்டது.

வாண்மைமிக்க ஆசிரியர் குழாத்தை உருவாக்கும் பணியில் இலங்கையில் 17 தேசியக் கல்வியற் கல்லூரிகள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த தேசியக் கல்வியியற் கல்லூரிகள் தனித்துவம்மிக்கதாகவும், தமிழ் கல்விப் பாரம்பரியத்துக்கு பெருமை சேர்ப்பதாகவும் தனக்கே உரிய உயர்நோக்குடன் கோப்பாய் தேசியக் கல்வியியற் கல்லூரி தலைநிமிர்ந்து நிற்கின்றது. இது 16வது தேசியக் கல்வியியற் கல்லூரி என்பது குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணம் - அச்சுவேலி இராசபாதை வீதியின் கீழ் திசையில் கோப்பாயில் பல்வேறு கட்டமைப்புக்களைக் கொண்ட கலைக் கூடமாக திகழ்கின்றது. இலங்கையில் கல்வியியற் கல்லூரியின் செயற்பாடுகள் (1986ஆம் ஆண்டு 30ஆம் இலக்க கல்விச்சட்டத்தின் பிரகாரம்) 1990ஆம் ஆண்டு ஆரம்பமாகிய போதிலும் யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரியின் செயற்பாடுகள் 2000ஆம் ஆண்டு கால்கோளாயிற்று. இலங்கையின் பல்வேறு மாவட்டங்களிலும் கல்வியற்கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் யாழ்ப்பாணத்தில் கல்வியியற் கல்லூரி ஆரம்பிக்கப்படாமல் அன்றைய காலச் சூழலில் பின்தள்ளப்பட்டது. இது தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதோடு தமிழர்களுக்கான வேலைவாய்ப்பு மற்றும் தொழில்சார் அபிவிருத்தியில் பாரிய பின்னடைவை ஏற்படுத்தும் என்பது கல்வியாளர்களின் கவலையாக இருந்தது.

யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரியின் தோற்றத்துக்கும் அதன் சமகால உயர் வளர்ச்சிக்கும் அடித்தளம் இட்டவர் என்ற வகையில் கல்லூரியின் முதலாவது பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதனின் பங்குப்பணி பாராட்டுக்குரியது. கல்லூரியி கதையோடு இரண்டறக் கலந்து வாழுகின்றது.

2000ஆம் ஆண்டு மே மாதம் 02ஆம் நாள் தனிமனிதனாக யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த கலாநிதி தி.கமலநாதன் யாழ்.மாவட்டக் கல்விமான்கள் மற்றும் சமூக அமைப்புக்களினதும் பொதுமக்களினதும் ஒத்துழைப்புடன் கல்வியியற் கல்லூரியை ஆரம்பிக்கும் செயற்பாட்டைத் தொடங்கினார். யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரிக்கென தனியாக நிலப்பரப்போ, கட்டடமோ இல்லாத நிலையில் இருந்தாலும் யாழ். மக்களின் ஆதரவோடு 20.05.2000ஆம் திகதியன்று யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரி உதயமாகியது. கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் வளாகத்தில் பயிற்சிக் கலாசாலையின் கட்டடத்தில் கல்வியியற் கல்லூரியின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. பீடாதிபதி, நான்கு விரிவுரையாளர்கள், பதிவாளர், ஒருசில கல்விசாரா ஊழியர்கள் கொண்ட ஆளணியுடன் கணிதம், விஞ்ஞானம், ஆரம்பக் கல்வி, நடனம், சித்திரம், சங்கீதம் ஆகிய ஐந்து பாடத்துறைகளுக்கும் மொத்தம் 67பேர் கல்வியியற் கல்லூரியின் முதலாம் அணி மாணவர்களாகப் பயின்றனர். இந்தவகையில் இதுவரை காலமும் யாழ்.மாவட்டத்தில் இருந்து வவுனியா உட்பட

வெளிமாவட்டங்களுக்குச் சென்று பலத்த பாதுகாப்புக் கெடுபிடி அச்சுறுத்தலுக்கு மத்தியில் கல்வி பயின்ற யாழ்.மாவட்ட மாணவர்கள் யாழ்ப்பாணத்திலேயே தமது கல்வியைக் கற்பதற்கான ஏதுநிலை உருவாகியது. அதைத் தொடர்ந்து வெளிமாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் விருப்பத்தோடு யாழ்ப்பாணத்துக்கு வந்து தமது ஆசிரியர் பதவி நிலைக்கான கல்வியை யாழ்ப்பாணப் பாரம்பரியத்துடன் இணைந்த நிலையில் பெற்றுக்கொள்ள முடிந்தது.

கல்வியியற் கல்லூரியின் இன்றைய நிலையில் பல சாதனைகளைப் படைத்து மேல் நிலையில் இருந்தபோதிலும் ஆரம்பநிலையில் பலசோதனைகளை எதிர்கொள்ள நேர்ந்தது. கோப்பாய் ஆசிரிய கலாசாலை வளாகத்தில் செயற்பட்ட வேளையில் ஆசிரிய கலாசாலை மாணவர்களுக்கும் கல்வியியற் கல்லூரி மாணவர்களுக்கும் இடையே காணப்பட்ட சில முரண்பாடுகள் நடைமுறை நிர்வாகச் சிக்கல்களை உருவாக்கிய நிலையில் ஆசிரிய கலாசாலையில் இருந்து இடம்பெயர்ந்து மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் சிறிது காலம் செயற்படவேண்டி ஏற்பட்டது. கல்வியியற் கல்லூரிக்கான இரண்டாவது மாணவர் அணியில் 133 மாணவர்கள் 14.02.2001ஆம் திகதி உள்வாங்கப்பட்டதோடு செயற்பட்டுவந்த ஆறு பாடநெறிகளோடு ஆங்கிலம், நூலக விஞ்ஞானம் ஆகிய இருபாடநெறிகளுமாக எட்டுப் பாடநெறிகள் கொண்டதாகக் கல்வியியற் கல்லூரியின் செயற்பாடுகள் வளரத் தொடங்கின. கல்லூரிக்கு உரிய கட்டமைப்புகளுடன் புதிய கட்டடத்தைப் பொருத்தமான இடத்தில் நிறுவுவதற்கு பரோபகாரிகளிடம் நிலத்தை வழங்கி உதவுமாறு யாழ். தேசியக்கல்வியியற் கல்லூரிச் சமூகம் கோரிக்கை விடுத்த வேளையில் உடுவில் எம்.பி. காலஞ்சென்ற செம்மல் தர்மலிங்கம் அவர்களின் புத்திரன் த.சித்தாத்தன் உபகாரமாக வழங்கிய 14 ஏக்கர் நிலப்பரப்பில் கல்லூரி நின்று இயங்குகின்றது.

சிந்தனை, சொல், செயல் என்ற உயர்ந்த மகுட வாக்கியத்தைக் கொண்டு செயற்படும் கல்லூரி இன்று தனது 11ஆவது அணியை உள்வாங்கி 2,900இற்கும் மேற்பட்ட நல்லாசிரியர்களை உருவாக்கி நாடளாவிய ரீதியில் சேவையாற்றுவதற்கு வழங்கியுள்ளது. கல்வியியற் கல்லூரியின் இரண்டாவது பீடாதிபதி எஸ். கே.யோகநாதன் அவர்களின் வழிப்படுத்தலில் பிள்ளைகளின் உள்ளார்ந்த திறன்களை உயர்ந்த பட்சம் விருத்தி செய்து அவர்களை நற்பிரஜைகளாக்கக் கூடிய தேர்ச்சியும் அர்ப்பணிப்பும் கொண்ட ஆசிரிய குழாத்தை அமுல்படுத்தப்படும் கலைத்திட்டத்தின் ஊடாக உருவாக்கி நாட்டுக்கு வழங்குதல் என்ற நோக்குடன் செயற்பட்டு வருகின்றது.

அகில இலங்கை ரீதியில் முன்னணியில் திகழும் யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரி தற்பொழுது செயற்பட்டுக்கொண்டிருக்கும் வளாகம் 14ஏக்கர் காணியில் 480மில்லியன் ரூபா உலக வங்கி நிதியில் 2004ஆம்

ஆண்டு நிர்மாணிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்துக்குரிய தனித்துவமான கல்விப் பாரம்பரியங்களுடன் தலைநிமிர்ந்து நிற்கும் கல்வியியற் கல்லூரியில் ஆரம்பக்கல்வி, விசேடகல்வி, கணிதம் (தமிழ்மொழி மூலம்), கணிதம் (ஆங்கில மொழி மூலம்), விஞ்ஞானம் (தமிழ் மொழி மூலம்), விஞ்ஞானம் (ஆங்கில மொழி மூலம்), சித்திரம், நடனம், சங்கீதம், நாடகமும் அரங்கியலும், ஆங்கிலம், இந்துசமயம், நூலக விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம், கிறிஸ்தவம் ஆகிய 10இற்கும் மேற்பட்ட பாடநெறிகளுக்கான ஆசிரியர்கள் ஆண்டுதோறும் உருவாக்கப்பட்டு நாடளாவிய ரீதியில் சேவையாற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த வருடம் 10ஆம் 11ஆவது அணிகள் பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கின்றன. இவ்வகையில் எட்டு அணிகள் பயிற்சியை முடித்து தேசிய ஆசிரியர் டிப்ளோமா பட்டத்தைப் பெற்ற நிலையில் கடமையாற்றிக்கொண்டிருக்கின்றன. 2000ஆம் ஆண்டு முதலாவதாகச் சேர்த்துக்கொள்ளப்பட்ட முதலாவது அணியில் 67 ஆசிரியர்களும், இரண்டாவது அணி 2001ஆம் ஆண்டு 124 ஆசிரியர்களும், மூன்றாவது அணி 2002ஆம் ஆண்டு 169 ஆசிரியர்களும், நான்காவது அணி 2003ஆம் ஆண்டு 310 ஆசிரியர்களும், ஐந்தாவது அணி 2004 ஆம் ஆண்டு 170 ஆசிரியர்களும், ஆறாவது அணி 2005ஆம் ஆண்டு 195 ஆசிரியர்களும், ஏழாவது அணி 2006ஆம் ஆண்டு 176 ஆசிரியர்களும், எட்டாவது அணி 2007ஆம் ஆண்டு 135 ஆசிரியர்களும் மூன்று வருடகால பயிற்சியை முடித்து இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 3-1இல் உள்ளீர்ப்பு செய்யப்பட்டு நாடளாவிய ரீதியில் சேவையாற்றிக் கொண்டிருக்கின்றனர். ஒன்பதாவது அணி 2008ஆம் ஆண்டு 145 ஆசிரியர்கள் முகிழ்நிலை ஆசிரியர்களாக ஒருவருட உள்ளகப் பயிற்சியைப் பெற்றுக் கொண்டிருக்கின்றனர். 10ஆவது அணி 2009ஆம் ஆண்டு 190பேர் 2ஆவது ஆண்டுக்கான ஆசிரியர் பயிற்சியையும், 11ஆவது அணி 2010 ஆண்டு 264பேர் அனுமதி பெற்று முதலாவது ஆண்டுக்கான ஆசிரியர் பயிற்சியையும் பெற்றுக் கொண்டிருக்கின்றனர். தொழில்சார் பயிற்சியைப் பெற்று சிறந்த நற்பண்பு மிக்க ஆசிரியர்களாக மாணவர்களுக்கு நல்லறிவும் வாழ்க்கைக்கான பண்பு விழுமியங்களைப் போதிப்பதில் யாழ்ப்பாணத்தில் கற்றவர்கள் என்ற பெருமையோடு பணிபுரிந்து வருகின்றனர். கல்வியியற் கல்லூரியின் முதலாவது பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன் 2005.09.19ஆம் திகதி சேவையிலிருந்து ஓய்வு பெற்றார். தற்பொழுது பீடாதிபதியாகக் கடமைபுரியும் எஸ்.கே.யோகநாதன் கல்வியியற் கல்லூரியின் 2ஆவது பீடாதிபதியாக 2005.09.20ஆம் திகதி பொறுப்பேற்றுக்கொண்டார்.

'எஸ்.கே.யோகநாதன் வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரியில் உப பீடாதிபதியாகக் கடமையாற்றிய பின்னர் மேலதிக பீடாதிபதியாக 2005.01.01இல் பதவியேற்று இன்று பீடாதிபதியாக இருந்து கல்லூரியை சிறந்த முகாமைத்துவத்துடன் வழிநடத்திச் செல்கின்றார். கல்லூரியில் 39 கல்விசார் உத்தியோகத்தர்களும் 29

கலாசார ஊழியர்களும் பணிபுரிகின்றனர். உபபீடாதிபதிகளாக மூன்று பெண் விரிவுரையாளர்கள் பணிபுரிகின்றனர். கல்லூரியின் வளர்ச்சியில் மாணவர்களும் விரிவுரையாளர்களும் கல்விசாரா ஊழியர்களும் ஒன்றிணைந்த நிலையில் பணிபுரியும் ஆரோக்கிய நிலையை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. கல்லூரிக்கு முன்பாக விளையாட்டு மைதானத்துக்கு 18 பரப்பு நிலம் 45 லட்சம் ரூபா செலவில் கல்லூரிக்கு கல்விச் சமூகத்தால் கொள்வனவு செய்யப்பட்டிருப்பது நல்லதோர் எடுத்துக்காட்டாகும். கல்லூரி மாணவர்கள், ஊழியர்கள் மற்றும் கல்லூரிச் சமூகம் தொடர்பாக பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் கருத்துத் தெரிவிக்கையில் மாணவர்கள் தமது செலவில் பல லட்சம் ரூபாவைப் பயன்படுத்தி கணினிகளைத் திருத்திச் செயற்படவைப்பதையும் கட்டடங்களுக்கு மைபூசி புனரமைப்புச் செய்திருப்பதையும் எடுத்துக்கூறி பெருமைப்பட்டுக்கொண்டார்.

கல்லூரி வளாகத்துக்குள்ளே நுழையும்போது முகப்பு வளைவு கல்லூரியின் கட்டமைப்புக்குக் கட்டியம் கூறும் அதேவேளையில் கல்லூரியின் உள்ளே காணப்படும் சிற்பங்கள், சித்திரங்கள், பேசும் மொழி மெய்மறக்கச் செய்கின்றது. நடைபாதையோரத்தில் தமிழ் நங்கைகளின் உருவம், தமிழ் போர்வீரர்களின் உருவம், மண்வெட்டி தோளில் சுமந்த விவசாயி, வானத்தை உற்றுநோக்கும் முதியவர், மாட்டு வண்டில், மாட்டுத்தொட்டி, யானைப் பொம்மை, மனித முகத் தோற்றத்தில் மோட்டார் கார் போன்ற கலை வடிவங்கள் பிரமிக்கச் செய்கின்றன.

கல்லூரி வளவில் வித்தகவிநாயகர் ஆலயம், கிறிஸ்தவ ஆலயம் ஆத்மீக ரீதியில் மாணவர்களை வழிப்படுத்துவதோடு பாடத்துறை ரீதியிலான மாணவர் மன்றங்கள் மாணவர்களை அந்தந்த பாடத்துறைகளில் மேலும் மெருகூட்டி வளர்த்துச் செல்கின்றன. விஞ்ஞானப் பாடத்துறை மாணவர்களின் மூலிகைத் தோட்டம் மற்றும் பாடத்துறையினரின் கட்டமைப்புக் கல்வி வெளிப்பாட்டை துலாம்பரப்படுத்துகின்றது. 26 வகுப்பறைகள் குமரிகோட்டம் (பெண்கள் விடுதி), குமரன் கோட்டம் (ஆண்கள்விடுதி), லயன் தியாகராசா படிப்பகம், நிர்வாக அலகு நூலகம், கலை அரங்கம், தருமலிங்கம் மண்டபம், கல்விக் கோட்டம், சித்திரக்கூடம், நடனக்கூடம், பொது மண்டபம் என்பன கல்லூரியின் செயற்பாடுகளுக்கு வளம் சேர்த்து ஓங்கி உயர்ந்து விளங்குகின்றன.

உதயன் - 12.03.2010, 18.03.2010, 25.03.2010, 01.04.2010



# 15 கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

யாழ். மாவட்டத்தில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் இரண்டு ஆசிரியர் கலாசாலைகளில் வலி.கிழக்கு பிரிவில் தனக்கே உரிய தனித்துவத்துடன் பண்பாட்டுப் பெட்டகமாகத் திகழும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை 1923ஆம் ஆண்டு தொடக்கம் ஆசிரியர் பயிற்சி வழங்கும் செயற்பாட்டில் அரும்பணி ஆற்றி வருகின்றது. தமிழ்மொழி மூலமான ஐந்து ஆசிரியர் கலாசாலைகளில் முதல் நிலையில் உள்ளது.

குறித்த காலப்பகுதியில் ஆசிரியர் பயிற்சியுடன், ஆசிரியர்கள் மதமாற்றம் செய்யப்பட்டதை அறிந்து வருந்திய சைவப்பிரமுகர்களின் ஆலோசனைக்கமைய சேர்.பொன்.இராமநாதன் முயற்சியால் உருவாகியது. சத்தியபாமா தோட்டத்தில் 5 ஏக்கர் காணியைத் தருமசாசனம் செய்து ஆசிரியர் கலாசாலை தொடர்ந்து நடைபெறத் தவறின் குறித்த ஆதனம் அடியுடையவருக்குச் சேரும் என்ற நிபந்தனையுடன் ஆரம்பமாகியது.

பயிற்சி பெறும் ஆசிரியர்கள் தங்கியிருந்து பயிற்சி பெறுவதற்கான விடுதி வசதிகளுடன் கலாசாலையில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டதோடு கலாசாலை யில் பயிற்சிபெறும் ஆசிரியர்கள் கற்பித்தல் பயிற்சியை மேற்கொள்ளு வதற்கு கலாசாலைக்கு முன்பாக 2 ஏக்கர் நிலத்தில் சாதனா பாடசாலையும் நிறுவப்பட்டது. யாழ்.மாவட்டத்தில் திருநெல்வேலி, நல்லூர், கொழும்புத்துறை, தெல்லிப்பழை,

இளவாலை, உடுவில், மருதனார்மடம், கோப்பாய், தென்மராட்சி, பலாலி போன்ற இடங்களில் காலத்துக்குக்காலம் குறித்த நோக்கங்களுடன் ஆசிரியர் கலாசாலைகள் செயற்பட்ட போதிலும் தற்பொழுது பலாலி ஆசிரியர் கலாசாலையும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையுமே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. பலாலி ஆசிரியர் கலாசாலை இடம்பெயர்ந்த நிலையில் திருநெல்வேலியில் தனியார் கட்டடங்களில் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது.

இருபாலைச் சந்தியில் இருந்து கோண்டாவில் நோக்கிச் செல்லும் சாலையில் 300மீற்றர் தூரத்தில் வீதிக்கு வடக்குப் புறமாக அமைந்துள்ளது கோப்பாய் ஆசிரியர் கலாசாலை வளாகம். ஆசிரியர் கலாசாலை வளாகம் ஆசிரியர்கள் விடுதியில் தங்கியிருந்து தமது இரண்டு வருடகால ஆசிரியர் பயிற்சியை நேர்த்தியான முறையில் நிறைவு செய்வதற்கான வள வசதிகளுடன் அமைந்துள்ளன.

ஆசிரியர் கலாசாலையின் முதலாவது அதிபராக மல்லாகம் ஏ.பொன்னையா பதவியேற்றார். (1923-1936) உப அதிபராக கரவெட்டியைச் சேர்ந்த எஸ். கே.இராசசிங்கம் கடமையாற்றினார். இந்தக்காலப்பகுதியில் பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட மாதாந்த வேதனம் 100/= (நூறு ரூபாவுக்கு உட்பட்டது) ஏ. பொன்னையாவைத் தொடர்ந்து அதிபர்களாக பதவியேற்றோர் : ஆ.ஈ. சண்முகரத்தினம் (1936-1948), செல்வி ஞானம் முருகேசு (1948-1963), திருமதி. ரதி ஆனந்தகுமாரசாமி (1963-1985), செல்வி.க.சின்னப்பு (1985-1989), வை.கா. சிவப்பிரகாசம் (1989-1993), திருமதி.சி.இராமநாதன் (1993-1995), கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை (1995-1998), மு.பரஞ்சோதி (1998-2002), ஆ.ஸ்ரீஸ்காந்தமூர்த்தி (2003-2008), செல்வி. மலர் சின்னையா (2009-2010). கோப்பாய் ஆசிரியர் கலாசாலை வளாகத்தில் காலத்துக்குக் காலம் பல்வேறு கல்வி அமைப்புக்கள், கல்வி நிர்வாக அமைப்புக்கள் இடம்பெயர்ந்த நிலையில் தங்கியிருந்து தமது செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளன. இந்த வகையில் பலாலி ஆசிரியர் கலாசாலை பலாலியிலிருந்து இடம்பெயர்ந்து கோப்பாய் ஆசிரியர் கலாசா லையில் குறிப்பிட்ட காலத்துக்குச் செயற்பட்டது. அதேபோன்று மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி வளாகத்தில் செயற்பட்ட வலிகாமம் வலயக்கல்வி அலுவலகமும் கலாசாலை வளாகத்தில் செயற்பட்டன.

2000ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியும் தனது ஆரம்பகாலச் செயற்பாடுகளைக் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை வளாகத்தில் ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது. 2009ஆம் ஆண்டு காலப்பகுதியில் வன்னிப்போர் நிலைமை தீவிரமானதையடுத்து தென்மராட்சிப் பகுதியில் இருந்தும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்தும் இடம்பெயர்ந்த மக்களின் நலன்புரி நிலையமாகவும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை வளாகத்தில் கணிசமான

பகுதி பயன்படுத்தப்பட்டது. 2009 இறுதிக் காலப்பகுதிவரை நலன்புரி நிலையம் செயற்பட்டது. நலன்புரி நிலையத்தின் செயற்பாடுகளினால் ஆசிரியர்களின் விளையாட்டு மைதானப் பயன்பாடும், விடுதிப்பயன்பாடும் முடக்கத்துக்கு உள்ளாகிய போதிலும் ஆதரவு இல்லாதவர்களுக்கு ஆதரவு அளித்து பாதுகாக்க வேண்டியது தமிழர் தம் பண்பாட்டியல்பு என்றவகையில் அனுசரித்துப் போகவேண்டியது அவசியமாய்ப் போய்விட்டது.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஆசிரியர் பயிற்சியை நிறைவு செய்து 12 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் நாடளாவிய ரீதியில் தமது பணியை ஆற்றியுள்ளனர். ஒரே காலப்பகுதியில் 700பேர் வரை பயிற்சி பெற்றதும் உண்டு. தற்பொழுது முதலாம் ஆண்டுக்கான பயிற்சியில் 126 ஆசிரியர்களும் இரண்டாம் ஆண்டுக்கான பயிற்சியில் 247 ஆசிரியர்களுமாக மொத்தம் 373 ஆசிரியர்கள் பயிற்சி பெறுகின்றனர்.

விரிவுரையாளர்கள் என்ற வகையில் இலங்கை கல்வி நிர்வாக சேவை, இலங்கை கல்வியியலாளர் சேவை, ஆசிரியர்களில் இருந்து விடுவிக்கப்பட்டவர்கள் என்ற வகையில் 14பேர் கடமை புரிகின்றனர். கல்விசாரா ஊழியர்கள் என்ற வகையில் 22பேர் கடமை புரிகின்றனர். ஆசிரிய கலாசாலையில் 300 மாணவர்கள் தங்கியிருந்து கல்வி பயில்வதற்கான விடுதி வசதி, கிருஷ்ணா படிப்பகம், ரதிலட்சுமி மண்டபம், வீரமணி ஐயர் கலையரங்கம், விரிவுரை மண்டபங்கள் என்பவற்றோடு யோக மண்டபம், கிறிஸ்தவ ஆலயம் என்பன மாணவர்களின் மத வழிபாட்டிற்கும், விளையாட்டு மைதானம் பயிற்சி ஆசிரியர்கள் சகல விளையாட்டுக்களிலும் பொருத்தமான தேர்ச்சிகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்புடையனவாக அமைந் துள்ளன.

ஆண்டுதோறும் 'கலைமலர்' கலாசாலையின் சஞ்சிகை வெளியிடப்படுகின்றது. முத்தமிழ் விழா, ஆரம்பக்கல்வி விழா, ஒளிவிழா, நவராத்திரி விழா என்பனவும் விளையாட்டு நிகழ்வுகளும் நடைபெறுவதோடு மாணவர்களின் பாடத்துறை மன்றங்களின் செயற்பாடுகளும் உரிய முறையில் முன்வைக்கப்பட்டு வருகின்றன. ஆரம்பக்கல்வி, சமூகக்கல்வி, தமிழ், சங்கீதம், நடனம், சித்திரம், மனைப் பொருளியல் உள்ளிட்ட பாடத்துறைகளில் ஆண்டுதோறும் ஆசிரியர் பயிற்சி இங்கு வழங்கப்படுகின்றது. இந்துக்களும் கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களும் ஒன்றாக ஆசிரியர் பயிற்சி பெறும் சூழல் கலாசாலையின் வளர்ச்சிக்கு மேலும் உரமூட்டுவனவாக அமைந்துள்ளன.

உதயன் - 15.04.2010, 22.04.2010



# 16 புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி

வலி.கிழக்குப் பிரதேசம் கல்வியால் நீண்ட பாரம்பரியங்களையும் இடையறாத தொடர் வளர்ச்சியையும் கொண்ட பிரதேசமாகும். ஆரம்பத்தில் இந்துப்பாரம்பரியக் கல்வி முறையில் வளர்ந்து வந்த போதிலும் யாழ்ப்பாணத்துக்கு மறுசமயங்களின் வருகை அதனோடு கூடிய கல்வி அமைப்புக்களின் வருகையும் மிஷனறிமாரின் வருகையும் கல்வியில் நிலவிய கட்டுப்பாடுகளை இல்லாமல் செய்து மேலும் வளமுடன் வளர்வதற்கும் , நிறுவனமயப்படுத்தப்பட்ட பாடசாலைக் கட்டமைப்புகள் உருவாகுவதற்கும் வகை செய்தன.

வலி.கிழக்குப் பிரதேச செயலக பிரிவில் 37 பாடசாலைகள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்தப் பாடசாலைகளில் 12 ஆயிரம் மாணவர்கள் வரை கல்வி கற்கின்றனர். அவர்களுக்கு 640 ஆசிரியர்கள் கல்வி புகட்டுவிக்கின்றனர். 37 பாடசாலைகளில் வண் - ஏபி பாடசாலைகள் -04, வண் சீ தரப் பாடசாலைகள் -03,தரம் -2 பாடசாலைகள் 10, ஆரம்பப்பாடசாலைகள் 20 நிறுவனமயப்படுத்தப்பட்ட கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து உதவியவர்கள் என்ற வகையில் அமெரிக்கன் மிஷன், மெதடிஸ்தமிஷன், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், சீ.சீ.மிஷன்,

றோமன் கத்தோலிக்க சமய பீடம் . சைவ வித்தியா அபிவிருத்திச்சங்கம் மற்றும் தனிமனிதர்களாக இருந்து தமது தனிப்பட்ட சொத்தையும் உழைப்பையும் கல்வி வளர்ச்சிக்காக ஈத்து பாடசாலைகளை நிறுவி கல்வி வளர்ச்சிக்கு உதவியவர்களும் அவர்களின் உழைப்பினால் உயர்ந்து நிற்கும் கல்விக்கூடங்களும் பல உண்டு. தனிமனித முயற்சி என்ற வகையில் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரை ஸ்தாபக ராக கொண்டது கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம். புத்தூர் வள்ளல் மழவராயர் கந்தையாவின் தனிமனித முயற்சியால் உருவானது புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி. அச்சுவேலி சிவஸ்ரீ .ச.குமாரசுவாமிக் குருக்களினால் ஸ்தாபிக்கப்பட்ட அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை. அத்தியார் அருணாசலத்தினால் ஸ்தாபிக் கப்பட்ட நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி. உரும்பிராய் இந்துக்கல்லூரி குந்தர் கந்தையா. வைத்திய கலாநிதி வல்லிபுரம் ஆகியோரால் ஸ்தாபிதம் செய்யப்பட்டது. சேர் கார்டினர் சிற்றம்பலத்தினால் அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி ஸ்தாபிதம் செய்யப்பட்டது. இந்த வகையில் உள்ளூரில் தனிமனித முயற்சியால் உயர்ந்ததும் தனிமனிதர்களால் ஸ்தாபிதம் செய்யப்பட்டு பின்னர் மிஷனரிமாரிடம் கையளிக்கப்பட்டதும். சைவவித்தியா விருத்திச் சங்கத்திடம் கையளிக்கப்பட்டதுமான பாடசாலைகளும் உண்டு. தனிமனிதரால் அல்லாமல் குறித்த இடங்களில் உள்ள சமூகப்பிரமுகர்களின் கூட்டு முயற்சியால் உருவாகி இன்று உயர்ந்து நிற்கும் பாடசாலைகள் பலவுண்டு. இந்த வகையில் கல்விக்கூடங்களை நிறுவி வித்தியா தானத்தை வழங்கியவர்கள் காலங்காலமாக சமூகத்தினால் நினைவுகூரப் வேண்டியவர்கள்.

அவர்களின் அயராத முயற்சிக்கும் உழைப்புக்கும் சமூகம் என்றென்றும் சிரம் தாழ்த்தி மரியாதை செலுத்தி வருகின்றது. புத்தூர் மழவராயர் கந்தையாவால் 1931 ஆண்டு மே மாதம் 22 ஆம் திகதி ஸ்தாபிதம் செய்யப்பட்டதுதான் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி. யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியில் புத்தூ ரில் பிரதான வீதியோரத்தில் அமைந்துள்ளது. தற்பொழுது இசுறுப் பாடசாலையாக உயர்ந்து விளங்குகிறது. வலி. கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் ஆகக்கூடியளவு மாணவர்கள் கல்வி பயிலும் சோமஸ்கந்தக் கல்லூரியில் தற்பொழுது 1620 மாணவர்கள் வரையில் கல்வி பயில்கின்றனர். தற்பொழுது கல்லூரியின் அதிபராக இ.இராஜமனோகரன் அவர்கள் கடமை புரிகின்றார்.

வலி.கிழக்கின் கல்வி வளர்ச்சியில் கணிசமான அளவு பங்களிப்பு நல்கிவரும் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி புத்தூர் மழவராயர் கந்தையாவினால் 1931 ஆம் ஆண்டு ஏப்ரல் 22 ஆம் திகதி ஸ்தாபிதம் செய்யப்பட்டது. "புத்தூர் சோமஸ்கந்த

தமிழ் வித்தியாலயம் - சோமஸ்கந்த ஆங்கில வித்தியாலயம்" என்ற வகையில் இரண்டு கல்விக்கூடங்கள் நிறுவப்பட்டு அவற்றின் பராமரிப்புக்கு 200 ஏக்கர் தென்னந்தோட்ட நிலங்களையும் யாழ்.நகரில் 14 வர்த்தக நிலையங்களையும் கட்டடத்தொகுதியையும் நன்கொடையாகத் தர்மசாதனம் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் பாடசாலையின் எதிர்கால வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு பல ஏக்கர் நிலப்பரப்பில் கல்லூரி வளாகம் நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது.

கல்லூரியில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு விடுதி வசதி, உணவு வசதி என்பவற்றை இலவசமாக வழங்கி இந்து சமயக்கல்வியுடன் ஆங்கில, தமிழ், சமஸ்கிருத. மொழிகளையும் கற்பிக்கப்பட வேண்டும் என்ற பெருவிருப்பம் ஸ்தாபகரின் தர்மசாதனக் குறிப்பிலும் மரண சாதனத்திலும் தெரிவிக்கப்பட்டிருப்ப தோடு. வழிப்போக்கர்கள் தங்கியிருந்து உணவு உண்டு வண்டில் பயணங்களை இயல்பு நிலையில் மேற்கொள்ளும் வகையில் புத்தூர் சுன்னாகம் வீதியில் சத்திரம் நிறுவப்பட்டிருப்பதோடு அவற்றின் பராமரிப்புக்கும் பெருமளவு நிலமும் சொத்துக்களும் தர்மசாதனம் செய்யப்பட்டுள்ளன.

மழவராயர் கந்தையாவின் கல்விக்கான தர்மசாதனம் தொடர்பாக யாழ். பல்கலைக்கழக கல்வியியற்றுறை முன்னாள் தலைவரும் பேராசிரியருமான க.சின்னத்தம்பி கருத்துத் தெரிவிக்கையில் "கல்விக்கான தர்மசாதனம் உரிய முறையில் பயன்படுத்தப்படுமானால் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவி விடுதிவசதி, உணவு வசதி. கல்வி வசதி அனைத்தையும் இலவசமாக வழங்கலாம்" எனத் தெரிவித்தார். இது தொடர்பாக மழவராயரின் வழித்தோன்றலும் தர்ம சாதன பரிபாலன சபை உறுப்பினருமான ஸ்ரீ புருசோத்தமன் மழவராயர் கருத்துத்தெரிவிக்கை யில் "தமிழ்நாடு தஞ்சைப் பல்கலைக்கழகம் போன்ற ஒன்றை யாழ்ப்பாணத்தில் நிர்மாணிக்கலாம். காலத்தின் கோலமும் களநிலையும் ஸ்தாபகரின் விருப்பத்திற்கு எதிர்மாறாகச் செல்கின்றன. எல்லாவற்றுக்கும் காலம் பதில் சொல்லும். காத்திருக் கிறேன்" எனத் தெரிவித்தார். சோமஸ்கந்தக் கல்லூரி வளர்ச்சியில் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு படிநிலைகளில் உயர்நிலை பெற்று வந்துள்ளது. குறிப்பிட்ட காலகட்டத்தில் தென்மராட்சியில் இருந்தும் பெருமளவு மாணவர்கள் புத்தூர் சோமஸ்கந்தாவில் கல்வி கற்பதை பெருவிருப்பமாகக் கொண்டு கல்வி பயின்று வந்தனர்.

சோமஸ்கந்தாவின் வளர்ச்சியில் காலத்துக்குக்காலம் அதிபர்களாகக் கடமை புரிந்து கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவிய அதிபர்கள் நினைவில் நிலை நிறுத்தப்பட வேண்டியவர்கள். அதிபர்களின் பெயர் விபரம்:

பிரம்மஸ்ரீ.ஆர்.சுந்தராச்சாரியார் :22.04.1931-30.10.1933, வி.கனகசபை: 01.11.1933-07.07.1936, பண்டிதர் க.மயில்வாகனம்: தமிழ்ப் பாடசாலை அதிபராக 01.08.1936-31.12.1948, சீ.எம்.கதிரேசம்பிள்ளை : 08.07.1936-31.12.1937, எஸ்.தணிகாசலம் :01.01.1938-06.03.1944, எஸ்.வீரசிங்கம்: 07.03.1944-31.12.1948, எஸ்.குமாரசுவாமி :01.01.1949-31.04.1965, வி.கனகசபை: 01.05.1965-06.01.1966, ஏ.மண்டலேஸ்வரன் : 07.01.1966-31.08.1970, என்.மனோகரன் : 01.09.1970-06.12.1971, எஸ்.பி.கனகசபாபதி : 07.12.1971-25.05.1976, எம்.என்.ஆறுமுகதாசன்: 26.05.1976-13.06.1976, ரி.சச்சிதானந்தம்: 14.06.1976-28.02.1977, எஸ்.கனகராசா :01.03.1977-04.10.1981, எஸ்.ஆர்.சண்முகரத்தினம் :05.10.1981-10.02.1988, என்.கணேசபிள்ளை : 11.02.1988-28.02.1990.வி.சந்திரசேகரம்பிள்ளை : 01.03.1990-19.11.1995, வி.ஆறுமுகம் :20.11.1995-31.10.2006, கு.வாகீசன் :01.11.2006-06.03.2007, சி.மகேஸ்வரதாசன்: 07.03.2007-23.01.2009, செல்வி சிவலீலாதேவி வடிவேலு: 24.01.2009-08.07.2009, ஆர்.இராஜமகேந்திரன்: 09.07.2009-இன்றுவரை புகழ்பூத்த அதிபர்கள் பலரால் வளர்ச்சிபெற்ற கல்லூரியின் வரலாற்றில் அதிபர் திரு.எஸ்.வீரசிங்கம் ,அதிபர் எஸ்.குமாரசுவாமி ,அதிபர் எஸ்.பி.கனகசபாபதி ஆகியோரின் காலம் பொற்காலம் எனப் பேசப்படுகின்றது.

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியில் வலி.கிழக்கில் ஆகக்கூடிய மாண வர்கள் கற்கின்றனர். ஆரம்பப்பிரிவில் 528 மாணவர்களும், கனிஷ்ட இடை நிலையில் 850 மாணவர்களும் சிரேஷ்ட இடைநிலையில் 250 மாணவர் களுமாக 1620 மாணவர்கள் வரையில் கல்வி பயின்றனர்.(இசுறு பாடசாலை கட்டமைப்பின் கீழ் கடந்த மாதம் தொடக்கம் ஆரம்பப்பிரிவு புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலை என்ற பெயருடன் தனிப்பாடசாலையாக செயற்படுகின்றது.) 1956 ஆம் ஆண்டு தொடக்கம் 1 ஏ.பி.பாடசாலை என்ற வகையில் சிரேஷ்ட இடைநிலைப்பிரிவில் (க.பொ.த. உயர்தரத்தில்) கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய நான்கு பாடப்பிரிவுகளும் செயற்பட்டு வருகின்றன.

குறித்த காலப்பகுதியில் வலி.கிழக்கில் மட்டுமல்ல யாழ்.மாவட்டத்திலேயே பெயர் குறிப்பிடத்தக்க முன்னணிக் கல்லூரியாக செயற்பட்டது. மேற்படி கல்லூரி யின் அனுமதி பெற்று கல்வி கற்பது என்பது பெரும் பேறாகக் கருதப்பட்டதுண்டு. 1931 இல் இருந்தே இலவசக் கல்வியை வழங்கி வந்த கல்வி நிலையம் 1962இல் அரசாங்கம் பாடசாலைகளை பொறுப்பேற்கும் வரையும் மாணவர்களுக்கான விடுதி வசதிகளுடன் இலவசக் கல்வியை வழங்கி வந்தது. தென்மராட்சிப் பகுதி, வலிகாமம்

பகுதி உட்பட யாழ்.மாவட்டத்தின் எல்லாப் பிரதேசங்களில் இருந்தும் மாணவர்கள் கல்விகற்று வந்தனர். 1972ஆம் ஆண்டு வரையும் பின்தங்கிய மாணவர்களுக்கான அனுமதி மறுக்கப்பட்டு "தீண்டாமை" இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது .இது கல்லூரியின் வரலாற்றிலும் வித்தியாதானத்திலும் கரும்புள்ளியாக காணப்பட்ட போதிலும் யாழ்.மாவட்டத்தின் கல்வி வளர்ச்சியில் கல்லூரிக்குத் தனியிடம் உண்டு. கல்லூரியில் கல்வி பயின்று நாடளாவிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் புகழ்பெற்று விளங்கும் வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கல்வியியலாளர்கள் மற்றும் பல்துறை சார்ந்த பலர் புகழ் பரப்பி வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். குறித்த காலப்பகுதியில் கல்வி அடைவு மட்டத்தில் மிக உயர்ந்த நிலையில் விளங்கிய கல்லூரி இராணுவ நடவடிக்கைகள், இடப்பெயர்வுகள் - முகாமைத்துவத்தின் குறைபாடுகள் போன்ற களநிலைகளினால் சராசரி நிலைக்கு கீழ் இறங்கியதாகக் கூறப்படுகின்றது. இதில் நியாயம் இல்லாமல் இல்லை. 1995 ஆண்டு வலிகாமம் இடப்பெயர்வின்போது கல்லூரி வளநிலைகள் முழுமையாக சேதமாக்கப்பட்டதுடன் குறிப்பிட்டுக் கூறக்கூடிய அளவுக்கு சிறப்பாகச் செயற்பட்டுக் கொண்டிருந்த கல்லூரியின் நூல் நிலையம் முற்றாகச் சேதமாக்கப்பட்டது.

கல்லூரியின் கல்வி அடைவு மட்டம் தொடர்பாக நகரப் பாடசாலைகளுடன் ஒப்பிடும் போது சராசரிக்கு குறைவாக இருப்பது கருத்தில் கொள்ளப்பட்ட போதிலும் முகாமைத்துவத்தில் காணப்பட்ட குறைபாடுகள்தான் காரணம் என கல்வி நிர்வாகத் தரப்பால் குறை கூறப்பட்ட போதிலும் கல்வி நிர்வாக மட்டத்திலும் அதற்கு சாதகமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என பாடசாலைச் சமூகத்தினால் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றது. இதற்கு எடுத்துக்காட்டாக 2007ஆம் ஆண்டு இலங்கை அதிபர் சேவை தரம் 2:II ஐ சேர்ந்த பயிற்றப்பட்ட ஆசிரியர் ஒருவரை கல்லூரிக்கு அதிபராக நியமித்தது எடுத்துக்காட்டப்பட்டு குற்றஞ்சாட்டப்படுவதோடு கல்லூரியின் வீழ்ச்சிக்கு வழிசமைத்ததாகவும் கல்லூரியின் பாரம்பரியத்துக்கே முரணான செயற்பாடு எனக் கூறப்படுகின்றது. கல்லூரியின் சமகால நிலை தொடர்பாக ஓய்வுபெற்ற வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் "கொட்டு இடிந்த பசுமாடு நல்ல சாப்பாடு வைத்து பராமரித்தால் பழைய நிலைக்குக் கொண்டு வரலாம்" எனப் பேச்சு வழக்கில் நகைச்சுவையாகக் கூறினார். கல்லூரியின் புதிய அதிபர் ஆர்.இராசமகேந்திரன் கல்லூரியின் எதிர்கால முன்னெடுப்புக்கள் தொடர்பாக கருத்துத்தெரிவிக்கையில் "கல்லூரியின் நிலைப்பாடு தொடர்பாக கல்லூரிச் சமூகம் உயர் நிலையில் வைத்து மதிப்பீடு செய்கின்றது. வெளிப் பார்வையில் காணப்படும் போலித்தோற்றம் தொடர்பான உண்மை நிலை

பாடசாலைச்சமூகத்துக்கு உணர்த்த வேண்டியுள்ளது. உண்மை நிலை உணர்த்தப் பட்டு கல்லூரிச்சமூகத்தின் பூரண ஒத்துழைப்புடன் மீண்டும் கட்டியெழுப்பப்பட வேண்டும்" எனத்தெரிவித்தார். கல்லூரிக்கான தர்மசாதனம் செய்த சொத்துக்கள் உரிய முறையில் பரிபாலனம் செய்யப்பட்டு உரிய வருவாய் நிறுவுநரின் குறிக் கோளுக்கு ஏற்ப கையாளப்படவில்லை என்ற கருத்து பாடசாலை சமூகத்தில் புரையோடியுள்ளது. இதற்கு எடுத்துக்காட்டாக கூறும்போது யாழ்.காங்கேசன்துறை வீதியில் உள்ள கடை ஒன்றுக்கு தற்பொழுதும் மாதாந்தம் 150/= வாடகை செலுத்தப் படுவதாக நிறுவுநரின் வழித்தோன்றல் ஸ்ரீ புருசோத்தமன் மழவராயர் கூறிக் கவலை தெரிவித்தார். நிறுவுநருக்கு சிலை வைத்து நினைவுநாள் ஆண்டு தோறும் கொண்டாடும் அதேநேரம் அவரது தர்மசாதனத்தின் குறிக்கோளை நிறைவேற்றுவது தர்ம சாதன பரிபாலன சபையின் முக்கிய கடமையாகும்.

"கல்லூரி மீண்டும் தொடங்கும் மிடுக்குடன் பழைய நிலைக்கு உயர்ந்து வலி. கிழக்கில் மீண்டும் துலங்கவேண்டும்."

உதயன் - 24.06.2010, 30.06.2010, 06.07.2010



# 17 அச்சுவேலி மத்திய கல்லூரி

வலி. கிழக்கில் கல்வி நிர்வாகப் பிரிவான "கோப்பாய் கோட்டக்கல்வி அலுவலர்" பிரிவில் உள்ள மூன்று '1சி ' தரப் பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கையால், வளவசதியால் அமைவிடத்தால், காலத்தால், முந்தியது அச்சுவேலி மத்திய கல்லூரி. அச்சுவேலிக் கிராமத்தின் நடுவிடத்தில் யாழ்ப்பாணம் - அச்சுவேலிப் பிரதான வீதியில் . சங்கானை வீதி சந்திக்கும் முச்சந்தியில் . சந்திக்குக் கிழக்குப்பக்கமாகப் பிரதான வீதியோரத்தில் அமைந்துள்ளது. கல்லூரிக்கு நடுவில் தென்னிந்தியத் திருச்சபைத் தேவாலயமும் தேவாலயத்துக்கு வடக்குப் புறத்தில் கல்லூரியின் ஆரம்பப்பிரிவு(தரம் 1 - 5), தெற்குப் புறத்தில் கனிஷ்ட இடைநிலை . சிரேஷ்ட பிரிவுகள் (தரம் 6-13) என்பன அமைந்துள்ளன.

நூற்றாண்டு விழாவினை நிறைவுசெய்து இன்று 120 ஆவது ஆண்டில் கால்பதித்து உள்ளது. அச்சுவேலிப் பகுதிக்கும் அதனோடு இணைந்த அயல் கிராமங்களுக்கும் கல்வி நிழல் பரப்பி நீண்ட கல்விப் பாரம்பரியங்களைக் கொண்டதாக விளங்கு கிறது. கல்லூரியில் தற்போது ஆண்கள் / பெண்கள்/ கலவன் என்ற நிலையில் ஆயிரம் மாணவர்களுக்கு மேல் கல்வி பயில்கின்றனர். கல்லூரியின் தற்போதைய அதிபராக வேலுப்பிள்ளை அரச கேசரி கடமையாற்றுகின்றார்.

நூற்றி இருபதாவது ஆண்டில் கால்பதித்துள்ள கல்லூரியின் வரலாற்றை மீள்நோக்கும் போது அதன் வளர்ச்சிப் படிநிலையைக் கண்டுகொள்ள முடிகின்றது. யாழ்ப்பாணத்தின் கல்வி வளர்ச்சியில் மிஷனரிமாரின் பங்களிப்பு காத்திரமானது. சமயத்தோடு இணைந்த நிலையில் கல்வி முன்னெடுப்புக்கள் முனைப்புடன் முன்னெடுக்கப்பட்டன. 1887ஆம் ஆண்டு அச்சுவேலி கோவில்பற்றில் ஈ.ஜே. வில்லியம் போதகர் தலைமையில் தேவாலயம் அமைக்கப்பட்டதோடு தேவாலய வளவில் தென்னிந்திய திருச்சபையின் அனுமதியுடன் 1892ஆம் ஆண்டில் 'ஆண்கள் கல்விக்கான அமைப்பு' ஒன்றும் அதை அடுத்து பெண்கள் கல்விக்கான அமைப்பும் ஆலயச் சுற்றாடலில் ஆரம்பிக்கப்பட்டு செயற்பட்டதாகக் கூறப்படுகின்றது. ஆரம்பத்தில் அமெரிக்கன் தேவாலய மிஷனால் நிர்வகிக்கப்பட்ட ஆங்கிலப் பாடசாலையாக விளங்கியது.

அச்சுவேலி கோவில்பற்றில் உள்ளடங்கியிருந்த தொண்டமானாறு, வளலாய் , இடைக்காடு, பத்தமேனி , நவக்கிரி , புத்தூர் கிராமங்களை உள்ளடக்கிய பரந்த பிரதேச மாணவர்களும் அதனோடு அண்டிய கிராமங்களின் மாணவர்களும் இங்கு கல்வி பயில்வதற்கு வசதிகள் இருந்தன. ஆரம்பத்தில் திண்ணைப் பாடசாலையாக அதையடுத்து அமெரிக்கன் தேவாலய மிஷன் ஆங்கிலப் பாடசாலையாக அதன் பின்னர், கிறிஸ்தவ கல்லூரியாக, பின்னர் மகாவித்தியாலயம் என்ற நாமங்களுடன் விளங்கிய கல்லூரி தற்பொழுது அச்சுவேலி மத்திய கல்லூரி என்ற பெயருடன் கல்விப்பணியை முன்னெடுத்து வருகின்றது.

என்றும் ஒளிரும் தீபம் (Ever Shining Light) என்ற மகுடவாசகத்தைக்கொண்ட இந்தக் கல்லூரி நூற்றாண்டு கடந்த வளர்ச்சிப் பாதையில் பல்வேறு விதமான தடைகளைத் தாண்டி முன்னேறி வந்துள்ளது. அமெரிக்கன் தேவாலய மிஷன் பாடசாலை என்ற பெயருடன் செயற்பட்டு வந்த பாடசாலை 1920ஆம் ஆண்டு காலப் பகுதியில் அச்சுவேலிக் கிறிஸ்தவக் கல்லூரி எனப் பெயர் மாற்றப்பட்டு தரம் - 8 வரை மாணவர் கற்பதற்கு ஏற்றவகையில் தரமுயர்த்தப்பட்டது. அந்தக் காலப்பகுதியில் அதிபராகக் கடமையாற்றிய இந்தியாவைச்சேர்ந்த ஏ.கே.குருவிலால் 21 வருடங்கள் தொடர்ந்து அதிபராகக் கடமையாற்றி கல்லூரியின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்போடு சேவையாற்றினார்.

1960ஆம் ஆண்டு உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள் அரசாங்கத்தால் சுவீகரிக்கப்படுவதற்கான சட்டம் கொண்டுவரப்பட்டு பாடசாலைகள் அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டது. பின்னர் கிறிஸ்தவ கல்லூரி அச்சுவேலி மகாவித்தியாலயம் எனப்பெயர் மாற்றம் செய்யப்பட்டுத் தரம் உயர்த்தப்பட்டது. 1971 ஆம் ஆண்டு ஆரம்பப்பாடசாலையும் ஆங்கிலப்பாடசாலையும் ஒன்றாக இணைக்கப்பட்டு ஒரே

நிர்வாகக்கட்டமைப்பின் கீழ் செயற்படத் தொடங்கியது. 1984ஆம் ஆண்டு அதிபராகப் பொறுப்பேற்ற க.இராசதுரை கல்லூரியின் வளர்ச்சியில் அதீத அக்கறையோடு செயற்பட்டதோடு "கல்லூரி" என்ற பெயரை நிலைநிறுத்த வேண்டும் என்ற வகையில் மேற்கொண்ட முயற்சியால் 2000ஆம் ஆண்டு கல்லூரியின் பெயர் 'அச்சுவேலி மத்திய கல்லூரி' எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டது. கல்லூரி கடந்து வந்த வளர்ச்சிப்பாதையில் அதிபர்களாகக் கடமையாற்றியவர்கள் என்ற வகையில்,

| | |
|---|---|
| கே.சின்னத்தம்பி | - 1892 - 1909 |
| கே.செல்லையா | - 1910 - 1915 |
| எஸ்.சின்னத்தம்பி | - 1916 - 1917 |
| வீ.ஆசீர்வாதம் | - 1918 - 1919 |
| ஏ.கே.குருவிலால் | - 1920 - 1941 |
| எஸ்.வீரசிங்கம் | - 1942 - 1943 |
| எஸ்.பி.இராசரத்தினம் | - 1944 - 1950 |
| ஆர்.சிங்கரத்தினம் | - 1951 - 1971 |
| சீ.குணபாலசிங்கம் | - 1972 - 1973 |
| ஏ.இராமசாமி | - 1974 - 1975 |
| எஸ்.எஸ்-துரைசிங்கம் | - 1979 - 1986 |
| க.சிவசுப்பிரமணியம் | - 1987 - 1990 |
| சி.செல்லையா | - 1991 - 1993 |
| க.இராசதுரை | - 1994 - 1996 |
| திருமதி.பு.கணபதிப்பிள்ளை | - 1996 - 1997 |
| திருமதி.ச.கனகராசா | - 1998 - 2004 |
| வே.பாலசுப்பிரமணியம் | - 2004 - 2010 |
| வே.அரசகேசரி | - 2010 - 11.23 ஆம் திகதியிலிருந்து அதிபராகக் |

கடமையாற்றி வருகின்றார்.

கோப்பாய்க் கல்விக்கோட்டத்தில் கல்வித்துறையிலும் விளையாட்டுத்துறையிலும் பெயர்பெற்று விளங்கிய கல்லூரி விளையாட்டுத்துறையில் தேசிய மட்டத்தில் பெயர்பெற்று விளங்கியது.

ஆர்.சிங்கரத்தினம் அதிபராகக் கடமையாற்றிய (1951 - 1971 வரையான) 21 ஆண்டு காலப் பகுதிகளில் கல்லூரி சகல நிலைகளிலும் உயர்ந்து மேல்நிலை

பெற்று விளங்கியது. அந்தக் காலப்பகுதியில் கல்லூரியின் விளையாட்டு மைதானத்தின் தேவையை உணர்ந்து அச்சுவேலி இராசவீதிக்கும் புனித திரேசாள் மகளிர் கல்லூரிக்கும் இடையில் உள்ள 18 பரப்பு நிலத்தைக் கொள்வனவு செய்து கல்லூரிக்கான விளையாட்டு மைதானமாகப் பயன்படுத்துவதற்கு வசதி செய்யப்பட்டது. பலாலி இராணுவமுகாமின் எல்லையில் அச்சுவேலி அமைந்திருப்பதால் கடந்த யுத்தகால சூழ்நிலையில் கல்லூரி சந்தித்த இழப்புக்கள் அதிகமாகும். மாணவர் சந்தித்த பாதிப்புக்கள். கல்வியில் ஏற்பட்ட இடையீடுகள் மிக அதிகம். 1995ஆம் ஆண்டு வலிகாம இடப்பெயர்வின்போது கல்லூரி முழுமையாக இடம்பெயர்ந்து தென்மராட்சியில் மட்டுவிலில் உள்ள கமலாசினி வித்தியாலயத்துடன் இணைந்து செயற்பட்டது. இடப்பெயர்வின் பின்னர் 1996 ஆம் ஆண்டில் மீளக் குடியேறியபோது கல்லூரியில் காணப்பட்டவை சேதமடைந்த கட்டடங்கள் மட்டுமே.

வலி.கிழக்கின் கல்வி நிர்வாகப் பிரிவான "கோப்பாய் கோட்டக்கல்வி அலுவலர்" பிரிவில் உள்ள மூன்று '1சி' தரப் பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கையால், காலத்தால், முந்தியது அச்சுவேலி மத்திய கல்லூரி.

1996ஆம் ஆண்டு மீள் குடியேற்றத்தின்போது வெறுமையான கட்டடத் தொகுதியுடன் மட்டும் காணப்பட்ட கல்லூரியை மீளக்கட்டியெழுப்பியவர் என்ற வகையில் அந்தக் காலப்பகுதியில் அதிபராகக் கடமையாற்றிய திருமதி. பு.கணபதிப்பிள்ளையின் பணிகள் காத்திரமானவை. அக்காலப்பகுதியில் அச்சுவேலி பிரதேசம் அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. வலிகாமம் பகுதியில் இருந்து அச்சுவேலிப் பகுதிக்குள்ளே வருபவர்கள் புத்தூர்ச் சந்தி சோதனைச் சாவடியில் ஆவணச் சான்றாதாரங்களுடன் அனுமதி பெற்றே வரவேண்டும். ஆரம்பத்தில் நூறுக்குக் குறைவான மாணவர்களுடனும் பத்துக்குக் குறைவான ஆசிரியர்களுடனும் ஆரம்பமான கல்லூரி குறுகிய காலப்பகுதியில் முழுமையான கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்கத் தொடங்கியது.

கல்லூரியின் வரலாற்றில் ஆர்.சிங்கரத்தினம், எஸ்.எஸ்.துரைசிங்கம் ஆகியோர் அதிபராக இருந்த காலம் இன்றும் பழைய மாணவர்களாலும் கல்லூரிச் சமூகத்தினாலும் பசுமையுடன் நினைவுகூரப்படுகின்றது. அதேபோன்று அதிபர் ஏ.இராமசாமி, அதிபர் க.இராசதுரை ஆகியோரின் சேவையை கல்லூரி முழுமையாகப் பெற்றுக்கொள்ள முடியாமல் போனமை கல்லூரியின் வளர்ச்சிக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது. ஏ.இராமசாமியின் சேவைக்காலத்தில் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் அடைந்த மேல்நிலையும் க.இராசதுரையின் சேவைக்காலத்தில் யாழ்.மத்திய கல்லூரி பெற்றுக்கொண்ட உயர்வும் வளவசதிகளும் ஒப்புநோக்கப்பட்டன. குறித்த அதிபரின் சேவை அச்சுவேலி மத்திய கல்லூரிக்குக்

கிடைத்திருக்குமேயானால் அச்சுவேலி மத்திய கல்லூரியின் வளர்ச்சியில் எதிர்பாராத திருப்பங்கள் ஏற்பட்டிருக்கும் என்ற வகையில் ஒப்புநோக்கி கழிவிரக்கப்படாமல் இல்லை.

அச்சுவேலியில் மகளிருக்குத் தனியான கல்லூரியும், ஆண்களுக்கும் பெண்களுக்கும் அச்சுவேலி மத்திய கல்லூரியும் அமைந்துள்ள நிலையில் பெருமளவு மாணவர் யாழ்.நகரத்தை நோக்கியும் அடுத்த நிலையில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியையும் அடுத்த நிலையில் புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரியை யும் நோக்கி செல்லும் சமகால நிலை தொடர்பாகக் கல்வியாளர் மத்தியிலும் நலன்விரும்பிகள் மத்தியிலும் கவலையுடன் கூடிய விமர்சனங்கள் எழுவதை வெளிப்படையாகக் கண்டுகொள்ள முடிகின்றது. இதற்கான விடையை நியாய பூர்வமாக ஆராய்ந்து பெற்றோர் மத்தியில் உள்ளூர்ப் பாடசாலைகளில் நம்பிக்கை கொள்ளச்செய்ய வேண்டிய பொறுப்பு கல்விச் சமூகத்தையும் கல்வி நிர்வாகத்தை யும் சார்ந்ததாகும். இதற்கு நியாயமான தீர்வு காணப்படாவிடில் கிராமமட்டப் பாடசாலைகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகி போய்விடும் என்பதில் நியாயம் இல்லாமல் இல்லை.

புதிய அதிபராக வே.அரசகேசரி பொறுப்பேற்றிருப்பதும், கல்லூரி ஆயிரம் பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தில் இணைக்கப்பட்டிருப்பதும், காரணமாக இருப்பதுடன் புலம்பெயர்ந்த பழைய மாணவர்களின் நிதி உதவிகளும், பழைய மாணவர் சங்கத்தின் உதவியும், ஒத்துழைப்பும், கல்லூரி நிர்வாகத்துக்கு ஆரோக்கியமான நிலையில் கிடைத்து வருகின்ற இந்தவகையில் எட்டு வருடங் களுக்கு மேல் தீர்க்கப்படாமல் இருந்துவந்த பாடசாலைக் காணிப் பிரச்சினைக்குத் தீர்வுகாணக்கூடிய ஏதுநிலை ஏற்பட்டுள்ளது.

கல்லூரியில் நிகழ்வுகளை நடத்துவதற்கு ஏற்புடைய மண்டப வசதி இல்லை. இதனைப் போக்கும் விடயத்திலும் புலம்பெயர்ந்த பழைய மாணவர்களின் கவனம் திரும்பி இருப்பதோடு, இந்த விடயத்திற்குக் கல்வி அமைச்சின் உதவியைப் பெறுவதற்கான முன்னெடுப்புக்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உதயன் - 20.01.2011, 27.01.2011, 03.02.2011



# 18 சைவத்தமிழ் கல்வியை வளர்த்த அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை

கல்வி ஊடாக கிறிஸ்தவ சமயம் மேலோங்கி பரவி வந்த காலவேளையில் சைவத்தமிழ்க் கல்வியை வளர்ப்பதற்கும், பாதுகாப்பதற்கும் தனி மனிதனாக நின்று அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்களால் உருவாக்கி வளர்க்கப்பட்டது அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை.

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான சாலையில் வீதிக்கு மேற்கே அச்சுவேலி உலவிக்குளம் சித்திவிநாயகர் ஆலயத்தின் மேற்கு வீதியில் அதற்கென கொள் வனவு செய்யப்பட்ட காணியில் , காலயுத்தி வருடம் (1918)சித்திரைத் திங்கள் புனர்பூச நட்சத்திரத்தில் சரஸ்வதி வித்தியாசாலை என்ற நாமத்தோடு கல்விச் செயற்பாடுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

கல்விச்செயற்பாடுகளை ஆரம்பித்து வைத்த சிவஸ்ரீ ச.குமாரசுவாமிக்குருக்கள் பாடசாலையின் முகாமையாளராக இருந்து பாடசாலையை நடத்தியதோடு 1928 வரை 11 வருடங்கள் பாடசாலையில் ஆசிரியராகவும் பணியை மேற்கொண்டு தமிழ், சைவசமயம், சமஸ்கிருதம் போன்ற பாடங்களையும் மாணவர்களுக்குக் கற்பித்து வந்தார்.

குருக்கள் 1911 ஆம் ஆண்டில் இருந்து தனது இல்லத்தில் 30 இற்கு குறையாத மாணவர்களை உள்ளடக்கி நடத்தி வந்த திண்ணைப் பாடசாலையை நிறுவன மயப்படுத்தி, சமூகத்தில் கல்வி வளர்ச்சிக்கு உதவவேண்டும் என்ற உயர் நோக்கோடு, தான் பிரதம பூசகராக இருந்து பூசை செய்யும் அச்சுவேலி தெற்கு உலவிக்குளம் சித்தி விநாயகர் ஆலயத்தின் மேற்கு வீதியில் உள்ள காணியை, தனிப்பட்ட முறையில் கொள்வனவு செய்தார்.

இதில் பாடசாலைக்கான கட்டடத்தை நிர்மாணித்து 150 மாணவர்களோடு பாடசாலையின் கற்றல் செயற்பாடுகளை ஆரம்பித்து வைத்தார். நான்கு ஆசிரியர் களை நியமித்து அவர்களுக்கான சம்பளத்தை வழங்கியதோடு, தானும் ஆசிரியராக இருந்து பாடசாலையின் காத்திரமான கல்வி வளர்ச்சிக்கு உழைத்து வந்தார்.

சிவஸ்ரீ ச.குமாரசுவாமிக் குருக்கள் அச்சுவேலியில் சரஸ்வதி வித்தியாசாலையை நிறுவியதோடு சோரன்பற்று , மருதங்கேணி ஆகிய இடங்களிலும் தனது செலவில் பாடசாலைகளை நிறுவி சைவத்தமிழ் கல்வியை மாணவர்கள் கற்பதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்தார்.

வேத ஆகம புலமையும் ஆலயக்கிரியைகளில் சிறப்புத்தேர்ச்சியும் பெற்ற சிறந்த கல்விமானும் குரு சிரேஷ்டருமான சிவஸ்ரீ ச.குமாரசுவாமிக்குருக்கள் சமஸ்கிருத மொழியில் ஆறு நூல்களையும் 1933-1956ஆம் காலப்பகுதியில் எழுதி அச்சிட்டார்.

தமிழ் மொழியில் சைவப் பிரகாசிகை ஐந்து பாகங்களாகவும், அச்சுவேலி சித்திவிநாயகர் ஊஞ்சல், சிவபூசை விளக்கம், மகோற்சவ சந்திரிகை, சிவபூசை விதி ,வேதாகம நிரூபணம், மகோற்சவ விளக்கம், விநாயக பரத்துவம், முப்பொருள் விளக்கம் உள்ளிட்ட 18 நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

1915-1960ஆம் காலப்பகுதியில் இவரது நூல்களில் சில இந்திய பல்கலைக் கழகங்களில் சைவ சித்தாந்தத்துறையின் பாடநூல்களாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இவர் சைவ ஆலயங்களின் கும்பாபிஷேகம், பாலஸ்தாபன விதிகளை துறை போக கற்றுணர்ந்த விற்பன்னராக விளங்கியமையினால் யாழ்.குடா நாட்டிலும், நாடளாவிய ரீதியிலும் 70 இற்கு மேற்பட்ட ஆலயங்களின் கும்பாபிஷேகக் கிரியை களுக்குத் தலைமை தாங்கி நிறைவு செய்தவராவார்.

மிஷனரிமாரால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளில் ஆங்கிலக் கல்வியும் கிறிஸ்தவ சமயமும் போதிக்கப்பட்ட காலப் பகுதியில் 1918 ஆம் ஆண்டு அச்சுவேலி

தெற்கில் ஆரம்பிக்கப்பட்ட சரஸ்வதி வித்தியாசாலையின் சைவமும், தமிழும், ஆங்கிலமும் உள்ளிட்ட பாடங்கள் இலவசக் கல்வியாக நடத்தப்பட்டன.

இலங்கையில் இலவசக் கல்வியை அரசால் அறிமுகம் செய்ய முன்னரே யாழ்.குடாநாட்டில் கிராமங்கள் தோறும் உள்ளூர் பிரமுகர்களால் பாடசாலைகள், ஸ்தாபகம் செய்யப்பட்டு அந்தக் காலப்பகுதிக்குரிய கலைத்திட்ட வடிவை உள்ளடக்கிய பாடங்கள் கற்பிக்கப்பட்டன.

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையில் அச்சுவேலி தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களுடன் பத்தமேனி, ஆவரங்கால், புத்தூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களும் வடமராட்சிப் பகுதியிலிருந்து வந்த மாணவர்களும் கல்வி கற்றனர்.

உள்ளூரையும் அச்சுவேலிப் பகுதியுடன் இணைந்த அயல் கிராமங்களையும் சேர்ந்த வறிய மற்றும் நடுத்தரக்குடும்ப சிறுவர்களின் ஆரம்பக்கல்வி மற்றும் இடைநிலைக்கல்வி அபிவிருத்திக்கும் களமாக இருந்த சரஸ்வதி வித்தியாசாலையில் ஜி.சீ.ஈ சாதாரண தரம் வரையான வகுப்புக்கள் நடைபெற்று வந்தன.

கல்வித்தரத்திலும் இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் விளையாட்டுக் களிலும் கல்லூரிகளுடன் போட்டி போடக்கூடியதாக இருந்த அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை குறித்த காலப்பகுதியில் தனக்கே உரிய தனித்துவத்தோடு துலங்கியது.

வேதாகம சைவ சித்தாந்த விற்பன்னராக தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் பெருமதிப்பு பெற்றவராகவும் விளங்கிய சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்களின் கல்விப்பணியால் ஓங்கி உயர்ந்து விளங்கியது சரஸ்வதி வித்தியாசாலை.

1990 இற்கு முந்திய காலப்பகுதியில் கோப்பாய் கல்வி வட்டாரத்திலும் யாழ் மாவட்டத்திலும் தரம் 2 பாடசாலைகளில் முன்னணிப் பாடசாலையாக கல்வி மற்றும் இணைப்பாடவிதான துறைகளில் சிறந்து விளங்கியது. குறித்த காலப்பகுதியில் 600 இற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்றனர். தற்பொழுது திருமதி ஸ்ரீரதி முருகசோதி அதிபராகக் கடமையாற்றுகின்றார்.

சைவத் தமிழ் கல்வி வளர்ச்சியில் தனக்கே உரிய தனித்துவத்தோடும் வலிகாமம் கிழக்கில் உள்ள தரம் 2 பாடசாலைகளில் குறிப்பிடத்தக்களவு முன்னணி யிலும் விளங்கியது அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை. இது தனிப்பட்ட முகாமை

யாளரான சிவஸ்ரீ.ச.குமாரசுவாமிக் குருக்களின் முகாமைத்துவத்தின் கீழ் செயற்பட்ட பாடசாலை , பின்னர் உதவி நன்கொடை பெறும் பாடசாலையாக இருந்து 1960 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அரசால் பொறுப்பேற்கப்பட்டு அரச பாடசாலையாக செயற்படத்தொடங்கியது.

நிறுவுநர் சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக்குருக்களின் கல்வி, சமயப்பணிகள் பாடசாலைச் சமூகத்தினாலும், பிரதேச மக்களினாலும் பசுமையுடன் நினைவு கூரப்படுவதோடு, 1994ம் ஆண்டு பாடசாலையின் பவளவிழாக் கொண்டாட்டத்தின்போது நிறுவுநரின் சிலை பாடசாலை வளவில் திறந்து வைக்கப்பட்டது. அது தற்பொழுதும் உரியமுறையில் பேணப்படுகிறது. அவரது பணிகளை எதிர்காலச் சந்ததிக்கும் நிகழ்காலச் சந்ததிக்கும் எடுத்துக்கூறும் வகையிலும் அது உள்ளது.

பாடசாலையின் அதிபர்களாக காலத்துக்குக்காலம் பலரும் அளப்பெரும் சேவையாற்றி வந்துள்ளனர். அந்த வகையில், ச.செல்லையா (அச்சுவேலி), இ.செல்லையா(இடைக்காடு), ந.கந்தையா(இடைக்காடு), இ.மயில்வாகனம் (பத்தமேனி), எஸ்.சுப்பிரமணியம் (புலோலி), ஆ.சின்னத்துரை(இடைக்காடு), ஆ.காசிநாதர்(கோப்பாய்), சி .ஆறுமுகம் (இடைக்காடு), ஏ.விக்கினேஸ்வரராசா (பத்தமெனி), பு.கதிரித்தம்பி (இடைக்காடு), திருமதி .ச.கனகராசா (அச்சுவேலி), சி.தங்கவேல் (அச்சுவேலி), எஸ்.மகேஸ்வரதாசன்(அச்சுவேலி).எஸ்.பூபாலசிங்கம் (அச்சுவேலி), சி.மாணிக்கவாசகர் (வளலாய்)ஆகியோர் அதிபர்களாக கடமையாற்றியுள்ளனர்.

தற்பொழுது திருமதி.ஸ்ரீரதி முருகசோதி (நீர்வேலி) அதிபராகக் கடமையாற்றி வருகின்றார். தற்பொழுது தரம் 1 முதல் தரம் 11 வரையான வகுப்புக்களில் 150 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். 15 ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர்.

ஒருகாலப்பகுதியில் 600 இற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்விகற்றதோடு பரீட்சைப் பெறுபேறுகளிலும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் மற்றும் போட்டிகளிலும் ஏனைய கல்லூரிகளுடன் போட்டியிட்டு முன்னணியில் திகழ்ந்த பாடசாலை. மாணவர் எண்ணிக்கையில் மிகக் கீழ்மட்டத்துக்கு இறங்கியிருப்பதும் அடைவுமட்டத்திலும் சாதாரண நிலைக்கு குறைய இருப்பதும் பெற்றோர் மற்றும் பாடசாலை சமூகத்திலும் குழப்ப நிலையை உள்ளாக்காமல் இல்லை.

கடந்த வருடம் பிற்பகுதியில் அதிபராகப் பொறுப்பேற்றுக்கொண்ட திருமதி.ஸ்ரீரதி முருகசோதி பொறுப்பேற்ற பின்னர், மாணவர் அனுமதியில் நம்பிக்கை

ஏற்பட்டிருப்பதாக தெரிவித்தார். 2011ஆம் ஆண்டு தரம் 1 இற்கு நான்கு மாணவர்கள் மட்டும் அனுமதி பெற்றிருந்தனர். இந்த வருடம் (2012) ஒன்பது மாணவர்கள் அனுமதி பெற்றுள்ளனர். இது தரம் ஒன்றைப் பொறுத்தவரை இரட்டிப்பு மடங்கு அதிகரிப்பு எனத் தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில், தான் பாடசாலையைப் பொறுப்பேற்ற பின்னர், பழையமாணவர்களையும் நலன்விரும்பிகளையும் அணுகிக் கலந்துரையாடி பாடசாலையின் வளர்ச்சி தொடர்பாக கருத்துப்பரிமாற்றங்களை மேற்கொண்டமையினால் தரம் 1 அனுமதி அதிகரித்துள்ளது. எதிர்காலத்தில் மேலும் அதிகரிக்கச்செய்ய வேண்டியதோடு பாடசாலை சமூகத்திற்கு பாடசாலையின் மீது நம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் முன்னெடுக் கப்பட்டு வருவதாகவும் கூறினார்.

சமூகம் நம்பிக்கை கொள்வதற்கான குறிகாட்டியான தரம் 5 புலமைப்பரிசில் பெறுபேறு மற்றும் க.பொ.த சாதாரண பரீட்சை பெறுபேறு என்பனவற்றில் உயர் அடைவு மட்டம் வேண்டும் என்பதே பாடசாலையின் உடனடி நோக்கம்.

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை கல்வித்தர நிலையில் 1996 ஆம் ஆண்டிற்குப் பின்னர் மீளக் குடியமர்வை அடுத்து சரிவுநிலையில் காணப்பட்ட போதிலும் கடந்த பத்தாண்டு காலப்பகுதியில் பெரும்வீழ்ச்சி காணப்பட்டதாகக் கல்வித்திணைக்கள மதிப்பீடுகள் எடுத்துக்காட்டுகின்றன. இந்தக்காலப்பகுதி யின் நிலை தொடர்பாக யாழ் வலயக்கல்வி அலுவலக உதவிக்கல்விப் பணிப்பாளர் ஒருவர் கருத்துத்தெரிவிக்கையில், முகாமைத்துவத்தின் பலவீனம் மற்றும் வெளி இடங்களை நோக்கி மாணவர்களின் நகர்வும் இதற்குக் காரணமாகும் எனத்தெரிவித் தார். அத்துடன் புதிய அதிபரின் முன்னெடுப்புக்கள் நம்பிக்கை தரத்தக்க விதத்தில் இருப்பதால் எதிர்காலத்தில் வளர்ச்சி ஏற்படும் எனவும் தெரிவித்தார்.

2009ஆம் ஆண்டு க.தனுஸன் என்ற மாணவன் தரம் 5 புலமைப்பரிசில் பெறத்தகுதி பெற்றுள்ளார். 2010 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண பரீட்சைப் பெறு பேற்றில் இரண்டு மாணவர்கள் க.பொ.த உயர்தரம் கற்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர்.


பாடசாலையின் ஆரம்பகால கட்டடம் 90 அடி நீளம் 40 அடி அகலம் கொண்டது. கூரை முழுமையாகச் சேதமடைந்த நிலையில் உள்ளது. இந்த மண்டபம் அச்சுவேலிப் பகுதியில் உள்ள பாடசாலைகளில் மிகப்பெரியது. ஆரம்பப்பிரிவு வகுப்பறைகள், விவசாயகூடம், விஞ்ஞான கூடம், மனையியல் கூடம், கணினிக்கூடம், நூல்

நிலையம் போன்ற பொருத்தமான கட்டமைப்புக்களுடன் செயற்படும் அதேவேளை சாரணியம், கலை இலக்கிய மன்றம், சமய மன்றம், தமிழ் மன்றம் உள்ளிட்ட அனைத்து அமைப்புக்களும் செயற்படுகின்றன.

அச்சுவேலி தெற்கைச்சேர்ந்த செல்லப்பா இரத்தினம் குடும்பத்தினர் தமது சொந்தச்செலவில் நீர்த்தாங்கியை அமைத்து, குடிதண்ணீர் குழாய் இணைப்புக் களை செய்து கொடுத்துள்ளனர். எஸ்.கந்தையா குடும்பத்தினர் விளையாட்டு மைதானத்துக்கான காணியைக் கொள்வனவு செய்து வழங்கியுள்ளனர். சமூகத்தின் நம்பிக்கையில் தான் பாடசாலையின் வளர்ச்சி தங்கியுள்ளது.

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை மீண்டும் கல்வித்தர நிலையில் மாணவர் எண்ணிக்கையில் உயர்வு பெறவேண்டும் என்பதே ஊரவரின் பேரவா.

உதயன் - 04.01.2012, 12.01.2012




# 19 கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

**வ**லி. கிழக்கில் முதன்நிலைக் கல்லூரியாகவும் யாழ். மாவட்டத்தி முன்னணிக் கல்லூரிகளில் ஒன்றாகவும் விளங்கிவரும் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி கோப்பாய் கல்விக் கோட்டத்தில் உள்ள வண்.ஏ.பி. பாடசாலையில் ஒன்றாகும். 159 வருட கல்விச் சேவையால் வலி.கிழக்குக் கல்விக்கு வளம்சேர்த்து உயர்ந்து நிற்கின்றது.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியில் 8 ஆவது கிலோ மீற்றரில் பிரதான வீதிக்கு மேற்குப் புறமாகக் காணப்படும் கிறிஸ்தவ தேவாலயத்துக்குப் பின்புறமாக அமைந்துள்ளது. 1852ஆம் ஆண்டு கிறிஸ்தவ மிஷனரிமாரினால் சி.எம்.எஸ். ஆங்கிலப் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டது.

மரபு ரீதியிலான கல்விப் பாரம்பரியங்களினால் கல்வியில் கட்டுப்பாடுகள், சமத்துவமின்மை மற்றும் ஒடுக்குமுறைகள் நிலவிய காலப்பகுதியில் சமயக் கல்வியோடு சகலருக்கும் கல்வி வாய்ப்பை வழங்கியது. 1945ஆம் ஆண்டு அதே வளாகத்தில் செயற்பட்டு வந்த பெண்கள் விடுதிப் பாடசாலையையும் ஒன்று சேர்த்து "கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி" எனப் பெயர் மாற்றப்பட்டு செயற்பட்டு வருகின்றது.

யாழ். மாவட்டத்தில் சிறந்த கல்லூரிகளில் ஒன்றாக விளங்கிய கல்லூரியில் விடுதி வசதியும் இருந்தமையால் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் மாணவர்கள் வருகைதந்து விடுதியில் தங்கியிருந்து கல்வி பயின்றனர். கல்லூரி யின் பெயர் நாடளாவிய ரீதியில் உச்சரிக்கப்பட்டதுண்டு. 1995ஆம் ஆண்டு இடப்பெயர்வு வரை கல்லூரி தனக்கே உரிய தனித்துவத்தோடு தனது கல்விச் சேவையைத் தொடர்ந்து வந்த போதிலும் இராணுவ நடவடிக்கைகள், 1995 ஆம் ஆண்டு இடப்பெயர்வு என்பன கல்லூரியின் கல்விச் செயற்பாடுகளில் பல்வேறு இடர்பாடுகளை ஏற்படுத்தியதோடு கல்லூரியின் வளவசதிகளும் சேதப்படுத்தப்பட்டன.

கல்லூரியின் அமைவிடம் கல்லூரியின் வயதை உறுதி செய்யும் வகையில் ஓங்கி உயர்ந்து நிழல்பரப்பும் மரங்கள் மற்றும் அமைப்புக்கள் கல்லூரியின் செயற்பாடுகளுக்கு உரமூட்டி உற்சாகமளிப்பனவாக அமைந்துள்ளன. 96 பரப்பு வளாகத்தில் அமைந்துள்ள கல்லூரியில் தரம் 6 தொடக்கம் தரம் 13 வரையான வகுப்புக்கள் செயற்படுகின்றன. ஜீ.சீ.ஈ. உயர்தரத்தில் கலை, விஞ்ஞானம், வர்த்தகம், கணிதம் என நான்கு பாடத்துறைக்கான கற்றல் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கல்லூரி வளாகத்தில் பொருத்தமான மத்திய இடத்தில் விளையாட்டு மைதானம், 125ஆவது ஆண்டு நினைவு மண்டபம், கலைஅரங்கம் போன்ற முக்கியமான வளவசதிகளைக் கொண்ட கல்லூரியாகும். கல்லூரியின் சமகால வளவசதியும் அமைப்பும் கல்விப் பெறுபேறுகளும் வலி.கிழக்கில் முன்னணியில் உள்ளன.

இந்தவகையில் வலிகாமம் கிழக்குப் பிரிவில் இருந்து மட்டுமல்ல வலிகாமம் பெரும்பிரிவின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் மாணவர்கள் விருப்பத்தோடு அனுமதிபெற்று கல்வி கற்கும் நிலையை தோற்றுவித்துள்ளது. நகரப் பாடசாலை நோக்கி மாணவர்கள் நகரும் சமகாலச் சூழலில் கணிசமான அளவு மாணவர்கள் கல்லூரியை நோக்கி வருகின்ற சூழல் கல்லூரியின் வளர்ச்சியை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

கல்லூரியில் தற்பொழுது 56 ஆசிரியர்கள் கடமைபுரிகின்றனர். கல்லூரியின் அதிபராக கே.ஆர்.இராசசேகரன் கடமையாற்றுகின்றார்.

கோப்பாய்க் கல்விக் கோட்டத்தில் கல்வி அடைவு மட்டத்தில் மற்றும் பரீட்சைப் பெறுபேறுகளில், பல்கலைக்கழக அனுமதியில் முன்னணியில் உள்ள கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் வளர்ச்சிப் பாதையில் காலத்துக்கு காலம் அதிபராக அர்ப்பணிப்புடன் பணியாற்றியவர்களின் சேவை பசுமையுடன் நினைவு கூரப்படுகின்றன.

அந்தவகையில் பலரது படங்கள் கல்லூரியின் 125 ஆவது ஆண்டு நினைவு மண்டபத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

"கல்லூரியின் கல்விச் செயற்பாடுகள் 1852ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளபோதிலும் 1939ஆம் ஆண்டில் இருந்துதான் அதிபர் சேவை புரிந்தவர்களின் விவரத்தைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. 1939 இற்கு முன்னர் கடமையாற்றியவர்கள் தொடர்பான விவரங்கள் கல்லூரியில் இல்லை எனக் கூறப்பட்டதோடு 125 ஆவது ஆண்டு நிறைவு தொடர்பான நிகழ்வின்போது அதனை ஆவணப்படுத்துவதற்கு முயற்சித்தபோதிலும் முடியவில்லை" என்று கல்லூரியின் பழைய மாணவனும் தற்போதைய அதிபருமான கே.ஆர்.இராசசேகரன் கவலையுடன் தெரிவித்தார். வரலாற்றை உரியமுறையில் பாதுகாத்து எதிர்காலச் சந்ததிக்குக் கையளிக்கவேண்டியதில் "ஈழத்தமிழ் இனத்தின் பலவீனம்" கல்வி நிறுவனங்களிலும் காணப்படுகின்றது.

கல்லூரியில் 01.01.1939 ஆம் ஆண்டிலிருந்து அதிபர்களாகக் கடமையாற்றியோரின் விபரம் வருமாறு:-

கு. சின்னத்துரை செல்லையா 1939-1951, அருட்பிரகாசம் வில்சன் இராசசேகரம் 1951-1957, டேவிட் ஜெயசிங்கம் தம்பாபிள்ளை 1957 - 1957, ஈ.சீ.ஏ. நவரட்ணராசா 1957 - 1963, இளையதம்பி கணபதிப்பிள்ளை சண்முகநாதன் 1963 - 1971, முருகுப்பிள்ளை கார்த்திகேசன் 1971 - 1971, சுப்பையா சிவசுப்பிரமணியம் 1972 - 1973, ஜே.ஏ. செல்லையா 1973 - 1973, சேனாதிராசா கந்தசாமி 1973 - 1974, சின்னையா சிவநேசன் 1975 - 1980, செல்லத்துரை செல்வரத்தினம் 1980 - 1983, திருமதி பராநிதி அருள்ராஜா 1983 - 1984, பூதத்தம்பி கந்தப்பு இராசரத்தினம் 1984 - 1991, தம்பிப்பிள்ளை முத்துக்குமாரசுவாமி 1991 - 1996, திருமதி கனகராணி இரத்தினசபாபதிப்பிள்ளை 1996-1996, நடராசா சிவகடாச்சம் 1996 - 2005, திருமதி மலர்மங்கை கையிலைமகான் 2005 - 2006, அருணாசலம் அகிலதாஸ் 2006 - 2007, சிவபுண்ணியம் சிவலிங்கம் 2007 - 2007, கே. இராசையா இராசசேகரன் 2007.11.12 ஆம் திகதியில் இருந்து அதிபராகக் கடமையாற்றி வருகின்றார்.

கல்லூரியில் இந்த வருடம் (2011) தரம் 6 - 11 வரை 601 மாணவர்களும் தரம் 12 - 13 வரை 320 மாணவர்களுமாக மொத்தம் 921 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர்.

கல்லூரியில் உயர்தர மாணவர் மன்றம், தமிழ் இலக்கியமன்றம், ஆங்கில மன்றம், கணித விஞ்ஞான மன்றம், கவின்கலைமன்றம், இந்து மாமன்றம், கிறிஸ்தவ மன்றம், சமூகவிஞ்ஞான மன்றம், சுகாதாரமன்றம், விளையாட்டுக்கழகம்,

விவசாயக்கழகம், வணிகமன்றம், மனையியல் மன்றம், பாடசாலைக் கூட்டுறவுச் சங்கம், இன்ரறக்றகழகம் என்பனவற்றின் செயற்பாடுகள் மாணவர்களின் ஆளுமை விருத்தியிலும் தலைமைத்துவப்பண்பு விருத்தியிலும் பண்புசார் நடத்தையிலும் குறிப்பிடத்தக்களவு பங்களிப்புச்செய்து அவர்களை கற்றல் செயற்பாடுகளில் அக்கறையுடன் ஈடுபாடுகொள்ளச்செய்து வருகின்றன.

159 வருட கல்விச் சேவையால் வலி.கிழக்குக் கல்விக்கு வளம் சேர்த்து உயர்ந்து நிற்கின்ற பாடசாலையாக கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி விளங்குகின்றது.

150 ஆவது ஆண்டு கல்விச் சேவையை நினைவுகூரும் வகையில் 2002ஆம் ஆண்டு அஞ்சல் முத்திரை வெளியிட்டுக் கௌரவிக்கப்பட்ட கல்லூரிப் பரீட்சை முடிவுகள் மற்றும் அடைவுமட்டத்தில் நகரப் பாடசாலைகளுக்குக் குறைவுபடாத நிலையில் உள்ளபோதிலும் கல்லூரிக்குரிய வளவசதிகள் உரியமுறையில் வழங்கப்படாமல் இருப்பது 2010ஆம் ஆண்டுப் பரிசளிப்பு விழா அறிக்கையில் அதிபரினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பரிசளிப்புவிழா அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் வருமாறு:-

"முகாமைத்துவ உதவியாளர் - இல்லை, தேவையான ஆளணி - 02 பேர், ஆய்வுகூட உதவியாளர் இல்லை, தேவையான ஆளணி - 02 பேர், காவலாளி ஒருவர் உள்ளார், தேவையான ஆளணி - 02, சுகாதாரத்தொழிலாளி - இல்லை, தேவையான ஆளணி - 02 பேர், நூலக உதவியாளர் - இல்லை, தேவையான ஆளணி - 02 பேர், தோட்டத்தொழிலாளி ஒருவர் உள்ளார், தேவையான ஆளணி - 02 பேர், சித்திரம், சங்கீதம், நடனம், புவியியல், விவசாயம், கிறிஸ்தவம், வரலாறு, நாடகமும் அரங்கியலும் பாடங்களுக்குத் தனித்தனியான அறைகள் அமைக்கப்படவேண்டும். இவை உட்பட 14 தேவைகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன." இவற்றை யாழ்ப்பாணம், நல்லூர்க் கல்விக்கோட்டங்களில் உள்ள முன்னணிப் பாடசாலைகளுடன் ஒப்பிட்டு நோக்கும்போது கோப்பாய்க் கல்விக் கோட்டத்தில் உள்ள முன்னணிப் பாடசாலையாகவும் நகர எல்லையில் அமைந்துள்ள பாடசாலை யாகவும் உள்ள கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக்கே இத்தனை வளவசதியீனங்கள் இருக்கும்போது கோப்பாய் கோட்டத்திலுள்ள கிராமப்புறப் பாடசாலைகளுக்கான வளவசதிகளில் எத்தகைய குறைபாடு காணப்படும் என்பது தெட்டத்தெளிவாகப் புலனாகின்றது.

கோப்பாய்க் கோட்டத்தில் உள்ள பாடசாலைகளில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் புலமைப்பரிசில் பெறுவதற்குத் தகுதிபெற்ற மாணவர்களில் 40 வீதமானவர்கள் நகரப் பாடசாலை நோக்கிச் சென்றுவிடுகின்றனர். கோப்பாய் கல்விக்

கோட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்குப் பொருத்தமான வளவசதிகள் வழங்கப்படாத இந்த நிலையில் பரீட்சைப் பெறுபேறுகளில் நகரப் பாடசாலைகளுடன் ஒப்பிட்டுக் கல்வி நிர்வாகிகள் கருத்துக் கூறுவது ஆசிரியர்களையும் பெற்றோர்களையும் மனத்தாக்கத்துக்கு உள்ளாக்கி வருகின்றது என்பதில் உண்மையில்லாமல் இல்லை.

மாகாணக் கல்வி நிர்வாகமும் வலயக் கல்வி நிர்வாகமும் தமது கடைக்கண் பார்வையைக் கிராமப்புறப் பாடசாலைகளின்மீதும் செலுத்தவேண்டும்.

கோப்பாய்க் கோட்டப் பாடசாலை மாணவர்களின் பரீட்சைப்பெறுபேற்றின் ஆகக்கூடிய வீதத்தை வெளிப்படுத்தும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இருந்து 2009ஆம் ஆண்டு 20 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆண்டுதோறும் கணிசமான மாணவர்கள் தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கும் தெரிவுசெய்யப்படுகின்றனர். 2010ஆம் ஆண்டு தரம் 13 கலைப் பிரிவு மாணவன் செல்வன் வோ.டேமியன்ராஜ் உலக ஈரநில ஓவியப்போட்டியில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும் வடக்கு மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளார்.

தமிழ்த்தினப் போட்டிகள், ஆங்கிலதினப் போட்டிகள், மெய்வன்மைப் போட்டிகள், சாரணர் நிகழ்வுகள், கணினி மென்பொருளாக்கம், சித்திரப்போட்டிகள், கட்டுரைப் போட்டிகள் உள்ளிட்ட பல்வேறு போட்டிகளிலும் வெற்றிகளைப் பெற்று முன்னணியில் திகழும் கல்லூரி தேவையான வளவசதிகளைப் பெற்று மேல்நிலையடைந்து தேசியப் பாடசாலையாகத் தரமுயரவேண்டும்.

உதயன் - 10.02.2011. 17.02.2011. 24.02.2011



# 20 இந்துக் கல்விப் பாரம்பரியத்தை 85 ஆண்டுகளாக வளர்த்து வரும் இடைக்காடு மகா வித்தியாலயம்

**வ**லி.கிழக்கில் உள்ள நான்கு வண் ஏ.பி தரக் கல்லூரிகளில் பௌதீக வளத்தாலும் கல்வி அடைவு மற்றும் பரீட்சைப் பெறுபேறுகளினாலும் முதல் நிலையில் விளங்கும் இடைக்காடு மகா வித்தியாலயம் 30 வருட யுத்த வடுக்களைத் தாங்கி மீண்டும் மிடுக்குடன் வளர்ந்து வருகின்றது. கோப்பாய்க் கல்விக் கோட்டத்தில் வண்.ஏ.பி.கல்லூரிகள் மட்டத்திலும் 1-13 தரம் வரையிலான வகுப்புகளைக் கொண்ட பாடசாலைகள் மட்டத்திலும் முன்னணியில் விளங்குகிறது.

பாடசாலைச் சமூகத்தின் ஒத்துழைப்புக்கு எடுத்துக்காட்டாக துலங்குகிறது. கல்லூரிக்காக சமூகமும் சமூகத்துக்காக கல்லூரியும் என்ற ஒன்றிப்புடன் உள்ளூர் ஆசிரியர்களே விரும்பிப் பணியாற்ற முன்வரும் கல்விக்கூடமாக விளங்குகிறது.

அமெரிக்க மிசன் மற்றும் கிறிஸ்தவ பாதிரிமாரின் கல்விப்பணியை நம்பி வாழ்ந்த காலப்பகுதியில் இந்துமரபுக் கல்வியும் சமயநெறியும் பின்தங்கிவிடக்கூடாது என்ற உயர் நோக்குடன் 1925ஆம் ஆண்டு சேர்.பொன்.இராமநாதனை இடைக் காட்டுக் கிராமத்துக்கு அழைத்து ஊர் பிரமுகர்கள். பெரியோர்கள் உள்ளடங்கிய உயர்சபையில் கல்வி பற்றிய கருத்துக்கள் பரிமாறப்பட்டன. குறித்த கலந்துரை

யாடலின் விளைவாக உருவாகியதே புவனேஸ்வரி அம்மனின் பெயரில் தமிழ்ப் பள்ளிக்கூடம். புவனேஸ்வரி அம்மன் தமிழ்ப்பாடசாலை, சைவவித்தியாலயம், இடைக்காடு இந்துக்கல்லூரி எனப் பெயர் மாற்றம் பெற்று 1961ஆம் ஆண்டு அரசு பாடசாலைகளைப் பொறுப்பேற்ற வேளையில் அந்தக் காலகட்டத்தில் உயர் பாடசாலைக் கட்டமைப்பான மகா வித்தியாலயம் என்பதை உள்ளடக்கி இடைக்காடு மகாவித்தியாலயம் என்ற நாமத்துடன் உயர்கல்விப் பணி ஆற்றிவருகின்றது.

1925ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இடைக்காட்டில் உள்ள க.முருகுப்பிள்ளை என்பவரின் வீட்டில் 30 மாணவர்களுடன் திண்ணைப் பள்ளியாக ஆரம்பிக்கப்பட்டது. சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் வழிப்படுத்தலுடன் வித்தியாலயத்தை ஆரம்பிப்பதில் ஆறுமுகம் வேலுப்பிள்ளை, அ.கந்தையா, ஞா.சுப்பிரமணியம், வீ.கணபதிப்பிள்ளை, கை.செல்லமுத்து, க.இராமசாமி ஆகியோர் முன்னின்று உழைத்தனர்.

ஆரம்பத்தில் பாடசாலையின் அதிபராக பண்டிதர் க.இராமசாமி பொறுப்பேற்றுக் கொண்டார். பொதுமக்களின் ஏகோபித்த ஒத்துழைப்புடன் ஆரம்பிக்கப்பட்ட வித்தியாலயத்தில் 1926ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மாணவர் எண்ணிக்கை நூறைத் தாண்டியது. ஆரம்ப காலத்தில் ஆசிரியர்களாக சு.நாராயணபிள்ளை, கை.செல்லமுத்து, வி.கணபதிப்பிள்ளை, மு.கந்தையா, செல்வி வீ. சரஸ்வதி ஆகியோர் கடமையாற்றினார். பாடசாலையில் ஆரம்பகாலத்தில் 8ஆம் வகுப்பு வரை கல்வி புகட்டப்பட்டது. பாடசாலைக்குத் தேவையான நிலத்தை கல்லூரி ஸ்தாபகர்களும் உள்ளூர் பிரமுகர்களும் நன்கொடையாக வழங்கி உதவினர். காலச் சூழலைக் கருத்தில் கொண்டு பாடசாலைச் சமூகத்தில் கருத்தொருமித்த உடன்பாட்டுடன் ஆரம்பிக்கப்பட்ட கல்லூரியின் வளர்ச்சி ஏனைய பாடசாலைகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கியது.

கல்வி அடைவு மட்டத்தில் காணப்பட்ட முன்னேற்றம் வளலாய், இடைக்காடுப் பகுதி மாணவர்களைத் தன்னீர்ப்பு செய்யச் செய்ததுடன் பலாலி, மயிலிட்டி உள்ளிட்ட வலிகாமம் பெரு நிலப்பரப்பில் தொண்டமானாறு உள்ளிட்ட வடமராட்சிப் பகுதியில் இருந்தும் பெருமளவு மாணவர்கள் கல்லூரியில் சேர்ந்து கல்வி பயின்றனர். உள்ளூர் மாணவர்கள் வெளியிடங்களில் உள்ள பாடசாலையை நோக்கிச் செல்கின்றதை உயர்வாக நினைத்த காலப்பகுதியில் இடைக்காடு - வளலாய் உள்ளூர் மாணவர் முழுமையாகக் கல்லூரியில் இணைந்து கற்பதைப் பெருமையாக நினைத்துக் கல்வி பயின்றனர். பொதுப் பரீட்சைக்கு பாடசாலை ஊடாகவே தோற்றினர். இதனால் கல்லூரி யால் பெருமை பெற்றனர்.

1980ஆம் ஆண்டுக்கு முந்திய காலப்பகுதியில் வலி.கிழக்குப் பிரிவிலே ஆகக்கூடுதலான மாணவர் தொகை கொண்டதாகவும் கூடுதலான வளவசதிகள் மற்றும் ஆசிரியர் ஆளணியைக் கொண்டதாகவும் விளங்கியது இடைக்காடு மகா வித்தியாலயம். பல்வேறு வகையில் புகழ்பூத்த அதிபர்களினாலும் பாடசாலைச் சமூகத்தினாலும் ஒன்றிணைந்த நிலையில் இந்தப் பாடசாலை வளர்த்தெடுக்கப்பட்டது.

பாடசாலைக்கான காணி, கட்டட வசதி என்பன பழைய மாணவர்களினாலும் இடைக்காடு வாழ் மக்களினாலும் கல்லூரியின் தேவையைக் கருத்தில் கொண்டு வலியுறுத்தலுக்கு இடமில்லாத நிலையில் மனமுவந்து அளிக்கப்பட்டதை பாடசாலையின் வரலாறு எடுத்தியம்புகின்றது.

கல்லூரிக்கான கட்டடவசதியை பெரியளவில் வழங்கியவர் என்ற வகையில் தனிமனிதனாகப் பல மில்லியன் ரூபா செலவில் 165அடி நீளம் 37அடி அகலம் கொண்டதும் மூன்று தளங்களைக் கொண்டதுமான மிகப்பெரிய கட்டடத்தொகுதியை வழங்கியுள்ள கட்டடப் பொறியியலாளர், பரோபகாரி வே.நமசிவாயம் அவர்களின் தனித்துவமான பணிமுன்னெடுப்பு பாடசாலைச் சமூகத்தினால் பாராட்டப்படுவதோடு, பசுமையுடன் நினைவு கூரப்படுகின்றது. தன்னால் அமைத்துக் கொடுக்கப்பட்ட கட்டடத் தொகுதியின் பராமரிப்புச் செலவுக்குரிய வைப்பு நிதியையும் அதன் வட்டியில் ஆண்டுதோறும் கட்டடப்பராமரிப்புச் செய்வதற்கான ஏற்பாடுகளும் அமரர். வே. நமசிவாயத்தால் செய்யப்பட்டுள்ளது. "நமசிவாயம் மண்டபம்" கல்லூரி முகப்பை அலங்கரித்து நிற்கின்றது.

பாடசாலைக்கான கட்டடங்களில் குறிப்பிட்ட சில கட்டடங்களைத்தவிர ஏனைய அனைத்தும் கல்லூரிச் சமூகத்தினால் நிர்மாணிக்கப்பட்டவையாகும். அண்மையில் திறந்தவெளிக் கலைஅரங்கும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. க.பொ.த.உயர்தரத்தில் கணிதம், விஞ்ஞானம், கலை, வர்த்தகம் ஆகிய நான்கு துறைகளும் சிறப்பான முறையில் செயற்படுவதோடு விஞ்ஞானத்துறைக்கான சகல ஆய்வுகூட வசதியும் கொண்டுள்ளது.

1980ஆம் ஆண்டு உலக தரிசன ஸ்தாபனத்தினால் உயிரியல் வாயு சாதனம் அமைக்கப்பட்டது. யாழ்.மாவட்டத்தில் முதல்முதலாக இங்கே அமைக்கப்பட்ட உயிரியல் வாயு சாதனம் தற்பொழுதும் பாவனையில் உள்ளது. கல்லூரியில் க.பொ.த.உயர்தரப் பிரிவில் 152 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். 6ஆம் தரத்தில் இருந்து ஆங்கில மொழி மூலமும் தமிழ்மொழி மூலமும் கற்பிக்கப்படுகின்றது. 2009ஆம், 2010ஆம் ஆண்டுகளில் ஆங்கில மொழிமூலம் ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சையில் தோற்றிய மாணவர்கள் 100வீதம் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

இது யாழ்.மாவட்டத்திலும் யாழ். கல்வி வலய மட்டத்திலும் பெரும் சாதனையாகப் பாராட்டப்பட்டுள்ளது.

கல்லூரியின் வளர்ச்சிக்கு ஆரம்பத்திலிருந்து இன்றுவரை அதிபர்களாகப் பணிபுரிந்து உழைத்தவர்கள் என்ற வகையில் பண்டிதர் சு.இராமசாமி 1926-1928, க.முருகுப்பிள்ளை 1928-1932, வி.செல்வநாயகம் 1933-1936, எம்.ஏ.தங்கராசா, வி.வன்னியசிங்கம், எஸ்.விஜயரத்தினம், கே.காராளசிங்கம் ஆகிய நால்வரும் 1937இல் இருந்து 1940 வரையான காலப்பகுதியில் கடமையாற்றியுள்ளனர்.

ஆர்.எச்.ஐயர் 1940-1950, கு.முத்துக்குமார சுவாமிப்பிள்ளை 1951-1956, வே.கணபதிப் பிள்ளை 1957-1968, எம்.பொன்னம்பலம் 1969-1970, கே.குணரத்தினம் 1970-1974, க.இராசரத்தினம் 1974-1975, சி.வே.மகேசவேலு 1975-1983, பொ.பூபாலசிங்கம் 1983-1989, திருமதி.வி.தெய்வேந்திரம் 1990-1995, சிதம்பரநாதன் 1995-1997, வி.எஸ்.சித்திரவடிவேல் 1997-2008 மற்றும் அ. அருந்தவநேசன் 2008 மார்ச் 27ஆம் திகதியில் இருந்து கடமையாற்றி வருகின்றார்.

1980 வரையில் அமைதியான சூழலில் இயல்பு நிலையில் செயற்பட்டுவந்த கல்லூரியின் செயற்பாடுகள் அதை அடுத்துவந்த காலப்பகுதியில் இராணுவ நடவடிக்கைகள், ஷெல் தாக்குதல்கள், இடப்பெயர்வுகள் என்ற வகையில் பல்வேறு விதமான இடர்பாடுகளுக்கு உள்ளாகியது. பலாலி இராணுவத்தளத்துக்கு அண்மையில் கிழக்குத்திசையில் அமைந்துள்ள பாடசாலையின் விசாலமான கட்டடத்தொகு பாதுகாப்பு தரப்பினரதும் - போராளிகள் பார்வைக்கு உட்படாமல் இல்லை. இந்த வகையில் வளலாய் இடைக்காடுப் பகுதியில் இருந்தும் முற்றாக மக்கள் இடம்பெயர்ந்த நிலையில் பாடசாலையின் கட்டடத் தொகுதி உட்பட சகல வள வசதிகளும் முற்றாகச் சிதைக்கப்பட்டன, சேதமாக்கப்பட்டிருந்தன. கட்டடங்கள் அனைத்தும் கூரைகள் அற்ற சேதமடைந்த சுவர் எச்சங்களுடன் காணப்பட்டன. தளபாடங்கள் உட்பட கற்றல் சாதனங்கள் முழுமையாக அப்புறப்படுத்தப்பட்டிருந்தன.

கோப்பாய் கல்விக் கோட்டத்தில் உள்ள நான்கு "1 ஏ.பி" பாடசாலைகளில் இடைக்காடு மகா வித்தியாலயத்தில் இருந்து நான்கு பாடத்துறையிலும் வருடந்தோறும் அதிகமான மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகின்றனர். இதற்குக் காரணம் இடைக்காடு மகா வித்தியாலய சமூகம் தமது குடும்பநலனிலும் பார்க்க பாடசாலை நலனில் அக்கறை கொண்டிருப்பதும் தமது பாடசாலைக்கு உரிய தனித்துவமான பெருமையை ஆண்டுதோறும் பாதுகாக்க வேண்டும் என்ற உயர் சிந்தனையும்தான் எனப் பாராட்டப்படுகின்றது.

1991ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 6ஆம் திகதி பாடசாலை முற்றாக இடம் பெயர்ந்தது. அப்போது அதிபராக இருந்த திருமதி வி.தெய்வேந்திரன் தனது தனிப்பட்ட ஆளுமைத்திறனால் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் ஒரு பகுதியில் செயற்பட வைத்தார். அத்துடன், பாடசாலைச் சமூகத்தில் பூரணமான ஒத்துழைப்புடன் தனியார் காணியில் தற்காலிக கொட்டில்களை அமைத்து முழுமை யாகச் செயற்பட வைத்தார். பாடசாலை இடம்பெயர்ந்து நீர்வேலியில் செயற்பட்ட காலப் பகுதியில் 1500 மாணவர்களும் 60 ஆசிரியர்களும் இருந்தனர். இரண்டு பெரிய பாடசாலைகள் ஒரே வளாகத்தில் செயற்படுவதென்பது நடைமுறைச் சிக்கல்களை நாளாந்தம் ஏற்படுத்தக் கூடியதாக இருந்தபோதிலும் இரண்டு கல்லூரி அதிபர்களின் புரிந்துணர்வும் விட்டுக்கொடுப்பும் கல்விச் சமூகத்தால் பாராட்டப்பட்டன. நீர்வேலியில் நான்கு வருடங்கள் செயற்பட்ட பாடசாலை வலிகாமம் பகுதியின் முழுமையான இடப்பெயர்வை அடுத்து 1995.09.30ஆம் திகதி வடமராட்சிக்கு இடம்பெயர்ந்து கரவெட்டி ஞானாசாரியர் கல்லூரியில் மாலை நேரப் பாடசாலையாகச் செயற்பட்டது.

1996.06.06ஆம் திகதி மீண்டும் நீர்வேலிக்கு திரும்பி அத்தியார் இந்துக் கல்லூரி யில் செயற்பட்டது.

5 வருட இடப்பெயர்வை அடுத்து மீண்டும் 1996ஆம் ஆண்டு ஆடி மாதம் தனது சொந்த இடத்துக்கு மீளத் திரும்பிய பாடசாலையில் இரட்டை இலக்கத்தொகையில் மாணவர்கள் கல்வி கற்றனர். பாடசாலை மீளவும் தனது சொந்த இடத்துக்குத் திரும்பிய வேளையில் எந்த நிலையில் இருந்தது என்பதை பாடசாலையின் பவள விழா அறிக்கையில் அதிபர் வி.எஸ்.சித்திரவடிவேல் நினைவு கூருகிறார்.

"பாடசாலை முகப்பில் எரித்த தளபாடங்களின் குவியல் அதிபரின் காரியாலய அறையில் ஒரு பழைய மேசையும் மூன்று தகரக் கதிரைகளும் காட்சியளித்தன. மூன்று தளங்களைக் கொண்ட மிக நீளமான கட்டடத் தொகுதிகளையும் இரண்டு தளங்கள் கொண்ட கட்டடத் தொகுதியையும் தனித்துக் கட்டி அன்பளிப்புச் செய்தவர் பெரியார் வே.நமசிவாயம். அவர் கூரையற்றுக்கிடந்த மாடிக்கட்டடங்களைப் பார்த்து மனம் நொந்தார். வே.நமசிவாயம் கண்ணீர் விட்ட காட்சி எனது உள்ளத்தை உருக்கியது. உத்வேகத்தைத் தந்தது" எனக் கூறுகின்றார். மீளக்குடியேறிய பின்னர் பாடசாலையை மீண்டும் உயர்நிலைக்குக் கொண்டு வந்த பெருமை ஓய்வு பெற்ற அதிபர் வி.எஸ்.சித்திரவடிவேலுக்கே உரியது எனப் பாராட்டப்படுகின்றார்.

கலை, வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம் ஆகிய நான்கு பாடத்துறைகள் ஊடாகவும் ஆண்டுதோறும் கணிசமான எண்ணிக்கையினர் பல்கலைக்கழகம் செல்கின்றனர். தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தகைமை பெறுவோர்.

க.பொ.த.சாதாரணதரத்தில் சித்தியடைவோர் பாடசாலையை விட்டு விலகிச் செல்லாமல் தொடர்ந்து கல்வி கற்கின்ற சூழல் கிராமியச் சூழலில் கண்டுகொள்ள முடியாத வித்தியாசமான நம்பிக்கைத் தன்மையை எடுத்துக்காட்டுகின்றது. கடந்த 85 வருடகாலப் பகுதியில் பல்துறைசார் நிபுணர்கள் பலரையும் கல்விமான்களையும் அறிஞர்களையும் இந்தப் பாடசாலை உருவாக்கியுள்ளது. சர்வதேச ரீதியில் புகழ் பெற்ற நிபுணர் ந.மாணிக்க இடைக்காடர் பாடசாலையின் பழைய மாணவர் என்று கூறுவதில் பாடசாலைச் சமூகம் பெருமை அடைகின்றது. மாணிக்க இடைக் காடர் காலமாகும் வரை பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் காப்பாளராக இருந்து வழிநடத்தியுள்ளார். பாடசாலையின் ஸ்தாபகர் ஆ.வேலுப்பிள்ளை, பழைய மாணவர் ந.மாணிக்க இடைக்காடர், கட்டடக் கலைஞர் வே.நமசிவாயம் மூவரும் வித்தியாலயத்தின் மும்மூர்த்திகள் என பவளவிழா மலரிலும் ஆண்டுதோறும் வெளியிடப்படும் பரிசளிப்பு விழா அறிக்கையிலும் பாராட்டப்படுகின்றனர்.

பாடசாலையின் பரீட்சை பெறுபேறுகளிலும் கல்வி அடைவு மட்டத்திலும் இணைப் பாடவிதானச் செயற்பாடுகளிலும் தனக்கே உரிய தனித்துவத்துடன் கோப்பாய் கல்விக் கோட்டத்தில் முன்னணியில் உள்ளது. 2009ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கிலமொழி மூலத்தில் 100வீத சித்தியையும் தமிழ்மொழி மூலத்தில் 62வீத சித்தியையும் பெற்று கோப்பாய் கல்விக் கோட்டத்தில் முதலாம் இடத்தையும் மாவட்ட நிலையில் நான்காவது இடத்தையும் பெற்றுள்ளது.

"கிராமிய மட்டத்தில் தூய குடிதண்ணீரை வழங்குதல்" என்னும் ஆய்வில் தி.தினேஸ்குமார், ப.கிரிதாஸ், ம.பொன்வேல் ஆகியோரைக் கொண்ட மாணவர் அணி தேசியமட்டத்தில் 4ஆவது இடத்தைப் பெற்றுள்ளது. ஒலிம்பியாட் போட்டித் தேர்வில் செல்வன் முருகையா பிருந்தாபன் யாழ்.மாவட்ட மட்டத்தில் 4ஆவது இடத்தைப் பெற்று தேசியமட்டப் போட்டியில் கலந்துகொண்டார். பாடசாலைச்சமூகம் நம்பிக்கை வைத்தால்தான் பாடசாலையின் தரம் மேல் நிலைபெறும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கும் இடைக்காடு மகாவித்தியாலயம் மேலும் பெருமை பெற வேண்டும்.

உதயன் - 19.05.2011, 26.05.2011, 02.06.2011




# 21 அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி

**வ**லி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் அமைந்து, ஐந்து உள்ளூராட்சிக் கட்டமைப்புகளில் பெரியதும் நகரமுக்கியத்துவம் வாய்ந்த மத்திய இடத்தில் அமைந்துள்ளதுமான அச்சுவேலி உப அலுவலகப்பிரிவில் 1995ஆம் ஆண்டு இடப்பெயர்வுக்கு முந்திய காலப்பகுதியில் 10 பாடசாலைகள் செயற்பட்டன. இந்த 10 கல்விக்கூடங்களும் அச்சுவேலி கொத்தணிப் பாடசாலைக் கட்டமைப்பிலும் குடும்பப் பாடசாலை கட்டமைப்பிலும் ஒரு குழுமமாகக் கருதப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வந்தன. 10 பாடசாலைகளில் இடைக்காடு மகாவித்தியாலயம், வண் ஏ.பி பாடசாலையாகவும், அச்சுவேலி மத்திய கல்லூரி , அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி இரண்டும் வண.சி தரத்திலும் அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை, வளலாய் அமெரிக்கன் மிசன் பாடசாலை இரண்டும் தரம் 2 பாடசாலைகளாகவும் , ஏனைய 5 பாடசாலைகளும் ஆரம்பப் பாடசாலைகளாகவும் இருந்தன. இந்த 10 கல்விக்கூடங்களினது கல்வி வரலாற்றில் 1995 ஆம் ஆண்டுக்கு முந்திய கால யுத்த சூழ்நிலை பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தியதுண்டு. பலாலி இராணுவ முகாமுக்கு மிக அண்மையில் அச்சுவேலி அமைந்திருந்ததும் பலாலி இராணுவ முகாம், பலாலி விமான நிலையம் உள்ளடக்கிய அதியுயர் பாதுகாப்பு வலயத்தின் கிழக்கு எல்லையில் இருந்தமையினால் அச்சுவேலிப் பிரதேசம் இடப்பெயர்வு உள்ளிட்ட பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியதுண்டு.

அச்சுவேலியில் செயற்பட்ட 10 பாடசாலைகளில் 1996ஆம் ஆண்டு மீளக் குடியேறுகைக்குப் பின்னர் அச்சுவேலி றோ.க.த.க. பாடசாலை , வளலாய் அமெரிக்கன் மிஷன் பாடசாலை, பத்தமேனி விபசி வித்தியாலயம் ஆகிய மூன்றும் மூடப்பட்டு நிர்வாக ரீதியாகப் பதிவுகள் இரத்துச் செய்யப்படவுள்ளன. இந்தப் பாடசாலைகளில் காணி உள்ளிட்ட அசையாச்சொத்துக்கள் தற்பொழுது கல்வி நிர்வாகத்துக்குட்படாமல் யாரது பொறுப்பிலும் இல்லாமல் இருப்பது அச்சுவேலியில் உள்ள வறிய குடும்பங்களின் கல்வி வளர்ச்சிக்குத் தடையாகவும் இருப்பது கண்டுணரப்பட்டுள்ளது. அச்சுவேலி — சங்கானை வீதியில் தற்போதைய பொலிஸ் நிலையத்துக்கு முன்பக்கத்தில் பொருத்தமான கல்விக் கட்டுமானங்களுடன் அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி அமைந்துள்ளது.

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள ஒரே ஒரு மகளிர் கல்லூரி யான அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியில் 1985ஆம் ஆண்டுக்கு முந்திய காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் வெளிமாவட்டங்களில் இருந்தும் கணிசமான அளவு மாணவிகள் கல்வி பயில்வதற்கு முந்திக்கொள்வது உண்டு.

மகளிர் கல்லூரியுடன் இணைந்த நிலையில் அமைந்துள்ள கார்மேல் கன்னியாஸ்திரிகளின் (லங்கா மாதா மடம்) மாணவர் விடுதியில் தங்கியிருந்து கல்வி பயில்வது உண்டு. இந்த வகையில் கிழக்கு மாகாணம், மத்திய மாகாணம், வடமேல் மாகாணம் ஆகியவற்றைச் சேர்ந்த மாணவிகள் கனிஷ்ட, இடை மற்றும் ஜி.சீ.ஈ உயர்தர வகுப்புக்களில் அனுமதி பெற்று விருப்பத்தோடும் கல்வி பயின்றதுண்டு. அந்தவகையில் வலி . கிழக்குப் பிரதேச பெண்களின் கல்வி வளர்ச்சியில் மட்டுமல்ல, நாடளாவிய ரீதியில் தமிழ் மாணவிகளின் கல்வி வளர்ச்சியில் கணிசமான பங்களிப்புச்செய்து உயர்ந்து நின்றது.

கல்விக் கட்டமைப்பில் தரம் - 1 தொடக்கம் தரம் - 13 வரையான வகுப்புக்களைக் கொண்டதாக விளங்கும் கல்லூரியில் தரம் - 1 முதல் தரம் - 5 வரையான வகுப்புக்களில் மாணவர்கள் ஆண்,பெண் கலவன் பாடசாலை என்ற வகையிலும் தரம் - 6 இல் இருந்து தரம் - 13 வரையான வகுப்புக்கள் பெண்கள் கல்லூரி என்ற வகையிலும் செயற்பட்டு வருகின்றன.

ஆரம்பப் பிரிவு (தரம் - 1 தொடக்கம் தரம் - 5) மாணவர்களின் கல்வி வளர்ச்சியிலும் அடைவு மட்டத்திலும் வலி.கிழக்கில் முன்னணியில் உள்ளது. இதற்கு எடுத்துக்காட்டாக தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேற்றையும், கோப்பாய்க் கல்விக் கோட்ட மட்டத்தில் நடைபெறும் போட்டிகளிலும் மாணவர்கள் பெற்றுக்கொள்ளும் வெற்றிகளையும் கருத்தில் கொள்ளலாம். 2010ஆம் ஆண்டு

தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் கல்லூரியிலிருந்து பரீட்சைக்குத்தோற்றிய மாணவர்களில் 13 பேர் சித்தியடைந்துள்ளமை கருத்தில் கொள்ளத்தக்கது. இந்த வகையில் கோப்பாய் கல்விக்கோட்டத்தில் முன்னணியில் உள்ளது.

அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி தற்போதைய அமைவிடத்தில் 1946ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 6ம் திகதி ஸ்தாபிதம் செய்யப்பட்டது. அச்சுவேலி மேற்கு அச்சு நகரைப் பிறப்பிடமாகவும் இலங்கையின் பிரபல வர்த்தகப்பிரமுகருமான பரோபகாரி "செவிலியர் சேர்.சிற்றம்பலம் ஏபிரகாம் காடினர்" அவர்களின் தீர்க்க தரிசனமான கல்விப்பணியில் உதயமாகி உயர்ந்து நிற்கின்றது.

செவிலியர் சேர்.சிற்றம்பலம் ஏபிரகாம் காடினர் தனிப்பட்ட முறையில் கல்லூ ரிக்கான காணியை கொள்வனவு செய்து தனது பிறந்தநாளில் பாடசாலையை ஆரம்பித்து "புனித தெரேசாள் பாடசாலை" எனப் பெயரும் சூட்டினார். பாடசாலையின் முதலாவது அதிபராக திருக்குடும்பக் கன்னியர் சபையைச் சேர்ந்த அருட்சகோதரி மரிய றெஜினா கடமையாற்றினார். மணி விழாக்கொண்டாடிய கல்லூரியின் தற்போதைய அதிபராக அருட்சகோதரி மரிய றெசாறியோ கடமையாற்றுகின்றார்.


வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் அமைவிடமும் கவின் நிலையும், கற்றலுக்கான உணர்வை மாணவர் மத்தியில் ஏற்படுத்தும் வகையில் அமைந்திருப்பதோடு, கல்லூரி வளாகத்தினுள்ளே பிரவேசிக்கும் அனைத்து தரப்பினரையும் தாம், கல்வி கற்ற கல்விக் கூடங்களின் கட்டமைப்புக்களுடன் ஒப்பிட்டு நோக்கும் நிலைக்கு உள்ளாக்கும்.

1988ஆம் ஆண்டுக்கு முந்திய காலப்பகுதியில் அச்சுவேலி – சங்கானை வீதி பொதுப்போக்குவரத்துப் பயன்பாட்டிற்கு உட்பட்டிருந்த நிலையில் வலிகாமம் வடக்கு, வலிகாமம் தெற்கு பிரிவுகளில் இருந்தும் பெருமளவு மாணவிகள் கல்லூரியில் அனுமதி பெற்று கற்றுவந்தனர். 1995 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகளின்போது காலத்துக்குக்காலம் கல்லூரி பெருமளவில் சேதத்துக்கு உள்ளாகியதோடு, இடம்பெயரும் நிலைக்கும் உள்ளாகி வந்தது. இதனால் மாணவர் களின் எண்ணிக்கை பெருமளவில் குறைவடைந்து சென்றபோதிலும் 1996ஆம் ஆண்டு மீள்குடியேற்றத்தை அடுத்துத் தொடர்ச்சியாக மாணவர் எண்ணிக்கை அதிகரித்து தற்பொழுது ஆரம்பப்பிரிவில் 315 மாணவர்களும் கனிஷ்ட, இடை நிலையில் 415 மாணவிகளும் ஜி .சீ.ஈ. உயர்தர வகுப்பில் 68 மாணவிகளுமாக மொத்தம் 858 மாணவிகள் கற்கின்றனர். கல்லூரியின் ஆரம்பத்தில் இருந்து இன்றுவரை அதிபர்களாக கடமையாற்றிய 10 அருட்சகோதரிகளின் விபரங்கள் வருமாறு:

அருட்சகோதரி றெஜினா பாடசாலையின் ஆரம்பத்தில் இருந்து 1946 டிசெம்பர் வரை , அருட்சகோதரி மேரி அலஹெஹ்யூ 1947 இல் இருந்து 1949 வரை, அருட் சகோதரி மேரி சபினா 1949 இல் இருந்து 1952 வரை, அருட்சகோதரி மேரி எவறில்ட்டா 1952இல் இருந்து 1970 வரை, அருட்சகோதரி ஸ்ரனிஸ்லிஸ் மேரி 1970இர் இருந்து 1974 வரை, அருட்சகோதரி சிசிலியா மேரி 1975 இல் இருந்து 1981 வரை , அருட்சகோதரி மேரி பிடெலினா 1981 இல் இருந்து 1986ஆம் ஆண்டு வரை, அருட்சகோதரி மேரி கலிஸ்ரா 1986 இல் இருந்து 1990 வரை , அருட்சகோதரி மேரி எத்தல் வீவா 1990 இல் இருந்து 2000 வரை, அருட்சகோதரி மரிய றொசாறியோ 2000ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை.

க.பொ.த. உயர்தரப் பிரிவில் கலைப்பிரிவும் , வர்த்தகப்பிரிவும் செயற்படுகின்றது. உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் ஆண்டுதோறும் பல்கலைக்கழக அனுமதி யும், நுண்கலைத்துறை அனுமதியும் பெற்று பட்டம் பெறுவதோடு பாடத்துறை ரீதியாக தேசிய கல்வியியற் கல்லூரியில் அனுமதி பெற்றும் வருகின்றனர். கல்வி அடைவுமட்டத்தில் மட்டுமல்ல இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் கல்லூ ரி மாணவர்கள் உரியபெறுபேறுகளைப் பெற்று முன்னிலையில் நிற்கின்றனர். பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பழையமாணவர் சங்கம் ஆகியன கல்லூரி வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து உதவி வருகின்றன. கல்லூரியின் எதிர்கால வளர்ச்சி தொடர்பாக கல்லூரியின் அதிபர் அருட்சகோதரி மரிய றொசாறியோ கருத்துத் தெரிவிக்கையில்: "கல்லூரியில் கல்விபயிலும் மாணவர் எண்ணிக்கைக்கு ஏற்ப வகுப்பறைக்கட்டமைப்பும் கட்டடவசதியும் இல்லாமல் இருப்பது பெரும் குறைபாடாக இருக்கின்றது எனத் தெரிவித்ததோடு, 100 x 20 அடி பரப்பளவு கொண்ட மண்டபத்தில் 6 வகுப்புக்கள். ஏறத்தாழ 200 மாணவர்கள் வரையில் கல்வி பயில்வதாக தெரிவித்தார். அத்துடன் கோப்பாய் கல்விக்கோட்டத்தில் ஒரே ஒரு மகளிர் கல்லூரியாக இருக்கும் நிலையில்கூட மஹிந்த சிந்தனை 1000 பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தில் கல்லூரியை இணைத்துக்கொள்ளாமல் இருப்பது கல்லூரிச் சமூகத்திற்கு பெரும் ஏமாற்றமாய்ப் போய்விட்டது " என ஆதங்கத்தோடு தெரிவித்தார். காலச்சூழலுக்கும் மாணவர் எண்ணிக்கை மற்றும் கல்வி வாய்ப்புக்களுக்கும் ஏற்ற வகையில் கல்லூ ரிக்கான வளவசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதில் மாகாண கல்வி நிர்வாகம் கிராமிய மட்டத்தில் முன்னெடுப்புக்களை மேற்கொள்வது காலத்தின் கட்டாயமாகும்.

உதயன் - 18.11.2010, 23.11.2010, 02.12.2010




# 22 அத்தியார் அருணாசலத்தின் கல்விப்பணியில் உயர்ந்து நிற்கும் நீர்வேலி அத்தியார் இந்து

யாழ்.குடாநாட்டின் கல்வி வளர்ச்சியில் தனிமனித நிறுவனங்களாக இருந்து தமது உடல், பொருள், ஆவி அத்தனையையும் அர்ப்பணித்த உத்தமர்கள் வரிசையில் நீர்வேலி அத்தியார் அருணாசலம் என்பவருக்குத் தனியிடம் உண்டு. அவரின் அர்ப்பணிப்போடுகூடிய கல்விப்பணி முன்னெடுப்பின் வெளிப்பாடாக உயர்ந்து நிற்கின்றது நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி.

அத்தியார் இந்துக்கல்லூரி , யாழ்ப்பாணம் - பருத்தித்துறை நெடுஞ்சாலையில் நீர்வேலிக் கந்தசாமி கோயிலுக்கும் நீர்வேலி வாய்க்கால் தரவைப் பிள்ளையார் கோயிலுக்கும் இடையே வீதிக்குக் கிழக்குப்புறத்தில் 8 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட வளாகத்தில் அமைந்துள்ளது. 4 ஏக்கர் விஸ்தீரணத்தில் 400 மீற்றர் தூரம் கொண்ட எட்டு ஓடு பாதைகளை உள்ளடக்கிய விசாலமான விளையாட்டு மைதானம் இந்தப் பாடசாலையில் அமைந்துள்ளது. இந்த விளையாட்டு மைதானம் வலி.கிழக்கில் மட்டுமல்ல யாழ்.கல்வி வலயத்திலேயே மிக விஸ்தீரணம் கொண்ட தனித்துவ மானது.

நீர்வேலி ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர பண்டிதரும் ஸ்ரீ சிவப்பிரகாச பண்டிதரும் ஆரம்பித்து நிர்வகித்து தமிழ் இலக்கணம், புராண இதிகாசம் மற்றும் ஆங்கிலம் , சமஸ்கிருத வகுப்புக்களை நடத்தி வந்த குருகுல திண்ணைப்பள்ளி "பண்டிதர் பள்ளி" என்றும்

"நீர்வேலி சைவப்பிரகாச வித்தியாலயம்" என்றும் அழைக்கப்பட்டு வந்தது. ஸ்ரீ சிவப்பிரகாச பண்டிதர் மற்றும் ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர பண்டிதரும் இறைபதம் அடைந்த பின்னர் குருகுல திண்ணைப்பள்ளியையும் அதனோடு இணைந்த நிலத்தையும் பெரியார் அத்தியார் அருணாசலம் விலைக்கு வாங்கி பண்டிதர் பாடசாலையை விஸ்தரித்து இலவசமாக எல்லோரும் கல்வியைப் பெறுவதற்கான பெரும் பணியை ஆரம்பித்து வைத்தார்.

குறித்த காலப்பகுதியில் குடாநாட்டில் பாடசாலைகளை அமைத்துக் கல்விப் பணியை மேற்கொண்ட ஏனையவர்கள்போல் பெரும் நிலச்சொந்தக்காரராகவோ அல்லது பொருளாதார வளம் படைத்தவராகவோ அத்தியார் அருணாசலம் இல்லாத போதிலும் சமூகத்தின் எதிர்கால வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு தன்னால் இயன்றவரை கல்விப்பணியை ஆற்ற வேண்டும் என்ற தீர்க்கதரிசனம் மிக்க உயர் நோக்குடன் அவர் செய்த பெரும் பணி இன்றும் பசுமையுடன் சமூகத்தினால் நினைவு கூரப்படுகின்றது. பெரியார் அத்தியார் அருணாசலத்தின் உருவச்சிலை பாடசாலை முன்றலில் நிறுவப்பட்டுள்ளது. அத்துடன் அவரும் அவரது சந்ததியினரும் கல்லூரி வளர்ச்சியுடன் இணைந்த நிலையில் பெருமையுடன் போற்றி மதிக்கப்படுகின்றனர்.

அத்தியார் அருணாசலத்தின் பணியைப் பாராட்டி பிரிட்டன் அரசு 'முதலியார்' பட்டம் வழங்கிக் கௌரவித்திருப்பதோடு. பதக்கமும் பாராட்டுப் பத்திரமும் வழங்கிப் பெருமைப்படுத்தியுள்ளது. பெரியார் அத்தியார் அருணாசலத்தின் அரும்பணியால் 1929ஆம் ஆண்டு நீர்வேலி இந்து ஆங்கிலப் பாடசாலை என்ற பெயருடன் ஸ்தாபிதம் செய்யப்பட்ட இந்தக்கல்லூரி அத்தியார் அருணாசலத்தின் மறைவுக்குப் பின்ன அவரது பணி துலங்க நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி என்ற பெயருடன இன்றுவரை யாழ்.மாவட்டத்திலும் வலி.கிழக்கிலும் முன்னணிப் பாடசாலையாக விளங்குகின்றது.

கொத்தணிப் பாடசாலை அமைப்பு முறை நடைமுறையில் இருந்த காலப்பகுதியில் நீர்வேலிக் கொத்தணிப் பாடசாலையாக விளங்கிய இந்தக் கல்லூரி நீர்வேலி குடும்பப் பாடசாலை அமைப்பில் உள்ளடங்கும் ஒன்பது பாடசாலைகளின் தலைமைப் பாடசாலையாகவும் விளங்கி வருகின்றது. தரம் 1 முதல் தரம் 13 வரையான வகுப்புக்களைக் கொண்ட இந்தக் கல்லூரியில் தற்போது 958 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

"சமூகத்துக்குப் பொருத்தமான மனித வளத்தையும் உத்தம குடிகளையும் உருவாக்குதல்" என்பதை நோக்கு வாசகமாகக் கொண்டு உயர்ந்து நிற்கும் அத்தியார் இந்துக்கல்லூரி 2004 ஆம் ஆண்டை பவளவிழா ஆண்டாகப் பிரகடனம் செய்து 2004ஆம் ஆண்டு ஜனவரியில் பவளவிழாவைப் பெருவிழாவாகக் கொண்டாடியது. கல்லூரியின் தற்போதைய அதிபராக இ.குணநாதன் கடமையாற்றி

வருகின்றார். கல்லூரிச்சமூகத்தின் ஒன்றுபட்ட ஒத்துழைப்பினால் உயர்ந்த அத்தியார் இந்துக்கல்லூரி தனது 82ஆவது ஆண்டுக் கல்விப் பணியில் தனித்துவமான முன்னெடுப்புகளுடன் முன்னேறி வருகின்றது.

கல்லூரியைக் கடந்த காலங்களில் உயர் செந்நெறியில் வழிநடத்திய அதிபர்கள் வரிசையில்: எஸ்.ஜி.அருளானந்தம் 1929-1933, எஸ்.வெங்கடேஸ்வரன் 1933-1935, கே.பொன்னையா 1935-1936, எஸ்.ஆறுமுகம் 1936-1937, எஸ் நவரத்தினம் நெல்சன் 1937-1947, வி.சண்முகநாதன் 1948-1951, எஸ்.கி.சீவரத்தினம் 1952-1954, வி.ஜி.சம்பந்தன் 1954-1966, எஸ்.ஸ்ரீனிவாசன் 1966-1971, கே.இராஜரத்தினம் 1971-1974, கே.சொக்கலிங்கம் 1974, கே.நவரத்தினம் 1974-1976, எஸ்.சுவாமிநாதசர்மா 1976-1978, கே.இராசரத்தினம் 1979-1984, எஸ். சபாரத்தினம் 1984-1986, கே.சிவசுப்பிரமணியம் 1987-1988, கே.தங்கராசா 1988, ஏ.கனகசுந்தரம் 1988-1993, வி.கணேசராசா 1993-1996, எஸ்.விசுவலிங்கம் 1996-2002 வரை கடமையாற்றியுள்ளனர். இ.குணநாதன் 2002 இல் இருந்து கடமையாற்றி வருகின்றார்.

கல்லூரியின் ஆரம்பகாலம்தொட்டு இன்று வரை 20 பேர் அதிபர்களாக பதவி வகித்துள்ளனர். 21ஆவது அதிபராக இ.குணநாதன் பதவியேற்றுச் சிறப்புறக் கல்லூரி யின் நோக்கத்தைப் பாடசாலைச் சமூகத்தின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப நிறைவுசெய்து வருகின்றார். பாடசாலைகள் தனித்துவமான முறையில் வளரவேண்டுமானால் பழைய மாணவர்களின் நேரடிப் பங்களிப்பு அவசியமானது. பழைய மாணவர்கள் பாடசாலை என்ற சமூக நிறுவனத்தின் நிரந்தரமான வழிகாட்டிகளாக இருந்து உதவ வேண்டும். அத்தகைய கட்டமைப்போடு கூடிய பாடசாலைகள்தான் தற்பொழுது முன்னணிப் பாடசாலைகளாக மிளிர்வதைக் கண்டுகொள்ள முடிகின்றது. அந்த வகையில் அத்தியார் இந்துக் கல்லூரியின் வளர்ச்சியிலும் பழைய மாணவர் அமைப்புக்களும் தமது பங்களிப்பை நல்கி வருவதைக் கல்லூரி அதிபர் ஆண்டு தோறும் பரிசளிப்பு விழா அறிக்கையில் சுட்டிக்காட்டிப் பாராட்டி வருகின்றார்.

பாடசாலைப் பழைய மாணவர் சங்கம், நீர்வேலி நலன்புரிச்சங்கம் - லண்டன், அத்தியார் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், நலன் விரும்பிகள் சங்கம் - லண்டன், நீர்வேலி நற்பணிச்சங்கம் - சுவிஸ், நீர்வேலி நற்பணிச்சங்கம் - கனடா, கொழும்பு பழைய மாணவர் சங்கம், உள்ளூர் நலன் விரும்பிகள் அமைப்பு போன்றவை ஆண்டுதோறும் பெருமளவு நிதி உதவிகளை வழங்கி வருவதோடு, பாடசாலையின் தேவைகளையும் நிறைவுசெய்து வருகின்றனர். இதனை பாடசாலை அதிபர் , ஆசிரியர் சமூகம் பசுமையுடன் நினைவு கூர்ந்து பாராட்டுகின்றது. இரண்டு பரப்பு காணியில் ஸ்தாபிதம் செய்யப்பட்ட கல்விக்கூடம் இன்று 8 ஏக்கர் காணியைக் கொண்டுள்ளது. மாணவர்களின் கல்வி அபிவிருத்தியை ஊக்குவிப்பதை நோக்காக

கொண்டு தமது உறவினர்களின் நினைவாகவும் பல்வேறு ஞாபகார்த்தப் பரிசில் நிதியங்கள் நிறுவப்பட்டுள்ளன. நிரந்தர வைப்புத்தொகையின் வட்டியைப் பயன் படுத்திப் புலமைப்பரிசில் வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கல்லூரியின் வளர்ச்சிப்பாதையில் இராணுவ நடவடிக்கைகள், இடப்பெயர்வுகள் பெருமளவு பாதிப்பையும் ஈடுசெய்யமுடியாத இழப்புகளையும் ஏற்படுத்தியுள்ள போதிலும் பாடசாலைச் சமூகத்தின் இடையறாத , தொடர்ச்சியான ஒத்துழைப்பின் மூலம் ஆரோக்கியமான பணி முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆசிரியர் ஆளணிப் பற்றாக்குறை கல்லூரியின் கல்வி முன்னெடுப்புக்களில் தடங்கல்களை ஏற்படுத்திய போதிலும் இந்தக் கல்லூரி , கல்வி அடைவுமட்டத்திலும் இணைப் பாடவிதானச் செயற்பாடுகளிலும் உயர்ந்த அடைவு மட்டங்களைப் பெற்றுத் தனக்கே உரிய தனித்துவத்துடனும் சிறப்புடனும் செயற்படும் பாடசாலைகளின் வரிசையில் முன்னணியில் திகழ்கின்றது . இந்த உயர்நிலையை அடைவதற்கு பாடசாலைச்சமூகமும் அந்தக் கிராமமக்களும் முன்னின்று உழைக்கின்றனர்.

நீர்வேலியின் பாரம்பரியமான கல்வி முன்னெடுப்புக்களினாலும் கல்லூரிச் சமூகத்தின் ஒன்றிணைந்த ஒத்துழைப்பினாலும் உயர்ந்து வரும் அத்தியார் இந்துக்கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நிறுவுநர் முதலியார் அத்தியார் அருணாச்சலம் அமரத்துவம் அடைந்த செப்ரெம்பர் 22 ஆம் திகதி ஆண்டுதோறும் நியமப்படுத்தப்பட்ட முறையில் கொண்டாடப்படுகின்றது.

'நிறுவுநர் தினமும் பரிசில் நாளும்' ஆண்டுதோறும் ஒக்ரோபரில் தொடங்கி அடுத்த ஆண்டு செப்ரெம்பர் வரையுள்ள 12 மாத காலப்பகுதியை கல்வியாண்டாகக் கொண்டாடப்படும் அதேவேளையில் குறித்த காலப்பகுதியில் முழுமையான செயற்பாடுகள் அதிபரின் அறிக்கை மூலம் சமூகத்துக்கு முழுமையாக வெளிப்படுத் தப்படுகின்றன.

அதிபர் அறிக்கை நிறுவுனருக்கு சமர்ப்பணம் செய்வதன் மூலமும் நிறுவுநர் நினைவுப் பேருரை மூலமும் நிறுவுநர் பசுமையுடன் நினைவு கூரப்படுகின்றார்.

நிறுவுநரின் அஸ்தி பாடசாலை வளவில் சமாதி செய்யப்பட்டு, அதன் மேல் அறுகோண மண்டபம் அமைக்கப்பட்டிருப்பதோடு வழிபாட்டுக்குரிய இடமாகவும் புனிதப்படுத்தப்பட்டுள்ளது.

கல்லூரிச் சமூகம் கல்லூரியுடன் ஒன்றிணைந்து செயற்படுகின்றது என்பதற்கு எடுத்துக்காட்டாக 24 பொதுப்பரிசில் நிதியங்கள் நிறுவப்பட்டிருப்பதும் அவைக்குரிய நிதியும் குடும்ப உறவினர்களின் நினைவாக உறவினர்களால் வைப்புச்செய்யப்பட் டுள்ளது. 11.200 கனடா டொலர் நிதி உதவியும் மற்றும் இலங்கை நாணயத்தில் 575.000ரூபாவும் 2010 கல்வியாண்டில் பழைய மாணவர்களால் கல்லூரிக்கு

உதவித்தொகையாக வழங்கப்பட்டுள்ளது. நீர்வேலி நலன்புரிச் சங்கம் (கனடா) ஆண்டுதோறும் கல்லூரியின் மெய்வன்மைப் போட்டிக்கு 50 ஆயிரம் ரூபாவும் பரிசளிப்பு விழாவுக்கு 50 ஆயிரம் ரூபாவும் வழங்கி வருவது பரிசில் நாள் அறிக்கை யில் அதிபரினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.


மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளையும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளையும் ஆரோக்கியமான முறையில் முன்னெடுப்பதற்கு வசதியாக சிவநெறி மன்றம், கணித விஞ்ஞான மன்றம், சமூகக்கல்வி மன்றம், வணிக மன்றம், கவின்கலை மன்றம், உயர்தர மாணவர் மன்றம், ஆங்கில மன்றம், தொழில்நுட்பமன்றம், சுகாதார மன்றம், கணினிமன்றம், சாரணியம், மக்கள் நலன்புரி சங்கங்களும் அதன் படையணிகளும் வங்கிச்சேவை அமைப்புக்கள் போன்றனவும் திட்டமிட்ட செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன. தமிழ்த்தினப்போட்டி, மெய்வன்மைப்போட்டி, ஆங்கிலதினப்போட்டி உள்ளிட்ட அனைத்துப் போட்டிகளிலும் கோட்ட மட்டம், வலயமட்டம், மாவட்ட மட்டங்களில் குறிப்பிடத்தக்களவு வெற்றிகளை பெற்று வருவதோடு, மாகாண மற்றும் தேசிய மட்டத்திலும் சில சாதனைகளை நாட்டியுள்ளது.

யாழ்.கல்வி வலயத்திலே மிக விஸ்தீரணமான விளையாட்டு மைதானத்தைக் கொண்டதும் மாவட்ட நிலை போட்டிகள் பலவற்றை நடத்துவதற்கு பயன்படுத்தும் மைதானமாகவும் விளங்குகின்ற கல்லூரிக்கு விளையாட்டுத்துறைக்கான ஆசிரியர் நியமிக்கப்படவில்லை.எனவே பாடத்துறை ரீதியிலான ஆசிரியர் பற்றாக்குறை உடனடியாக நிவர்த்தி செய்யப்படவேண்டும் என கல்லூரிச் சமூகம் யாழ்.கல்வி வலயப் பணிப்பாளரிடம் கோரியுள்ளது.

கிராமப்புறம் சார்ந்த பாடசாலைகளில் காணப்படும் ஆசிரியர் ஆளணிப் பற்றாக்குறைகளும் வள வசதியீனங்களும் பொருத்தமான முறையில் நிவர்த்தி செய்யப்படவேண்டும். அவ்வாறு நிவர்த்தி செய்யப்பட்டால் கிராமத்திலிருந்து நகரம் நோக்கிய மாணவர் நகர்வை குறைக்கமுடியும். அதுமட்டுமல்ல கிராமப்புற பாடசாலைகள் தனித்துவத்துடன் கல்வி அடைவு மட்டத்திலும் பெறுபேறுகளிலும் நகரப் பாடசாலைகளுக்கு சமமான முறையில் துலங்கமுடியும்.

அந்த வகையில் அத்தியார் இந்து தனது பெயரை மேலும் நிலை நிறுத்தவும் நிறுவுநர் அத்தியார் அருணாசலம் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட கல்விப்பணியை மங்கவிடாது பாதுகாப்பதிலும் முனைப்புடன் செயற்படுகின்றது. அதற்கேற்ப வளர்ச்சியையும் புகழையும் பெற்றுத்திகழும்.

உதயன் - 28.04.2011, 05.05.2011, 12.05.2011



# 23 தமிழ் பாரம்பரியத்தோடு வளர்ந்து வரும் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்

**1952**ஆம் ஆண்டு விஜயதசமி அன்று வித்தியா ஆரம்பத்துடன் ஆவரங்கால் மண்கட்டியான் கலட்டி வளவில் ஆரம்பமாகியது. ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம். இது ஊர்ப் பொதுமக்களின் ஒத்துழைப்போடு வளர்ச்சியடைந்து கோப்பாய்க் கல்விக் கோட்டத்தில் தரம் இரண்டு பாடசாலைகளில் முன்னணியில் உள்ளது.

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் ஆவரங்கால் சிவன் கோயிலுக்கு (நடராஜ இராமலிங்கேஸ்வரம்) மேற்குப்புறமாகச் செல்லும் சிவன் வீதியில் 200 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. ஆவரங்கால் கிராமத்தில் சைவமும் தமிழும் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற உயர்நோக்கோடு நாவலரின் வழியைப் பின்பற்றி சைவத்தமிழ் பாடசாலை ஒன்றை சடையர் உபாத்தியார் என்பவர் பிரதான வீதியில் ஆவரங்கால் சந்திக்கு அண்மையில் ஆரம்பித்து நடத்தி வந்ததாகவும் அவரால் அதனைத் தொடர்ந்து நடத்த முடியாத நிலையை அறிந்து மெதடிஸ்த மிஷனரிமார் விலைக்கு வாங்கி மெதடிஸ்த மிஷன் பாடசாலை என்ற பெயரில் இயங்கி வந்தது. அதன் பெயர் பிற்காலத்தில் ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

மெதடிஸ்த மிஷன் பாடசாலை செயற்படத் தொடங்கிய காலச்சூழல் மதமாற்றத் துக்கும் சைவத்தமிழ் பாரம்பரியத்துக்கும் மாறுபட்ட நிலையை ஏற்படுத்திவிடும் என்ற அச்சம் பெருமளவில் ஏற்படத் தொடங்கியது. ஆவரங்கால் மக்கள் மத்தியில் இந்த குழப்பம் காரணமான களநிலையில் சைவத்தமிழ் பாடசாலை ஒன்று நிறுவப்பட வேண்டும் என்ற எண்ணம் வலுவடையத் தொடங்கியது. அந்த வகையில் உருவாகியது இந்தப் பாடசாலை. அந்தக் காலப்பகுதியில் சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினரும் ஆவரங்கால் கிராமத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டவருமான சட்டத்தரணி மாப்பாணப்பிள்ளை சுப்பிரமணியம் குறித்த இடத்தில் பாடசாலை ஆரம்பிப்பதற்கு காணி வழங்குமாறு கோரி வந்தபோது 1935 ஆம் ஆண்டு ஒரு பகுதி நிலம் தர்மசாதனம் செய்யப்பட்டது. அதனை சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் சார்பாக சட்டத்தரணி பொறுப்பேற்றுக்கொண்டார்.

தற்போதைய பாடசாலை ஆரம்பிப்பதற்கு முந்திய காலப்பகுதியில் தீராவளவு சின்னத்தம்பி என்பவர் ஒரு திண்ணைப் பள்ளியை மண்கட்டியான்கலட்டி வளவில் ஆரம்பித்து நடத்தி வந்ததாகவும் அந்த இடத்தில் அமைந்திருந்த குளம் மண்கட்டியான் குளம் என்று அழைக்கப்பட்டது. அந்த இடத்தின் பெயரோடு தொடர்புபடுத்தி மண்கட்டியான் பாடசாலை என்று நடராஜ இராமலிங்க வித்தியா லயத்தை முதியவர்கள் அழைப்பதுண்டு. தற்பொழுதும் அது பேச்சுவழக்கில் கையாளப்படுவதுண்டு.

1952ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் ஆரம்பிக்கப்பட்ட ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தின் பெயர் ஆவரங்கால் கிராமத்தில் பிரதான ஆலயமான நடராஜ இராமலிங்கேஸ்வரனின் பெயரில் நிறுவப்பட்டுள்ளது. பாடசாலையில் ஆரம்பத்தில் 60 மாணவர்கள் இணைந்து கொண்டனர். ஆரம்பத்தில் நான்கு வகுப்புக்கள் (நான்காம் வகுப்பு வரை) செயற்பட்டன. இரண்டு ஆசிரியர்கள் பணியாற்றினர்.

1953ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி உதவி நன்கொடை பெறும் கனிஷ்ட இடைநிலைப் பாடசாலையாகப் பதிவுசெய்யப்பட்டது. பாடசாலையின் முதலாவது அதிபராக கோப்பாயைச் சேர்ந்த வை. கந்தையா 1953ஆம் ஆண்டு மே மாதம் பதவிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். திருமதி. எஸ். சிவபாக்கியம், செல்வி. வீ. பொன்னு, செல்வி. எஸ். பொன்னு மாயில், செல்வி. கே. அங்கயற்கன்னி, எஸ்.ஆனந்தவடிவேல் வி.ஆறுமுகம், திருமதி. கு. சிவபாக்கியம், பி.இராசரத்தினம், ஏ.குமரகுரு ஆகியோர் ஆசிரியர்களாக பணியாற்றினர். வை. கந்தையா 17 வருடங்கள் தொடர்ந்து அதிபராகக் கடமையாற்றிய காலப் பகுதியில் பாடசாலையின் வளர்ச்சிக்கான அடித்தளம் உறுதியான நிலையில் இடப்பட்டது.

இந்த வகையில் கட்டடங்களினாலும் பாடசாலை தர நிலையிலும் உயர்வு கண்டதோடு மாணவர் தொகையும் அதிகரிக்கத் தொடங்கியது. படிப்படியாக வகுப்புக்களும் அதிகரிக்கப்பட்டு தரம் 9 வகுப்புக்களைக் கொண்டதாக வளர்ச்சி கண்டது.

1962ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி அரச பாடசாலையாக பொறுப்பேற்கப்பட்டது. அரசாங்கம் பொறுப்பேற்கும்போது ஆவரங்கால் நடராஜ இராமலிங்க இந்து தமிழ்க் கலவன் பாடசாலை எனப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. முதலாவது அதிபராகப் பொறுப்பேற்று பாடசாலையின் வளர்ச்சிக்கு வை. கந்தையா ஆற்றிய அளப்பெரும் பணி பாடசாலைச் சமூகத்தினால் பசுமையுடன் நினைவு கூரப்படுகின்றது.

அச்சுவேலி புத்தூர் பகுதியில் செயற்பட்ட பிரபல பாடசாலைகளுக்கு இடையில் ஆவரங்காலில் ஆரம்பிக்கப்படும் பாடசாலையை பதிவுசெய்வதிலும் உரிய முறையில் வளர்த்தெடுப்பதிலும் பல்வேறு இடர்பாடுகள் நெருக்கடிகள் ஏற்பட்ட போதிலும் குறித்த பாடசாலைச் சமூகம் பாடசாலையின் வளர்ச்சிக்கு தங்களால் இயன்றளவில் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கி வந்துள்ளது.

ஆரம்பத்தில் சைவ வித்தியா விருத்திச் சங்கம் பாடசாலையை பொறுப்பேற்பதற்கு பொருத்தமான காணி இல்லை என தயங்கிய நிலையில் இருந்த போதிலும் தற்பொழுது நான்கு ஏக்கர் வளாகத்தில் பொருத்தமான கட்டமைப்புக்களுடனும் வள வசதிகளுடனும் செயற்படுகின்றது.

பாடசாலைச் சமூகம் அக்கறை கொண்டால்தான் பாடசாலைகள் மேன்நிலை பெற முடியும் என்பதற்கு முன்னுதாரணமாக ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம் விளங்குகின்றது. தற்பொழுது அதிபராக இலங்கை அதிபர் சேவை தரம் 2:I ஐ சேர்ந்த அ. அருள்நந்தி சிவம் பணியாற்றி வருகின்றார்.

கோப்பாய் கல்விக் கோட்டத்தில் தரம் 2 பாடசாலைகளில் கல்வி மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் முன்னணியில் திகழும் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தில் இந்த வருடம் 638 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். தரம் 01-05 வரையான வகுப்புக்களில் (ஆரம்பப்பிரிவில்) 198 மாணவர்களும் தரம் 6-9 வரையான வகுப்புகளில் 274 மாணவர்களும் தரம் 10-11 வரையான வகுப்புகளில் 166 மாணவர்களும் கல்வி பயில்கின்றனர். 1952ஆம் ஆண்டு ஆரம்பமான பாடசாலையின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் மணிவிழா ஆண்டில் கால்பதித்துள்ளன. பாடசாலைச் சமூகம் மணிவிழா கொண்டாடுவதற்கான

முன்னேற்பாடுகளில் முனைப்புக் கொண்டுள்ளது. 2002ஆம் ஆண்டு பொன்விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பொன்விழா மலரும் வெளியிடப்பட்டுள்ளது.

பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து கல்வி வளர்ச்சியும் வள வசதியும் ஆண்டுதோறும் வளர்ச்சியடைந்து தற்பொழுது ஆசிரியர் ஆளணி மற்றும் கல்வி சாரா ஊழியர் ஆளணிப் பற்றாக்குறை தவிர ஏனைய துறைகளில் உயர் நிலையில் உள்ளன. பாடசாலை வளர்ச்சியில் பாடசாலைச் சமூகமும் புலம்பெயர் பழைய மாணவர்களும் இடையறாத் தொடர்ச்சி நிலையில் இருந்து ஆக்கபூர்வமான பங்களிப்பினை வழங்கி வருகின்றனர். இந்த வகையில் காலத்துக்கு காலம் பாடசாலைக்கான காணிவசதியை ஏற்படுத்திக் கொடுப்பதிலும் கட்டட வசதிகளையும் கணினி வசதிகளையும் ஏனைய வளவசதிகளையும் தேவையை அறிந்து வழங்கி வந்ததோடு எதிர்காலத்திலும் வழங்குவதற்கு உரிய ஏற்பாடுகளை மேற்கொண் டுள்ளனர்.

பாடசாலையுடன் இணைந்த நிலையில் விளையாட்டு மைதானம் இல்லாத குறையை போக்கும் வகையில் 1999ஆம் ஆண்டு காலப்பகுதியில் பழைய மாணவர் சங்கத்தின் முயற்சியால் 2 ஏக்கர் நிலம் விளையாட்டு மைதானத்துக்கென கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலம் பாடசாலையுடன் இணைந்த நிலையில் இருப்பதால் பாடசாலையின் விளையாட்டு நிகழ்வுகள் மற்றும் கோட்ட / வலயமட்ட பெரு விளையாட்டுக்களும் இந்த மைதானத்தில் நடைபெறுவது பாடசாலைக்குப் பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளது. அரசு பாடசாலைக்கு கணினித் தொகுதியை வழங்குவதற்கு முன்னரே புலம்பெயர் பழைய மாணவர்கள் பாடசாலைக்கான கணினித் தொகுதியையும் அதற்கான கட்டட வசதியையும் ஏற்படுத்திக் கொடுத்து மாணவர்களின் கணினிக் கல்விக்கு கைகொடுத்து உதவியுள்ளனர்.

தற்போதைய அதிபர் அ.அருள்நந்திசிவம் மேற்கொண்ட பெருமுயற்சியினால் நிக்கொட் நிறுவனத்தின் நிதி உதவியுடன் 110x25 12 வகுப்புக்களை வசதியான முறையில் நடத்தக் கூடிய மாடிக்கட்டடம் நிறுவப்பட்டுள்ளது. வடக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ பாடசாலைக்கு பயணம் செய்ததன் நினைவாக 40x25 அளவு மாடிக் கட்டடம் தொடர்மாடியாக அமைக்கப்பட்டுள்ளது. இதில் விஞ்ஞான ஆய்வு கூடம் அமைந்துள்ளது.

பழைய மாணவர் சங்கம் ஒலிபெருக்கிச் சாதனத் தொகுதியை அன்பளிப்புச் செய்துள்ளது. லண்டன் பழையமாணவர் சங்கம் பல்ஊடக எறிகருவியையும் (மல்டிமீடியா) போட்டோஸ்ரட் இயந்திரத்தையும் கொள்வனவுசெய்து அன்பளிப்பாக

வழங்கியுள்ளது. பண்டிதர் சுப்பிரமணியம் ஞாபகார்த்தமாக ஆண்டுதோறும் 40 ஆயிரம் ரூபாவை பரிசளிப்பு நிதியத்துக்கு வழங்கி உயர் பெறுபேறு பெற்ற மாணவர்களை ஊக்குவித்து வருகின்றனர் குடும்பத்தினர். அத்துடன் சிவசக்தி மணிமண்டப நிதியமும் கல்வி ஊக்குவிப்புக்கு கணிசமான அளவு நிதி உதவியை வழங்கி வருகின்றது.

பரிசளிப்பு விழா நிதியத்துக்கு பழைய மாணவர்களும், ஆசிரியர்களும் கணிசமான தொகையை ரொக்கமாக தமது உறவினர்களின் ஞாபகார்த்தமாக வைப்புச்செய்துள்ளனர். கோப்பாய்க் கல்விக் கோட்டத்தில் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் முதன் நிலையில் இருக்கும் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தின் கரப்பந்தாட்ட அணியும் வலைப்பந்தாட்ட அணியும் கோட்டமட்டம், வலயமட்டம், மாவட்டமட்டம், வடக்குமாகாண மட்டத்தில் வெற்றிபெறுவதோடு தேசிய மட்ட போட்டிகளிலும் கலந்துகொண்டு வருகின்றது.

இந்த வகையில் கரப்பந்தாட்டத்தில் 17 வயது ஆண்கள், 15 வயது ஆண்கள், 17 வயது பெண்கள், 15 வயது பெண்களின் அணியும் வலைப்பந்தாட்டத்தில் 15 வயது பெண்கள், 17 வயது பெண்கள் அணி தொடர்ச்சியாக 2005ஆம் ஆண்டில் இருந்து முன்னணியில் இருந்து வருகின்றன.

இந்தவருடம் தேசத்தின் மகுடம் நிறைவை முன்னிட்டு பாடசாலை மாணவர் அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் வடக்குமாகாண மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்தில் நடைபெற்ற போட்டிகளி கலந்து கொண்டு வடக்கு மாகாணத்துக்கே பெருமை சேர்த்தது.

விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியராக நடராசா கஜேந்திரன் பணிபுரிந்து வருகின்றார். பாடசாலையில் தேசிய மாணவர் படையணியும் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது. பாடசாலையின் தற்போதைய அதிபர் அ.அருள்நந்தி சிவம் - இலங்கை அதிபர் சேவை தரம் 2 :l இல் 07.07.2004ஆம் ஆண்டு தொடக்கம் சிறப்பான முறையில் கடமையாற்றி வருகின்றார். கடந்த காலங்களில் அதிபர்களாகக் கடமையாற்றி பாடசாலையின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றியவர்கள் வி.கந்தையா, ந.க.செல்லத்துரை, சி.சிவானந்தன், பு.கதிரித்தம்பி, சு.முத்துக்குமாரசுவாமி, வே.பாலசுப்பிரமணியம் ஆகியோரின் சேவை பாடசாலைச் சமூகத்தினால் நன்றி யறிதலுடன் நினைவு கூரப்படுகின்றது.

உதயன்-01.03.2012, 07.03.2012



# 24 100 ஆண்டுகளைக் கடந்து கல்விப்பணி ஆற்றும் சிறுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை.

கிறிஸ்தவ மிஷனரிமார் கல்வியோடு சமயத்தையும் போதித்து கிராமிய மட்டத்தில் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பிய காலப்பகுதியில் சைவத்தமிழ் பாரம்பரியத்தோடு கல்வியை போதித்ததோடு வலிகாமம் கிழக்கில் காலத்தால் மூத்த பாடசாலைகளில் ஒன்றாக விளங்குவது சிறுப்பிட்டி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை.

மூத்த பிரசைகளினால் "சிறுப்பிட்டி சைவ வித்தியாசாலை" என இன்றும் பெருமையோடு அழைக்கப்படும் சிறுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை 105 ஆண்டுகளை நிறைவு செய்து தனது கல்விப்பணியைத் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றது. இதன் ஆரம்பகாலப் பெயர் 'சிறுப்பிட்டி தெற்கு சைவ வித்தியாலயம்" என்பதாகும்.

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான நெடுஞ்சாலையில் சிறுப்பிட்டி தெற்கு சனசமூக நிலையத்துக்கு அருகில் பிரதான வீதிக்கு மேற்குப்புறம் வீதியோரமாக அமைந்துள்ளது. 1907 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் நாள் நிறுவனப்படுத்தப்பட்ட நிலையில் கல்விக்கான கால்கோள் முன்னெடுக்கப்பட்டதாகவும் ஆரம்பத்தில் கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்ட கட்டடம் அழிவடைந்த நிலையில் பாடசாலைக் கட்டடத்துக்கு அருகில் இன்றும் காணப்படுவதாக கூறப்படுகின்றது.

குறித்த காலப்பகுதியில் சைவத்தமிழ் கல்வியை முன்னெடுப்பதற்கு நிறுவனப் படுத்தப்பட்ட கல்வி அமைப்பு சிறுப்பிட்டியில் ஸ்தாபிதம் செய்யப்படவேண்டும் என்ற காலத்தின் தேவையை உணர்ந்து ஊர்ப்பிரமுகர்கள் ஒன்றுகூடி முன்வைத்த கருத்தை செயற்படுத்துவதில் ஊரே ஒன்றுபட்டு உழைத்தது. குறித்த காலப்பகுதி யில் சிறுப்பிட்டி செல்லப்பிள்ளையார் கோயில்மடத்தில் செயற்பட்ட திண்ணைப் பள்ளியில் கல்வி கற்ற மாணவர்களையும் இணைத்து குறித்த தினத்தில் வித்தியா ரம்பம் நடைபெற்றதாகவும் ஆரம்பதினத்தில் 14 மாணவர்கள் கற்றல் செயற்பாடு களில் இணைந்து கொண்டதாகவும்: ஒருவர் தலைமை ஆசிரியராகவும், ஆசிரிய ராகவும் கல்விச்செயற்பாடுகளை மேற்கொண்டதாகவும் செவிவழிக் கூற்றாக முன்வைக்கப்படுகின்றது. இது பாடசாலையின் வரலாற்றுக் குறிப்பிலும் சேர்க்கப் பட்டுள்ளது.

மேற்படி பாடசாலை குறித்த இடத்தில் ஸ்தாபிதம் செய்து பின்னர் அதனை நிறுவனப்படுத்தப்பட்ட கல்விக்கூடமாக அதற்குரிய காணி மற்றும் கட்டட வசதியை ஏற்படுத்துவதில் முன்நின்று உழைத்தவர்கள் என்ற வகையில் கு.கனகசபை, சுவாமிநாதன், வல்லிபுரம், அருணாசலம், பொன்னையா, கைலாசபிள்ளை, கதிர்காமர், உள்ளிட்ட ஊர்பிரமுகர்கள் பலர் முன்நின்று உழைத்தனர். இவர்களில் சிலர் குறித்த காலப்பகுதியில் ஆசிரியர்களாகவும் , முகாமையாளர்களாகவும் இருந்து பாடசாலையின் ஆரம்பகால வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து பாடுபட்டனர் எனக் கூறப்படுகின்றது.

1907இல் இருந்து திட்டமிட்ட முறையில் தனது கல்விச்செயற்பாடுகளை முன்னெடுத்து வந்த பாடசாலை இடையிடையே எதிர்பாராத நிதி நெருக்கடியை சந்தித்தோடு சில முரண்பாடுகளையும் எதிர்கொள்ளவேண்டி ஏற்பட்டது. இந்த வகையில் பாடசாலை கட்டடம் தீ வைப்புக்கும் உள்ளாகியது. 1930ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏற்பட்ட எதிர்பாராத நெருக்கடி நிலையினால் பாடசாலைக்கு வழங்கப்பட்டு வந்த மானியம் இடைநிறுத்தப்பட்டது. இந்த நிலையில் 1934ஆம் ஆண்டு பாடசாலை இந்து பரிபாலன சபையின் மேலாளர் இந்து போட் இராசரத்தினம் அவர்களிடம் கையளிக்கப்பட்டது.

கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி , அச்சுவேலி கிறிஸ்தவக்கல்லூரி என்பனவற்றுக்கு இடையே மிகவும் ஸ்திரமான நிலையில் செயற்பட்டு சைவத்தமிழ் பாரம்பரியத்தோடு கல்விப்பணியை மேற்கொண்டு வந்ததோடு தனித்துவமான நிலையில் செயற்பட்டு வந்த சிறுப்பிட்டி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை 1972 ஆண்டு வரை சிரேஷ்ட தராதரப்பத்திர பரீட்சைக்கான வகுப்பு வரை (S.S.C) கொண்ட கல்விக்கூடமாக

செயற்பட்டது. இங்கு கல்விகற்ற பழைய மாணவர்கள் வைத்தியராக, கணக்காளராக பொறியியலாளராக உயர்கல்வி பெறுவதற்கு உரிய அடிப்படைக்கல்வி அறிவைப் பெற்றதோடு பல்வேறு உயர் பதவிகளையும் வகித்தனர். சிறுப்பிட்டி, புத்தூர், நீர்வேலி உள்ளடங்கலாக உள்ள பகுதிகளில் உயர்கல்வி கற்றவர்கள் மற்றும் உயர்பதவி வகிப்பவர்கள் மற்றும் ஓய்வுநிலைப்பதவியாளர்கள் இங்கு கல்வி கற்ற பழைய மாணவர்கள் என்பதை பெருமையோடு கூறி மகிழ்கின்றனர்.

இடைக்காலத்தில் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி, புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி என்பனவற்றின் தோற்றமும் வளர்ச்சியும் சிறுப்பிட்டி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலை வளர்ச்சியில் சில தடங்கல்களை ஏற்படுத்தியதோடு மாணவர் எண்ணிக்கையிலும் வீழ்ச்சியை ஏற்படுத்தியது. மேற்படி பாடசாலைக்கு வடக்கேயும் , தெற்கேயும் குறிப்பிட்ட தூர இடைவெளியில் வண்-ஏ.பி தர நிலையில் இரண்டு கல்லூரிகளும் சகல வளவசதிகளுடனும் மேல் நிலை பெற்றிருந்தமையினால் சிறுப்பிட்டி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை தரம் 5 வரையான வகுப்புக்களை கொண்ட ஆரம்பப் பாடசாலையாக தரம் குறைக்கப்பட்டது. க.பொ.த.சாதாரண தரம் வரையான வகுப்புக்கள் இருந்த காலப்பகுதியில் 300 இற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்விகற்றனர். ஆரம்பப் பாடசாலையாகச் செயற்படத் தொடங்கிய நிலையில் மாணவர் எண்ணிக்கை 145 ஆகக் குறைவடைந்தது. சமகாலச்சூழலில் ஆரம்பப் பாடசாலை களில் குறிப்பிடத்தக்களவு கல்வி அடைவு மட்டத்தில் முன்னணியில் உள்ளது. சிறுப்பிட்டி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையின் தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் இதற்குச் சான்றாக உள்ளன. தரம் 5 புலமைப்பரிசில் பெறுபேற்றை மையமாக வைத்து தரம் ஒன்றில் மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கு பெற்றோர் விருப்பத்தோடு முன் வருகின்றனர். இந்த வருடம் 30 மாணவர்கள் வரையில் தரம் ஒன்று வகுப்பில் அனுமதி பெற்றுள்ளனர். பாடசாலையின் அதிபராக திருமதி.மாலா மகேந்திரன் பணியாற்றுகின்றார்.

கோப்பாய் கல்விக்கோட்டத்தில் உள்ள 15இற்கு மேற்பட்ட ஆரம்பப் பாடசாலை களில் (தரம் 1-5 வரை) கல்வி அடைவுமட்டத்தில் உயர்நிலையில் காணப்படும் சிறுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை ஆண்டுதோறும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் மூலம் இதனை நிரூபணம் செய்து வருகின்றது. இந்த வகையில் மேற்படி பாடசாலைச் சூழலில் வசிக்கும் பெற்றோர் தமது பிள்ளைகளை விருப்பத்தோடு பாடசாலையில் சேர்த்து வருவதுடன் பாடசாலைக்கு தேவையான வள வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதிலும் ஆர்வத்தோடு ஈடுபட்டு வருகின்றனர்.

பாடசாலையின் விளையாட்டு மைதானத்துக்கும் மற்றும் கட்டட வசதிகளை ஏற்படுத்துவதற்கும் காணப்பட்ட இடவசதிக் குறைபாட்டை உணர்ந்து அதற்கான நிலத்தை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

இந்த வகையில் கடந்த வருடம் க.தர்மலிங்கம் 5 பரப்புக் காணியை பாடசாலைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார். பாடசாலை தற்பொழுது 16 பரப்பு நிலத்தைக் கொண்டதாக விளங்குகின்றது. பெற்றோர் நலன்விரும்பிகளின் உதவியுடன் அண்மையில் 170 அடி நீளமான மதில் அமைக்கப்பட்டுள்ளது. சிறுவர் பூங்கா, கலர் பிறின்ரர், மின்சார உபகரணங்கள், கணினி அறை, வெள்ளிப்பதக்கங்கள் , கேடயங்கள், மாணவர்களுக்கான காலணி மற்றும் புத்தகப்பைகள், பான்ட் வாத்தியக்கருவிகள் ஒலிபெருக்கி சாதனங்கள் என்பன பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் மற்றும் பெற்றோர்களின் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

"பாடசாலையின் வளர்ச்சியில் பாடசாலைச் சமூகம் மற்றும் புலம்பெயர் உறவுகள் காட்டிவரும் அக்கறையும் , ஆதரவும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து வருவதோடு கல்வி அடைவுமட்டத்திலும் மேல்நிலை பெற்றிருப்பதோடு தரம் 5 புலமைப்பரிசில் பெறுபேற்றிலும் கூடியளவு மாணவர்கள் சித்தியடைவதற்கு வகை செய்து வருகின்றது" என பாடசாலையின் தற்போதைய கடமை நிறைவேற்று அதிபர் திருமதி மாலா மகேந்திரன் தெரிவித்தார்.

பாடசாலைக்கான புதிய மாடிக்கட்டடத்தின் கீழ்த்தளம் 110 X 25 அடி ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் நிதி உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டு கடந்த வருடம் (16.11.2011) திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேற்படி கட்டடத்தொகுதியில் பாடசாலையின் வகுப்புகளும் அதிபரின் அலுவலகமும் செயற்படுகின்றன.

பாடசாலையின் வளர்ச்சியில் ஆரம்ப காலத்திலிருந்து இன்றுவரை கடமையாற்றிய அதிபர்கள் அர்ப்பணிப்போடு செயற்பட்டு வந்திருக்கின்றனர். 1907 ஆம் ஆண்டு தனது கல்விச் செயற்பாடுகளை ஆரம்பித்த பாடசாலையின் ஆரம்ப காலத்தில் கு.கனகசபை மற்றும் சுவாமிநாதன் ஆகியோர் அதிபர்களாகக் கடமையாற்றினர் எனக் கூறப்படுகின்றது. 1935ஆம் ஆண்டில் இருந்து அதிபர்களின் பெயர் விவரங்களை ஆவணரீதியாக அறிந்து கொள்ள முடிகின்றது. வ.மாணிக்கம் - 1935-1968, ம.கந்தையா - 1968-1968, சி.நா.கந்தையா - 1968-1970, ம.கந்தையா - 1970-1972, எம்.சுப்பையா -1972-1975, அ.வை.முத்துச்சாமி - 1975-1975, சி.சின்னராசா -1975-1978,சு.சிவசிதம்பரம் - 1978-1980, அ.வை.முத்துச்சாமி - 1980-1981, சு.சிவசிதம்பரம் - 1981-1982, திருமதி.மு.தில்லைநாதன் 1982-1982, வி.ஸ்ரீஜெகரட்சகமூர்த்தி - 1982-1992, ச.விநாயகமூர்த்தி - 1992-1996, க.சி. பகவத்சிங் - 1996-2001, தி.சோமசேகரம் - 2001-2003, இ.தேவராசா - 2003-2012, எஸ்.பகீரதன் - 2012-2012, திருமதி மாலா மகேந்திரன் - 2012.03.14 இல் இருந்து கடமை நிறைவேற்று அதிபராக கடமையாற்றி வருகின்றார். பாடசாலையில்

தற்போது அதிபரோடு ஆறு ஆசிரியைகள் கடமையாற்றுகின்றனர். ஐந்து வகுப்புகளிலும் 137 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம் , அபிவிருத்திச்சபை மற்றும் பழைய மாணவர் சங்கம் என்பன உரிய முறையில் செயற்பட்டு வருவதோடு பாடசாலையின் தேவைகளை இனங்கண்டு தங்களால் இயன்றளவு நிறைவுசெய்து வருகின்றன.

கோட்டமட்ட, வலயமட்ட, மாகாணமட்ட விளையாட்டுப்போட்டி, தமிழ்த்தினப் போட்டி மற்றும் அழகியல் போட்டிகளில் மாணவர்கள் கலந்துகொண்டு வெற்றி பெற்று வருகின்றனர். 2010ஆம் ஆண்டு புத்தாக்கப் போட்டியில் வெற்றிபெற்று சித்திரவடிவேல் பிரதாபன் தேசிய மட்டத்தில் ஜனாதிபதி விருதினைப் பெற்றுள்ளார். 2011ஆம் ஆண்டு கோலம் போடுதல் போட்டியில் சத்தியதாஸ் சிவப்பிரியன் வடக்கு மாகாண மட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளார். 2002ஆம் ஆண்டு பாடசாலையில் இருந்து புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி புலமைப்பரிசில் பெறுவதற்கு தகுதி பெற்ற ஐந்து மாணவர்களில் இரண்டுபேர் (ஸ்ரீஸ்கந்தராசா வரோதயன், விஜயன் சயந்தா) இந்த வருடம் 3 ஏ சித்திபெற்று மருத்துவபீடத்துக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

கிராமிய மட்டத்தில் ஆரம்பப்பாடசாலைகள் உரிய தரநிலையில் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்தால் மாணவர் நகரம் நோக்கி ஆரம்பக் கல்வியைப் பெறுவதற்கு அலையவேண்டிய அவசியம் இருக்காது என்பதற்கு சிறுப்பிட்டி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை எடுத்துக்காட்டாக உள்ளது. பாடசாலை மேலும் வளர்ச்சிபெற வேண்டும்.

உதயன் - 27.07.2012, 03.08.2012




# 25 சமூகத்தின் கல்வி மேம்பாட்டில் சிறுப்பிட்டி அ.த.க.பாடசாலை

சிறுப்பிட்டி ஜனசக்தி கிராமத்தின் கல்வி வளர்ச்சியிலும் சமூக மேம்பாட்டிலும் உறுதுணையாக இருந்து வரும் சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் ஆரம்பமும் வளர்ச்சியும் கிராமத்தில் வாழும் மக்களின் ஒருமித்த கருத்தினால் உருப்பெற்றன. யாழ்ப்பாணம் - பருத்தித்துறை. நெடுஞ்சாலையில் சிறுப்பிட்டி மடத்தடியில் அமைந்துள்ள கலைவாணி முன்பள்ளிக்கு அருகால் மேற்கு நோக்கிச் செல்லும் ஒழுங்கையில் 1500 மீற்றர் தூரத்தில் பாடசாலை அமைந்துள்ளது. இந்தக் கல்விக்கூடம் குறித்த கிராமத்தில் வாழும் மாணவர்களின் கற்றல் வசதியைக் கருத்தில்கொண்டு உருவாக்கப்பட்டது. என்ன நோக்கத்துக்காக உருவாக்கப்பட்டதோ அந்த நோக்கத்தை முழுமையாக நிறைவுசெய்து வருகின்றது.

யாழ்.குடாநாட்டில் நிலவி வந்த இறுக்கமான சாதிக்கட்டமைப்பு இற்றைக்கு 50 ஆண்டுகளுக்கு முந்திய காலப்பகுதியில் குறித்த சாதிப்பிரிவினருக்கு சமமான கல்வி வாய்ப்பை வழங்குவதற்கு முன்வரவில்லை. குறித்த பின்தங்கிய சமூகத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாப் பாடசாலைகளிலும் கல்வி கற்பதற்கு அனுமதிக்கப்பட வில்லை. அனுமதிக்கப்பட்டாலும் அவர்களுக்கு ஆசனம் வழங்கப்படாமல் தரையில் இருந்தே கற்கவேண்டும். அவர்கள் ஏனைய உயர் சமூகத்தைச் சேர்ந்த

மாணவர்களுடன் சேர்ந்து பழகவோ சமமாக இருக்கவோ சமமான சந்தர்ப்பம் வழங்கப்படவோ இல்லை. அவர்கள்மீது தீண்டாமை மிகமிகக் கடுமையாகக் கடைப்பிடிக்கப்பட்டது.

அவர்கள் குறித்த வகுப்பறையில் ஒரு புறத்தில் தரையில் அமர்ந்திருந்து ஆசிரியர் கூறுவதைக் கேட்டு கற்றல் செயற்பாடுகளை சுயமாகவே மேற்கொள்ளவேண்டி இருந்தது. பின்தங்கிய சமூக மாணவர்களுக்கு அளிக்கப்பட்ட புறக்கணிப்பு மற்றும் தண்டனை என்பன அவர்களைத் தொடர்ந்து கற்றல் செயற்பாட்டை மேற்கொள்ளாமல் முதலாம் , இரண்டாம் வகுப்புகளுடன் இடைவிலகச்செய்துவிடும்.

சிறுப்பிட்டி கிராமத்துக்கு அயலில் உள்ள புத்தூரில் மழவராயர் கந்தையாவால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையில் (தற்போது ஸ்ரீ சோமஸ்கந்தக்கல்லூரியில்) பின்தங்கிய சமூகத்தைச் சேர்ந்த மாணவர்கள் 1970 வரையில் அனுமதிக்கப்படவில்லை.

இந்த வகையில் சிறுப்பிட்டி புத்தூர் பகுதியைச் சேர்ந்த பின்தங்கிய மாணவர்கள் சொந்த இடத்தில் இயல்பு நிலையில் கல்வியைத் தொடரமுடியாத நிலை நிலவியது.

1940ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிறுப்பிட்டி மத்தியில் செயற்பட்டு வந்த ஆரம்பப் பாடசாலையில் குறித்த மாணவர்களைக் குறித்த காலப்பகுதியின் கட்டுப்பாடுகளுக்கு அமைய பாடசாலையில் இணைத்துக்கொண்டனர். இதனை ஏற்றுக்கொள்ளாத விசமிகளால் அன்று இரவு வேளையில் பாடசாலை தீ மூட்டி முற்றாக எரிக்கப்பட்டது. இதனை அடுத்து அடிதடி சண்டை ஏற்பட்டதோடு அது சாதிக்கலவரமாக மாறியது.

இந்தச்சூழ்நிலையில் தமிழ் அரசியல் பிரமுகர் சிலர் தலையிட்டு சமாதானம் செய்ததோடு பின்தங்கிய சமூக மாணவர்கள் கல்வி கற்பதற்கு தனியான பாடசாலையை நிறுவித் தருவதாக உறுதி அளித்தனர். அந்த வகையில் சிறுப்பிட்டி ஜனசக்தி கிராமத்தின் முன்னோடிகளும் இதனை ஏற்றுக்கொண்டதை அடுத்து முடிக்குரிய காணியில் 1940ஆம் ஆண்டு புதிய பாடசாலை நிறுவுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

1941 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13 ஆம் திகதி சிறுப்பிட்டி "கெட்டியாக்கலட்டி" என்ற தோப்புப்பெயர் காணியில் அமைக்கப்பட்ட கட்டடத்தில் கல்விச்செயற்பாடுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. ஆரம்ப தினத்தில் 74 பிள்ளைகள் பாடசாலையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். தலைமை ஆசிரியருடன் சேர்த்து மூன்று ஆசிரியர்கள் பணிபுரிந்தனர். பாடசாலையின் கற்றல் செயற்பாடுகளை வடமாநில வித்தியாதிபதி ஆரம்பித்து வைத்தார். தமிழ் அரசியல் பிரமுகர்களும் உள்ளூர் பிரமுகர்களும் வித்தியா ரம்பத்தில் கலந்துகொண்டு சிறப்பித்தனர். பாடசாலை தனியாக ஆரம்பிக்கப்பட்டு தமது

கிராமத்து பிள்ளைகளுக்கு வாழ்விடச்சூழலில் கற்பதற்கு வசதிகள் செய்யப்பட்டமை குறித்த கிராம மக்களுக்கு மனநிறைவைக் கொடுத்தது.

ஆரம்பத்தில் பாடசாலை 1-5 வகுப்புக்களைக் கொண்ட ஆரம்பப் பாடசாலையாகச் செயற்பட்டது. குறித்த காலப்பகுதியில் ஐந்தாம் வகுப்பு படித்தவர்களை "படித்தவர்கள்" என பெருமைப்படுத்தி சமூகம் மதிப்பளித்தது உண்டு. பாடசாலையில் ஆரம்பத்தில் சேர்ந்து கல்வி கற்ற முதல் மாணவர்களில் ஒருவரான முதியவர் சிதம்பரி கோவிந்தன் "தான் பாடசாலையில் கல்வி கற்றதாகவும் கரவெட்டியில் இருந்து வந்த ஆசிரியர் தனக்கு கற்பித்ததாகவும் குடும்ப வறுமையினால் கல்வியைத்தொடர முடியவில்லை" என்றும் கூறினார்.

கல்லு நிறைந்த பிரதேசமான கலட்டிப் பாடசாலை சூழலில் குடியேற்றத் திட்டத்தின் மூலம் மக்கள் குடியிருப்புக்கள் அமைக்கப்பட்டு பாடசாலைக்கு ஆரம்பத்தில் 11/2 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது. ஆரம்பகாலப் பாடசாலைக்கான நிரந்தரக் கட்டடமும், கிணறும் ,தலைமை ஆசிரியருக்கான வதிவிட மனையும் கல்வித்திணைக்களத்தினால் நிறுவப்பட்டன. கல் நிறைந்த கலட்டியில் கட்டடம் நிர்மாணிக்கப்பட்ட போதிலும் பாடசாலைச் சுற்றாடல் பாடசாலைச்சமூகத்தினால் திருத்தி அமைக்கப்பட்டு மாணவர்களின் பயன்பாட்டுக்கு உரியனவாக சீரமைக்கப்பட்டது. பாடசாலை ஸ்தாபிதம் செய்யப்பட்ட காலப்பகுதியில் ஆரம்பப் பாடசாலையாக (1-5 வகுப்பு) பின்னர் கனிஷ்ட இடைநிலைப்பாடசாலையாக (1-8 வகுப்பு) செயற்பட்ட போதிலும் தற்பொழுது தரம் 9 வரையான வகுப்புக்கள் நடைபெறுகின்றன. புதிதாக இந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட 9 ஆம் தரத்தில் 28 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். பாடசாலையின் அதிபராக நா.மகேந்திரராசா (இலங்கை அதிபர் சேவை) கடமையாற்றுகின்றார்.

சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் தோற்றம் குறித்த பாடசாலையின் சமூகச்சூழலில் உள்ள மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் மட்டுமல்ல வளர்ந்தோரின் கல்வி வளர்ச்சிக்கும் வளம் சேர்த்தது.

பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதியில் பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் இளைஞர்கள் முதியோருக்கான அறிவூட்டல் வகுப்புக்களும் நடத்தப்பட்டன. அறிவுப்பசிக்கு பொருத்தமான தீன் இல்லாமல் தீண்டாமை என்ற மனித நேயமற்ற ஒடுக்கு முறைக்கு உள்ளாகி கல்வியால் நலிவடைந்து இருந்த சமூகம் தங்களது கிராமத்தில் தோற்றம் பெற்ற அறிவாலயத்தை உரியமுறையில் பயன்படுத்தியது. பிற்பகல் வேளையிலும் மாலை வேளையிலும் வளர்ந்தோருக்கான வகுப்புக்கள் நடத்தப்பட்டன. அதில் குறிப்பிடத்தக்க தொகையினர் படித்தனர்.

பாடசாலையுடன் இணைந்த நிலையில் அரசால் நிறுவப்பட்ட பாடசாலை அதிபருக்கான விடுதியில் தங்கியிருந்த ஆசிரியர்கள் அதிபர் ஆகியோர் மற்றும் வடமராட்சியைச் சேர்ந்த உறவினர்கள் வளர்ந்தோருக்கான அறிவூட்டல் வகுப்புக் களை நடத்துவதில் ஈடுபட்டனர். இந்த வகுப்புக்களில் இணைந்து கொண்டவர்கள் எழுத வாசிக்கக் கற்றுக்கொண்டதோடு புராண இதிகாசம் மற்றும் அரசியல் சமூக நடைமுறை முறைகள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட நற்பழக்கங்கள் உள்ளிட்ட வாழ்வாதாரத்துக்கான கல்வி கேள்விகளில் சராசரிப்புலமை பெற்று விளங்கு கின்றனர். அவர்கள் சமூகப் பற்றும் உயர்விழுமியங்களும் கொண்ட பிரஜைகளாக துலங்குகின்றனர்.

"ஜனசக்தி", "கலைஒளி" மற்றும் "கலைமதி" கிராம மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவி வந்த சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் முதலாவது அதிபராக க.கந்தப்பு பொறுப்பேற்று பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதியான அடித்தளத்தை இட்டுவைத்ததோடு குறித்தகாலக் களநிலைக்கு தாக்குப்பிடித்து தனது பணியை திறம்பட மேற்கொண்டார். 1944ஆம் ஆண்டு வி.முருகேசு அதிபர் பதவியை பொறுப்பேற்றார். 1952 இல் ஏ.கே.பொன்னுத்துரை யும்.1954 இல் எஸ்.ஆறுமுகமும் , 1962 இல் மு.கிருஷ்ணபிள்ளையும் 1970 இல் இ.சிவராசாவும், 1972 இல் சி.தர்மலிங்கமும், 1974 இல் க.வினாசித்தம்பியும், 1974 இல் க.பேரின்பநாயகமும், 1984 இல் திருமதி எஸ்.கனகம்மாவும் 1985 இல் க.சிவப்பிரகாசமும், 1987 இல் அ.சின்னத்துரையும், அதைத்தொடர்ந்து எஸ்.தர்மரத்தினம், எஸ்.பேரின்பநாயகம், எஸ்.நவரத்தினவேல், பொ. சரவணபவானந்தன் ஆகியோரும் அதிபர்களாகக் கடமையாற்றினர். பாடசாலை வளர்ச்சிக்கு அரும்பணியாற்றிய அதிபர், ஆசிரியர்கள் சமூகத்தால் நினைவு கூரப்படுகின்றனர். 2010-06-16 இல் நா.மகேந்திரராசா(இலங்கை அதிபர் சேவை தரமIII) அதிபராகப் பொறுப்பேற்று நடத்தி வருகின்றனர். பாடசாலைக்கு ஆரம்பத்தில் ஒதுக்கப்பட்ட 11/2 ஏக்கர் காணியோடு விளையாட்டு மைதானத்துக்கு "சனலுக்காட்டி" 1 1/2 ஏக்கர் நிலம் அரசால் 1961ஆம் ஆண்டு கொள்வனவு செய்து வழங்கப்பட்டுள்ளது.

தற்பொழுது நான்கு ஏக்கர் வரையிலான நிலம் பாடசாலையின் பயன்பாட்டில் உள்ளது. பாடசாலையுடன் இணைந்த நிலையில் விளையாட்டு மைதானம், பாடசாலைத்தோட்டம் ஒழுங்கமைக்கப்பட்ட வடிவமைப்பில் பூந்தோட்டம் என்பன அமைக்கப்பட்டு கவிநிலையுடன் பாடசாலையும் பாடசாலைச்சுற்றாடலும் காணப்படுகின்றன.

1941ஆம் ஆண்டில் இருந்து தரம் ஒன்று முதல் தரம் ஐந்து வரையான வகுப்புக் களைக்கொண்ட ஆரம்பப்பாடசாலையாகச் செயற்பட்டுவந்த சிறுப்பிட்டி அரசினர்

தமிழ்க்கலவன் பாடசாலை 1993ஆம் ஆண்டு தரம் 8 வரையான வகுப்புகளை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டு கனிஷ்ட பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டது. 2011 ஆம் ஆண்டு தரம் 9 வரை. 1-5 வரையான வகுப்புக்கள் 142 மாணவர்கள் 6-9 வரையான வகுப்புக்களில் 134 மாணவர்களுமாக 276 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். நிரந்தர ஆசிரியர்கள் 15 பேரும் ஒரு ஆசிரியர் உதவியாளருமாக 16 ஆசிரியர்கள் கடமை புரிகின்றனர்.

ஆரம்பக்கல்வி மன்றம் . இடைநிலைக்கல்வி மன்றம், கணித விஞ்ஞான மன்றம், ஆங்கில மன்றம், சுகாதார மன்றம், இந்துமா மன்றம், தமிழ்மன்றம் அனர்த்த முகாமைத்துவ அணிச் சமூக வரலாற்று மன்றம், ஆசிரியர் கழகம் என்பன உரிய முறையில் செயற்பட்டு வருகின்றன. 2006 ஆம் ஆண்டு நிரோஜி செல்வராசாவும் , 2009ஆம் ஆண்டு கலீஸ்ரா கனகலிங்கம் ஆகியோர் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து புலமைப்பரிசில் பெறுவதற்கு தகைமை பெற்றுள்ளனர். அண்மையில் யுனிசெவ் நிதியுதவியுடன் பாடசாலை கட்டடங்கள் முழுவதும் திருத்தி அமைக்கப்பட்டு புதுமெருகூட்டப்பட்டுள்ளன.

சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கும் ஜனசக்தி கிராமத்துக்குச் செல்லும் வீதி மற்றும் ஒழுங்கைகள் நீண்டகாலமாக திருத்தி அமைக்கப்படாமல் இருந்ததைக் கருத்தில் கொண்டு . கிராமிய மீள் எழுச்சித்திட்டத்தின் கீழ் திருத்தி அமைக்கப்பட்டு தார் போடப்பட்டுள்ளது.

பாடசாலைகளுக்கான போக்குவரத்து வசதியீனம் கடந்த காலங்களில் ஆசிரியர்கள் சென்று கடமை புரிவதற்கு சிரமமானது என்பதைக் கருத்தில் கொண்டு அதிகஸ்ரப் பிரதேசப் பாடசாலையாக பிரகடனம் செய்யப்பட்டு அதற்கான ஊக்குவிப்புக் கொடுப் பனவு மாதாந்தம் ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகின்றது. இதனால் ஆசிரியர்கள் விரும்பிச்சென்று பணிபுரியக்கூடிய களநிலை உருவாக்கப்பட்டுள்ளது. பவளவிழா ஆண்டை நோக்கி வளர்ந்து வரும் பாடசாலை மேலும் சிறப்புடன் வளர வாழ்த்து வோம்.

உதயன் - 06.04.2012, 13.04.2012




# 26 100 ஆண்டு கடந்த கல்விச்சேவையில் வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலயம்

**கோ**ப்பாய்த் தொகுதியில் உள்ள தரம் இரண்டு பாடசாலைகளில் முன்னணிப் பாடசாலையாக விளங்கியது வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாசாலை. வாதரவத்தை, வீரவாணி, பெரியபொக்கணை ஆகிய மூன்று மக்கள் குடியிருப்பு கிராமங்களுக்கும் நடுவிடத்தில் அமைந்துள்ளது. மூன்று உபகிராமங்களையும் உள்ளடக்கிய புத்தூர் வாதரவத்தையில் அமைந்துள்ள ஒரே ஒரு பாடசாலை இது.

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ளடங்கும் வாதரவத்தை கிராமத்தின் அமைவிடமும் நிலைய முக்கியத்துவமும் தனித்துவமான இயல்புகளைக் கொண்டன. யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான நெடுஞ்சாலையில் இருந்து கிழக்கு நோக்கிச் செல்லும் வாதரவத்தை வீதியில் உள்ளது. வலி.கிழக்கு பிரிவு 10 கிராமத்தலைமைக்காரர் (விதானை) பிரிவுகளாக இருந்த காலப்பகுதியில் ஆவரங்கால் கிழக்கு பிரிவில் உள்ளடங்கி இருந்தது. கிராம அலுவலர் பிரிவுகள் அதிகரிக்கப்பட்ட வேளையில் வாதரவத்தை கிராமம் தனி ஒரு கிராம அலுவலர் பிரிவாக வேறுபடுத்தப்பட்டது. மாரிகாலத்தில் மக்கள் குடியிருப்புக்கள் நீரால் சூழப்பட்டு சிறுதீவுகள் போல் காணப்படும்.

வாதரவத்தை விக்கினேஸ்வரா முன்பள்ளி, வீரவாணி ஞானவாணி முன்பள்ளி, பெரிய பொக்கணை கணேசா முன்பள்ளி மூன்றிலும் பயிலும் பிள்ளைகள் வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் தரம் ஒன்று வகுப்பில் இணைந்து கொள்கின்றனர்.

100 ஆண்டுகளைக் கடந்து சமூகத்தின் முழுநம்பிக்கையையும் தனித்துவமான முறையில் பெற்று விளங்கும் வித்தியாலயத்தின் பூர்வீக வரலாறும் புதுமையானது. 1900 ஆண்டுகளுக்கு முந்திய காலப்பகுதியில் வாதரவத்தை கிராமத்தின் கல்வித் தேவையை உணர்ந்து திண்ணைப்பள்ளி அமைத்து எண்ணும், எழுத்தும் சைவசமயமும் போதிக்கப்பட்டு வந்தன. இதனை ஐயம்பிள்ளை வல்லிபுரம் மேற்கொண்டு வந்தார். உள்ளூர் பிரமுகரான இவரின் காலத்துக்கு ஏற்ற கல்விப் பணியை வரவேற்று ஊரவர்கள் பயின்று வந்தனர். அதுவே விக்கினேஸ்வராவின் பூர்வீக கட்டமைப்பாகும்.

மெதடிஸ்த திருச்சபையினர் புத்தூரில் கால்பதித்து சமூக சமயப்பணியை முன்னெடுத்ததோடு உள்ளூர் மாணவர்களுக்கு கிறிஸ்தவ பாரம்பரியத்தோடுகூடிய கல்வியைப் புகட்டுவதற்கு வாய்ப்பாக ஆவரங்காலில் செயற்பட்ட பாடசாலையைக் கொள்வனவுசெய்து (தற்போதைய மகாஜன வித்தியாசாலை) ஆவரங்கால் மெதடிஸ்த மிஷன் பாடசாலை : புத்தூர் மெதடிஸ்த மிஷன் பாடசாலை ஆகியவற்றுடன் வாதரவத்தையிலும் செயற்பட்ட திண்ணைப்பாடசாலையை பெற்று, 1910ஆம் ஆண்டு நிறுவனமயப்படுத்தப்பட்ட முறையில் வாதரவத்தை மெதடிஸ்த மிஷன் பாடசாலை என்ற பெயருடன் கல்விப்பணியை மேற்கொண்டனர்.

குறிப்பிட்ட காலம் வரையில் மெதடிஸ்த மிஷன் பாடசாலை என்ற வகையில் வாதரவத்தையில் செயற்பட்ட போதிலும், மக்கள் தங்களுக்குத் தேவையான கல்வியைத் தாராளமாக பெற்றுக்கொண்ட போதிலும் , யாரும் சமயம் மாறியதாகவோ கிறிஸ்தவ சமயத்தில் பற்றுக்கொண்டு செயற்பட்டதாகவோ அறிய முடியவில்லை. குறித்த காலப்பகுதியிலும் தற்பொழுதும் வாதரவத்தை பகுதியில் கிறிஸ்தவ குடும்பங்கள் எதுவும் இல்லை. கிறிஸ்தவ தேவாலயகட்டமைப்பும் அங்கு இல்லை. முற்று முழுதாக தூய சைவப்பாரம்பரியத்தோடு கூடியவர்களாகவே யாவரும் வாழ்ந்து வருகின்றனர்.

ஆரம்ப காலத்தில் தரம் 5 வரையான வகுப்புக்களைக்கொண்ட ஆரம்பப் பாடசாலையாகவே வாதரவத்தை மெதடிஸ்தமிஷன் பாடசாலை செயற்பட்டு வந்தது. வாதரவத்தை, பெரிய பொக்கணை வீரவாணி கிராமங்களைச் சேர்ந்த மாணவர்கள் ஆரம்பக் கல்வியை தமது கிராமத்தில் உள்ள பாடசாலையில் கற்றுத் தேறிய பின்னர்

5 ஆம் வகுப்புக்கு மேற்பட்ட தரநிலை வகுப்புக்கான கல்வியை பெற்றுக்கொள்வதற்கு கிராமத்துக்கு வெளியே சென்றனர்.

புத்தூர் சோமஸ்கந்தக்கல்லூரி செயற்படத்தொடங்கிய பின் அங்கு தமக்கான கல்வியை வகுப்பு 6இல் இருந்து கற்றுக்கொண்டனர். உடல் உழைப்பாலும், கல்வியாலும் உயர்ந்த வாதரவத்தை மற்றும் வீரவாணி, பெரிய பொக்கணை கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பொதுப்போக்குவரத்து வசதி குறைந்த ஐந்து கிலோமீற்றருக்கு குறையாத தூரம் நடந்தோ புத்தூர் உள்ளிட்ட அயல்கிராமங்களுக்குச் சென்று தமது கருமங்களை மேற்கொண்டு வருவதையோ இன்றும் சாதாரணமாக அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

1910ஆம் ஆண்டில் இருந்து நிறுவனமயப்படுத்தப்பட்ட கல்விக்கூடமாக ஓலைக் கொட்டிலில் செயற்பட்டு வந்த பாடசாலை 1962ஆம் ஆண்டு அரசால் பொறுப் பேற்கப்பட்டு அரச பாடசாலையானது. அரச பாடசாலை ஆனதை அடுத்து பாடசாலைக் கான நிரந்தர கட்டடம் அமைக்க வேண்டும் என்ற தேவை வலியுறுத்தப்பட்டது. 950 சதுர அடி பரப்பளவு கொண்ட நிரந்தரக் கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டது. அதை அடுத்து கோப்பாய்த் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் 'சிந்தனைச் சிற்பி' சி.கதிரவேற்பிள்ளை அவர்களின் நிதி ஒதுக்கீட்டில் இரண்டு புதிய கட்டடத்தொகுதிகள் 1970ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்டன.

மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை என்ற பெயரில் இயங்கி வந்த பாடசாலை அரசாங்கப் பாடசாலையாக மாறியதை அடுத்து 1966ஆம் ஆண்டு காலப்பகுதியில் விக்கினேஸ்வரா வித்தியாலயம் என பெயர்மாற்றம் செய்யப்பட்டது. 1970ஆம் ஆண்டு இடைநிலை வகுப்புக்களை ஆரம்பிப்பதற்கான அனுமதி கிடைக்கப் பெற்றதை அடுத்து இடைநிலை வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. ஆரம்பப்பிரிவில் சித்தியடையும் மாணவர்கள் தொடர்ந்து இடைநிலை வகுப்புக்களில் இணைந்து கல்வியைக் கற்றனர்.

1974 ஆம் ஆண்டு முதற்தடவையாக தேசிய மட்டத்தில் நடைபெற்ற என். சீ.ஜீ.ஈ.பரீட்சைக்கு தோற்றினர். பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் பெரும்பாலானவர்கள் உயர்பெறுபேறுகளுடன் சித்தியடைந்தனர். தொடர்ந்து தரம் 11 வரையான வகுப்புக்கள் நடைபெற்றுவருகின்றன. பாடசாலைச் சமூகம் பாடசாலை மீது அதீத நம்பிக்கை கொண்டிருப்பதோடு தமது பிள்ளைகளை க.பொ.த. சாதாரண வகுப்புவரை உள்ளூர் பாடசாலையில் கற்பதற்கு விருப்பத்தோடு இடமளித்து வருகின்றனர். அதிகஷ்டப் பிரதேச பாடசாலையாக விளங்கும் வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் 300 மாணவர்கள் வரையில் கல்வி

கற்கின்றனர். பாடசாலையின் தற்போதைய அதிபராக இலங்கை அதிபர் சேவை தரம் இரண்டைச் சேர்ந்த ஜே.ஏ.தவநாயகம் கடமையாற்றி வருகின்றார்.

உடல் உழைப்பால் உயர்ந்து கல்வியால் சிறந்த வாதரவத்தை கிராமத்தின் கல்வி வளத்துக்கு மூலாதாரமாக விளங்கும் விக்கினேஸ்வரா வித்தியாலயத்தின் தோற்றமும் வளர்ச்சியும் கிராமத்தோடு ஒன்றிணைந்த தொடர்புநிலையில் காணப்படுகின்றன. கிராமத்தில் வாழும் பெற்றோர் தமது கிராமத்தில் உள்ள ஒரே ஒரு பாடசாலையில் பூரணமான நம்பிக்கை வைத்து தமது பிள்ளைகளை முழுமை யாக சேர்த்துக்கொள்வது யாழ்.மாவட்டத்தில் எந்தப்பிரதேசத்திலும் கண்டுகொள்ள முடியாத உண்மையாகும். தூய்மையான கிராமியச்சூழல் மற்றும் கல்வியின் கவனக்கலைப்பான்கள் பெருமளவில் இல்லாத சமூகக்கட்டமைப்பு தனியார் கல்விநிலையங்களின் ஏகபோகமான ஆதிக்கம் என்பன இல்லாமல் இருப்பதால் மாணவர்கள் பாடசாலைமீதும் ஆசிரியர்கள் மீதும் நம்பிக்கை வைத்து கல்வி அடைவுமட்டத்தில் முன்னேறி வருகின்றனர்.

நிறுவன மயப்படுத்தப்பட்ட பாடசாலைக் கட்டமைப்பு உருவான காலப்பகுதியில் இருந்து பாடசாலையின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்போடு பணியாற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரும் வாதரவத்தை வாழ்மக்களினாலும், பழைய மாணவர் களினாலும் நன்றியறிதலோடு இன்றும் நினைவு கூரப்படுகின்றனர். 1910 ஆம் ஆண்டில் இருந்து இன்றுவரையில் அதிபர்களாகக் கடமையாற்றியவர்கள் என்ற வகையில் எஸ்.வல்லிபுரம் , என்.ஏ.இராமலிங்கம், எஸ்.தம்பித்துரை, எஸ்.சின்னப்பு, ஜே.கே.சிவப்பிரகாசம், வே.சின்னத்தம்பி, த.கந்தசாமி, வீ.இளையதம்பி, சி.கந்தசாமி, க.இராசதுரை, நா.அருளம்பலம்,ச.குமாரசுவாமி, சு.முத்துக்குமாரசுவாமி, எஸ்.சண்முகரத்தினம், எஸ்.சிவலிங்கராசா, கா.தர்மரத்தினம் ஆகியோரும் 2009.07.07ஆம் திகதியிலிருந்து ஜே.ஏ.தவநாயகமும் அதிபராகப் பணியாற்றி வருகின்றார்.

பொதுப்போக்குவரத்து வசதி மற்றும் வளவசதி குறைவான கிராமமாக வாதர வத்தை இருப்பதனால் அதிகஷ்டப்பிரதேசமாக கல்வி அமைச்சினால் பிரகடனப் படுத்தப்பட்டிருப்பதோடு விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் பணிபுரியும் அதிபர் ஆசிரியர்களுக்கு மாதாந்தம் ஊக்குவிப்புக் கொடுப்பனவாக தலா 2500 ரூபா வழங்கப் படுவதோடு ஆசிரியர்கள் - அதிபர் சேவை நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும்போது சேவைக்கால வருடத்துக்கு 05 புள்ளி வீதம் ஆகக்கூடுதலாக 30 புள்ளிகளைப் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்புகளும் உள்ளன.

இத்தகைய ஊக்குவிப்பு ஆசிரியர்கள் சுயவிருப்பத்தோடு பாடசாலையில் கடமை புரிவதற்கான சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. இந்த மேலதிக வசதிநிலை

பாடசாலையின் ஆசிரியர் பற்றாக்குறையை இல்லாமல் சமநிலைப்படுத்தி உள்ள போதிலும் உடற்கல்வி உள்ளிட்ட விசேட பாடத்துறைகளுக்கான ஆசிரியர் பற்றாக் குறை நிலவுகின்றது. தற்பொழுது 16 ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். பாடசாலையின் நூற்றாண்டு விழாக்கொண்டாட்டம் 2010.10.25 இல் மிக விமரிசையாக நடைபெற்றது.

பாடசாலையில் இந்த வருடம் தரம் 1 முதல் 5 வரையான வகுப்புகளில் 175 மாணவர்களும் தரம் 6 முதல் 11 வரையான வகுப்புக்களில் மொத்தம் 248 மாணவர்களும் கல்வி கற்கின்றனர். மாணவர்களுக்கான வகுப்பறை வசதிகளைப் பொறுத்தவரையில் தரம் ஒன்றுக்கான வகுப்பறையைத்தவிர ஏனைய வகுப்புக்கள் அனைத்தும் திறந்தநிலை வகுப்புக்களாகவே உள்ளன. இந்த நிலையில் வகுப்பறைக் கான களநிலைக்கட்டமைப்பை ஏற்படுத்துவதில் ஆசிரியர்கள் எதிர்பாராத பாதிப்புக்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. 60x20 அளவுகொண்ட இரண்டுகட்டடங் களும் 40x20 கொண்ட கட்டடம் ஒன்றும் தரம் 2 தொடக்கம் தரம் 11 வரையான பத்து வகுப்புக்களையும் நடத்துவதற்கு பயன்படுத்தப்படுகின்றன.

பொருத்தமான வகுப்பறைத்தடுப்புகள் மற்றும் மறைப்புகள் இல்லாத நிலையால் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் எதிர்பாராத நெருக்கடியை ஆசிரியர்களும் மாணவர்களும் எதிர்கொள்ள வேண்டியுள்ளனர். புதிய கல்விக் கொள்கை, மஹிந்த சிந்தனை போன்றவற்றின் அடிப்படையில் பாடசாலை அபிவிருத்தி நடவடிக்கை எதிலும் வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலயம் இதுவரை உள்ளீர்ப்பு செய்யப்படவில்லை.

மட்டுப்படுத்தப்பட்ட வளவசதிகளுடன் கற்றல், கற்பித்தல் , இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் முழுமையாக அக்கறையுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற வகையில் தமிழ்த்தினப்போட்டி, மெய்வன்மைப்போட்டி உள்ளிட்ட சகலவிதமான போட்டிகளிலும் விக்கினேஸ்வரா வித்தியாலயம் , கோட்டமட்டம், வலயமட்டம், யாழ்.மாவட்ட மட்டம் போன்ற நிலைகளில் வெற்றிபெற்று பரிசில்களைப்பெற்று வருகின்றது.

செல்வி பா.தினேசா 11 வயதுப்பிரிவு உயரம் பாய்தலில் வடமாகாண மட்டத்தில் தங்கப்பதக்கம் வென்றுள்ளார். செல்வன் பா.யசிகன் 19 வயதுப்பிரிவு 1500 மீற்றர் ஓட்டத்தில் வடக்கு மாகாண மட்டத்தில் தங்கப்பதக்கம் வென்றுள்ளார். செல்வன் வி.தஷிந்தாஸ் சமூக விஞ்ஞான பொது அறிவுப்போட்டியில் (தரம் - 11) வட மாகாண மட்டத்தில் வெள்ளிப்பதக்கம் வென்றுள்ளார். அத்துடன் தேசிய மட்டப் போட்டிகளிலும் கலந்துகொள்வதற்குத் தகுதி பெற்றனர்.

மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை ஊக்குவிக்கும்வகையில் தமிழ் மன்றம், விஞ்ஞானமன்றம், கணிதமன்றம், சமூகவிஞ்ஞான மன்றம், ஆங்கில மன்றம் , இந்து மன்றம் உள்ளிட்ட அனைத்து மன்றச்செயற்பாடுகளும் திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கப்படுவதோடு சாரணியம் போன்ற செயற்பாடுகளும் உரிய வகையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பாடசாலையோடு இணைந்த நிலையில் உள்ள வயல் நிலம் தனியாருக்குச் சொந்தமானது. தற்பொழுது மாணவர்களின் விளையாட்டு மைதானமாகப் பயன்படுத்தப்படுகின்றது. அதனை பாடசாலைக்குச் சொந்தமானதாக கொள்வனவு செய்வதற்கு பாடசாலைச்சமூகம் முயன்று வருகின்றது. கிராமத்துக்கு மத்தியில் அமைந்திருக்கும் பாடசாலையின் எல்லை வேலிகள் பொருத்தமான பாதுகாப்பான முறையில் மறுசீரமைப்பு செய்வதற்கோ, எல்லை மதிலை அமைப் பதற்கோ உரிய நிதிவளம் இல்லாமல் இருப்பதால் பாடசாலைத்தோட்டம் மற்றும் பயிர்வகைகளை கட்டாக்காலி கால்நடைகள் நாளாந்தம் சேதமாக்கி நாசம் செய்வது மாணவர் ஆசிரியர் மத்தியில் மனத்தாக்கத்தை ஏற்படுத்திவிடுவதோடு தொடர்ந்து அத்தகைய முயற்சியில் ஈடுபட முடியாத தோல்வி நிலைக்கும் உள்ளாகி விடுகின்றது.

"சமகாலச் சூழ்நிலைக்கு ஏற்ற வகையில் பாடசாலையின் வளவசதிகளை மேம்படுத்துவதற்கு புலம்பெயர் உறவுகள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் மற்றும் நிறுவனங்கள் ஏற்புடைய உதவிகளை வழங்க முன்வரவேண்டும். இதனைப் பாடசாலைச்சமூகம் நன்றியறிதலோடு எதிர்பார்த்துள்ளது. வித்தியாலயம் மேலும் வளம்பெறவேண்டும்.

உதயன் - 07.09.2012, 14.09.2012




# 27 சைவத்தமிழ்க் கல்விக்காக தோன்றிய கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாலயம்

யாழ்.மாவட்டத்தில் மிசனரிமார் கல்வியோடு சமய மாற்றத்தையும் மேற் கொண்டு கிராமிய மட்டத்திலும் மாற்றத்தை ஏற்படுத்திய வேளையில் சைவ வித்தியா விருத்திச்சங்கம் மற்றும் உள்ளூர் பிரமுகர்கள், பொது மக்கள் ஒன்று கூடி கிராமங்கள் தோறும் சைவமும் தமிழும் பாதுகாக்கப்பட வேண்டும், என்ற உயர்நோக்கோடு பாடசாலைகளை நிறுவி சைவத்தமிழ் பாரம்பரியத்தை மாறுபடாமல் பாதுகாத்தனர். அந்த வகையில் ஊர் பொதுமக்கள் ஒன்றுகூடி கதிரிப்பாயில் கோயில் கொண்டிருக்கும் சுப்பிரமணியரின் நாமத்தோடு புதிய பாடசாலையை ஆரம்பித்து வைத்தனர் .

கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாசாலை அச்சுவேலி – செல்வச்சந்நிதி பிரதான வீதியில் கதிரிப்பாய் சந்தியில் இருந்து மேற்கு நோக்கி செல்லும் முரசொலி வீதியில் அமைந்துள்ளது. கதிரிப்பாய் சந்தியில் இருந்து 150 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள பாடசாலையின் முதலாவது கால்கோள் விழா 1935 ஆம் ஆண்டு விஜயதசமி அன்று நடைபெற்றது.

ஊர்மக்கள் ஒன்றுகூடி தமது பிள்ளைகள் சைவத்தமிழ் பாரம்பரியத்தோடு இணைந்த நிலையில் கற்கவேண்டும். அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற தீர்மானத்துக்கு அமைய சைவவித்தியா விருத்திச்சங்கத்திடம் தமது

பெருவிருப்பத்தை கோரிக்கையாக சமர்ப்பித்தனர். ஊர்மக்களின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட இந்து போட் இராசரத்தினம் பாடசாலை நிறுவுவதற்கான அனுசர ணையை வழங்கியதோடு சைவ வித்தியா விருத்திச்சங்கத்தின் பாடசாலையாக அதனை பதிவுசெய்து நடத்தி வந்தார். பாடசாலை நிறுவுவதற்கான காணியை வருணனைச் சேர்ந்த பொ.நாகலிங்கம் வழங்கி உதவினார். அந்த வகையில் 61/2 பரப்பு நிலம் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

கதிரிப்பாய் சந்தியில் வீதிக்கு கிழக்குப் புறத்தில் கதிரிப்பாய் அமெரிக்கன் மிஷன் ஆரம்பப்பாடசாலை நிறுவன மயப்படுத்தப்பட்ட நிலையில் செயற்பட்டு வந்தது. அதில் கிறிஸ்தவம், ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளை கற்றுத்தேறிய மாணவர்கள் அச்சுவேலி தென்னிந்திய திருச்சபை வளாகத்தில் செயற்பட்டு வந்த அச்சுவேலி அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் (தற்போதைய அச்சுவேலி மத்திய கல்லூரி யில்) இணைந்து கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட நிலைக்கல்வியை கற்பதற்கு வசதிகள் செய்யப்பட்டிருந்தன. இந்தவகையில் கதிரிப்பாய் அமெரிக்கன் மிஷன் பாடசாலை அச்சுவேலி அமெரிக்கன் மிஷன் பாடசாலையின் ஊட்டப் பாடசாலையாகச் செயற்பட்டு வந்தது. இந்தப்பாடசாலை 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் மூடப்பட்டது.

கதிரிப்பாய் சந்திக்கு கிழக்குப்பக்கத்தில் கதிரிப்பாய் அமெரிக்கன் மிஷன் பாடசாலை யும் சந்திக்கு மேற்குப்புறத்தில் கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாசாலையும் 200 மீற்றர் இடைவெளியில் இரண்டு பாடசாலைகளும் ஏட்டிக்குப்போட்டியாகக் கல்வி முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வந்தன. கதிரிப்பாய் அமெரிக்கன் மிஷன் பாடசாலையின் கட்டடங்கள், கூரைகள் சேதமடைந்த நிலையில் தற்பொழுதும் காணப்படுகின்றது.

கதிரிப்பாய் அமெரிக்கன் மிசன் பாடசாலையுடன் போட்டியிட்டு கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாலயம் நின்று நிலைக்கமுடியுமா? வளரமுடியுமா? என நடுநிலையாளர் மத்தியில் கேள்வி எழும்பிய நிலையில் தனது கல்விப்பணியை மேற்கொண்டு வந்த கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாலயம் மாணவர் தொகையில் படிப்படியாக முன்னேறியது. கதிரிப்பாய் கிராமத்துக்கு அயலில் உள்ள தம்பாலை , வருணன், வளலாய், இடைக்காடு, பத்தமேனி ஆகிய கிராமங்களில் உள்ள மாணவர் களும் சுப்பிரமணிய வித்தியாலயத்தில் சேர்ந்து கல்வி கற்றனர். 1934ஆம் ஆண்டு மூன்றாம் தவணையில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையில் எட்டுவருட காலப்பகுதிக்கு உள்ளே கனிஷ்ட சிரேஷ்ட, இடைநிலை வகுப்புக்கள் செயற்படத்தொடங்கின. 250இற்கும் மேம்பட்ட மாணவர்கள் பாடசாலையில் கல்வி கற்றனர். எஸ்.எஸ்.சீ.தமிழ் மொழிப்பிரிவு 1942 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கிறிஸ்தவ கல்விச்சூழலை விடுத்து சைவத்தமிழ் கல்வியையும் அப்பாற்பட்ட நிலையில் கற்கவேண்டும் என்ற பெற்றோர் ஊர்பொதுமக்களின் ஏகோபித்த விருப்பமும் பாடசாலையை குறுகிய காலத்தில் தனித்துவமான முறையில் வளர்வதற்கு ஊட்டமாக அமைந்தது. ஆரம்ப காலத்தில் தீர்மானிக்கப்பட்ட சுண்ணாம்பு கட்டடம் மற்றும் அமைப்புக்கள் இன்றும் பாவனையில் உள்ளன.

பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதியில் கட்டடம், மற்றும் வசதிகளை குறித்த காலப்பகுதியில் கற்பிக்க ஆசிரியர்களும் ஊர்ப்பொதுமக்களும், ஒன்று சேர்ந்து சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன் சிரமதானம் செய்து வழங்கினர். ஊர்மக்கள் ஒன்றுபட்டு ஒத்துழைப்பு வழங்கும் நிறுவனங்கள் குறுகிய காலப்பகுதியில் வளரமுடியும் என்பதற்கு கதிரிப்பாய் பாலசுப்பிரமணிய வித்தியாலயத்தின் ஆரம்ப வளர்ச்சி எடுத்துக்காட்டாக அமைகின்றது.

பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதியில் இருந்து மாணவர்களுக்கு இலவசமாக மதிய உணவு வழங்கப்பட்டதோடு மதிய உணவை பொருத்தமான முறையில் தயாரித்து வழங்குவதற்கு வசதியாக 20x10 = 200 சதுர அடி விஸ்தீரணத்தில் சமையல் கூடமும் நிறுவப்பட்டது. பாடசாலையின் முதலாவது அதிபராக வளலாயைச் சேர்ந்த வி.கந்தையா பொறுப்பேற்றுக்கொண்டார். ஆசிரியர்களாக பண்டிதர் ஆ.சின்னத்துரை, கு.செல்லத்துரை, பொ.நாகலிங்கம் ஆகியோரும் பொறுப்பேற்றுக்கொண்டனர். குறித்த காலச்சூழலில் கடமையாற்றிய அதிபர், ஆசிரியர்கள் தமது ஊதியத்தை கருத்தில் கொள்ளாமல் மாணவர்கள் கல்வியை மேம்படுத்த வேண்டும் மாணவர் எண்ணிக்கை அதிகரிக்க வேண்டும் என்ற உயர்நோக்கோடும் அர்ப்பணிப்போடும் கடமையாற்றினர். அவர்களின் அர்ப்பணிப்போடு கூடிய சேவை முன்னெடுப்புக்களுக்கு உள்ளூர் பிரமுகர்களும் பொதுமக்களும் பக்கபலமாக நின்று உதவினர். தற்பொழுது பாடசாலையின் அதிபராக த.உதயநாதன் கடமை புரிகின்றார்.

ஊரே கூடி ஒன்று சேர்ந்து சைவத்தமிழ் பாரம்பரியத்தோடு கூடிய கல்வியை மாணவர்களுக்கு வழங்கவேண்டும் என்ற உயர்நோக்கோடு உருவாகிய கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாசாலை குறுகிய காலப்பகுதியில் வளர்ந்து சிரேஷ்ட தராதரப்பத்திர வகுப்பு 1942ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 1934ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை ஏழு வருட காலத்தில் வளர்ச்சியடைந்தது. இந்த வளர்ச்சி ஊர் மக்கள் பாடசாலைமீது கொண்டிருந்த நம்பிக்கையையும், மாணவர்களின் கல்வி வளர்ச்சியையும் பாடசாலையின் வளர்ச்சியையும் குறித்த காலப்பகுதியில் கடமையாற்றிய அதிபர், ஆசிரியர் குழாம் ஆற்றிய கல்விச்சேவையையும் வெளிப்படுத்தி நின்றது.

பாடசாலையில் கல்வி பயின்ற மாணவர்கள் பல்வேறு வகையிலும் சிறந்து விளங்கியதோடு இன்று தமது கல்விக்கு வளம் சேர்த்த அறிவாலயத்தை மறந்து விடாமல் உதவி வருவதை பாடசாலை பரிசளிப்பு விழா முன்வைப்பில் அதிபர் சுட்டிக்காட்டியுள்ளார். ஆரம்பகாலத்தில் குறித்த சூழலோடு போட்டி போட்டு முன்னேறிய பாடசாலையின் கல்விப்பாரம்பரியம் தொடர்நிலையில் பாதுகாக்கப்படாமல் இடைக்காலத்தில் நலிவடைந்து தற்பொழுது தரம் 5 வரையான வகுப்புக்களைக் கொண்ட ஆரம்பப் பாடசாலையாக செயற்பட்டு வருகின்றது.

பலாலி இராணுவத் தளத்துக்கு அண்மையில் (2 கிலோமீற்றர்) அமைந்துள்ள பாடசாலை இராணுவ நடவடிக்கைகளினாலும் ஷெல் வீச்சுக்களாலும் பல்வேறு விதமான நெருக்கடிகளுக்கும் பாதிப்புக்களுக்கும் உள்ளாகியது. 1980 களுக்கு பின்னர் குறித்த பாடசாலைச்சூழலில் உள்ள மக்களின் வாழ்க்கை இடம்பெயர்வு மற்றும் அச்சம் நிறைந்த நிலையில் இருந்தமையினால் மாணவர்கள் பாடசாலையை விட்டு விலகி பாதுகாப்புக்கருதி வேறு பாடசாலைகளுக்குச் சென்றனர். பாடசாலையும் காலத்துக்குக்காலம் இடம்பெயர்ந்ததோடு 1990ஆம் ஆண்டு காலப்பகுதியோடு குறித்த சூழலில் இருந்து முற்றாக இடம்பெயர்ந்து அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையோடு இணைந்து செயற்பட்டது.

இடம்பெயர்ந்து செயற்பட்ட காலப்பகுதியில் ஆசிரியர் ஆளணிப் பற்றாக்குறை மற்றும் வளவசதிகள் பற்றாக்குறை என்பவற்றினால் பாடசாலையின் செயற்பாடுகளை அதிபர் மட்டுமே முன்னெடுத்து வந்திருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. குறித்த காலப்பகுதியில் அதிபர் தர நிலையில் உள்ளவர்கள் முகாமைத்துவத்துக்கு பொறுப்பாக இல்லாமல் கடமை நிறைவேற்றும் அதிபர்களே முகாமைசெய்து வந்தனர். அந்த நிலையே இன்றுவரை காணப்படுகின்றது. பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து அதிபர்களாகக் கடமையாற்றியவர்கள் என்ற வகையில் வீ.கந்தையா, எஸ்.முருகுப்பிள்ளை, ச.சிவக்கொழுந்து, பொ.திருமேனி, எஸ். சீவரத்தினம், மு.இராசநாயகம், இ.சிவஞானசுந்தரம், எஸ்.ஏ.யோகராசா, திருமதி த.நடராசா 2001.05.04 ஆம் திகதியில் இருந்து தற்போதைய அதிபர் த.உதயநாதனும் அதிபர்களாகக் கடமையாற்றியுள்ளனர். அதிபர்களின் சேவை நன்றியறிதலுடன் பாடசாலைச் சமூகத்தினால் நினைவு கூரப்படுகிறது.

பாடசாலைக்கான வளவசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் கல்வித்திணைக் களத்துடன் 'யுனிசெவ்', 'ஜீ.ரி.இசற்' போன்ற அமைப்புக்களும் காலத்தின் தேவையை அறிந்து பல்வேறு வகையான உதவிகளை வழங்கி வருகின்றன. தற்பொழுது மாணவர் எண்ணிக்கை குறைவடைந்து வருவதோடு ஆசிரியர் ஆளணியும்

மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இருப்பதாகக் கூறப்படுகின்றது. ஆரம்பப் பாடசாலையாக தற்பொழுது செயற்பட்டுவரும் கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கான கல்வி வளவசதி அனைத்தும் உள்ளடக்கப்பட்டிருப்பதோடு ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கான கவின் நிலையுடன் பாடசாலை செயற்பட்டு வருகின்றது.

பாடசாலையின் ஆரம்பகாலம் மிக உயர் நிலையில் காணப்பட்ட போதிலும் அண்மைக்கால வளர்ச்சிப்போக்கு சராசரிக்குக் குறைவான நிலையிலேயே காணப்படுகின்றது. பெற்றோர் தமது பிள்ளைகளை வெளியிடங்களில் உள்ள பாடசாலைகளுக்கு அனுப்பி வைப்பதில் ஆர்வம் கொண்டுள்ளனர். இந்த வகையில் பாடசாலையில் ஆண்டுதோறும் தரம் ஒன்று மாணவர் அனுமதி ஒற்றை இலக்க எண்ணிக்கையிலேயே அமைந்து காணப்படுகின்றது. பாடசாலையின் பழைய மாணவனும் கிராமத்தின் மூத்த பிரஜையுமான ஓய்வு பெற்ற பொதுச்சுகாதார பரிசோதகர் பொ.கந்தையா (வயது 88) கருத்து தெரிவிக்கையில்: " பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதியில் கிராம முன்னோடிகள் கூறுவதைக்கேட்டு ஊரே ஒன்றுகூடி கருமங்களை நிறைவு செய்தன. இன்று அந்த நிலை மாறிவிட்டது. இன்று பிள்ளைகளை தூர இடங்களுக்கு அனுப்பி கல்வி கற்பிக்கவேண்டும் என்ற மாயத்தோற்றம் உள்ளூர் பாடசாலைகளை மதிக்காத, புறக்கணிக்கின்ற நிலையை உருவாக்கியுள்ளது. ஊர்மக்கள் பாடசாலைகளை உயர்வடையச் செய்யவேண்டும் என்ற கருத்தியல் மாற்றம் ஏற்படாத வரையில் கிராமப்புறப் பாடசாலைகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகவே இருக்கும் . இந்த நிலையை மாற்றி அமைப்பதில் கல்வி அதிகாரிகளும் தமது கடமைப்பொறுப்புக்களை உணர்ந்து ஆரம்பப் பாடசாலைகளை பாதுகாக்க முன்வரவேண்டும்" எனக்கூறினார் .

கிராமப்புறங்களில் உள்ள ஆரம்பப்பாடசாலைகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற புதிய கருத்தேற்றமும் அதற்கான முன்னெடுப்புக்களும் தற்பொழுது முனைப்புக்கொள்ளத் தொடங்கியுள்ளது. இந்த வகையில் சில கட்டமைப்புக்கள் உருவாக்கப்பட்டு யாழ்.கல்வி வலய கல்விப்பணிப்பாளரிடம் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அச்சுவேலிப்பகுதியில் உள்ள ஐந்து பாடசாலைகள் இந்த வகையில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. அதில் ஒன்று வளலாய் சுப்பிரமணிய வித்தியாலயம். பாடசாலைகளின் வளர்ச்சியில் பாடசாலைச்சமூகம் அக்கறைகொள்ள வேண்டும் . அந்த வகையில் கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாலயம் மேலும் வளரவேண்டும் எனப் பிரார்த்திப்போம் .

உதயன் - 07.05.2012. 14.05.2012



# 28 சைவத்தமிழ்ப் பாரம்பரியங்களை வளர்த்த பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயம்

மிஷனரிமாரின் வருகையை அடுத்து கல்வியில் விழிப்புணர்வும் வளர்ச்சியும் ஏற்பட்ட காலத்தில் சைவப்பாரம்பரியங்களில் எதிர்பாராத பாதிப்புக்களும் சைவ சமயத்தை விடுத்து ஏனைய சமயங்களைப் பின்பற்றக்கூடிய மாறுபட்ட சூழ்நிலையும் ஏற்பட்டது. அந்தவேளையில் தூய சைவத்தமிழ்ப் பாரம்பரியங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற உயர்ந்த நோக்கோடு ஸ்தாபிதம் செய்யப்பட்ட கல்விக்கூடமே பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயம்.

பத்தமேனியையும் அதனோடு இணைந்த அயற்கிராமங்களிலும் வாழ்ந்த மக்கள் தூர இடங்களுக்கு அலைந்து திரிந்து மாறுபட்ட சிந்தனை மயப்படுவதைத் தடுக்க அந்தக் கிராமத்தில் பாடசாலை செயற்படவேண்டும் என்ற உயர் நோக்கோடு 1932.02.15 ஆம் திகதி பாடசாலையின் செயற்பாடுகள் ஆரம்பமாகின. பாடசாலைக்கான காணியை வழங்கி பாடசாலையை உரியமுறையில் செயற்பட வைக்க அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர் ஸ்ரீமான் மாப்பாணப்பிள்ளை சுப்பிரமணியம்.

சைவத்தமிழ் கல்வி பேணப்பட வேண்டும் என்ற சிந்தனை உருவாக்கம் பத்தமேனிக் கிராமத்தை மையமாகக்கொண்டு உருவானது. இந்த விழிப்புணர்வின் வெளிப்பாடாக 1931ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் பத்தமேனியில் பொதுமக்களின்

ஒன்றுகூடல் நடைபெற்றது. இந்த ஒன்றுகூடலில் மேற்கொள்ளப்பட்ட ஒருமித்த தீர்மானமே "சைவத்தமிழ்ப் பாடசாலைகளை" உருவாக்குவது என்பது ஆகும். இந்த ஒருமித்த கருத்துக்கு செயல்வடிவம் கொடுப்பதற்கு அச்சுவேலி சந்நிதி கோயில் வீதியின் மேற்குப்பக்கத்தில் வீதியோரத்திற்கு அண்மையில் உள்ள இடத்தைத் தெரிவுசெய்தனர். நிலத்தை பாடசாலைக்கு உபகாரம் செய்ததோடு பாடசாலைக்கான கட்டடம் அமைப்பதில் பொதுமக்களோடு இணைந்து முழுமையாக ஒத்துழைத்தவர் மாப்பாணப்பிள்ளை சுப்பிரமணியம். இவர் பாடசாலையின் ஆரம்பகாலம் முதல் பாடசாலை 1962ஆம் ஆண்டு அரசு பொறுப்பேற்கும் வரை பாடசாலை முகாமை யாளராக இருந்து பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணை புரிந்தவர்.

ஆரம்பப் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்ட இரத்தினேஸ்வரி வித்தியாலயம் , ஆரம்பிக்கப்பட்ட நான்காவது வருடம் J.S.C.(வகுப்பு 8) வரையான பாடசாலையாகத் தரம்உயர்த்தப்பட்டு ஆரம்பப்பிரிவுக்கு அடுத்தநிலையில் இடைநிலை வகுப்பு மாணவர்களும் பாடசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இடைக்காடு மகாவித்தி யாலயம், அச்சுவேலி மத்திய கல்லூரி என்பவற்றின் செல்வாக்குக்கு மத்தியில் பத்தமேனியில் சைவத்தமிழ் வித்தியாலயம் குறிப்பிடத்தக்களவு முன்னணி வகித்தது என்பது குறித்த காலப் பகுதியில் பாடசாலைமீது கொண்டிருந்த அசைக்கமுடியாத நம்பிக்கையின் வெளிப்பாடு என்பதில் சந்தேகம் இல்லை.

பாடசாலையின் ஆரம்பகாலம் தொடக்கம் 1960 ஆம் ஆண்டு வரை அதிபராகக் கடமையாற்றியவர் ச.கிருஷ்ணப்பிள்ளை. இவரது பதவிக்காலம் பாடசாலையின் வளர்ச்சியில் பொற்காலம் எனப் போற்றப்படுகின்றது. பாடசாலை ஆரம்பத்தின் நோக்கத்தை முழுமையாக நிறைவடையச்செய்வதற்கு தனது முழு நேரத்தையும் முயற்சியையும் பயன்படுத்திய கிருஷ்ணப்பிள்ளையின் சேவை பாடசாலைச் சமூகத்தினால் பசுமையுடன் நினைவு கூரப்படுகின்றது. க.கிருஷ்ணபிள்ளைக்குப் பின்னர் பாடசாலையின் அதிபர் பதவியைப் பொறுப்பேற்றவர் எஸ்.மயில்வாகனம். பாடசாலையின் தொடர்ச்சியான வளர்ச்சிப்பாதையில் 1982ஆம் ஆண்டு வரையான காலம் மிக உன்னதமான காலமாக விளங்கியது.

கோப்பாய் கல்வி வட்டாரத்தில் தரம் - 2 பாடசாலைகள் மட்டத்தில் முன்னணிப் பாடசாலையாகத் திகழ்ந்தது. இந்த உயர் நிலைக்குக் காரணம் அந்தந்தக் காலப் பகுதியின் முகாமைத்துவமே. குறித்த காலப்பகுதியில் பாடசாலையின் மேம்பாட்டில் சமூகம் அக்கறையோடு செயற்பட்டது. பாடசாலை முகாமைத்துவத்துக்கும் பாடசாலைச் சமூகத்துக்கும் பிரிக்கமுடியாத நெருக்கமும் ஒன்றிணைப்பும் காணப்பட்டது. இந்த வகையில் குறித்த காலப்பகுதியில் கிராமப்புறப்பாடசாலைகள் சகல துறைகளிலும் பிரகாசித்தமை கண்டுணரப்பட்டுள்ளது.

1982ஆம் ஆண்டை அடுத்து வந்த போர்ச்சூழல் கிராமப்புறப் பாடசாலைகளின் தனித்துவத்தை குழப்பத்துக்கு உள்ளாக்கி நிலைதளரச்செய்தது. இந்த வகையில் நிரந்தர பாதுகாப்புத் தளங்களுக்கு அண்மையில் அமைந்திருந்த பாடசாலைகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அந்த வகையில் பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயத்தின் போக்கி லும் பெரும் தாக்கம் ஏற்பட்டது.

சைவத்தமிழ் பாரம்பரியங்களை வளர்த்து ஏழை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு வளமூட்டி வரும் பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயம் 80 ஆவது ஆண்டில் தனது பணி முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வருகின்றது. கல்வி தொடர்பான செயற்பாடுகள் நகரமயமாக்கலை நோக்கியதாக இல்லாமல் கிராமமட்டத்தில் மட்டும் உள்ளூர்ப் பாடசாலைகளை உள்ளடக்கியிருந்த 1980 ஆம் ஆண்டுகளுக்கு முந்திய காலப்பகுதியில் தனக்கென தனித்துவமான சிறந்த அம்சங்களுடன் விளங்கியது இந்தப் பாடசாலை. கல்வியின் அடைவு மட்டத்தில் மேம்பட்டிருந்த வித்தியாலயத்தில் 400 மாணவர்கள் வரை கல்வி கற்றதாகப் பதிவேடுகளில் இருந்தும் உள்ளூர் பிரமுகர்களின் நேர்காணலிலிருந்தும் அறிந்து கொள்ளமுடிகின்றது.

1980களுக்கும் பின்னர் தோன்றிய ஆயுத போராட்டச்சூழல் பாதுகாப்புத் தரப்பினரின் முகாம்களைச் சூழவுள்ள கல்விக்கூடங்களில் பெரிய பாதிப்புக்களை ஏற்படுத்தியது. அதன் காரணமாக பலாலி இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு அண்மையில் உள்ள பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயம் பாதிப்புகளுக்கு உள்ளாகியது. பாடசாலையைச் சூழவுள்ள மக்களும் பாடசாலையில் கல்வி கற்ற மாணவர்களும் இடம்பெயர்ந்த நிலையில் மாணவர்களின் எண்ணிக்கை பெருமளவில் வீழ்ச்சியடைந்தது. பாடசாலையின் வளங்களும் சேதமடைந்தன.

1932 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட வித்தியாலயத்தில் 1936ஆம் ஆண்டு வரையும் முதலாம் வகுப்பில் இருந்து 5ம் வகுப்பு வரையான மாணவர்களுக்கான வகுப்புக்கள் நடைபெற்று வந்தன. 1937ஆம் ஆண்டு தரம் 5ஆம் வகுப்புக்கு மேலாக தரம் 8 ஆம் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டு 2001ஆம் ஆண்டு வரை தரம் 1 தொடக்கம் 8 வரையான வகுப்புக்களைக் கொண்டதாகச் செயற்பட்டு வந்தது. 2001ஆம் ஆண்டில் இருந்து தரம் 9 வரையான வகுப்புக்களைக் கொண்டதாக இன்றுவரை இந்தப் பாடசாலை செயற்பட்டு வருகின்றது.

பாடசாலையின் வளவசதிகள் தொடர்பாகத் தற்போதைய அதிபர் எஸ்.மோகன ராஜன் கருத்துத்தெரிவிக்கையில் :

வித்தியாசாலையின் ஆரம்பகால பழைய கட்டடத்தொகுதியுடன் அண்மைக் காலத்தில் 60' X 20' நீளம் கொண்ட கட்டடம் மட்டும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. புதிய கட்டடத்தில் உள்ள 10 அடி அகலமான சிறிய அறையில் அதிபரின் அலுவலகம் செயற்படுகின்றது. உலக உணவுத்திட்டத்தினால் மதிய உணவு சமையலுக்கான சமையல்கூடம் ஒன்று கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு கட்டடங்களும் தான் புதிய கட்டடங்கள். EKSP திட்டத்தின் கீழ் 5 கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. அதனை இணைப்புச்செய்து மாணவர்களின் கற்றல் செயற்பாட்டுக்குப் பயன்படுத்து வதற்குரிய கட்டட வசதி இல்லை. கனடாவில் இருந்து வந்த பழைய மாணவனான பவானந்தன் வரதராசன் 75 ஆயிரம் ரூபா பெறுமதியில் கணினித்தொகுதியொன்றை அன்பளிப்புச்செய்துள்ளார். தொடர்ந்து பாடசாலையின் தேவைக்கு உதவுவதாக வாக்குறுதியும் அளித்துள்ளார். இவ்வாறு புலம்பெயர்ந்த பழைய மாணவர்கள் தமது கல்விக்கு அடித்தளமிட்ட கல்விக்கூடத்தை நினைவில் நிறுத்தி உதவிகளை வழங்க முன்வருவது பாடசாலையின் கல்விவளங்கள் சிலவற்றை நிறைவுசெய்வதற்கு வசதியாக இருக்கும் எனக்கூறிய அதிபர் மீண்டும் பாடசாலையை உயர்நிலைக்கு கொண்டு வருவதற்கு பாடசாலைச்சமூகம் ஒன்றுபட்டு உழைக்கவேண்டும் எனத் தெரிவித்தார்.

கிராமப்புறங்களில் உள்ள வசதி படைத்த பொருளாதார வளமுள்ள மாணவர்கள் நகரப்புறப்பாடசாலைகளை நோக்கி நகர்வதால் பொருளாதார வளம் குன்றிய வசதியற்ற மாணவர்கள் மட்டும் கல்விகற்கும் பாடசாலைகள் கல்வி நிர்வாகத்திலும் திட்டமிட்டுப் பின்தள்ளப்படுவதாகக் கூறப்படுவதில் உண்மையில்லாமல் இல்லை.

ஆங்கில ஆசிரியர் ஆளணி நீண்ட காலமாக நிரப்பப்படாமல் வெற்றிடமாக இருந்தது. 2 ஆம் தவணைப் பரீட்சைக்காலத்தில் பகுதிநேர ஆங்கில ஆசிரியை ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

எல்லோருக்கும் கல்வியில் சமத்துவம் என்ற கோஷங்கள் , கல்வித்தத்துவங்கள் ஏட்டில் மட்டும் இல்லாமல் நடைமுறையில் அமுல் செய்யவேண்டுமாயின் ஆரம்பப் பாடசாலைகள் மற்றும் தரம் 5 வரையுள்ள மாணவர்களுக்கு நகரம், கிராமம் என்ற வேறுபாடுகள் இன்றி தேசிய கல்விக்கொள்கைக்கு அமைய சகல வசதிகளும் வழங்கப்படவேண்டும். அத்தகைய சூழ்நிலை உருவாக்கப்படுமானால் இரத்தினேஸ்வரி வித்தியாலயம் போன்ற கல்விக்கூடங்களில் கற்கும் மாணவர்கள் கல்வியில் உயரமுடியும் . இரத்தினேஸ்வரி வித்தியாலயம் மீண்டும் மேல்நிலை பெற வாழ்த்துவோம்.

உதயன் - 11.08.2011, 18.08.2011




# 29 கிராமப்புறக்கல்வி வளர்ச்சியில் புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலை

யாழ் மாவட்டத்தில் கல்விப் பாரம்பரியத்தில் புத்தூருக்கு தனித்துவமான இடம் உண்டு. பெரும் தனவந்தரும் நிலச்சுவாந்தருமான புத்தூர் மழவராயர் கந்தையா கல்வி, ஆன்மீகம், அறம் ஆகிய மூன்றையும் மேம்படுத்துவதற்கு தன்னால் இயன்ற மட்டும் தொண்டாற்றியவர். தனது சொத்துக்களை புத்தூரை மத்தியாக வைத்து கல்விக்காக புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி, ஆன்மீக மேம்பாட்டை கருத்தில்கொண்டு புத்தூர் சிவன்கோயில், அறப்பணியாக புத்தூர் அன்னசத்திரம் மூன்றையும் ஒன்றோடு ஒன்று தொடர்புபட்ட நிலையில் ஒரே சூழலில் ஸ்தாபிதம் செய்து வளர்த்தவர். அத்துடன் புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரியில் பயில்கின்ற மாணவர் களுக்கு தங்குமிடம் மற்றும் உணவு வழங்கியதோடு கல்லூரி வளவில் சோமஸ்கந்தர் ஆலயத்தையும் நிறுவி மாணவர் ஆத்மீக வளர்ச்சியை வழிப்படுத்தியவர்.

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியில் தரம் 1 முதல் 13 வரையான வகுப்புக்களில் மாணவர் கல்வி பயில்வதற்கு வசதி இருந்தது. உயர்தரப்பிரிவில் கலை, வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம் ஆகிய நான்கு பிரிவுகளிலும் செயற்பட்டதோடு தரம் 1 முதல் தரம் 13 வரையான வகுப்புக்களில் இரண்டாயிரம் மாணவர்கள் வரையில் கல்வி

கற்றனர். ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி இசுறு பாடசாலை கட்டமைப்பில் உள்ளீர்க் கப்பட்டதை அடுத்து இசுறு பாடசாலை நிபந்தனைக்கு அமைய கல்லூரியின் ஆரம்பப்பிரிவு வேறாக்கப்பட்டு தனிப்பாடசாலையாக செயற்படுவதற்கு கல்வி அமைச்சு அனுமதி வழங்கியது. அந்த வகையில் கல்லூரியில் ஆரம்பப்பிரிவு 2010ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16ஆம் திகதி முதல் "புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலை" என்ற பெயரோடு தனிப்பாடசாலையாக செயற்படத்தொடங்கியது. புதிய பாடசாலை யின் அதிபராக இலங்கை அதிபர் சேவையை சேர்ந்த இ.கோகுலராகவன் நியமிக்கப் பட்டார்.

கல்லூரியின் ஆரம்பப்பிரிவு வழமையாகச் செயற்பட்ட பகுதியை உள்ளடக்கி 13 வகுப்பறைகளோடு உள்ளடக்கிய 8 பரப்பு கல்லூரி நிர்வாகத்தால் புதிய ஆரம்பப் பாடசாலைக்கு வழங்கப்பட்டது. சோமஸ்கந்தக் கல்லூரியின் அதிபர் எஸ்.இராஜ மனோகரனும் கல்லூரிச்சமூகமும் தாராள சிந்தனையோடும் மனிதாபிமானத்தோடும் புதிய ஆரம்பப் பாடசாலை செயற்படுவதற்கான சகல வள வசதிகளையும் வழங்கி உதவினர்.

புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலை சோமஸ்கந்தக்கல்லூரிக்கு மேற்குப்புறத்தில் சிவன் கோயில் வீதியில் அமைந்துள்ளது. ஒவ்வொரு வகுப்புப்பிரிவிலும் மூன்று மூன்று வகுப்புக்களாக தரம் 1 முதல் தரம் 5 வரையான ஐந்து வகுப்புக்களிலும் 15 வகுப்புக்கள் செயற்படுகின்றன. அதிபரோடு சேர்ந்து மொத்தம் 17 ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர். 486 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர்.

சோமஸ்கந்தக் கல்லூரியுடன் இணைந்த நிலையில் ஆரம்பப்பிரிவு செயற்பட்ட காலப்பகுதியில் ஆரம்பப்பிரிவு பெரியளவில் துலங்கவில்லை என்றும் ஆரம்பப் பிரிவை தனிப்பாடசாலையாக வேறுபடுத்தி செயற்பட வைப்பது ஆரம்பப்பிரிவு மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு வசதியாக இருக்கும் என்ற கருத்து குறித்த காலப்பகுதியில் நிலவியபோதிலும் அதனை செயன்முறைப்படுத்துவதற்கு ஏற்புடைய காலம் கனியவில்லை. ஆனால் 2010 ஆம் ஆண்டு அதற்கு ஏற்புடைய காலமாக இருந்தது. இசுறுப்பாடசாலை கட்டமைப்பு உருவாகிய சூழ்நிலை.

புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலையின் மத்தியில் சோமஸ்கந்தர் ஆலயம் அமைந்துள்ளது. அதனைச்சூழ மாணவர்களுக்கான கற்றல் செயற்பாடுகளுக்கான வகுப்பறைகள் அமைந்துள்ளன. இந்த களநிலைக் கட்டமைப்பு பெயருக்கு ஏற்புடைய தாகவும் மாணவர்களின் சமய சிந்தனைக்கு வளம் சேர்ப்பதாகவும் அமைந்துள்ளது. புதிய பாடசாலையாக இந்து ஆரம்பப் பாடசாலை செயற்படுவதற்கு முந்திய காலச்

சூழலில் நிலவிய கருத்துநிலை முற்றாக மறைந்து பெற்றோரும் பாடசாலைச் சமூகமும் புதிய உத்வேகத்துடன் ஆரம்பப்பாடசாலையின் வளர்ச்சியில் அக்கறையோடு ஈடுபாடு கொண்டு ஒத்துழைத்து வருவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. அந்த வகையில் அதிபரும் பெற்றோருடன் மிக நெருக்கமான முறையில் தொடர்புகளைப் பேணிவருவது பாடசாலை சமூகத்தை நம்பிக்கை கொள்ளச்செய்துள்ளது.

ஆரம்பப் பாடசாலைகளின் அடைவு மட்டத்தை கல்வித்தரத்தை வெளிப்படுத்தி சமூகத்தை பாடசாலையின்பால் நம்பிக்கைகொள்ள வைக்கும் குறிகாட்டி தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறு. இந்த வகையில் புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலையின் 2011 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேற்றில் ஏழு மாணவர்கள் புலமைப்பரிசில் பெறுவதற்கு தகைமை பெற்றிருந்தனர். பெருமளவு மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைந்திருந்தனர்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 2011ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பெறுவதற்கு தகைமை பெறும் நிலையில் சித்தியடைந்த வி.ரிஷிசங்கர், க.விதுசனன், கே.திரேசா, பா.பிரசாத், ம.வர்ணிகா,ம.விேனாசன், வி.விதுஷா ஏழு பேரும் பாடசாலை யில் முதல் வெற்றி வீரர்களாகத் துலங்குகின்றனர்.

கிராமப்புற பாடசாலைகள் இதுவரையில் மக்களின் முழுமையான நம்பிக்கையை பெற்றுக்கொள்ளாத நிலை காணப்படுகின்றன. அந்த வகையிலேயே தரம் ஒன்று தொடக்கம் உயர்தர வகுப்பு வரை பல நூற்றுக்கணக்கான மாணவர்களை நகரப் பாடசாலைகளை நோக்கி பெற்றோர் அனுப்பி வைத்துவிட்டு மனச்சுமையுடன் நாளாந்தம் காத்திருக்கின்றனர். இந்த வகையில் பிள்ளைகளும் பல்வேறு உளநெருக்கடிகளுக்கு உள்ளாகி வருகின்றனர்.

கல்வியில் கிராமம் நகரம் என்ற வேறுபாடு இன்றி சமவாய்ப்பு ஏற்பட வேண்டும் என்பதற்காகவே இசுறுப் பாடசாலை ஆயிரம் பாடசாலை அபிவிருத்தித் திட்டங்கள் அரசினால் ஏற்படுத்தப்பட்டன. இசுறுப் பாடசாலை அபிவிருத்தித்திட்டத்தின் பிரகாரம் தோற்றம் பெற்றதே புத்தூர் இந்து ஆரம்ப பாடசாலை. புதிய பாடசாலையில் சமூகம் கொண்டுள்ள நம்பிக்கை உரிய முறையில் நிறைவேற்றப்படுமானால் ஆரம்பப்பிரிவு மாணவர்கள் தரம் 1 – 5 வகுப்புக்களில் கணிசமான எண்ணிக்கையானோர் கிராமியச்சூழலிலேயே தமது ஆரம்பக் கல்வியை மன நிறைவோடு பெற்றுக்கொள்ள முடியும்.

புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலை புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியில் இருந்து 2010ஆம் ஆண்டு ஜூன் 16 ஆம் திகதி பிரிந்து வேறு பாடசாலையாக புதிய

நிர்வாகத்தின் கீழ் செயற்படத் தொடங்கியதிலிருந்து, ஆரம்பக்கல்வியில் உறுதி யான வளர்ச்சிக்கு இடமளித்து முன்னேறி வருவதாக பாடசாலைச் சமூகம் நம்பிக்கை கொண்டு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றது. புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலையின் முதலாவது அறுவடையாக 2011ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் வி.ரிஷி சங்கர், க.விதுஸனன், கோ.திரேகா, பா.பிரசாந், கு.வர்ணிக்கா, ம.விரோசன், வி.துர்ஸன் ஆகிய ஏழு மாணவர் சித்தியடைந்து தரம் ஐந்து புலமைப் பரிசில் பெறுவதற்கு தகுதி பெற்றனர். கணிசமான தொகையினர் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக்கொண்டனர். இது பெற்றோரின் எதிர்பார்ப்பை மெய்மைப்படுத்தியதோடு ஆசிரியர்கள், அதிபரையும் புத்தூக்கம் கொள்ளச்செய்தது.

புலமைப்பரிசில் பெறுவதற்கு தகுதி பெற்ற ஏழு மாணவர்களும் தமது வெற்றிக்கு உறுதுணையாக இருந்த பாடசாலைக்கு உதவவேண்டும்; பாடசாலையில் நிலவும் அடிப்படைத்தேவைகளை ஓரளவேனும் நிறைவு செய்யவேண்டும் என்ற உயர்நோக்கோடு மூன்று இரும்பு அலுமாரிகளை 40 ஆயிரம் ரூபாவுக்குக் கொள்வனவு செய்து பாடசாலைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

புதிய பாடசாலையாகப் பிரியும்போது உத்வேகத்தோடு பிரிந்தபோதிலும், நாளாந்த நடைமுறையில் தேவைகளை உரிய வேளையில் நிறைவு செய்து கொள்வதில் எதிர்பாராத இடர்பாடுகளைப் பாடசாலை நிர்வாகம் எதிர்கொள்ளவேண்டியேற்பட்டது. பாடசாலையின் தேவையைக் கருத்தில் கொண்டு யூனிசெவ் நிறுவனம் புதிய மலசலகூடம் ஒன்றை நிறுவி மாணவர்களின் அடிப்படைத் தேவையை நிறைவு செய்தது. பாடசாலைச்சமூகத்தில் முன்னணிப் பிரமுகர் கு.மகாதேவன் ஒலிபெருக்கி சாதனத்தொகுதியை வழங்கி உதவினார். ஜேர்மனியிலுள்ள பழைய மாணவனான ரமேஸ் பாண்ட் வாத்தியக்கருவியை வழங்கியுள்ளார்.

யாழ்.கல்வி வலயம், பாடசாலையில் கணினிகூடத்தை நிறுவி நான்கு கணினித் தொகுதிகளையும் வழங்கியுள்ளது. பாடசாலை மாணவர்களின் பெற்றோர் போட்டோஸ்ரட் யந்திரம் ஒன்றை வழங்கியுள்ளனர். யுனிசெவ் நிறுவனம் ஐந்து லட்சம் ரூபா செலவில் தண்ணீர் தாங்கியை நிறுவி குழாய் இணைப்புக்களைச் செய்து மாணவர்களின் குடிநீர் வசதியை வளமாக்கியுள்ளது.

புதிய பாடசாலையின் அடிப்படைத்தேவைகளை நிறைவு செய்வதில் தாய்ப் பாடசாலையான ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியின் நிர்வாகமும் காலத்துக்கும் களநிலைக்கும் ஏற்ற வகையில் உதவிகள் ஒத்துழைப்புக்களை நல்கி வருவது பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து வருகின்றது.

பாடசாலையின் தேவை என்ற வகையில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவிய போதிலும் ஆங்கில ஆசிரியர் இல்லாமை பெருங்குறையாகவுள்ளது. மாணவர் களின் ஆங்கில அறிவு விருத்தியில் இது பெரும் பாதிப்பையும் ஏற்படுத்தி வருவதாக பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர். இந்தவகையில் வலயக்கல்வி நிர்வாகம் பாடசாலையின் தேவையை இனங்கண்டு நிறைவுசெய்யத் தவறி விடுதல் பெற்றோர் மத்தியில் மனத்தாக்கத்தை ஏற்படுத்தி வருவதோடு நகரப்பாடசாலைகளை நோக்கிப் பிள்ளைகள் செல்வதற்கும் வழிவகுத்து விடுகின்றது. பாடசாலையின் தேவைகள் , எதிர்கால அபிவிருத்தி தொடர்பாக பாடசாலையின் அதிபர் இ.கோகுலராகவன் கருத்து தெரிவிக்கையில் ,

புத்தூர் இந்து ஆரம்பப்பாடசாலை புதிய பாடசாலை என்ற வகையில் பெற்றோரின் நம்பிக்கையை நிறைவுசெய்து வருகின்றது. பாடசாலைச்சமூகம் சோமஸ்கந்தக் கல்லூரிக்கு அருகில் காணி ஒன்றைக் கொள்வனவு செய்து புதிய மாடிக்கட்டடம் ஒன்றை நிறுவி தனித்துவமான முறையில் பாடசாலையை செயற்பட வைப்பதற்கு எண்ணியுள்ளது. எண்ணம் நிறைவேறும் : நல்லன நடக்கும் எனத் தெரிவித்தார்.

உதயன் - 01.02.2012, 16.02.2012




# 30 உரும்பிராய் இந்துக் கல்லூரி

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள வண்.ஏ.பி.பாடசாலைகளில் ஒன்று உரும்பிராய் இந்துக் கல்லூரி. யாழ்ப்பாணம், பலாலி வீதியில் உரும்பிராய் சந்தியைக் கடந்து வடக்கு நோக்கிச் செல்லும்போது பிரதானவீதிக்கு மேற்குப்புறமாக வீதியோரத்தில் அமைந்துள்ளது. தற்பொழுது தரம் 6இல் இருந்து தரம் 13வரை உள்ள கல்லூரியில் 532 மாணவர்கள் வரையில் கல்வி பயில்கின்றனர். சிரேஷ்ட, இடைநிலைப் பிரிவில் கலை, வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம் ஆகிய நான்கு பிரிவிலும் 154 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். கல்விக்கான வளங்களும் கவின் நிலையும் நிரம்பப் பெற்ற ஆரோக்கியமான சூழல் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிற்கு பொருத்தமான வகுப்பறை வசதிகள் நிரம்பப்பெற்ற கல்லூரியின் அதிபராக ஆ.ஈஸ்வரநாதன் பணிபுரிகின்றார். 30 ஆசிரியர்கள் கடமை புரிகின்றனர்.

1911ஆம் ஆண்டு சித்திரை மாதம் 03ஆம் திகதி ஸ்தாபிதம் செய்யப்பட்டது. கல்லூரியை ஸ்தாபித்த வைத்திய கலாநிதி பு.வல்லிபுரம் ஆரம்பநாள் அன்று சுருட்டு சுற்றும் தொழிலில் ஈடுபட்டிருந்த 05 சிறுவர்களை சேர்த்து கல்லூரிக்கான வித்தியாரம்பத்தை நடத்தியதாகக் கூறப்படுகின்றது. கல்லூரியின் ஸ்தாபிதகால அதிபராக சின்னையா அவர்கள் கடமையாற்றியுள்ளார்.

உரும்பிராய்ச் சந்திக்கு அண்மையில் உள்ள கிறிஸ்தவ தேவாலயத்திற்கு அருகில் கிறிஸ்தவ குருமாரால் நடத்தப்பட்ட ஆங்கிலப் பாடசாலை செயற்பட்டு வந்தது. அதை அடுத்து சைவப்பிள்ளைகள் சைவசமயம் கலந்த சூழலில் கல்வி கற்கவேண்டும் என்ற எண்ணத்தினால் உரும்பிராய்ப் பகுதியில் வாழ்ந்த பெரியோர்களின் கருத் தொற்றுமையால் செல்லப்பா என்பவரின் வீட்டு விறாந்தையில் 05 மாணவர்களுடன் ஆரம்பமானது. இந்த நிலையில் உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி வேலுப்பிள்ளை பாடசாலைக்கென 10 பரப்புக் காணியை வழங்கி நிரந்தர கட்டடம் நிறுவுவதற்கு உதவினார். குறித்த காணியில் உரும்பிராய் 'இந்துக் கலவன் பாடசாலை' என்ற பெயரில் ஓலைக்கொட்டிலில் செயற்பட்டு வந்தது. பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட நேரமும் பாடசாலை நிறுவியவர்களின் அயராத முயற்சியாலும் அதே ஆண்டு இறுதியில் 70 மாணவர்கள் பாடசாலையில் சேர்ந்து கல்வி பயிலத் தொடங்கியதாகவும் பாடசாலைக்கு மாணவர்களை சேர்த்துக் கொடுப்பதற்கும் பாடசாலைக்கான வள வசதிகளையும் மற்றும் உதவிகளையும் வழங்குவதிலும் வைத்தியர் வல்லிபுரம் மற்றும் அமிர்தலிங்கம், அம்பலவாணர் உள்ளிட்ட பெரியோர்கள் மேற்கொண்ட முயற்சிகள் பாடசாலையின் வரலாற்றில் தனியிடம் பெறுகின்றது.

இதேகாலப்பகுதியில் சைவப் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியை கருத்தில் கொண்டு கிராமங்கள்தோறும் சைவப்பாடசாலைகளை ஆரம்பிக்கின்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. ஒரு சில வருடங்களில் பாடசாலையின் பரிபாலனம் இந்துக் கல்லூரிச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. 1915ஆம் ஆண்டு பாடசாலையில் தமிழ்ப் பிரிவும் ஆரம்பிக்கப்பட்டது. அதன் தலைமை ஆசிரியராக நீர்வேலியைச் சேர்ந்த பண்டிதர் வேலுப்பிள்ளை பணியாற்றினார். இந்தத் தமிழ் பிரிவில் அரிவரி தொடக்கம் மூன்றாம் வகுப்புவரை தமிழ்மொழி மூலம் ஆரம்பக்கல்வி போதிக்கப்பட்டு வந்தது. மூன்றாம் வகுப்பில் சித்தியடைந்ததும் ஆங்கில பாடசாலையில் முதலாம் வகுப்பில் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள்.

வலி.கிழக்கு கல்விப் பாரம்பரியத்தின் அடித்தளமாக இருந்து கல்வி வளர்ச்சிக்கு உதவியதோடு பல்வேறு வளவசதிகளோடும் உயர்ந்து நிற்கும் கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவிய அதிபர்கள் என்ற வகையில் சின்னையா, பண்டிதர் வேலுப்பிள்ளை ஆகியோர் ஆரம்பகால அதிபராகவும், தலைமை ஆசிரியர்களாகவும் பணியாற்றி கல்லூரிக்கு உறுதியான அடித்தளத்தை இட்டு வைத்தனர். வியாகேசன் 1915-1920, குமாரசாமி 1920-1923, தம்பு 1923-1926, சீதாராமன் 1926-1935, இராசரத்தினம் 1935-1937, சீதாராமன் 1937-1951, ஶ்ரீனிவாசன் 1951-1957, ஏ.வைத்தியலிங்கம் 1958-1971, சச்சிதானந்தம் 1972-1974, சுவாமிநாத சர்மா 1974-1975, தியாகராசா, கனகலிங்கம் 1975-1976, சிவானந்தன் 1976-1986, சிவபாலன் 1986-1996,

சண்முகரத்தினம் 1996-1998, அ.ஈஸ்வரநாதன் 1999இல் இருந்து இன்றுவரை பாடசாலையின் வளர்ச்சியில் பாடசாலைச் சமூகத்துக்கு இருக்கும் ஈடுபாடு மிக முக்கியமானது. அதிபர், ஆசிரியர்களின் முன்னெடுப்புக்களுக்கு பாடசாலைச் சமூகம் கைகொடுக்கும்போது குறித்த இலக்கினை அடைவதில் இடையூறு இருக்காது. இந்த வகையில் பாடசாலைச் சமூகம் - உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு வழங்கி வரும் ஆதரவு ஆரோக்கியமான வளர்ச்சிக்கு இட்டுச் செல்கின்றது.

உரும்பிராய் இந்துக் கல்லூரியை தரிசிக்கும்போது வீதியோரத்தில் ஓங்கி உயர்ந்து நிற்கும் மாடிக் கட்டடத்தின் முகப்பில் "மலாயா உரும்பிராயர் சங்க மண்டபம்" எனப் பொறிக்கப்பட்டிருப்பது கல்லூரி சமூகத்துக்கும் கல்லூரிக்கும் உள்ள ஈடுபாட்டை எடுத்து இயம்புகின்றது. இந்தக் கட்டடம் குமாரசுவாமி அதிபராக இருந்த காலப்பகுதியில் (1920-1923) நிறுவப்பட்டது. கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நூற்றாண்டு விழா மண்டபம் கல்லூரியின் பழைய மாணவனும் லண்டனில் வசிப்பவருமான க.தர்மகுலசிங்கம் அவர்களினால் 2கோடி ரூபா செலவில் 140 அடி நீளம் கொண்ட 2மாடிக் கட்டடம் நிர்மாணிக்கப்படுகின்றது. 2011 ஏப்ரல் மாதம் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தின்போது திறந்து வைக்க வேண்டும் என்ற நோக்குடன் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

க. தர்மகுலசிங்கம் போன்றவர்களின் உயர்வான பங்கு பணி பாராட்டப்பட வேண்டியது. தனிமனிதனாக மாடிக்கட்டடத்தை நிர்மாணிக்கும் முயற்சி பாடசாலைச் சமூகத்துக்கும் - பாடசாலை நிர்வாகத்துக்கும் உள்ள இடையறாத தொடர்ச்சியை வெளிப்படுத்தி நிற்கின்றது. 1965-1968 காலப்பகுதிகளில் 1500 மாணவர் வரையில் கற்ற இந்தக் கல்லூரி இடைக்காலத்தில் நலிவடைந்து போனாலும் மீண்டும் உயரும் என்பதற்கான சமிக்ஞைகள் இல்லாமல் இல்லை. கல்லூரியின் வளர்ச்சியில் சீதாராமன், ஸ்ரீநிவாசன் அதிபர்களின் காலம் 'பொற்காலமாக' கருதப்படுகின்றது. 'இந்தியாவில் இருந்து வருகை தந்து அதிபர் பணி ஆற்றியதோடு பாடசாலைச் சூழலில் தங்கியிருந்து 24மணி நேரமும் பாடசாலையின் கல்வி வளர்ச்சியிலும் இணைப்பாடவிதான முன்னெடுப்புக்களிலும் முழுமையான ஈடுபாட்டுடன் முயன்றதோடு தமது காலத்தில் பல முத்திரைகளை பதித்துச் சென்றதாக 'பாடசாலைச் சமூகம் இன்றும் நினைவு கூருகின்றது.

எதிர்வரும் சித்திரைத் திங்கள் மூன்றாம் நாள் (2011.04.03) நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் உரும்பிராய் இந்துக் கல்லூரியின் வளர்ச்சிப் பாதையில் யுத்தச் சூழ்நிலையில் ஏற்பட்ட பின்னடைவு கள் பல்வேறு விதமான பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. 1995ஆம் ஆண்டு வலிகாமம் இடப்பெயர்வை அடுத்து கல்லூரியின் வளவசதிகள் முற்றாகச் சீர்லைக்கப்

பட்டநிலையில் காணப்பட்டன. கட்டடங்கள் பெருமளவில் சேதமடைந்தன. முகப்புத் தோற்றத்துக்குரிய கட்டடம் பாரிய குண்டுத் தாக்குதலுக்கும் முற்றாக இல்லாமல் போகக்கூடிய பின்னணியிலும் காணப்பட்டது. அந்த நிலையில் காணப்பட்ட முகப்புத் தோற்றக் கட்டடம் மீளக்குடியேறி அதிபராகப் பொறுப்பேற்ற அ.ஈஸ்வரநாதன் அவர்களின் பெருமுயற்சியினாலும் கல்லூரிச் சமூகத்தின் அளப்பரிய ஒத்துழைப் பினாலும் மீண்டும் பொலிவுடன் காட்சி தருகின்றது.

கல்லூரியில் கல்வி அடைவு மட்டம் ஒரு காலப்பகுதியில் "இந்துக் கல்லூரி" என்ற பொதுப்பார்வையில் மிக உயர்ந்து இருந்தது. 1965ஆம் ஆண்டு காலப் பகுதியில் 1600 மாணவர் வரையில் பயின்றதோடு வலி.கிழக்குப் பிரிவில் மிகவும் உயர்ந்த நிலையில் இருந்தது. அந்தக் காலப்பகுதியில் கல்வி பயின்றேன் என்ற பெருமையுடன் கல்வியில் பழைய மாணவனான தற்போதைய அதிபர் உரிமை யுடன் கருத்துத் தெரிவிக்கையில் தற்பொழுது புகழ்பெற்ற டாக்டர்கள், பொறியிய லாளர்கள், கல்லூரியின் பழைய மாணவன் எனக் கூறியதோடு தற்பொழுது யாழ்ப்பாணத்தில் முன்னணியில் இருக்கும் வைத்திய கலாநிதிகள் சிவன்சுதன், சிவதாசன் ஆகியோரும் கல்லூரியின் பழைய மாணவர்களே எனத் தெரிவித்தனர். கல்லூரியின் இடைக்கால வீழ்ச்சிக்குக் கிராமப்புறப் பாடசாலைகளில் இருந்து விடுபட்டு நகரப் பாடசாலைகளை நோக்கி மாணவர்கள் ஓடிச்செல்லும் மயக்க நிலையும் எதிர்ப்புறத்தில் வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம் செயற்பட்டுக் கொண்டிருப்பதும் ஒருவகையில் காரணமாக இருக்கலாம் எனக் கூறப்படுவதிலும் நியாயம் இல்லாமல் இல்லை. விளையாட்டுத்துறை மற்றும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் கோப்பாய் கல்விக் கோட்டத்தில் உரும்பிராய் இந்துக்கல்லூரி தனக்கே உரிய தனித்துவத்துடன் முன்னணியில் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது. கல்லூரியின் எதிர்காலம் தொடர்பாக தொடர்ந்து 14 வருடங்களாக அதிபர் பணி ஆற்றிவரும் தற்போதைய அதிபர் அ.ஈஸ்வரநாதன் கருத்துத் தெரிவிக்கையில், கல்லூரி மீண்டும் பழைய நிலைக்குச் செல்லும் என்ற திடமான நம்பிக்கையுடன் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றோம். தற்பொழுது பல்கலைக்கழக அனுமதி மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இருந்தாலும் கல்வியியல் கல்லூரிக்கான அனுமதியில் எமது கல்லூரி மாணவர்கள் கணிசமான இடத்தைப் பெறுகின்றனர். இதற்கு வாய்ப்பாக அமைவது க.பொ.த.உயர்தரத்தில் சங்கீதம், சித்திரம்,நடனம் உள்ளிட்ட அழகியல் பாடங்கள் கற்பிக்கப்படுவது வாய்ப்பாக அமைந்துள்ளது எனக் கூறினார். உரும்பிராய் இந்துக் கல்லூரியின் எதிர்காலம் ஒளிமயமாகப் பிரகாசிக்கும் என்பதற்கு எடுத்துக்காட்டாக கல்லூரியின் பழைய மாணவன் க.தர்மகுலசிங்கம் 2 கோடி ரூபா செலவில் தனிமனிதனாக நூற்றாண்டு நிறைவு மண்டபத்தை நிறுவிக்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்க எடுத்துக்காட்டாகும்.

உதயன் - 20.07.2010, 05.08.2010, 12.08.2010



# 31 நூற்றாண்டு விழா கொண்டாடிய கோப்பாய் மகா வித்தியாலயம்

**கோ**ப்பாய்க் கல்விக் கோட்டத்தில் மூத்த பாடசாலைகளில் ஒன்றாக விளங்கி இந்த வருடம் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிய கோப்பாய் மகா வித்தியாலயம் இருபாலைச் சந்தியில் இருந்து மேற்கு நோக்கிச் செல்லும் கோண்டாவில் வீதியில் கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு முன்பாக வீதிக்கு தெற்குப் பக்கத்தில் அமைந் துள்ளது. பாடசாலை முன்றலில் கல்வித் தெய்வமாகிய சரஸ்வதி கலை அழகு மிளிரும் நந்தவனத்தில் அமர்ந்திருக்கும் கல்விக்குரிய சூழலில் நூற்றா ண்டைத் தாண்டி தனது பணியைத் தொடர்ந்து வருகின்றது.

1913 ஆண்டு பங்குனித் திங்கள் முதலாம் திகதி கட்டப்பிராய் குளுக் கண்டியில் ஆங்கில மிஷனறிமாரால் ஆரம்பிக்கப்பட்ட கல்விக்கூடம். காலச்சூழலின் தேவையைக் கருத்தில் கொண்டு 1922ஆம் ஆண்டு தற்போதைய அமைவிடத்துக்கு இடம் மாற்றப்பட்டது. மிஷனரிமாரால் ஆரம்பிக்கப்பட்டபோது "கோயில் தெருப் பாடசாலை" என அழைக்கப்பட்ட பாடசாலையின் ஆரம்பகால ஆசிரியர்களாக, நிர்வாகிகளாக அரும் பணியாற்றியவர்கள் கனகரத்தினம் - நாகம்மா தம்பதியினர். அவர்களின் சேவை பாடசாலையின் வளர்ச்சிக்கும் குறித்த காலப்பகுதியில்

பாடசாலைசார் சமூகத்தின் கல்வி வளர்ச்சிக்கும் உறுதியான அடித்தளமாக இருந்து உதவியமை இன்றும் பசுமையுடன் நினைவு கூரப்பட்டு வருகின்றது. 1922ஆம் ஆண்டில் இருந்து கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் சாதனா பாடசாலையாக இருந்துவந்த பாடசாலையில் பயிற்சி ஆசிரியர்கள் தமது கற்பித்தல் பயிற்சியை மேற்கொண்டு ஆசிரியர் பயிற்சியில் தேர்ச்சி பெறுவதற்கும், நல்லாசிரியர்களை உருவாக்கும் களமாகவும் விளங்கி வந்தது. பாடசாலையின் அதிபர்களாக எஸ். ஞானரத்தினம், எஸ்.பீதாம்பரம், எஸ்.பேரம்பலம், எஸ்.யோசேப், வித்துவான் நடராசா, ஏ.கணேசன், சி.சண்முகரத்தினம், சி.சோமசுந்தரம், செல்வி. பாலாம்பிகை, எஸ் கனகசபை, எஸ்.அம்வேட், எஸ்.சுப்பிரமணியம், எஸ்.பரம்தில்லைராசா, எஸ். மகாலிங்கசிவம், எஸ்.சிவஞானம், எஸ்.பாலசிங்கம், எஸ்.கனகசுந்தரம், எஸ். தங்கராசா, இ.தியாகராசா, எஸ்.கதிரவேலு, க.தனபாலசிங்கம், எஸ்.இராசமணி, திருமதி.கெ.நவரத்தினம், அ.அகிலதாஸ், பொ.சிவானந்தராசா, எஸ்.புஸ்பராசா, க.வீரசிங்கம், த.ஞானப்பிரகாசம் ஆகியோர் பணியாற்றி காலத்துக்குக் காலம் பாடசாலையின் வளர்ச்சிக்கு அரும்பணி ஆற்றியுள்ளனர். தற்போதைய அதிபர் 2013.05.15ஆம் திகதியில் இருந்து கடமையாற்றி வருகின்றார். பாடசாலையின் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்கள் இந்த வருடம் ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி பாடசாலைசார் சமூகத்தின் ஒத்துழைப்போடு விமர்சையாக கொண்டாடப்பட்டது. நூற்றாண்டு விழாவை அதிபர் க.வீரசிங்கம் உரிய வேளையில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்ததோடு நூற்றாண்டு விழாவை முன்னிட்டும் அதன் ஞாபகார்த்த மாக பாடசாலையின் முன்னேற்றத்துக்கான செயற்பாடுகளை மேற்கொண்டார். நூற்றாண்டு விழா மலரும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

தரம் ஒன்று முதல் பதினொன்று வரையான வகுப்புக்களைக் கொண்ட கோப்பாய் மகா வித்தியாலயம் 2 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட விசாலமான காணி, பொருத்த மான கட்டுமானங்களுடன் செயற்பட்டு வருகின்றது. பாடசாலையில் தரம் 1 முதல் 5 வரையான ஆரம்ப பிரிவில் 83 மாணவர்களும், தரம் 6-9 வரையான வகுப்பு களில் 136 மாணவர்களும், தரம் 10-11 வகுப்புக்களில் 69 மாணவர்களும், விசேட கல்விகளில் 13 மாணவர்களுமாக மொத்தம் 302 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். மொத்தம் 23 ஆசிரியர்கள் கற்பிக்கின்றனர்.

1995 இடப்பெயர்வின் போது முற்றாக இடம்பெயர்ந்த பாடசாலை, மட்டுவில் கமலாசனி வித்தியாசாலையில் தற்காலிகமாகச் செயற்பட்டது. பாடசாலை இராணுவ நடவடிக்கையால் குறிப்பிடத்தக்க சேதங்களுக்கு உள்ளாகிய போதிலும் 1996ஆம் ஆண்டு மீளக்குடியேறிய பின்னர் உரிய இடத்தில் செயற்படத் தொடங்கியது. 2009ஆம்

ஆண்டு கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் செயற்படத் தொடங்கிய இடைத்தங்கல் முகாமில் தங்கியிருந்த மாணவர்கள் மற்றும் இடம்பெயர்ந்த மாணவர்களைக் கொண்ட நிலையில் இடைத்தங்கல் முகாம் மூடப்படும் வரை பெருமளவு மாணவர்கள் கல்வி கற்றனர். ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் கணிதம், விஞ்ஞானம், கலை, வர்த்தகம் என்ற நான்கு பிரிவுகளும் உள்ளடங்க 1AB பாடசாலைக்குரிய கட்டமைப்புக்களுடன் செயற்பட்டது. ஆயிரம் மாணவர்கள் மட்டில் கல்வி பயின்றனர். 43 ஆசிரியர்கள் கல்வி கற்பித்தனர்.

கோப்பாய் கல்விக் கோட்டத்தில் பொருத்தமான நிலைய அமைவிடத்தில் இடவசதிகளோடும் கட்டுமானங்களோடும் செயற்படும் கோப்பாய் மகா வித்தியா லயத்தின் வளர்ச்சிக்கும் மாணவர் அடைவுமட்ட உயர்ச்சிக்கும் கல்வித் திணைக் களம் பொருத்தமான ஏற்பாடுகளை செய்யவில்லை என்ற மனக்குறை பாடசாலை பெற்றோர், நலன் விரும்பிகள் மட்டத்தில் நிலவி வருகின்றது. பாடசாலை சமூகத்தின் மனக்குறை உரிய முறையில் நிவர்த்தி செய்யப்படும்போது பாடசாலை மேலும் சிறந்து விளங்கும்.

உதயன் - 07.06.2013, 14.06.2013



# 32 பூகோளக் கிராமத்தில் புதுயுகம் படைக்கும் பஞ்சுசீக வித்தியாலயம்

புத்தூர் ஸ்ரீ பஞ்சுசீக வித்தியாலயம் புத்தூர் கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள சொக்கத்திடல் கிராமத்தில் அமைந்துள்ளது. இது 1961ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. பாடசாலைக்கென குறித்த இடத்தில் பொதுமக்களின் உதவியுடன் கொள்வனவு செய்யப்பட்ட அரை ஏக்கர் நிலத்தில் ஸ்ரீ பஞ்சுசீக தேரரால் ஸ்தாபிதம் செய்யப்பட்டமையினால் அவரது பெயரே பாடசாலையின் பெயராக நாமகரணம் சூட்டப்பட்டதாகப் பாடசாலை வரலாற்றுக் குறிப்பில் இடம்பெற்றுள்ளது.

புத்தூர்க் கிராமத்தின் பிரபல கல்லூரியான ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியில் குறித்த காலப்பகுதியில் பின்பற்றப்பட்டு வந்த பின்தங்கிய சமூக மாணவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்ட கெடுபிடிநிலை, குறித்த கிராமத்தில் இருந்து தூரத்தில் அமைந்துள்ள ஏனைய பாடசாலைகளுக்குச் செல்வதில் உள்ள சிரமங்கள், ஏனைய பாடசாலைகளில் தமது பிள்ளைகளுக்கு அனுமதி பெறுவதிலும் பாடசாலைக்கு பிள்ளைகளை அனுப்புவதிலும் உள்ள சிரமங்கள், பொருளாதார வளக்குறைவு, குறித்த காலப்பகுதியில் நிலவிய தீண்டாமை மற்றும் சாதி அடிப்படையிலான ஒடுக்குமுறை என்பன, குறித்த கிராம மாணவர்களின் கல்விக்குப் பொருத்தமான கல்விக்கூடத்தை சொக்கதிடலில் நிறுவ வேண்டும் என்ற மனவைராக்கியத்தை

கிராம முன்னோடிகள் மத்தியில் ஏற்படுத்தியது. குறித்த சந்தர்ப்பசூழ்நிலையை சாதகமாகக் கொண்ட சில சமூகப் பிரமுகர்கள் பௌத்த நிறுவனங்களின் அனுசரணை யுடன் பௌத்த, தமிழ் அமைப்பை உருவாக்கி யாழ்.மாவட்டத்தில் ஐந்து பௌத்த தமிழ் வித்தியாலயங்களை உருவாக்கினர். அந்தவகையில் புத்தூர், அச்சுவேலி கரவெட்டி, அல்வாய் உள்ளடங்கலாக ஐந்து பாடசாலைகள் ஸ்தாபிதம் செய்யப்பட்டன. அச்சுவேலி, பத்தமேனியில் செயற்பட்டு வந்த ஸ்ரீ விபசி வித்தியாலயம் 1996ஆம் ஆண்டு மூடப்பட்டது. ஏனைய பாடசாலைகளில் கரவெட்டி ஸ்ரீ நாரத வித்தியாலயம் குறிப்பிடத்தக்க வகையில் உரிய நிலையில் செயற்படுகின்றது.

ஏனைய பாடசாலைகள் பதிவுசெய்யப்படும்போது தரம் 2 பாடசாலைகளாகப் பதிவு செய்யப்பட்டபோதிலும் தற்பொழுது தரம் ஆவண ரீதியாக குறைக்கப்படாத நிலையிலும் கட்டமைப்பில் மிகக் குறைந்த மட்டத்திலேயே செயற்பட்டுக் கொண் டிருக்கின்றன.

1961ஆம் ஆண்டு வகுப்பு ஒன்று முதல் வகுப்பு 11 வரையானதாகவும் "தரம் 2" பாடசாலையாகவும் ஸ்தாபிதம் செய்யப்பட்ட இந்தப் பாடசாலையில் ஆரம்பத்தில் ஆசிரியர் நியமனத்தை எதிர்பார்த்து 13 பேர் ஆசிரியர்களாக இணைந்துகொண்டு பணியாற்றினர். பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் பாடசாலை பதிவுசெய்யப் பட்டு அரச பாடசாலையாகப் பொறுப்பேற்கும் வரை அங்கு கற்பித்த ஆசிரியர்களால் மாணவர்களுக்கு மதிய உணவும் வழங்கப்பட்டது.

குறித்த ஐந்து பாடசாலைகளையும் அரசு பொறுப்பேற்ற வேளையில் அங்கு ஆசிரியர்களாகக் கடமையாற்றிக் கொண்டிருந்த 42 பேருக்கும் நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டது. ஆசிரியர் நியமனம் பெற்றவர்கள் ஆசிரியர் கலாசாலைக்குச் சென்று பின்னர் அவர்கள் வேறு அரச பாடசாலைகளுக்கு விருப்புரிமை அடிப்படையில் இடமாற்றம் பெற்றுச் சென்றனர். இதனால் குறித்த பாடசாலைகளில் ஆசிரியர் ஆளணிப் பற்றாக்குறை ஏற்பட்டதோடு அவை கல்வித் தரத்திலும் மாணவர்களின் அடைவு மட்டத்திலும் வீழ்ச்சிநிலை ஏற்பட்டது. இந்தநிலை பாடசாலைகளை ஆரம்பிக்கும் போது, குறித்த பாடசாலைசார் பெற்றோரிடம் காணப்பட்ட நம்பிக்கையிலும் பாதிப்பினை ஏற்படுத்தியது என்பதில் வியப்பில்லை.

1956ஆம் ஆண்டுக்கு முன்னர் யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரபல பாடசாலைகள் உட்படப் பெரும்பாலான பாடசாலைகளில், பாடமாக சிங்களம் கற்பிக்கப்பட்டது. 1956இல் "சிங்களம் மட்டும் என்ற மொழிச்சட்டம்" கொண்டு வரப்பட்டதை அடுத்து சிங்கள மொழியை யாழ். மாவட்ட மாணவர்களுக்குக் கற்பிக்கும் செயற்பாடு ஸ்தம்பிதம் அடைந்தது.

இங்கே சிங்களம் கற்பித்த ஆசிரியர்கள் தமது சொந்தப் பிரதேசங்களுக்குத் திரும்பிச் சென்றனர். 1961ஆம் ஆண்டு காலச் சூழலில் தீண்டாமை, சமூக, சாதி ஒடுக்குமுறைகளைக் காரணம் காட்டி ஐந்து பௌத்த, சிங்கள, தமிழ்ப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டபோதிலும் 1972ஆம் ஆண்டுக்குப் பிந்திய காலச்சூழலை அடுத்து அவற்றின் செயற்பாடுகள் தமிழ்ப் பாடசாலைகள் என்ற வகையிலேயே முன்னெடுக் கப்பட்டன.

புத்தூர் ஸ்ரீ பஞ்ஞசீக வித்தியாலயம் சொக்கதிடல் கிராமத்தில் பொருத்தமான இடத்தில் 5ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட நிலப் பரப்பில் தரம் 1-5 வரையான வகுப்புக்களைக் கொண்டதாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. வித்தியால யத்தின் அதிபராக கு.ரவீந்திரன் கடமையாற்றுகின்றார். "பூகோளக் கிராமத்தில் புதுயுகம் படைப்போம்" என்ற நோக்கையும் "அறிவு சுற்றம் காக்கும்" என்ற மகுட வாசகத்தையும் அடிப்படையாகக் கொண்டு இந்தப் பாடசாலை செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. கால்கோள் செய்யப்பட்டு இன்று 46ஆவது ஆண்டை அடைந்துள்ள புத்தூர் ஸ்ரீ பஞ்ஞசீக வித்தியாலயத்தின் வளர்ச்சி காலவோட்டத்துக் கேற்ப குறிப்பிடத்தக்களவு மாற்றங்களை பெற்றிருக்கவில்லை. ஆரம்பத்தில் தரம் 1 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புக்களைக் கொண்டிருந்த போதிலும் வளப்பற்றாக்குறை காரணமாகத் தற்போது தரம் 1 முதல் 5 வரையான வகுப்புக் களுடனேயே இயங்கி வருகின்றது. 46 ஆண்டு கால வளர்ச்சிப் பாதையில் அடைய வேண்டிய பல இலக்குகளை இந்தப் பாடசாலை அடையவில்லையே என்ற ஏக்கப்பெருமூச்சு பஞ்ஞசீக வித்தியாலய ஸ்தாபிதத்துக்கு இடமளித்த சமூகத்தில் எழாமல் இல்லை.

1969ஆம் ஆண்டு கார்த்திகை 17ஆம் திகதி அரசினால் பொறுப்பேற்கப்பட்ட புத்தூர் ஸ்ரீ பஞ்ஞசீக வித்தியாசாலையின் அதிபர்கள் என்ற வகையில் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் உட்பட 15 பேர் கடமையாற்றியுள்ளனர். அவர்கள் முறையே சி.தருமலிங்கம், க.தம்பித்துரை, ஜி.என்.ஆர்.பெரேரா, எஸ்.பி.டி.பத்மஸ்ரீ, எல்.டபிள்யூ. விமலகீர்த்தி, பொ.இளையதம்பி, ஆர்.எம்.பி.பி.இரத்நாயக்கா, சி.கந்தையா, க.பத்மநாதன், ம.ஞானசம்பந்தர், க.துரைசிங்கம் ஆகியோர் அதிபர்களாகக் கடமை யாற்றியுள்ளனர். தற்பொழுது கு.ரவீந்திரன் அதிபராகக் கடமையாற்றி வருகிறார்.

கோப்பாய்க் கோட்டத்தில் இயங்கும் குறைந்தளவான மாணவர்களைக் கொண்டு இயங்கும் பாடசாலைகளில் ஒன்றாக இந்தப் பாடசாலை உள்ள போதிலும் இங்கு கல்வி கற்கின்ற மாணவர்களுக்கு ஆசிரியர்கள் தம்மாலியன்ற கல்விச் சேவையை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தப் பாடசாலையில் கற்கும் மாணவர்களுக்குத் தரமான கல்வியைப் பெற்றுக் கொடுக்கப் பாடசாலைச் சமூகம் பல்வேறு நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய தேவையுள்ளது.

எதிர்காலத்தில் கற்றல் தகைமை பெறக்கூடிய கல்வி முன்னெடுப்புக்களை மேலும் விஸ்தரிக்க நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதாகவும் பாடசாலைச் சமூகத்தில் அதற்கான விழிப்புணர்வும் முன்னெடுப்புக்களும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தற்போதைய அதிபர் கு.ரவீந்திரன் தெரிவித்தார்.

அண்மைக்கால சமாதானச் சூழ்நிலையில் வடபகுதிக்குத் தாராளமாக வருகை தரும் தென்னிலங்கை அமைப்புக்கள் தமது பழைய தொடர்பு நிலையை மீளப் புனரமைப்புச் செய்து புதுவடிவம் கொடுப்பதில் ஆர்வம் கொண்டுள்ளன. அந்த வகையில் அண்மையில் பாடசாலைக்கு வருகை தந்த "தர்ம வியாய பவுண் டேசன்" தூதுக்குழுவினர் 10பேர் இந்தப் பாடசாலைக்கு வருகை தந்து பாடசாலையின் கல்வி அபிவிருத்திக்கான அமைப்புக்களைப் புனரமைப்பதற்கான மதிப்பீட்டுப் பணிகளை மேற்கொண்டதாகவும் அதன் ஆரம்ப ஏற்பாடுகளைச் செய்து வருவதாகவும் அதிபர் மேலும் தெரிவித்தார்.

கல்வியில் புதுயுகம் படைக்க முனைப்புடன் செயற்பட்டு வரும் வடக்கு மாகாணக் கல்வி நிர்வாகம் பஞ்ஞசீக வித்தியாலயம் மற்றும் அதுபோன்ற பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு அதிவிசேட கவனமும் முன்னுரிமையும் வழங்க முன்வர வேண்டும். அதற்கான முன்னெடுப்புக்களைக் காலம் தாழ்த்தாமல் மேற்கொள்ள வேண்டும். இது காலத்தின் கட்டாயமாகும்.

உதயன் - 14.04.2011, 21.04.2011



# 33 புத்த கலட்டி மக்கள் ஒன்றுகூடி உருவாக்கிய ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம்

**ஆ**வரங்கால் கிழக்கு மணற்பகுதியில் 1957 ஆம் ஆண்டு விஜயதசமி தினத்தில் பாடசாலைக்கான அடிக்கல் நடப்பட்டது. புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியா லயத்தை அமைப்பதற்கான ஏற்பாடுகளை, கிராமத்து பிரமுகர்களை உள்ளடக்கி உருவாக்கப்பட்டிருந்த சர்வோதய கலாமன்றம் செய்திருந்தது. தமது கிராமத்துப் பிள்ளைகள் கல்வி பயில்வதில் எதிர்நோக்கி வந்த சமூக நெருக்கடிகள், பாடசாலை அனுமதி மறுப்புக்கள் மற்றும் புறக்கணிப்புகள் எதிர்த்தாக்கங்களில் இருந்தும் விடுபட்டு தமது கிராமத்தில் இயல்பு நிலையில் கல்வியைக்கற்க வேண்டும் என்ற உயர் நோக்கோடு ஆரம்பிக்கப்பட்டது. திருவுளச்சீட்டு மூலம் பாடசாலையின் பெயரும் தெரிந்தெடுக்கப்பட்டது. சர்வோதய கலாமன்றம் முன்னெடுத்த செயற்பாடுகளுக்கு காலத்தின் தேவையைக் கருத்தில் கொண்டு ஊரே ஒன்று கூடி முழுமனதோடு ஒத்துழைப்பு வழங்கியது.

சர்வோதய கலாமன்றத்தின் தலைவரான ஊர்ப்பிரமுகரும் தமிழரசுக்கட்சியின் முன்னணி உறுப்பினருமான சி.அரியகுட்டியும், உந்து சக்தி மிக்க நிர்வாகிகளாக க.ஆறுமுகம், தே.வடிவேலு, வ.ஐயாத்துரை, எஸ். மாப்பாணர் ஆகியோரும் இருந்து செயற்பட்டனர். சர்வோதய கலாமன்ற நிர்வாகிகளும் உறுப்பினர்களும் வீடு வீடாகச்

சென்று தமது கிராமத்துக்குப் பாடசாலையின் தேவை மற்றும் உதவிகள் தொடர்பாக விளக்கிக் கூறியதோடு : பிள்ளைகளையும் பாடசாலையில் சேர்த்துக்கொள்ளுமாறு பெற்றோரிடம் வேண்டிக்கொண்டனர். பெற்றோர் தமது பிள்ளைகள் ஊரில் கல்வி கற்பதற்கு உரிய வாய்ப்பினை உவகையோடு ஏற்றுக்கொண்டு , புதிய பாடசாலையில் பிள்ளைகளைச் சேர்த்துக்கொண்டதோடு, வெளியிடங்களுக்கு சென்று கற்பதில் உள்ள சிரமங்களினால் இடைவிலகிய மாணவர்களையும் பாடசாலையில் இணைத்து கல்வி பயிலச்செய்தனர்.

பாடசாலைக்கான கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு வசதியாக , ஊர்மக்கள் பலரின் நிலங்கள் இணைந்ததாக 32 பரப்புக் காணியும் பாடசாலைக்கு வழங்கப் பட்டது. பாடசாலையின் முதலாவது அதிபராக அல்வாய் க.முருகேசு பொறுப்பேற்றுக் கொண்டார். 1958 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தரம் 1 முதல் தரம் 11 வரையான வகுப்புக்கள் நடத்தப்பட்டன. 10 இற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் கற்பித்தனர். மாணவர் எண்ணிக்கையும் 300 இற்கு மேற்பட்டதோடு நாளாந்தம் மாணவரின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு வந்தது. நான்கு மாத கால இடைவெளியில் மாணவர் எண்ணிக்கையும் கல்விச்செயற்பாடும் உத்வேகத்துடன் அதிகரித்து வருவதை அவதானித்த புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி பகுதி மாணவர்களும் அங்கு அனுமதி பெற்று கல்வி பயில்வதில் ஆர்வம்கொள்ளத் தொடங்கினர். குறுகிய கால இடைவெளி யில் மாணவர்களின் எண்ணிக்கை 600 ஆக அதிகரித்தது. பாடசாலையில் இணைந்து கற்பிப்பதற்கு வடமராட்சியைச் சேர்ந்த முன்னணி ஆசிரியர்களும், பண்டிதர்களும் , சைவப்புலவர்களும், பயிற்சி பெற்ற ஆசிரியர்களும் முன்வந்தனர்.

ஊர்மக்கள் ஒன்று கூடி காலத்தின் தேவை உணர்ந்து உருவாக்கிய பாடசாலை யில் இணைந்து கற்பித்த ஆசிரியர்கள், மாலைவேளையிலும் இரவிலும் விசேட வகுப்புக்களையும் மீட்டல் வகுப்புக்களையும் நடத்தியதோடு இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் பாடசாலையைத் துலங்கச் செய்தனர். விளையாட்டுத்துறை , கலை, கலாச்சார நிகழ்வுகள் மற்றும் சைவநெறிகள் நிலையிலும் பாடசாலை கோப்பாய்த் தொகுதியில் முன்னணியில் திகழ்ந்தது.

பாடசாலையின் அனைத்து செயற்பாடுகளிலும் பெற்றோர், நலன்விரும்பிகளின் ஒத்துழைப்பும் உதவியும் குறித்த காலகட்டத்தில் முழுமையாகக் கிடைத்து வந்தன.

புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம் யாழ்ப்பாணம் - பருத்தித்துறை நெடுஞ்சாலையில் 10ஆம் கட்டையில் இருந்து கிழக்கு நோக்கிச் செல்லும் வீதியில் 500 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. பாடசாலைக்கு அருகில் ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலயம், பாடசாலை முன் பக்கத்தில் வீனஸ் விளையாட்டு மைதானம்,

கிழக்குப்புறத்தில் தொண்டமானாறு குடாக்கடல் நீரேரி ஆகியன உள்ளடங்கிய அமைதியான கற்றலுக்கான சூழலும் அமைவிடமும் கொண்டது.

வித்தியா விருத்திச்சங்கத்தின் அனுசரணையுடன் ஆரம்பத்தில் நடைபெற்று வந்த பாடசாலை , 1961 ஆம் ஆண்டு வித்தியாதிபதியின் முகாமைத்துவத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு 1963இல் அரச பாடசாலையாக அங்கீகரிக்கப்பட்டது. அங்கு கடமை புரிந்த ஆசிரியர்கள் அனைவரையும் அரசு பொறுப்பேற்று ஆசிரியர் நியமனம் வழங்கியது. பாடசாலைக்கான வசதிகளை அரசு செய்யத்தொடங்கியது.

"கற்றாய்ந்தொழுகு" என்ற மகுடவாசகத்திற்கேற்பவும் "தரமான கல்வியினூ டாக சமூகத்திற்குப் பொருத்தமான பிரசைகளை உருவாக்குவோம் "என்ற தூர நோக்குடனும் செயல்படும் விஷ்ணு வித்தியாலயம் கோப்பாய் கல்விக்கோட்டத்தில் உள்ள தரம்-2 பாடசாலைகளில் கல்வித்தரத்திலும் விளையாட்டு உள்ளிட்ட இணைப் பாடவிதானச் செயற்பாடுகளிலும் முன்னணியில் திகழ்ந்தது. பாடசாலைச்சமூகம் ஒத்துழைப்பு வழங்கினால் பாடசாலை சகல நிலையிலும் மேல்நிலை பெறும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. பாடசாலையின் தற்போதைய அதிபராக இலங்கை அதிபர் சேவை தரம்-2 ஐச் சேர்ந்த கு.ரவீச்சந்திரன் கடமையாற்றுகிறார்.

55 ஆவது ஆண்டில் கால்பதித்து சைவத்தமிழ் பாரம்பரியங்களோடு மணி விழாவை நோக்கி வளர்ந்து வரும் புத்த கலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம் குறித்த சமூகச் சூழலில் வாழும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்று பணியாற்றி வருகின்றது. வசதி படைத்த மாணவர்கள் நகரப்பாடசாலைகளை நாடும் காலச்சூழலில் "தரமான கல்வியினூடாக சமூகத்துக்கு பொருத்தமான பிரஜைகளை உருவாக்குவோம்" என்ற தூரநோக்குடன் கல்விப்பணியாற்றி வரும் வித்தியா லயத்தில் தரம் 01 முதல் தரம் 11 வரையான வகுப்புக்களில் 250 மாணவர்கள் வரை கல்வி கற்கின்றனர். பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதியில் 600 மாணவர்கள் வரை கல்வி கற்ற போதிலும் அந்த எண்ணிக்கை அரைவாசிக்கு குறைந்த அளவு வீழ்ச்சி கண்டிருப்பது பெற்றோர் பாடசாலை மீது வைத்திருந்த நம்பிக்கைத்தன்மை குறைவடைந்து செல்வதை எடுத்துக்காட்டுகின்றது. எனினும் கடந்த 10 வருட இடைவெளியில் 2001 ஆம் ஆண்டுக்குப் பின்னர் 2011 ஆம் ஆண்டு பி.சாலமன் தரம் 5 புலமைப்பரிசில் பெறுவதற்கு தகுதி பெற்றுள்ளார்(புள்ளி 169). க.பொ.த.சாதாரண தரத்தில் சித்தியடைவோர் எண்ணிக்கை கடந்த ஐந்து வருட புள்ளிவிபரங்களின்படி ஆகக்கூடியது. 4பேர் 20 வீதம் .2010 ஆம் ஆண்டு 13 பேர் பரீட்சைக்குத் தோற்றிய போதிலும் ஒருவரே சித்தியடைந்துள்ளார். சித்தியடைந்தோர் 10 வீதத்துக்கு குறைவானது. (07.6 வீதம்) பாடசாலைகளின் கல்வித்தரம்

தொடர்பான நம்பிக்கையை பாடசாலைச்சமூகம் வெளிப்படுத்தும் அலகுகள் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை உட்பட பொதுப்பரீட்சைகளின் பெறுபேறுகளே. கடந்த வருடம் மூன்றாம் தவணையில் நடைபெற்ற பரிசளிப்பு விழா அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதன் பிரகாரம் ஆசிரியர் ஆளணியின் எண்ணிக்கை 19, மாணவர் எண்ணிக்கை 233.

கோப்பாய் கல்வி வட்டாரத்தில் விளையாட்டு மற்றும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளின் கணிசமான அளவு முன்னணியில் திகழும் புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்தின் பரிசு நிதியத்தில் ஒரு லட்சத்து 55 ஆயிரம் ரூபா நிரந்தர வைப்பில் இடப்பட்டுள்ளது. பாடசாலையின் ஆரம்பகால ஆசிரியர் க.முருகேசு ஞாபகார்த்தமாக 50 ஆயிரம் ரூபா, அமரர் சுப்பிரமணியம் பவளம் - இரத்தினசபாபதி ஞாபகார்த்தமாக 50 ஆயிரம் ரூபா , பாடசாலையில் கல்வி கற்பித்த ஆசிரியர் கா.லங்காநேசன் ஞாபகார்த்தமாக 20 ஆயிரம் ரூபா, பழைய மாணவன் மா. நாதமணி (சுவிஸ்) 15 ஆயிரம் ரூபா, பழைய மாணவன் அ.பரஞ்சோதி 10 ஆயிரம் ரூபா, முன்னாள் அதிபர் நா.சிவஞானம் 10 ஆயிரம் ரூபாவையும் பரிசளிப்பு விழா நிதியத்துக்கு வைப்புச்செய்துள்ளனர்.

பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து அதிபர்களாக கடமை யாற்றியவர்கள் என்ற வகையில் க.முருகேசு , எஸ்.சிவசிதம்பரம், மூ.சுப்பிரமணியம் ஏ.நாகராசா, கே.அந்தோனிப்பிள்ளை, கே.பொன்னம்பலம், எஸ்.மணிசுந்தரம் நா.சிவஞானம் ஆகியோர் பணியாற்றியுள்ளனர். பாடசாலையின் ஆரம்பகால அதிபராகப்பொறுப்பேற்று 18 வருடங்களுக்கு மேல் அதிபராகக்கடமையாற்றிபாடசாலை வளர்ச்சிக்கு அளப்பெரும் சேவையாற்றியவர் என்ற வகையில் க.முருகேசுவின் சேவை பாடசாலை சமூகத்தினால் பசுமையுடன் நினைவு கூரப்படுகின்றது.

அந்த வகையில் பாடசாலையின் புதிய மாடிக் கட்டடத்துக்கு அமரர் க.முருகேசுவின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

பாடசாலையின் கற்றல் செயற்பாடுகளையும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளையும் உரிய முறையில் முன்னெடுத்து வளர்க்கும் வகையில் கணித விஞ்ஞான மன்றம், இந்துமாமன்றம், மாணவர் மன்றம், தகவற்தொடர்பாடல் கழகம், கவின்கலைமன்றம், சுகாதாரக்கழகம், ஆங்கில மன்றம் உள்ளிட்ட பல்வேறு மன்றங்கள் செயற்பட்டு வருகின்றன.


பிள்ளை நேயப்பாடசாலை செயற்றிட்டத்தில் பாடசாலை இணைக்கப்பட்டு கடந்த வருடம் பாடசாலை கவர்ச்சியாக்கப்பட்டு வகுப்பறைக் காட்சிப்படுத்தல் செயற்பாடுகள்

ஒரு லட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 10 இற்கும் மேற்பட்ட கணினிகளுடன் செயற்பட்டு வரும் கணினிக் கூடம் சிறப்பான முறையில் செயற்பட்டு வருகின்றது.

பாடசாலை நேரத்திலும் பிற்பகல் மற்றும் விடுமுறைக்காலத்திலும் கணினிக் கூடத்தின் செயற்பாடுகளின் மூலம் மாணவர்கள் பொருத்தமான முறையில் தேர்ச்சிகளை பெற்று வருவதோடு கணனிக்கூடம் தொடர்பான 2010 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டு மதிப்பீட்டின் பிரகாரம் வடக்குமாகாண அதிகாரிகள் மேற்கொண்ட மதிப்பீட்டின் பிரகாரம் 'சி' வகைப் பாடசாலைகளில் மாகாணமட்டத்தில் 4 ஆவது இடத்தையும் தேசிய மட்டத்தில் 6ஆவது இடத்தையும் பெற்று 13 லட்சம் ரூபாவை பரிசுத்தொகையாக பெற்றுள்ளது. பாடசாலையின் சமகாலத்தேவைகள், சுற்றுலா வசதி, மற்றும் விளையாட்டு உபகரணங்கள் கற்றல் சாதனங்களை வழங்கலில் எ.ஏ.ஏ.முலீஸ் பவுண்டேசன் நிறுவனத்தின் தலைவர் க.செவ்வேள் அவர்கள் கணிசமான அளவு உதவி வருவதாக அதிபர் குறிப்பிட்டார்.

2011 ஆம் ஆண்டுக்கான சிறந்த அதிபர்களுக்கான 'பிரதீபா பிரபா' விருதை பாடசாலை அதிபர் கு.ரவீச்சந்திரனும் சிறந்த ஆசிரியர்களுக்கான 'பிரதீபா பிரபா' விருதை பாடசாலையின் பிரதி அதிபர் சி.ஸ்ரீராகவனும் பெற்றுள்ளனர். வித்தியாலயம் சமூகத்தின் நம்பிக்கையை பெற்று மேலும் சிறப்புப் பெற வாழ்த்துவோம்.

உதயன் - 02.02.2012, 09.02.2012



## 34 கிராமியச்சூழலில் வளர்ந்து வரும் கோப்பாய் தெற்கு கந்தவேள் தமிழ்க்கலவன் பாடசாலை

**வ**றிய மக்கள் நெருக்கமாக வாழும் கிராமியச்சூழலில் பொருத்தமான முறையில் ஆரம்பக்கல்வியை போதிப்பதற்கு நிறுவன மயப்படுத்தப்பட்ட அமைப்பு இல்லையே என்று கவலை கொண்ட ஆசிரியர் கதிரவேலு கந்தையாவின் சிந்தனையின் வெளிப்பாடுதான் கோப்பாய் தெற்கு கந்தவேள் தமிழ்க்கலவன் பாடசாலை.

பாடசாலைக்குப் பெயர் சூட்டிய காரணம்,தெய்வீகம் கலந்த உண்மை, குறித்த இடத்தில் ஆரம்பக்கல்வி போதிக்கப்படவேண்டும் என்பதாலாகும். இதன்படி பாடசாலை ஒன்றை உருவாக்கவேண்டும் என்ற உயர்ந்த நோக்கோடு 1954 ஆம் ஆண்டு உள்ளூர் பிரமுகர்களை உள்ளடக்கிய கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. அதன்படி கலந்துரையாடல் ஆரம்பமாகிய வேளையில் நல்லூர்க்கந்தசுவாமி கோயில் கண்டாமணி ஓசை கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த அனைவரது காதிலும் ஒலித்தது. தமது நற்காரியத்துக்கு நல்லூர் கந்தன் தந்த அற்புதம் நிறைந்த அங்கீகாரம் இந்த ஒலி என்பதை ஏற்று "கந்தவேள்" என்று பெயர் சூட்டப்பட்ட அந்தப் பெயரே இன்று வரை நிலைத்து நிற்கிறது .

யாழ்ப்பாணம் – பருத்தித்துறை நெடுஞ்சாலையில் இருபாலை கற்பகப்பிள்ளையார் கோயிலுக்கு அருகில் கிழக்கு நோக்கிச் செல்லும் ஒழுங்கையில் பிரதான வீதியில்

இருந்து இரண்டரைக்கிலோமீற்றர் தூரத்தில் கோப்பாய் தெற்கு கந்தவேள் தமிழ்க்கலவன் பாடசாலை அமைந்துள்ளது. உவர்மண் களிநிலம். குடிதண்ணீர் வசதி குறைவானது. நெடிதுயர்ந்த தென்னை மரச்சோலைகளாற் சூழ்ந்த பிரதேசம் வசந்தபுரம். அங்கு வாழும் வறிய குடும்பங்களின் குழந்தைகள் வெளியிடங்களுக்குச் சென்று கல்வி கற்க முடியாத நிலை . அவ்வாறு செல்லவேண்டுமானால் பல கிலோமீற்றர் தூரத்துக்கு கால்நடையாக நடந்து சென்றே கற்கவேண்டும்.

ஆசிரியர் கதிரவேலு கந்தையா வசந்தபுரம் கிராமத்தில் ஆரம்பப் பாடசாலையை நிறுவ வேண்டும் என்பதை பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்தி விளக்கியபோது திருமதி.பாக்கியம் கணபதிப்பிள்ளை தனது சொந்தக்காணி ஆறுபரப்பை பாடசாலைக்கு நன்கொடையாக வழங்கி உதவினார். 1954 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி பாடசாலையில் கற்றல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. பாடசாலையின் ஆரம்பகால அதிபராக ஆசிரியர் கதிரவேலு கந்தையா பொறுப்பேற்றுக்கொண்டார்.

பாடசாலையின் ஆரம்பம் மற்றும் குறித்த பிரதேசத்தில் பாடசாலை செயற்பட வேண்டியதன் அவசியம் தொடர்பாக சைவ வித்தியா விருத்திச்சங்கத்திற்கு விண்ணப்பம் செய்ததை அடுத்து 1954.06.01 பாடசாலையை சைவவித்தியா விருத்திச் சங்கம் பொறுப்பேற்றுக்கொண்டது. பாடசாலையின் அதிபர் பதவியை க.மார்க்கண்டு ஏற்றுக்கொண்டார். ஆரம்பத்தில் கோ.கணபதிப்பிள்ளை . செல்வி.இ.பரமேஸ்வரி . செல்வி.இ.சிவபாக்கியம் ஆகியோர் ஆசிரியர்களாகக் கடமையாற்றினர். தரம் ஒன்று முதல் தரம் ஐந்து வரையான வகுப்பு மாணவர்களுக்கான கற்றல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

குறுகியகால இடைவெளியில் அதிபர். ஆசிரியர்கள் மேற்கொண்ட அயராத முயற்சியினாலும் பாடசாலைச்சமூகம் வழங்கிய முழுமையான ஒத்துழைப்பினாலும் 1960 ஆம் ஆண்டு ஜனவரியில் இருந்து தரம் எட்டு வரை வகுப்புக்கள் நடத்துவதற்கான அனுமதி வழங்கப்பட்டதையடுத்து அன்றில் இருந்து கனிஷ்ட வித்தியாலயமாகச் செயற்பட்டு வந்தது. சைவவித்தியாவிருத்திச் சங்கத்தினால் நடத்தப்பட்டு வந்த பாடசாலையை 1963 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அரசு பொறுப்பேற்றதை அடுத்து அரச பாடசாலையாகச் செயற்பட்டது .

பாடசாலைக்குப் பொருத்தமான முறையில் விளையாட்டு மைதானம் இல்லாமல் இருந்தமையால் மாணவர் பாடசாலையின் அயலில் இருந்த வயல்வெளியைத் தமது விளையாட்டுப் பயிற்சிக்குப் பயன்படுத்தி வந்தனர். மாணவர்களின் கற்றல் செயற்பாட்டுக்கு விளையாட்டு மைதானம் இல்லாத குறையை நிவர்த்தி செய்யும் வகையில் பாடசாலைச்சமூகத்தின் ஒத்துழைப்புடன் விளையாட்டு மைதானப் பயன்பாட்டுக்கு ஐந்து பரப்புக்காணி கொள்வனவு செய்யப்பட்டு விளையாட்டுத் தேவைக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. பாடசாலை தாபகர் கந்தையாவின்

பெயரிலும் முதலாவது நிரந்தர அதிபர் மார்க்கண்டுவின் பெயரிலும் விளையாட்டுப் போட்டிக்கான இல்லங்கள் நிறுவப்பட்டிருப்பதோடு மொத்தமாக மூன்று இல்லங்கள் செயற்படுகின்றன. கோப்பாய்க் கல்விக் கோட்டத்தில் நடைபெறும் ஆரம்பப் பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வன்மைப் போட்டிகளில் "கந்தவேள்" பாடசாலை மாணவர்கள் தமது திறமையை வெளிப்படுத்தி பரிசில்களைப் பெற்று வருகின்றனர்.

பாடசாலையில் அமைந்திருக்கும் கிணறு உவர் நீராக இருப்பதால் மாணவர்களின் குடிதண்ணீர் தேவை அயலில் உள்ள நல்ல தண்ணீர்க் கிணற்றில் இருந்து பெறப்பட்ட நீரின் மூலமே நிவர்த்தி செய்யப்பட்டு வந்தது. நாளாந்தம் பிள்ளைகள் தமக்குத் தேவையான நீரை, நல்ல தண்ணீர் கிணற்றில் இருந்து எடுத்து வந்து பயன்படுத்தினர். தற்பொழுது வலி.கிழக்குப் பிரதேச சபை பௌசர் மூலம் குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொண்டு வருகின்றது. ஒன்றைவிட்டு ஒரு தினம் குடிதண்ணீர் பிரதேச சபையினால் வழங்கப்படுகின்றது. அதனைப் பொருத்தமான முறையில் சேகரித்து வைத்து மாணவர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

பாடசாலையின் அமைவிடம் , நிலையம் , பொதுப்போக்குவரத்து வசதியின்மை சுற்றாடலில் பொருத்தமான வாடகைக் குடியிருப்பு வசதி ஆசிரியர்களுக்கு இல்லாமை உள்ளிட்ட பல்வேறு சுட்டிகளைக் கருத்தில்கொண்டு கோப்பாய் தெற்கு கந்தவேள் வித்தியாலயம் கஷ்டப்பிரதேச பாடசாலையாகக் கணிக்கப்பட்டு அங்கு கடமைபுரியும் ஆசிரியர்களுக்கு மாதாந்த ஊக்குவிப்புத்தொகையாக 1500 ரூபா மேலதிகமாக வழங்கப்பட்டு வருகின்றது.

பாடசாலையின் வளர்ச்சிக்கு பல்வேறு காலகட்டத்திலும் அயராது உழைத்த மற்றும் அர்ப்பணிப்போடு சேவையாற்றிய அதிபர், ஆசிரியர்களை பாடசாலைச்சமூகம் நன்றியுணர்வோடு நினைவு கூருகின்றது. பாடசாலையின் தற்போதைய அதிபராக சுப்பிரமணியம் விவேகானந்தன் கடமையாற்றி வருகின்றார். கோப்பாய்க் கல்விக்கோட்டத்தில் வசந்தபுரத்தில் அமைந்திருக்கும் கோப்பாய் தெற்கு கந்தவேள் தமிழ்க்கலவன் பாடசாலை காலவோட்டத்துக்கும் கல்விக்கொள்கை மாற்றத்துக்கும் ஏற்ப வளர்ந்து வருகிறது. பொருத்தமான கவின்நிலையுடன் கூடிய வகுப்பறைக் கட்டமைப்போடு குறித்த சமூகச்சூழலில் வசிக்கும் சிறார்களின் ஆரம்பக்கல்விக்கு வளம் சேர்த்துள்ளது.

பாடசாலைச்சமூகம் பாடசாலையின் தேவைகளை இனங்கண்டு பொருத்தமாக நிறைவு செய்துள்ளது. அந்த வகையில் விளையாட்டு மைதானத்துக்கான 8 1/2 பரப்புக் காணி கொள்வனவு செய்து வழங்கப்பட்டது . பாடசாலையின் பெயர் வளைவு டாக்டர் வி.தியாகராசாவினால் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது. பிரான்ஸில் வசிக்கும் பழைய மாணவி திருமதி சிவஇன்பதேவி பத்மநாதன்

கணினியை அன்பளிப்புச் செய்துள்ளார். தற்பொழுது கனடாவில் வசிக்கும் பழைய மாணவன் தர்மலிங்கம் கேதீஸ்வரநாதன் தனது தாயாரின் நினைவாக 14 லட்சத்துக்கு மேற்பட்ட செலவில் 40 X 25 அடி அளவிலான மண்டபம் ஒன்றை நிர்மாணித்துக்கொண்டிருக்கின்றார். இவை பாடசாலையின் வளர்ச்சிக்கு சமூகம் வழங்கி வரும் உதவிக்கு எடுத்துக்காட்டாக முன்வைக்கப்படுகின்றன. இந்த வகையில் பல உதவிகளைப் பட்டியல்படுத்தலாம்.

வலிகாமம் கிழக்கின் கரையோரத்தில் அமைந்திருக்கும் இந்தப் பாடசாலை இராணுவ நடவடிக்கையால் பாதிப்புக்களைச் சந்திக்க நேர்ந்தது. இந்த வகையில் பாடசாலையின் ஆவணங்கள் சொத்துக்கள் முற்றாக இழந்த நிலையில் சேதமடைந்த கட்டடத்தொகுதி மட்டும் எஞ்சியிருந்தது. இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்து கட்டடங்கள் ஷெல் தாக்குதலால் சேதமடைந்தன. இடம்பெயர்ந்த நிலையில் பாடசாலையின் கல்விச்செயற்பாடுகள் கோப்பாய் தெற்கு றோமன் கத்தோலிக்க பாடசாலையில் நடைபெற்று வந்தன. இந்த வகையில் 1995 இல் இருந்து 2001 ஆம் ஆண்டு வரை ஆறு வருடங்கள் செயற்பட்டன.

பாடசாலையின் வளர்ச்சிக்கு பல்வேறு காலகட்டங்களில் உறுதுணையாக இருந்து உழைத்த அதிபர்கள் , ஆசிரியர்கள் நன்றியறிதலோடு பாடசாலைச்சமூகத்தினால் நினைவு கூரப்படுகின்றனர். அதிபர்களாக க.கந்தையா 1954 - 1955 , க.மார்க்கண்டு 1955-1978, அ.சுப்பிரமணியம் 1978-1984, செ.குணசிங்கம் 1984-1989, வ.வேலாயுதபிள்ளை 1989-1995, தி.சோமசேகரம் 1995-2001, செ.செல்வநாயகம் 2001-2002, சு.விவேகானந்தன் 2002-2003, திருமதி.ஜெயந்தி தனபாலசிங்கம் 2003-2003, மா.சிவபாலசுந்தரம் 2003-2007, சு. விவேகானந்தன் ஆகியோர் கடமையாற்றினர். 2007-11-24ஆம் திகதியிலிருந்து தற்போதைய அதிபராக கடமையாற்றி வருகின்றார்.

1960 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியிலிருந்து தரம் 8 வரை வகுப்புக்கள் நடத்துவதற்கான அனுமதி வழங்கப்பட்டு கனிஷ்ட வித்தியாலயமாக தரம் உயர்த்தப்பட்டது. கொத்தணிப்பாடசாலை அமைப்பு முறை அறிமுகம் செய்யப்பட்டது . அது நடைமுறையில் இருந்த காலப்பகுதியில் கோப்பாய் கொத்தணிக்கட்டமைப்பில் உள்ளடங்கப்பட்டிருந்ததோடு கொத்தணி அதிபரின் சிபாரிசுக்கு அமைய மீண்டும் 1981 ஆம் ஆண்டு தரம் 5 வரையான வகுப்புக்களைக்கொண்ட ஆரம்பப் பாடசாலையாக தரம் குறைக்கப்பட்டது. தரம் 6 முதல் எட்டு வரையான மூன்று வகுப்புக்களிலும் கல்வி கற்று வந்த மாணவர்கள் கோப்பாய் கொத்தணியில் உள்ளடக்கப்பட்டிருந்த கோப்பாய் மகா வித்தியாலயம் மற்றும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி ஆகியவற்றில் இணைத்துக் கொள்ளப்பட்டனர். அன்று முதல் ஆரம்பப்பாடசாலையாகவே செயற்பட்டு வருகின்றது.

மனித முயற்சியினால் சூழலை மாற்ற முடியும் என்பதை எடுத்துக்காட்டும் வகையில் ஆரம்பகாலப்பகுதியில் வெட்ட வெளியில் காணப்பட்ட பாடசாலை வளவு தற்பொழுது பயன்தரும் மரங்கள் நிறைந்த சோலையாகக் காணப்படுகின்றது . இத்தகைய மாற்றத்தை உருவாக்குவதில் பாடசாலைச்சமூகத்தோடு இணைந்த நிலையில் குறித்த காலப்பகுதியில் கடமையாற்றிய அதிபர் , ஆசிரியர்கள் அயராது உழைத்துள்ளனர். அதன் வெளிப்பாட்டை தற்பொழுது அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

2009 ஆம் ஆண்டு கல்வித்திணைக்களத்தில் தரம் 3 முதல் தரம் 4 வகுப்புக்களுக்கான கவின் நிலையோடு கூடிய புதிய வகுப்பறை நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டது. 2011ஆம் ஆண்டு உலக உணவுத் திட்டத்தின் நிதி உதவியுடன் மாணவர்களுக்கான மதிய உணவு சமைப்பதற்கான சமையல்கூடம் நிர்மாணிக்கப்பட்டது . 2011ஆம் ஆண்டு யூனிசெப் நிறுவனத்தின் நிதி உதவியுடன் சிறுவர் பூங்கா புனரமைக்கப்பட்டு சிறுவர்களின் மனமகிழ்வுக்கான அம்சங்கள் அமைப்புக்கள் உருவாக்கப்பட்டன. அத்துடன் பாடசாலை முன்பக்க மதில் மற்றும் வளைவும் நிறுவப்பட்டதோடு வர்ணம் பூசப்பட்டு அழகுபடுத்தப்பட்டது.

கோப்பாய் கல்விக்கோட்டத்தில் வளர்ந்து வரும் ஆரம்பப்பாடசாலையான கந்தவேள் மாணவர்கள் , கோட்ட மட்டத்தில் நடைபெறும் அனைத்துப்போட்டிகளிலும் கலந்து கொண்டு தமது திறமையை வெளிப்படுத்தி வருகின்றனர். அத்துடன் ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கான இணைப்பாடவிதானச் செயற்பாடுகளையும் ஆர்வத்தோடு நிறைவு செய்து வருகின்றனர். பாடசாலை மட்டத்திலான வகுப்பறை மட்டத்திலான மன்றச்செயற்பாடுகள் மற்றும் கலை நிகழ்வுகள் , ஆக்கத்திறன் வெளிப்பாடுகள் உரிய அட்டவணையின் பிரகாரம் நடத்தப்பட்டு மாணவர்களின் திறன்கள் , தேர்ச்சிகள் வெளிப்படுத்தப்படுவதோடு கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் திட்டமிட்ட முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பாடசாலைக்கான தண்ணீர்த்தாங்கி ,மாணவர்களுக்கான மலசலகூட வசதி, சுற்றுமதில் என்பன நிறைவு செய்யப்பட வேண்டிய அவசியமான தேவை என பாடசாலையின் அதிபர் சு.விவேகானந்தன் தெரிவித்தார். பாடசாலையின் அவசிய தேவைகளையும் வறிய மாணவர்களுக்கான கற்றல் வள வசதியையும் வழங்குவதற்கு புலம்பெயர் உறவுகள் மற்றும் வசதி படைத்தோர் முன்வரவேண்டும் என்பதே பாடசாலைச்சமூகத்தின் எதிர்பார்ப்பாகும்.

உதயன் - 19.10.2012, 26.10.2012



# 35 ஆரம்பக் கல்வியில் முன்னேறத் துடிக்கும் கோப்பாய் வடக்கு றோ.க.த.க பாடசாலை

**கோ**ப்பாய் வடக்கு றோமன் கத்தோலிக்க பாடசாலை குறிப்பிடத்தக்க மாணவர் எண்ணிக்கையோடு, ஆரம்ப காலப்பகுதியில் தரம் 1 முதல் 8 வரையான வகுப்புக்களோடு செயற்பட்ட போதிலும், பாடசாலையில் நிலவிவரும் இட நெருக்கடியும், வளவசதிக்குறைபாடும் மாணவர் எண்ணிக்கையைக் குறைவடையச் செய்ததோடு, மட்டுமல்லாமல் கனிஷ்ட இடைநிலைப் பாடசாலை என்ற நிலையில் இருந்து ஆரம்பப் பாடசாலை என்ற தர நிலைக்கு இறங்கியது.

பாடசாலைக் கட்டடத் தொகுதி, மாணவர், ஆசிரியர்களுக்கான மலசலகூடத் தொகுதி மற்றும் குடிதண்ணீர் வசதிக்கான குழாய்க்கிணறு என்பனவற்றோடு பாடசாலைக்குச் சொந்தமான நிலப்பரப்பு நிறைவடைகின்றது. மாணவர்கள் ஆசிரியர்களின் இயல்பான செயற்பாடுகளுக்கு இடவசதி இன்மை பெரும் தடையாக இருப்பதாகக் கூறப்படுகின்றது.

'பாடசாலையின் கிழக்குப் பக்கமாக உள்ள பனந்தோப்பைப் பாடசாலைக்கென கொள்வனவு செய்தால், பாடசாலையில் நிலவிவரும் இடவசதி குறைபாடு நிவர்த்தி செய்யப்படுவதோடு மாணவர்களின் இணைப்பாடவிதான செயற்பாடுகளையும் முன்னெடுப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். புலம்பெயர் பழைய மாணவர்களின் நிதி

உதவியோடு காணியைக் கொள்வனவு செய்வதற்கு முயன்ற போதிலும் பொருத்த மான அளவு நிதி கிடைக்காமையால் அது முடியாமல் உள்ளது. காணியைக் கொள்வனவு செய்வதற்கு பாடசாலைச் சமூகம் உரிய முறையில் முன்வந்து உதவ வேண்டும். இந்த கைங்கரியத்திற்கு சமூக வேறுபாடுகளைக் கடந்து சகலரும் ஒத்துழைப்பு வழங்கினால் இந்த முயற்சி நிச்சயம் கைகூடும் என எதிர்பார்த்துள்ளோம்" என பாடசாலையின் தற்போதைய அதிபர் திருமதி ஜெ.பிரேமலதா தெரிவித்தார்.

பாடசாலையின் வரலாறுகள் மற்றும் ஆவணங்கள் 1995ஆம் ஆண்டு இடப்பெயர்வின்போது முற்றாக அழிவடைந்த நிலையில் பாடசாலை இடம்பெயர்ந்து மட்டுவில் கிராமத்தில் செயற்பட்டது. குறித்த காலப்பகுதியில் மாணவர்களும் இடம்பெயர்ந்தனர். மீளக்குடியமர்ந்த நிலையில் 1996இல் பாடசாலை மீண்டும் செயற்படத் தொடங்கியது.

பாடசாலையின் முதலாவது அதிபராக எஸ்.அருமைநாயகம் கடமையாற்றினார். அவரைத் தொடர்ந்து வி.அம்பலவாணர், செ.கணபதிப்பிள்ளை, வி.யோசேப் எஸ் பிரியர் ஆகியோர் அதிபர்களாகக் கடமையாற்றினர். வி.யோசேப் எஸ்பிரியர் அதிபராகக் கடமையாற்றிய காலப்பகுதியான 1962ஆம் ஆண்டு டிசெம்பர் 15ஆம் திகதி 1343ஆம் இலக்க உரித்தாக்கும் கட்டளையின் பிரகாரம் பாடசாலையை அரசு பொறுப்பேற்றது.

யோசேப் எஸ்பிரியர் காலமானதை அடுத்து க.இராசரத்தினம் அதிபராகக் கடமையேற்றார். அதன் பின்னர் சி.பினாகபானி 04.07.1975ஆம் ஆண்டு அதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். அவருக்குப் பின்னர் அ.நாகரத்தினம் அதிபராகக் கடமையேற்றார். நாகரத்தினம் சேவையில் இருந்து ஓய்வுபெற 23.03.1989 இல் க.விநாயகலிங்கம் அதிபராகப் பொறுப்பேற்று 2002ஆம் ஆண்டு சேவையில் இருந்து ஓய்வுபெறும் வரை 14 வருட காலம் அதிபராகக் கடமையாற்றியுள்ளார். இந்தக் காலப்பகுதியில் பாடசாலைக்கான கட்டட வசதியும் அதனோடு இணைந்த பொருத்தமான வளவசதிகளும் உருவாக்கப்பட்டன. "குறித்த காலப்பகுதியில் விளையாட்டுப்போட்டி மற்றும் பரிசளிப்பு விழா என்பனவும் நடத்தப்பட்டன. மாணவர்களுக்கான விளையாட்டுப் பயிற்சிகள் மற்றும் போட்டிகள் அருகில் உள்ள சூசையப்பர் தேவாலய வீதியை மைதானமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. குறித்த பாடசாலையை முன்னேற்றுவதற்கு பாடசாலைச் சமூகமும், கல்வி அதிகாரிகளும் முன்னுரிமை அடிப்படையில் முயற்சி எடுக்க வேண்டும். பின்தங்கிய சமூகத்தைச் சேர்ந்த வறிய மாணவர்கள் கல்வி கற்கும் இத்தகைய பாடசாலைகளை மேல்நிலைப்படுத்துவதற்கும் உரிய வசதிகள் வழங்குவதற்கும் விசேட வேலைத்

திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்" என்று முன்னாள் அதிபர் க.விநாயகலிங்கம் (வயது 73) கவலையோடு தெரிவித்தார்.

விநாயகலிங்கம் அதிபராக இருந்த காலப்பகுதியில் அவரது முயற்சியால் பாடசாலைக்கான மதில் மற்றும் வேலிகள் என்பன நிர்மாணிக்கப்பட்டதோடு, தற்பொழுது பாவனையில் உள்ள கட்டடத் தொகுதியின் கட்டுமானப் பணிகளும் முன்னெடுக்கப்பட்டன.

இடநெருக்கடியால் பாடசாலையின் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ள முடியாமல் இருந்தமையால், அயலில் உள்ள க.மார்க்கண்டு ஆசிரியரின் வீட்டில் ஒரு வருடம் மாணவர்களுக்கான வகுப்புகள் நடத்தப்பட்டன. 2002ஆம் ஆண்டு விநாயகலிங்கம் சேவையில் இருந்து ஓய்வு பெற சி.தர்மசீலன் அதிபராகப் பொறுப்பேற்றார். அவரைத் தொடர்ந்து எஸ்.புஸ்பராசாவும் 2010.04.16இல் இருந்து கு.திலீபனும் அதிபர்களாகப் பொறுப்பேற்றனர். இந்தக் காலப்பகுதியில் இரண்டு தடவை ஹொலண்ட் சத்திய சேவா நிறுவனத்தின் உதவியுடன் மாணவர்களுக்கு காலணிகள் மற்றும் உபகரணப் பொதிகள் வழங்கப்பட்டன. திலீபன் இடமாற்றப்பட்டதை அடுத்து 2011.06.07ஆம் திகதியில் இருந்து அதிபராக திருமதி ஜெ.பிரேமலதா கடமையாற்றி வருகின்றார். 'கற்றாங்கு ஒழுகுக' என்ற மகுட வாசகத்தையும் சமூகத்தில் சகலருக்கும் கல்வி என்ற தூர நோக்கையும் கொண்ட கோப்பாய் வடக்கு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களின் கல்வி முன்னெடுப்புகள், உரிய வள நிலையில் மேல் நிலைபெற சகல தரப்பினரும் உதவ முன்வரவேண்டும்.

உதயன் - 20.07.2012, 27.07.2012




# 36 100 ஆண்டுகளைக் கடந்த கல்விப்பணியில் இருபாலை கிழக்கு சி.சி.த.க.பாடசாலை

இருபாலை கிழக்கில் வாழும் வறியமக்களின் கல்வி அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு 1905 ஆம் ஆண்டு இலங்கைத்திருச்சபை மிஷனால் ஆரம்பிக்கப்பட்ட கல்விக்கூடம் இன்று குறித்த சூழலில் தனது பணியை ஆற்றி வருகின்றது. ஆரம்ப கால பெயரான "சி.சி.த.க.பாடசாலை என்ற நாமம் பாடசாலைச் சமூகத்தினால் தொடர்ந்தும் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

வளர்ந்த சமூக சூழலில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளின் பெயர்கள் கால வோட்டத்துக்கும், கருத்து மாற்றத்துக்கும் ஏற்ப பல பெயர்களைப்பெற்று புதிய பெயர்களுடன் விளங்கும் இந்தக் காலச்சூழலில் ஆரம்பக்காலப் பெயரோடு பணியாற் றும் இருபாலை கிழக்கு சி.சி.த.க.பாடசாலையின் ஆரம்பகால பங்குபணிகள் இன்றும் பசுமையுடன் நினைவு கூரப்படுகின்றன.

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான நெடுஞ்சாலையில் இருபாலை சந்தியில் இருந்து கிழக்கே மூன்று கிலோமீற்றர் தூரத்தில் இப்பாடசாலை அமைந்துள்ளது. இயற்கையானதும், மிக அமைதியானதுமான கிராமச்சூழல், நெருக்கமில்லாத குடியிருப்பு, கல்வியில் உயர்வடைவதற்கு விரும்பும், உடல் உழைப்பை நம்பி

வாழும், வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்கள் மற்றும் இடம்பெயர்ந்த குடும்பங்கள் வாழும் , குடியிருப்பு ஆகியன கொண்ட கிராமம் நிலவளம் இருந்த போதிலும் நீர் வளம் குறைந்த நிலையில் குடி தண்ணீரைப் பெறக்கூடிய நல்ல தண்ணீர்க் கிணறு எதுவும் இல்லை. கிணற்று நீர் உவர் மற்றும் உப்புத்தன்மை கொண்டது.

வலி. கிழக்கு பிரதேச சபைக்கு சொந்தமான பௌசர் இரண்டு தினங்களுக்கு ஒரு தடவை குடிநீரை விநியோகிக்கின்றது. அந்த ஒழுங்கு நிலையிலே குடி தண்ணீர் பாடசாலை வளவில் பிளாஸ்ரிக் கொள்கலன்களில் நிரப்பப்படுகின்றது. கிராமத்திலுள்ள மக்கள் பொதுப்போக்குவரத்து வசதியைப் பெறவேண்டுமாயின் மூன்று கிலோமீற்றருக்கு மேல் சீர்செய்யப்படாத குன்றும் குழியுமான திருத்தி அமைக்கப்படாத ஒழுங்கைப் பாதையில் நடந்து இருபாலைச் சந்திக்கு வந்தே பெற்றுக்கொள்ளவேண்டும்.

தரம் ஒன்று முதல் ஐந்து வரையான வகுப்புக்களைக்கொண்ட ஆரம்பப் பாடசாலை அமைதியானதும், கல்விச்சூழலுக்கு ஏற்புடையதுமான வளவில் அமைந்துள்ளது. பாடசாலையுடன் இணைந்த 6 பரப்புக்காணி. 2003ஆம் ஆண்டு பாடசாலைச் சமூகத்தின் ஒத்துழைப்போடு தற்போதைய அதிபர் திருமதி.க.சுந்தரலிங்கத்தின் பெரும் முயற்சியோடும் கொள்வனவு செய்யப்பட்ட காணி விளையாட்டு மைதானமாக பயன்படுத்தப்படுகின்றது. பாடசாலைக்கான விளையாட்டு மைதானம் இல்லாத பெரும்குறையைக் கருத்தில் கொண்டு புலம்பெயர் பழைய மாணவர்கள் சார்பா கனடாவில் செயற்படும் பழைய மாணவர் அமைப்பு, இந்தக் காணியைக் கொள்வனவு செய்வதற்கான நிதியை வழங்கி உதவியது. குறிப்பிட்ட காணியைத் தனியார் ஒருவர் கொள்வனவு செய்திருந்த போதிலும் , பாடசாலைச்சமூகத்தின் முயற்சியால் திருப்பிப்பெறப்பட்டது. அந்த வகையில் காணி கொள்வனவில் மேலதிக செலவு ஏற்பட்டதோடு, கொள்வனவு செய்தவருக்கு வட்டியும் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

தரம் ஐந்து வரையான வகுப்புக்களைக்கொண்ட ஆரம்பப்பாடசாலையாக இது இருந்த போதிலும், கோப்பாய் கல்விக்கோட்டத்தில் ஆரம்பப்பாடசாலை மட்டத்தில் நடைபெற்ற மதிப்பீடுகளில் இருபாலை கிழக்கு சி.சி.த.க.பாடசாலை முன்னணியில் உள்ளது. அதிபரோடு சேர்த்து 8 ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர். ஆசிரியர் பற்றாக்குறை இல்லை . கல்வித்திணைக்களம் பாடசாலையின் கல்வி மேம்பாட்டுக்கு சகல வகையிலும் ஒத்துழைப்பு வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. கடந்த வருடம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்

ளப்பட்ட மதிப்பீட்டில் பரீட்சைக்குத் தோற்றிய 70 புள்ளிகளுக்கு மேற்பெற்ற மாணவர்களின் வீதம் 93. இந்த வகையில் கோப்பாய் கல்விக்கோட்டப் பாடசாலைகள் மட்டத்தில் முதன் நிலையிலுள்ளது.

1995 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கையை அடுத்து பாடசாலை முற்றாக இடம்பெயர்ந்த நிலையில் இருந்தமையினால் பாடசாலையில் ஆவணங்கள் முற்றாக அழிக்கப்பட்டன. பாடசாலைச்சூழலில் இராணுவம் முகாமிட்டு இருந்தமையினால் ஆவணங்கள் எதையும் மீளப்பெற முடியவில்லை. இந்த வகையில் பாடசாலையின் வரலாறு அண்மைக்காலத்தில் முன்னாள் அதிபர்கள் மற்றும் பாடசாலைச் சூழலில் வாழ்ந்த மூத்தபிரஜைகளிடம் பெற்றுக்கொண்ட வாய்மொழிக் கூற்றுக்களின் அடிப்படையில் சிறிய அளவில் கொடுக்கப்பட்டுள்ளது. இராணுவநடவடிக்கையால் ஆதாரங்கள் இல்லை எனக் கூறப்பட்டது.

1905ஆம் ஆண்டு பாடசாலை இலங்கைத் திருச்சபை மிஷனரியால் ஆரம்பிக்கப்பட்டது. 1942ஆம் ஆண்டு பாடசாலைக்கான காணியில் ஒருபகுதி உலாந்த விசுவலிங்கத்தால் நன்கொடையாக வழங்கப்பட்டது. ஆரம்ப காலத்தில் ஓலைக் கொட்டிலில் செயற்பட்ட பாடசாலைக்கு 1948ஆம் ஆண்டு கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டது. 1962 ஆம் ஆண்டு பாடசாலை அரசினால் சுவீகரிக்கப்பட்டு அரச பாடசாலை ஆனது. 2004ஆம் ஆண்டு ஜீ.ரி.இசற் நிறுவனத்தினால் வகுப்பறைக் கட்டடம் மாணவர்களுக்கான மலசலகூடம் என்பன கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளது.

தரம் ஒன்று முதல் ஐந்து வரையான ஐந்து வகுப்பறைகளும் பொருத்தமான கவின் நிலையில் அமைக்கப்பட்டுள்ளன. பாடசாலையில் பணிபுரியும் எட்டுப்பேரும் பெண்கள். இந்த வகையில் ஒருமித்த எண்ணப்பாட்டோடு கல்விச்செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஆண்டுதோறும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர்கள் சித்தியடைவது குறிப்பிடத்தக்கது. இந்த வருடம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் ச.குஷாலினி 155 புள்ளிகளைப்பெற்று புலமைப்பரிசில் பெறுவதற்கு தகுதி பெற்றுள்ளார். பாடசாலையின் தற்போதைய அதிபராக "இலங்கை அதிபர் சேவை தரம் 2 : Iஐச் சேர்ந்த திருமதி.க.சுந்தரலிங்கம் கடமை புரிகின்றார்.

கோப்பாய் கல்விக்கோட்டத்தில் மிகவும் வசதி குறைவான கிராமியச்சூழலில் வசிக்கும் வறிய மாணவர்களின் ஆரம்பக் கல்வி வளர்ச்சிக்கான முன்னெடுப்புக்களை திட்டமிட்ட முறையில் மேற்கொண்டு வரும் இருபாலை கிழக்கு சி.சி.த.க.பாடசாலை 1905 ஆம் ஆண்டில் இருந்து செயற்பட்டு வருகின்றது. 107 வருடங்கள் வயது கொண்ட மேற்படி பாடசாலை, ஆரம்பத்தில் ஆரம்பப்பாடசாலையாக இருந்த போதிலும், இடைக்காலத்தில் ஒன்பதாம் வகுப்பு வரை கற்றல் செயற்பாடுகள் நடைபெற்றதாகவும்

பிற்காலத்தில் மீண்டும் தரம் ஐந்து வரையான வகுப்புக்களைக்கொண்ட ஆரம்பப் பாடசாலையாக மாற்றப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. கிராமியச் சூழலையும் கிராமத்தின் வறுமையையும் மதிப்பீடு செய்வதற்கான சுட்டியாக "இருபாலை" கிழக்கு சி.சி.த.க.பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் அனைவரும் வறுமைக்கோட்டுக்கு உட்பட்டவர்கள் என்பதும் : மாணவர்களின் பெற்றோர்களில் யாரும் அரச பணியிலோ மாதாந்தம் ஊதியம் பெறும் தொழில்துறையிலோ கடமை புரியவில்லை என்பதும்"கொள்ளப்படுகின்றது. காலத்துக்குக்காலம் அங்கு கடமையாற்றிய அதிபர்களும், ஆசிரியர்களும் தமது தனிப்பட்ட சிரமங்களைப் பாராது அர்ப்பணிப்போடு கடமையாற்றியுள்ளனர். இவர்களின் பங்குப் பணியும் பாடசாலைச் சமூகத்தினால் பசுமையுடன் நினைவு கூரப்படுகின்றது.

பாடசாலையில் எஞ்சியிருக்கும் ஆவணங்களின் படியும் , பாடசாலைச்சூழலில் வதியும் முதியவர்களின் வாய்மொழித் தகவலின் படியும் கீழ்க்காணுவோர் அதிபர்களாகக் கடமையாற்றியுள்ளனர். எஸ்.கனகரத்தினம், எம்.இராசரத்தினம், எஸ்.நாகலிங்கம், ஞானப்பூங்கோதை நவரத்தினம், வி.செல்லப்பா, ஐ.வேலாயுதர், ப.சுப்பிரமணியம் , அ.இராசரத்தினம் .2003.10.01 ஆம் திகதியில் இருந்து இலங்கை அதிபர் சேவை தரம் - 2 ஐச் சேர்ந்த திருமதி.கமலாவதி சுந்தரலிங்கம் கடமையாற்றி வருகின்றார்.

சேவை மனப்பான்மையோடும், அர்ப்பணிப்போடும் கடமையாற்றும் தற்போதைய அதிபர் பொதுப்போக்குவரத்து வசதியின்றி பிரதான வீதியில் இருந்து மூன்று கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ள பாடசாலைக்கு நாளாந்தம் வாடகை ஓட்டோவில் வந்து திரும்புவதாக தெரிவித்தார்.

இயல்பாகவே மிகவும் வசதிகுறைவான பிரதேசத்தில் அமைந்திருப்பதும் குடிதண்ணீர் வசதியில்லாத சூழலிலும் இருப்பதைக்கருத்தில் கொண்டு அதிகஷ்டப் பிரதேசமாக இருபாலை கிழக்கு கணிக்கப்பட்டிருந்தது. அந்த வகையில் பாடசாலை யில் கடமைபுரியும் ஆசிரியர்களுக்கு மாதாந்த ஊக்குவிப்புப்படியாக 2500 ரூபா வழங்கப்பட்டு வந்தது. 2012 ஆம் ஆண்டு ஜனவரியில் இருந்து அதிகஷ்டப்பிரதேசமோ, கஷ்டப்பிரதேசமோ என்ற எல்லைப்பாட்டிற்குள் உள்ளடக்கப்படமாட்டாது என்றும் அதற்கான ஊக்குவிப்புக்கொடுப்பனவும் வழங்கப்படமாட்டாது என்றும் வடக்கு மாகாண கல்வித்திணைக்களம் இந்த வருடம் அறிவித்துள்ளது. அத்துடன் 2012 ஜனவரியில் இருந்து ஜூன் மாதம் வரை வழங்கப்பட்ட அதிகஷ்ட பிரதேச ஊக்குவிப்பு கொடுப்பனவு மீளப்பெறப்படும் என உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது மிகப்பெரிய கொடுமை என பாடசாலை அபிவிருத்திச்சங்க நிர்வாகி ஒருவர் கவலையுடன் தெரிவித்தார். மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் : சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எத்தகைய அபிவிருத்திச் சுட்டிகளை முன்வைத்து நியாயப்படுத்தி அதிகஷ்டப் பிரதேசம் என்ற சலுகையை நீக்கினார் என்பது தெரியவில்லை. அதிகஷ்டப்

பிரதேசம் என்ற சலுகை இருந்த காலப்பகுதியில் ஆசிரியர்கள் சுயவிருப்பத்தோடு கடமையாற்றினர். எதிர்காலத்தில் அதில் மாற்றம் ஏற்பட்டிருப்பதால் ஆசிரியர் பற்றாக்குறை ஏற்படும் . பிள்ளைகளின் கல்வி நிலை வீழ்ச்சி அடையும் எனக்கவலை தெரிவித்தார்.

2005ஆம் ஆண்டு பாடசாலை விளையாட்டு மைதானத்துக்கு என புலம்பெயர் பழைய மாணவர்களின் உதவியுடன் கொள்வனவு செய்யப்பட்ட விளையாட்டு மைதானம் பாடசாலையோடு இணைந்த நிலையில் அமைந்துள்ளது.

பாடசாலையில் ஆரம்பக்கல்வி கற்று புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற பழைய மாணவர்களில் எஸ்.சத்தியநாராயணன், எல்.லிங்காயினி ஆகியோர் மருத்துவத்துறையிலும், உ.தனுஷா, சி.கம்ஷாயினி ஆகியோர் பொறியியல் துறையிலும் , எஸ்.சயந்தன் நில அளவைத்துறையிலும் பட்டப்படிப்பை மேற்கொண்டு வருகின்றனர். பாடசாலையின் தேவை அறிந்த பழைய மாணவர்கள் மற்றும் புலம்பெயர் மாணவர்கள், ஏ.எம்.ரி.நிறுவனத்தின், லயன் Dr.S. தியாகராசா, ஹரிதாஸ் நிறுவனத்தின் சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் , லயன்ஸ் கழகம், யூனிசெவ் நிறுவனம் என்பன பொருத்தமான உதவிகளை வழங்கி வருவதாகவும், அவர்களின் உதவிக்கு நன்றியையும் தெரிவித்தார் அதிபர் திருமதி கமலாவதி சுந்தரலிங்கம். "விழித்திரு உயர்ந்திடு" என்ற மகுட வாசகத்தைக்கொண்ட இருபாலை சி.சி.த.க.பாடசாலை "எதிர்காலச் சவால்களுக்கு முகம் கொடுக்கக்கூடிய மாணவர் சமூகத்தை உருவாக்குதல்" என்ற தூரநோக்கோடு செயற்பட்டு வருகின்றது. ஆரம்பக் கல்விக்கான வகுப்பறைகள் கவின் நிலையுடன் கூடியதாகவும், பொருத்தமான கட்டட வசதி கொண்டதாகவும் உள்ளன.

வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி, பரிசளிப்பு விழா என்பன நடைபெறுவ தோடு, கவின்கலை மன்றம், இந்து மன்றம், கிறிஸ்தவ மன்றம், தமிழ் மன்றம் உள்ளிட்ட ஏனைய செயற்பாடுகளும் மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளும் திட்டமிட்ட முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆரம்பப்பிரிவு மாணவர் மட்டத்தில் நடைபெறும் கோட்டமட்ட விளையாட்டுப்போட்டி, தமிழ்த்தினப்போட்டி ஏனைய போட்டிகளில் கலந்து கொண்டு மாணவர்கள் தமது திறமையை வெளிப்படுத்தி வருகின்றனர். தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்கின்ற வசதி இல்லாத சூழ்நிலையில் பாடசாலை கற்பித்தல் செயற்பாடுகளில் முழுமையான நம்பிக்கை வைத்து முன்னேறிவரும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு . வசதி வாய்ப்பு உள்ளவர்கள் இயன்றவரை உதவ முன்வரவேண்டும். இது காலத்தின் கட்டாய தேவை ஆகும்.

உதயன் - 05.10.2012, 12.10.2012




# 37 சைவத்தமிழ் பாரம்பரியத்தை பாதுகாத்துவரும் அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்

**வ**லிகாமம் கிழக்குப் பிரிவின் மேற்கு எல்லையில் அமைந்துள்ள நீர் வளமும் நிலவளமும் நிறைந்த பெரு நிலப்பரப்பு அச்செழு. அச்செழு தெற்கு, வடக்கு, மேற்கு, கிழக்கு, மத்தி என ஐந்துக்கும் மேற்பட்ட குறிச்சிகளை உள்ளடக்கிய அச்செழு கிராமத்தில் கிறிஸ்தவ மிசனரிமாரின் கல்வி முன்னெடுப்போடுகூடிய சமயப் பரம்பலினால் சைவத்தமிழ் பாரம்பரியம் வலிமை குன்றிவிடும் என்ற அச்சத்தினாலும் தமிழ் சைவப் பாரம்பரியம் பாதுகாக்கப்படவேண்டும் என்ற ஊர் பொதுமக்களின் ஆர்வ மிகுதியினாலும் உருவாகியது அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலை.

ஊர் பொதுமக்கள்கூடி சைவத்தமிழ் வித்தியாலயத்தை நிறுவவேண்டும் என்ற தீர்மானத்தை மேற்கொண்டதோடு ஊரின் மத்தியில் வித்தியாலயத்தை நிறுவு வதற்கும் தீர்மானித்தனர். ஊர் பொதுமக்களின் தீர்மானத்துக்கு ஊக்கமளிக்கும் வகையில் தற்பொழுது வித்தியாலயம் அமைந்திருக்கும் 25 பரப்பு நிலத்தையும் அன்பளிப்பாக வழங்கி உதவியவர் பரோபகாரி இராமுப்பிள்ளை அம்பலவாணர்.

1956.09.05ஆம் திகதி பொதுமக்களினால் அமைக்கப்பட்ட கட்டடத்தில் சைவப் பிரகாச வித்தியாசாலை என்ற நாமத்துடன் வித்தியாரம்பம் நடைபெற்றது. நிகழ்வில் கோப்பாய் கோமான் அமரர் கு.வன்னியசிங்கமும் கலந்துகொண்டு

கல்விச் செயற்பாடுகள் மேலோங்க வாழ்த்துரை வழங்கினார். பொதுமக்கள் மத்தியில் உத்வேகம் கொண்ட சைவத் தமிழ் பாரம்பரியம் தொடர்பான சிந்தனை மேலோங்க வளர்ந்து பொன்விழாக் கொண்டாடி (2006) மணி விழாவை நோக்கி வளர்ச்சியடைந்து செல்கின்றது. தற்பொழுது பாடசாலை அதிபராக சண்முகநாதன் வேலழகன் கடமை புரிகின்றார். தரம் 1-11 வரையான வகுப்புகளைக் கொண்ட தரம் 2 பாடசாலையாகச் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது. 470 மாணவர்கள் தற்பொழுது கல்வி கற்றுக்கொண்டிருக்கின்றனர்.

கடந்தகால இராணுவ நடவடிக்கையால் வளவசதிகள் அனைத்தையும் இழந்து முற்றாக இடம்பெயர்ந்த நிலையில் நீண்ட காலமாக தனியார் இல்லங்களிலும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் செயற்பட்டு வந்த அச்செழு சைவப் பிரகாச வித்தியா சாலை மீண்டும் தொடங்கும் மிடுக்கு என்ற வகையில் வளர்ந்து செல்கின்றது. கல்விக்கான சூழல் அச்செழு அம்பாள் ஆலயத்தின் வாசலில் அமைந்துள்ள வித்தியாசாலை கடந்தகால யுத்த வடுக்களை முழுமையாக எதிர்கொண்டது. தற்போது பணிபுரியும் அதிபர், ஆசிரியர்களின் அர்ப்பணிப்போடு கூடிய சேவை யினால் முன்னோக்கிச் செல்கின்றது. கோப்பாய்க் கல்விக் கோட்டத்தில் உள்ள பாடசாலைகளில் முன்னணிப் பாடசாலையாகத் திகழ்வதோடு பரீட்சைப் பெறுபேறு களிலும், இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் சிறந்து விளங்குகின்றது. பாடசாலைகளிடையே கல்விக்கோட்ட மட்டம், வலயமட்டம், மாவட்டம், மாகாணம் என்ற நிலையில் உரிய பெறுபேறுகளைப் பெற்று வருகின்றது.

1995இற்கு முந்திய காலப்பகுதியில் 950 மாணவர் வரையில் கல்வி கற்றுள்ளனர். 1995இல் இடம்பெற்ற யுத்தத்தால் வலிகாமம் இடப்பெயர்வையடுத்து பெருமளவில் மக்கள் இடம்பெயர்ந்த நிலையில் மாணவர் தொகை குறைவடைந்த போதிலும் தற்பொழுது 470இல் இருந்து அதிகரித்துச் செல்கிறது. கிராமப்புற பாடசாலைகள் எதிர்நோக்கும் வளவசதியீனங்கள் இந்தப்பாடசாலைக்கும் உரியதாக இருப்பதோடு பொதுப் போக்குவரத்து சேவையை பயன்படுத்தக்கூடிய பிரதான வீதியில் இருந்து சில கிலோமீற்றர் தூரத்தில் கிராமப்புறத்தில் அமைந்திருப்பதால் மேலதிக வசதி யீனங்களை எதிர்கொள்கின்றது. வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் யுத்தத்தினால் முழுமையாகப் பாதிக்கப்பட்ட கல்விக்கூடங்களில் முதன் நிலையில் இருந்த அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம், யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதியில் நாளாந்தம் அச்சத்தோடு கல்விச் செயற்பாடுகளை மேற்கொண்டு வந்த போதிலும் 1995ஆம் ஆண்டு வலிகாமம் இடப்பெயர்வை அடுத்து அதி உயர் பாதுகாப்பு வலயம் என்ற வகையில் மட்டுமல்ல, 511ஆவது படைப்பிரிவுத் தளத்தின் மத்தியில் அமைய வேண்டியதாயிற்று.

1995இல் இருந்து 2002ஆம் ஆண்டு காலப்பகுதிவரை குறித்த நிலையத்தில் கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படாத போதிலும் 2002ஆம் ஆண்டு ஏற்பட்ட சமாதான சூழலை அடுத்து பாடசாலையின் ஆரம்பப் பிரிவு பாடசாலைக்குரிய வளாகத்திலும் இடைநிலைப் பிரிவு மாசிவன் சந்திக்கு அண்மையில் உள்ள தனியார் இல்லங்களிலும் செயற்பட்டன.

இந்தக் காலப்பகுதியில் இரண்டு பிரிவுகளின் செயற்பாடுகளும் ஆசிரியர்களின் பணி முன்னெடுப்புக்களும் மிகவும் நெருக்கடியான நிலையில் நடைபெற்று வந்தன. இந்தக் காலப்பகுதியில் பாடசாலையின் கல்விச் செயற்பாடுகளை முகாமைசெய்வதில் பெரும் இடர்பாடுகள் காணப்பட்ட போதிலும் அவற்றை எல்லாம் தனது தனிப்பட்ட திறமையால் எதிர்கொண்டு முன்னெடுத்து வந்தவர் என்ற வகையில் சமகால அதிபர் இ.குணநாதன் சேவை இன்றும் பாடசாலைச் சமூகத்தினால் பசுமையுடன் நினைவு கூரப்படுகின்றது.

2004ஆம் ஆண்டு பாடசாலையின் இரண்டு பகுதியும் ஓர் இடத்தில் செயற்படத் தொடங்கியது. இராணுவ நடவடிக்கையால் சேதமடைந்த பாடசாலையின் கட்டடத் தொகுதி விசேட நிதி ஏற்பாட்டின் மூலம் நிறுவப்பட்டுள்ளன. பழைய கட்டடத் தொகுதியில் பெரும்பாலானவை அகற்றப்பட்டுள்ளன. நீர்வேலி - அச்செழு வீதிக்குத் தெற்குப் புறத்தில் அமைந்துள்ள பாடசாலைக்கான உத்தியோகபூர்வ பாதை இன்றுவரை பயன்பாட்டுக்குத் திறந்துவிடப்படவில்லை. பாடசாலைக்குச் செல்வதற்கு தற்காலிகமான நடைபாதைகளும் மாற்றுவழிகளுமே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. பாடசாலையின் அதிபர்களாகக் கடமையாற்றியவர்கள் என்ற வகையில் சி.கந்தையா, சு.ப.சிங்கராஜர், அ.முதலித்தம்பி, செல்வி. த.நல்லதம்பி, ஆ.குமரகுரு, செ.சிவலிங்கராசா, க.தங்கராசா, இ.குணநாதன், இ. இராசசேகரம் ஆகியோரின் சேவை பாடசாலைச் சமூகத்தினால் நினைவு கூரப்படுகின்றது. தற்பொழுது அதிபராக ச.வேலழகன் கடமையாற்றி வருகின்றார். பிரதி அதிபராக அ.பத்மநாதன் கடமையாற்றி வருகின்றார். 24 ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர்.


கோப்பாய் கல்விக் கோட்டத்தில் உள்ள தரம் 2 பாடசாலைகளில் முன்னணியில் திகழும் அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலையின் அமைவிடம் முழுமையான கிராமியச் சூழலில் அமைந்திருப்பதால் சமகாலக் கல்விச் சூழலை மாசுபடுத்தும் புறக்காரணிகளின் தாக்கம் குறைவாகக் காணப்படுகின்றது. அத்துடன் ஒழுக்கக் கட்டுப்பாடுகளுடன் கூடிய கல்வி மேம்பாட்டைக் கண்டுகொள்ள முடிகின்றது. பாடசாலையின் பரீட்சைப் பெறுபேறுகளும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளும் கணிசமான அளவு உயர்நிலையில் காணப்படுவதைக் கண்டுகொள்ள முடிகின்றது.

க.பொ.த.சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் கணிசமான தொகையினர் க.பொ.த.உயர்தரம் கற்பதற்குத் தகுதியான நிலையில் சித்தி யடைவதுடன் பாடரீதியிலும் உயர் பெறுபேறுகளை அண்மித்து காணப்படு கின்றனர்.

இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் நகரப் பாடசாலைகளுக்குச் சமமான நிலையில் காலச் சூழலுக்கு ஏற்ற வகையில் முன்னேறி வருவதை பாடசாலை அதிபரின் அறிக்கையில் கண்டுகொள்ள முடிகின்றது. பாடசாலைச் சமூகத்துக்கும் - பாடசாலை முகாமைத்துவத்துக்கும் நெருக்கமான தொடர்பு இருப்பதை பாடசாலை யின் சமகால வளர்ச்சிநிலை புலப்படுத்துகின்றது.

ஆசிரியர் ஆளணிப் பற்றாக்குறை பாடரீதியில் சமன் செய்யப்படாத நிலையில் காணப்படுவதுடன் பாடசாலைக்கு அண்மையில் வசிக்கும் ஆசிரியர்கள் விரும்பி அர்ப்பணிப்புடன் கடமையாற்றக் கூடிய நிலையில் அவர்களைத் தெரிந்தெடுத்துப் பிரபல பாடசாலைகளுக்கு இடமாற்றுவதும், பதிலீடாக ஆசிரியர்களை நியமனம் செய்யாமல் அந்த இடங்கள் வெற்றிடமாகவே இருப்பதும் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைக்கு இடையூறாக அமைந்து விடுகிறது எனப் பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாகியான பெற்றோர் ஒருவர் மிக மனவருத்தத்துடன் கூறிக் கவலை தெரிவித்தார். கிராமப்புறப் பாடசாலைகளைக் கல்வி அபிவிருத்தி செய்யும் நோக்கில் சகல வளங்களும் நகரப்பாடசாலை போன்று வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற தேசிய கல்விக் கொள்கைக்கு அமைய அச்செழு சைவப் பிரகாச வித்தியாசாலையின் வளர்ச்சிக்கு அனைத்து உதவிகளும் வழங்கப்பட வேண்டும்.

உதயன் - 29.09.2011, 06.10.2011



# 38 கிராமியமட்ட கல்வி அபிவிருத்தியில் நீர்வேலி சி.சி.த.க பாடசாலை

கிராமியமட்டத்தில் வறிய மாணவர்களின் கல்வி அபிவிருத்தியை நோக்காக கொண்டு இலங்கை திருச்சபை மிசனால் ஆரம்பிக்கப்பட்டது நீர்வேலி சி.சி.த.க பாடசாலை. கல்வியோடு சமயத்தைப் போதிப்பதற்கு வசதியாக 1870ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது. கிராமிய மட்டத்தில் ஆரம்பக்கல்வி அபிவிருத்திக்கு காத்திரமான பங்களிப்பை செய்ததோடு, கோப்பாய்த் தொகுதியில் உள்ள ஆரம்பப் பாடசாலைகளின் கல்வி அடைவுமட்டத்திலும் இணைப்பாடவிதானச் செயற்பாடு களிலும் முன்னணியில் இருந்து வந்தது.

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோயிலடியில் இருந்து வடக்கு நோக்கிச் செல்லும் வீதியில் கூப்பிடு தூர இடைவெளியில் அமைந்துள்ளது. பாடசாலைக்கு உரிய காணியை ஆரம்ப காலப்பகுதியில் இலங்கை திருச்சபை மிஷன் கொள்வனவு செய்து கல்விச் செயற்பாடுகளுக்கான கொட்டிலை நிறுவி தரம் ஐந்து வரையான வகுப்புக்களை ஆரம்பித்து நடத்தியதாகக் கூறப்படுகின்றது.

நீர்வேலி பகுதியில் நிறுவன மயப்படுத்தப்பட்ட கல்விச் செயற்பாடுகள் முதன் முதலாக நீர்வேலி சி.சி.த.க. பாடசாலையிலேயே ஆரம்பமாகின. இதனால்

குறிப்பிடத்தக்களவு மாணவர்கள் பாடசாலையில் இணைந்து கொண்டனர். குறிப்பிட்ட காலச்சூழலில் மிஷனறிமாரால் திட்டமிட்ட கலைத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. ஆரம்ப காலப்பகுதியில் கிறிஸ்தவ சமயக்கல்வியோடு இணைந்த கலைத்திட்ட வடிவம் முன்னெடுக்கப்பட்டது. எனினும் குறித்த சூழலில் கிறிஸ்தவ சமயம் பரவியதற்கான அடையாளமோ, கிறிஸ்தவ குடும்பங்களோ பாடசாலைச் சூழலில் காணப்படவில்லை.

மக்கள் கல்விச் செயற்பாடுகளை ஆரோக்கியமான முறையில் ஏற்றுக்கொண்டு கல்வியில் முன்னேறிய போதிலும், சமயம் சார் நிலையிலோ வழிபாட்டு முறையிலோ கிறிஸ்தவம் சார் நிலையைக் கைக்கொள்ளவில்லை எனக் கூறப்படுகின்றது. அவர்கள் பாடசாலையை அபிவிருத்தி செய்து கிராமமட்டத்தில் கல்வியில் மேம்பட்டனர்.

1962ஆம் ஆண்டு பாடசாலையை அரசு பொறுப்பேற்றது தொடர்பான ஆவணத்தில் 5 பரப்பும் 10 4/5 குளி பாடசாலையின் காணி அளவு என குறிப்பிடப்பட்டுள்ளது. கல்விச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட 1870ம் ஆண்டிலிருந்து 1930ஆம் ஆண்டு வரை 60 ஆண்டுகள் ஓலையால் வேயப்பட்ட இரண்டு கொட்டில்களிலேயே கற்றல் செயற்பாடுகள் நடைபெற்றன. குறித்த காலப்பகுதியில் 280 இற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்றனர்.

பாடசாலையை இலங்கைத் திருச்சபையினர் ஆரம்பித்து நடத்திய போதிலும் பாடசாலையின் வளர்ச்சியில் பாடசாலைச் சமூகமும் பெற்றோரும் கண்ணும் கருத்துமாக இருந்து ஒத்துழைத்தனர். சமயத்தைக் கருத்தில் கொள்ளாமல் கல்வியில் தமது பிள்ளைகள் முன்னேறவேண்டும் என உழைத்தனர். அந்தவகையில் பெற்றோரின் கோரிக்கையை அடுத்து 01.01.1994இல் இருந்து தரம் 8ஆம் வகுப்பு வரையுள்ள பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டது.

பாடசாலையை தரம் 8வரை தரம் உயர்த்துவதற்கு அந்தக் காலப்பகுதியில் அதிபராகக் கடமையாற்றிய சீ.குணலிங்கமும் உப அதிபராகக் கடமையாற்றிய விஞ்ஞான பாட ஆசிரியர் இ.இராஜகோபுரமும் அயராது உழைத்தனர். அவர்களின் முயற்சிக்கு பெற்றோரும் உறுதுணையாக இருந்து ஒத்துழைத்துள்ளனர்.

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி உள்ளிட்ட உயர் பாடசாலைகள் அயலில் செயற்பட்ட நிலையில் நீர்வேலி சி.சி.த.க பாடசாலையில் 8ஆம் வகுப்பு ஆரம்பிக்க வேண்டுமா? என்ற கல்வி அதிகாரிகளின் கேள்விக்கு ஆணித்தரமான பதில் கிடைத்தது. குறித்த காலப்பகுதியில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர்கள்

சித்தியடைந்த தொகை மற்றும் பாடசாலையின் மொத்த மாணவர் தொகை என்பனவும், கோப்பாய் கோட்டக்கல்வி பிரிவு மட்டத்தில் விளையாட்டுப் போட்டி உள்ளிட்ட இணைப்பாடவிதான செயற்பாடுகள் மற்றும் போட்டிகளிலும் பாடசாலை உயர் நிலையில் விளங்கியதும் ஆதாரங்களாக முன்வைக்கப்பட்டன.

1980 இதற்குப் பிற்பட்ட காலப்பகுதியில் யாழ். குடாநாட்டில் விடுதலைப் போராட்ட உணர்வு மேலிட்டது. போராட்டச் செயற்பாடுகள் இளைஞர்களால் முன்னெடுக்கப்பட்ட சூழல் நிலவியது. இராணுவ நடவடிக்கை நாளுக்கு நாள் மேலிட்ட நிலையும் இருந்தது. இதனால் நகரப்புறப் பாடசாலையை நாடி மாணவர்கள் கிராமப் புறங் களில் இருந்து செல்லும் நிலை ஆரம்ப வகுப்பு மட்டத்தில் மிகமிகக் குறைவாகக் காணப்பட்டது. இந்தநிலையில் தமது பிள்ளைகளை வீட்டுக்கு அண்மையில் உள்ள பாடசாலைகளில் சேர்த்து கற்பித்தனர். வலி.கிழக்குப் பிரதேசத்தில் மூத்த கல்விக் கூடங்களில் ஒன்றாகவும், நீர்வேலி கிராமத்தில் நிறுவனமயப்படுத்தப்பட்ட கல்வி கட்டமைப்பின் காலத்தில் முதன்மையானதாகவும் விளங்கும் நீர்வேலி சி.சி.த.க பாடசாலை, 138 வருட கல்விச் சேவையில் உயர்ந்து நிற்கிறது. பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் நீண்டகாலமாக ஏறத்தாழ 60 வருட காலம் ஓலைக் கொட்டிலில் தனது கல்விச்சேவையை மேற்கொண்டு வந்தது. அதன் பின்பு உள்ளூர் பிரமுகர்கள் மற்றும் பெற்றோரின் ஒத்துழைப்புடன் நிரந்தரக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டது. ஆரம்பகாலக் கொட்டில் கட்டமைப்போடு, அதிபர் தங்கியிருந்து கடமைபுரிவதற்கு அதிபருக்கான தங்குமனையும் அமைக்கப்பட்டிருந்தது என கூறப்படுகின்றது.

பாடசாலையின் ஆரம்பகாலம் தொடக்கம் அதிபர், ஆசிரியர்களாகக் கடமையாற்றி யோர் மிகுந்த அர்ப்பணிப்போடு கடமையாற்றினர். அவர்களுக்குப் பாடசாலைச் சமூகத்தினால் சகல வகையிலும் பூரணமான ஒத்துழைப்பு வழங்கப்பட்டது. கிராமத்தின் அங்கமாக பாடசாலை கருதப்பட்டது. பாடசாலையில் கடமைபுரியும் அதிபர், ஆசிரியர்கள் தமது குடும்ப உறுப்பினர்களின் ஒருவராகச் சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டனர்.

1935ஆம் ஆண்டு காலப்பகுதியில் அதிபரோடு நான்கு ஆசிரியர்கள் கடமை புரிந்துள்ளனர். அவர்களில் அதிபர் 54 ரூபாவையும், ஏனைய மூவரும் 49ரூபா, 35ரூபா, 20ரூபா என்ற அளவில் மாதாந்தம் வேதனமாகப் பெற்றுள்ளனர். பிரிட்டன் மன்னரின் உருவம் பொறிக்கப்பட்ட 05 சத முத்திரையில் கையொப்பம் இடப்பட்டு வேதனம் பெறப்பட்டது. பாடசாலையின் ஆரம்பகால அதிபரின் பெயர் விபரங்களை அறிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் 1928ஆம் ஆண்டில் இருந்து அதிபர்களாக கடமையாற்றியோரின் விபரங்களை அறியக்கூடியதாக இருந்தது.

அதிபர் பெயர் விபரங்கள் வருமாறு :-

ஏ.டி.சுப்பிரமணியம் 1928 - 1933, ஜே.ரி.சுப்பிரமணியம் 1933-1934, ஏ.எஸ். சண்முகம் 1934-1970, எஸ். வேதவனம் 1971-1974, ரி.வேலுப்பிள்ளை 1974-1985, பி.கதிரவேலு 1985-1991, எஸ்.செல்வநாயகம் 1991-1991 , எஸ்.குணலிங்கம் 1991-1996, கே.ஆர்.இராசசேகரம் 1996-2002, எஸ்.செல்வநாயகம் 2002-2008, கு.குகானந்தன் 2008-2009, ப.பாலபவன் 2009-2010.

2010.06.16ஆம் திகதியில் இருந்து இ.பசுபதீஸ்வரன் அதிபராகக் கடமை யாற்றுகின்றார். இங்கே அதிபர்களாக, ஆசிரியர்களாகக் கடமையாற்றி பாடசாலை யின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டோர் பாடசாலை சமூகத்தினால் நினைவு கூரப்படு கின்றனர். கரவெட்டியைச் சேர்ந்த ஏ.எஸ்.சண்முகம் 36 வருடங்களாக அதிபராகக் கடமையாற்றி பாடசாலையின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றியுள்ளார்.

பாடசாலைச் சமூகத்தின் தேவையோடு கூடிய வற்புறுத்தலை அடுத்து 1994 ஆம் ஆண்டு தரம் 8 வகுப்பு வரை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. அயலில் பிரபலமான பாடசாலைகள் இருந்த போதிலும் பாடசாலையில் வகுப்புக்களை 8வரை நடத்துவதற்கு அனுமதி வழங்கி பாடசாலையை தரம் உயர்த்தியதற்குக் காரணம் கோப்பாய் கோட்ட ஆரம்பப் பாடசாலைகளில் நீர்வேலி சி.சி.த.க பாடசாலை கல்வி அடைவு மட்டத்திலும், இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் முன்னணியில் இருந்தமை என்பது குறிப்பிடத்தக்கது. த.வேலுப்பிள்ளை அதிபராக இருந்த காலப் பகுதியிலேயே பாடசாலையின் வளவில் குடிதண்ணீர் பெறுவதற்கான கிணறு அமைக்கப்பட்டதோடு புதிய கட்டடம் ஒன்றும் அமைக்கப்பட்டது. அத்துடன் 1982 - 1983ஆம் ஆண்டுகளில் கோப்பாய் கல்விக் கோட்டத்தில் முதல் தரமான ஆரம்பப் பாடசாலையாக நீர்வேலி சீ.சீ.த.க பாடசாலை விளங்கியது.

பி.கதிரவேலு அதிபராக இருந்த காலப்பகுதியில் கிராம சேவையாளர் எஸ். வேலாயுத பிள்ளையின் ஒத்துழைப்புடன் 1985ஆம் ஆண்டு பாடசாலைக்கான இரும்புக்கேற்றும் போடப்பட்டது. 1995ஆம் ஆண்டு இடப்பெயர்வோடு பாடசாலை யின் ஆவணங்கள் அழிவடைந்ததோடு, கட்டடங்களும் சேதமடைந்தன. மீளக் குடியேறிய நிலையில் சேதங்கள் சீர்செய்யப்பட்டதோடு ஜி.ரி.இசற் நிறுவனத்தின் உதவியுடன் மாணவர்களுக்கான மலசலகூடம் நவீனமயப்படுத்தப்பட்டது. 2002ஆம் ஆண்டு கனடாவில் உள்ள நீர்வேலி நலன்புரிச் சங்கத்தின் உதவியுடன் சிறுவர் பூங்கா நிர்மாணிக்கப்பட்டது. யுனிசெவ் நிறுவனத்தின் உதவியுடன் குடிதண்ணீர் தாங்கி கட்டப்பட்டது.

ஆண்டுதோறும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர்கள் சித்தியடைந்து புலமைப்பரிசில் பெறுவதற்கு தகைமை பெறுகின்றனர். 1999ஆம் ஆண்டு கோட்டமட்டத்தில் 2ஆம் இடத்தை பெற்ற அ.கரீந்திரன், இ.சம்பிகா இருவரும் தற்போது வைத்தியர்களாக பணிபுரிகின்றனர். 2001ஆம் ஆண்டு த.கிருத்திகா மாவட்ட மட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்றதோடு, 2010ஆம் ஆண்டு ப.ரஜீவ் கோட்ட மட்டத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளார். தமிழ்த்தினப்போட்டி, விளையாட்டுப்போட்டி மற்றும் போட்டிகளில் கோட்ட, மாவட்ட மட்டத்தில் வெற்றி பெற்று பாடசாலைக்கு மாணவர் பெருமை சேர்த்திருப்பதோடு பாடசாலையின் பழைய மாணவர்கள் பல்வேறு துறைகளிலும் முன்னிலையில் துலங்குகின்றனர்.

உதயன் - 18.01.2013, 25.10.2013



# 39 வலி.கிழக்கு பிரதேச செயலகம்

ஆங்கிலேயரது ஆட்சிக்காலத்தில் இலங்கையில் ஒருங்கமைக்கப்பட்ட நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கும் வகையில் மாகாண, மாவட்ட பிரிவுகள் என்கின்ற கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டதோடு சிவில் நிர்வாக, நிதி நடைமுறைகளைப் பேணுவதற்கு ஏதுவாக மாவட்டங்கள் மணியக்காரர் பிரிவுகளாகவும் ஒவ்வொரு மணியக்காரர் பிரிவு பல கிராமத் தலைமைக்காரர் பிரிவுகளாகவும் பிரித்து நிர்வாக நடைமுறைகளை மேற்கொண்டனர்.

ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்து விடுபட்ட பின்னரும் அதே நிர்வாக அலகு முறைகளை அடியொற்றிய வகையில் காலத்துக்கு காலம் நிர்வாக பிரிவுகளுக்கான பெயர்களும் அதிகார அலகுகளும் வகைப்பாடுகளும் நடைமுறைக்கு உள்ளாக் கப்பட்டு வருகின்றன. மாவட்ட நிர்வாகத்துக்கு அடுத்த நிலையில் மணியகாரர், காரிய அதிகாரி, உதவி அரச அதிபர், பிரதேச செயலர் பிரிவு என்ற வகையில் காலத்துக்கு காலம் பெயர் மாற்றம் பெற்ற போதிலும் குறித்த ஒரு நிர்வாக அலகுக்கு உரியனவே அந்த நாமங்கள்.

மேற்கொண்ட பிரிவுக்கு அடுத்த நிலையில் கிராமத் தலைமைக்காரர், கிராம சேவையாளர், கிராம அலுவலர் என்ற பெயருடன் நிர்வாகக் கட்டமைப்பும் அதிகார நடைமுறையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த வகையில் இலங்கை 9 மாகாணங்கள், 25 மாவட்டங்கள், 235பிரதேச செயலர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு நிர்வாக நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. யாழ்.மாவட்டம் 12 பிரதேச செயலர் பிரிவுகளையும் 3 உதவி அரச அதிபர் பிரிவுகளையும் உள்ளடக்கி 15 பிரிவுகளைக் கொண்டதாகவும் 435 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்டதாகவும் உள்ளது. ஆங்கிலேயர் ஆட்சியில் ஆரம்ப நிர்வாகக் கட்டமைப்பில் வலிகாமம் கிழக்கு மணியகாரர் பிரிவு என்றும் தற்பொழுது வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவு என்றும் அழைக்கப்படும். இப்பிரதேசம் மேற்கே வலிகாமம் வடக்கு, வலிகாமம் தெற்கு பிரிவுகளையும், கிழக்கே தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவையும், தெற்கே நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவையும் ,வடக்கே வலிகாமம் வடக்கு, வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேச செயலர் பிரிவையும் எல்லைகளாகக் கொண்டது. 104.36 சதுர கிலோ மீற்றர் பரப்பளவையும் , 1981ஆம் ஆண்டு குடிசனக் கணக்கெடுப்பின் பிரகாரம் 73,143 பேர் கொண்ட பிரதேசமாகும்.

கிணற்று நீர்பாசனத்துடன் கூடிய பயிர்ச் செய்கை, மீன்பிடி, சிறு கைத்தொழில் , வர்த்தக நடவடிக்கை உள்ளிட்ட பல்வேறு தொழில் முயற்சியைக் கொண்டு பெரும் பகுதி செம்மண்ணும் மற்றும் இருவாட்டி, களி, மணல், மணலும் களியும் கலந்த நரைமண் எனப் பல்வேறுபட்ட மண் கொண்ட பிரதேசமாகும். இங்கு இந்துக்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் நிரந்தரமாகவும், பல்வேறு கடமை மற்றும் வியாபார நடவடிக்கை என்பன தொடர்பாகப் பௌத்தர்களும் வாழும் வளமான பிரதேசமாகும்.

வலி.கிழக்குப் பிரதேச செயலகம் யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியில் 9ஆவது கிலோ மீற்றரில் வீதிக்கு மேற்குப் புறத்தில் கோப்பாயில் அமைந்துள்ளது.

பிரதேச செயலகங்களுக்கு என பொதுமைப்படுத்தப்பட்டு வடிவமைக்கப்பட்ட மாடிக் கட்டடம் 14 பரப்பு வளாகத்தில் பொருத்தமான கட்டமைப்புக்களுடன் அமைந் துள்ளது. இந்த அமைவிடம் இலங்கையின் பொது நிர்வாகக் கட்டமைப்பில் " மணியகாரர் " பிரிவு செயற்படத் தொடங்கிய காலம் தொடக்கம் குறித்த ஒரே இடத்தில் அமைந்துள்ளது. புதிய கட்டட நிர்மாணத்துக்குப் பொதுமக்களின் நிதி உதவியுடன் காணி கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டதோடு அந்த நிதியில் சுற்றுமதிலும் கட்டப்பட்டது.

புதிய மாடிக்கட்டடம் இரண்டாயிரமாம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டது. தற்போது மருதலிங்கம் பிரதீபன் அவர்கள் பிரதேச செயலராகப் பணியாற்றுகின்றார்.

வலி.வடக்கின் முதலாவது மணியகாரராக வேலுப்பிள்ளையும் அவரைத் தொடர்ந்து எஸ்.தம்பிப்பிள்ளையும் கடமையாற்றினர். இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர், மணியகாரர் என்ற பதவிப் பெயர் 'பிரிவுக் காரியாதிகாரி (R.D.O) என மாற்றப்பட்டு நிர்வாக அமைப்புத் தொடர்ந்தது. 1970ஆம் ஆண்டு காரியாதிகாரி நிர்வாகப் பிரிவு உதவி அரச அதிபர் பிரிவு (A.G.A) என மாற்றப்பட்டது. 2003ஆம் ஆண்டு உதவி அரச அதிபர் என்ற நிர்வாகப் பெயர் பிரதேச செயலர் பிரிவு என மாற்றப் பட்டுப் பிரதேச செயலகங்கள் செயற்படத் தொடங்கின.

வலி.கிழக்குப் பிரிவில் மணியகாரர் பதவியில் ஆரம்பித்து இன்று வரை 23 பேர் வரையில் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுச் சிறப்புறப் பணியாற்றியுள்ளனர்.

| | | |
|---|---|---|
| எஸ். வேலுப்பிள்ளை | - | மணியகாரர் |
| எஸ். தம்பிப்பிள்ளை | - | மணியகாரர் |
| **காரியாதிகாரிகள்** | | |
| எஸ்.தெய்வேந்திரம்பிள்ளை | - | 1939 – 1942 |
| டி.என். செல்வரத்தினம் | - | 1943 – 1946 |
| கே. சுப்பிரமணியம் | - | 1947 – 1950 |
| தி. முருகேசப்பிள்ளை | - | 1951 – 1954 |
| ச. ஸ்ரீனிவாசன் | | 1955 – 1958 |
| யே.து. சபாபதிப்பிள்ளை | - | 1958 – 1962 |
| ந. வேதாரணிய சேயோன் | - | 1963 – 1967 |
| வ. கந்தப்பிள்ளை | - | 1967 – 1972 |
| **உதவி அரச அதிபர்கள்** | | |
| வ. கந்தப்பிள்ளை | - | 1972 – 1976 |
| க. மாணிக்கவாசகர் | - | 1976 – 1977 |
| வ. சொக்கலிங்கம் | - | 1978 – 1979 |
| சி. அம்பலவாணர் | - | 1979 – 1981 |
| க. கிட்டினர் | - | 1981 – 1985 |
| க. சபாபதிப்பிள்ளை | - | 1985 – 1986 |
| க. குலேந்திரன் | - | 1986 - 1989 |
| சி. முருகேசப்பிள்ளை | - | 1989 - 1992 |

| | | |
|---|---|---|
| க. கனகரத்தினம் | - | 1992 - 1993 |
| இ. இளங்கோ | - | 1993 - 1993 |
| க. கேதீஸ்வரன் | - | 1993 - 2003 |

**பிரதேச செயலர்கள்**

| | | |
|---|---|---|
| க. கேதீஸ்வரன் | - | 2003 - 2005 |
| பி. செந்தில்நந்தனன் | - | 2005 - 2005 |
| சீ.ஏ. மோகன்றாஸ் | - | 2006 - 2010 |
| ம. பிரதீபன் | - | 2010.11.08 ஆந் திகதியிலிருந்து |

கடமை புரிந்து வருகின்றார்.

**உதவி பிரதேச செயலர்கள்**

| | | |
|---|---|---|
| க. இராசதுரை | - | 2003 - 2004 |
| திருமதி சா. அஞ்சலிதேவி | | 2003 - 2006 |
| திருமதி சி. நிமலினி | - | 2006 - 2007 |
| செல்வி ச. பிரேமினி | - | 2007.01.01 ஆந் திகதியிலிருந்து |

கடமை புரிந்து வருகின்றார்.

வலி.கிழக்குப் பிரிவில் மணியகாரர் பதவியில் ஆரம்பித்து இன்று வரை 23 பேர் வரையில் நிர்வாகப் பொறுப்பை ஏற்று சிறப்புறப் பணியாற்றியுள்ளனர்.

கிராமத் தலைமைக்காரர் பிரிவு நிர்வாக அமைப்பு இருந்த காலப் பகுதியில் வலி. கிழக்குப்பிரிவு பத்தமேனி இடைக்காடு, அச்சுவேலி, புத்தூர் மேற்கு, புத்தூர் கிழக்கு, சிறுப்பிட்டி, நீர்வேலி, ஊரெழு, உரும்பிராய், கோப்பாய் வடக்கு, கோப்பாய் தெற்கு என பத்து பிரிவுகளாக இருந்து வந்தது.

கிராமத் தலைமைக்காரர்கள் குறித்த கிராமத்தில் செல்வாக்கு, அந்தஸ்து, கல்வித்தகைமை உடையவர்கள் குறித்த கிராமத்தில் உள்ள மக்களின் விருப்பத் துடன் (குரல் வாக்கெடுப்பு) தெரிவுசெய்யப்பட்டு நியமிக்கப்பட்டனர். கிராமத் தலைமைக்காரர்கள் முறையுடன் கிராமசேவையாளர் முறையும் இணைந்து கிராமசேவையாளர்கள் நியமிக்கப்பட்டபோது இந்த 10 பிரிவுகளும் செயற்பட்டன.

1991ஆம் ஆண்டு விசேட சேவை உத்தியோகத்தர்கள், பயிர்ச்செய்கை உத்தி யோகத்தர்கள். கிராமசேவை அலுவலர்களாக உள்வாங்கப்பட்டபோது 31 பிரிவு களாக வகுக்கப்பட்டு சிறப்புடன் கிராம மட்டத்தில் நிர்வாகச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவை J[/257 J[/287 வரை இலக்கங்கள் கொண்டவை.

நிர்வாகப் பன்முகப்படுத்தல் கட்டமைப்பில் சமூக சேவைகள் , காணி, நிர்வாகக் கணக்கு, சமுர்த்தி புள்ளிவிபரம், விளையாட்டு, கலை,கலாசாரம், விவசாயம், குடியகல்வு- குடிவரவு, ஆள்பதிவு, வாகனப் போக்குவரத்துப் பதிவுகள், சிறுவர் நலம், விதாதா வள நிலையம் உள்ளிட்ட பல்வேறு திணைக்களப் பிரிவுகளும் உள்ளடங்கிய ஒன்றிணைந்த செயற்பாட்டு மையமாக மக்களுக்கான சேவைகளை வழங்கி வருகின்றது.

யாழ். மாவட்டத்தில் ஆகக்கூடிய குடித்தொகையையும் 31 கிராம அலுவலர் பிரிவு கொண்ட வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவை இரண்டாகப் பிரித்து செயற்பட வைப்பதற்கான முன்மொழிவுகள் நாடாளுமன்ற மட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ள போதிலும் அது இன்றுவரை செயலுருப் பெறாமல் இருப்பதைக் கருத்தில் கொண்டு அரசியல் மற்றும் நிர்வாகத் தலைமைகள் செயற்படுவது காலத்தின் கட்டாயமாகும்.

உதயன் - 30.12.2010, 06.01.2011




# 40 ஒரு லட்சம் சனத்தொகையை நிர்வகிக்கும் வலி கிழக்குப் பிரதேச சபை

இலங்கையில் உள்ளூராட்சி நிர்வாக அமைப்பு "கம்சபா" என்ற புராதன அமைப்பின் மூலம் மன்னர் ஆட்சிக் காலத்திலிருந்தே நடைமுறையில் இருந்து வந்ததாக கூறப்படுகின்றது. போர்பஸ்தான் எழுதிய "இலங்கையில் பதினொரு வருடங்கள்" என்ற நூலில் கம்சபா அமைப்பு பற்றிக் குறிப்பிட்டுள்ளார். 1856ஆம் ஆண்டில் பிரித்தானியரால் பிறப்பிக்கப்பட்ட நீர்ப்பாசனச் சட்டத்தில் கம்சபா பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுவே தற்கால உள்ளூராட்சி அமைப்பின் ஆரம்பம் எனக் கொள்ளப்படுகின்றது. 1865ஆம் ஆண்டு பிரிட்டன் அரசினால் கொண்டுவரப்பட்ட சட்டம் மாநகர சபை அமைப்புக்கள் உருவாக வழிவகுத்தது. 1920ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட சட்டமே ஜனநாயக முறையில் அமைந்த உள்ளூராட்சி அமைப்புக்கு வழிவகுத்தது.

1948ஆம் ஆண்டு நடைமுறையில் இருந்த உள்ளூராட்சி அமைப்பு முறைகள் மாநகரசபை, நகரசபை . கிராமசபை என இருந்துள்ளன. பின்னர் நகரசபைக்கும் கிராம சபைக்கும் இடையில் பட்டினசபை என்ற அமைப்பு உருவாகியது. 1981ஆம் ஆண்டு பட்டினசபை, கிராமசபை என்பன ஒழிக்கப்பட்டு மாவட்ட அபிவிருத்திச் சபை அமைப்பு உருவாக்கப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்துக்கும் மாவட்ட அபிவிருத்திச்

சபைக்கான பிரதிநிதிகள் தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்பட்டனர். 1987ஆம் ஆண்டு பிரதேச சபைகள் உருவாக்கப்பட்டன. தற்பொழுது உள்ள உள்ளூராட்சி நிர்வாக அமைப்பு முறையில் மாநகர சபைகள், நகரசபைகள், பிரதேச சபைகள் என மூன்று வகையான அமைப்புக்கள் செயற்படுகின்றன. இந்த வகையில் இலங்கையில் மாநகர சபைகள் 14, நகர சபைகள் 37, பிரதேச சபைகள் 258 எல்லா மாக மொத்தம் 309 உள்ளூராட்சி அலகுகள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. யாழ்ப்பாணம் நிர்வாக மாவட்டத்தில் 13 பிரதேச சபைகளும் 3 நகர சபைகளும் 1 மாநகர சபையுமாக 17 உள்ளூராட்சி அமைப்புக்கள் செயற்படுகின்றன. இவற்றின் ஊடாகக் கழிவு அகற்றல், வரி அறவீடு, பொதுச் சுகாதாரம், உரிமைப்பத்திரங்களை வழங்கல், உள்ளூராட்சி அதிகாரங்களுக்கு அமைய ஒப்பந்தங்களை செய்தல், உபவிதிகளை உருவாக்கல், பொதுச் சொத்துக்களை பராதீனப்படுத்தல், உள்ளூ ராட்சி எல்லைப் பரப்பில் வரையறை செய்யப்பட்ட வீதிகள், ஒழுங்கைகளைப் பராமரித்துத் திருத்துதல், உள்ளூராட்சி அதிகாரத்துக்கு உட்பட்ட சொத்துக்களைப் பராமரித்தல், செலவுகளைக் கணிப்பீடு செய்தல், நூலக சேவை வழங்கல், சுதேச வைத்தியசாலைகள், மருந்தகங்களை நிறுவுதல், பராமரித்தல், பிராந்தியத்துக்கு உட்பட்ட பொதுச்சந்தைகளைப் பராமரித்தல், குடிதண்ணீர் விநியோகம், மயானங் களைப் பராமரித்தல், பிராந்தியத்தில் கட்டுமானப் பணிகளுக்கான அனுமதி வழங்கல் உட்படத் தனது நிர்வாகப் பரப்பில் பல்வேறு விதமான பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

வலி.கிழக்குப் பிரதேசசபை தெற்கே நல்லூர்ப் பிரதேசசபையையும் யாழ்ப் பாணம் மாநகரசபையும் மேற்கே வலிகாமம் தெற்குப் பிரதேச சபையையும் வலிகாமம் வடக்குப் பிரதேசசபையும் வடக்கே கரவெட்டிப் பிரதேசசபையும் கிழக்கே தென்மராட்சி பிரதேசசபையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. 102.2சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டது. 31கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கியது. 30ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களையும் ஒரு லட்சத்துக்கு குறையாத சனத் தொகையையும் கொண்டது. 85 கிராமங்களைக் கொண்டது.

வலி.கிழக்குப் பிரதேச சபை பிராந்தியத்தில் 71 சனசமூக நிலையங்களும் 84 பாலர் முன்பள்ளிகளும் செயற்படுகின்றன. 5 பொது நூலகங்கள், 5 ஆயுள்வேத மருந்தகங்கள் ஆகியன செயற்படுகின்றன. வலி.கிழக்குப் பிரதேசத்தில் 196 சைவ ஆலயங்களும் 11 கிறிஸ்தவ தேவாலயங்களும் அமைந்துள்ளன. சிறுவர் இல்லங்கள் 4 செயற்படுகின்றன. இரண்டு முதியோர் இல்லங்களும் உள்ளன.

வலி.கிழக்குப் பிரதேச சபை அச்சுவேலி உபஅலுவலகம், புத்தூர் உபஅலுவலகம், நீர்வேலி உபஅலுவலகம், கோப்பாய் உபஅலுவலகம், உரும்பிராய் உபஅலுவலகங்

களைக் கொண்டுள்ளது. பிரதேச சபையின் தலைமைக் காரியாலயம் யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில் புத்தூர் சந்தியில் பிரதான வீதிக்கு மேற்குப் புறத்தில் பிரதேச சபைக்கென வடிவமைக்கப்பட்டு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மாடிக்கட்டடத்தில் செயற்பட்டு வருகின்றது. பிரதேச சபையின் செயலாளராக திருமதி ஜெயந்தி சோமராஜ் கடமையாற்றுகின்றார்.

அதிகளவான மக்களை நிர்வகிக்கும் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை யாழ். மாவட்ட உள்ளூராட்சி அமைப்புக்களில் அதிகூடிய மக்கள் தொகையையும் கிராமிய பொருளாதார கட்டமைப்பையும் கொண்ட வலி.கிழக்குப் பிரதேச சபை 5 உப அலுவலகங்களூடாக மக்களுக்கான சேவையை மேற்கொண்டு வருகின்றது.

இலங்கை உள்ளூராட்சி கட்டமைப்பில் மாநகரசபை. நகரசபை ஆகியவற்றுக்கு அடுத்த நிலையில் பிரதேச சபைகள் இங்கு செயற்படுகின்றன. பிரதேச சபை அமைப்பு ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவையும் உள்ளடக்கியதாகவும் பரந்த பிரதேசங்களில் பெருமளவு மக்களுக்கான சேவை வழங்கலைக் கொண்டதாகவும் உள்ளது.

வலி.கிழக்கு பிரதேசசபை எனத் தற்பொழுது ஒருங்கிணைப்புச் செய்யப்பட்ட நிர்வாக அலகாக இருக்கும் பிரதேசம் அச்சுவேலிக் கிராம சபை , புத்தூர் கிராம சபை. நீர்வேலிக் கிராம சபை. கோப்பாய் கிராம சபை . உரும்பிராய் பட்டின சபை என்ற ஐந்து பிரிவுகளையும் உள்ளீர்ப்புச் செய்யப்பட்ட நிர்வாக அலகாகும். கிராமசபை. பட்டினசபை என்ற உள்ளூராட்சி அமைப்புக்கள் தனித்தனிச் சபையாகச் செயற்பட்ட காலப்பகுதியில் அச்சுவேலி கிராம சபை 14 வட்டாரங்களையும். புத்தூர் கிராமசபை 17 வட்டாரங்களையும். நீர்வேலி கிராமசபை 08 வட்டாரங்களையும். கோப்பாய்க் கிராமசபை 15 வட்டாரங்களையும். உரும்பிராய் பட்டினசபை 8 வட்டாரங்களையும். கொண்டவையாக இருந்தன.

ஆரம்ப உள்ளூராட்சிக் கட்டமைப்பில் நீர்வேலிக் கிராமசபையின் நிர்வாக ஆளுகையின்கீழ் இருந்து வந்த உரும்பிராய் - ஊரெழுப் பிரதேசம் 1970ஆம் ஆண்டு காலப்பகுதியில் நீர்வேலிக் கிராமசபையில் இருந்து பிரிக்கப்பட்டு பட்டினசபையாக உருவாக்கப்பட்டது.

வலி.கிழக்குப் பிரதேசம் நான்கு கிராமசபைகளையும் ஒரு பட்டினசபையையும் கொண்டதாகச் செயற்பட்டது. வலி.கிழக்குப் பிரதேச சபை உருவாக்கப்பட்ட காலப்பகுதியில் இருந்து வலி.கிழக்கில் முன்னர் இருந்த 62 வட்டார அலகுகளுக்குப் பதிலாக 21 பிரதிநிதிகளைக் கொண்ட பிரதேசசபை உருவாக்கப்பட்டது.

பிரதேச சபைக்கென முதற்தடவையாக நடத்தப்பட்ட தேர்தலில் வெற்றி பெற்று பூ.குணசிங்கம் தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

அந்தக் காலப்பகுதியில் பிரதேசசபையின் தலைமையகம் நீர்வேலியில் அமைந்திருந்தது. பிரதேசசபையின் உறுப்பினர்களாகத் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட 21 உறுப்பினர்கள் இருந்தனர்.

வலி.கிழக்குப் பிரதேச சபைக்குப் பொருத்தமான கட்டட வசதி இல்லாததைக் கருத்திற்கொண்டு வடக்கு.கிழக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் ஏற்பாட்டில் 60 லட்சம் ரூபா செலவில் புத்தூரில் புதிய மாடிக்கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு அதில் தலைமையகம் செயற்பட்டு வருகிறது.

யாழ்.மாவட்டத்தில் கோப்பாய்த் தேர்தல் தொகுதியை உள்ளடக்கிய பிரதேசத்தின் உள்ளூராட்சி நிர்வாகக் கட்டமைப்பாக விளங்கும் வலி.கிழக்குப் பிரதேச சபை கடந்த கால உள்ளூராட்சி அமைப்பில் ஒரு பட்டினசபையையும் நான்கு கிராமசபைகளையும் உள்ளடக்கியதாகவும் இருந்ததுடன் 62 வட்டாரப் பிரிவுகளையும் கொண்டிருந்தது.

2008ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பின் பிரகாரம் கோப்பாய் தேர்தல் தொகுதியில் பதிவு செய்யப்பட்ட 65ஆயிரத்து 798பேர் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றிருந்தனர்.

வலி.கிழக்குப் பிரதேச சபையின் கடந்தகால நிர்வாகக் கட்டமைப்பின் வரலாற்றை பின்நோக்கிப் பார்க்கும்போது அச்சுவேலிக் கிராமசபை, புத்தூர்க் கிராமசபை, நீர்வேலிக் கிராமசபை, கோப்பாய்க் கிராமசபை, உரும்பிராய் பட்டினசபை என்ற வகையில் அமைந்திருந்தமையை அவதானிக்க முடியும்.

குறித்த ஐந்து உள்ளூராட்சிக் கட்டமைப்புக்களையும் அதனோடு தொடர்பான வரலாற்றையும் முழுமையாக ஆவண ரீதியாகக் கண்டுகொள்ள முடியாத நிலையுண்டு.

1995ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கைகளினால் உள்ளூராட்சி அமைப்புக் களின் ஆவணங்கள் முற்றாக அழிக்கப்பட்டமை மற்றும் சபைகளில் கடமையாற்றிய உத்தியோகத்தர்கள், சபைகளின் மக்கள் பிரதிநிதிகளாக இருந்தவர்கள் இறந்தமை என்பன இதற்கான முக்கிய காரணங்களாகும். ஆனாலும் குறித்த சபைகளுடன் தொடர்புபட்டவர்களிடம் நேரில் கலந்துரையாடிப் பெற்றுக் கொண்ட தகவல்களின் அடிப்படையில் இவை முன்வைக்கப்படுகின்றன.

இலங்கையின் சர்வசன வாக்குரிமை அறிமுகம் செய்யப்பட்டதை அடுத்து நடைபெற்ற தேர்தல்கள் என்ற வகையில் மக்கள் தமது பதிவுசெய்யப்பட்ட வாக்குரிமையை பயன்படுத்தியமை இரண்டு சந்தர்ப்பங்களில் ஆகும். முதலாவது

நாடளாவிய ரீதியில் மக்கள் பிரதிநிதிகளை நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யும் "பொதுத் தேர்தல்". இரண்டாவது தமது பிரதேசம் சார்ந்த நிலையில் உள்ளூராட்சி நிர்வாகத்துக்கான உள்ளூராட்சித் தேர்தல்கள்.

ஆரம்ப காலத்தில் பொதுத்தேர்தலில் தேசிய ரீதியில் ஒரு சில கட்சிகளும், பிராந்திய இன ரீதியில் ஒரு சில கட்சிகளுமாக ஒற்றை இலக்கத் தொகையிலேயே இருந்துள்ளன. சாதாரண மக்கள் மத்தியில் கட்சிகளின் முழுப்பெயரின் பாவனை குறைவாக இருந்தமையால் கட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ள நிறங்கள் முதன்மைப்படுத்தப்பட்டு நிற அடிப்படையில் வாக்குக் கேட்கும் நடைமுறை இருந்ததுண்டு.

ஆனால் உள்ளூராட்சித் தேர்தலில் கிராமசபையைப் பொறுத்தவரையில் யாழ். மாவட்டத்தில் கட்சி அரசியலுக்கும் கட்சி ரீதியிலான பிரசாரத்துக்கும் இடமில்லாமல் இருந்தது.

கிராமத்தில் மதிப்புள்ளவர்கள், பிரமுகர்கள், வசதி படைத்தவர்கள் எனப் பலர் போட்டியிடுவார்கள். கிராம சபைக்கான பிரதிநிதிகள் தெரிவு வாக்களிப்பு மூலம் நடைபெற்று பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் குறித்த திகதியில் உள்ளூ ராட்சி உதவி ஆணையாளர் மற்றும் உயர் அதிகாரிகள் தலைமையில் சபைக்கான தலைவர் தெரிவு நடைபெறும்.

தலைவர் தெரிவு முந்திய தினங்களில் வட்டார ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் கடத்தப்படுவதும் தலைமறைவாக இருப்பதும் பேரத்துக்கு உட்படுவதும் விலை பேசி மனமாற்றம் செய்யப்படுவதும் சர்வசாதாரணமாக நிகழ்வது உண்டு.

இந்த விடயங்களில் கிராம மட்டத்தில் பிரபல புள்ளிகள் மற்றும் பிரமுகர்களின் செயற்பாடுகள் மிகக் கச்சிதமாக அரங்கேறும்.

இந்த வகையில் வலி.கிழக்குப் பிரதேசம் கிராமிய மட்டம் சார்ந்ததாக இருந்தமை யினாலும் பல்வேறு குழுமங்களின் மரபு ரீதியிலான கட்டுப்பாடுகளை உள்ளடக்கிய தாக இருந்தமையினாலும் கிராமசபைகளின் செயற்பாடுகளிலும் பல்வேறு விதமான சம்பவங்கள் அரங்கேறுவதுண்டு.

வலி.கிழக்குப் பிரதேசசபையின் ஐந்து உப அலுவலகங்களிலும் பரப்பளவிலும் சபைக்கு அதிகளவு வருவாயைப் பெற்றுக்கொடுப்பதிலும் அச்சுவேலி உப அலுவலகம் முன்னிலை வகிக்கின்றது. இது 07 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கியது. மக்கள் தொகை அளவிலும் அதிகமானது.

இது தெற்கே ஆவரங்கால் மாட்டொழுங்கை, மகாஜன வித்தியாலய வேலி, இராச வீதி, நவக்கிரிப் பிள்ளையார் கோயிலுக்கு வடக்குப் புறமாகச் செல்லும் வீதி, வடக்கே தொண்டமானாறு கடற்கரை, பீச் ஹோட்டல், மேற்கே வலி.வடக்குப் பிரதேச செயலர் பிரிவு , வடகிழக்கு கரவெட்டிப் பிரதேச சபை ஆகியனவற்றை எல்லையாகக் கொண்டது. பொதுச் சந்தை, பஸ்நிலையம், இலங்கை வங்கி, மக்கள் வங்கி, யூனியன் வங்கி, வர்த்தக வங்கி, செலான் வங்கி ஆகிய ஐந்து வங்கிக் கிளைகள், 10 பாடசாலை கள் என்பன இங்கே அமைந்துள்ளன. ( 1995இற்கு பின்னர் 3 பாடசாலைகள் மூடப்பட்டு விட்டன)

தற்பொழுது வலி.கிழக்குப் பிரதேச சபைக்குக் கிடைக்கும் வருவாயில் 80 வீதமான தொகை அச்சுவேலி உபஅலுவலகப் பிரிவில் இருந்து கிடைக்கின்றது. 2011 ஆம் ஆண்டுக்கான சந்தைக் குத்தகை மூலமாக 39 இலட்சத்து 67 ஆயிரம் ரூபா பெறப்பட்ட அதேவேளையில் ஏனைய நான்கு உப அலுவலகங்களில் இருந்தும் ஒரு லட்சத்துக்குக் குறைவான தொகையே கிடைக்கப்பெற்றதாகக் கூறப்படுகின்றது. இதேவேளை அச்சுவேலி உப அலுவலகத்திலிருந்து கிடைக்கும் வருவாயில் 50 வீதம் கூட அச்சுவேலிப் பிரதேசத்தின் அபிவிருத்திக்குப் பயன்படுத்துவதில்லையென இந்தப் பகுதி வரியிருப்பாளர்கள் குறைகூறாமல் இல்லை.

அச்சுவேலிக் கிராமசபை செயற்பட்ட காலப்பகுதியில் அதன் அலுவலகம் பொதுச் சந்தைக்கு தெற்குப் புறத்தில் அமைந்திருந்தது. கிராம சபையின் அங்கத்தவர்கள் 14 வட்டாரங்களில் இருந்தும் தெரிவுசெய்யப்பட்டனர். ஆரம்பத்தில் இந்தச் சபையின் தலைவர்களாக இருந்தவர்களின் பெயர்கள் கேட்டறியப்பட்ட போதிலும் கால ஒழுங்கின் பிரகாரம் அறிந்துகொள்ள முடியவில்லை. கிராம சபையில் நீண்ட காலம் உறுப்பினராக இருந்த பத்தமேனி எஸ். சிவலிங்கம் கூறிய தகவலின்படி எஸ். பொன்னையா, சூசைப்பிள்ளை யோன் இராசா, எஸ்.நல்லதம்பி, தா. குணரத்தினம், சா.வீரசிங்கம், ஏ.ஆர்.மனுவேற்பிள்ளை, மு. கந்தசாமி, க.சுந்தரமூர்த்தி, வே. தம்பித்துரை, சி. சபாரத்தினம், வெ. கதிர்காமநாதன் ஆகியோர் தலைவர்களாகப் பதவி வகித்துள்ளனர்.

**புத்தூர் கிராம சபை**

புத்தூர் கிராமசபை , புத்தூர் - சுன்னாகம் வீதிச் சந்தியில் பிரதான வீதிக்கு மேற்குப்புறமாக உள்ள வளவில் தற்பொழுது பிரதேச சபை அலுவலகம் உள்ள பகுதியில் பழைய கட்டடத்தில் செயற்பட்டது. இது கிராமசபை செயற்பட்ட காலப் பகுதியில் புத்தூர் கிராமக் கோட்டு வளவு என அழைக்கப்பட்டது. இங்கேயே கிராம நீதிமன்றமும் செயற்பட்டது. புத்தூர் கிராமசபைக்கு இந்தக் காணியைப் புத்தூரைச்

சேர்ந்த பரிஸ்டா இராமநாதன் அன்பளிப்பாக வழங்கியதாகக் கூறப்படுகிறது. அதற்கான ஆதாரங்களும் வளவில் காணப்படுகின்றன.

புத்தூர் கிராம சபையின் எல்லைப் பரப்பில் வாதரவத்தை, அச்செழு, புத்தூர் மேற்கு, புத்தூர் கிழக்கு, சிறுப்பிட்டி மேற்கு, சிறுப்பிட்டி கிழக்கு, சிறுப்பிட்டி கிராம அலுவலர் . பிரிவுகள் உள்ளடங்கி உள்ளன. நீர்வேலி கிராமசபைக்கும் அச்சுவேலி கிராமசபைக்கும் இடைப்பட்ட பிரதேசம் புத்தூர் கிராம சபையின் ஆள்புல பரப்பாகக் கொள்ளப்பட்டது. இது 17 வட்டாரங்களைக் கொண்டதாக இருந்தது.

புத்தூர் கிராமசபையின் செயற்பாடுகளில் யாழ்.மாவட்டத்தில் நிலவிய சமூக சாதிக்கட்டுப்பாட்டினால் சில சமூகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு சில சந்தர்ப்பங்களில் ஆசனம் வழங்காமல் இருந்த நிலையும் உண்டு. அதே நேரத்தில் சமூகத்துக்கு முன்னோடியாக இது செயற்பட்டதும் உண்டு. வாதரவத்தைக் கிராமத்துக்கு வீதி அமைக்கப்படாத காலத்தில் அமைச்சர் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்காவை வாதரவத்தைக் கிராமத்துக்கு அழைத்துச் சென்று அவரது வாகனத்தைச் சேற்றில் புதைய வைத்து வாதரவத்தைக்கு உடனடியாக வீதி அமைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி புத்தூர் - வாதரவத்தை வீதியை அமைத்தும் துவிச்சக்கரவண்டியில் இரண்டு பேர் பயணம் செய்வது தடைசெய்யப்பட்டிருந்த வேளையில் பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து வசதியை எடுத்துக்காட்டி புத்தூர் கிராமச்சங்க எல்லைப்பரப்பில் துவிச்சக்கரவண்டியில் இரண்டுபேர் பயணம் செய்ய அனுமதிக்க வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றி நடைமுறைப்படுத்தியதும் இந்த கிராமசபையின் குறிப்பிடத்தக்க சாதனைகளாகும். புத்தூர் கிராமசபையின தலைவராகக் கடமையாற்றிய க.பத்மநாதன் அவர்கள் தெரிவித்த தகவலின்படி கிராமசபை செயற்பட்ட காலப்பகுதியில் பரிஸ்டர் எஸ். இராமநாதன், எஸ்.ஸ்ரீபத்மநாதன், சி.சதாசிவம், க.பத்மநாதன், மா.கந்தையா, க.சுந்தரமூர்த்தி, தம்பி சி.நடராசா, மு. திருநாவுக்கரசு ஆகியோர் தலைவர்களாகப் பணியாற்றியுள்ளதாகத் தெரிய வருகின்றது.

**உள்ளூராட்சி அமைப்பின் மூன்றாவது இடத்தில் உரும்பிராய் பட்டினசபை**

நீர்வேலி கிராமசபையின் ஆள்புல எல்லையாக கிழக்கே தென்மராட்சிப் பிரதேச செயலகப் பிராந்தியம் வடக்கே புத்தூர் கிராமசபை, தெற்கே கோப்பாய் கிராமசபை, மேற்கே வலி.தெற்குப் பிரதேசசபை எனக் கொள்ளப்பட்ட போதும் 1970ஆம் ஆண்டு காலப்பகுதியில் நீர்வேலி பிரதேச ஆள்புலத்தை சேர்ந்த உரும்பிராய் ஊரெழு பிரதேசங்களை உள்ளடக்கி உரும்பிராய் பட்டினசபை உருவாக்கப்பட்டதை அடுத்து மேற்கு எல்லையாக உரும்பிராய் பட்டினசபை பிரதேசம் விளங்கியது.

முன்னர் நீர்வேலி கிராமசபையாகவும் தற்போது நீர்வேலி உப அலுவலகமாக வும் விளங்கும் அமைப்பின் அலுவலகம் யாழ்-பருத்தித்துறை வீதிக்கு மேற்குப் பக்கமாக நீர்வேலி கந்தசாமி கோயிலுக்கு அருகில் அமைந்துள்ளது. நீர்வேலி கிராமசபை செயற்பட்ட காலப்பகுதியில் கிராம அபிவிருத்தியைக் கருத்திற்கொண்டு பல்வேறு முன்னோடித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. கிராமசபையின் தல்லவர்கள் தொடர்பாக நீர்வேலியைச் சேர்ந்த "நீர்வைமணி" ஐயா தெரிவிக்கையில் அத்தியார் அருணாசலம், பண்டிதர் இராசையா, எஸ். அப்புத்துரை , கே.வி. கனகரத்தினம், எஸ். நடராசா ஆகியோர் தலைவர்களாகக் காலத்துக்குக் காலம் தெரிவு செய்யப்பட்டுப் பணியாற்றியதாக தெரியவருகிறது. எட்டு வட்டாரப் பிரிவுகளில் இருந்தும் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்பட்டனர்.

### கோப்பாய் கிராமசபை

கோப்பாய் கிராமசபையின் ஆள்புலத்தின் எல்லையாகக் கிழக்கே தென்மராட்சிப் பிரதேச செயலகப் பிராந்தியம், தெற்கே நல்லூர்ப் பிரதேச சபையின் பிராந்தியம், வடக்கே நீர்வேலி கிராமசபை, மேற்கே வலி.தெற்கு பிரதேசசபை என்பன கொள்ளப் படுகின்றன. கோப்பாய் கிராமசபையின் அலுவலகம் தற்போது பிரதேச சபையின் அலுவலகமாக யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியில் வீதிக்குக் கிழக்குப் புறமாக கோப்பாய் மாதா கோயிலுக்கு அண்மையில் செயற்பட்டு வருகின்றது. கோப்பாய் கிராமசபை வரியிருப்பாளர்களின் நலனில் அக்கறை கொண்டு பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வந்தது. இது 15 வட்டாரங்களைக் கொண்டது. கோப்பாய் கிராமசபையின் செயற்பாட்டுக் காலப்பகுதியில் தலைவர்களாகக் கடமை புரிந்தவர்கள் தொடர்பாக கோப்பாயைச் சேர்ந்த எஸ்.அருளாண்டேஸ்வரன் தகவல் தெரிவிக்கையில் எஸ்.அருளம்பலம், எஸ்.சம்பந்தன், கே.வி.சண்முகநாதன், எஸ். பரமானந்தராசா ஆகியோர் காலத்துக்குக் காலம் செயற்பட்டு வந்ததாகத் தெரிவித்தார்.

### உரும்பிராய் பட்டினசபை

வலி.கிழக்குப் பிரதேச சபைப் பிரிவின் உள்ளூராட்சி அமைப்பு முறையில் மூன்றாவது இடத்தில் உள்ள உரும்பிராய் பட்டினசபை அமைப்பு 1970களில் உருவாக்கப்பட்டது. நீர்வேலி கிராமசபைப் பிரிவில் உள்ள 'உரும்பிராய் - ஊரெழு' பிரதேசத்தை உள்ளடக்கிய புதிய நிர்வாகக் கட்டமைப்பாக உரும்பிராய் பட்டினசபை அமைப்பு உருவாக்கப்பட்டது. குறித்த பிரதேசம் 8 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டு பட்டினசபைக்கு மக்கள் பிரதிநிதிகளாக 8 பேர் தெரிவுசெய்யப்பட்டனர்.

பட்டினசபையில் பணியாற்றிய ரி.சின்னத்துரை அவர்கள் தெரிவித்த தகவலின்படி எஸ்.பத்மராசா, வி.ரி.செல்லத்துரை ஆகியோர் தலைவர்களாகப் பணியாற்றியதாக

அறியப்படுகின்றது. பட்டினசபையின் அலுவலகம் யாழ்ப்பாணம் - பலாலி வீதியில் செயற்பட்டு வந்தது. ஊரெழு – உரும்பிராய் பகுதி பட்டினசபையாகத் தரமுயர்த்தப்பட்டு நகரமயமாக்கலுக்கான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. உள்ளூராட்சி அமைப்பு முறையில் கிராமசபை, பட்டினசபை முறை ஒழிக்கப்பட்டு மாவட்டசபை உருவாக்கப்பட்ட காலப்பகுதியில் ஆணையாளர்களின் நிர்வாகத்தின்கீழ் இவை கொண்டுவரப்பட்டன. வலி.கிழக்கு உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய கே. கேதீஸ்வரன் ஆணையாளராகவும் கடமையாற்றினார்.

மாவட்டசபை அமைப்பு முறை மாற்றப்பட்டு பிரதேச சபை அமைப்பின்கீழ் தேர்தல் நடத்தப்பட்டு 21 பிரதிநிதிகளைக் கொண்ட வலி.கிழக்குப் பிரதேசசபை செயற்பட்டபோது அதன் தலைவராக பூ.குணசிங்கம் தெரிவுசெய்யப்பட்டார்.

பிரதேசசபையின் பதவிக்காலம் முடிவடைந்ததை அடுத்து மீண்டும் இதுவரை தேர்தல் நடத்தப்படவில்லை. தற்பொழுது நியமனப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. தற்பொழுது செயலாளர் பதவி மூலம் நிர்வாகம் நடைபெறுகின்றது. வலி.கிழக்கு பிரதேச சபையின் செயலாளர்களாக எம். இராசரத்தினம், கே. குணசிங்கம், எஸ்.குகதாசன், எஸ். வெங்கடாசலம், இ.இராமதுரை , க. நடராசா ஆகியோர் கடமையாற்றி உள்ளனர். தற்போது திருமதி.ஜெயந்தி சோமராஜ் செயலாளராகக் கடமை புரிகின்றார். இந்த வருடம் புதிதாகக் கடமைப் பொறுப்பையேற்றுள்ள திருமதி ஜெயந்தி சோமராஜ் கள நிலைக்கு ஏற்ப தனது கடமைப் பொறுப்புக்களைச் சிறப்பாக நிறைவேற்றி வருகிறார். உள்ளூராட்சி அமைப்பு முறைமையே நாளாந்த வாழ்க்கை நிகழ்வுகளுடன் தொடர்பானது. இந்த வகையில் வலி.கிழக்குப் பிரதேச சபையின் செயற்பாடுகள் புதிய உத்வேகத்துடன் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பது வரியிறுப்பாளர்களின் பெருவிருப்பாகும்.

உதயன் - 03.03.2010, 10.03.2011, 17.03.2011, 24.03.2011



# 41 வலி.கிழக்கு குடி தண்ணீர் விநியோகத்திட்டம்

**வ**லி.கிழக்கு பிரதேச செயலக பிரிவின் கிழக்கு எல்லையாக அமைந்துள்ள தொண்டைமானாறு குடாக்கடல் நீரேரி (உப்பாறு) தொண்டைமானாற்றில் இருந்து செம்மணி வரை பரந்துள்ளது. உப்பு நீர் கலப்பின் தாக்கம் காரணமாக யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதி வல்லைச் சந்தி வரையும் மற்றும் அச்சுவேலி-செல்வச் சந்நிதி வீதி ஆகியவற்றுக்கு கிழக்குப் புறமாகவும் வீதிக்கு மேற்கு கரையோரமாகவும் தரைக்கீழ் நீரில் உப்புத்தன்மை காணப்படுவதால் இந்தப்பகுதியில் உள்ள குடும்பங் களின் குடிதண்ணீர் வசதி குறைபாடு உடையதாகக் காணப்படுகின்றது. குடிதண்ணீரைப் பெறுவதற்கு அலைய வேண்டிய நிலையில் உள்ளனர்.

இந்தப் பகுதியில் உள்ளடங்கிய வாதரவத்தை மக்களின் குடிதண்ணீர் வசதியைக் கருத்தில் கொண்டு வலி.கிழக்கில் குடிநீர் விநியோக வேலைத்திட்டம் 1979ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்டது. புத்தூர் மேற்கில் சுன்னாகம் வீதியில் ஓரமாக உள்ள வள்ளல் மழுவராயர் கந்தையாவின் தர்மசாதனமான சத்திரத்துக் கிணறு மறுசீரமைப்பு செய்யப்பட்டு அதில் இருந்து வாதரவத்தைக்கு குழாய் மூலம் குடி தண்ணீர் விநியோகிக்கப்பட்டது. 1981.01.31ஆந் திகதி ஆர்.பிரேமதாஸ (முன்னாள் ஜனாதிபதி) உத்தியோகபூர்வமாகக் குடிதண்ணீர் விநியோகத்தை ஆரம்பித்து

வைத்தார். வாதரவத்தையில் முக்கியமான இடங்களில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பத்துக்கு மேற்பட்ட குடிதண்ணீர்த்தொட்டிகளில் (ஒவ்வொன்றும் 400 கலன் கொள்ளளவு கொண்டது) காலையும் மாலையும் குடிதண்ணீர் நிரப்பப்பட்டு மக்களுக்கு விநியோகிக்கப்பட்டது. இந்த நீர் விநியோகத்தை தேசிய குடிதண்ணீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபை நேர்த்தியாக மேற்கொண்டு வந்தது.

வாதரவத்தை குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தில் இருந்து குடிதண்ணீர் விநியோகத்திட்டம் 2007ஆம் ஆண்டு அச்சுவேலிப் பகுதிக்கு விஸ்தரிக்கப்பட்டு அச்சுவேலி தெற்கு. அச்சுவேலி வல்லை. அச்சுவேலி வடக்குப் பகுதியில் நிர்மாணிக்கப் பட்டுள்ள தொட்டிகள் மூலம் குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றது. வாதரவத்தைப் பகுதியில் வீடுகளுக்கு தனித்தனியாக குழாய் இணைப்பு மூலம் குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படும். அதேவேளையில் அச்சுவேலி புத்தூர் பகுதிக்கும் வீடுகளுக்கு குடிதண்ணீர் விநியோகம் செய்வதற்கான ஏற்பாடுகளை தேசிய குடிதண்ணீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபை மேற்கொள்ளவுள்ளது. வாதரவத்தைக்கு மட்டும் குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்ட காலப் பகுதியில் சத்திரத்துக் கிணறு பயன்படுத்தப்பட்டது. தற்பொழுது நிலாவரையில் ஆழ்துளை குழாய்க்கிணறு தோண்டப்பட்டு அதன் மூலம் நீர் விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றது. குழாய்க் கிணற்றில் இருந்து நீர் விநியோகம் நடைபெறும் வேளையில் குளோறின் ஊற்றப்பட்டு விநியோகிக்கப்படுகின்றது. தற்பொழுது தினசரி இரண்டு வேளை நீர்விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றது. நாளாந்தம் 92 ஆயிரம் லீற்றர் குடிநீர் விநியோகிக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது. மொத்தமாக 42 குடிதண்ணீர் தொட்டிகள் ஊடாகவும் வாதரவத்தைப் பகுதிக்கு நீர்த்தாங்கி மூலமும் நீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. வலி.கிழக்கில் குடிதண்ணீர் விநியோகம் அவசியம் தேவை என கண்டறியப்பட்ட பிரதேசத்தில் கால் பங்கு அளவுக்கே தற்பொழுது குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றது. வலி. கிழக்கில் வாழும் மக்களில் கணிசமான தொகையினரின் உடனடித் தேவையாக கருதப்படுவதும் முன்னுரிமை அடிப்படையில் நோக்கப்படுவதும் குடிதண்ணீர்ப் பிரச்சினையாகும். வாதரவத்தையை மையமாக வைத்து 1981ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட குடிதண்ணீர் விநியோகத்தை அண்மைக் காலத்தில் அச்சுவேலி வடக்கு. அச்சுவேலி தெற்கு. ஆவரங்கால் கிழக்கு. புத்தூர் கிழக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளுக்கு விஸ்தரிக்கும் வகையில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் வலி.கிழக்குப் பிரதேச செயலர் எ.சி.மோகன்றாஸ் மற்றும் வலி.கிழக்குப் பிரதேச சபையின் சேவை பாராட்டப்படுகின்றது. மேலும் இந்த வகையில் காலத்தின் தேவையை கருத்தில் கொண்டு இந்தப் பகுதியில் இதுவரை குடிதண்ணீர் வசதி செய்யப்படாத பகுதிகளுக்கும் குடிதண்ணீர் வசதியை வழங்குவதற்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்பது சம்பந்தப்பட்ட மக்களின் பெருவிருப்பமாகும்.

வலி.கிழக்குப் பிரதேச சபை குடிதண்ணீர் விநியோகத்தின் அவசியத்தைக் கருத்தில் கொண்டு உழவு இயந்திரத்தில் இணைப்பு செய்யப்பட்ட இரண்டு தண்ணீர் தாங்கிகளைப் பயன்படுத்தி குறித்த நேரஅட்டவணையின் பிரகாரம் இருபாலை கிழக்கு, கல்வியங்காடு, இருபாலை தெற்கு, கோப்பாய் தெற்கு கிராம அலுவலர் பிரிவுகளில் குறிப்பிடத்தக்களவு நீர் விநியோகத்தை மேற்கொள்ளுகின்ற போதிலும் இது குறித்த பகுதி மக்களின் முழுமையான தேவையை நிறைவு செய்துள்ளதா ? என்பது கேள்விக்குறியே. ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் குடிதண்ணீர் விநியோகம் செய்யப்படாத பகுதி என்ற வகையில் அச்சுவேலி - செல்வச்சந்நிதி வீதிக்கு கிழக்குப்புறம் முழுவதும், புத்தூர் கிழக்கு கிராம அலுவலர் பிரிவின் கணிச மான பிரதேசம், இருபாலை கிழக்கு கிராம அலுவலர் பிரிவு, கல்வியங்காடு கிராம அலுவலர் பிரிவு, இருபாலை தெற்கு, கோப்பாய் தெற்கு, சிறுப்பிட்டி கிழக்கு ஆகியன உள்ளடங்கும் என இனங்காணப்பட்டுள்ளது.

மேற்படி பிரதேசத்திற்கு குடிதண்ணீரை தாராளமாக வழங்குவதற்கு பொக்கணை வற்றா நீர்நிலை, நிலாவரை வற்றா நீர்நிலை என்பன தயார் நிலையில் உள்ளன. அந்த நீர்வளத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம் எனக் கூறப்படுகின்றது. அதற்கான நீண்ட நோக்குடன் கூடிய திட்டவரைபு உருவாக்கப்பட வேண்டும்.

வலி.கிழக்கு மக்களுக்கான குடிதண்ணீர் விநியோகம் தொடர்பான நிலைப் பாட்டை அண்மையில் நேரில் விஜயம் செய்து கள ஆய்வு மேற்கொண்ட சுவிஸ் நாட்டு மனிதவள அபிவிருத்தி அமைப்பு நவீன வசதிகளை உள்ளடக்கிய புதிய நீர்த்தாங்கி வண்டியை கொள்வனவு செய்வதற்கு நிதி உதவியை வழங்குவதற்கு முன்வந்திருப்பதாக வலி.கிழக்குப் பிரதேசசபை உள்ளூராட்சி உதவியாளர் ரி.ஸ்ரீமுரளிதரன் தெரிவித்தார்.

இரணைமடுவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படும் போது வலி.கிழக்கு குடிதண்ணீர் பிரச்சினையும் தீர்ந்துவிடும் என்ற கருத்தும் நிலவுகின்றது. அதுவரையும் காத்திருக்காமல் உள்ளூரில் கிடைக் கின்ற நீர்வளத்தை உரியமுறையில் பயன்படுத்தி வலி.கிழக்கு மக்களுக்கு குடி தண்ணீர் வசதியை வழங்க வேண்டியது காலத்தின் கட்டாயம் மட்டுமல்ல சம்பந்தப் பட்ட மக்களின் வாழ்வாதார உரிமையாகும்.

உதயன் - 03.06.2010, 10.06.2010




# 42 அச்சுவேலி கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையம்

வடக்கு, கிழக்கில் இராணுவ நடவடிக்கை முடிவடைந்து சில மாதங்களாகப் பேசப்படும் 'அபிவிருத்தி' தொழில்வாய்ப்பு என்ற விடயத் தலைப்புக்களில் அச்சுவேலிக் கைத்தொழிற்பேட்டை என்ற பெயர் அடிபடாமல் இல்லை. 1980ஆம் ஆண்டுக்கு முந்திய காலப்பகுதியில் இலங்கையில் திட்டமிட்டு நிர்மாணிக்கப்பட்ட மூன்று கைத் தொழில் பேட்டைகளில் அச்சுவேலி கைத்தொழில் பேட்டையும் ஒன்று. அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் 36 தொழிற்சாலைகள் திட்டமிட்ட முறையில் செயற்பட்டதும் பல நூற்றுக்கணக்கான இளைஞர்கள், யுவதிகள் தத்தமது தொழிற்சாலை களுக்குரிய கோல உடையுடன் தமக்கே உரிய பெருமிதத்தோடு நடமாடியதும் உண்டு.

அச்சுவேலி - யாழ்ப்பாணம் இராசவீதியின் தோப்பில் மேற்கு நோக்கி செல்லும் அகலமான பெருவீதி கைத்தொழிற் பேட்டை வீதி என்ற நாமகரணத்துடன் அச்சுவேலி - சங்கானை வீதியில் சந்திக்கின்றது. இந்த வீதிக்கு மேற்குப்புறமாக அமைந்துள்ள 100ஏக்கர் வரை கொண்ட விசாலமான பெருநிலப்பரப்பு அச்சுவேலி கைத்தொழில் பேட்டைக்குரியதாக உள்ளது. இந்தப் பகுதி தற்பொழுது பற்றைப்புதர்கள் மண்டிய தாகவும் முற்றாக அழிவடைந்துள்ள கைத்தொழிற்சாலைகளின் எச்சங்களைக்

கொண்டதாகவும் காணப்படுகின்றது. இந்தப் பகுதியை இப்போது உள்நாட்டு வெளிநாட்டு தொழிலதிபர்களும் முதலீட்டாளர்களும் தமது கடைக்கண் பார்வைக்கு உள்ளாக்கி நோட்டம் விட்டு வருகின்றனர்.

அச்சுவேலி கைத்தொழிற் பேட்டைக்கு நேர் எதிரே கைத்தொழில் பேட்டை வீதிக்கு கிழக்குப் புறமாக 5 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. அச்சுவேலி அரசினர் கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையம்.

அமரர் சௌமியமூர்த்தி தொண்டைமான் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சராக பதவியில் இருந்த காலப்பகுதியில் யாழ்.மாவட்டத்தில் நிறுவப்பட்ட கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையமும் கோழிப்பண்ணையும் யுத்த நடவடிக்கையால் பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளாகிய போதிலும் இன்றும் அதே நாமகரணத்துடன் நிறுவப்பட்ட நோக்கத்தின் குறிப்பிடத்தக்க வீதத்தை நிறைவு செய்யும் வகையில் செயற்பட்டு வருகின்றது.

அச்சுவேலி கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையத்தில் உள்ள அடைப்பொறிகளில் ஒரே நேரத்தில் ஆயிரக்கணக்கான முட்டைகளை அடைவைத்து 21 தினங்களில் கோழிக் குஞ்சுகளை பெற்றுக்கொள்ள முடியும். வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உயர்ரக கலப்பின கோழிகளில் இருந்து பெறப்படும் கோழிமுட்டைகளைக் கொண்டு உருவாக்கப்படும் கோழிக்குஞ்சுகள். முட்டைக்கோழிகள். இறைச்சிக் கோழிகள் என்ற வகையில் உள்ளூரிலே உற்பத்தி செய்யப்பட்டு உள்ளூர் பண்ணை யாளர்களுக்கும் கொல்லைப்புற கோழி வளர்ப்புக்கும் பயன்படுத்தப்படுவது உண்டு.

அச்சுவேலி கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையம் தற்பொழுது கால்நடை அபிவிருத்திச் சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் செயற்பட்டு வருகின்றது.

இலங்கையின் 1980ஆம் ஆண்டுக்கு முந்திய காலப்பகுதியில் திட்டமிட்டு நிர்மாணிக்கப்பட்ட மூன்று கைத்தொழிற்பேட்டைகளில் அச்சுவேலி கைத்தொழிற் பேட்டையும் ஒன்றாகும். யாழ்.மாவட்டத்துக்கு மட்டுமல்ல வடக்கு மாகாணத்துக்கு உரியதாக தனித்துவத்துடன் செயற்பட்டுக் கொண்டிருக்கும் ஆரம்பக்கால கட்டடங்கள் நிறுவன அமைப்புக்கள் கருவி சாதனங்கள் அனைத்தும் 1995ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கையுடன் முற்றாக சேதமாக்கப்பட்டதை அடுத்து தற்போதைய கட்டமைப்புக்கள் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டப் பிரிவின் அனுசரணையுடன் 1997ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டவையாகும்.

ஐக்கிய நாடுகள் திட்டப்பிரிவு வழங்கிய 11 மில்லியன் ரூபா உதவியில் நவீன சாதனங்களுடன் புனரமைக்கப்பட்டது.

சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் அடித்தளத்தில் புதிதாக கட்டப்பட்ட கட்டடத்தொகுதிகள் 1999ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இருந்து செயற்பட ஆரம்பித்தது. கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் பொறுப்பில் செயற்பட்டு வரும் அச்சுவேலி கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையத்தில் ஒரே தடவையில் 27 ஆயிரம் கோழிக்குஞ்சுகளை உற்பத்தி செய்யக்கூடிய அடைப்பொறிக் கருவிகள் உள்ளன.

வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படும் நல்லின கோழிகளை வளர்த்து அதில் இருந்து பெறப்படும் முட்டைகளில் இருந்து தெரிவுசெய்யப்படும் முட்டைகளை பயன்படுத்தி கோழிக்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

கோழி முட்டைகள் இரண்டு கட்டங்களாக அடைப்பொறியில் பராமரிக்கப்பட்டு 21 தினங்களில் கோழிக்குஞ்சுகள் பெறப்படுகின்றன. அடைப்பொறியில் ஏற்றப்படும் முட்டைகளில் இருந்து 95 வீதத்துக்கு குறையாத அளவு குஞ்சுகளை பெற்றுக்கொள்ள முடியும்.

முட்டைகளில் இருந்து குஞ்சுகளை பெறுவதற்கான கருவிகளில் முதற்கட்டமாக 18 தினங்களுக்கு அடை வைக்கப்பட்ட பின்னர் இரண்டாம் கட்ட அடைப்பொறிக்கு மாற்றப்பட்டு மூன்று தினங்களில் குஞ்சுகள் பெறப்படுகின்றன.

23 அடி அகலமும் 80 அடி நீளமும் கொண்ட 6 மண்டபங்களில் கோழிக்கூடுகள் உரிய கட்டுமான ஒழுங்கில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இதில் இரண்டு கூட்டுத் தொகுதிகள் குஞ்சுக்கோழி வளர்ப்புக்கும் நான்கு கட்டடத் தொகுதிகள் அடை முட்டை கோழி வளர்ப்புக்குரியதாகவும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

அடை முட்டைகளை பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக 10 வீதம் சேவல் கோழி களும் 90வீதம் பேட்டுக் கோழிகளுமாக வளர்க்கப்பட்டு அடைமுட்டை பெறப்படு கின்றது.

முட்டை இனக் கோழிக்குஞ்சுகள், இறைச்சி இனக் கோழிக்குஞ்சுகள் என்ற வகையில் கோழிக்குஞ்சுகளை உற்பத்தி செய்யக்கூடிய வசதிகள் உள்ளபோதிலும் தற்பொழுது கொல்லைப்புற கோழி வளர்ப்புக்கான கோழிக்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

அச்சுவேலி கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையத்தில் தற்பொழுது உற்பத்தி செய்யப்படும் கொல்லைப்புற கோழி வளர்ப்புக்கான கோழிக்குஞ்சுகள் (நாட்டுப்புற கோழி உயர்தர முட்டைக்கோழி) கலப்பினக் குஞ்சுகளாகும். இங்கு உற்பத்தி செய்யப் படும் கோழிக்குஞ்சு 100 ரூபாவுக்கு குறைந்த விலையில் உள்ளூரில் விற்பனை

செய்யப்படுகின்றது. அதே நேரம் அச்சுவேலியில் உற்பத்தி செய்யப்படும் கோழிக் குஞ்சுகளின் அளவு யாழ் மாவட்டத்தின் தேவையை பூர்த்திசெய்யமுடியாமல் இருப்பதனால் தென்னிலங்கையில் இருந்து 110 ரூபாவுக்கு மேற்பட்ட விலையில் கொல்லைப்புற கோழி வளர்ப்புக்கான கோழிக்குஞ்சுகள் தென்னிலங்கையில் இருந்து எடுத்து வரப்படுகின்றன. நல்லின முட்டைக் கோழிக் குஞ்சுகள் தென்னிலங்கையில் இருந்து கொண்டு வரப்பட்டு 175ரூபாவுக்கு குறையாத விலையில் தனியாரால் விற்பனை செய்யப்படுகின்றன. அச்சுவேலி கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையம் முழுமை யான உற்பத்தியளவை காலத்தின் தேவையை கருத்தில் கொண்டு செயற்படுவதற்கு சகல தரங்களையும் சேர்ந்த கோழிக்குஞ்சுகளையும் 100 ரூபாவுக்கு குறைந்த விலையில் கோழி வளர்ப்போர் பெற்றுக்கொள்ள முடியும்.

அச்சுவேலி கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையம் ஆரம்பத்தில் சிறுகைத்தொழில் திணைக்களத்தின் கீழ் செயற்பட்டு பின்னர் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக் களத்தின் கீழ் செயற்பட்டு 2001 - 2005ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் என்பனவற்றினால் மாறிமாறி பொறுப் பேற்கப்பட்டு 2006ஆம் ஆண்டில் இருந்து இன்றுவரை கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் கீழ் செயற்பட்டு வருகின்றது. 5 ஏக்கர் வளமான நிலப்பரப்பில் அமைந்திருக்கும் இந்த உற்பத்தி நிலையத்தின் உச்சப் பயன் பாட்டிற்கு ஏற்ற முறையில் முழுமையாக நிலம் பயன்படுத்தப்படாமல் இருப்பதை தவிர்த்து முழுமையான வளப்பயன்பாட்டுடன் காலத்தின் தேவையை கருத்தில் கொண்டு கோழிக்குஞ்சு உற்பத்தியை மேல்நிலைப்படுத்துவது வடபகுதி மக்களின் வாழ்வாதாரத் திற்கும் போசாக்கு மேம்பாட்டிற்கும் உதவுவதாக அமையும்.

உதயன் - 04.11.2010, 11.11.2010




# 43 வலி.கிழக்கு விதாதா வள நிலையம்

"விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பங்களை மக்களுக்கு வழங்குவதன் மூலம் கிராமிய இயற்கை மற்றும் மனிதவள அபிவிருத்திக்காக வளங்களை உபயோகித்து வேலையில்லாப் பிரச்சனையை குறைத்து வாழ்வு நிலையை முன்னேற்றம் அடையச் செய்தல்" என்ற நோக்குடன் விஞ்ஞான தொழில்நுட்பவியல் அமைச்சினால் பிரதேச செயலர் பிரிவு வாரியாக விதாதா வள நிலையங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. கிராமத்துக்கு தொழில்நுட்பம் என்ற வகையால் யாழ் மாவட்டத்தில் 7 விதாதா வள நிலையங்கள் செயற்படுகின்றன.

யாழ். மாவட்டத்தில் முதன்முதலாக நிறுவப்பட்ட வலி. கிழக்கு விதாதா வளநிலையம் கோப்பாய்-மானிப்பாய் வீதியில் கோப்பாய் மத்தியில் (கோப்பாய் பிரதேச வைத்தியசாலைக்கு அண்மையில்) வீதிக்கு தெற்குப் புறமாக உள்ள கட்டடத்தில் செயற்பட்டு வருகின்றது. 2006 ஜூலை மாதம் 12ஆம்திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது. நிலையத்தில் பொறுப்பதிகாரியாக பத்மநாதன் பகீரதன் (விஞ்ஞான பட்டதாரி) கடமையாற்றி வருகின்றார்.

விதாதா வளநிலையங்கள் மத்தியில் அவற்றின் செயற்பாடுகள் கட்டமைப்புக்கள் தொடர்பாக நடாத்தப்பட்டு வரும் போட்டியில் வலி. கிழக்கு விதாதாவள நிலையம் யாழ்.மாவட்ட நிலையில் முதலாம் இடத்தைப் பெற்றதோடு வடக்கு மாகாண மட்டத்திலும் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்தில் நடைபெறவுள்ள போட்டி களிலும் கலந்துகொண்டுள்ளது. அண்மையில் தேசியமட்ட போட்டிக்கான மதிப்பீட்டுக் குழுவினர் விதாதா வளநிலையத்தை நேரில் பார்வையிட்டு மதிப்பீட்டுப் பணிகளை மேற்கொண்டுள்ளனர். "வலி. கிழக்கு விதாதா வளநிலையம் மாவட்ட நிலையிலும் வடக்கு மாகாண நிலையிலும் முதலாம் இடம்பெற்று தேசியரீதியில் போட்டியில் கலந்துகொண்டு இருப்பதற்கு அதன் நேர்த்தியான செயற்பாடும் ஒழுங் கமைக்கப்பட்ட கட்டமைப்பும் அங்கு பயிரிடப்பட்டுள்ள பயிரினங்கள் மூலிகைகள்: வீட்டுத்தோட்டம், நாற்றுமேடை அமைப்பு, பழப் பயிர்கள், கால்நடைப் பண்ணை, சேதனைப்பசளை உருவாக்கம், இயற்கை கிருமிநாசினி பிரயோகம் பண்ணை அமைப்பு முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள், காட்சிப்படுத்தல் முறை, கையாளப்படும் சுயஉற்பத்திக் கருவி சாதனங்கள், பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சிகள், பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சிகள், விவசாயிகள் இளைஞர் களுக்கான தொழிற்பயிற்சிகள், கணினிப்பயிற்சி, மாணவர்களுக்கான பொது அறிவுசார்ப் போட்டி, மற்றும் பொறுப்பதிகாரி பகீதரனின் முகாமைத்துவ ஆற்றல், அங்கு பணிபுரியும் பணியாளர்களின் நேர்த்தியான சேவை என்பனவும் காரணமாக இருக்கலாம்.

விதாதா நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம் நாட்டிற்கு உகந்த ஆராய்ச்சிகள் திறனாய் வுகளை மேற்கொள்ளுவதற்கு விஞ்ஞானிகள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்களை ஈடுபடச் செய்தல் அதன் மூலம் நாட்டின் அபிவிருத்தியை வலுவுறச் செய்தல்.

தொழில்நுட்பத்தை கிராமத்துக்கு வழங்கி கிராமத்து மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தலும் , அதற்காக அவர்களை ஊக்குவித்தலும், கிராமிய மக்களின் பரம்பரைத் தொழில்நுட்பத்தை முறையாக இனங்கண்டு அவற்றை மேம்படுத்தி மீண்டும் கிராமத்தின் அபிவிருத்திக்காக பயன்படச் செய்தல்.

கிராமப்புறங்களில் இருந்து தரமான பொருள்கள் மற்றும் சேவைகள் ஆகிய வற்றை சந்தைப்படுத்துவதன் மூலம் அவர்களின் வருமானத்தை நிலையானதாக உறுதிப்படுத்துதல் என்பவற்றை வலி.கிழக்கு விதாதா வள நிலையம் கணிசமான

அளவு நிறைவு செய்து வருவதே யாழ் மாவட்ட நிலையிலும் வடக்கு மாகாண நிலையிலும் முதலிடம் பெறுவதற்கு வைத்துள்ளன.வலி.கிழக்கு விதாதா வள நிலையம் அமைந்திருக்கும் வீட்டின் முன்பு உள்ள 1/3 ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலமும் வீட்டை சூழவுள்ள பகுதியும் முழுமையாக பச்சைப்பசேல் என காட்சி தருகின்றன. திட்டமிட்ட முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**வீட்டுத்தோட்ட மாதிரி**

மஞ்சள், இஞ்சி, வல்லாரை, தூதுவளை, பருத்தி, செம்பருத்தி, கத்தாளை, பொன்னாங் காணி,கண்டங்கத்தரி, தசைநெகிட்டான், கொடித்தோடை , தேசி என்ற வகையில் சகலவகையான மூலிகைப்பயிர் இலைக்கறிவகை, பழப் பயிர்கள், அலங்காரத் தாவரங்கள், பூமரங்கள், மரக்கறி பயிர் இவைகள் உள்ளிட்ட அனைத்தும் உண்டாக்கப்பட்டிருப்பதோடு அவற்றின் பராமரிப்பும் நேர்த்தியான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த வீட்டுத்தோட்ட மாதிரியைப் பார்வையிடும் அனைவரையும் அதே போன்ற ஒரு தோட்டத்தை தமது இல்லங்களிலும் உருவாக்கவேண்டும் என்ற உள்ளுணர்வை ஏற்படுத்தி வருகின்றது.

**விவசாயப் பயிர்ச் செய்கைக்கான நாற்றுமேடை**

நவீன முறைகளை உள்ளடக்கிய விவசாயப் பயிர்ச் செய்கைக்கான நாற்றுமேடை அமைப்பு விவசாயிகளையும் பொதுமக்களையும் பாடசாலை மாணவர்களையும் குறித்த துறைசார் நிலை விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய வகையில் "பச்சை வீட்டுத் திட்டத்தை" உள்ளடக்கி அமைக்கப்பட்டுள்ளது. நவீன முறையில் நாற்றுமேடை களை உருவாக்கல், நல்லின பயிர்வகைகளை உற்பத்தி செய்தல் இலகுமுறையில் பராமரித்தல் , நோய்கள், பீடைகளின் தாக்கத்தை எதிர்கொண்டு நல்ல விளைச்சலைப் பெற்றுக்கொள்ள வகைசெய்தல் என்ற வகையில் முன்னெடுக்கப்படுகின்றன.

**தோட்டப் பயிர்ச் செய்கை**

பாரம்பரிய முறைகளில் ஊறிப்போன யாழ்.மாவட்ட விவசாயப் பயிர்ச்செய்கையில் முழுமையான மாற்றத்தை ஏற்படுத்தத்தக்க வகையில் பயிர்வகை மாதிரிகள் கலப்பினப் பயிர்ச்செய்கை, சேதனப் பசளை உற்பத்தி பயன்பாடு, மண்புழு, பசளை

ஆக்கம் என்பனவற்றோடு தொடர்புபடுத்தி நவீன நீர்ப்பாசன முறைகள் ஊடாக மேற்கொள்வதற்கு வழிப்படுத்துவனவாக மேற்கொள்ளப்பட்டிருப்பது பார்வையிடும் அனைவரையும் அந்தத் துறையின்பால் ஈர்ப்பதற்கு வகை செய்கின்றது.

வலி.கிழக்கு விதாதா வள நிலையம் விதாதாவின் அனைத்து நோக்கங்களையும், முழுமையாக நிறைவுசெய்து வருகின்றது.

'சந்தைப்படுத்தல் தொடர்பான விவரங்களை வழங்கலும் பிரதேச அடிப்படையில் விற்பனை நிலையங்களை அமைத்துக் கொடுத்தலும்'என்ற செயற்பாட்டை நிறைவு செய்யும் வகையில் பனை தென்னை வளங்களில் இருந்து உற்பத்தி செய்யப்படும் பொருள்களை நியாய விலையில் பொதுமக்களிடம் கொள்வனவுசெய்து சிறு கைத்தொழில் முயற்சியில் ஈடுபடுபவர்களுக்கு கைகொடுத்து உதவும். அதே நேரத்தில் இடைத்தரகர்களின் சுரண்டலுக்கு இடமளிக்காமல் செயற்பட்டுக் கொண்டிருக் கிறது. அத்துடன் விவசாய உற்பத்திப் பொருள்களுக்கும் சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

விதாதா வள நிலையத்தின் ஆரோக்கியமான முன்னெடுப்புக்கள் உயர்தரம் வாய்ந்த செயற்பாடுகள் தொடர்பாக நிலையத்தின் பொறுப்பதிகாரி பகீரதன் கருத்துத் தெரிவிக்கையில் 'எமது நிலையத்தின் ஆரம்பம் தொடக்கம் இன்றைய வளர்ச்சி நிலை வரைக்கும் உறுதுணையாக இருந்து உதவி வருபவர் வலி.கிழக்குப் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்ராஜ். அவரது வழிப்படுத்தலும் ஆலோசனையும் விதாதா வளநிலையத்தின் முன்னெடுப்புக்களை உயர்நிலையில் பேண முடிந்தது. மாவட்ட மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் முதலாம்இடம் பெற்றதுடன். தேசிய மட்டத்துக்கு உயர்த்தி வைத்துள்ளது' என நன்றியறிதலுடன் பாராட்டுத் தெரிவித்தார். இது உண்மை என்பதை நேரடி அவதானிப்பின் போது உணர முடிகின்றது. வலி.கிழக்கு விதாதா வள நிலையத்துக்கு நிரந்தரமான மாடிக் கட்டடத்தை (20 x 50)71 லட்சம் ரூபா செலவில் நிறுவுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. வலி.கிழக்குப் பிரதேச செயலகத்துக்கு பின்புறத்தில் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

### பயிற்சி நெறிகள்

வலி.கிழக்கு விதாதா வளநிலையத்தில் இதுவரை உணவு பதனிடல், மெழுகுதிரி தயாரித்தல். சந்தனக்குச்சி தயாரித்தல். கணினி மென்பொருளாக்கல். கணினி

வன்பொருள், வீட்டுத்தோட்டம், தையல் இயந்திரம் திருத்தல், றேந்தை பின்னல், வெள்ளைத் தேங்காய் எண்ணெய் பிரித்தெடுத்தல், மரக்கறி உலர்த்திப் பதனிடல், பாடசாலை மாணவர்களுக்கான விஞ்ஞானம் தொழில்நுட்பம்சார் பயிற்சி, கூட்டுப் பசளை தயாரித்தல், தேனீ வளர்ப்பு, காகிதக்கூழில் சிலை தயாரித்தல், உணவு தயாரித்தல், விவசாய ஆசிரியர்களுக்கான பயிற்சி, ஜாம் தயாரித்தல், சோஸ்-கோடியல் தயாரித்தல் , பன்னவேலை, காளான் செய்கை, பேக்கரி தயாரிப்புக்கள் உள்ளிட்ட பல்வேறு பயிற்சி நெறிகள் 20 பேர் கொண்ட அணியாக ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றது. இந்தப் பயிற்சி நெறிகளுக்கும் அவற்றோடு தொடர்பான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கும் ஆண்டுதோறும் பல மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. சம காலத்தில் விவசாய நடவடிக்கையில் ஆர்வத்துடன் கையாளப்படும் சேதனப்பசளை தயாரிப்பும் பயன்பாடும், மண்புழு பசளை தயாரித்தல், இயற்கை மூலிகை திரவ கிருமிநாசினிகள், நாற்று மேடை ஆக்கம், கத்தரித்தல் முறையில் விளைச்சலை அதிகரித்தல் உள்ளிட்ட பல்வேறு செயற்பாடுகள் செயல்முறையாகவும் பயிற்சியாகவும் விவசாயிகள், மாணவர்கள் ஆசிரியர்கள் பெற்றுக்கொள்வதுடன் செயல்முறை மூலம் கண்டறிகின்றனர்.

'விதாதா' என்பது தமிழில் அர்த்தம் புரியாத சொல்லாக இருந்தாலும் அங்கு முன்னெடுக்கப்படும் செயல்முறைகள் சமகாலத்திலும் எதிர்காலத்திலும் பயன் தருவனவாக இருக்கின்றன. அதில் பங்கு கொண்டு இளைய தலைமுறையினர் பயன்பெற வேண்டும்.

உதயன் - 15.08.2010, 22.08.2010, 02.09.2010



# 44 நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார்

யாழ்ப்பாணம் நிர்வாக மாவட்டத்தில் அதிகூடிய குடித்தொகையைக் கொண்ட பிரதேசமாகவும்; பெருமளவில் இந்துக்கள் வாழும் பகுதியாகவும் விளங்கும் வலி கிழக்கில் அம்மன் கோயில்கள் - 6, வைரவர் ஆலயங்கள் - 68, விநாயகர் ஆலயங்கள் - 25, முருகன் ஆலயங்கள் - 13, வீரபத்திரர் ஆலயங்கள் - 07, சிவன் ஆலயங்கள் - 06, நாகதம்பிரான் ஆலயங்கள் - 12, விஸ்ணு ஆலயம் - 01, ஏனைய ஆலயங்கள் 38 என்ற வகையில் 236 ஆலயங்கள் வரையில் அமைந்துள்ளன.

இவை அளவிலும் அமைப்பிலும் பெரியனவாகவும் சிறியனவாகவும், ஆகமமுறைப்படி அமைந்தனவாகவும், ஆகமமுறைப்படி அமையாதனவாகவும் அமைந்துள்ள போதிலும் "கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற மூதுரைக்கமைய கிராமங்கள் தோறும் கோயிலமைத்து வழிபாடாற்றி வாழ்கின்ற இயல்பு வாழ்க்கையோடு விரவிக் காணப்படுகின்றன.

யாழ் மாவட்டத்தில் உள்ள புராதனமான சிறப்புமிக்க ஆலயங்கள் 12இல் 6வது இடத்தில் அமைந்து அருள்பாலிக்கும் புராதன ஆலயமாக விளங்குவது நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோயில். இதனை "நீர்வேலி செம்பாட்டு பிள்ளையார்" என்றும் உள்ளூர் வாசிகள் அழைப்பதுண்டு.

வலி.கிழக்கு பிரதேசத்துக்கும் யாழ்ப்பாண இராட்சிய கால தமிழ் அரசின் ஆட்சி யாளர்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. வலி. கிழக்குப் பிரதேசத்தை ஊடறுத்து அச்சுவேலி வரை செல்லும் இராசவீதி நல்லூரைத் தலைநகரமாகக் கொண்டிருந்த தமிழ் அரசர்களின் மட்டுப்படுத்தப்பட்ட பாவனைக்கு மட்டும் உரியதாகும் "இராச வீதி" எனப் பெயர் பெறுவதும், வரலாற்று ஆதாரங்களின் பிரகாரம் உண்மையாகும்.

"யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த பரராசசேகர மன்னனின் (1591 - 1616) அரசவையில் அவைக்களப் புலவராகவும் பிரதானியாகவும், பின்னர் அமைச்சராக வும் இருந்த அரசகேசரியால் ஸ்தாபிக்கப்பட்டு வழிபட்ட தலம் என்ற வகையில் அரசகேசரிப் பிள்ளையார் என நாமகரணம் வரப் பெற்றது" எனக் கூறப்படுகின்றது. "சிவசங்கர பண்டிதர் முதலிய நீர்வேலிக்குப்புகழ்சேர்த்த தமிழ் அறிஞர்கள் இத்தலத்தை வணங்கி செம்மையாகப் பாட்டுக்கள் எழுதியமையால் 'செம்பாட்டுப் பிள்ளையார்' எனப் பெயர்பெற்றது". எனக் கூறப்படுகின்றது. நீர்வேலி மத்தியில் இராசவீதிக்கு கிழக்குப்புறமாக உள்ள (நீர்வேலி தட்டுப்பாதி) நீர்வளமும் நிலவளமும் நிறைந்த செம்புலத்தில் நெருக்கமான மக்கள் குடியிருப்புக்கு மத்தியில் அரசகேசரிப் பிள்ளையார் ஆலயம் அமைந்துள்ளது.

2 1/2 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள அரசகேசரிப் பிள்ளையார் ஆலயத்துக்கு வடக்குப் புறமாக பெருமளவில் பனைமரங்கள் நிறைந்த பெருவளவும் இயற்கைச் சூழலில் அமைந்த ஆலயத்தின் அமைவிடச் சிறப்பை விளக்குவதாகவுள்ளது. ஆலயச் சூழலில் அறநெறிப் பாடசாலை, நாயன்மார்கள் 63 பேரின் குருபூசைமடம் ஆகியன அமைந்துள்ளன.

ஆலயம் தொடர்பாக யாழ்ப்பாணம் கச்சேரியில் உள்ள பதிவேட்டில் இருந்து பெறப்பட்ட விபரம். "ஆலயம் கட்டப்பட்ட காலம் 1792 ஆண்டு. ஆலயத்தின் பெயர் - அரசகேசரிப் பிள்ளையார் கோயில். இருக்கும் இடம் - நீர்வேலி தட்டுப்பாதி. யாரால் கட்டப்பட்டது? அவ்வூர் மக்களால் கட்டப்பட்டது. இப்போது நிர்வகிப்பவர் - குமருப்பிள்ளை சுவாமிநாதவிசு திருவிழா இடம்பெறும் மாத. விபரம் - ஆவணி ஒன்பது நாட்கள் சுவாமியைக் காவி வீதிவலம் வருதல். ஒருநாள் தேர்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கோயிலில் சிவனுக்கென தனிமூலஸ்தானம் விநாயகரின் மூலஸ்தானத்துக்கு அருகில் கிழக்குத்திசை நோக்கியதாக அமைக்கப்பட்டுள்ளது. விநாயகருக்கு ஆவணிச் சதுர்த்தி அன்று கொடியேற்றத்துடன் 10 தினங்களுக்கு ஆகமவிதிப்படி மகோற்சவம் நடைபெறும். அதேவேளையில் சிவனுக்கு மார்கழி திருவாதிரை 10 தினங்களும் அலங்கார உற்சவம் நடைபெறுகின்றது. விநாயகருக்கான உற்சவங்கள், சதுர்த்தி,

சங்கடஹர சதுர்த்தி உற்சவங்கள் மற்றும் கணபதி ஹோமம், லட்சார்ச்சனை என்பன குறிப்பிடத்தக்களவு சிறப்பாக நடைபெற்று வருகின்றன. கணபதி ஹோமம் நடைபெறும் சிறப்பை மகா மண்டபத்தில் அமைந்துள்ள மிகப்பெரிய ஓம குண்டம் (3 அடிக்குக் குறையாத ஆழம்) புலப்படுத்துகின்றது.

ஆலயத்தின் திருமஞ்சக்கிணறு விநாயகரின் திருவருளினால் தானாகத் தோன்றியது 3அடி விட்டமும், 18 முழம் ஆழமும் கொண்ட இந்தக் கிணற்றின் அமைப்பை நோக்கும்போது மனிதர்களால் வெட்டியிருக்க முடியாது என்பதும் மூன்றடி விட்டம் கொண்ட வட்டத்துக்குள்ளே நின்று கல்லுக் கிணற்றை வெட்டி 18முழ ஆழத்துக்கு வெட்டிக்கொண்டு செல்லமுடியாது. இது விநாயகரின் திருவருளின் வெளிப்பாடுதான் என்பது அடியவர்கள் அனைவரதும் நம்பிக்கையாகும். ஆலயத்தின் தலவிருட்சம் "குண்டுமல்லிகை". ஆலயத்தின் உட்பிரகாரம் முழுவதும் மூடுசார்த்தும் கூரையும் கொண்டதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

ஆலயத்தின் தென்மேற்கு மூலையில் வெளி வீதியில் ஓங்கி உயர்ந்து நிற்கும் வில்வமரம் 200 வருடங்களுக்கு மேற்பட்ட வயதினைக் கொண்டது என தற்போதைய ஆலய பரிபாலன சபையின் பொருளாளர் கந்தையா முருகையா (வயது 62) தெரிவித்தார். ஆலயத்தில் விநாயகப் பெருமானுக்கும் முருகனுக்கும் தேர்கள் உள்ளன. விநாயகப் பெருமானின் தேர் 1967ஆம் ஆண்டும், முருகப் பெருமானின் தேர் 1992ஆம் ஆண்டும் நிர்மாணிக்கப்பட்டன.

ஆலயத்தின் பிரதம சிவாச்சாரியராக சிவஸ்ரீ கார்த்திகேய சாம்பசதாசிவக் குருக்களும் அவரின் புத்திரர் சிவஸ்ரீ சோம தேவக் குருக்களும் தம் தந்தையருக்குத் துணையாக இருந்து ஆலயக் கிரியைகளைப் பக்தி சிரத்தையுடன் ஆற்றி வருகின்றனர். ஆரம்ப காலத்திலிருந்து இவர்களின் பரம்பரையினரே பூசகர்களாக தொண்டு புரிந்து வருகின்றனர் எனக் கூறப்பட்டது.

ஆலய பரிபாலனம் அதன் ஆரம்பம் முதல் 1879 வரை வழிபாடாற்றியோராலும் 1880 - 1893 வரை கதிர்காமர் ஐயம்பிள்ளையினாலும், 1894 - 1903 வரை அந்தக் கால ஆலயக் குருவினாலும், 1904 - 1906 வரை ஏழு பேர் கொண்ட அடியவர் குழுவினாலும், 1907 - 1949 வரை ஆலயக் குரு சிவஸ்ரீ சுவாமிநாத - இராமசுவாமிக் குருக்களினாலும் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. 1949இல் சட்ட பூர்வமாக அமைக்கப்பட்ட அறங்காவல் சபையினரால் ஆலயப் பரிபாலனம் பொறுப்பேற்கப்பட்டு இன்று வரையும் காலத்துக்கு காலம் தெரிவுசெய்யப்படும் பரிபாலன சபையினால் பரிபாலிக்கப்பட்டு வருகின்றது.

தற்போதைய ஆலய பரிபாலனசபையின் தலைவராக இ. தியாகராசாவும், உப தலைவராக சி. மணியமும், செயலாளராக ச. சந்திரசூடியும் உப செயலாளராக க.

நிர்குணானந்தமும், பொருளாளராக க. முருகையாவும் பணியாற்றி வருகின்றனர். ஆலயத்தில் 1932 ஆம் ஆண்டும், 1951 ஆம் ஆண்டும், 1973ஆம் ஆண்டும் 1995ஆம் ஆண்டும் மகா கும்பாபிஷேகம் பெருவிழாவாக கோலாகலமாக நடைபெற்றன.

அரசகேசரிப் பிள்ளையாருக்கான நித்திய, நைமித்திய கிரியைகளை மேற்கொண்டு வரும் சிவாச்சாரியார்களுக்கு அனைத்து உதவிகளையும் மிகவும் ஆரோக்கியமான சூழ்நிலையில் ஆலய பரிபாலனசபை வழங்கி வரும் அதேவேளையில், ஆலயத்தின் திருப்பணி வேலைகளையும் ஏனைய பணிகளையும் ஆலயத்தை வழிபடுவோரும் ஆலய பரிபாலன சபையினரும் கருத்தொருமித்த நிலையில் அரசகேசரிப் பிள்ளையாரின் அருள் வியாபகத்தினால் மேற்கொண்டு வருகின்றனர்.

ஆலயத்தின் திருப்பணிகள் உள்ளிட்ட அனைத்துப் பணிகளும் புலம்பெயர்ந்த நிலையில் வாழும் அடியவர்களும் தங்களால் இயன்றளவுக்கு உதவி வருகின்றனர். ஆலயத்துடன் தொடர்பான நிகழ்வுகளும் நீர்வேலி கிராமத்துடன் தொடர்பான தகவல்களும் தினந்தோறும் www.neervely.com என்ற இணையத்தளம் மூலம்வெளியிடப்படுவது சர்வதேச ரீதியில் கிராமத்தோடும் - ஆலயத்தோடும் நெருக்கமான தொடர்புகளை பேணுவதற்கு உதவுகின்றது.

"ஆலய முன்றலில் ஸ்தாபகர் அரசகேசரிக்கு சிலை இருக்குமானால் அது ஆலயத்துக்கு மேலும் சிறப்புச் சேர்க்கும். ஆலயத்தின் கோபுரத்திலும் அரசகேசரி உள்ளிட்ட செய்திகளை சிற்பமாக அமைப்பது ஆலயத்துக்குப் பெருமை சேர்க்கும். அதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன." என நீர்வேலி வாசியும் சைவப்பிரசங்கியுமான விரிவுரையாளர் ச. லலீசன் தெரிவித்தார்.

உதயன் - 08.04.2010, 15.04.2010



# 45 அச்சுவேலி காட்டுமலைக் கந்தசுவாமி கோயில்

வலி. கிழக்கில் அந்தணர் அல்லாத பரம்பரைக் குருமாரால் பூசை வழிபாடு நடத்திவரும் ஆலயங்களில் கீர்த்தியாலும் திருப்பணியாலும் மிக உயர்ந்த நிலை காணப்படும் ஆலயங்களில் முதல் நிலையில் உள்ளது அச்சுவேலி காட்டுமலைக் கந்தசுவாமி கோயில். இது அச்சுவேலி தெற்கில் நாவலம்பதியில் ஆவரங்கால் -வல்லை பிரதான வீதிக்கு மேற்குப்புறமாக அமைந்துள்ளது. ஆண்டுதோறும் 25 தினங்கள் பெருந்திருவிழா நடைபெறும் இந்த ஆலயம் அருளாளர் பண்டாரி சீனியர் என்பவரால் 1929ஆம் ஆண்டு ஆனிமாதம் 25ஆம் திகதி சுக்கில திதியில் ஸ்தாபிதம் செய்யப்பட்டது. ஆலயத்தின் பூர்வீக வரலாறு தொடர்பாக கூறப்படுவதாவது.

ஆலய ஸ்தாபகர் அருளாளர் சீனியர் தன்னை வாட்டிய தீராநோய் தீர்க்க கதிர்காமக்கந்தனை மனதார வேண்டி 1928ஆம் ஆண்டு தனது சகோதரியுடனும் நண்பர்களுடனும் சேர்ந்து பாதயாத்திரை மூலம் கதிர்காமம் சென்று வழிபட்டார். கதிர்காமக் கந்தன் வழிபாடு நிறைவுபெற்று வீடு திரும்பும்போது இவர்களுடன் ஒரு ஆணும் ஒரு பெண்ணும் உங்களுடன் நாங்களும் வீட்டுக்கு வருகின்றோம் எனக் கூறி ஊருக்குத் திரும்பி சீனியரின் இல்லத்தில் சில தினங்கள் வசித்து வந்தனர். அவர்கள் திடீரென மறைந்துவிட்டனர். அவர்களின் மறைவை அடுத்து சீனியர்

மீண்டும் நோய் உபாதைக்கு உள்ளானார். அந்த வேளையில் கதிர்காமத்தில் இருந்து கூடவந்த இருவரும் கனவில் தோன்றி "கதிர்காம தரிசனம் முடிந்து வீடு திரும்பும் போது நாம் உன்னிடம் தந்த அடப்பத்துக்குள்ளே (சீலை முடிச்சு) கதிர்காம வேலனது திருநீற்றுடன் வேல் ஒன்றும் உள்ளது. அந்த வேலைத் தினமும் வழிபாடு செய்து அடப்பத்தில் உள்ள பத்ததியின் படி பூசை, பொங்கல் செய். உனது பிணி தீரும்" எனக் கூறினர். அந்தக் கூற்றின் பிரகாரம் ஓலைக் கொட்டில் அமைத்து வேலைப் பிரதிஷ்டை செய்து பூசகராயிருந்து தேவாரப் பதிகங்கள் பாடி தினசரி பூசை வழிபாடு செய்து வந்தார். சீனியர் தானே பூசகராய் இருந்து தேவாரப் பதிகங்கள் பாடி தினசரி பூசை வழிபாடு செய்து வந்தார். பூசகரை வருத்தி வந்த நோய் முற்றாகத் தீர்ந்து பூரண சுகமடைந்தார்.

இந்தச் செய்தி பரவத் தொடங்கியதும் சுற்றம் சூழ உள்ளவர்களும் அயல் கிராமங் களில் உள்ளவர்களும் வைத்தியர்களால் கைவிடப்பட்ட நோயாளர்களும் ஆலயத்தைத் தரிசித்து தங்களது பிணி தீர வேண்டினர். பூசகர் சீனியர் விபூதி, தீர்த்தம் வழங்கி குங்கிலியத்தால் சுட்டு தீராத நோய்களை கந்தன் அருளால் தீர்த்து வந்தார். இந்த வகையில் ஆலயத்தைத் தரிசிக்கும் அடியார்கள் கூட்டம் பெருகியதோடு நோயாளர் ஆலயத்தில் தங்கியிருந்து தீராத நோய்கள் தீரப்பெற்று ஆலயத் திருப்பணிகளுக்கு உதவி வந்தனர். மூல மூர்த்தி சிவனாக இருக்கவும் மூலஸ்தானத்தில் வேல் பிரதிஸ்டை செய்து சுற்றுப்புறத்தில் விநாயகர், அம்மன், மற்றும் பரிவார மூர்த்தி களுக்கும் ஆலயம் அமைக்கப்பட்டு பூசை வழிபாடு, உற்சவங்கள் நடைபெற்று வந்தன. 1949ஆம் ஆண்டு ஸ்தாபகர் சீனியர் சிவபதம் அடைய அவரின் மூத்த மகன் சீ.சிவகுரு தந்தையின் வழியில் ஆலயத் திருப்பணிகளையும், பூசை வழிபாடுகளையும் மேற்கொண்டு வந்தார்.

சிவகுரு ஐயர் ஆலயத்தைப் பொறுப்பேற்று பல்வேறு விதமான கட்டுமானத் திருப்பணி வேலைகளை மேற்கொண்டதுடன் புதிய சித்திரத்தேர் அமைப்பதற்கான திருப்பணிச்சபையை அமைத்து பல லட்சம் ரூபா பெறுமதியான சித்திரத்தேர் செய்யப்பட்டு 1971ஆம் ஆண்டு ஜூலை மாதம் 05ஆம் திகதி வெள்ளோட்ட விழா நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து திருமஞ்சம் செய்யப்பட்டு 07.07.1986ஆம் திகதி வெள்ளோட்டம் விடப்பட்டது. இந்தக் காலப்பகுதியில் ஆலய உட்பகுதியில் பாரிய கட்டுமானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதை அடுத்து வந்த காலப் பகுதியில் ஆலயத்தின் முகப்புப்பகுதி புதிய வடிவமைப்புக்கு மறுசீரமைப்புச் செய்யப்பட்ட துடன் முன்மண்டபம் அழகுபடுத்தப்பட்ட மூடுசாந்து மண்டபமாக மாற்றம் செய்யப் பட்டது. 1994ஆம் ஆண்டு பழனி ஆண்டவருக்கு ஆலயம் அமைக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது. அருளாளர் சீனியர் காலத்தில் இருந்து அருள் வியாபகத்துடன் வளர்ந்து

வந்த ஆலயம் சிவகுரு ஐயரின் காலத்தில் கலைக்கட்டமைப்புக்கு ஏற்ப பல்வேறு வகையான கட்டுமான வளர்ச்சி கண்டது. அடியவர்கள் ஆலயத்திருப்பணிக்கு இல்லை எண்ணாது வாரிவழங்கி வந்ததோடு சிவகுரு ஐயர் முன்னெடுத்த சகல திருப்பணி வேலைகளும் திட்டமிட்ட முறையில் குறித்த காலவேளையில் எதிர்பார்த்ததற்கு அதிகமாகவும் சிறப்பாகவும் நிறைவுபெற்று வந்தமை ஐயரின் ஆளுமைச்சிறப்பையும் முருகப் பெருமானின் அருள்வியாபகத்தையும் மேன்மேலும் வலியுறுத்துவனவாக அமைந்திருந்தன.

சிவகுரு ஐயரின் காலப்பகுதியில் புதிய மணிக்கோபுரம் நிர்மாணிக்கப்பட்டு து. துரைசிங்கம் குடும்பத்தினரின் உபயமாக பெரிய காண்டாமணியும் நிறுவப்பட்டது. காண்டாமணி பற்றிக் குறிப்பிடும்போது ஆலயத்தின் அதிகாலைப் பூசைக்குச் சரியாக 4 மணிக்கு அடிக்கப்படும் ஆயத்தமணி குறித்த நேரத்துக்கு நாள்தோறும் மணித்துளிகள் பிசகாமல் ஒலிப்பது குறிப்பிடத்தக்கது. இந்த மணியின் ஒலியுடன் காலையில் அனைவரும் தமது நாளாந்தக் கடமைகளை காட்டுமலைக் கந்தனை மனதில் நிலைநிறுத்தி ஆரம்பிப்பது அச்சுவேலிக் கிராமத்துக்கும் அதனோடு இணைந்த கிராமங்களுக்கும் கிடைத்த அருட்கொடையாகும். அதிகாலைப் பூசை 5 மணிக்கும் மதியபூசை நண்பகல் 12 மணிக்கும் மாலைப் பூசை 6 மணிக்கும் மூன்றுகாலப் பூசை நடைபெறும். ஆரம்ப காலங்களில் 15 தினங்கள் திருவிழா நடைபெற்று வந்தது. கொடியேற்றத் திருவிழா அன்று தீர்த்தக் கேணியில் நீர் எடுக்கப்பட்டு குடத்தில் ஏற்றப்படும் தீபம் 15 தினங்கள் தொடர்ந்து எரிந்து தீர்த்தத் திருவிழா திதி முடிவடையும் வேளையில் தானாக அணைவது அற்புதமாக இருந்து வந்ததுடன் தீபம் எரிந்து அணைந்த மிகுதி நீர் மருந்தாக தீராத நோய்களுக்குப் பயன்படுத்தப்பட்டும் வந்தது. பிற்காலத்தில் திருவிழாவின் எண்ணிக்கை 25 தினங்களாக அதிகரிக்கப்பட்டு ஆனி அமாவாசை வந்து 5ஆம் நாள் கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகி உருத்திரநாயகி உற்சவம், மஞ்ச உற்சவம், அமிர்த வல்லி, சுந்தரவல்லி உற்சவம், தண்டாயுதபாணி உற்சவம் (மாம்பழத் திருவிழா), கைலாச வாகன உற்சவம், கார்த்திகை உற்சவம், சப்பறத்திருவிழா, தேர்த்திருவிழா, தீர்த்தத்திருவிழா, பூங்காவனத்திருவிழா, வைரவர் உற்சவம் என 25 தினங்கள் திருவிழா நடைபெறும். 25 தினங்களும் திருவிழாக் காலத்தில் அன்னதானம் வழங்கி ஆலயத்துக்கு வரும் அடியவர்களும் ஊர் மக்களும் பெருவிருப்போடு உண்டு மகிழ்வதும் முருகப் பெருமானின் அருள்வியாபகம்தான் எனப் போற்றிப் புகழப்படுகின்றது.


வருடாந்த மகோற்சவம் தவிர சித்திர வருடப்பிறப்பு அன்று ஆலயத்தில் ஆண்டுதோறும் 1008 சங்குகள் வைத்து சங்காபிஷேகம் நடைபெறுவதோடு

மாதாந்தம் கார்த்திகை உற்சவம் மற்றும் விசேட புண்ணிய காலங்களில் உற்சவம் நடைபெறுவதும் குறிப்பிடத்தக்கது. ஆலயத்துக்கான தீர்த்தக்கேணி தொண்டைமானாறு குடாக்கடல் நீர் ஏரியில் அமைக்கப்பட்டுள்ளது. ஆலயத்தில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் இது அமைந்துள்ளது. தீர்த்தத் திருவிழாவன்று முருகன் விநாயகர் ஆகிய மூலமூர்த்திகளுடன் வேல் பெருமான் எழுந்தருளிச் சென்று தீர்த்தமாடுவது உண்டு. ஆலய உற்சவம் பூசை வழிபாடுகளின்போது கதிர்காமத்தில் இருந்து எடுத்து வரப்பட்ட மந்திரக்கோலை பூசகர்கள் கையில் எடுத்துவருவதும் தீர்த்தமாடும்போது மந்திரக்கோலையும் உட்படுத்தி தீர்த்தம் ஆடுவதும் குறிப்பிடத் தக்கது. ஆலயத்தின் உட்கட்டுமானங்கள் தூண்கள் திராவிட சிற்பமரபுசார்ந்த கட்டடக்கலை அம்சங்கள் கொண்டு விளங்குகின்றன.

2004ம் ஆண்டு ஜூன் 15ஆம் நாள் (கார்த்திகைத் திருவிழா) அன்று சிவகுரு ஐயர் சிவபதம் அடைய அவரின் மூத்த புத்திரனும் மூன்றாவது தலைமுறை வாரிசுமாகிய சிவசுப்பிரமணிய ஐயரும் இளையபுத்திரன் பாலசுப்பிரமணியம் (சீனியன்) ஐயரும் ஆலயக்கிரியைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மூன்றாவது தலைமுறையினால் ஆரம்பிக்கப்பட்ட இராஜகோபுரத் திருப்பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. கணிசமான அளவு வேலை நிறைவடைந்துள்ளது. காட்டுமலைக் கந்தன் மீது காலத்துக்குக் காலம் பலநூல்கள் பாடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. அந்தவகையில் பிரபல சங்கீத வித்துவான் க.தம்பிமுத்து பாவலர் பாடிய திரு ஊஞ்சல் பாடல் தொகுப்பு, காட்டுமலைக்கந்தன் தேர்த்திருப்பணி மலர், திருமஞ்சத் திருப்பணிமலர், சி. அருளானந்தம் வெளியிட்ட பழனி ஆண்டவர் பிரதிஷ்டாமலர், ஆசிரியர் சி.சிவலிங்கம் தம்பதிகள் பாடிய காட்டுமலைக் கந்தன் பிள்ளைத்தமிழ், கு. கணேசன் (கனடா) காட்டுமலைக்கந்தன் புகழ்கவிதைத் தொகுப்பு, சி.பாலமுரளி பாடிய காட்டுமலைக்கந்தன் கவிதை, திருமதி உமாராணி பிரேமச்சந்திரன் இயற்றிய ரி.எம்.எஸ்.செல்வக்குமாரால் பாடி வெளியிட்ட இறுவட்டு, பொ. சகலகலா நிதியால் இயற்றப்பட்டு வெளியிட்ட இறுவட்டு என்பன குறிப்பிடத்தக்கன.

உதயன் - 08.07.2010, 15.07.2010, 22.07.2010



# 46 அழுது தன்னை அறிமுகப்படுத்திய உலவிக்குளம் சித்திவிநாயகர்

இன்றைக்கு 237 வருடங்களுக்கு முன்னர் (1775) அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த சிதம்பரராமர் வடமராட்சி கிழக்கில் உள்ள மருதங்கேணியில் வைக்கோலை கொள்வனவு செய்து மாட்டு வண்டியில் ஏற்றி வந்தார். அந்த வைக்கோல் பாரத்துக்கு உள்ளே ஒரு பேளைக்குள்ளே இருந்தபடி விநாயகப்பெருமானும் எழுந்தருளி வந்துவிட்டார். பிள்ளையாரின் பேரருள் சிதம்பரராமர்பால் இறங்கியது. பிள்ளையார் சிறுபிள்ளைபோல் அழுது தன்னை அறிமுகம் செய்து அவருக்குத் தரிசனம் கொடுத்தார். ஆரம்பத்தில் சிதம்பரராமரும் அவரின் குடும்பத்தினரும் விளக்கேற்றி தாம் அறிந்தவாறு பூசை செய்தனர்.

மாட்டு வண்டியில் வைக்கோல் பாரத்தோடு பேளையுள் வந்த பிள்ளையாரை பிரதிஷ்டை செய்து அமைக்கப்பட்ட ஆலயமே அச்சுவேலி தெற்கு உலவிக்குளம் சித்திவிநாயகர் ஆலயம். யாழ்ப்பாணம் - பருத்தித்துறை நெடுஞ்சாலையில் வல்லைச் சந்தியை கடந்து ஆவரங்கால் நோக்கி வரும்போது பிரதான வீதிக்கு மேற்கே வீதியில் இருந்து கூப்பிடு தூரத்தில் அழகான மூடு சாந்து முகப்புடன் கூடிய ஆலயதரிசனம் கிடைக்கும். உலவிக்குளம் என்ற தோம்புப் பெயர் கொண்ட வயலில் பிள்ளையாரை பிரதிஷ்டை செய்து கொட்டில் அமைத்துக் கோயிலாக வழிபட்டமையால் உலவிக் குளம் பிள்ளையார் என்ற பெயர் வழங்கி வருகின்றது.

ஆரம்பத்தில் உலவிக்குளம் வயலில் உள்ள அலரிமரப்புதர் அருகே இருந்த அரச மரத்தடியில் கொட்டிலாக இருந்த ஆலயம் காலப்போக்கில் சுண்ணாம்பு கொண்டு நிரந்தரமான கட்டடமாக மாறியது. மடாலயத்தில் பூசை செய்வதற்கு ஒரு சைவக் குருக்கள் குடும்பமும் ஆலயச்சூழலில் குடியமர்த்தப்பட்டது. மாதவையர் சொக்கையர் என்பவர்களும் அவரின் பரம்பரையினரும் ஆலய பூசை கிரியைகளை முறைப்படி செய்து வந்தனர். சிதம்பரராமர் பரம்பரையினர் திருவிளக்கேற்றும் பணியையும் கோயில் நிர்வாகத்தையும் நடத்தி வந்தனர்.

உலவிக்குளம் சித்தி விநாயகருக்கு சதுர்த்தி மற்றும் விசேட கிரியைகளை விசேட காலங்களில் சிறப்பான அபிஷேகங்களை மேற்கொள்வதற்கு பிராமணக் குருக்கள் மாரை அழைக்கும் வழக்கம் வரலாயிற்று. காலப்போக்கில் பிராமணர் குருக்கள்மார் ஆலய பூசகர்களாகவும் ஆரம்பகாலத்தில் பூசை செய்த சைவக்குருமாரின் பரம்பரை யினர் பரிசாரகர்களாகவும் பணியாற்றி வந்தனர்.

ஆலய நிர்வாகத்தை சிதம்பரராமரின் பின்னர் அவரின் பரம்பரை வாரிசுகளான சரவணை, சிதம்பரப்பிள்ளை, நாராயணபிள்ளை, ஆறுமுகம், சரவணமுத்து, விநாயகம்பிள்ளை ஆகியோர் வழிவழியாக நடத்தி வந்தனர். பின்னர் இ. இராசா விதானையார் ஆலய நிர்வாகத்தைப் பொறுப்பேற்று பழைய சுண்ணாம்புக் கல்லா லான கட்டடத்தை அகற்றி வைரக்கல்லால் திருப்பணி வேலைகளையும் மேற் கொண்டு கும்பாபிஷேகமும் நடைபெற்றது. இராசா விதானையாருக்குப் பின்னர் அவரின் சகோதரன் இ. குமாரவேலு விதானையார் ஆலய நிர்வாகத்தைப் பொறுப் பேற்று நடத்தியதோடு நித்திய நைமித்தியக் கிரியைகளையும் சிறப்பான முறையி நடைபெறுவதற்கு உதவினார். ஊர் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் புதிய சித்திரதேரையும் உருவாக்கினார். புதிய சித்திரத்தேரை பிரபல சிற்பாச்சாரி கந்தசாமி தலைமையிலான குழுவினர் வடிவமைத்தனர்.

இந்தக் குழுவில் புதுவை இரத்தினதுரை உள்ளிட்ட இளம்தலைமுறை சிற்பாச்சாரி களும் உள்ளடங்கி இருந்தனர். 1942ஆம் ஆண்டு ஆலய உற்சவத்தில் இடம்பெற்ற வாணவேடிக்கை ஒன்றின்போது (ஐந்தாம் திருவிழா) ஆலயத்தின் ஒருபகுதியில் தீப்பிடித்து விட்டது. தீ அணைக்கப்பட்டது. அடுத்தநாள் ஆலயத்தில் தீ பிடித்து எரிந்த பகுதி புனரமைப்புச் செய்யப்பட்டது. ஒரே தினத்தில் ஐந்து திருவிழாக்களும் நடத்தப்பட்டு உரிய காலத்தில் தேர் தீர்த்தத் திருவிழாக்களும் நடத்தப்பட்டமை விநாயகரின் அருள்வியாபகத்தினால் ஆகும்.

1955ஆம் ஆண்டு ஆலய பிரமாண அளவுக்கு அமைய மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த மூல விக்கிரகம் மாற்றப்பட்டு புதிய விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. ஆலயத்தின் தர்மகர்த்தாவாக இருந்த இ. குமாரவடிவேலு

விதானையாரும் பிரதம பூசகராக இருந்த ஆகம வித்தகர் சிவஸ்ரீ ச. குமாரசுவாமி குருக்களும் இணைந்து இதனை மேற்கொண்டனர். இந்தவகையில் அழுது தன்னை அறிமுகம் செய்த மூலவிக்கிரகம் மாடத்தில் தாபகம் செய்யப்பட்டு பூசை வழிபாடு செய்யப்பட்டு வருகின்றது.

1967ஆம் ஆண்டு ஆலயப்பிரவேசத்தை தொடர்ந்து ஏற்பட்ட அசம்பாவிதத்தை அடுத்து ஆலயத்தில் நித்திய பூசைகள் மட்டும் நடைபெற்ற நிலையில் நைமித்திய கிரியைகள் தடைப்பட்டன. ஆலய முன் கதவுகள் மூடப்பட்டு உட்பிரகார வழிபாட்டுக்கு முழுமையாகத் தடை விதிக்கப்பட்டிருந்தது. பூசகர்கள் மட்டும் உள்ளே சென்று நித்திய பூசையை மேற்கொண்டு வந்தனர். இந்த வகையில் 18 வருடங்கள் பிள்ளையார் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

18 வருடங்களின் பின்னர் தமிழ்த் தேசியம் மற்றும் இன விடுதலை உணர்வு மேலோங்கியிருந்த காலப்பகுதியில் இளைஞர்கள் மத்தியில் ஏற்பட்ட கருத்துமாற்றம் விடுதலைப் போராளிகளின் வழிப்படுத்தலுக்கு அமைய ஆலயமுன்றலில் நடை பெற்ற ஆலய வழிபாடு தொடர்பான கருத்துப் பரிமாறலில் ஆலயம் அடியவர்களின் வழிபாட்டுக்கு திறந்துவிடப்படல். ஆலயத் திருப்பணியை முழுமையாக மேற்கொள்ளல் என்ற தீர்மானத்துடன் ஆலய பரிபாலன சபையின் தலைவராக கு. விக்கினராசா (விக்கினம்) தெரிவுசெய்யப்பட்டார். ஆலயம் அடியவர்களின் வழிபாட்டுக்கு திறந்து விடப்பட்டது.

ஊர் பொதுமக்கள் வழிபடுவோர் மற்றும் போராளிகளின் முழுமையான ஆதரவுடன் தெரிவான விக்கினராசா தலைமையிலான பரிபாலன சபையினர் தீர்மானத்துக்கு அனைவரும் கைகொடுத்து உதவினர். திருப்பணி வேலைகளில் ஒவ்வொரு பகுதியையும் தனிப்பட்ட சிலரும் தனித்தனி குழுவினரும் தாம் செய்து முடிப்பதாகப் பொறுப்பேற்றனர். திருப்பணி வேலைகளில் ஒவ்வொரு ஊரும் திரண்டு ஒரு மனதாக திருப்பணி வேலைகளுக்கு நிதி உதவியையும், சிரமதான அடிப்படையில் உடல் உழைப்பையும் வழங்கி உதவினர். உலவிக்குளத்தான் அருள்வியாபகத்தால் திட்டமிட்ட காலவரையறைக்குள்ளே திருப்பணி வேலைகள் முழுமையாக முடிவடைந்தது. 1986.09.14ஆம் திகதி மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

அச்சுவேலி தெற்கு உலவிக்குளம் வயல்வெளியில் கோயில்கொண்டு அருள் பாலிக்கும் உலவிக்குளம் சித்தி விநாயகர் மீது நம்பிக்கை வைத்து தூயசிந்தையோடு வழிபடுவோர் எண்ணிய வண்ணம் காரியம் கைகூடும் என்பதும் ஆலயத்தைச் சாட்டாக வைத்து அடாவடித்தனம் செய்வோர் வெளிப்படையாகவே ஒழிக்கப்படுவர் என்பதும் அடியவர்களின் மிகுந்த நம்பிக்கையாகும்.

1967இல் இருந்து 18 வருடங்கள் நித்தியபூசையோடு மூடப்பட்டிருந்த நிலையில் வீட்டுக் காவலில் இருந்த விநாயகர் அதற்கு உடந்தையானவர்களை உரிய காலப்பகுதியில் வருத்தி உணரவைத்ததோடு, ஊரையே கூட்டி ஒரு வருடகால இடைவெளியில் முழுமையாக திருப்பணி வேலைகள் நிறைவுற்று புதிய ஆலயமாக மிளிர்கின்றமை சித்திவிநாயகனின் அருள்வியாபகத்தை எடுத்துக்காட்டுகின்றது. அத்தோடு "அவன் இன்றி அணுவும் அசையாது" என்ற மூல உண்மையை முழுமையாக ஊருக்கே உணர்த்தியது.

அச்சுவேலி உலவிக்குளம் சித்திவிநாயகரின் வருடாந்த உற்சவமும் கரணவாய் மூத்தவிநாயகரின் வருடாந்த உற்சவமும் ஒரே காலப்பகுதியில் நடைபெறுவது உண்டு. இரண்டு கோயில்களின் திருவிழாவும் யாழ். மாவட்டத்தில் குறிப்பிடத்தக்க அளவுசிறப்பாக நடைபெறுவது வழமை. பெரிய மேளம் (நட்டுவ மேளம்) சின்ன மேளம் (சதுர்க்கச்சேரி) வாண வேடிக்கை, சிகர அலங்காரம், மின்விளக்குச் சோடனைகள் எனப் பல்வேறு வகையான ஆடம்பரங்களுடன் நடைபெறுவது உண்டு. திருவிழா ஆரம்பமானால் இளைஞர்களுக்கும் இசைப்பிரியர்களுக்கும் கொண்டாட்டம். இரண்டு கோயில்களிலும் தனித்தனியாக திருவிழா உபயகாரர்களுக்கு இடையே போட்டியாக திருவிழா நடைபெறுவதோடு இரண்டு ஊர்களுக்கும் இடையே ஒன்றை முந்தி ஒன்று என்ற நிலையில் திருவிழாக்கள் நடைபெறுவதும் உண்டு.

எத்தனை சோடி நட்டுவ மேளம், எத்தனை சோடி சின்ன மேளம், எவ்வளவு வாணவேடிக்கை என்பதே பேச்சாக இருக்கும். இரவுத் திருவிழாவில் சுவாமி வீதி உலா வந்து வடக்கு வீதியில் தரித்து நிற்கும்போது மேளக் கச்சேரியுடன் வாண வேடிக்கையும் நீண்டநேரம் நடைபெறும். சின்னமேளமும் பிரசன்னமாகி சில பாட்டுக்களை பாடும். குறித்த காலப்பகுதி திருவிழாக்களில் "கிளவி கொட்டு" "கிளவன் கொட்டு" என்ற வகை இரும்பு வளையங்கள் பல பூட்டப்பட்ட பெரிய மூங்கில் றொக்கட்டுக்களில் உருவாக்கப்பட்ட வாணங்கள் ஏற்றப்படும். இந்த வாணங்களின் தள்ளுவிசைத் தத்துவம்தான் நவீன றொக்கட்டுக்கள் என்பர். இந்த வாணங்கள் செல்ல வேண்டிய திசை மாறி வீடுகளின் சுவர்களைத் தாக்கி இடிப்பதும் அதனால் சில அகால மரணங்கள் ஏற்பட்டதும் உண்டு.

1970இற்கு முந்திய காலப்பகுதியில் அவசரகாலச் சட்டமோ பாதுகாப்புத் தரப்பினரின் நடமாட்டமோ இயல்பு வாழ்க்கையில் இல்லை. இரவுத் திருவிழா அடுத்த நாள் காலை 7 மணி வரையும் நடைபெறுவதும் உண்டு. ஆலயத்தில் கொடியேறிவிட்டால் ஊர் முழுக்க திருவிழாக் கோலாகலம்.


1986இல் கு.விக்கினராசா (விக்கினம்) தலைமையில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இயல்பு நிலையில் நித்திய, நைமித்திய கிரியைகள் நடைபெற்று

வந்த காலப்பகுதியில் விக்கினம் புலம்பெயர்ந்து வெளிநாட்டுக்கு சென்ற பின்னர் தமிழீழ விடுதலைப் புலி போராளிகளின் வழிப்படுத்தலில் ஆலயத்தை வழிபடு வோர்களை உள்ளடக்கிய பரிபாலன சபை உருவாக்கப்பட்டு கே.கந்தையா தலைமையில் சிலகாலம் செயற்பட்டது. அதை அடுத்து க.சத்தியமூர்த்தி மாஸ்ரர் தலைமையில் ஆலயச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. மீள் குடியேற்றத்தின் பின்னர் ஆ. குமரகுரு, க.முத்துலிங்கம் ஆகியோரும் நிர்வகித்தனர். தற்பொழுது கிராம அலுவலர் இ.கணேசலிங்கம் மற்றும் ச.ஞானசேகரம் ஆகிய இருவரும் ஆலயத்தின் பரம்பரை உரிமையாளரும் நிதிதிட்டமிடல் அமைச்சின் ஓய்வுபெற்ற பிரதிச் செயலருமான க.சண்முகலிங்கத்தின் பிரதிநிதிகளாக இருந்து ஆலய முகாமைத்துவப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இறுதியாக 2007.09.16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

ஆலயத்தின் பூசகர்களாக அந்தணர்கள் பொறுப்பேற்ற காலப்பகுதியில் இருந்து அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையின் ஸ்தாபகரும், ஆகம வித்தகருமான சிவஸ்ரீ.ச.குமாரசுவாமி குருக்களின் சந்ததியினர் ஆலயக் கிரியைகளை மேற்கொண்டு வருகின்றனர். தற்பொழுது பிரதம பூசகராக பிரம்மஸ்ரீ கு.வை.விருத்தகிரிசுவரக் குருக்கள் சிறப்புற பணியாற்றி வருகின்றார். ஆலயத்தில் வருடாந்த உற்சவங்கள் ஆடி மாதத்தில் 11 தினங்கள் சிறப்பான முறையில் நடைபெறும். ஆடிஅமாவாசையை அடுத்து ஐந்தாம் நாள் கொடியேறி ஆடிப் பூரணையில் தீர்த்தோற்சவம் நடைபெறு கின்றது. ஆலயத்துக்கு தெற்கு புறத்தில் நான்கு புறமும் பொழி கல்லால்படி அமைக்கப் பட்ட தீர்த்தக் கேணியில் விநாயகப் பெருமான் தீர்த்தமாடி அருள்பாலிப்பது உண்டு.

மாதந்தோறும் விநாயகர் சதுர்த்தி உற்சவங்களும், ஆவணிச்சதுர்த்தியும் சிறப்பான அபிஷேக ஆராதனையுடன் நடைபெறுகிறது. பிள்ளையார் பெருங்கதை விரதமும், வருடாந்தம் கந்தப்புராண படனமும், நவராத்திரி, கந்தசஷ்டி, திருவெம்பாவை உற்சவமும் மற்றும் தைப்பொங்கல் சித்திரை வருடப் பிறப்பு, மாதப்பிறப்பு விசேட பூசை அபிஷேகங்களும் நடைபெற்று வருகின்றன. ஆலயத்தின் தேர்க் கொட்டகை பல லட்சம் ரூபா செலவில் அண்மையில் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. ஆலயத்தின் தேர் ஓடும் வீதியை திருத்தி அமைப்பதற்கும் ஆலயத்திற்கான இராஜகோபுரம் அமைப்பதற்கும் அடியவர்களும் ஆலய நிர்வாகிகளும் உள்ளூரத் தீர்மானித் துள்ளனர். விநாயகர் திருவருளால் திருப்பணி வேலைகள் கைகூடலாம். உலவிக்குளத்தான் அருள்பெற்று உய்வோமாக.

உதயன் - 19.01.2012, 26.01.2012



# 47 நிலாவரை வற்றா நீர்நிலையும் நவசைலேஸ்வரமும்

வலி. கிழக்கில் புராதன வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் தனித்துவம் மிக்கதாக விளங்குவன புத்தூர் நிலாவரை வற்றா நீர்நிலையும். நவசைலேஸ்வரமும் ( சிவன் கோயில்) புத்தூர் - சுன்னாகம் வீதியில் இராசவீதி வந்தணையும் சந்தியின் வடக்குப் புறத்தில் அழகுற அமைந்துள்ளன.

நவசைலேஸ்வரத்தையும் நிலாவரை வற்றா நீர்நிலையையும் தொடர்புபடுத்தி கர்ணபரம்பரைக் கதைகள் பல உள்ளன. இதில் ஒன்றுதான் இலங்கை வேந்தன் சிவபக்தன் இராவணனை இராமபிரான் அழித்த பின்னர் வடதிசை நோக்கிச் செல்லும் வழியில் சிவபூசை செய்வதற்கு ஸ்தாபிதம் செய்த சிவலிங்கம்தான் நவசைலேஸ்வரர் ஆலயம் என்றும் அதனோடு இராமரால் நிர்மாணிக்கப்பட்ட தீர்த்தம்தான் நிலாவரை வற்றா நீர் நிலை என்றும் கூறப்படுவது உண்டு. நிலா வரைக்கு விஞ்ஞான பூர்வமான விளக்கத்தை பின்னர் நோக்கலாம்.

நிலாவரை வற்றா நீர் நிலையின் மேற்குப் புறத்தில் 30 மீற்றர் தூரத்துக்குள்ளே நவசைலேஸ்வரம் அமைந்துள்ளது. ஆலய வாசலில் ஆலயத்துக்குரிய தீர்த்தக்குளம் என்ற வகையில் ஆலயத்தில் இருந்து வந்து இறங்குவதற்கு ஏற்ற வகையில்

படிக்கட்டுக்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இன்று தென்னிலங்கையில் இருந்து யாழ்.குடாநாடு நோக்கி பெருமெடுப்பில் வருகைதரும் சுற்றுலாப் பயணிகள் நாள்தோறும் ஆயிரக் கணக்கில் தரிசனம் செய்யும் இடங்களில் நிலாவரையும் ஒன்று. நீர் நிலையுடன் அண்டியுள்ள பெருவிருட்சங்களின் நிழலில் ஆற அமர அமர்ந்து உண்டுகளித்து மகிழும் சுற்றுலாமையமாக நிலாவரைச் சுற்றாடல் அமைந்துள்ளன. நிலாவரை சூழலில் முழுநாளும் தென்னிலங்கை சுற்றுலாப் பயணிகளின் நடமாட்டமும் புகைப்படக் கருவிகள் மற்றும் வீடியோ படப்பிடிப்புக்களின் அமர்க்களமும் கண்கொள்ளாக் காட்சியாகும்.

நவசைலேஸ்வரம் போர்த்துக்கேயரின் ஆட்சிக் காலத்தில் முற்றாக அழிக்கப்பட்டு ஆலயத்தின் மூல மூர்த்தியாகிய சிவலிங்கமும் வேறு பொருள்களும் ஆலயத்துக்கு அருகில் உள்ள கிணற்றுக்குள்ளே வீசப்பட்டு மறைக்கப்பட்டிருந்தன.

1948ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் எதிர்பாராத வகையில் இறையருள் கூட்ட ஆலயத்தின் அருகில் உள்ள கிணற்றில் இருந்து சிவலிங்கம் மீட்டெடுக்கப்பட்டு ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டு பரம்பரை பூசகர்களான வேலுப்பிள்ளை சுப்பையா அவரின் மனையாள் சிவக்கொழுந்து ஆகியோரால் பூசை வழிபாடு செய்யப்பட்டதாகவும் தற்பொழுதும் மடாலயமாக உள்ள ஆலயத்தில் சிவராத்திரி விழா. திருவாதிரை உட்பட விசேட காலங்களில் பூசைகள், அன்னதானம் என்பவற்றோடு தினசரிப் பூசை நடைபெற்று வருவதாக வேலுப்பிள்ளை சுப்பையரின் பேரனும் தற்பொழுது ஆலய பரிபாலன சபையின் தலைவருமான வேலுப்பிள்ளை அருணாசலம் தெரிவித்தார். தற்பொழுது ஆலயத்தின் பரிபாலனத்துக்குரிய நிதி உதவிகள் கனடாவில் வாழும் புலம்பெயர்ந்த உறவுகள் மூலம் கிடைப்பதாகவும் எதிர்காலத்தில் ஆலயத்துக்கான சுற்றுமதிலையும் மகேஸ்வர பூசைக்கான ஒரு மண்டபத்தையும் நிர்மாணிப்பதற்கு திட்டமிட்டிருப்பதாக அருணாசலம் தெரிவித்தார்.

போர்த்துக்கேயரால் இடித்து அழிக்கப்பட்ட ஆலயத்தின் அடித்தளம் தற்போதைய ஆலயச்சூழலில் காணப்படுகின்றது. நல்லூர் இராசதானிக்கால ஆலயங்கள் பற்றிக் கூறும் ஸ்ரீதக்ஷிண கைலாய புராண நவசைப் படலத்தில் புத்தூரில் இருந்த சிவன் கோயில் பற்றியும் அதன் கேணி பற்றியும் நந்தவனம் பற்றியும் குறித்த ஆலயத்தை வழிபட்ட அடியார் பெற்ற நன்மைகள் பேறுகள் பற்றியும் கூறப்பட்டுள்ளன.

இதில் குறிப்பிடப்பட்டுள்ள சிவன்கோயில் நவசைலேஸ்வரம் சிவன் கோயில்தான் என்றும் கூறப்படும் அதேநேரம் அங்கு குறிப்பிடப்பட்டுள்ள சிவன் கோயில் புத்தூர் சிவன் கோயிலைக் குறிப்பதாகவும் கூறப்படுவதும் உண்டு.

நவசைலேஸ்வரத்தின் நித்திய பூசையை தற்பொழுது அச்செழு சிவஸ்ரீ விக்கினேஸ்வரக் குருக்கள் மேற்கொண்டு வருகின்றார். நவசைலேஸ்வரம் ஈழத்தில் உள்ள ஐந்து பிரதான சிவன்கோயில்களுடன் (ஈஸ்வரங்கள்) சேர்ந்து ஆறாவது பிரதான ஆலயமாகக் கூறப்படுவதும் உண்டு.

நிலாவரை வற்றா நீர்நிலை தொடர்பாக கர்ணபரம்பரைக் கதைகள் பல கூறப்பட்ட போதிலும் இந்த நீர்நிலையின் ஆழம் தொடர்பாக உறுதியான முடிவு எட்டப்படவில்லை எனக் கூறப்படுகின்றது. ஆழம் 382 அடிக்கு மேற்பட்டது என்பது ஒருவகையில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. நிலாவரைக்கு வடக்குப்புறமாக அமைந்துள்ளது நவக்கிரிக் கிராமம். நவக்கிரி, நவசைலேஸ்வரம் நிலாவரை என்னும் பதங்களில் கிரி, சைலம், வரை போன்ற பதங்கள் 'மலை'யைக் குறிப்பதாக அமைந்துள்ள போதிலும் இங்கு மலைகள் இருந்தது தொடர்பான அடையாளங்கள் எதுவும் காணப்படவில்லை. யாழ்ப்பாண சுண்ணக்கல் குடாநாடு மயோசின் காலச் சுண்ணாம்புக் கற்களால் ஆனது. இந்தக் கற்களுக்கு நீர் உட்புகவிடும் தன்மை உண்டு. மழைநீர் உட்கசிந்து பாறை நீராகத் தேங்கி நிற்கும்.

மழைநீர் வளியினூடாக வரும்போது அதனுடன் காபனீரொட்சைட் ( $CO_2$) கலக்கின்றது. அந்த நிலையில் மழைநீர் காபோனிக் அமிலமாக ( $H_2 CO_2$) மாறுகின்றது. இங்குள்ள மயோசின் சுண்ணக் கற்கள் கல்சியம் காபனேற் ( $C_2 CO_2$ ) என்ற இரசாயனப் பதார்த்தத்தை உடையனவாகும்.

கல்சியம் காபனேற்றைக் காபோனிக் அமிலம் கரைத்துவிடக்கூடியது. இதன் காரணமாக சுண்ணக் கற்பாறைகளைக் கரைத்து நீர் உட்செல்கின்றது. பாறைகள் கரையும்போது சில இடங்களில் தரையின் கீழ் பெரிய பள்ளங்கள் உருவாகி விடுகின்றன. இத்தகைய பள்ளங்கள் நீர்நிலைகளாகவும் பெரும் குகைகளாகவும் விளங்கக்கூடும். இந்த வகையில்தான் நிலாவரை, பொக்கணை, அளவெட்டி, மானிப்பாய் ஆகிய இடங்களில் உள்ள நீர்நிலைகளும் தொண்டமானாறு கெருடாவில் குகையும் தோன்றியது என்பது விஞ்ஞான ரீதியிலான புவியியல் ஆய்வு உண்மையாகும்.

நிலாவரை வற்றா நீர்நிலை 52அடி நீளம் 37அடி அகலம் கொண்ட நீள்சதுர வடிவில் நிலமட்டத்தில் இருந்து 14 அடி ஆழத்தில் நீர்கொண்டதாக உள்ளது. ஆரம்பகாலத்தில் இருந்து நீர்பாசனத் திணைக்களத்தின் கீழ் இருந்து வந்தது. சுற்றி வர சீமெந்துக் கட்டு மற்றும் பாதுகாப்புச்சுவர் கொண்டதாகவும் தெளிந்த நீர் ஆழந்தெரியாத கருநீலக்கடல் போல காணப்படுவது காண்போரின் ஆவலைத் தூண்டி நிற்கின்றது.

நிலாவரை வற்றா நீர்நிலையில் இருந்து 1990ஆம் ஆண்டு காலப்பகுதிவரை வாழைப் பயிர்ச்செய்கைக்கான நீர்ப்பாசனத் திட்டம் நடைமுறையில் இருந்துவந்தது. இந்த நீர்ப்பாசன வாய்க்கால் அமைப்புக்களை இராசவீதியின் கிழக்குப் புறத்தின் வீதியோரமாக சிறுப்பிட்டி மேற்கு வரையும் , சுன்னாகம் – புத்தூர் வீதியில் வடக்குப்புற வீதியோரமாக அச்செழு வரையும் அமைந்திருப்பதை இன்றும் காணலாம். இது சீமெந்தால் அமைக்கப்பட்ட 3 அடி ஆழம் 3அடி அகலம் கொண்டது. பயிர்ச்செய்கைக் கான இந்த திட்டமிடப்பட்ட நீர்ப்பாசனத் திட்டம் வலி.கிழக்குப் பிரதேசத்துக்கு தனிப்பெருமை சேர்க்கக்கூடியதாகவும் யாழ்.குடாநாட்டில் உள்ள முதலாவது பயிர்ச்செய்கைக்கான நீர்ப்பாசனத் திட்டமாகவும் அமைந்திருந்துள்ளது. நீர்ப்பாசன வேலைத்திட்டத்தின் மூலம் விநியோகிக்கப்பட்ட நீர் வாழைச் செய்கைக்கு பயன்படுத்தப்பட்டதோடு எஞ்சிய நீர் சிறுப்பிட்டி மேற்கில் உள்ள 'கிரியப்பை' குளத்தில் சேர்க்கப்பட்டு குளத்தில் இருந்து நெல் வயல்களுக்கு பயன்படுத்தப்பட்டு வந்தது. இந்தக் காலப்பகுதியில் வாழைச் செய்கையாளர்கள் பெரும்பயன் அடைந்து வந்தனர்.

வாழைச்செய்கைக்கான நீர்ப்பாசன வேலைத்திட்டம் நீர்ப்பாசனத் திணைக் களத்தின் கீழ் 1949ஆம் ஆண்டுக்குப் பின்னர் தொடங்கி 1990 ஆம் ஆண்டு வரை சீரான முறையில் நடைபெற்று வந்தன. ஆரம்பகாலத்தில் டீசல் இயந்திரங்களில் நீர் இறைக்கப்பட்டது. பின் மின்சார மோட்டர்களைப் பயன்படுத்தி நீர் இறைக்கப்பட்டது. காலையும் மாலையும் தலா மூன்று மணி நேரம் வரை நீர் இறைக்கப்பட்டது. நீர்ப்பாசன வேலைத்திட்டம் நிறுத்தப்படும்வரை அதற்குப் பொறுப்பாக இருந்து நீர் விநியோகத்தை மேற்கொண்ட 'பம் ஒப்பரேட்டர்' வே. அருணாசலம் அந்தக் காலச் செயற்பாடுகள் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில் . "நிலாவரை நீர் நிலையின் பொறுப்புக்கள் அண்மையில் தேசிய நீர்வழங்கல் வடிகால் சபையிடம் கையளிக்கப் பட்டுவிட்டன. முன்பு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் இருந்தது. நிலாவரையில் ஓய்வு பெறும்வரை நீண்டகாலம் கடமையாற்றினேன்.

நிலாவரை நீர் நிலை தொடர்பாக காலத்துக்குகாலம் வெளிநாட்டு ஆய்வாளர்கள் என்ற வகையில் பிரித்தானியா, ஜேர்மனி, செக்கோசிலோவேக்கிய ஆய்வாளர் குழுக்கள் பல்வேறு வகையான ஆய்வுகளை மேற்கொண்டனர். நான் அறிந்த வரையில் நீர் மட்டத்தில் இருந்து 31 அடி வரையும் உள்ள நீர் மக்களின் பயன்பாட்டிற்கு உட்படுத்தக்கூடியது. 31 அடியில் இருந்து 81 அடிவரையும் உள்ள நீர் வன்நீர் உவர்த்தன்மை கொண்டது. 81 அடிக்கு கீழ் உப்பு நீர் கீழ் நீரோட்டத்துடன் தொடர்பானது.

நீர் தொடர்பான ஆய்வு அந்தக் காலப்பகுதியில் தினசரி இரண்டு தடவைகள் காலையும் மாலையும் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பிட்ட அடி ஆழங்களில் நீர்

பெறப்பட்டு அதற்குரிய முறையில் தலைமை அலுவலகத்துக்கு அனுப்பப்பட்டு அறிக்கைகள் பேணப்பட்டு வந்தன. இராணுவ நடவடிக்கைகளின் போது நீர்ப்பாசன கருவிகளும் வாய்க்கால்களும் சேதமடைந்ததையடுத்து நீர்ப்பாசன செயற்பாடுகளும் நீர் ஆய்வுச் செயற்பாடுகளும் நிறுத்தப்பட்டன. மீண்டும் நிலாவரை நீரை விவசாய நடவடிக்கைக்கு பயன்படுத்தும் நிலை தொடர வேண்டும் எனத் தெரிவித்தார்.

நிலாவரை நீரை யாழ்ப்பாணம் மாநகரசபை குடிதண்ணீர் விநியோகத்துக்குப் பயன்படுத்துவதற்கான வேலைத்திட்டத்தின் கீழ் பல மில்லியன் ரூபா செலவில் நிலத்துக்குக் கீழ் 8 அங்குல விட்டம் கொண்ட குழாய் இணைப்பு இராச வீதியோரமாக இணைப்புச் செய்யப்பட்டுள்ளது. குழாய் மூலம் நீர் எடுத்துச் செல்லப்பட்டு சுத்திகரிக் கப்பட்டு குடிதண்ணீர் பயன்பாட்டுக்கு விநியோகிக்கும் திட்டம் இடையில் கைவிடப்பட்டது.

வாழைச் செய்கை நீர் விநியோகத் திட்டம் தொடர்பாக சிறுப்பிட்டி வடக்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் வேலுப்பிள்ளை (வயது 75) கருத்துத் தெரிவிக்கையில் : -

நிலாவரை நீர்ப்பாசனத்திட்டம் நடைமுறையில் இருந்த காலம் வாழைத் தோட்டக்காரர்களுக்கு வாய்ப்பாக இருந்தது. நிலாவரைக் கிணற்றில் இருந்து மேற்கு நோக்கி அச்செழு, ஈவினை பகுதிக்கும் தெற்கு நோக்கி சிறுப்பிட்டி மேற்கு பகுதிக்கும் நீர் விநியோகம் செய்யப்பட்டது. நீர்விநியோகத்துக்கு ஆரம்பத்தில் கட்டணம் எதுவும் அறவிடப்படவில்லை. பிற்காலத்தில் 10 ரூபா வீதம் கட்டணம் அறவிடப்பட்டது. வாழைக்கு பயன்படுத்திய நீரின் மிகுதி குளங்களில் தேக்கப்பட்டு நெல்லுக்கு பயன்படுத்தப்பட்டது. இந்தக் காலப்பகுதியில் வாழையும் சிறுப்பிட்டி பகுதியில் நெற்பயிர்ச் செய்கையும் வளம் பெற்றிருந்தது. அந்த நிலை மீண்டும் வரவேண்டும். அந்த நிலை வருமானால் புத்தூர் - நீர்வேலி - அச்செழு உள்ளிட்ட வாழைச் செய்கை முக்கோண வலயத்தில் வாழைப் பயிர்ச்செய்கை மூலம் விவசாயிகள் நல்ல வருமானத்தைப் பெறக்கூடிய வளமான நிலை ஏற்படும் - என்றார்.

குடாநாட்டில் உள்ள பயிர்ச்செய்கை நீர்ப்பாசனத் திட்டமாக இருந்துவந்த நிலாவரை நீர்ப்பாசனத் திட்டம் எதிர்காலத்தில் நவீனமயப்படுத்தப்பட்டு குடா நாட்டின் அபிவிருத்திக்கான திட்டமாக முன்னெடுக்கப்பட வேண்டும். அதற்கான முன்னெடுப்புக்களை திட்டமிட்ட முறையில் முன்னெடுப்பதற்கு ஆய்வாளர்கள், அறிஞர்கள், அரசியல் சக்திகள் ஒன்றிணைந்த நிலையில் உள்ள நவசைலேஸ்வரமும் அதன் பெருமையும் பேணப்பட வேண்டும். ஆலயத்தை புனரமைப்பதற்கு உரிய ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படவேண்டும் என மக்கள் விரும்புகின்றனர்.

உதயன் - 29.04.2010, 06.05.2010, 13.05.2010



# 48 விரும்பியபடி அமர்ந்து நல்லருள் பாலிக்கும் நீர்வேலி வாய்க்காற்றரவை மூத்த விநாயகர்.

**பா**ரம் ஏற்றி இறக்குவதற்கும், பயணம் செய்வதற்கும் மாட்டு வண்டில்களை மட்டும் பயன்படுத்திய காலப்பகுதியில் யாழ்.குடாநாட்டில் இருந்து வன்னிப் பெரு நிலப்பரப்புக்கு மாட்டு வண்டில்களில் சென்று நெல் மற்றும் தானியங்கள் உணவுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணத்துக்கு வருவது வழமை. பணப் புழக்கம் இல்லாத பண்டமாற்று பொருளாதாரக் கட்டமைப்பு நிலவிய காலப்பகுதியில் வர்த்தக ரீதியிலும், சுய தேவையின் நிமித்தமும் மாட்டு வண்டில் பயணங்கள் இரவு பகலாக நிகழ்வதுண்டு.

பெருந்தெருக்கள், வீதி அமைப்புக்கள் பொருத்தமான கட்டமைப்பில் இல்லாத அந்தக் காலப் பகுதியில், பயணத் தூரத்தைக் குறைப்பதற்கு ஏற்றவகையில் குறுக்கு வழியாகவும், மாட்டு வண்டில்கள் செல்லக்கூடிய உள்ளூர்ப் பாதைகள் மூலமும் பயணங்கள் மேற்கொள்ளப்படுவதும், குறிப்பிட்ட இடங்களில் பயணிகள் இளைப்பாறி மாடுகளுக்கு உணவூட்டுவதும் தங்கியிருந்து தாமும் சமைத்துச் சாப்பிட்டு ஆயாசம் தீர்த்து பயணத்தைத் தொடர்வதும் வழமை. இந்தவகையில் கைதடியில் இருந்து நீர்வேலி தரவை வழியாக வலிகாமம் கிழக்கு பிரதேசத்துக்குள்ளே நுழைபவர்கள் நீர்வேலியில் தங்கி ஆறிச் செல்வது "மூத்த நயினார்" என்ற பெயர்கொண்ட காணியில்

ஆகும். இலுப்பை, தென்னை நிழல் பரப்பும் இந்த சோலைக் காணியில் நீர் பெறுவதற்கு கிணறு, குளம் என்பனவும் அமைந்திருந்தன. குப்பிளான் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் வன்னிக்குச் சென்றிருந்த போது வயல்வெளியில் எதிர்பாராத வகையில் கிடைத்த பிள்ளையார் விக்கிரகத்தைக் கண்டெடுத்து தமது ஊரில் வைத்து வழிபடுவோம் என்ற எண்ணத்தோடு நெல் மூடையில் வைத்துக்கொண்டு குப்பிளானுக்குத் திரும்பினர். அப்போது வழமை போல நீர்வேலியில் தங்கி இருந்து ஆயாசம் தீர்த்து செல்லும் போது, இறக்கி வைத்த பிள்ளையார் விக்கிரகம் கொண்ட நெல்மூடையைத் தூக்க முடியவில்லை. பயணம் செய்த எல்லோரும் முயன்றும் தூக்க முடியாத நெல் மூடையை "எல்லாம் அவன் செயல்" எனத் தேறி அப்படியே விட்டுவிட்டுச் சென்றனர்.

இந்த அற்புத தகவல் ஊர் எல்லாம் பரவியது. இதனை அறிந்த மூத்த நயினார் காணி உரிமையாளர் சுப்பிரமணியம் குருநாதர், நீர்வேலி குருக்கள் குடியைச் சேர்ந்த சிவசுவாமிக் குருக்களை அணுகி ஆலோசனை கேட்டதோடு, விநாயகப் பெருமானுக்கு தனது காணியிலேயே கோயில் அமைத்து அதில் விக்கிரகத்தை வைத்து வழிபாடு செய்து வந்தார். பின்னர் அசைவுள்ள கோயில் தளபாடங்கள், காணிகள், வயல்கள் முதலியவற்றை கோயிலுக்கு தருமசாதனம் செய்து நித்திய நைமித்திய கிரியைகளைச் செய்யும் "அதிகார தத்துவ நன்கொடைச் சாட்டுதல் உறுதியை" முடித்து சிவசுவாமிக் குருக்கள் முத்துச்சாமிக் குருக்களிடம் கையளித்தார்.

மூத்த விநாயகர் தான் விரும்பிய விதத்தில் விரும்பிய இடத்தில் கோயில் கொண்ட விதம் வன்னியில் இருந்து நெல் மூடையில் எடுத்து வந்த போது நீர்வேலியில் இருந்து அருள்செய்ய திருவுள்ளம் கொண்டமை, நம்பியவர் எண்ணத்தை விக்கினங்கள் தீர்த்து கைகூடச் செய்யும் அருள்வியாபகம் மற்றும் அற்புதங்கள் அடியவர்களை ஆலயத்தின் பக்கம் ஈர்க்கச் செய்தது. நாளும் பொழுதும் அடியவர் கூடி அருள்பெற்று உய்தனர். அந்த வகையில் ஆலயத்தின் புகழ் அடியவர்களால் வியந்து போற்றப் படுகின்றது. இன்று வலி கிழக்கில் உள்ள ஆலயங்களில் சிறந்த புகழ்பெற்ற ஆல யங்களில் ஒன்றாக விளங்குவதோடு பெரும் பொருள் செலவில் ஆடம்பரமான திரு விழாக்கள் நடைபெறும் ஆலயங்களில் ஒன்றாகவும் விளங்குகின்றது.

"வலிகாமம் கிழக்குப் பிரதேசத்தில் காணப்படும் விநாயகர் வழிபாட்டு மரபுகள் பெரும்பாலும் வன்னிப் பிரதேசத்தில் இருந்து தென்மராட்சி கடல் நீரேரிப் பரப்பின் ஊடாக எடுத்து வரப்பட்டவையாக காணப்படுகின்றன" என தொல்பொருள் வர லாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். நீர்வேலிக் கிராமத்தில் ஈசான திசை யில் இந்த ஆலயம் அமைந்திருப்பதால், வேண்டி வழிபடும் அடியவர்களுக்கு

யாவும் கிடைக்கும். நற்பேறு அடைவார்கள் என்பது நம்பிக்கை. இதனை ஆகம வாக்கியங்களும் வலியுறுத்துவதாக கூறப்படுகின்றது. இந்த வகையில் இட விசேடத்தாலும், மூர்த்தி விசேடத்தாலும் சிறப்புப் பெற்ற தலமாக விளங்குகின்றது.

அரி அரி வட்டரின் ஆன்மீகப் புலமை பற்றியும் மந்திர வலிமை பற்றியும் நீர்வேலிப் பகுதியில் பெருமையாக பேசிக்கொள்ளப்படுவதுண்டு. மந்திர சக்தி உடைய இவர், தேவதைகளை வசப்படுத்தி தான் நினைத்தவற்றை நினைத்தவாறு நிறைவேற்றும் வல்லமை உடையவர். நீர்வேலிப் பகுதியில் பேதிநோய் ஏற்பட்ட வேளையில் அரி அரி வட்டர், பிள்ளையார் மீது வசந்தன் பாட்டுப் பாடி வழிபாடு செய்ததாகவும், அதை அடுத்து நீர்வேலிப் பகுதியில் நிலவிய பேதி நோய்க் கொடுமை முற்றாக நீங்கி மக்கள் சுகவாழ்வு வாழ்ந்ததாகவும் கூறுவர். தற்பொழுதும் வசந்தன் பாட்டுப்பாடி வழிபாடு செய்யும் மரபு வன்னிப் பகுதியில் காணப்படுகின்றது. சுப்பிரமணியர் குருக்களின் காலத்தில் மாரிமழை பொய்த்தமையால் குருக்கள் மழை வேண்டி ஆசாரமாக மோதகம், கொழுக்கட்டை செய்து நிவேதனம் செய்ததும் மழை சொரிந்ததாகவும், வேட்டைத் திருவிழாவுக்கு பிள்ளையார் ஆரோகணிக்கும் பெரிய குதிரை வாகனம் வேறு கோயிலிலிருந்து இரவலாக பெற்றுப் பயன்படுத்திய வேளை மீண்டும் அதனை உரியவர்களிடம் திருப்பி கையளிப்பதற்கு தூக்கிய வேளை தூக்க முடியாத அளவு பாரமாக இருந்தது. அதனால் பிள்ளையாருக்கே அதனை உபயம் செய்ததாகவும், ஒரு தடவை திருடர்கள் இணைந்து பிள்ளையாரின் காண்டா மணியைத் திருடிச் சென்ற வேளையில் அதன் பலத்தைப் பிள்ளையார் அதிகரிக்கச் செய்ததோடு, ஊரவர்களுக்கு அறியச் செய்து திருடர்கள் பிடிக்கப்பட்டதாகவும், பிள்ளையாரின் அற்புதங்களை வியந்து பேசுவர். இன்றும் அடியவர்கள் பிள்ளையார் மீது வேண்டுதல் செய்து மோதகம் அவித்து நிவேதனம் செய்வித்து பிரார்த்தனை செய்து தாம் நினைத்த காரியத்தில் அனுகூலம் பெறுகின்றனர்.

பரம்பரை பரம்பரையாக அந்தணர்களால் பரிபாலனம் செய்யப்பட்டு வரும் ஆலயத்துக்கு அடியவர்கள் சகல வகையிலும் பூரண ஒத்துழைப்பை வழங்கி திருப்பணிகளை நிறைவு செய்வதற்கும் ஆலயத்தின் தேவைகளை நிறைவு செய்வதற்கும் தங்களால் இயன்ற அளவுக்கு உதவி செய்து நீர்வேலி வாய்க்காற்ற ரவை மூத்தவிநாயகரின் அருள்பெற்று வாழ்கின்றனர். வலிகாமம் கிழக்குப் பிரிவில் அமைந்துள்ள புராதனமான விநாயகர் ஆலயங்களில் ஒன்றாக விளங்கும் நீர்வேலி வாய்க்காற்றரவை மூத்த விநாயகர் ஆலயம் அற்புதங்கள் நிறைந்து அடியவர்கள் தமது குறைகளைப் போக்கி விரும்பியவற்றை அடைவதற்கு குறித்தபடி நேர்த்தி வைத்து வழிபட்டு விரும்பியதை விரும்பியவாறு அடைகின்ற அருள் நிறைந்த ஆலயமாகும்.

வன்னியில் இருந்து குப்பிளானில் பிரதிஷ்டை செய்வதற்கு எடுத்து வந்த விநாயகப் பெருமான் எவ்வாறு நீர்வேலி மூத்தநயினார் வளவில் தான் விரும்பியபடி ஈசானத்தில் கோயில் கொண்டாரோ அதேபோன்று தன்னை நம்பி நேர்த்தி வைப் பவர்களின் விருப்பங்களையும் நல்லருள் பாலித்து நிறைவு செய்பவர் என்று நம்பப்படுகின்றது. இந்த நம்பிக்கை அன்று தொடக்கம் இன்று வரை நின்று நிலை த்துள்ளது. அந்த வகையில் தற்பொழுது புலம்பெயர்ந்து வாழும் தமிழ் உறவுகளும், உள்நாட்டில் வாழ்வோரும் தமது நேர்த்திகளை நிறைவுசெய்து வருகின்றனர்.

"தமது குறைபாட்டை மற்றும் விருப்பத்தை விநாயகருக்கு விண்ணப்பம் செய்து 15 தினங்கள் தொடர்ந்து வழிபட்டு இறுதிநாள் மோதக பூசை செய்வோர் தொகை தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும், அந்த வகையில் வழிபாடு செய்வோர் இறுதி நாள் தமது விண்ணப்பம் நிறைவேறியதாகக் கூறி மிக்க மகிழ்ச்சியுடன் செல்வதா கவும் தேவஸ்தானத்தின் மூத்த பூசகர் சந்திரசேகரக் குருக்கள் (வயது 82) தெரி வித்தார்.

ஆரம்பத்தில் விநாயகர் சந்நிதானம் மூஷிகம், பலிபீடம், சிறிய உற்சவ விநாயகர் ஆகியவற்றை உள்ளடக்கிய சிறிய கோயிலாக அமைந்திருந்தாலும் ஆகமத்தில் கூறியபடி நித்திய பூஜை விதியில் விதித்த பிரகாரம் நித்திய, நைமித்திய கிரியைகள் நடைபெற்று வந்தன. 1918ஆம் ஆண்டளவில் பழைய சுண்ணாம்பு மற்றும் செங்கல் கொண்ட கட்டடம் புனரமைப்புச் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டு பாலஸ்தாபனம் செய்யப்பட்டு பொதுமக்களின் ஒத்துழைப்பு மற்றும் உதவியுடன் கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மஹாமண்டபம், ஸ்நபன மண்டபம் ஆகியன வெள்ளைக்கல் திருப்பணியாக செய்யப்பட்டு கும்பாபிஷேகம், மண்டலாபிஷேகம் செய்து மஹோா ற்சவம் மாதச் சதுர்த்தி உற்சவங்கள் முதலியன சிறப்பாக நடைபெற்றன. ஆல யத்தில் இருந்த திருத்தேர் பழுதடைந்தமையினால் 1958ஆம் ஆண்டில் புதிய சித்தி ரத்தேர் ஒன்றைச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் அடியவர்கள் மனதில் உதய மானது. புதிய சித்திரத்தேருக்கான பூர்வாங்க ஏற்பாடுகள் செய்யப்பட்ட நிலையில் 1959ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 4ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் தேர்த் திருப்பணிச்சபை ஒன்று உருவாக்கப்பட்டது. புதிய சித்திரத் தேருக்கான திருப் பணி வேலையை வடமாகாண அரச அதிபராக இருந்த ம.ஸ்ரீகாந்தா ஆரம்பித்து வைத்தார். சித்திரத்தேர் திருப்பணிகள் நிறைவடைந்து புதிய தேரில் விநாயகர் ஆரோகணித்த பெருந்திருவிழாவில் தென்னிந்திய நாதஸ்வர மேதை எம்.எஸ். பொன்னுத்தாய் நாதகான மழை பொழிந்தார்.

தேர்முட்டிக்குப் பக்கத்தில் மூல விநாயகருக்கு கோயில் அமைத்து தேர்முட்டி விநாயகர் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளார். தேர்முட்டிக்கு அருகில் தேர்முட்டி காவல் தெய்வமாக வைரவக் கடவுளுக்கு கோயில் அமைக்கும் மரபு பெருவழக்காக இருக்கும் போது தேர்முட்டி காவல் தெய்வமாக மூலவிநாயகருக்கு (தேர்முட்டி விநாயகர்) கோயில் அமைந்திருப்பது தனிப்பட்ட சிறப்பாகும். தேர்முட்டி விநாயகருக்கு தினசரி ஒரு காலப்பூசை நடைபெறும். மகோற்சவ காலத்தில் விசேட சுபமுகூர்த்த வேளையில் தேரடி விநாயகருக்கு விசேட அபிஷேகம் பூசைகள் செய்து உற்சவ விநாயகர் எழுந்தருளி காட்சியளிக்க "தேர்முட்டுப் பொறித்தல்" வைபவம் நடைபெறும். இந்த நடைமுறையும் தனித்துவமான சிறப்புக் கொண்டதாகும்.

ஆலயத்தின் ஈசான மூலையில் திருக்குளமும் விசேட சிற்ப மரபு அலங்காரம் கொண்ட தீர்த்த மண்டபமும் அமைந்திருப்பது நீர்வேலி வாய்க்காற்றரவை மூத்த விநாயகர் ஆலயத்தின் சிறப்பு அம்சங்களில் ஒன்றாகக் கொள்ளப்படுகின்றது. ஆலயத்தின் தலவிருட்சமாக இலுப்பை மரம் உள்ளது. உட்பிரகாரம் மூடுமண்டபமாக அமைந்திருப்பதோடு பரிவார மூர்த்தங்களாக வல்லி தேவசேனா சமேத சுப்பிரமணிய சுவாமி, விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாதர் உள்ளிட்ட தெய்வங்கள் எழுந்தருளச் செய்யப்பட்டுள்ளன. நவக்கிரகங்களும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.

நீர்வேலி மேதர்கேணி பகுதியில் அமைந்திருந்த புராதன சிவன்கோயில் ஒல்லாந்தரால் இடித்தழிக்கப்பட்ட வேளையில் அடியவர்களால் மறைத்து வைக்கப்பட்டிருந்த விக்கிரகம், பிற்காலத்தில் கண்டெடுக்கப்பட்டு ஆலயத்தின் உட்பிரகாரத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இதுவும் தேவஸ்தானத்துக்கு பெருமை சேர்க்கிறது.

1971ஆம் ஆண்டு, 1983ஆம் ஆண்டு, 1994, 2008ஆம் ஆண்டுகளில் ஆலய புனருத்தாரண திருப்பணி வேலைகளை அடுத்து மகாகும்பாபிஷேகம், மண்டலாபிஷேகம் என்பன சிறப்பான முறையில் நடைபெற்றன. "ஆலயத்திருப்பணி வேலைகள் தொடர்பான நிதிநிலை அறிக்கை உரிய முறையில் கணக்காய்வுக்கு உள்ளாக்கப்பட்டு உரிய முறையில் அடியவர்கள் மற்றும் பொதுமக்களின் பார்வைக்கு பகிரங்கமாக வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது. ஆலயத்தின் பரம்பரை உரிமையாளர் ஒருவரும் பொதுமக்கள் சார்பில் ஒருவரும் இணைந்த கூட்டு வங்கிக் கணக்கின் மூலம் ஆலயத்திருப்பணி நிதி கையாளப்பட்டு வருகிறது. ஆலயத்திற்கான கோபுரத் திருத்தப்பணிக்கு விநாயகப் பெருமான் அருள்பாலித்திருப்பதால் ஏழு வாசல் கொண்ட உயரமான கோபுரம் அமைப்பிற்கான

பூர்வாங்க ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக "தேவஸ்தானத்தின் மூத்த பூசகர் சந்திரசேகரக் குருக்கள் தெரிவித்தார். ஆடிமாதம் பௌர்ணமியை தீர்த்தோற்சவமாகக் கொண்டு 12 தினங்கள் வருடாந்த பெருந்திருவிழாவும் நடைபெறுகின்றன. அத்துடன் சதுர்த்தி, ஐப்பசி வெள்ளி, ஆடிப்பூரம், நவராத்திரி, திருவெம்பாவை, பிள்ளையார் கதை, கஜமுகன் போர், தைப்பூசம் உள்ளிட்ட விசேட உற்சவங்கள் நடைபெறுகின்றன. விசேட உற்சவ காலங்களில் விநாயகப் பெருமான் திருவீதி உலாவந்து அடியவர்களுக்கு அருள்பாலிக்கின்றார். ஆலயத்தின் பெருந்திருவிழா மற்றும் விசேட உற்சவ காலங்களில் கூட்டுப்பிரார்த்தனை பஜனை நடைபெறுவதுண்டு. கடந்த 50 வருடங்களுக்கு மேலாக கூட்டுப்பிரார்த்தனை பஜனை நடைபெற்று வருகின்றது. இதில் வயது வேறுபாடின்றி மாணவர்கள் உட்பட அனைவரும் பக்தி சிரத்தையுடன் கலந்துகொண்டு பயன் பெறுகின்றனர்.

உதயன் - 21.09.2012, 28.09.2012



# 49 பலநூறு வருடத் தொன்மை வாய்ந்த புத்தூர் சிவன் கோயில்

**பு**த்தூருக்குப் பெருமை சேர்க்கும் அமைப்புக்கள் பல அதில் புதுமைகள் பல செய்து பலா மரத்தடியில் கோயில் கொண்டு அருள்செய்யும் புத்தூர் ஸ்ரீ விசாலாட்சி அம்பிகா சமேத ஸ்ரீ விசுவநாத சுவாமிகள் தேவஸ்தானமும் (புத்தூர் சிவன் கோயில்) ஒன்று. பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் புத்தூர் சோமஸ்கந்த கல்லூரிக்கு தெற்குப்புறமாகச் செல்லும் வீதியில் பிரதான வீதியில் இருந்து கூப்பிடு தூரத்தில் தெரிவது சிவன் கோயில்.

புத்தூருக்குப் பெருமை சேர்க்கும் அமைப்புக்களில் ஆலயம், பாடசாலை, அன்னசத்திரம் மூன்றும் ஒன்று சேர, குறிப்பிட்ட சுற்றாடலில் அமைந்து ஆன்மீகப் பணி, அறிவுப்பணி, அறப்பணி மூன்றும் நிறைவேற வகை செய்யப்பட்டுள்ளது. இந்த வகையில் மூன்றும் ஒன்றுசேர வகை செய்யப்பட்டிருப்பது யாழ். மாவட்டத்தில் வேறெங்கும் இல்லை எனக் கூறப்படுகின்றது. இந்த வகையில் இது புதிய ஊர்தான். இந்த மூன்று பணியையும் முழுமையாக முன்னெடுப்பதற்கு தனது சொத்துக்கள் முழுவதையும் குறித்த வகையில் தானம் செய்து, அதற்கு உரிய வகையில் தர்ம சாதனம் செய்து "ஈதல் இசைபட வாழ்தல்" என்கிற வள்ளுவர் வாக்குக்கேற்ப வாழ்ந்த பெருந்தகை மழவராயர் கந்தையா.

பிரதான வீதியில் கல்லூரி. கல்லூரிக்கு பின்னால் ஆலயம். கல்லூரிக்கும் ஆலயத்துக்கும் வடக்குப்புறத்தில் சுன்னாகம் வீதியில் அன்னசத்திரம். இந்த மூன்றுக்கும் அவர் தனது சொத்தில் தர்மசாசனம் செய்திருக்கும் உயிலில் ஒவ்வொன்றின் தேவைகள். நிறைவுசெய்ய வேண்டிய பணிகள் குறிப்பிடப்பட்டு அவை நிறைவு செய்யப்பட்ட பின்னர் எஞ்சியவற்றை பரம்பரை உரிமைக்காரர் கையாளலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

புத்தூர் சிவன் கோயிலின் பூர்வீக வரலாறு பற்றி நோக்கும்போது. சோழ மன்னர் காலம் யாழ்ப்பாணத்து ஆரியச்சக்கரவர்த்தியின் காலம் என்பனவற்றுடன் தொடர்பு கொண்டது. பல நூறு வருடங்களுக்கு முந்தியது என்பது கருத்தில் கொள்ளப்படுகின்றது. யாழ்ப்பாணத்தை முற்றுகையிட்டு இந்துக் கோயில்களை இடித்தழித்து தேவாலயங்களை நிறுவுவதற்கும். கத்தோலிக்க சமயத்தைப் பரப்புவதற்கும் ஏற்பாடு செய்ததோடு தமது ஆட்சி அதிகாரத்தை நிலைநாட்டத் தலைப்பட்ட போர்த்துக்கேயர் புத்தூரில் மூன்று தினங்கள் தங்கியிருந்து ஆலயங்களை இடித்தழித்ததோடு தமது ஆட்சி அதிகாரத்தை உறுதிப்படுத்தும் முன்னெடுப்புக்களை மேற்கொண்ட பின்னர் புத்தூரில் இருந்து கிழக்கே திரும்பி சாவகச்சேரிக்குச் சென்றதாக கூறப்படுகின்றது. அந்த வகையில் புத்தூரில் அமைந்திருந்த சிவன் கோயிலும் 1650 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் ஆட்சிசெய்தவர்களின் சரித்திரப் பிரசித்தி பெற்ற கோயில் புத்தூரில் தற்போதைய சிவன் கோயில் அமைந்துள்ள இடத்தில் அமைந்திருந்தது. அதற்கும் வற்றா நீர் ஊற்றுக்கும் இடையே நெருக்கமான தொடர்பு இருந்தது. தற்போதைய ஆலயத்துக்கும் நிலாவரை வற்றா நீர் ஊற்றுக்கும் இடையே உள்ள தூரம் ஒரு கிலோ மீற்றருக்கு உட்பட்டது. தற்போதைய ஆலயத்தினதும் பூர்வீக ஆலயத்தினதும் தீர்த்தமாக. நிலாவரை நீர் ஊற்றே பயன்படுத்தப்பட்டது.

பூர்வீக ஆலயம் போர்த்துக்கேயரால் இடித்தழிக்கப்பட்டதை அடுத்து குறித்த இடம் பற்றைகளால் மூடப்பட்டு மக்கள் பாவனை இல்லாமல் இருந்த காலவேளையில் ஊர்மக்கள் தமது கால்நடைகளை கட்டி மேயவிட்டு வந்தனர். அந்தக் காலப்பகுதியில் வேளாண்மைத் தொழிலின் பொருட்டு அதிகமான மாடுகளை வளர்த்து வந்தவர் சைவப்பாரம்பரியம்மிக்க வீரகத்திசிதம்பரநாதன். அவரது மாடுகளை மேய்த்து வந்த சிறுவன் ஒருவன். மாடுகளை மேய்த்துக் கொண்டு நின்ற மாலை வேளையில் ஒரு நாள் "ஒரு கிழவி பொல்லு ஊன்றியபடி அந்தப் பிரப்பம் பற்றைக்குள்ளே சென்று மறைந்ததைக் கண்டான். அங்கு தான் கண்டவற்றை அன்றே சிதம்பரநாதரிடம் தெளிவாக கூறினான். சிறுவன் கூறியதைக் கேட்டு மனம் நொந்த சிதம்பரநாதர் வியந்து அந்தத் திசையை நோக்கி வழிபட்டு கண்ணீர் மல்கிய வண்ணம் வீடு சென்றார். அன்று இரவு சிதம்பரநாதரின் கனவில் தோன்றிய கிழவி பிரப்பம்

பற்றைக்குள்ளே பலாமரம் ஒன்று முளைத்து வருகின்றது. அதில் என்னை ஆதரி எனக்கூறியதைக்கேட்டுவியந்தசிதம்பரநாதர்எம்மைஎல்லாம்ஆளும்உமையம்மனே எனத் தெரிந்து கொண்டு ஊர் பொதுமக்களை எல்லாம் கூட்டி பற்றைகளை வெட்டி பலாமரத்தைக் கண்டு தெளிவு கொண்டு குறித்த இடத்தில் சிறு கொட்டிலால் கோயில் அமைத்து வழிபட்டார்.

கோயில் அமைக்க சூழ உள்ள பிரப்பம் பற்றைகளை வெட்டித் துப்பரவு செய்த வேளையில் போர்த்துக்கீசரால் இடித்தழிக்கப்பட்ட பழைய கோயிலின் இடிபாடுகளைக் கண்டு வியப்புற்றனர். இறையருளை வியந்து போற்றினர். இது நடந்தது 1680 ஆம் ஆண்டு காலப்பகுதி எனக் கூறப்படுகின்றது. இந்த இடத்திலேயே கனாக்கண்டு ஸ்தாபிதம் செய்யப்பட்டது அம்பாள் ஆலயம். இந்த கோயில் அமைந்த நிலம் "பத்தினி சீமா" என அழைக்கப்பட்டது. கோயிலை ஊர் மக்கள் ஒன்று கூடி விசாலமாக்கி, போர்த்துக்கீசர் இடித்தழிப்பதற்கு முன்னர் இருந்த வகையில் ஆலயம் ஒன்றை அமைப்பதற்குத் தலைப்பட்டனர். அதனை ஏற்றுக்கொண்ட மக்கள் கோயிலைச் சூழவுள்ள அயலில் உள்ள காணிகளை, கோயிலுக்கு மனப்பூர்வமாக வழங்குவதற்கு முன்வந்தனர். இந்த வகையில் 55 பரப்பு நிலம் கோயிலைச் சூழ நன்கொடையாக வழங்கப்பட்டது. 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் கோயிலை விசாலமாக்கும் ஆர்வம் அடியவர்கள் மத்தியில் மேலிடத் தொடங்கியது. மேலும் சில விக்கிரகங்களை கோயிலில் வைத்து பூசை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டு அதற்கமைய சிவன், விசாலாட்சி அம்பாள், விநாயகர், வைரவர் விக்கிரகங்களையும் பிரதிஷ்டை செய்து பலாவடி அம்பாளுக்கு அலங்காரத் திருவிழா நடத்தப்பட்டது. திருவிழாவின் இறுதிநாள் தீர்த்தத்திருவிழா நடைபெற்றது. அம்பாளை நிலாவரை நீர் ஊற்றுக்கு எழுந்தருளச் செய்து அங்கு தீர்த்தமாடி அங்கு அடியவர்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்ட பின்னர் கரகம், காவடி, ஆட்டங் களுடன் கோயிலுக்கு திரும்புவது வழமையாக இருந்து வந்தது. ஊரே கூடி திருவிழாவில் கலந்துகொண்டு அம்பாளின் அருளை பெற்றுக்கொள்வதும் திருவிழாவில் கலந்துகொள்வதும் பெரும் பேறாக கருதப்பட்டது.

1870ம் ஆண்டு கோயிலை புனருத்தாரணம் செய்து சிவன்கோயிலாக புனரமைப்பு செய்து திருப்பணியை மேற்கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் மேலிடத் தொடங்கியதை அடுத்து 1876 - 1877ஆம் ஆண்டு காலப்பகுதியில் பூதத்தம்பி சிற்றம்பலம் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட திருப்பணிகளின் போது கோயில் கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகா மண்டபம், தர்சன மண்டப திருப்பணிகள் ஊர் பொதுமக்களின் பூரண ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்டன.

காலத்தால் முந்திய வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயங்களில் ஒன்றாகக் கருதப் படும் புத்தூர் சிவன் கோயில் பற்றிய சிறப்புகள் ஸ்ரீ தஷிண கைலாச புராண நவசைப் படலத்தில் விதந்துரைக்கப்படுகின்றது. "புத்தூரில் உள்ள சிவன் கோயில் பற்றியும், அதன் தீர்த்தக் கேணி பற்றியும், ஆலயத்தின் பயன்பாட்டுக்கு அமைக்கப்பட்டிருந்த நந்தவனம் பற்றியும் பல இடங்களிலும் உள்ள அடியவர்கள் ஆலயத்தை வழிபட்டு பேறு பெற்றது பற்றியும் கூறப்படுகின்றது.

இதன் தீர்த்தக்கேணி நிலாவரை வற்றா நீர் ஊற்று. போர்த்துக்கேய மொழியில் எழுதப்பட்ட வரலாற்று நூல்களில் அச்சுவேலிக்கு தெற்கே புத்தூரில் உள்ள இரண்டு பிரசித்தி பெற்ற ஆலயங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. அதில் ஒன்று புத்தூர் சிவன் கோயில் என்றும் மற்றையது புத்தூர் காரைக்கூடல் வைரவர் கோயில் என்றும் கூறப்படுகின்றது. இதனை வரலாற்றுத் துறை பேராசிரியர் ப. புஷ்பரத்தினமும் தனது தொல்பொருள் ஆய்வுகள் மூலம் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

"யாழ்ப்பாணத்து அரசன் சங்கிலியனுடன் நடைபெற்ற போரில் போர்த்துக்கேயர் வெற்றியடைந்ததை அடுத்து சங்கிலியனுக்கு உதவிபுரிவதற்கு தென்னிந்திய நாயக்கவம்சப் படைகள் கடல் கடந்து வடமராட்சி ஊடாக புத்தூர் நோக்கி வந்ததாக வும், அப்போது போர்த்துக்கேயப் படைகள் புத்தூரில் உள்ள இரண்டு ஆலயங்களை யும் தமது பாதுகாப்பு அரண்களாக வைத்துக் கொண்டு நாயக்க வம்ச படைகளுடன் பெரும் சண்டையில் ஈடுபட்டதாகவும் சில தினங்கள் போர்த்துக்கேயப் படைகள் நடத்திய சண்டையில் நூற்றுக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டதாகவும், போர்த்துக்கேய ரால் பெருமளவு போர் தளபாடங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் 1621 காலப்பகுதியில் இது நடந்ததாகவும்" கூறப்படுகின்றது.

வீரகத்தி சிதம்பரநாதர் பற்றைகளை வெட்டி பலா மரத்தடியில் அம்மனுக்கு ஓலையால்ஆலயம் அமைத்த வேளையில்காணப்பட்ட கட்டட இடிபாடுகள்போர்த்துக்கே யரால் இடித்தழிக்கப்பட்ட ஆலயத்தின் இடிபாடுகளே என்றும் இந்தவகையில் ஆரம்பகால புராதன ஆலயம் கல்லால் கட்டுமானம் செய்யப்பட்ட ஆலயமாக இருந்தது. அதனை போர்த்துக்கேயர் தளமாகப் பயன்படுத்தி நாயக்க வம்சப் படைகளுடன் சண்டையிட்டனர் என்பதும் வரலாற்று ரீதியாக ஏற்றுக்கொள்ளப்படுவனவாகும். 1876-1877 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மீண்டும் கல்லால் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பூதத்தம்பி சிற்றம்பலம் தலைமையில் திருப்பணிகள் நடைபெற்றதை அடுத்து விசேட பூசை வழிபாடுகளுடன் ஆண்டுதோறும் அலங்கார உற்சவம் பக்திபூர்வமாக நடைபெற்றதாகவும் அதை அடுத்து சிவன், விசாலாட்சி அம்பாள், விநாயகர், வைரவர் முதலிய விக்கிரகங்களையும் பிரதிட்டை செய்து

ஆலயத்திருப்பணி மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் மூல மூர்த்தமாக ஸ்ரீ விசுவநாதப் பெருமானும், ஸ்ரீ விசாலாட்சி அம்பாள் உள்ளடங்கிய ஸ்ரீ விசாலாட்சி உடனமைந்த ஸ்ரீ விஸ்வநாதசுவாமி தேவஸ்தானமாக (சிவன் கோயிலாக) உருப்பெற்றது.

1896ஆம் ஆண்டு ஆறுமுகம் பூதத்தம்பி கோயிலுக்கான புதிய தீர்த்தக்கேணியை ஆலயத்தின் சுற்றுப் பிரகாரத்தில் நிர்மாணித்து பொழிகல்லால் படிகள் அமைத்து திருக்குளத்தை பராமரிப்பதற்கு சில காணிகளையும் வழங்கியுள்ளார். அவரின் உபயமாக தற்பொழுதும் ஆடிப்பூர தீர்த்தவிழா நடைபெற்று வருகின்றது.

1901ஆம் ஆண்டு சிற்றம்பலம் மழவராயரால் ஆலயம் பொறுப்பேற்கப்பட்டு நித்திய, நைமித்தியக் கிரியைகள் ஒழுங்காக நடைபெறத் தொடங்கின. 1903ஆம் ஆண்டு ஆலயத்தில் திருப்பணி வேலைகள் மீண்டும் ஆரம்பமாகின. 1911ஆம் ஆண்டு சித்திரை மாதம் பூர்வ பட்ச சதய நட்சத்திரத்தில் முதலாவது திருக்குடமுழுக்கு பெருவிழா நடைபெற்றது. 1911ஆம் ஆண்டு அருணாசலம் கனகசபையால் அசையா மணிக்கோபுரம் அமைக்கப்பட்டு அசையாப் பெருமணி ஒலிக்கத் தொடங்கியது.

சிற்றம்பலம் மழவராயர் ஆலயத்தை பரிபாலனம் செய்த காலப்பகுதியில் அவரது மகன் கந்தையா தந்தைக்கு உதவியாக இருந்து ஆலயப் பணிகளை மேற்கொண்டு வந்ததோடு, பின்னர் ஆலயத்தைப் பொறுப்பேற்று பெருமளவு காணிகளையும் சொத்துக்களையும் ஆலயத்துக்கு தர்மசாசனம் செய்ததோடு, ஆலயத்தோடு இணைந்த சூழலில் பாடசாலையையும் நிறுவினார். அத்துடன் ஆலயம் - பாடசாலைக்கு வடக்குப் புறமாக புத்தூர் சுன்னாகம் வீதியில் அன்ன சத்திரம், தங்குமிடம் என்பன வற்றையும் நிறுவி ஆன்மீகம், அறிவுப் பணி, அறப்பணி மூன்றையும் ஒன்று சேர மேற்கொண்டார்.


சிற்றம்பலம் மழவராயர் 1912ஆம் ஆண்டில் தனது சொத்தில், பத்தில் ஒரு பங்கை ஆலயத்துக்கு தர்மசாசனம் செய்து உயில் எழுதப்பட்டதை அடுத்து மழவராயர் கந்தையா 1934ஆம் ஆண்டும் பெருமளவில் காணிகள் மற்றும் சொத்துக்கள் தர்மசாதனம் செய்யப்பட்டு ஆலயத்தின் எந்த வகையான தேவைகளுக்கும் உற்சவங் களுக்கும் அவற்றில் இருந்து வரும் வருமானம் செலவுசெய்யப்படவேண்டும் என விவரித்துக் கூறப்பட்டுள்ளது.

ஆலயத்துக்கு தர்மசாசனம் செய்யப்பட்டுள்ள காணிகள் யாழ்.குடாநாட்டின் பல்வேறு பகுதியிலும் அமைந்திருப்பதால், நிலமானிய முறையில் ஆலயத்தின் தேவைகள் நிர்வகிக்கப்படுவதோடு வருமானமும் ஆலயத்தின் தேவைக்கு உரிய முறையில் பயன்படுத்தப்படுகின்றது.

ஆலயத்தின் திருக்குடமுழுக்கு பெருவிழாக்கள் 1989ஆம் ஆண்டு, 1999 ஆம் ஆண்டுகளில் நடைபெற்றது. அண்மையில் 2008ஆம் ஆண்டு திருக்குடமுழுக்கு பெருவிழா நடைபெற்றது. ஆலயத்தில் சிவன் திருவிழா, அம்மன் திருவிழா என ஆண்டுதோறும் இரண்டு வகையான திருவிழாக்கள் நடைபெறுகின்றன. சிவன் திருவிழா ஆண்டுதோறும் ஆனி உத்தரத்தை தீர்த்தமாகக் கொண்டு 10 தினங்களும் அம்மன் திருவிழா ஆடிப்பூரத்தை தீர்த்தமாகக் கொண்டு 10 தினங்களும் நடைபெற்று வருகின்றன. அத்துடன் 12 மாதமும் பௌர்ணமி உற்சவம், தைப்பூசம், மாசிமகம், பங்குனி உத்தரம், வைகாசி விசாகம், சித்திரை வருடப்பிறப்பு, புரட்டாசிச் சனி, ஐப்பசி வெள்ளி, மார்கழி திருவெம்பாவை உற்சவங்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

ஆலயத்தின் தற்போதைய நிர்வாகம் மழவராயர் கந்தையாவின் பரம்பரை வழித்தோன்றலும் ஆலய உரிமையாளருமான ஸ்ரீ தேவசேனாவின் கணவன் த.விசுவலிங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆலயத்தின் திருப்பணிகள் மற்றும் கருமங்கள் தொடர்பான ஆலோசனைகளை வழங்குவதற்கு ஆலோசனைச் சபை ஒன்றும் பெயரளவில் உள்ளது.

உதயன் - 22.03.2012, 29.03.2012



# 50 வடக்கிலங்கை காசியாக போற்றப்படும் ஆவரங்கால் நடராச இராமலிங்கசுவாமி ஆலயம்

**வ**லி.கிழக்கில் அமைந்துள்ள சிவன் கோயில்களில் வரலாற்றுத் தொன்மையும் அருள்வியாபகமும் மிக்கதாக விளங்கும் ஆவரங்கால் "ஸ்ரீ பர்வதவர்த்தனி சமேத நடராச ராமலிங்கசுவாமிகள் ஆலயம்" யாழ்ப்பாணம், பருத்தித்துறை நெடுஞ்சாலையில் ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபத்துக்கு முன்னால் வீதிக்கு கிழக்கு பக்கத்தில் அமைந்துள்ளது. இலங்கை போர்த்துக்கேயரின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகி சைவ ஆலயங்கள் இடித்தழிக்கப்பட்ட காலப்பகுதியில் ஆக்கிரமிப்பாளர்களின் அழிப்புக்கு உள்ளாகாமல் அருள்பாலித்துக் கொண்டிருந்தது. டச்சுக்காரர் தோம்பு எழுதிய காலப்பகுதியிலேயே நடராஜ ராமலிங்கசுவாமி பேரில் "பல்வினையான் கொய்யாவளை நெற்பரப்பு நூறு" என்று சொல்லும் தோம்புக் காணி உடையவராக விளங்குவது குறித்த தோம்பு காணியிலேயே ஆலயமும் அந்தணர் இருக்கையும் அமைந்திருந்தன.

காசி விசாலாட்சியம்மை சமேத விசுவநாதப் பெருமானும் பர்வதவர்த்தனியம்மை சமேத ராமலிங்கேஸ்வரப் பெருமானும் ஒருங்கிணைத்திருப்பது போன்ற சிறப்புடைய தலம் இங்கு எழுந்தருளியிருக்கும் பெருமான் பர்வதவர்த்தனியம்மை சமேத நடராச ராமலிங்கப் பெருமான் இந்த நாம சம்பந்தத்தாலே தரிசிக்க முத்தி தரும் தலமாகிய

சிதம்பரத்து நடராசப் பெருமானும் இம் மூர்த்திகளுடன் சேர்ந்து கொண்டார். எனவே இராமேஸ்வரம், சிதம்பரம், காசி ஆகிய மூன்று சிறந்த தலங்களிலும் உள்ள மூர்த்திகள் மூவரும் சங்கமமாகிய ஒரு மூர்த்தியாய் எழுந்தருளியிருக்கும் மூர்த்தி விசேடமும் தல விசேடமும் ஆலயச் சூழலெங்கும் உவர் நீரே இருக்க கோயிலின் தீர்த்தக் கேணியும் ஆலயத்தில் அமைந்திருக்கும் கிணறும் அமிர்தம் போன்ற அதிமதுர நன்நீராக அமைந்திருப்பதால் தீர்த்த விசேடமும் கொண்ட திருத்தலமாக விளங்குகின்றது. ஆவரங்காலில் வாழ்ந்து இறைபதம் அடைந்த ஆச்சிமுத்து அம்மா என்ற சன்னாசியம்மா துறவு பூண்டு காசிக்குச் சென்று தரிசனம் செய்து கொண்டிருந்தபோது காசிநாதப் பெருமான் அவர் கனவிலே தோன்றி "ஆவரங் காலிலே தெருவிற் காசி இருக்கின்றது. அங்கே நாம் வீற்றிருக்கின்றோம். அங்கே போயிருந்து எனக்குத் தொண்டு புரிந்து வருக" என்று கட்டளையிட்டாராம். அதனால் அம்மையார் இங்கு வந்து கோயிலுக்கு அண்மையில் திருநந்தவனமும், திருமடமும், திருக்கிணறும் அமைத்து நீண்ட காலம் இருந்து தொண்டாற்றி வந்தார்.

ஆவரங்கால் வாழ் இராமநாத உடையாரால் காசியில் இருந்து கொண்டுவரப்பட்டு ஆலயம் அமைக்கப்பட்டு தாபிக்கப்பட்ட நடராச ராமலிங்க சுவாமிக்குப் பூசை, அர்ச்சனை செய்வதற்கு காசியில் இருந்து கங்காபட்டர் குடி அந்தணர்கள் அழைத்துவரப்பட்டு நித்திய, நைமித்திய பூசை வழிபாடுகள் செய்யப்பட்டன. ஆலயச் சூழலில் அந்தணர்கள் குடியிருந்து கிரியைகளை மேற்கொண்டனர். "ஆவரங்கால் நடராசராமலிங்கசுவாமி ஆலயத்தின் அமைவிடத்துக்கு உள்ள சிறப்பு இலங்கையின் வேறு எந்த சிவன் கோயிலுக்கும் இல்லை. காசிக்கும் சுடுகாட்டுக்கும் எவ்வளவு நெருக்கமான தொடர்பும் சிறப்பும் உள்ளதோ அத்தகைய சிறப்பு இங்கேயும் உண்டு. ஆலயத்தின் மூலஸ்தானம் சுடுகாட்டை (சுடலையை) நோக்கிய வண்ணம் உள்ளது. ஆலயத்துக்கு அண்மித்த தூரத்தில் எந்தவிதமான மறைப்பும் இல்லாமல் ஆவரங்கால் இந்து மயானம் உள்ளது" என ஆலயத்தின் பிரதம குரு வேதக்குட்டிக் குருக்கள் நடராஜக் குருக்கள் தெரிவித்தார்.

ஆலயத்தின் பதிவிலக்கம் HA/5/JA-82 ஆலயத்துக்கு உரிய நிலமாக 96 பரப்புக் காணி ஆலயத்தோடு இணைந்த நிலையில் உள்ளது. ஆலயம் தொடர்பாக யாழ்.மாவட்ட நீதிமன்றத்தின் 1964ஆம் ஆண்டு I - 20ஆம் இலக்க வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் 43பேர் உரிமையாளர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த உரிமையாளர்களின் சம்மதத்துடன் தெரிவுசெய்யப்பட்ட 5பேர் கொண்ட ஆலய தர்மபரிபாலன சபை ஆலயத்தை நிர்வகித்து வருகின்றது. முதலாவது தர்ம பரிபாலன சபையில் கந்தையா சின்னத்தம்பி - தலைவர், அம்பலவாணர் தில்லைநாதன் - செயலாளர், தர்மலிங்கம் கனகசபை - பொருளாளர், சரவணமுத்து

சுப்பிரமணியம் - உறுப்பினர். தம்பிராசா துரைராஜசிங்கம் - உறுப்பினர் 1977ஆம் ஆண்டு தலைவராக சரவணமுத்து சோமசுந்தரம் தெரிவுசெய்யப்பட்டார். தற்பொழுது ஆலய தர்மபரிபாலன சபையின் தலைவராக அ. தில்லைநாதனும், செயலாளராக க. இராசதுரையும், பொருளாளராக நீ. மயில்வாகனமும் செயற்பட்டு வருகின்றனர்.

காலத்துக்குக் காலம் ஆலயத்தின் திருப்பணி தொடர்பான கருமங்களை மேற்கொள்வதற்கு தெரிவுசெய்யப்படும் திருப்பணிச் சபைகளில் தருமபரிபாலன சபையில் இடம்பெற்றுள்ள ஐந்து பேரும் உள்ளடக்கப்படுவதோடு, தலைவர் பதவியும் மற்றும் முக்கியமான நிர்வாக பதவியையும் தருமபரிபாலன சபைக்கு வழங்குவதன் மூலம் ஆலயத்தின் திருப்பணி வேலைகள் உரியமுறையில் நிறைவு பெற்று வருகின்றன. ஆலயத்தின் முழுமையான திருப்பணி வேலைத்திட்டங்களை திருப்பணிச்சபையினரும் தர்மபரிபாலன சபையினரும் இணைந்த நிலையில் மேற்கொண்டு வருகின்றனர்.

சுண்ணாம்புக் கலவையினால் நிர்மாணிக்கப்பட்ட ஆரம்பகால ஆலயம் இடிபாடுகளுக்கு உட்பட்டு சேதமடைந்த நிலையில் இருந்தமையினால் ஆலயத்தை முழுமையாகப் புனரமைப்புச் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இந்த வகையில் முதலாவது திருப்பணிச் சபை 1977ஆம் ஆண்டு தெரிவுசெய்யப்பட்டது. விதானையார் ச. சோமசுந்தரம் தலைமையில் செயற்பட்ட இத்திருப்பணிச்சபையில் க. சின்னத்துரை - செயலாளர் ஆ.கா.பஞ்சாட்சரம் - பொருளாளர் மற்றும் 27 உறுப்பினர்களும் கொண்டு திருப்பணிச்சபை உள்ளூர், அயலூர் அடியவர்களின் நிதி உதவியுடனும் புலம்பெயர்ந்து வாழும் உறவுகளின் நிதி உதவியுடனும் ஆலயம் முழுமையான புனருத்தாரணம் செய்யப்பட்டு புதுக்கோயிலாக 1982ஆம் ஆண்டு மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. புதிய சித்திரத்தேர் செய்வதற்காக இரண்டாவது திருப்பணிச்சபை தெரிவுசெய்யப்பட்டு விதானையார் ச. சோமசுந்தரம் தலைமையில் செயற்பட்டு 20 லட்சம் ரூபா செலவில் புதிய சித்திரத்தேர் செய்யப்பட்டு 27.06.1995ஆம் திகதி வெள்ளோட்டம் விடப்பட்டது.

1995 இடப்பெயர்வை அடுத்து சேதமடைந்த ஆலயம் மற்றும் தேர்க்கொட்டகை என்பன திருத்தி அமைக்கப்பட்டு 26.06.1998இல் மகாகும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இராஜகோபுரம் அமைப்பதற்கு 2003ஆம் ஆண்டு அடித்தளம் இடப்பட்டு 60 லட்சம் ரூபா செலவில் அழகான மிக உயரமான 7 வாசல் கொண்ட இராஜகோபுரம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. ஆலயத்தின் மகா மண்டபத்தை முற்றாக மாற்றி வில்லு மண்டபம் அமைப்பதற்கான ஆரம்ப திருப்பணி வேலை 2009ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, 65லட்சம் ரூபா உத்தேச செலவில் நிர்மாணப்பணிகள் நடைபெற்று

வருகின்றன. அத்துடன் ஆலயத்தின் உட்பிரகாரத்திலும் திருப்பணி வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தினசரி மூன்று கால நித்திய பூசை நடைபெறுவதுடன் சிவன் திருவிழா ஆனி உத்தரத்தில் தீர்த்தோற்சவம் நடைபெறக்கூடிய வகையில் 10 தினங்கள் நடைபெறு கின்றன. அம்மன் வாசல் திருவிழா ஆடிப்பூரத்தில் தீர்த்தத் திருவிழா நடைபெறக் கூடியதாக 10 தினங்கள் நடைபெறுகின்றன. விசேடமாக இந்துத் தெய்வங்களுக்கான உற்சவங்களான திருவெம்பாவை, கந்தசஷ்டி, நவராத்திரி, சிவராத்திரி, பெருங்கதை, கௌரிகாப்பு, வரலட்சுமி, நாயன்மார் குருபூஜை உள்ளிட்ட 72 உற்சவங்கள் ஆண்டுதோறும் சிறப்பாக நடைபெறுகின்றன. சிறப்பாக கிரகதோஷ நிவர்த்திக்கு புகழ்பெற்ற ஆலயமாகவும் இருப்பதால் யாழ்.குடாநாட்டின் சகல பகுதியில் இருந்தும் அடியார்கள் வந்து வழிபடுவது உண்டு. ஆலயத்தின் பூர்வீக பூசகர்களான காசி கங்கா பட்டர் வழிவந்த பூசகர் சந்ததியை சேர்ந்த பிரதிஷ்டாவித்தகர் வேதக்குட்டி நடராஜக் குருக்களும் அவரது ஏக புத்திரன் ந. யோகானந்தேஸ்வரக் குருக்களும் ஆலயக் கிரியைகளை சிறப்பாக மேற்கொண்டு வருகின்றனர். ஆலயமும் ஆலயத்தின் மேற்திசையில் சிவசக்தி மணிமண்டபமும் அழகுற அமைந்து வலி.கிழக்குக்கு அணி செய்கின்றன.

உதயன் - 02.10.2010, 09.10.2010



# 51 500 வருடங்கள் பழைமையான புத்தூர் காரைக்கூடல் வைரவர்

யாழ்ப்பாணத்தின் புராதன வரலாற்றுச் சிறப்புமிக்க கிராமங்களில் புத்தூர் சிறப்பிடம் பெறுகின்றது. கர்ணபரம்பரை கதைகளிலும், புராணக் கதைகளிலும் புத்தூர் இடம்பெறுவதோடு வரலாற்று தொல்லியல் தடயங்களையும் கொண்டது. வற்றாத நிலாவரை ஆழ்கிணறு, நவசைலேஸ்வரம் புத்தூர் சிவன்கோயில், காரைக்கூடல் வைரவர் கோயில் ஆகியன பூர்வீக வரலாறு கொண்டவை.

யாழ்ப்பாணம், பருத்தித்துறை நெடுஞ்சாலையில் புத்தூர் வாதரவத்தை வீதி சந்திக்கு மேற்குப்பக்கத்தில் காரைக்கூடல் வைரவர் கோயில் அமைந்துள்ளது. வரலாற்று சிறப்புமிக்க ஆலயங்களில் ஒன்றாக விளங்குவதோடு காலத்தால் மூத்த ஆலயமாகவும் விளங்குகிறது.

சிவனின் 64 மூர்த்தங்களில் 38ஆவது மூர்த்தமாகக் கொள்ளப்படும் வைரவர் மூர்த்தம் அகங்காரத்தை சங்காரம் செய்வதற்காக தோற்றம் பெற்றது. வைரவர் காவல்தெய்வமாகவும் குலதெய்வமாகவும் நம்பியவர்களுக்கு வேண்டுவதை வழங்கும் தெய்வமாகவும் கொள்ளப்படுபவர்.

வைரவரை வழிபடுபவர்கள் தமது விருப்பத்துக்கு ஏற்ப வீடுவளவுகளில் மரங்களின் கீழ் விரும்பிய வடிவத்தில் பிரதிஷ்டை செய்து வழிபடுவதைக் கண்டுகொள்ளலாம். வைரவர் மூர்த்தம் இலகுவான வழிபாட்டுக்கும் கிராமிய வழிபாட்டுக்கும் ஏற்றதாக கொள்ளப்படுகின்றது.

புத்தூர் காரைக்கூடல் வைரவரின் சிறப்பு யாழ்ப்பாணத்து ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்து ஆலயங்கள் பற்றிக்கூறும் ஸ்ரீதஷிணகைலாச புராண நவசையப் படலத்தில் கூறப்பட்டுள்ளது. போர்த்துக்கீச மொழியில் எழுதப்பட்டுள்ள வரலாற்று நூல்களில் அச்சுவேலிக்கு தெற்கே புத்தூரில் 16ஆம் நூற்றாண்டு காலப்பகுதியிலிருந்த இரண்டு சைவ ஆலயங்கள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் முதலாவது ஆலயம் சிறியது. அதற்கு தெற்கே அமைந்தது பெரியது. சிறிய ஆலயம் காரைக்கூடல் வைரவர் கோயில். பெரிய ஆலயம் புத்தூர் சிவன் கோயில்.

1621இல் யாழ்ப்பாணத்து அரசன் சங்கிலியனுடன் நடந்த போரில் போர்த்துக்கீசர் வெற்றியடைந்தமையால், சங்கிலிய மன்னனுக்கு உதவிபுரியும் நோக்கில் தென்னிந்திய நாயக்க வம்ச படைகள் வடமராட்சியில் தரையிறங்கினர்.

அங்கிருந்து புத்தூர் நோக்கி வந்ததாகவும். அப்போது போர்த்துக்கேயப் படைகள் புத்தூரில் உள்ள இரண்டு ஆலயங்களை தமது பாதுகாப்பு அரண்களாக பயன்படுத்தி போர் புரிந்ததாகவும் சிறிய கோயிலுக்கு முன்பாக (காரைக்கூடல் வைரவர் கோயில்) நடைபெற்ற போரில் நூற்றுக்கணக்கான போர்வீரர்கள் கொல்லப்பட்டனர் என்றும் கூறப்படுகிறது.

அதன்பின்னர் போர்த்துக்கீசப் படைகள் சாவகச்சேரியை நோக்கிச் சென்றதாகவும் தென்னிந்தியாவில் இருந்து மேலும் படையெடுப்பு மேற்கொள்ளப்படலாம் எனக் கருதி போர்த்துக்கீசர் தமது படைத்தளத்தை புத்தூரில் உள்ள கோயில்களில் நிறுவி தங்கியிருந்ததாகவும் கூறப்படுகின்றது. இதனை வரலாற்று பேராசிரியர்களின் கூற்றுக்கள் உறுதி செய்கின்றன. அரச மரமும், காரையும் ஒன்றிணைந்து ஓங்கி உயர்ந்து பின்னிப் பிணைந்து வளர்ந்திருந்த கூடலில் உயரமான கற்களால் மேடை அமைத்து மரத்தின் கீழ் வைரவரை பிரதிஷ்டை செய்து சூலத்தை வைத்து பூர்வீகமாக வழிபட்டு வந்தால் காரைக்கூடல் வைரவர் என அழைக்கப்பட்டு வருகின்றது.

மூலஸ்தானத்தோடு இணைந்த நிலையில் அரச மரமும், காரை மரமும் இணைந்து ஒன்றை ஒன்று சுற்றி வளர்ந்திருப்பதையும். அத்துடன் வேப்பமரமும் இருப்பதையும் இன்றும் காணக்கூடியதாக உள்ளது. தலவிருட்சங்களாக அவை போற்றப்படுகின்றன. காரைக்கூடல் மரங்களைச் சுற்றி பக்திபூர்வமாக மக்கள் ஆடியும்

பாடியும் அகமகிழ்ந்து வைரவரை வழிபட்டனர். காவல்தெய்வத்துக்கு நெல்லரிசிப் பொங்கல் செய்து படையல் ஆக்கியும் பூக்களால் அர்ச்சித்தும் தமது மனக்குறையை வைரவருக்குச் சமர்ப்பித்து அழுது புலம்பி கூத்தாடி மகிழ்ந்தனர். ஆலயத்தில் பூர்வீக தர்மகர்த்தாக்கள் குடியிருந்த "இராக்கால் குடியிருப்புக்கும்" காரைக்கூடல் கோயிலுக்கும் நெருங்கிய தொடர்புண்டு.

வரலாற்றுச் சிறப்புமிக்கதும் காலத்தால் தொன்மையானதுமான புத்தூர்க் காரைக்கூடல் ஸ்ரீ வைரவர் ஆலயம், யாழ் மாவட்டத்தில் மட்டுமல்ல ஈழத்தில் உள்ள புராதன ஆலயங்களில்ஒன்று. வரலாற்றுநிகழ்வுகளோடு தொடர்புகொண்டுதனித்துவத் தோடு விளங்கும் இது யாழ்ப்பாண தமிழரசு கோலோச்சிய காலத்தில் சிறந்த வழிபாட்டிடங்களில் ஒன்றாக விளங்கியது.


ஆலமரமும் காரை மரமும் ஒன்றோடு ஒன்று பிணைந்து ஓங்கி உயர்ந்து வளர்ந்து இயற்கைச் சூழலில் கல்லால் உயர் பீடம் அமைத்து அதில் வைரவரை பிரதிஷ்டை செய்து மக்கள் வைரவரை தமது குல தெய்வமாகவும் காவல் தெய்வமாக வும் வழிபட்டனர். காரை வைரவரை வேண்டுவதை நல்விருப்போடு வேண்டி யோருககு அருளுவதோடு அடியவர்களுக்குக் காட்சி கொடுத்தும் நள்ளிரவில் நடமாடும் ஒலி எழுப்பியும் நாயோடு நடமாடியும் அற்புதங்கள் மூலம் அருளாட்சி புரிகின்றார்.

அன்னியர் ஆட்சிக்காலத்தில் சைவாலயங்கள் இடித்து அளிக்கப்பட்டதோடு அதன் அழிபாடுகள் அன்னியரின் கோட்டை - கொத்தள கட்டுமானங்களுக்கும் கிறிஸ்தவ தேவாலயங்களுக்கும் பயன்படுத்தப்பட்டன. அந்தவகையில் காரைக் கூடல் வைரவரின் பூர்வீக ஆலயம் அழிக்கப்பட்ட போதிலும் அன்று வைரவர் கொண்ட ஆலும் - காணியும் இணைந்த உயர்ந்த மரம் மற்றும் வேம்பு என்பன இன்றும் காணப்படுகின்றன. தலவிருட்சமாகவும் வைரவருக்கு பொங்கல் மடை வைத்து மக்கள் தமது இயல்புக்கு ஏற்ப வழிபட்டதுண்டு. காரைக்கூடல் வைரவர் கோயிலில் பரம்பரை உரிமையாளர்கள் வாழ்ந்த இராக்கல் குடியிருப்பு வில்வமரம் சூழ்ந்தது. வில்வம் இலை சிவபூசைக்கு ஏற்றது. சிவனை அர்ச்சிப்பதற்கு ஏற்றது. சிவனுக்கு உரியது எனக் கொள்ளப்படுவது. அந்தவகையில் சிவனின் 36 வது முகூர்த்தமாகிய வைரவருக்கும் ஏற்றது. இராக்கல் குடியிருப்பில் இருந்து வில்வம் இலை பரப்பப்பட்ட தாம்பாளத்தில் பொங்கல் படைத்து தூய வெண் துணியால் மூடி, தேவாரப் பாடல்கள் முழங்க ஊர்வலமாக எடுத்து வந்து வைரவருக்கு நிவேதனம் செய்யும் வழக்கம் இருந்தது. அத்துடன் ஆடு, கோழி பலியிடும் வழக்கம் இருந்தது. இராக்கல் குடியிருப்பு புத்தூர் - சுன்னாகம் வீதியில் புத்தூர் மேற்கில் உள்ள ஆலயத்துக்குத் தர்ம சாதனம் செய்யப்பட்ட 42 பரப்புக்களைக் கொண்ட விசாலமான காணியின் மத்தியில் மூடுமண்டபத்தைக் கொண்ட உட்பிரகாரத்துடன் ஆலயம் அமைந்துள்ளது.

1932 ஆம் ஆண்டு வைரவருக்கு முதலாவது குட முழுக்கு விழா நடைபெற்றது. 1960 ஆம் ஆண்டு வைரவருக்குரிய திருப்பணி வேலைகள் செய்யப்பட்டது. மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அப்போது வைரவரை வெளிவீதி திருவுலா கொண்டு வருவதற்கு இரும்புச் சில்லுடன் கூடிய 'சகடை' யும் செய்யப்பட்டது. 2000 ஆம் ஆண்டில் திருப்பணி வேலைகள் முடிவடைந்ததை அடுத்து மஹாகும்பாபிஷேகம் நடைபெற்றது. புதிய சித்திரத்தேர் திருப்பணி நிறைவு செய்யப்பட்டு 2008.03.31 சித்திரத்தேர் வெள்ளோட்டம் நடைபெற்றது. இந்த வருடம் 2013.03.29 மஹாகும்பாபிஷேகம் நடைபெற்றது. காரைகூடல் சாமுண்டேஸ்ரி சமேத வைரவப் பெருமானுக்கு பெருமளவில் திருப்பணிவேலை நடைபெற்று வருகின்றன. ஆலயத்திருப்பணிக்கு பிரான்சில் வசிக்கும் அறங்காவலர் கனகசபை திருச்சிற்றம்பலம் அவர்களும் அவரின் குடும்பத்திற்கும் பெருமளவு நிதியை வழங்கி வருவதோடு புலம்பெயர் உறவுகளும் உள்ளூர் பொதுமக்களுமாக நிதியுதவி வழங்கிவருகின்றனர்.

தற்போது ஓய்வுபெற்ற ஆசிரியர் சுப்பிரமணியம் மழுவராயர் (வயது80) ஆலயப் பரிபாலனம் மற்றும் திருப்பணிவேலைகளை முன்நின்று மேற்கொண்டு இன்றும் பலலட்சம் ரூபா செலவில் இந்தியாவில் மாமல்லபுரம் கருங்கல்லில் செதுக்கப்பட்ட சிவலிங்கம், ஸ்ரீகணேசநந்தி, ஸ்ரீகருமாரியம்மன், பலியிடம் துவாரபாலகர்கள் உட்பட 10 உருவங்கள் எடுத்துவரப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது. உட்பிரகாரத்தில் சிவன்கோயில் கட்டுமாணப்பணியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. விசாலமான தீர்த்தக்கேணியும் அமைக்கப்பட்டுவருகிறது.

உதயன்: 15.05.2013, 28.05.2013



# 52 உரும்பிராய் மூன்று கோயில்களில் மூலப்பொருளாக உறைந்து அருள் செய்யும் கருணாகரப் பிள்ளையார்

உரும்பிராயில் ஒரே நேர் கோட்டில் கிழக்கு மேற்காக அமைந்திருக்கும் மூன்று கோயில்கள் போல வேறு எங்கும் கிடையாது. இவற்றில் மூலப்பொருளாய் முழுமுதல் தெய்வமாக உறைந்திருந்து அருளாட்சி செய்யும் உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் வரலாற்றுப் பெருமைமிக்கது. ஈழத்தில் சரித்திரப் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றாகவும் விளங்குகிறது.

மூன்று கோயில்களில் மேற்குத்திசையில் "பரத்தைப் புலம்" இறையில் அமைந் துள்ள கருணாகரப் பிள்ளையாரின் அருள்வேண்டி இறைஞ்சாதோர் இல்லை. பல்வளச் செல்வங்களும் மலிந்து விளங்கும் உரும்பிராய் பகுதியில் கோயில் கொண்டுள்ள கருணாகரப் பிள்ளையார் "கருணாகர ஐயர்" என்பவரால், ஆதியில் பூசிக்கப்பட்டு வந்தமையாலும், கருணாகரத் தொண்டமானால் பூசிக்கப்பட்டமை யாலும் "கருணாகரப் பிள்ளையார்" எனப் பெயர் பெற்றது என்பது கோயிலின் கர்ண பரம்பரைக் கதை.

இந்தப் பிள்ளையார் கோயில் உரும்பிராய் பகுதியின் மேற்கு எல்லையிலும் இசை வல்லுநர்கள் நிறைந்து விளங்கும் இணுவில் பகுதியின் கிழக்குப் புற

எல்லையிலும் மருதநிழல் சூழ்ந்து ஓங்கி உயர்ந்த மரங்கள் நிறைந்த சோலையில் கோபுர தரிசனத்தோடு அழகுற அமைந்துள்ளது. யாழ்ப்பாணத்தை அரசு செய்த தமிழ் அரசனான விஜய கூழங்கைச் சக்கரவர்த்தி வழிபட்ட பூர்வீக ஆலயங்களில் உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் ஆலயம் ஒன்று என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். வரலாற்றுச் சிறப்பும், தொன்மையும் கல்வெட்டு ஆதாரங்களும் கொண்டது. காலவரையறை முறையில் சிறப்புப் பொருந்தியது என்பதற்கு ஆதாரமாக ஆலயத்தில் காணப்படும் 'கல்வெட்டு' கொள்ளப்படுகின்றது. ஆலயத்தில் காணப்படும் இந்தக் 'கல்வெட்டு' பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியர்கள் குழுவால் ஆய்வுகள் செய்யப்பட்டது.

ஆலயம் அமைந்துள்ள சூழலில் காணப்பட்ட ஓர் அரசமரத்தின் கீழ் ஓர் பிள்ளையார் லிங்கம் இருந்ததாகவும் அது தோன்றிய காலம் எவருக்கும் தெரியாது என்றும், கிராமவாசிகளும் பாதசாரிகளும் வழிபட்டு அருள்பெற்று உய்த அதேவேளையில், அடியவர்கள் களிமண் கொண்டு சிறுகோயில் அமைத்து பூசித்து வந்தனர் என்றும் கூறப்படுகிறது. ஆலயத்தின் அருள்வியாபகத்தை அறிந்த கூழங்கைச் சக்கரவர்த்தியும் ஆலயத்தைத் தரிசித்து அருள்பெற்றதோடு பிள்ளையாருக்கு, செங்கல்லால் கோயில் கட்டுவித்து தான் நித்தியம் வழிபடும் ஆலயங்களில் ஒன்றாக பேணி வந்தார் எனவும் கூறப்படுகின்றது.

ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் ஆலயக் கட்டடம் முற்றாக இடித்தழிக்கப்பட்ட நிலையில் சைவப் பெருமக்கள் ஆலய விக்கிரகங்களை மறைத்து வைத்து மனதில் நிலைநிறுத்தி வழிபட்டதோடு ஆலய வழிபாட்டுக்கான சூழ்நிலை ஏற்பட்ட காலப்பகுதியில் தற்போதைய பூசகர்களின் வழித்தோன்றலும் முதற்சந்ததியினருமான "ஸ்ரீ கருணாகர ஐயர்" குழை மண் கொண்டு கோயில் அமைத்து வைதீக முறைப்படி பூசை செய்து வந்தார் என்றும் அவரின் வழிவந்த பரம்பரைக் குருமார்களே இன்று வரை ஆலய பூசைகள், கிரியைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் கூறப்படுகின்றது.

"கோயில் சிறக்க குடி சிறக்கும்" என்ற வாக்கிற்கு அமைய கருணாகரப்பிள்ளை யாரின் அருள் வியாபகச் சிறப்பும் ஆலயம் சூழ் அமைவிடச் சிறப்பும் மேலோங்க அங்குள்ள குடிகளும் சிறந்து விளங்குகின்றது. மூன்று கோயில்களில் காலத்தால் மூத்த கல்வெட்டு ஆதாரங்களைக் கொண்ட கருணாகரப் பிள்ளையார் நம்பியவர் களுக்கு நல்லருள் பாலித்து அவர்களின் துன்பம் துயர் போக்கியதோடு பிறவிப்பிணி போக்கி தனக்கே உரிய தனித்துவத்தோடு துலங்கி வருகின்றார்.

ஈழத்து சைவ ஆலயங்களை டச்சுக்காரர் இடித்து அழித்த வேளையில் கருணா கரப் பிள்ளையார் ஆலயமும் சேதப்படுத்தப்பட்டதுண்டு. அந்தக் காலப்பகுதியில்

மூல மூர்த்தியை மறைப்பதற்குத் தூக்கிச் சென்ற சிலர் அதனை நினைத்த பிரகாரம் தூக்கிச் செல்லமுடியாமையால் குறித்த இடத்தில் கைவிட்டுச் சென்றனர். அந்தவேளையில் விக்கிரகம் நிலத்தில் மறையுண்டு அந்நியர் கண்களுக்குப் படாமல் மறைந்து இருந்தது. டச்சுக்காரர் ஆட்சி அகன்று மீண்டும் சைவ ஆலயங்கள் புத்துயிர் பெற்ற காலப்பகுதியில் நிலத்தை அகழும் வேளையில் விக்கிரகத்தில் மண்வெட்டி பட்டதால் எதிர்பாராத ஓசை எழுந்தது. அதனையடுத்து விக்கிரகத்தில் இரத்தம் பீறிட்டுப் பாய்வதைக் கண்டு தொழிலாளர்கள் குறையிரந்து விநாயகப் பெருமானிடம் மன்னிப்புக்கோரி வழிபட்டு, மீண்ட விக்கிரகத்தை உரிய முறையில் பிரதிட்டை செய்து கோயில் கட்டி வழிபட்டதாகவும் ஆலயத்தின் அற்புதச் சிறப்புப் பற்றி கூறப்படுகின்றது. இது கர்ணபரம்பரைக் கதையாகப் பேசப்படுகின்றது.

அந்தணரின் பரம்பரைச் சொத்தாகவும் காலம் காலமாக அந்தணர்களே ஆலயதர்மகர்த்தாக்களாகவும் இருந்து பரிபாலனம் செய்துவரும் கருணாகரப்பிள்ளையாரின் ஆரம்பகால ஆலய பரிபாலகராகவும் பூசகராகவும் கருணாகர ஐயர் குறிப்பிடப்படுகின்றார். கருணாகரஐயருக்குப் பின்னர் பரமஐயர் அப்புக்குட்டி ஐயர், வைத்தீஸ்வரக் குருக்களின் வழித்தோன்றலால் பரிபாலனம் செய்யப்பட்டு வருவதாகவும் ஆலயத் திருப்பணியை ஊர் மக்கள் அனைவரும் ஒருமித்து காலத்துக்குக் காலம் நியமிக்கும் திருப்பணிச்சபை, ஆலயத்தை பரிபாலனம் செய்யும் பூசகர்களின் ஆலோசனைக்கு அமைய மேற்கொண்டு வருகின்றது.

அப்புக்குட்டி ஐயரின் காலத்தில் ஆலயத்துக்கு மகாமண்டபம், நிருத்தமண்டபம், தம்பமண்டபம் என்பன நிர்மாணிக்கப்பட்டன. 1910ஆம் ஆண்டு உரும்பிராயைச் சேர்ந்த பிரபல வைத்தியர் வைரநாதன் வல்லிபுரம் கொடித்தம்பம் ஒன்றைச் செய்து கொடுத்தார். அந்த வருடம் தொடக்கம் ஆவணிச்சஷ்டியில் துவஜாரோகணத்துடன் மகோற்சவம் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. 10 தினங்கள் நடைபெறும் வருடாந்த மகோற்சவத்தில் அடியவர்கள் தமது நேர்த்திக் கடன்களை நிறைவு செய்வதும் ஆலயத்தின் அயலில் உள்ள கிணற்றில் நீராடி ஆலயத்தை வழிபடுவதும் அடியவர்களின் ஆத்மீக ஈடேற்றத்துக்கு வழிப்படுத்துவதாக அமைந்துள்ளன.

இற்றைக்கு 50 வருடங்களுக்கு முன்பிருந்தே ஆலயத்தில் கூட்டுப்பிரார்த்தனையும் பஜனையும் நடைபெற்று வருகின்றன. வெள்ளிக்கிழமைதோறும் மற்றும் விசேட உற்சவங்களிலும் மகோற்சவ காலத்திலும் மாலை வேளைகளில் கூட்டுப்பிரார்த்தனையும் பஜனையும் நடைபெற்று வருகின்றன. பஜனை கூட்டுப்பிரார்த்தனையில் அடியவர்கள் ஒன்று திரண்டு ஆர்வத்தோடு பங்குபற்றி வருகின்றனர்.

கருணாகரப் பிள்ளையார் ஆலயத்தில் பழமை வாய்ந்த கல்வெட்டு உண்டு. கல்வெட்டை வரலாற்றுத்துறை சிரேஷ்ட பேராசிரியர் கலாநிதி கா.இந்திரபாலா பார்வையிட்டு எழுத்துக்களை படியெடுத்து ஆய்வு செய்துள்ளார். கருணாகரப் பிள்ளை யாரின் சிறப்புப் பற்றி புலவர்கள் பலர் பதிகங்களைப் பாடியுள்ளனர். இந்த வகையில் இணுவில் சிதம்பரநாதப் புலவர் ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை ஆகியோர் உள்ள டங்கியவர்களின் பாடல்கள் இன்றும் படிக்கக்கூடிய வகையில் ஆவணப்படுத் தப்பட்டுள்ளன. மிக உயர்ந்த தூலலிங்கமாகி மகா கோபுரத்துடன் கூடிய மூடு மண்டபம் உட்பிரகாரத்தையும் திராவிடச் சிற்பக்கலை நுட்பத்துடன் கூடிய அலங்கார வளைவுடன் கூடிய முகப்பு மண்டபத்துடனும் கூடிய கருணாகரப் பிள்ளையாருக்கு அழகான சித்திரத்தேர் அமைக்கப்பட்டு 2010ஆம் ஆண்டு வெள்ளோட்டம் விடப்பட்ட தோடு கருணாகரப் பிள்ளையார் புதிய சித்திரத்தேரில் ஆரோகணித்து அடியவர் களுக்கு அருள்பாலித்து வருகின்றார்.

ஆலயத்தின் திருப்பணி வேலைகளிலும் வைதீக கிரியைகள் உற்சவங்களை உரிய முறையில் மேற்கொள்வதிலும் ஆசிரியமணி அ. பஞ்சாட்சரத்தின் பங்கும் பணியும் பசுமையுடன் நினைவு கூரப்படுவதோடு ஆசிரியமணி வாழ்நாள் முழுவதும் கருணாகரப் பிள்ளையாரின் மெய்யடியாராக வாழ்ந்து பணியாற்றியுள்ளார். 2007ஆம் ஆண்டு ஆசிரியமணியின் மறைவை அடுத்து அவர் மேற்கொண்டு வந்த பணிகளை ஆசிரியமணியின் பெறாமகனும் உரும்பிராய் இந்துக்கல்லூரி யின் அதிபருமான அ.ஈஸ்வரநாதன் பொறுப்பேற்று மேற்கொண்டு வருகின்றார். கருணாகரப்பிள்ளையார் அருள்பெற்று உய்வோமாக.

உதயன் - 08.12.2011, 15.12.2011



# 53 உரும்பிராயின் ஒரே ஒரு முருகன் ஆலயத்தின் அருள்

**கோ**யில்களின் அமைவிடத்திலும், அருள்வியாபகத்திலும், சிறப்புப்பெற்ற உரும்பிராயில் உள்ள ஒரே ஒரு முருகன் ஆலயம் சிதம்பர சுப்பிரமணிய சுவாமி - மூன்று கோயில்களின் அமைவிடத்தில் அம்மனுக்கும் பிள்ளையாருக்கும் நடுவிடத்தில் மிக அமைதியான சூழலில் அமைந்திருந்து அருள்பாலிக்கின்றார்.

பரத்தைப்புலத்தில் அமைந்துள்ள மூன்று கோயில்கள் பற்றிய ஆரம்பம் மிகமிக அநாதியானதாகக் கொள்ளப்படுகின்றது. மூன்று கோயில்களும் சிறுமுகட்டில் கோயில்களாக இருந்தன. தமக்கே உரிய அருள்வியாபகத்தால் அடியவர்களைக் கவர்ந்து காலப்போக்கில் வளர்ந்து இன்று உட்பிரகாரம் முழுவதும் மூடு மண்டபங்கள் கொண்டதாக அழகான முகப்பு மண்டபம், சித்திரத்தேர், உற்சவச் சிறப்புக் கொண்ட தாக இந்த ஆலயம், வேதாகம விதிப்படி அந்தணர்கள் மூன்று காலப்பூசை செய்யும் ஆலயங்களாக விளங்குகின்றன.

ஆலயச் சூழலில் அடியவர் நடமாட்டமும் நாளாந்தம் நடைபெறும். விசேட பூசை வழிபாடு, உற்சவங்களால் சைவ மணங்கமழும் ஆலயச் சூழலில் செல்பவர்கள் தங்களை அறியாமலேயே அம்பாளையும், முருகனையும் பிள்ளையாரையும் ஒன்றுசேரக்கண்டு உளம் மகிழ்வர்.

உரும்பிராய் மத்தி, வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு என மிக விசாலமான வசதி யான கிராமம், மண்வளம் கொண்டது. இந்த வகையில் விவசாயத்தாலும், கல்வி கேள்வியாலும் உயர்ந்தது. பத்துக்கு மேற்பட்ட கோயில்கள் அமைந்துள்ள போதிலும் மூன்று கோயில்கள், ஞானவைரவர் கோயில், சிவபூத நாதேஸ்வரர் கோயில், கற்பக விநாயகர் கோயில், காட்டுவைரவர் கோயில், காளி கோயில், பூதராயர் கோயில், பேச்சிஅம்மன் கோயில், வைரவர் கோயில் என நாலாதிசையிலும் சைவக் கோயில்கள் அமைந்து சிறப்புற விளங்குகின்றன.

கல்வி கேள்விகளில் சிறந்து கற்றறிந்த பெரியோர்கள் நிறைந்து விளங்கியது என்பதற்கு எடுத்துக்காட்டாக உரும்பிராய் கிராமத்தையும், தமிழர் பெருமையையும் இலங்கையிலும், சர்வதேச ரீதியிலும் துலங்கச் செய்த பெருந்தகைகள் பலர், அவர்களில் உரும்பிராயில் வாழ்ந்தவர்களான பஞ்சலிங்கங்கள் (ஐந்து சகோதரர்கள்) செல்லப்பா - மீனாட்சிப்பிள்ளை தம்பதிகளின் செல்வப் புதல்வர்கள், மூத்தவர் பஞ்சலிங்கம் சிறந்த வைத்தியர் - சட்டத்துறை வல்லுநர், அடுத்தவர் செ. நாகலிங்கம் நீதியரசராகவும் இலங்கையின் தேசாதிபதியாகவும் பதவி வகித்து தமிழருக்குப் பெருமை சேர்த்தவர். மூன்றாவது சகோதரர் அடங்காத் தமிழன் என்று தமிழ் அரசியல் தலைவர்களில் குறிப்பிட்டுப் பேசப்படும் செ. சுந்தரலிங்கம், அடுத்தவர் சட்டமேதை செ. தியாகலிங்கம், கியு.ஸி. இளையவர் கலாநிதி செ. அமிர்தலிங்கம், சிறந்த கல்விமான் உயர்பதவியில் உத்தியோகத்தராக இருந்தவர்.

இவர்களின் குடும்பத்துக்கும் சிதம்பரசுப்பிரமணியர் கோயிலுக்கும் நெருக்கம் உண்டு. கோயிலை இடைக்காலத்தில் பரிபாலனம் செய்து பெருமைபெறச்செய்தது இவர்களின் குடும்பமே. குறிப்பாக செ. தியாகலிங்கம் கியு.ஸி. அவர்களே. உரும்பிராய் பஞ்சலிங்கங்கள் பற்றி பேசப்படும் வேளையில் தமிழர்களுக்குப் பெருமை சேர்த்த சம்பவம் ஒன்று பெருமையாகப் பேசப்படுவது உண்டு. நீதியரசராக தேசாதிபதியாக இருந்த செ. நாகலிங்கம் உயர்நீதிமன்றத்தில் நீதியரசராக இருந்தவேளையில் சட்டமேதை தியாகலிங்கம் சட்டத்தரணி செ. சுந்தரலிங்கமும் வாதி பிரதிவாதிகளின் சட்டத்தரணிகளாக எதிர் எதிரே வாதிட்டிருக்கின்றனர். சட்டத்தரணி செ. தியாக லிங்கம் கியு.ஸி. சிதம்பர சுப்பிரமணியசுவாமி ஆலயத்தோடு நெருக்கமான தொடர்பு கொண்டவர். ஆலயத் திருப்பணிகளை நேரில் நின்று நடத்தியதோடு, ஜயவருடம் ஆடி மாதம் 21ஆம் நாள் வியாழக்கிழமை 05.08.1954ஆம் ஆண்டு ஆலயத் திருப்பணி கட்டுமானப் பணிக்கான அடிக்கல்லை நாட்டி, திருப்பணியை ஆரம்பித்து வைத்தவர்.

ஆலயத் திருப்பணிக்குத் தேவையான நிதியில் கணிசமான தொகையை வழங்கி உதவினார். ஆண்டுதோறும் உற்சவ காலங்களில் உரும்பிராயில்

தங்கியிருந்து உற்சவங்களைக் கண்டுகழித்து உய்வுபெற்றார். உரும்பிராய் மூன்று கோயில்களில் நடுவிடத்தில் அமர்ந்திருந்து அருள்பாலிக்கும் சிதம்பர சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் ஆண்டுதோறும் தைப்பூசத் தீர்த்தத் திருவிழா வாக 12 தினங்கள் மகோற்சவமும், கதிர்காம உற்சவ காலத்தில் திருவோண நட்சத்திரத்தில் தீர்த்தோற்சவம் வரக்கூடியதாக 16 தினங்கள் அலங்கார உற்சவமும் நடைபெறுகின்றது. இது இந்த ஆலயத்துக்கே உரிய தனிச்சிறப்பாகும். இந்தவகையில் இரண்டு உற்சவங்கள் நடைபெறும் முருகன் ஆலயம் என்ற பெருமையை இந்த ஆலயம் பெறுகின்றது.

அனாதியில் மரத்தின் கீழ் சிறிய கொட்டிலில் வைத்து வழிபட்டுவந்த சிதம்பர சுப்பிரமணியசுவாமிக்கு காலத்துக்குகாலம் அடியவர்கள் உதவி ஆலயத்தை அமைத்தனர். இருந்தபோதிலும் தற்போதுஇருக்கும் ஆலயத்துக்கான அடிக்கல் 1954ஆம் ஆண்டு அருளாளர் செல்லப்பா தியாகலிங்கம் கியு - ஸியால் நடப்பட்டது. அதன் பின்னர் மூன்று வருடங்களாக நடைபெற்ற திருப்பணி வேலையை அடுத்து விளம்பி வருடம் பங்குனித் திங்கள் 13ஆம் நாள் (26.03.1958) புதன்கிழமை ரோகிணி நட்சத்திரத்தில் செ.தியாகலிங்கம் கியூ.சி. தலைமையில் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

இரண்டாவது மகாகும்பாபிஷேகம் 1980ஆம் ஆண்டு நடைபெற்றது. சித்தூர்த்தி வருடம் சித்திரைத் திங்கள் 20ஆம் நாள் (03.05.1979) பாலஸ்தானம் செய்யப்பட்டு மூலஸ்தான திருப்பணிகள் ஆரம்பமாகின. ரௌத்திரி வருடம் சித்திரைத் திங்கள் 18ஆம் நாள் (30.04.1980) புதன்கிழமை சுவாதி நட்சத்திரத்தில் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. செ.தியாகலிங்கம் கியூ.சி. தலைமை தாங்கி இதனை நடத்தினார்.

1987ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்திய அமைதிப்படையினரின் தாக்குதலால் ஆலயம் சேதமடைந்தபோதிலும் 1991ஆம் ஆண்டு புதிய நிர்வாகம் ஆலயத்தைப் பொறுப்பேற்று திருப்பணிகளை மேற்கொண்டு 1992ஆம் ஆண்டு மகாகும்பாபிஷேகம் செய்யப்பட்டதை அடுத்து மகோற்சவங்கள் நடைபெற்றன. 1992ஆம் ஆண்டு புதிய சித்திரத்தேர் திருப்பணி ஆரம்பிக்கப்பட்டு புதிய சித்திரத்தேர் உருவாக்கப் பட்டதோடு. தேர்க்கொட்டகை மற்றும் அதனோடு இணைந்த திருப்பணி வேலைகள் நடைபெற்றன.


ஆலய உற்சவ காலங்களில் விசேட சமயச் சொற்பொழிவுகள் தினந்தோறும் நடைபெறுவதோடு அங்கு நடைபெறும் சொற்பொழிவுகளை உள்ளடக்கி பாடசாலை மாணவர் மட்டத்தில் சமய அறிவுப் பரீட்சையை நடத்தி மாணவர்களுக்குப் பெறுமதி மிக்க பரிசில்களை வழங்கிக் கௌரவிப்பது விசேட செயற்பாடாகும். இதன்மூலம்

மாணவர்கள் சமயச் சொற்பொழிவுகளை உரியமுறையில் செவிமடுப்பதோடு அதனைத் தங்களது கற்றல் செயற்பாட்டுக்கும் உரியதாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

வருடாந்த மகோற்சவங்களோடு சிறப்பு உற்சவங்களும், தமிழ் மாதப்பிறப்புத் தோறும் மாதச் சங்கிராந்தி தீர்த்தமும், மாதந்தோறும் கார்த்திகை உற்சவம், சஷ்டி உற்சவம், ஆண்டுதோறும் கந்தசஷ்டி உற்சவம், சித்திரைப் பௌர்ணமி, வைகாசி விசாகம், ஆவணிச் சதுர்த்தி, புரட்டாதி சனிக்கிழமைகள், ஐப்பசி வெள்ளி, கார்த்திகை விளக்கீடு, மார்கழித் திருவாதிரை காலங்களில் சிறப்பு உற்சவங்களும் பூசை வழிபாடும் நடைபெறுவதோடு பஜனை, கூட்டுப்பிரார்த்தனை என்பனவும் நடைபெற்று வருகின்றன.

ஆலயத்துக்குக் கணிசமான அளவு நிலபுலங்கள் உள்ளன. அதில் இருந்து பெறப்படும் வருமானம் ஆலயத்தின் தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. ஆலயத்தின் தற்போதைய பரிபாலன சபையின் போஷகராக உரும்பிராய் இந்துக் கல்லூரி அதிபர் அ.ஈஸ்வரநாதனும் தலைவராக அ. நவரத்தினமும் இணைச் செயலாளர்களாக பொ.காசிலிங்கம், எஸ். கனகநாயகம் ஆகியோரும் பொருளாளராக நா.நடேசனும் சிறப்புறச் செயற்பட்டு வருகின்றனர். ஆலயத்தின் பிரதம பூசகராக பிரம்மஸ்ரீ எஸ். கலாதரக்குருக்கள் ஆலய உற்சவங்கள், கிரியைகளை வேதாகம முறைப்படி மேற்கொண்டு வருகின்றார். கோயில் சிறக்க குடி சிறக்கும், முருகன் அருள் பெற்று உய்வோமாக!

உதயன் - 22.12.2011, 29.12.2011



# 54 சைவ ஆலய அமைவிடச் சிறப்பியல்புகள் கொண்ட உரும்பிராய் மூன்று கோயில் பர்வதவர்த்தனி அம்மன்

யாழ். மாவட்டத்தில் சைவ ஆலயங்கள் நிறைந்த ஊர்களில் உரும்பிராய்க்குத் தனித்துவமான சிறப்பும் முக்கியத்துவமும் உண்டு. உரும்பிராய் என்றதும் நினைவுக்கு வருவது மூன்று கோயில்கள். மூன்று கோயில்களும் ஒன்றுக்கு முன் ஒன்றாக ஒரே வரிசையில் கிழக்கு மேற்காக அமைந்துள்ளன.

பர்வதவர்த்தனி அம்மன், முருகன் அதை அடுத்து கருணாகரப் பிள்ளையார் என்று மூன்று கோயில்களும் விசாலமான சுற்றுப் பிரகாரங்களுடன் அழகுற அமைந் திருப்பதும், அங்கு செல்லும் அனைவரையும் ஆலயத்தின் முன்பால் கவர்ந்து இழுக்கும் தெய்வீக உணர்வும் வேறு எங்கும் இல்லாத சிறப்பம்சமாகும்.

உரும்பிராய் சந்தியில் இருந்து மேற்கு நோக்கிச் செல்லும் மருதனார்மடம் வீதியின் அண்மையில் தெற்கு நோக்கிச் செல்வது "அம்மன் வீதி" இந்த அம்மன் என்ற சொல்லே பர்வதவர்த்தனியைக் குறித்து நிற்பதே. அம்மன் வீதியால் செல்லும்போது 400 மீற்றர் தூரத்துக்குள்ளே ஆலய தரிசனம் கிட்டும். ஒரே பார்வையில் மூன்று ஆலயங்களும் அடியவர்களுக்குத் தரிசனம் தரும். நடுவில் முருகப்பெருமானை முன்னிறுத்தி முருகனுக்கு முன்னாக அம்பாள் ஆலயமும் முருகனின் தென்மேற்கு

வீதியில் வரலாற்றுச் சிறப்புமிக்க கருணாகரப் பிள்ளையாரும் கோயில் கொண்டு அருள்பாலிப்பது உரும்பிராய்க்கே உரிய தனிச்சிறப்பு. "கோயில் இல்லாத ஊரில் குடியிருக்கவேண்டாம்" என வலியுறுத்தும் சைவசிந்தனையில் மூன்று கோயில் களும் ஒருங்கே அமைந்திருக்கும் உரும்பிராயில் குடியிருப்பவர்கள் கொடுத்து வைத்தவர்கள்.

ஆலயங்கள் அமைந்திருக்கும் அமைவிடம் மூன்று கோயில்களும் ஒருங்கே அமைந்துள்ள கண்கொள்ளாக்காட்சி "பரத்தைப்புலம்" குறிஞ்சிக்கு அழகு ஊட்டுவ தோடு ஆத்மீக ஒளி மிளிர்வதை உணர்ந்தறியலாம். வரலாற்றுச் சிறப்புமிக்க மூன்று கோயில்களும் முதல் தரிசனத்துக்குரியதாக பர்வதவர்த்தனி அம்பாள் கோயில் கொண்டுள்ளார்.

பர்வதவர்த்தனி அம்மன் கோயிலின் தற்போதைய பரிபாலன சபை 2004ஆம் ஆண்டிலிருந்து ஓய்வுபெற்ற வங்கியாளர் ஏ.நாகரத்தினம் தலைமையில் செயற்படு கின்றது. மூன்று கோயில்களும் ஒருங்கே அமைந்ததன் பூர்வீக வரலாறு எத்தகையது அத்துடன் தொடர்பான கர்ணபரம்பரைக் கதைகள் ஏதும் உண்டோ என ஊர் பிரமுகர் மற்றும் ஆலயங்களின் முக்கிய நிர்வாகிகள் மற்றும் ஆலயப் பூசகர்கள் ஆகியோரிடம் கேட்டறிய முயன்றபோது "அத்தகைய முக்கிய வரலாறு இருக்கலாம். நாங்கள் அறியவில்லை. அதனைத் தற்போது கேட்டறிவதற்கு உரியமூத்தோர் சிவபதம் அடைந்துவிட்டார்கள்" என்பதே பதில். "ஈழத்தமிழர்களின் ஆவணப் படுத்தலில் ஏற்பட்ட தவறுகள் ஆலயங்களின் பூர்வீகத்தைக்கூட அறியமுடியாமல் செய்துவிடுகின்றது.

உரும்பிராய் பர்வதவர்த்தனி அம்மன் கோயிலின் தோற்றம் தொடர்பான காலவரையறை இதுதான் என்று வரையறை செய்யப்படாமல் காலவரையறைக்கு அப்பாற்பட்டது எனக் கூறப்படுகின்றது. பூர்வீக ஆலயம் அந்நியர் படையெடுப் புக்களினால் காலத்துக்குக் காலம் இடித்தழிக்கப்பட்டு சேதமாக்கப்பட்டதும் பின்னர் ஊர் பிரமுகர்களினால் மூலமூர்த்தங்கள் ஸ்தாபனம் செய்யப்பட்டதும் பர்வதவர்த்தனி ஆலய வரலாற்றின் பூர்வீகம் தொடர்பாக விசாரித்தவேளையில் கண்டறிய முடிந்தது.

'கோயில் சிறக்க குடி சிறக்கும்' என்ற மூத்தோர் வாக்குக்கு அமைய உரும்பிராய் மூன்று கோயில்கள் சிறப்புடன் மிளிர்வதும் அதில் பர்வதவர்த்தனியின் அருளாட்சியும் உரும்பிராய்க்கே உரிய சிறப்பாகும்.

சரித்திரவியலாளர்களின் காலத்துக்கு முற்பட்டதாகவும் அவர்களின் கண்ணுக்கு எட்டாதவளாகவும் நீண்ட காலமாகக் கோயில்கொண்டு அருள்பாலிக்கும் அம்பாள்

வில்வமரத்தடியில் கோயில்கொண்டு அருள்பாலித்ததாகவும் அந்தமரம் காலத்தால் அழியாத அம்மன் அருளால் தெற்கு வீதியில் எழுந்தருளி வாசலுக்கு அருகில் இன்றும் விருட்சமாக இருப்பதைக் காணமுடிகின்றது.

வில்வமரத்தடியில் பொங்கரவங்களை அணிகலனாகப் பூண்டு வீற்றிருந்த அன்னையின் மடியில் தவழ்ந்த பாம்புகளுக்கு பால் வார்த்து அன்னையைப் பூசித்து வந்தவர் விநாசித்தம்பி என்ற அருளாளர் என்றும் அவரின் கனவில் தோன்றிய அம்மன் "ஆலயம் அமைத்து ஆகமவிதிப்படி பூசைகள் செய்து வழிபடும்படி" கேட்டுக் கொண்டதற்கு இணங்க சிவகுடில் அமைத்து அம்பாளுக்கு நித்தியபூசை செய்வதற்கு வரணியில் இருந்து அந்தணர் குடும்பம் ஒன்றை வரவழைத்து ஆலயச் சூழலில் குடியமர்த்தி அவர்களுக்கு அவர் எல்லாம் வழங்கி அம்பாளுக்கு ஆகம விதிப்படி பூசை வழிபாடுசெய்து வந்ததாகவும் 1930ஆம் ஆண்டளவில் தூபியும் மண்டபங் களும் அமைக்கப்பட்டு உள்வீதியைச் சுற்றி மதிலும் வெளிவீதியைச் சுற்றி முட்கம்பி வேலிகளும் அமைக்கப்பட்டதாகவும் இந்தத் திருப்பணியை முன்னின்று அமைத்தவர் இராசா என்று அழைக்கப்பட்ட ஆறுமுகம் வேலுப்பிள்ளை என்றும் இவர் விநாசித் தம்பியின் பரம்பரை வழி வந்தவர் என்றும் கூறப்படுகின்றது.

மூன்று கோயில்களில் மூத்த கோயிலாகக் கருதப்படும் உரும்பிராய் பர்வதவர்த்தனி அம்மன் காலவரையறைக்குட்படாமல் அனாதியாக பிள்ளையார், முருகன் ஆலயங் களுக்கு முன்பாக அமைந்திருந்து அருள்பாலிக்கின்ற தாயாக உள்ளாள். 1930ஆம் ஆண்டளவில் தூபியும், மண்டபங்களும் அமைக்கப்பட்ட போதிலும் 1948ஆம் ஆண்டு தொடக்கம் வருடாந்த உற்சவங்கள் நடைபெற்று வருகின்றன.

சித்திரைப் பௌர்ணமியில் அம்பாள் தீர்த்தமாடி அடியவர்களுக்கு அருள்பாலிக்கும் நடைமுறை 1963ஆம் ஆண்டு கும்பாபிஷேகத்தை அடுத்து வைகாசித் திங்களுக்கு மாற்றப்பட்டது. உரும்பிராய் காட்டு வைரவர் கோயில் வேள்வியும் மடையும் சித்திரை யில் நடைபெறுவதால் அடியார்கள் அதில் கலந்துகொள்வதற்கு வசதியாக மாற்றப் பட்டது. வருடாந்த உற்சவங்கள் ஆண்டுதோறும் வைகாசி மாதத்தில் பத்துத் தினங்கள் நடைபெறுகின்றன.

வருடாந்த உற்சவத்தோடு தைப்பொங்கல், தை அமாவாசை, மாசிமகம், சிவராத்திரி, பங்குனித் திங்கள், சித்திரை வருடப்பிறப்பு, ஆனி உத்தரம், ஆடிப்பூரம், ஆடிச் செவ்வாய், நவராத்திரி, ஐப்பசிவெள்ளி, சோமவாரம், திருக்கார்த்திகை, திருவெம்பாவை போன்ற சகல விசேட தினங்களிலும் புண்ணிய காலங்களிலும், அம்பாளுக்கு அபிஷேகங்களும் நடைபெற்று வருகின்றன. மாதாந்தம் பூரணை நாளில் தீபபூசை நடைபெறுவதோடு வரலட்சுமி விரதம், கௌரி நோன்பு என்பன

சிறப்பானமுறையில் நடைபெறுவதோடு பெருமளவில் குறித்த தினங்களில் அடியார்கள் பக்திப் பிரவாகத்துடன் ஆலயத்தில் கூடி வழிபாட்டில் ஈடுபட்டு வருகின் றனர். வாராந்தம் திங்கட்கிழமை தோறும் அம்மனுக்குப் பொங்கல்செய்து விசேட பூசை வழிபாடு செய்வதோடு அடியவர்கள் கூடி கூட்டுப் பிரார்த்தனை செய்வதும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

நவராத்திரியை அடுத்துவரும் மானம்பூத்திருவிழா அன்று அம்பாள் கம்பீரமான குதிரை வாகனத்தில் ஏறி வைரவர் கோயிலுக்குச் சென்று அசுரனை சங்காரம் செய்வதோடு அடியவர்களுக்கு அருள்பாலித்து வருகின்றாள்.

அம்பாளுக்கு நித்திய பூசைகள் மற்றும் விசேட பூசைகள் உற்சவங்கள் திட்டமிட்ட முறையில் சிறப்பாக நடைபெறுவதற்கு அடியவர்களால் கணிசமான நிதி வங்கிகளில் வைப்புச்செய்யப்பட்டு அவற்றின் வருமானத்தின் மூலம் ஆண்டுதோறும் சிறப்புற நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அத்துடன் அம்பாளுக்கு பெருமளவு காணி நிலம் அடியவர்களால் காணிக்கையாக வழங்கப்பட்டு அதன்மூலம் கிடைக்கக் கூடிய வருவாயும் ஆலயத்துக்குக் கிடைப்பதற்கு வகைசெய்யப்பட்டுள்ளது. "கற்புலம் கற்புலக்காடு 66 பரப்பும், பரத்தைப்புலம் - 3 பரப்பு, பன்றித்தன் - 27 பரப்பு, காலன் 17 பரப்பு" என்பவையே காணிக்கையாக வழங்கப்பட்ட காணியாகும். பர்வதவர்த்தனி அம்பாளுக்கு அருட்பாமாலைகளும் சூட்டப்பட்டுள்ளன. உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த ஆசிரியர் செ. ஐயாத்துரை அம்பாள் மீது அந்தாதிபாடி 1983ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார். அம்பாளின் திருஊஞ்சல் பாமாலையை ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் பாடியுள்ளார். ஆலயத்தின் பூசகர்களாக 1985ஆம் ஆண்டிலிருந்து பிரம்மஸ்ரீ க.மு.சோமசுந்தரக்குருக்கள் அர்ப்பணிப்போடு பணியாற்றி வருகின்றார்.

1932ஆம் ஆண்டு மூலஸ்தான தூபி மற்றும் மண்டபங்கள் கட்டப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. 1963 ஆம் ஆண்டு தூபி மண்டபங்கள் புனரமைக்கப்பட்டு நடேசர் விக்கிரகம் ஸ்தாபனம் செய்யப்பட்டு 29.04.1963இல் புனராவர்த்தன சம்புறோட்சண அஷ்ட பர்த்தன ஏககுண்ட மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. 1990ஆம் ஆண்டு மூலஸ்தான வசந்த மண்டபம் இடிக்கப்பட்டு புனரமைப்புச் செய்யப்பட்டு 1990.06.13ஆம் திகதி மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

2004ஆம் ஆண்டு கொடித்தம்ப மண்டபம், வசந்த மண்டபம் என்பன புதிதாக நிர்மாணம் செய்யப்பட்டு 2004.06.07ஆம் திகதி மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. சித்திரத்தேர் உருவாக்கப்பட்டு அம்பாளின் தேர்த்திருவிழா கோலாகலமாக ஆண்டுதோறும் நடைபெற்றுவரும் அதேவேளையில் அம்பாளுக்குத் திருமஞ்சம்

அமைப்பதற்கான முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன. 2000ஆம் ஆண்டிலிருந்து வங்கியாளர் செ. நாகரத்தினம் ஆலயப் பரிபாலன சபையின் செயலாளராகப் பணியாற்றி வருகின்றார். தற்போதைய பரிபாலன சபையின் தலைவராக இ.கணேசலிங்கமும் பொருளாளராக செ. வேலாயுதமும் ஏழுபேர் கொண்ட நிர்வாகக்குழு உறுப்பினர்களும் பணியாற்றி வருகின்றனர். ஆலயத்தின் வடக்கு வீதியில் 140 அடி நீளமான அன்னதான மண்டபம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வருவதோடு அதில் அறநெறிப் பாடசாலையை நடத்துவதற்கான ஏற்பாடுகளும் நடைபெற்று வருவதாக செயலாளர் செ.நாகரத்தினம் தெரிவித்தார்.

மூன்று கோயிலுக்குச் செல்ல விரும்பும் பக்தர்கள் ஆலய முன்றலில் செயற்பட்டு வரும் மீன்சந்தையை ஊடறுத்துச் செல்லவேண்டியிருப்பதும் அந்தவகையில் பக்தர் மனதில் பெரும் குறைபாடு இருப்பதையும் அவதானிக்க முடிகிறது. ஆலயத்தின் வளர்ச்சி மற்றும் ஆகமரீதியான அமைப்புமுறை நிவர்த்தி செய்யப்பட்டிருப்பதால் ஆலயத்தின் வருமானத்தில் கணிசமான பங்கினை நலிவுற்ற மற்றும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கான சமூகப்பணி, கல்விப்பணி, அறநெறிப்பணிகளுக்குப் பயன்படுத்தத் தீர்மானிக்கப்பட்டிருப்பது "கோயில் சிறக்க குடி சிறக்கும்" என்ற திருவாக்கை மெய்ப்பிப்பதாக அமையும்.

உதயன் - 24.09.2011, 01.09.2011



# 55 ஒல்லாந்தர் காலத்துக்கு முற்பட்ட பழைமைமிகு சிறுப்பிட்டி மனோன்மணி அம்பாள் ஆலயம்

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியில் இருந்து சிறுப்பிட்டி மத்தியை நோக்கி மேற்குப் புறமாகச் செல்லும் ஒழுங்கையில் 400 மீற்றர் தூரத்தில் மனோன்மணி அம்பாள் ஆலயம் அமைந்துள்ளது. சிறுப்பிட்டி வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு என நான்கு திசைகளுக்கு மத்தியில் அமைந்து அருளாட்சி செய்யும் அம்பாள் ஊருக்கு வடக்கில் அமைந்திருப்பது மட்டுமல்ல புத்தூர் உள்ளடங்கலாக சிறுப்பிட்டியில் சகல உபகிராமங்களிலும் வாழும் மக்களால் வழிபடுவதோடு எல்லோரும் எங்களது ஆலயம் என உரிமை கொண்டாடப்படுகின்றது. அத்துடன் உற்சவங்கள், உபயங்களும் இடம்பெறுகின்றன. ஆலயத்தின் அமைவிடமும் அருள்வியாபகமும் அடியவர்களை தனதாக்கிக்கொண்டிருப்பதுடன் பூர்வீக ஆலயம் முற்றாக மறுசீரமைப்புச் செய்யப்பட்டு 150 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட செலவில் புனரமைப்புச் செய்யப்படுகின்றது.

ஆலயத்தின் பரிபாலன சபையின் தலைவர் கிராம அலுவலர் க.ஸ்ரீஸ்கந்தராசா திருப்பணி தொடர்பாகவும் அம்பாளின் அருள்வியாபகம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில் 3 லட்சம் ரூபாவுடன் ஆரம்பமான ஆலயத் திருப்பணிக்கு வந்துசேரும் நிதி வளம் அடியவர்களை மெய்மறக்கச் செய்கின்றது. புலம்பெயர்ந்த உறவுகள்,

உள்ளூர் அடியவர்களும் தாராளமாக உதவுவதோடு பரிவார மூர்த்திகள் மற்றும் ஆலயத்தின் பாகங்களையே பொறுப்பேற்று கட்டுமானப்பணிகளை நிறைவு செய்வதற்கு முன்வந்துள்ளனர். இதன் மூலம் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன எனக் கூறினார். சிறுப்பிட்டி மத்தியில் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்துக்கு முந்திய காலப்பகுதியில் காவல்தெய்வமான காத்தவராயன் மற்றும் அம்பாள் ஆலயமாக பிரதிஸ்டை செய்து பொதுமக்களால் வழிபடப்பட்டு வந்த ஆலயமே தற்பொழுது ஸ்ரீ மனோன்மணி அம்மன் ஆலயமாக வளர்ச்சி கண்டு அருளாட்சியிலும் ஆலயத் தோற்றத்திலும் உயர்ந்து நிற்கின்றது.

ஆலயத்துக்கென தர்மசாசனம் செய்யப்பட்ட 40 பரப்புக் காணியின் மத்தியில் வைதீக முறைப்படி அமைந்த ஆலயம், அதனோடு இணைந்த தீர்த்தக் கேணி, புதிய சித்திரத்தேர், தேர் முட்டி என்பவற்றுடன் அழகுற அமைந்துள்ளது. 1912ஆம் ஆண்டு ஆலயத்துக்கு தர்மசாசனம் செய்யப்பட்ட காணி தொடர்பான உறுதியில் ஆலயம் தொடர்பான விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அதற்கு முந்திய ஆவணங்களில் மற்றும் பொதுமக்களின் பேச்சுவழக்கில் ஆலயத்தின் பெயர் சிவகாமி அம்மன், இராஜேஸ்வரி அம்மன், கருணாகரகடாச்சி போன்ற பல்வேறு பெயர்களால் வழங்கப் பட்டு வந்ததாகக் கூறப்படுகின்றது. இந்த நாமங்களில் சில ஆலயத்தின் ஊஞ்சல் பாடலிலும் குறிப்பிடப்பட்டிருப்பதால் காலத்துக்குக்காலம் இந்த வகையில் பெயர் வழங்கலாயிற்று.

"ஆலயத்துக்கு நேர்த்தி வைத்தும் தமது சந்ததியின் பெயர் விளங்கவும் 200 பரப்புக்கு மேற்பட்ட காணி சிறுப்பிட்டிக் கிராமத்திலும் சிறுப்பிட்டி கிராமத்துக்கு வெளியிலும் ஆலயத்தின் பெயரில் தர்மசாசனம் செய்யப்பட்டுள்ளது. தர்மசாசன காணியை கையாளுவோர் தர்மசாசனம் செய்தவர்களின் விருப்பத்துக்கு அமைய ஆலயத்துக்கு காணிகளில் இருந்து கிடைக்கும் வருவாய் முழுவதையும் வழங்கி உதவுவது ஆலயத்தை மேலும் சிறப்புற நடத்துவதற்கும் திருப்பணிகளை திட்டமிட்ட முறையில் நிறைவு செய்வதற்கும் உதவும்" என ஆலய பரிபாலன சபையின் உப தலைவர் மு. இராமநாதன் தெரிவித்தார்.

ஆலயம் ஆரம்பகாலத்தில் தனிப்பட்டவர்களின் முகாமைத்துவத்தின் கீழ் செயற்பட்ட போதிலும் இடைக்காலத்தில் ஊர்ப் பொதுமக்களை உள்ளடக்கிய பரிபாலன சபையிடம் கையளிக்கப்பட்டு சிறப்பான முறையில் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. ஆண்டு தோறும் சித்திரை பௌர்ணமி நாளில் ஆலய மண்டபத்தில் பொதுக் கூட்டத்தை கூட்டி செயற்பாட்டு அறிக்கை, கணக்கறிக்கை என்பவற்றை அடியவர்களுக்கு சமர்ப்பித்துச் சீர்செய்வதோடு புதிய பரிபாலன சபையை தெரிவு

செய்வது ஆலய பரிபாலன சபையின் அங்கீகரிக்கப்பட்ட உபவிதிகள் பிரகாரம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

தற்பொழுது நடைமுறையில் உள்ள ஆலய பரிபாலன சபையின் தலைவராக க.ஸ்ரீஸ்கந்தராசா, உபதலைவர் மு.இராமநாதன், செயலாளர் செ.விசுவலிங்கம், உப செயலாளர் க.குணசங்கர், பொருளாளர் சு.கனகராசாவோடு 6 பேர் கொண்ட நிர்வாகக்குழு உறுப்பினர்களும் இணைந்து ஆலயத்தின் திருப்பணி உள்ளடங் கலான அனைத்துப் பணிகளையும் சிறப்புடன் மேற்கொண்டு வருகின்றனர். ஆலயத்தின் பரம்பரை பூசகர்களாக சிவஸ்ரீ குருமூர்த்தி ஐயர், காமாட்சிக் குருக்கள் நித்திய, நைமித்திய கிரியைகளை முன்னர் செய்து வந்தபோதிலும் தற்பொழுது நீர்வேலி வாய்க்கால் தரவை பிள்ளையார் கோயிலில் பிரதமகுரு சிவஸ்ரீ ஜெயந்திநாதக் குருக்களும் அவரின் பரம்பரையினரும் சிறப்புடன் மேற்கொண்டு வருகின்றனர். பூசகர்கள் தங்கியிருந்து கிருத்தியங்கள் செய்வதற்கு வசதியாக "குருக்கள் வீடு" புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. 1995ஆம் ஆண்டு ஓகஸ்ட் 28ஆம் திகதி புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா நடைபெற்றது. 15லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட சித்திரத்தேருக்கான செலவை சுவிஸில் வசிக்கும் கனகநாயகம் (பப்பு) வழங்கினார். அத்துடன் தற்பொழுது ஆலயப்பணிக்கும் நிதி உதவி வழங்கி வருவதாகவும் சிறுப்பிட்டியில் இருக்கும்போது சிறிய அளவில் வாழைக்குலை வியாபாரம் செய்தவரும் அம்மன் அருளால் சுவிஸில் பெரும் தனவந்தராக வளமுடன் வாழ்வதாகவும் திருப்பணிச்சபையின் செயலாளர் செ. விசுவலிங்கம் கூறுகின்றார்.

1995ஆம் ஆண்டு ஒக்டோபர் மாத இடப்பெயர்வின்போது ஆலயச் சுற்றாடலில் ஷெல்தாக்குதலால் சேதங்கள் ஏற்பட்டுள்ளபோதிலும் புதிய சித்திரத்தேருக்கோ ஆலயத்துக்கோ எந்தவித சேதமும் ஏற்படவில்லை. அனைத்தும் உள்ளபடியே இருந்தன. 1996இல் மீளக்குடியேறியபோது அம்மனின் புதுமையை வியந்து அடியவர் மனம் மகிழ்ந்தனர். அருள்வியாபகம் நிறைந்த சிறுப்பிட்டி மத்தி கிரியம்பை மனோன்மணியம்பாள் ஈழத்தில் தலைசிறந்த அருள்மிகு அம்பாள் ஆலயங்களில் ஒன்றாக அடியவர்களால் கருதப்படுகின்றது. காவல் தெய்வம் காத்தவராயராக தான்தோன்றிக் கல்லாக உருக்கொண்டு மக்களை காத்து இன்று மனோன்மணி அம்பாளாக அருளாட்சி செய்யும் அம்பாளை மக்கள் பல பெயர் கொண்டு அழைக் கின்றனர்.

காத்தவராயராகக் கோயில் கொண்ட காலப்பகுதியில் நடந்ததாக மக்கள் பேசிக்கொள்ளும் ஆலயத்தின், அற்புதம் தொடர்பான கதையில் அம்மன் ஆலயம் அமைக்கப்பட முன்னரே காலத்தால் முந்திய கோயிலாக காத்தவராயர் இருந்தார்.

காடு திருத்தி களனியாக்கிய வேளையில் பெரும்புற்றாக இருந்த பெரு நிலத்தில் பெரிய கல்லொன்றில் காத்தவராயர் உருவம் தென்பட்டது. அதற்கு பொங்கலும் பூசையும் செய்து அநாதியாக வழிபட்டனர். அந்தக் காலப்பகுதியில் அங்கு வாழ்ந்து வழிபாடாற்றிய ஒருவரை ஒல்லாந்து ஆட்சியாளர் பிடித்துத் தண்டனையாக அலுப்பாற்றி கோட்டையில் சிறையிட்டனர். சிறைப்பிடிக்கப்பட்ட அவர் இன்றி பொங்கலோ பூசையோ நடைபெறாது என காத்தவராயர் ஆலயத்தின் முன் பலி கிடந்தனர் உறவினர்கள். என்ன அற்புதம் உறவினர்கள் திகைக்கும் வண்ணம் சிறைப்பட்டவர் பொங்கல் குடத்தை கையில் ஏந்திய வண்ணம் ஆலய வாசலில் வந்து நின்று உறவினர்களுக்கு ஆறுதல் கூறி உரையாடினார். உறவினர்கள் காத்தவராயனின் அருள்வியாபகத்தை நினைத்து மகிழ்ச்சியுடன் ஆடிப்பாடி காத்தவராயனுக்கு பொங்கல், பூசை இட்டு வழிபட்டனர்.

குறித்த காலப்பகுதியில் இருந்து காத்தவராயனின் அருள்வியாபகத்தை வியந்து மரபுவழி காத்தான்கூத்து மேடையேற்றி ஊரே கூடியிருந்து பார்த்து மகிழும் பாரம்பரியம் இன்று வரையும் புத்தூர் இறையில் நடந்து வருவது உண்டு. மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் காத்தவராயன் ஆலயம் பரிவாரத் தெய்வங்களில் ஒன்றாக உட்பிரகாரத்தில் கோயில் அமைத்து வழிபடப்படுகிறது. இன்றும் காத்தவராயன் ஆலயத்தின் மூல விக்கிரகமாக அநாதியில் இருந்து வழிபட்ட தான்தோன்றிக் கல்லே காணப்படுகின்றது.

காத்தவராயர் ஆலயத்தை ஒவசியர் இளையதம்பியின் சந்ததியினர் உரிய முறையில் காலவோட்டத்துக்கு ஏற்ப பரிபாலித்து வருகின்றனர். காவல் தெய்வங்களாக மேலும் வைரவர் திரிசூலமும், சந்தான கோபாலன் உருவமும் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபடப்பட்டு வருகின்றது. ஆலயத்தில் எழுந்தருளி மூர்த்தங்களாக ஸ்ரீ மனோன்மணி அம்பாள், விநாயகர், துர்க்காதேவி, விஷ்ணு (தேவியர் சகிதம்), காமாட்சி அம்பாள், கண்ணகை அம்பாள், சந்தானகோபாலர் உள்ளிட்ட ஏழு மூர்த்தங்களும் பரிவார மூர்த்தங்களாக விநாயகர் (கருங்கற்சிலை), விஷ்ணு (கருங்கற்சிலை), முருகன் (வேல்), காத்தவராயன் (தான்தோன்றிக்கல்), வைரவர், துர்க்கை (கருங்கற்சிலை) வழிபடப்படுகின்றன.

மனோன்மணி அம்பாள் ஆலயத்துக்கும் புத்தூர் சிவன் கோயிலுக்கும் நிலாவரை சைலேஸ்வரத்துக்கும் நெருக்கமான தொடர்புகள் உண்டு. ஆரம்ப காலத்தில் அம்பாள் தீர்த்தமாடுவதற்கு புத்தூர் வழியாக நிலாவரை (இராமர் தீர்த்தம்) க்குச்சென்று வருவதாக இருந்தது. பிற்காலத்தில் நிலாவரை ஆழ்கிணறு அகப்புறச் சூழலால் தூய்மை குறைந்ததை அடுத்து நிலாவரைக்குச் செல்லாமல் ஆலயத்

திருமஞ்சனக் கிணற்றிலேயே தீர்த்தம் ஆடப்படுகிறது. ஆலய வாசலில் தீர்த்தக்கேணி அமைக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் தீர்த்தக்கேணியைப் புனரமைப்புச் செய்து அதில் தீர்த்தம் ஆட ஏற்பாடுகள் செய்யவிருப்பதாக ஆலய பரிபாலன சபையின் தலைவர் க.ஸ்ரீஸ்கந்தராஜா தெரிவித்தார்.

ஆவணிப் பூரணையில் தீர்த்தோற்சவம் நடைபெறும் வகையில் பதினொரு தினங்கள் பெருந்திருவிழா நடைபெறும். எட்டாம் திருவிழா வேட்டைத் திருவிழாவாகப் பெரும் எடுப்பில் கொண்டாடப்படும். அம்பாள் எழுந்தருளி ஊரை வலம்வந்து வேட்டையாடி சிறுப்பிட்டி ஞானவைரவர் ஆலயத்துக்குச் சென்று அடியவர்களையும், ஊர்மக்களையும் காத்தருளுகின்றாள். ஆலயத்தின் பாவனைக்கு இந்துக் கலாச்சார அமைச்சராக தி.மகேஸ்வரன் பதவி வகித்த காலப் பகுதியில் ஓட்டோ அன்பளிப்பாக வழங்கப்பட்டு தற்போது பாவனையில் உள்ளது.

ஆலயத்துக்கு அடியவர்களால் தர்மசாதனம் செய்யப்பட்டுள்ள 200 பரப்புக்கு மேற்பட்ட காணியின் வருமானம் உரிய முறையில் ஆலயத்தை வந்தடையாமல் இருப்பது குறையாக இருப்பதாகக் கூறிய பரிபாலன சபையின் பொருளாளர் செ. விசுவலிங்கம் இது தொடர்பாக எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாக கவலை தெரிவித்தார். 1991ஆம் (19.09.1991) ஆண்டு நடைபெற்ற மஹாகும்பாபிஷேகத்தை அடுத்து ஆலயம் முழுமையாகப் புனரமைப்புச் செய்யப்பட்டு பொழிந்த வெள்ளைக் கல்லால் மூலஸ்தானம் நிர்மாணிக்கப்பட்டு மூடுமண்டபம், மகாமண்டபம் உட்பட முழுமையாக 150 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ள ஆலயத்தில் மஹாகும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை (02.09.2011) நடைபெறவுள்ளது. இன்று எண்ணெய்க்காப்பு அடியவர்களால் அம்பாளுக்குச் சாத்தப்படுகின்றது. மனோன்மணி அம்பாள் ஆலயம் மேலும் அழகு பெற்று சிறுப்பிட்டிக்கு அழகூட்டுவதோடு அம்பாளின் தர்மசாசனங்களால் ஊர் வளம்பெற வாழ்த்துவோம்.

உதயன் - 25.08.2011, 01.09.2011



# 56 குலம் காக்க கோயில் கொண்ட மாசிவன் ஸ்ரீ மீனாட்சி அம்மன்

குடும்பங்களுக்கும் குலங்களுக்கும் தனித்தனியாக கோயில்கள் உண்டு. அந்தவகையில் வீடுகளில் உள்ள வேம்பு, புளி, பூவரசு, நாவல் போன்ற மரங்களை புனித மரங்களாகக் கருதி தமது குல தெய்வங்களை அதன் கீழ் வைத்து தீபதூபம் ஏற்றி தினசரி தமது விருப்பத்துக்கு ஏற்ப வழிபாடு செய்வதும் வெள்ளி, செவ்வாய்க் கிழமைகளிலும் விசேட தினங்களிலும் விளக்கேற்றி வழிபடுவதும், பொங்கல் மடை செய்வதும் தமது மனக்குறையை போக்கிக்கொள்வதும் கிராம மட்டங்களில் நடைபெறும் நிகழ்வாகும்.

இந்த வகையில் மட்டுவில் கிராமத்தில் இருந்து வந்து திருமணம் செய்த பெண்மணி தமது குல தெய்வமாக வழிபட்ட காளியை நீர்வேலி மாசிவன் பதியில் பிரதிஷ்டை செய்து வழிபட்டார். அச்செழுக் கிராமத்தின் கிழக்கு மூலையில் அமைந்திருக்கும் "கூத்துவரி" என்ற பெயர் கொண்ட காணியில் அமைந்திருக்கும் வேப்ப மரத்தின் கீழ் காணி எல்லையில் கோயில் அமைத்து ஊரவர் ஒன்றுகூடி வழிபட்டனர்.

கூத்துவரி என்ற காணியில் ஊரவர் ஒன்று கூடி தாங்கள் பயிற்சி செய்து பழகிக் கொண்ட இயல், இசை, நாடகம், முத்தமிழும் ஒன்றாக அமைந்த கூத்துக்களை

மேடையேற்றி மகிழும் இடம். அந்த வகையில்தான் அந்தக் காணிக்கு "கூத்து வரி" என்றபெயர் வரக் காரணம் என ஊரின் மூத்த பிரஜைகள் கூறுகின்றனர்.

அச்செழுக் கிராமத்தின் எல்லையில் அமைந்த காளி என்பதால் எல்லைக்காளி என்றும் அழைக்கப்பட்டது. காளி தங்களையும் தமது ஊரையும் காவல் செய்து அருளுவதாக மக்கள் நம்பினர். இந்த வகையில் "மட்டுவில் அணை பிடித்த தேவியே நீர்வை பதி மாசிவன் மங்கையே" என உள்ளூர் பாவலர் பாடிய பாடலில் குறிப்பிடப் பட்டிருப்பதாகவும் கோயிலில் பூர்வீக ஸ்தாபகரின் வழிவந்த வாரிசுகளில் ஒருவரான மூதாட்டி கனகம்மா (வயது 77) இராகத்தோடு பாடிக் காண்பித்தார். அவரே அம்பாளின் ஸ்தாபிதம் பற்றிய பூர்வீக வரலாற்றையும் காளி அம்பாளின் வரலாற்றை யும் வாயாரக் கூறி மகிழ்ந்தார்.

பூர்வீகத்தில் இருந்து காளி அம்பாளாக வழிபடப்பட்டு வந்த அம்மனின் பெயர் 1986ஆம் ஆண்டு புனரமைப்புச் செய்யும் போது "ஸ்ரீ மீனாட்ஷி அம்பாள்" என பெயர்மாற்றம் செய்யப்பட்டதாக "ஆலய வரலாறும் திருவூஞ்சல் பதிகமும்" என்ற நூ லில் குறிப்பிடப்பட்டுள்ளது. மாசிவன் மீனாட்சி அம்மன் ஆலயம் நீர்வேலி மாசிவன் வீதியும், அச்சுவேலி நல்லூர் இராசவீதியும் சந்திக்கும் நாற்சந்தியில் இருந்து மேற்கு நோக்கிச் செல்லும் வீதியில் கூப்பிடு தூரத்தில் அமைந்துள்ளது. வீதி ஓரத்தில் வடக்கு முகமாக எழுந்தருளியிருந்து அருள்செய்கின்றாள் அம்பாள்.

அம்பாள் தமது ஊரின் நடுவிடத்தில் கோயில்கொண்டிருப்பதால் ஊர் சிறப்பாக எந்தவிதமான பாதிப்பும் இன்றி வளமுடன் இருப்பதாகவும் ஊரவர் அம்மன அருள்பெற்று வசதியுடன் வாழ்வதாகவும் நம்பிக்கொள்கின்றனர். இதனை வாயாரக் கூறி மகிழ்கின்றனர். அம்பாள் மீது நம்பிக்கை வைத்து நோக்குவதை அம்பாள் அருளுவதாகவும் அம்பாளின் அனுக்கிரகமே போர்க்காலத்தில்கூட தமது கிராமம் பெரும் பாதிப்புக்கு உள்ளாகாமல் இருந்ததாகவும் ஊரவர்கள் கூறிக்கொள்கின்றனர்.

அம்பாளின் பெருமை பற்றி கூறும்போது அம்பாளை மட்டுவிலில் இருந்து கொண்டுவந்து மாசிவனில் ஸ்தாபிதம் செய்த பெண்ணின் வழிவந்த சந்ததியினர் தாங்கள் வாழும் ஊர்களில் எல்லாம் அம்பாளின் பெயரில் கோயில் அமைத்து வழிபட்டு வருவதாகவும் இந்த வகையில் பத்துக்கு மேற்பட்ட இடங்களில் அம்பாளுக்கு அழகிய கோயில்கள் அமைக்கப்பட்டிருப்பதாகவும் கூறினர்.

"கூத்துவரி" என்ற தோம்பு பெயர் கொண்ட காணியில் வேப்ப மரத்தின் கீழ் கோயில்கொண்ட அம்பாளின் அனுக்கிரகத்தினால் ஊரவர் எல்லாம் ஒன்றுகூடி உட்பிரகாரம் முழுவதையும் சீமெந்தால் மூடு செய்வதற்கான பெரும் திருப்பணி வேலை நடைபெற்று வருகின்றது. ஆலயத்தின் முன்பக்கத்தில் ஒரு பகுதி அலங்கார

வளைவுகள் கொண்டதாக சீமெந்தினால் மூடு சாந்து செய்யப்பட்டுள்ளது. மீனாட்சி அம்பாளுக்கு ஆடிப்பூரத்தை தீர்த்தத் திருவிழாவாகக் கொண்டு 12 தினங்கள் வருடாந்த மகோற்சவம் நடைபெறுகின்றது. திருவிழாக்காலத்தில் ஊருக்கு வெளியே இருக்கும் மாசிவனை பிறப்பிடமாகக் கொண்டவர்கள் ஊருக்கு வந்து அம்பாளின் உற்சவத்தில் கலந்துகொள்வதோடு உற்சவ உபயகாரர்களாகவும் இருந்து மகிழ்கின்றனர்.

மட்டுவிலில் இருந்து மணமகளாக மாசிவன் வந்த மங்கை தன்னோடு எடுத்து வந்து தனது இல்லத்துக்கு அருகில் வேப்ப மரத்தடியில் பிரதிஷ்டை செய்ததோடு குடும்பமாக வழிபட்டு அருள் பெற்றார். மாசிவன் எல்லைக் காளி அம்பாள் ஊரின் நடுவிடத்தில் உற்ற தெய்வமாக இருந்து அடியவர்கள் வேண்டுவதை அருளுவதாக ஊரவர்கள் அம்பாளின் அருள்வியாபகத்தை வியந்து மகிழ்கின்றனர்.

காளி அம்பாளாக மாசிவன் வந்தவள் ஸ்ரீ மீனாட்சி அம்பாளாக பெயர் மாற்றம் பெற்றாள். காலவோட்டத்தில் ஏற்பட்ட நிகழ்வு ஊரின் மத்தியில் காவல் தெய்வமாக அமர்ந்து அருள்பாலிக்கும் ஸ்ரீ மீனாட்சி அம்பாள் அடியவர்கள் குறையிரந்து சமர்ப்பிக்கும் வேண்டுதல்களை குறுகிய காலத்தில் நிறைவு செய்வதோடு அடியவர்களுக்கு காட்சியும் கொடுத்து அவர்களின் குறைகளை போக்குகின்றார் என மூத்த பிரசைகள் கூறி மகிழ்கின்றனர்.

ஓலைக் கொட்டிலில் இருந்த அம்பாளுக்கு இன்று சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய அழகான ஆலயம் அமைக்கப்பட்டிருப்பதோடு முதற்கட்டமாக ஒருகோடி உத்தேச மதிப்பீட்டில் ஆலய முகப்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ள மூடு சாந்து மண்டபம் உட்பிரகாரம் முழுவதையும் உள்ளடக்கியதாக கட்டம் கட்டமாக நிறைவு செய்ய தீர்மானித்திருப்பதாக ஆலய பரிபாலன சபையின் செயலாளர் இ.கஜேந்திரா தெரிவித்தார். அதுமட்டுமல்ல அழகான சித்திரத்தேர் மற்றும் கொடித்தம்பம் அமைத்து வேதாகம முறைப்படி கொடியேற்றி திருவிழா செய்ய அடியவர்கள் உத்தேசித்திருப்பதாக கூறினார்.

ஆலயத்திருப்பணிக்கு உள்ளூர் அடியவர்களும், புலம்பெயர்ந்த உறவுகளும் தாராளமாக வாரிவழங்கிவருவதோடு ஆலயத்தில் அலங்கார உற்சவம் நடைபெறும் ஆடி மாதம் ஊரில் இருந்து பிரிந்து வெளியிடங்களிலும் வெளிநாடுகளிலும் வாழும் உறவினர் ஊரில் வந்து தங்கியிருந்து உற்சவங்களில் கலந்து மகிழ்கின்றனர்.

பன்னிரண்டு பரப்பு நிலம் ஆலயத்துக்குரிய காணியாக உள்ள போதிலும் ஆலயத்தின் சுற்றாடலில் உள்ள நிலங்களை ஆலயத்துக்கு காணிக்கையாக வழங்குவதற்கு அடியவர்கள் முன்வந்திருப்பதாகவும், புதிய சித்திரத்தேர்

ஓடுவதற்கான வெளிவீதி விஸ்தரிப்பின்போது காணிகளை பெற்று பயன்படுத்த தீர்மானித்திருப்பதாக ஆலய பரிபாலன சபை செயலாளர் தெரிவித்தார்.

அற்புதங்கள் நிறை மாசிவன் ஸ்ரீ மீனாட்சி அம்பாளின் வருடாந்த மகோற்சவம் அலங்காரத் திருவிழாவாக பன்னிரண்டு தினங்கள் நடைபெறுகின்றன. ஆடிப் பூரத்தில் மணவாளக்கோல உற்சவம் நடைபெறக்கூடியதாக அதற்கு முந்திய பதினொருதினங்களும் திருவிழாக்கள் நடைபெறும். ஆலயத்தில் நடைபெறும் நவராத்திரி உற்சவங்களின் இறுதிநாள் விஜயதசமி அன்று நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் அடியார்கள் சூழ அம்பாளின் ஆலயத்துக்கு எழுந்தருளி வாழைவெட்டி அருள்புரிவது அற்புதமான நிகழ்வு. அத்துடன் ஆண்டுதோறும் விசேட உற்சவங்கள் தை அமாவாசை, சித்திரை பௌர்ணமி, ஆடி அமாவாசை, பங்குனித்திங்கள் மற்றும் திருவெம்பாவை, வைகாசி விசாகம், தீபாவளி, மாதப்பிறப்பு, வருடப்பிறப்பு, தைப்பொங்கல் தினங்களில் விசேட உற்சவங்கள் நடைபெறும். வருடாந்த மகோற்சவம் மற்றும் விசேட உற்சவ காலங்களில் ஊரே கூடி அம்பாளின் அருள்பெற்று உய்கின்றனர்.

1986ஆம் ஆண்டு ஊரவர்கள் ஒன்றுகூடி ஆலயத்துக்கு பரிபாலனசபை ஒன்றை அமைத்து ஆலயத்திருப்பணி மேற்கொண்டதோடு காளி கோயில் என அழைக்கப்பட்ட ஆலயத்தை ஸ்ரீ மீனாட்சி அம்பாள் என பெயர் மாற்றம் செய்தனர். 1986ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் 20ஆம் நாள் (05.09.1986) கன்னி லக்கின சுபமுகூர்த்த வேளையில் முதலாவது கும்பாபிஷேகம் நடைபெற்றது. இரண்டாவது கும்பாபிஷேகம் 2000ஆம் ஆண்டு ஐப்பசித் திங்கள் 23ஆம் நாள் (08.11.2000) நடைபெற்றது.

மீனாட்சி அம்பாள் என பெயர் மாற்றம் செய்ததோடு மூலஸ்தானம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், தரிசனமண்டபம் மற்றும் திருமஞ்சனக்கிணறு அமைத்து ஸ்ரீ மீனாட்சி அம்பாள், விநாயகர், முருகன், வைரவர், நாகதம்பிரான், நந்தீஸ்வரர் போன்ற மூர்த்தங்களை எழுந்தருளச் செய்து பரிவார தெய்வங்களுக்கு கோயில் அமைத்து பூசை வழிபாடு நடைபெறுகின்றது. ஆலயப் பூசகர்களாக சிவஸ்ரீ.க.தியாகராசக் குருக்கள் அவரின் மகன் பாலசுப்பிரமணிய சர்மா மற்றும் இராமகிருஷ்ண சர்மா ஆகியோர் கடமையாற்றி வந்தனர். 1986ஆம் ஆண்டு இடம்பெற்ற கும்பாபிஷேகத்தை தொடர்ந்து பிரம்மஸ்ரீ குகதாஸசர்மாவும் அவரது மகன் பாலகிருஷ்ண சர்மாவும் ஆலய பூசை கிரியைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

உதயன் - 27.04.2013, 03.05.2013



# 57 அருள்வாக்குப் புகழ் பெருக்கும் சிறுப்பிட்டி ஸ்ரீ விஷ்ணு துர்க்கா

இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தனது அற்புதங்களினால் அடியவர்களை மெய்மறக்கச் செய்து அடிமைகொண்டதோடு சிறுப்பிட்டியில் கோயில் கொண்டு அற்புதங்களால் அருளாட்சி செய்யும் சிறுப்பிட்டி ஸ்ரீ விஷ்ணு துர்க்கா அன்று முதல் இன்றுவரை அடியவர்கள் வேண்டியதை வேண்டியவாறு அருளி வருகிறாள். யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியில், யாழ்ப்பாணத்தில் இருந்து 15ஆவது கிலோமீற்றர் சிறுப்பிட்டி வடக்கில் வீதிக்கு கிழக்குப் புறத்தில் வீதிக்கு அருகில் அழகுற அமைந்துள்ளது.

ஆலயம் தோன்றிய வரலாறும் அற்புதம் நிறைந்தது. அடியவர்களை மெய்மறக்கச் செய்வது சிறுப்பிட்டி வாழ் வர்த்தகப் பிரமுகர் காசிப்பிள்ளை நடராசா விஷ்ணு துர்க்கா பக்தர் அடக்கமே உருவானவர். இடைக்காலத்தில் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளானபோதும் இறை பக்தியில் தளம்பாதவர். ஞாயிற்றுக்கிழமை தோறும் வல்லிபுர ஆழ்வாரைச் சென்று தரிசித்து வாழ்ந்து வந்தவர்.

ஒருநாள் மாயவனை வழிபட்டுவிட்டு திரும்பும் வேளை தனது பொருளாதார இடர்பாட்டை எண்ணியவாறு வந்து கொண்டிருந்ததாகவும் அந்த நேரம் சைக்கிளின்

பின் ஆசனத்தில் ஒருவர் அமர்ந்திருப்பது போலவும், கையில் வாழைக்குலை ஒன்றை தாங்கிப் பிடிப்பது போலவும் உணர்வு ஏற்பட வீடு வந்து சேர்ந்துள்ளதாகவும் எவ்வாறு வீடு வந்து சேர்ந்தேன் என்பது தெரியாத நிலையில் வந்து சேர்ந்ததை நினைத்து விஷ்ணு, துர்க்கை அம்பாள் படங்களை வர்த்தக நிலையத்தில் வைத்து அன்று தீப தூபம் காட்டி வழிபட்டார். அன்று இரவு அவரின் கனவில் தோன்றிய அம்பாள் "நான் உன்னோடு இருக்கின்றேன், நீ ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம், என்னை வைத்து 'ஆதரி' என்று கூறக்கேட்டு வியந்ததோடு அம்பாளின் அருள்வாக்கின் பிரகாரம் தனது வர்த்தக நிலையத்துக்கு அருகில் உள்ள சொந்தக் காணியில் சிறு கோயில் அமைத்து தானே பூசை செய்து வழிபட்டார்.

செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமைகளில் கலை வந்து ஆடி அருள்வாக்கு கூறினார். ஆலய ஸ்தாபகர் நடராசா கூறிய வாக்கு முழுமையாக பலித்தது. அம்மன் வாக்காக ஏற்றுக்கொள்ளப்பட்டது. சொன்னபடியே செயல்கள் நடந்தன. மக்கள் தமது குறையை நிவர்த்திசெய்ய அன்றில் இருந்து இன்றுவரை கூடி வருகின்றனர். செவ்வாய்க்கிழமைகளில் அம்பாளுக்கு வேப்பிலை மாலை சாத்தி வழிபட்டால் குறித்த நாளில் நினைத்த கருமம் நிறைவேறும் என்பது நடைமுறையில் உண்மை யாகி வருகின்றது.

தேசிக்காயை வெட்டி அதன் பாதியில் நெய் விட்டு ராகுகாலம் தவிர்த்து தீபமேற்றி னால் நினைத்த கருமம் கைகூடும். நாளாந்தம் நெய்விளக்கேற்றினால் நினைத்த கருமம் அம்பாளின் அருளினால் நிறைவேறும் என்ற பெருநம்பிக்கையோடு அடியவர்கள் வழிபட்டு வருகின்றனர். இந்த வகையில் தாய்மைப்பேறு வேண்டியும், வாழ்க்கைத்துணை வேண்டியும், பெண்கள் பெருமளவில் நேர்த்தி செய்து வழிபட்டு வருகின்றனர். அத்துடன் இழந்த பொருள் கிடைக்க, தடைப்பட்ட வெளிநாட்டு பயணங்கள் மற்றும் சுபகருமங்கள் நிறைவேற அடியார்கள் நேர்த்தி வைத்து வழிபட்டு வருகின்றனர்.

தற்பொழுது வேதாகம முறைப்படி நித்தியபூசை மற்றும் கிரியைகள் நடைபெறும் ஆலயத்தின் பிரதம பூசகர் சிவத்திரு இரத்தின பரமேஸ்வர ஐயா கூறுகையில் "அம்பாளின் அருள்வியாபகம் அற்புதமானது. அம்பாளின் மீது மெய்யன்போடு நேர்த்திவைத்து வழிபடும் அடியவர்கள் உரிய தினத்தின் பேறு பெற்று மனநிறை வோடு செல்கின்றனர். இது தனித்துவமான புதுமை" எனக் கூறினார்.

ஆலயத்தின் அற்புதங்களும் அருள்வியாபகமும் சொல்லில் அடங்காதவை. யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதியில் இருந்தும் நாளாந்தம் அடியவர்கள் வந்து வழிபட்டு வருகின்றனர். ஆலயத்தை வழிபடாமல் மற்றும் ஆலயத்துக்குக் காணிக்கை

செலுத்தாமல் செல்வதால் பிரயாணத்தில் தடங்கல், இடையூறு ஏற்படலாம் என்ற நம்பிக்கையால் தனியார் சிற்றூர்தி வாகன ஓட்டுநர்கள் மற்றும் வாகன ஓட்டுநர்கள் ஆலய உண்டியலில் காணிக்கை செலுத்தி வழிபாடு செய்யும் நடைமுறையும் பின்பற்றப்பட்டு வருகின்றது.

ஸ்ரீ விஷ்ணு துர்க்கா சிறுப்பிட்டியில் கோயில் கொண்ட காலப்பகுதியில் ஆலயத்தின் ஸ்தாபகரும் தர்மகர்த்தாவுமான காசிப்பிள்ளை நடராசாவுக்கு அம்பாள் நல்கிய அருள்வாக்கின் பிரகாரம் தனக்குச் சொந்தமான "அத்தா" என்ற காணியில் ஆகமவிதிமுறைப்படி கோயில் கட்டுவதற்கு தீர்மானித்தார். இதன் ஒருகட்டமாக அளவெட்டி அருட்கவி விநாசித்தம்பி ஐயாவை அழைத்து வந்து ஆலயத்துக்கான நிலையத்தை வாஸ்துசாத்திர விதிமுறைப்படி நோக்கிய வேளையில் ஸ்தாபகரின் மனையாள் குகனேஸ்வரி கலைவந்து ஆடியதோடு மண்வெட்டியால் மூன்று தடவை மண்ணை வெட்டி எடுத்து "இது தான் நான் இருக்கும் இடம்" என அடையாளம் செய்து அருள்வாக்கு கூறியதால் அந்த இடத்திலேயே மூலஸ்தானமாக கொண்டு அழகான ஆலயம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

ஸ்தாபகர் பொருளாதார நிலையில் இடர்பட்ட காலம் அம்பாள் அருளால் முற்றாக மாறி பல இலட்சம் ரூபா செலவில் ஆலயத்தை ஆகம விதிப்படி கட்டி அழகு படுத்தியதோடு 1988ஆம் ஆண்டு தைத் திங்கள் பூர நட்சத்திரத்தில் முதலாவது கும்பாபிஷேகமும் நடைபெற்றது. தொடர்ந்து 45 தினங்கள் மண்டலாபிஷேகமும் நடைபெற்றது. ஊர் மக்களை உபயகாரர்களாகக் கொண்டு வருடாந்தம் 11 தினங்கள் மஹோற்சவம் நடைபெற்று வருகின்றது.

சிறுப்பிட்டியில் கோயில் கொண்டு நல்லருள் பாலிக்கும் ஸ்ரீ விஷ்ணு துர்க்கா, நம்பிக்கையோடு நேர்த்திவைத்து வழிபாடு செய்பவர்களுக்கு "குறித்த தினத்தில் நினைத்தபடி நல்லருள் வழங்குவதை" அடியவர்கள் மெய்மறந்து கூறிமகிழ்கின்றனர். அந்த வகையில் ஆலயத்துக்கும், பிரதம பூசாரிக்கும் காணிக்கை செலுத்தி நன்றி பகர்வது நாளாந்த நடைமுறையாகும்.

ஆலயத்தின் முதலாவது கும்பாபிஷேகம் 1988ஆம் ஆண்டு தைத்திங்கள் பூர நட்சத்திரத்தில் பெருவிழாவாக நடைபெற்றது. கும்பாபிஷேகத்தை ஈவினை சித்திவிநாயகர் ஆலயத்தின் பிரதம குரு சிவாகம கிரியாமணி சிவஸ்ரீ தியாக கெங்காதரக்குருக்கள் தலைமைக் குருவாக முன்னின்று நடத்தி வைத்தார். அதைத் தொடர்ந்து 45 நாள்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்றது.

வீரத்தின் சக்தியாகிய துர்க்கா தேவி சிவத்தோடு சேர்ந்த நிலையில் "சிவதுர்க்கா" என்றும் காத்தல் கடவுளாகிய ஸ்ரீ விஷ்ணுவோடு சேர்ந்த நிலையில் "ஸ்ரீ

விஷ்ணு துர்க்கா" என்றும் போற்றப்படுவதோடு ஸ்ரீ விஷ்ணு துர்க்கா மூர்த்தம் அடியவர்கள் வேண்டியவாறு நல்லருள் பெறுவதற்கும், இலகுவாக நேர்த்திகளை நிறைவு செய்வதற்கும் ஏற்றது. அடியவர்களுக்கு நல்லருள் பாலிப்பது என சிவஸ்ரீ தியாககெங்காதரக் குருக்கள் கூறினார்.

கும்பாபிஷேக தினமான "தை பூரணை தினத்தை" நிறைவு நாளாக சங்காபிஷேகமாகக் கொண்டு வருடாந்த மஹோற்சவங்கள் 11 தினங்கள் நடைபெற்று வருகின்றன. கர்ப்பக் கிரகத்தில் துர்க்காதேவி பிரதிட்டை செய்யப்பட்டிருப்பதோடு, ஆலயத்தின் உட்பிரகாரத்தில் பாம்பணையில் பள்ளிகொள்ளும் ஸ்ரீ விஷ்ணுவையும் எழுந்தருளச் செய்து நாளாந்தம் பூசை வழிபாடு செய்யப்படுகின்றது.

அழகான வேலைப்பாடு கொண்ட ஆலயமாகவும், அருள்வியாபகத்தோடு எழுந்தருளி அடியவர்களுக்கு வேண்டியதை வேண்டியவாறு வழங்கும் இஷ்ட தெய்வமாகவும் விளங்கும் துர்க்கா அம்பாளைப் பெருமளவில் பெண்கள் வழிபட்டு தங்களது விருப்பங்களை நிறைவுசெய்கின்றனர். செவ்வாய், வெள்ளி ஆகிய கிழமைகளில் பெருமளவில் அடியவர்கள் கூடுகின்றனர். தங்களது நேர்த்திகளை அம்பாளிடம் முன்வைத்து பக்தி வைராக்கியத்தோடு வழிபாடு செய்கின்றனர். ஆலயத்தின் நித்திய, நைமித்திய கிரியைகள் பூசைகளை இரத்தின பரமேஸ்வரக் குருக்கள் பக்திபூர்வமாகச் செய்து வருகின்ற போதிலும், வருடாந்த மஹோற்சவ பெருந்திருவிழா, கிரியைகள், பூசைகளை சிவஸ்ரீ தியாககெங்காதரக் குருக்கள் ஆண்டுதோறும் செய்துவருகின்றார்.

பதினொரு தினங்கள் திருவிழாக்கள் நடைபெறும். ஆண்டுதோறும் பக்தி பூர்வமாகவும் கோலாகலமாகவும் நடைபெறும் பத்துத் திருவிழா உபயகாரர்களாக ஊரிலுள்ள குடும்பங்கள் பொறுப்பேற்றுச் செய்துவரும் அதேவேளையில், தேர்த்திருவிழாவை ஆலய ஸ்தாபகரும் பரிபாலகருமான காசிப்பிள்ளை நடராசா குடும்பத்தினர் உபயமேற்றுச் செய்து வருகின்றனர்.

ஆலயத்தின் திருப்பணிகளை ஆலயத்தின் ஸ்தாபகர் குடும்பத்தினர் செய்து வரும் வேளைகளில் உள்ளூர் பொதுமக்களும் அடியவர்களும் தங்களால் இயன்றளவு வழங்கி ஒத்துழைத்து ஆலயத் திருப்பணிகளை நிறைவுசெய்து வருகின்றனர். அம்பாளின் அருள்வியாபகத்தில் செய்யப்பட்ட புதிய சித்திரத்தேர் 2011ஆம் ஆண்டு வெள்ளோட்டம் செய்யப்பட்டு 2011ஆம் ஆண்டு வருடாந்த மஹோற்சவத்தில் அம்பாள் புதிய சித்திரத்தேரில் ஆரோகணித்து அடியவர்களுக்கு நல்லருள் பாலித்தார்.

ஆண்டுதோறும் வருடாந்த பெரும் திருவிழாவோடு வாரந்தோறும் செவ்வாய், வெள்ளி ஆகிய கிழமைகளில் விசேட பூசை வழிபாடும், ஆடிச் செவ்வாய், நவராத்திரி,

தைபூசம், மாதப்பிறப்பு, வருடப்பிறப்பு, திருவெம்பாவை, தைப்பொங்கல் போன்ற விசேட காலங்களில் சிறப்பான பூசைவழிபாடும் உற்சவங்களும் நடைபெறுகின்றன. ஆலயம் தோற்றத்தில் சிறிதாக இருந்தாலும் அருள்வியாபகத்தில் பக்திபூர்வமான தெய்வீகச் சூழலிலும் மேலோங்கி உள்ளன.

அடியார்கள் அம்பாளை வழிபட்டு தங்கள் மனக்குறைகளைப் போக்கி நல்லருள் பேறு பெறுகின்றனர். வறுமையில் வாடிய உள்ளூர் வர்த்தகரான ஸ்தாபகர் நடராசா ஆண்டுதோறும் பெரும் பொருள் செலவில் திருப்பணிகளை நிறைவேற்றி, ஆலயத்தை பரிபாலனம் செய்து வருவது அம்பாளின் அருள்வியாபகமே எனக் கூறி மகிழ்கிறார். சிறுப்பிட்டி ஸ்ரீ விஸ்ணு துர்க்காவின் அருள் வியாபகத்தைப் போற்றி, திரு ஊஞ்சல் பதிகத்தை சிறுப்பிட்டி வாழ் ஆசிரியப் பெருந்தகை புலவர் இ.செல்லத்துரை பாடி அர்ப்பணம் செய்துள்ளார். அம்பாளின் அருள்பெற்று உய்வோமாக.

உதயன் - 02.011.2012, 08.11.2012



# 58 இயற்கையுடன் இணைந்து அருள் சுரக்கும் நீர்வேலி சப்த கன்னியர் ஆலயம்

மிகப்பெரிய ஆலமரத்தின் கீழ் எளிமையான ஆலயத்தில் வீற்றிருந்து அருளாட்சி செய்யும் நீர்வேலி வடக்கு பன்னாலை சப்த கன்னியர் ஆலயத்தின் அமைவிடமே அற்புதம் வாய்ந்தது. ஆலயத்தின் தோற்றமோ அதனிலும் அதியற்புதம். மிகப் பெரியதும் பரந்த கிளை அமைப்பைக் கொண்டதுமான ஆலமரத்தின் அடிமரப்பரப்பே ஆலயத்தின் பின்பக்கச் சுவர் கூரையின் முன்பக்கம் கம்பியால் அமைக்கப்பட்ட கதவுகள். இரண்டு மண்டபங்கள் சப்த கன்னியர்களின் திருவுருவ விக்கிரகங்கள் வரிசையாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.

ஆலயத்தை வழிபடச் செல்லும் அடியவர்களை குளிர்மையான கூடாரம் போல் பச்சைப்பசேல்என ஆலயத்தைமூடிநிற்கும்பெருவிருட்சமான ஆலமரமும்ஆலமரத்தில் அமர்ந்திருந்து அமைதியாக வாழும் பல நூற்றுக்கணக்கான பறவைகள் எழுப்பும் இயற்கை ஒலியும் அனைவரையும் மெய்மறக்கச் செய்யும். ஆலயத்தின் முதல் மண்டபத்தில் பிரான்மி, மகேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வராகினி, இந்திராணி, சாமுண்டி ஆகிய சப்த கன்னியரும் சமச்சீராகப் பீடத்தில் வீற்றிருப்பது அவர்களுக்கு நாளாந்தம் பூசை வழிபாட்டின்போது அலங்காரம் செய்து மாலை சார்த்தி இருப்பதும் தனியழகு. ஆலயம் தொடர்பான வரலாறே நீண்டகால பூர்வீக வரலாறு. சுமார்

350வருடங்களுக்கு முன்னர் முதலியார் என்பவரால் ஸ்தாபிதம் செய்யப்பட்ட அம்மன் ஆலயம் என்பதால் முதலியம்மன் ஆலயம் என்று அழைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியில் நீர்வேலிச் சந்தியில் இருந்து கிழக்குத் திசையாகச் செல்லும் ஒழுங்கையில் 500மீற்றர் தூரத்தில் சப்த கன்னியர் ஆலயம் அமைந்துள்ளது. ஆலய ஸ்தாபகர் தனது நிலத்தில் 15பரப்பை ஆலயத்துக் கென ஒதுக்கிவிட்டுள்ளார். ஆலயமும் ஆலயத்தை மூடிய நிலையில் நிற்கும் ஆலமரமும் அற்புதமான காட்சியாகும். மிகப்பெரிய அடிமரம் 51 விழுதுகள், கொப்புக்களை தாங்கிய பெரிய மரங்களாகக் காணப்படுகின்றன.

ஆலயத்தின் பூர்வீக வரலாறு தொடர்பாக தற்போது பரிபாலனம் செய்யும் கந்தையா வேலாயுதப்பிள்ளையும், சின்னத்துரை நடனசிவராசாவும் பின்வருமாறு கூறுகின்றனர். முதலியாரின் மாடுகளை மேய்ப்பதற்கு நீர்வேலி தரவைவெளிக்குக் கொண்டுசெல்லும் வாலிபன் தரவையில் வழிமாறி நீண்ட தூரம் அலைந்து திரிந்த வேளையில் கன்னிப்பெண் ஒருத்தி அவனை முதலியாரின் மாட்டுப் பட்டிக்கு அழைத்து வந்து விட்டு மறைந்துள்ளார்.

பின்னர் முதலியார் கனவில் தோன்றி குறித்த இடத்தில் தனக்கு ஆலயம் அமைத்து வழிபாடு செய்யுமாறு வேண்டியதால் அந்த இடத்தில் அம்மனுக்கு ஆலயம் அமைத்து பூசை வழிபாடு செய்யப்பட்டது. ஆண்டுதோறும் கார்த்திகை ரோகினியில் பொங்கல் வழிபாடு செய்து வந்ததாகவும் கூறப்படுகின்றது.

ஆரம்பத்தில் முதலி அம்மன் கோயில் என அழைக்கப்பட்டது. ஐந்து, ஆறு தலை முறைக்கு முந்தியது. முதலியாரின் சந்ததியினர் ஆலயத்தைப் பராமரித்துப் பூசை வழிபாடுகள் சந்ததிப் பூசகர்களால் நடத்தப்பட்டு வந்தன. கடந்த 10 வருடங்களுக்கு முன்னர் அம்மனின் வேண்டுதலுக்கு ஏற்ப முதலியாரின் சந்ததியினர் சப்த கன்னிகளை பிரதிஷ்டை செய்து 12தினங்கள் திருவிழாச் செய்து பொங்கல் மடைவைத்து வழிபடுவதாகவும் ஆலயத்தில் இறுதிப் பொங்கலின் போது முதலியார் சந்ததியைச் சேர்ந்த ஒருவரில் உருவந்து ஆடி அருள்வாக்கு கூறுவார். உருவந்து அருள்வாக்குக் கூறுவதை ஏளனம் செய்யும் வகையில் மதுபோதையில் உருவாடிய உறவினர் ஒருவர் அந்த இடத்திலேயே மயங்கி விழுந்து இரத்தம் கொப்பளிக்க அந்த இடத்திலேயே மரணமானதாகக் கூறினார்.

ஆலமரத்தடியில் நாகபாம்புகள் குடியிருக்கின்றன. யாருக்கும் எந்தக் கெடுதலையும் செய்வதில்லை அம்மன். அடியவர்களுக்குகாட்சிகொடுத்துமறைகின்றன. ஆலமரத்தில் யாரும் குழை வெட்டுவதில்லை. கட்டுப்பாட்டை மீறி வெட்டுபவர்கள் அம்மனால்

தண்டிக்கப்படுவர் என்ற நம்பிக்கை நிலவுகின்றது. ஆடு மாடுகள் நிலமட்டத்தில் உள்ள ஆலமரத்தின் கொப்புகளை மேய்கின்றன. ஆலயச் சூழலில் தவறுக்கு இடமே இல்லை. நீர்வேலி வடக்கில் ஊரின் மத்தியில் ஆலமர நிழலில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் சப்த கன்னியரின் அருள் வியாபகம் அடியவர்களினால் போற்றப்படுகின்றன. இந்து மதத்தின் மூலமூர்த்தியாகிய சிவன், படைத்தல் தெய்வமாகிய பிரமன், காத்தல் கடவுளாகிய விஷ்ணு ஆகிய மும்மூர்த்திகளின் சக்திகளாகிய மகேஸ்வரி, பிரான்மி, வைஷ்ணவி ஆகியோரும் முருகனின் சக்தியாகிய கௌமாரி, இந்திரனின் சக்தியாகிய இந்திராணி இயமனின் சக்தியாகிய சாமுண்டீஸ்வரி, வருணபகவான் சக்தியாகிய வராகினி ஆகியோர் சப்த கன்னியர் எனப் போற்றப்படுகின்றனர்.

ஆலயம் அமைந்திருக்கும் 15 பரப்பு நிலத்தில் அரைப்பங்கு நிலத்தை மூடி ஆலமரம் நிழல் பரப்பி உள்ளது. அதன் கீழ் சப்த கன்னியர் ஆலயம் அமைந்துள்ளது. நீண்ட காலமாகத் தனியே சப்த கன்னியருக்கு மட்டும் பூசைவழிபாடு நடைபெற்று வந்தது. தற்பொழுது வைரவருக்குத் தனி ஆலயம் அமைக்கப்பட்டு அதற்கும் பூசை வழிபாடு, பொங்கல் நடைபெறுகின்றன. சப்த கன்னியர் ஆலயத்தின் மேற்கு வீதியில் விநாயகருக்குரிய ஆலயம் அமைக்கப்பட்டு பூசை வழிபாடு நடைபெறுகின்றது.

சப்த கன்னியர் ஆலயத்தின் எளிமையையும் அற்புதத்தையும் வெளிப்படுத்தும் வகையில் பின்புறத்தில் எந்தவிதமான மறைப்போ சுவர் அமைப்போ இல்லை. விரிந்து பரந்த ஆலமரத்தின் அடிப்புறமே ஆலயத்தின் மேற்குப் பக்க மறைப்பாகக் காணப்படுகின்றது. ஆலமர மறைப்புக்கு இடையே காணப்படும் கணிசமான இடைவெளியூடாக நாய், பூனை போன்ற பிராணிகள் ஆலயத்தின் உள்ளே சென்று வர வாய்ப்பு உண்டு. ஆனால் அந்த மிருகங்கள் எவையும் உட்செல்வது இல்லை என்று ஆலயத்தின் பரம்பரைத் தர்மகர்த்தாக்கள் தெரிவித்தனர்.

ஆலயத்துக்கு நீண்டகாலமாகப் பரம்பரை வழிவந்த பூசகர்களே பூசை செய்து வந்தனர். அண்மைக்காலமாக அந்தணர்கள் பூசை செய்கின்றனர். ஆலயத்தில் ஆரம்பகாலம் தொடக்கம் வைகாசி விசாகத்தில் பெருமளவில் ஊர்மக்கள் எல்லோரும் வழிபாடு செய்து, நேர்த்தி வைத்துப் பொங்கல் செய்து வழிபட்டனர். கடந்த 10 வருடங்களுக்கு முன்னர் தொடங்கி வைகாசி மாதத்தில் திருவிழா ஆரம்பமாகி வைகாசி விசாகம் வரை 12 தினங்களுக்கு நடைபெறுகின்றது. இறுதிநாள் வைகாசி விசாகத்தில் பெரியளவில் பொங்கலும் அடுத்துவரும் வெள்ளிக்கிழமை எட்டாம் மடையும் பெரியளவில் விமரிசையாக நடைபெறுகின்றன.

ஆலயத்தை மூடி ஆலமரம் குடைபோல் நிழல் பரப்பி நிற்பதால் திருவிழாக் காலங்களில் உற்சவமூர்த்திகளைக் கொண்டு வீதிவலம் வருவதற்குப் பொருத்தமான

அளவு சகடை வண்டி ஒன்று பயன்படுத்தப்படுகின்றது. சகடை வண்டிமூலம் ஆலம் விழுதுகளுக்கு இடையில் வீதிவலம் சுற்றி வரப்படுகின்றது. திருவிழாக்களில் பெரும்பகுதி முதலியார் பரம்பரை வழிவந்த சந்ததியினர் உபயகாரர்களாக இருந்து நடத்தி வருகின்றனர்.

ஆலமரத்தின் அதி அற்புதமான தோற்றத்தையும் ஆலயத்தின் மகிமையையும் அறிந்த சுற்றுலாப் பயணிகள் பெருமளவில் பார்வையிட்டு சப்த கன்னியரைத் தரிசித்துச் செல்கின்றனர். "ஆலயத்துக்கு பொருத்தமான வடிவமைப்பில் புதிய கட்டடங்களை நிர்மாணிப்பது தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும், சப்த கன்னியரின் கட்டளையின் நிமித்தம் உரிய காலப்பகுதியில் புதிதாக ஆலயம் நிர்மாணிக்கப்படும்" என ஆலய பரிபாலனத்துக்குத் தற்பொழுது பொறுப்பாக இருந்து நடத்திவரும் கந்தையா வேலுப்பிள்ளை தெரிவித்தார். ஆலயம் சிறியதாகவும் எளிமையானதாக இருந்தாலும் சப்த கன்னியரின் அருள்வியாபகம் அடியவர்களைக் கவர்வதால் வழிபடுவோர் தொகை நாளாந்தம் பெருகி வருகின்றது. சப்த கன்னியரை வழிபட்டு அருள் பெறுவோமாக.

உதயன் - 12.05.2011, 26.05.2011



# 59 வளம் கொழிக்கும் வயல்வெளியின் நடுவே வீற்றிருந்து அருள்பாலிக்கும் வளலாய் பெரிய நாகதம்பிரான்

**வ**ளலாய் கிராமத்தின் மத்தியில் அமைந்துள்ள பரந்த வயல் வெளியில் மேட்டு நிலமாய் உள்ள சிறு நிலப்பரப்பில் கோயில் கொண்டு அருள்பாலித்து வந்த பெரியநாயகி சமேத பெரிய நாகதம்பிரான் போர்த்துக்கேயர் காலத்துக்குப் பின்னர் 1985ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் மீண்டும் முற்றாக அழிக்கப்பட்டு தரைமட்டமாகியது.

வளலாய் கிராமத்தின் மக்கள்குடியிருப்பு சூழ்ந்திருக்க கிராமத்தின் மத்தியில் 100 ஏக்கருக்குக் குறையாத மருதநிலம் காலபோகத்தில் நெல் விளையும் சிறுபோகத்தில் புகையிலை உட்பட வெங்காயம், பீற்றூட் உள்ளிட்ட பணப்பயிர்கள் பயறு, உழுந்து, எள்ளு முதலிய உபதானியங்களும் பல்வேறு வகையான மரக்கறி வகைகளும் செய்கை பண்ணப்படும் வளமான பிரதேசம்.

வற்றாத நீர் நிலைகளாக சில கிணறுகளும் வளலாய் பெரியகுளம், குமச்சன் கேணி, தங்கிய வளைகுளம் என மூன்று குளங்களும் அந்தப் பெரிய விளைநிலத்தில் அமைந்துள்ளன. வளலாய் பெரியகுளம் ஏறத்தாழ 5 ஏக்கர் பரப்பளவையும் நீண்டு வளைந்த வடிவமும் கொண்டது. இது வலி.கிழக்கில் மிகப்பெரிய நன்னீர்க் குளம் எனக் கூறப்படுகின்றது. இந்தக் குளத்தைப் பயன்படுத்தி கணிசமான அளவு

நீர்ப்பாசனம் செய்யப்படுகின்றது. கோடையில் குளம் வற்றினாலும் குளத்தின் கரைகளில் அமைக்கப்பட்ட தாழ் பள்ளங்கள், கிணறுகளில் இருந்து எந்தக்காலத்திலும் நீர்ப்பாசனத்துக்கு நீரை பெற்றுக்கொள்ள முடிகின்றது. குமச்சன்குளம் குமைச்சன் என்ற சோழச் சிற்றரசரால் அமைக்கப்பட்டது என்றும் அந்தக் காலப்பகுதியிலேயே நாகதம்பிரான் ஆலயமும் அமைக்கப்பட்டது. மேலும் சோழர்களை 'வளவர்' என்று அழைப்பதால் அவர்களின் குடியிருப்பு வளலாய் எனப் பெயர் பெற்றது எனவும் கூறப்படுகின்றது. வளலாய் மேற்கு வளலாய் வடக்கில் மக்கள் குடியிருப்புகள் முற்றாக மக்கள் அனுமதிக்கப்படாத உயர் பாதுகாப்பு வலயமாக ஓங்கி உயர்ந்த சோலைக் காடாகி உள்ளது. பாதுகாப்பு அரணும் முள்ளுக் கம்பி வேலியும் அரண் செய்து பாதுகாப்புத் தரப்பின் கட்டுப்பாட்டில் உள்ளது.

வயல்வெளி மட்டும் மக்களின் பாவனைக்கு விடப்பட்டிருப்பதால் வயல் நிலத்தில் அமைந்துள்ள பெரிய நாகதம்பிரானும் பல லட்சம் ரூபா செலவில் முழுமையாகப் புதிய கோயிலாக வடிவமைக்கப்பட்டுள்ளது. கோயிலைச் சூழவுள்ள வயல் நிலத்தில் மாரிக்காலத்தில் முழுமையாக நீர் சூழ்ந்து நிற்கின்ற போதும் ஆலயம் அமைந்துள்ள இடத்தில் மட்டும் நீர் இல்லாமல் மேட்டு நிலமாக இருக்கும். இந்த இடத்தில்தான் மக்கள் ஒதுங்கி இளைப்பாறுவதும் மழை, வெய்யிலுக்கு ஒதுங்குவதும் உண்டு. இந்த இடத்தில் பெருமளவில் நாகபாம்புகளின் நடமாட்டம் உள்ள போதிலும் அவை யாருக்கும் தீண்டியதோ தீங்கு செய்ததோ இல்லை எனக் கூறுகின்றனர். பாம்புகளின் தரிசனம் பெரும் பேறாகக் கொள்ளப்படுகின்றது.

மயிலிட்டி வீரதேவன் துறையில் வந்திறங்கிய சோழர்கள் இந்தப் பகுதியில் நிலவளம், நீர்வளம் கண்டு இங்கே தங்கியிருந்த காலப்பகுதியில் நாகதம்பிரானுக்கு கோயில் அமைத்து வழிபட்டதாகவும் பின்னர் போர்த்துக்கேயர் காலத்தில் தரைமட்ட மாக்கப்பட்ட பின்னர் பொதுமக்கள் திருத்தி அமைத்துள்ளனர். வளலாய் கிராமத்தின் வயல்வெளியின் மத்தியில் அமைந்துள்ள பெரிய நாகதம்பிரான் ஆலயம் போர்த்துக்கேயர் காலத்தில் ஆலயம் தரைமட்டமாக்கப்பட்டது. பின்னர் பொதுமக்களால் புனரமைக்கப்பட்டு வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

அதன்பின்னர் கடந்தகால யுத்த சூழ்நிலையால் தரைமட்டமாக்கப்பட்ட கோயில் மீண்டும் முழுமையாக நிர்மாணிக்கப்பட்டிருப்பதோடு வைரவருக்கும் தனி ஆலயம் அமைக்கப்பட்டிருப்பதும் சிறப்பாகும். அத்துடன் முருகன், பிள்ளையார் திருவுருவங்களும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.

ஆலயச் சுற்றாடலின் குறிப்பிட்டளவு விஸ்தீரணம் கொண்ட பகுதி மட்டும் உயர்நிலமாக உள்ளது. ஆலயத்துக்குத் தற்பொழுது 5 பரப்புக் காணி, சுற்றுச்சூழலில்

உள்ள வயல் சொந்தக்காரர்களால் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது. புதிய ஆலய நிர்மாணத்தோடு அந்தப்பகுதியும் மண்கொட்டப்பட்டு உயர்த்தப்படுகின்றது. புதிதாக அமைக்கப்பட்ட ஆலயத்தின் கும்பாபிஷேகம் 2011 மே மாதம் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று தொடர்ந்து 12 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்றது.

மூன்றாவது தடவையாக முழுமையாகப் புனரமைப்புச் செய்து கும்பாபிஷேகம் செய்யப்பட்டுள்ள வளலாய் பெரியநாயகி உடன்உறை பெரிய நாகதம்பிரான் ஆலயம் சோழர் காலத்தில் சோழச் சிற்றரசர்களால் ஸ்தாபிதம் செய்யப்பட்டு வணங்கப்பட்டது. போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி இந்து ஆலயங்களை இடித்தழித்த காலப்பகுதியில் அழிக்கப்பட்டது. பின்னர் வளலாய் வாழும் அருளாளர்களால் ஸ்தாபிதம் செய்யப்பட்டது.

அதற்குப் பின்னர் கடந்த 25வருடங்களுக்கு முன்னர் பாதுகாப்புத் தரப்பினரால் தரைமட்டமாக்கப்பட்டது. குறித்த பிரதேசம் உயர்பாதுகாப்பு வலயமாக மக்கள் நடமாட முடியாத சூனியப் பிரதேசமாக இருந்தது. அந்தவேளையில் அமைதியாக அடியவர்களின் மனக் கோயில்களில் இருந்து அருள்பாலித்த பெரிய நாகதம்பிரானுக்கு பல லட்சம் ரூபா செலவில் புதிய ஆலயம் அமைக்கப்பட்டு 2011ஆம் ஆண்டு மே மாதம் 22ஆம் திகதி கும்பாபிஷேகம் செய்யப்பட்டு 12 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று கடந்த 3ஆம் திகதி விசேட உற்சவம் இடம்பெற்றதையடுத்து நாளாந்தப் பூசை அந்தணர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆலயம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இரண்டாம் தடவை அழிக்கப்படும்வரை பரம்பரைப் பூசகர்களால் பூசை வழிபாடு செய்யப்பட்டு வந்ததாகக் கூறப்படுகின்றது. வேலுப்பிள்ளை சின்னத்தம்பி (சுருக்கர்) பரம்பரையினரும் தொடர்ந்து நாகமுத்து திருநாவுக்கரசு பரம்பரையினரும் பரம்பரை பூசகர்களாக பூசை வழிபாடு இயற்றி வந்தனர்.


வளலாய் முழுவதும் மக்கள் நிறைந்து வாழ்ந்த 1972ற்கு முந்தைய இயல்புநிலைக் காலத்தில் நகரத்தார் (செட்டிமார்) மற்றும் தமிழ் நாடு வேதாரணியம் வாழ் மக்களுக்கும் நெருக்கமான தொடர்பு இருந்தது. வளலாய் வடக்கில் நகரத்தார் (செட்டியார்) வளவு எனப் பெரியவீடு வளவு ஒன்று இருந்தது. அது தற்பொழுது மக்கள் நடமாட முடியாத பகுதியில் உள்ளது. பண்டமாற்று பொருளாதாரம் அதை அடுத்து பணப்புழக்கம் ஏற்பட்ட காலத்திலும் செட்டியார் குடும்பங்கள் அங்கு தங்கியிருந்து விவசாயிகளின் விளைபொருள்களைக் கொள்வனவுசெய்து சந்தைப்படுத்தியதோடு. வளலாய்ப்பகுதிப் பொதுமக்களுக்கான உணவுப் பண்டம், மருந்து வகைகளை வழங்கும் இடமாகவும் நகரத்தார் வளவு இருந்ததாகக் கூறப்படுகின்றது.

வேதாரணியத்துக்கும் வளலாய்க்கும் நெருக்கமான தொடர்பு அந்தக் காலப்பகுதியில் இருந்துள்ளது.

வேதாரணியத்தில் இருந்துவந்த குருமார் வளலாயில் குடியிருந்த பகுதி வேதாரணியம் மடத்தார் வளவு என அழைக்கப்பட்டது. அவர்கள் அந்தப்பகுதியில் புரோகிதம் செய்ததோடு சோதிடம், மாந்திரீகம் மற்றும் ஆன்மார்த்த கிரியைகளை மேற்கொண்டதாகவும் கூறப்படுகின்றது. மீண்டும் கோயில் கொண்டு வயல்வெளியில் அருளாட்சி செய்யும் பெரியநாயகி உடன்உறை பெரிய நாகதம்பிரான் ஆலயம் சிறியதாக இருந்தாலும் ஆலயத்தின் மீது மக்கள் செலுத்தும் நம்பிக்கையும் நேர்த்தியும் அளப்பரியன. ஆலயத்தின்மீது கொண்ட நம்பிக்கை - பயத்தின் அடிப்படையில் அந்தப் பகுதியில் திருட்டுக்கு இடமே இல்லை. விளைபொருள்களும் விவசாய உபகரணங்களும் வைத்த இடத்தில் அப்படியே இருக்கும். யாரும் எடுக்கமாட்டார்கள். எடுத்தவர்கள் பெரிய நாகதம்பிரானால் தண்டிக்கப்படுவார்கள் என்ற நம்பிக்கையும் இரவுவேளையில் வெள்ளைத் துகில் தரித்த பெண் நடமாட்டம் இந்தப் பிரதேசத்தில் இருப்பதைப் பலர் அவதானித்திருப்பதும் ஆலயம் தொடர்பாகக் கூறப்படும் அற்புதமாகும்.

தற்பொழுது புதிதாக அமைக்கப்பட்ட ஆலயத்துக்குப் பெருமளவு நிதி புலம்பெயர்ந்து வாழும் பக்தர்களாலும் உள்ளூர் அடியவர்களாலும் வழங்கப்பட்டு வருகின்றன. தற்பொழுது ஆலயத்தின் நிர்வாகத்தைச் சீரான முறையில் நிர்வகிப்பதற்கு ஊர்ப் பொதுமக்களால் ஆலய தர்மகர்த்தா சபை தெரிவுசெய்யப்பட்டுள்ளது. அறங்காவல் சபையின் தலைவராக செ.இராசரத்தினமும் செயலாளராக கே.குமரகுருலிங்கமும், பொருளாளராக கே.பாலசுப்பிரமணியமும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். 10 பேர் நிர்வாக சபை உறுப்பினர்களுமாக மொத்தம் 13பேர் கொண்ட நிர்வாகக்குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் ஆலயம் அறப்பணியுடன் சமூகப்பணியிலும் ஈடுபடுவதற்கு ஏற்ற முறையில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட இருக்கின்றன என்று அறங்காவல் குழு உறுப்பினர் வ.கந்தசாமி தெரிவித்தார். ஆலயம்சார் நிலையில் சமூகப் பணியை முன்னெடுப்பது சமகாலச் சூழலுக்கு ஏற்றது, வரவேற்கத்தக்கது.

உதயன் - 02.06.2011, 09.06.2011



# 60 நெல் மூடைக்குள்ளே மறைத்து எடுத்து வந்த இருபாலை கற்பக விநாயகர்

**வ**லி.கிழக்கில் இருபாலைக் கிராமத்துக்கு தனித்துவமான சிறப்பிடம் உண்டு. ஈழத்து தமிழ் இலக்கிய வரலாற்றில் பெருமையுடன் பேசப்படும் சேனாதிராச முதலியார் உட்பட பல தமிழ் அறிஞர்கள், பிரமுகர்கள் வாழ்ந்த பேரூர் இது. நீர் வளமும், நிலவளமும் செந்நெல் விளையும் வயல்கள் களனிகள் நிறைந்த இருபாலைக் கிராமத்தில் கோயில் கொண்டு அருள்பாலிக்கும் கற்பக விநாயகரின் அருள்வியாபகம் சொல்லில் அடக்க முடியாதது.

கோப்பாய் தெற்கு இருபாலை அருள்மிகு கற்பக விநாயகர் தேவஸ்தானம் யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான நெடுஞ்சாலையில் இருபாலைச் சந்தியிலிருந்து தெற்கே 200 மீற்றர் தூரத்தில் பிரதான வீதிக்கு மேற்குப் புறத்தில் வீதியோரத்தில் அமைந்துள்ளது. தமிழ் அரசர்கள் தனியரசு நடத்திய காலத்தில், தலைநகராக விளங்கிய நல்லூர் இராசதானியில் இருந்து வடக்கே 2 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. இந்த வகையில் ஆலயத்துக்கும் தமிழ் அரசர்களுக்கும் நெருக்கமான தொடர்புகள் இருந்தன என்றும் கூறப்படுகின்றது.

தென்னிந்தியாவில் வேதாரணியம் வீரசைவ குலத்தைச் சேர்ந்த சின்னத் தம்பி ஐயர் யாழ்ப்பாணத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டவராக இருந்து

இறைபணியோடு வாழ்வாதாரத்துக்கான வர்த்தகப்பணியையும் மேற்கொண்டு வந்தவர். வாயால் பொய்பேசாத பெருந்தகை. குறித்த காலப்பகுதியில் யாழ்ப் பாணத்துக்கும் இந்தியாவுக்கும் நெருக்கமான தொடர்பும் கடல் வழிப் போக்குவரத்தும் நிலவியது. இந்தியாவுக்கு செல்வதற்கோ இந்தியாவில் இருந்து விரும்பிய பொருளை எடுத்து வருவதற்கோ எந்தவிதமான அனுமதியும் பெறவேண்டியதில்லை. விரும்பியவாறு நடந்து கொள்ளலாம்.

குறித்த காலப்பகுதியில் இருபாலையில் விநாயகர் ஆலயம் இல்லாத பெரும் குறையைப் போக்கவேண்டும் என்று இந்தியாவில் இருந்து விநாயகர் விக்கிரகத்தை எடுத்துவந்து இருபாலையில் பிரதிஷ்டை செய்து கோயில் ஒன்று கட்டவேண்டும் என்ற இறை சிந்தனையோடு செயற்பட்ட சின்னத்தம்பி ஐயர் விநாயகர் விக்கிரகத்தை விதிமுறைப்படி தமிழ் நாட்டில் செய்வித்து தான்கொண்டு வந்த நெல் மூடைக் குள்ளே மறைத்து வைத்து கடல் வழியாக யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வந்துள்ளார். அந்தக் காலப்பகுதியில் அலுப்பாந்தி, நாவாந்துறை, கம்மன்கீல், கச்சாய் என்பன இறங்குதுறைகளாக விளங்கின.

யாழ்ப்பாணத்தில் இருந்து புகையிலை, சாயவேர், பனம்பண்டங்கள், பெட்டி, கடகம், பாய், கதிர்ப்பாய் என்பன தமிழ்நாட்டுக்கு ஏற்றுமதி செய்தும் அரிசி, நெல், தானிய வகைகள், புடைவை மற்றும் பட்டு, ஆலயங்களின் பயன்பாட்டுக்கான பொருட்கள், தமிழ்நாட்டிலிருந்து யாழ்ப்பாணத்துக்கும் எடுத்துவரப்பட்டன. அத்துடன் விரும்பிய இடத்தில் குடியிருப்பதற்கான வசதிகளும் திருமண பந்தங்களும் மிக ப நெருக்கமாக இருந்தன. இந்த வகையில் ஆலய கிரியைகளை மேற்கொள்ளுட சைவக் குருக்கள்மாரும் பெருமளவில் தமிழ்நாட்டில் இருந்து வந்து யாழ்ப்பாணத்தில் குடியேறினர்.

வேதாரணியத்தில் இருந்து வந்து குடியேறிய பூர்வீக சைவக்குருமாரின் சந்ததி வழிவந்த சைவக்குருக்கள் பரம்பரையினரே இருபாலை கற்பக விநாயகர் தேவஸ்தானத்தின் உரிமையாளர்களாகவும், பூசகர்களாகவும் இருந்துவருகின்றனர். விநாயகர் உபாசகரும் வாழ்நாளில் பொய்யுரைக்கா பெருந்தகையுமான சின்னத்தம்பி ஐயர் நெல் மூடைகளோடு பிள்ளையார் விக்கிரகத்தையும் எடுத்துவந்த வேளை அலுப்பாந்தி இறங்கு துறையில் பணியில் இருந்த அதிகாரிகளின் சோதனையின் போது "நெல்லும் சில கல்லும்" என்று நகைச்சுவையாகக் கூறினாராம். வழமையாக நெல்லுடன் சிறுகற்களும் இருப்பதையே இந்த நீறணிந்த பெரியார் கூறுகின்றார் என நினைத்து மறுபேச்சின்றி மூடைகளை இறக்கிக் கொண்டு செல்ல அனுமதி அளித்தனராம்.

"பொய்மையும் வாய்மையிடத்து புரைதீர்ந்த நன்மை பயக்குமெனின்" சின்னத்தம்பி ஐயர் கொண்டுவந்த விநாயகர் விக்கிரகம் உரிய முறையில் பிரதிஷ்டை செய்யப்பட்டு கோயில் அமைத்து வழிபடப்பட்டு வந்தது.

போர்த்துக்கேயரால் சைவ ஆலயங்கள் இடித்து அழிக்கப்பட்ட வேளையில் கற்பகப் பிள்ளையார் ஆலயத்தில் உள்ள விக்கிரகங்கள் பொதிசெய்யப்பட்டு ஆலயத்தில் இருந்து 100மீற்றர் தூரத்தில் வயல் வெளியில் அமைந்துள்ள திருக்கட்டுக் குளத்தில் புதைத்து வைக்கப்பட்டன. ஆங்கிலேயர் ஆட்சியில் சலவைத் தொழிலாளி ஒருவர் விக்கிரகப் பொதியை சலவைக்கல்லாக நினைத்து புடவையை அடிக்கும்போது விக்கிரகத்தில் இரத்தம் பீறிட்டதாகவும், அதிர்ச்சியடைந்த தொழிலாளி தெரிவித்த தகவலை அடுத்து ஊர் பிரமுகர்கள், பெரியவர்கள் ஒன்றுகூடி விக்கிரகப் பொதியை குளத்தில் இருந்து மீட்டு பழைய ஆலயம் இருந்த இடத்தில் மீண்டும் பிரதிட்டை செய்து குறையிரந்து பூசை வழிபாடுகளை மேற்கொண்டனர் என்றும் குளத்தில் இருந்து மீட்டெடுத்து பிரதிட்டை செய்த பிள்ளையார் விக்கிரகத்தின் முதுகுப்புறத்தில் சிவப்பு நிறத்திலான அடையாளம் இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

1936ஆம் ஆண்டு கோயில் புனருத்தாரணம் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றதையடுத்து ஆகம ரீதியிலான கிரியை வழிபாடுகளும் திருவிழாக்களும் நடைபெற்றன. அதனைத் தொடர்ந்து ஆண்டுதோறும் மஹோற்சவங்கள் நடைபெற்று வருகின்றன. வைத்தியநாதக் குருக்களின்பின் மகன் பாலசுப்பிரமணிய தேசிகர், அவருக்குப்பின் தற்பொழுது பாலசுப்பிரமணிய தேசிகரின் மகன் செல்வ சேனக்குருக்கள் பரம்பரை பரம்பரையாக ஆலயப்பூசகர்களாகவும் ஆலய உரிமையாளர்களாகவும் இருந்து வருகின்றனர். இவர்களின் பணி முன்னெடுப்பு களை ஏற்று இருபாலை வாழ் மக்களும் அடியவர்களும் ஆலய வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர்.

இருபாலையில் வீதியோரத்தில் எழுந்தருளி இருந்து அடியவர்கள் வேண்டியதை வழங்கும் இருபாலை கற்பக விநாயகர் ஆலயத்தில் மூலஸ்தானத்துக்கு பின்னால் உட்பிரகாரத்தில் எழுந்தருளி இருக்கும் சதுர்த்திப் பிள்ளையாருக்கு தீர்த்த அபிஷேகம் செய்வதற்கு ஆண்டு தோறும் அடியவர்கள் திரண்டு வருவார்கள். ஆவணிச் சதுர்த்தி அன்று அடியவர்கள் செய்யும் தீர்த்த அபிஷேகத்தை ஏற்று சதுர்த்திப் பிள்ளையார் நேர்த்தி செய்யும் அடியார்கள் எண்ணியதை அருளுவார் என்ற நம்பிக்கை உண்டு. தும்பிக்கையான் மீது நம்பிக்கை வைத்து சதுர்த்தி விரதம் இருந்து ஆலயத்துக்கு முன்னால் கேணியில் இருந்து தீர்த்தத்தை எடுத்துச் சென்று ஆலயத்தில் வீற்றிருக்கும் சதுர்த்தி பிள்ளையாருக்கு தீர்த்த அபிஷேகம் செய்கின்றனர்.

இந்த வகையில் ஆண்டுதோறும் ஆவணி சதுர்த்தி அன்று நூற்றுக்கணக் கானோர் அபிஷேகம் செய்வர். அதனை பிள்ளையார் ஏற்று அவர்களின் குறைபாடுகள் மற்றும் அவர்கள் குறையிரந்து வேண்டும் தேவைகளை அடுத்த சதுர்த்திக்கு முன்னர் நிறைவேற்றுவார் என அடியவர்கள் கூறுகின்றனர். இந்த வகையில் ஆவணி சதுர்த்தியை எதிர்பார்த்துக் காத்திருப்பர். ஆலயப் புனரமைப்பை அடுத்து 1936ஆம் ஆண்டு மகாகும்பாபிஷேகம் நடைபெற்று ஆகம முறைப்படி பூசைகள், உற்சவங்கள் நடைபெற்றுவரும் ஆலயத்தில் 1952ஆம் ஆண்டும் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

1980ஆம் ஆண்டு ஜீலை மாதம் 17ஆம் திகதி ஆலய மண்டபத்தில் ஒன்றுகூடிய அடியவர்கள் ஆலய திருப்பணிச் சபை ஒன்றை நிறுவினர். 1981ஆம் ஆண்டு பரிவார மூர்த்திகள் பாலஸ்தானம் செய்யப்பட்டு மூலஸ்தானம் உட்பட ஆலயம் முழுவதும் கட்டுமானப் பணிக்கு உட்படுத்தப்பட்டது. அதை அடுத்து 1982 ஜீலை 08ஆம் திகதி மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. 1995ஆம் ஆண்டு இடப்பெயர்வை அடுத்து மீளக்குடியேறிய பின்னர் 1997.05.11 இல் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பவற்றால் சிறப்புப்பெற்ற ஆலயத்தின் தல விருட்சமாக வள்ளிமரம் உள்ளது. புராதனமான வள்ளிமரம் ஆலயத்தின் உள்ளே வடமேற்கு திசையில் முருகன் ஆலயத்துக்கு அருகில் உள்ளது. விநாயகரின் 32 வடிவங்களும் தத்துரூபமான சிற்பங்களாக வடிக்கப்பட்டு ஆலயத்தில் ஸ்தாபிதம் செய்யப்பட்டுள்ளது. இதனைத் தரிசிக்கும்போது பிள்ளையாரின் அருள் வியாபகத்தையும், அற்புதங்களையும் அடியவர்கள் வயது வேறுபாடின்றி மீள் வலியுறுத்திக் கொள்வதோடு கலையம்சத்தை கண்டுணர்கின்றனர்.

இந்தியாவில் உரிய விதிமுறைப்படி வடிவமைக்கப்பட்ட நவக்கிரக மூர்த்தங்கள் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. நவக்கிரக மூர்த்தங்களுக்கான கும்பாபிஷேகம் 2001.08.30 அன்று நடைபெற்றது. ஆலயத்தின் வருடாந்த உற்சவம் வைகாசி மாதத்தில் வரும் அச்சுவினி நட்சத்திரத்தை தீர்த்தோற்சவமாகக் கொண்டு 15 தினங்கள் நடைபெற்று வருகின்றது. 16ஆம் நாள் வசந்தோற்சவம் நடைபெறுகின்றது. யாழ்.மாவட்டத்தில் ஆடம்பரமான திருவிழாக்கள் நடைபெறும் ஆலயங்களில் ஒன்றாக விளங்கும் இருபாலைக் கற்பகப் பிள்ளையார் ஆலயத்தில் ஏட்டிக்குப் போட்டியாக திருவிழாக்கள் விமரிசையாக நடைபெறுவதுண்டு. ஊரே கூடி உற்சவங்களை சிறப்புறச் செய்வதும் மின் விளக்கு அலங்காரம், பெரிய மேளம் சின்னமேளம், இன்னிசைக் கச்சேரிகள் என எல்லோரையும் மகிழ்வூட்டும் வகையில் ஆடம்பரத் திருவிழாக்கள் நடைபெறுவதும் உண்டு.

கட்டுத்தேரில் வீதி உலா வந்த கற்பக விநாயகருக்கு 2003ஆம் ஆண்டு அழகிய சிறப்பத்தேர் அமைக்கப்பட்டது. இந்தத் திருப்பணியை இருபாலையைச் சேர்ந்த கெங்காதரர் குடும்பத்தினர் செய்தனர். பஞ்சமுக விநாயகர் சித்திரத் தேரில் எழுந்தருளி அருள்பாலிக்கின்றார். ஆலயத்தின் தெற்குத்திசையில் தாகசாந்தி நிலையத்துக்கான நிரந்தரக் கட்டடம் நிறுவப்பட்டு உற்சவ காலங்களில் அடியார்களுக்கு தாகசாந்தி செய்கின்றனர் சற்குணராசா குடும்பத்தினர்.

வருடாந்த உற்சவத்தோடு பிள்ளையார் கதை, விநாயகர் சதுர்த்தி, விநாயகர் சஷ்டி, நவராத்திரி விழா, கேதார கௌரி விரதம் போன்ற விரத நாட்களில் விநாயகர் வீதி உலா வந்து அடியவர்களுக்கு அருள்பாலிப்பதோடு வருடப்பிறப்பு, தைப்பொங்கல், மாதப்பிறப்பு உள்ளிட்ட விசேட காலங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. விழாக்காலங்களிலும் வீதி உலாவரும் வேளையிலும் விசேட உற்சவங்களின் போதும் உற்சவ மூர்த்தங்களுக்கு மலர் மாலைகள், பட்டுக்கள், ஆபரணங்கள் கொண்டு அலங்கரிக்கும் அழகோ தனியழகு.

ஆலயத்தின் திருப்பணிகளை மேற்கொள்வதற்கு ஊரே ஒன்று கூடி காலத்துக்குக் காலம் திருப்பணிச் சபையை உருவாக்குவதும், ஆலய முன்றலில் கூடி ஆலய அபிவிருத்தி மற்றும் திருப்பணிகள் தொடர்பாக ஆலோசித்து ஒரு மனதாக கரும மாற்றுவதும் எடுத்த கருமத்தை கற்பக விநாயகரின் அனுக்கிரகத்துடன் உரிய வேளையில் நிறைவுசெய்து அதற்கான கிரியைகளை நிறைவேற்றுவதும், எந்தவிதமான விக்கினங்களும் இன்றி நடைபெற்று வருகின்றன.

அந்தவகையில் எதிர்காலத்தில் ஆலயத்தில் மேற்கொள்ள வேண்டிய திருப்பணிகளைத் திட்டமிட்ட முறையில் மேற்கொள்வதற்கு வசதியாக புதிய திருப்பணிச்சபை பொதுமக்களினால் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. அதன் தலைவராக கே. காண்டீபனும் செயலாளராக கே.கிருபாகரனும் பொருளாளராக கே.அசோக்குமாரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். வசந்தமண்டபம் உள்ளிட்ட பல்வேறு திருப்பணிகளை மேற்கொண்டு ஆலயத்தை மேலும் பொலிவுறச் செய்வதற்கான ஏற்பாடுகளை திருப்பணிச்சபை மேற்கொண்டு வருவதாக புதிய திருப்பணிச்சபையின் செயலாளர் தெரிவித்தார்.

உதயன் - 20.04.2012, 27.04.2012



# 61 பாரம்பரியத்தால் தொழுகை வழமையுடைய அச்செழு சிவகாமி அம்பாள்

**வி**வசாயத்தால் செழுமைபெற்ற வளமான கிராமம் அச்செழு. இந்தச் செம்மண் கிராமத்தின் நடுவிடத்தில் அமர்ந்து சிவகாமி அம்மன் அற்புதங்களால் அருளாட்சி செய்கின்றாள். நம்பிக்கை வைத்து வேண்டுதல் செய்யும் அடியவர்களின் மனக்குறையைப் போக்கி நல்வாழ்வு அளிப்பதோடு ஆன்மீகப் பேறும் அளித்து வருபவள் சிவகாமி அம்பாள்.

குருக்காட்டுவளவு" என்ற தோம்புப்பெயர் கொண்ட புலத்தில் அமைந்தது. "கொக்கிருந்த காடு" பெயருக்கு ஏற்ப பற்றைகள் காடு போல ஓங்கி உயர்ந்து வளர்ந் திருந்தன. புதர்மண்டிய புலத்தில் ஆடு மாடுகளை மேயவிடுவது வழமை. மேய்ப் பவர்கள் மட்டும் அந்த இடத்துக்கு போய் வருவார்கள். ஆடு, மாடுகள் காணாமல் போகும்போது மட்டும் பட்டி உரிமையாளர்களும் அவர்களோடு சேர்ந்தவர்களும் அந்த இடங்களுக்குப் போய்த் தேடுவார்கள்.

ஆள் நடமாட்டம் இல்லாத அந்த இடத்தில் ஆடு மேய்த்துக் கொண்டிருந்த சிறுவனுக்கு வெள்ளைத் துணி உடுத்த மூதாட்டி ஒருவர் ஒரு நாள் காட்சி கொடுத் தாள். அதனைக் கண்ட ஆடு மேய்க்கும் இடைச் சிறுவன் ஒரு கணம் திகைத்த

போதிலும் "அம்பாள்தான் காட்சி கொடுப்பதாகத் தெளிந்தான். தான் கண்ட அற்புதக் காட்சியை ஆட்டுப்பட்டியின் உரிமையாளருக்குக் கூறி வியந்தான். அந்தக் கதை ஊர் முழுக்கப் பரவியது. பலரும் அதிசயத்தால் வியந்தனர். இந்த அற்புதச் செய்தியை ஊரவர் எல்லாம் ஒன்று கூடி குறித்த காலப்பகுதியில் ஊர்ப் பெரியவராகக் கருதப்பட்ட விநாயகர் பூதத்தம்பியிடம் கூறி வியந்தனர். அவர் பொதுமக்களையும் அழைத்துக்கொண்டு குறித்த இடத்துக்குச் சென்று அம்பாள் காட்சி கொடுத்த இடத்திலுள்ள பற்றைகளை வெட்டி துப்புரவு செய்து கற்பூர தூபம் ஏற்றி விளக்கு வைத்து வழிபடத் தொடங்கினர்.

அதைத் தொடர்ந்து 1814ஆம் ஆண்டளவில் கண்ணகை அம்மனுக்கு கோயில் அமைத்து பொங்கல் பூசை வழிபாடு செய்யத் தொடங்கினர். அம்பாளின் அற்புதங்களும் அருள்வியாபகமும் பரவத் தொடங்கியது. அயல் ஊரவர்களும் நம்பிக்கை வைத்து வழிபட்டனர். நேர்த்திகளை நிறைவு செய்தனர்.

1986ஆம் ஆண்டு நடைபெற்ற கும்பாபிஷேகத்தின்போது மூல மூர்த்தமாக அமைந்திருப்பது சிவகாமி அம்மன் என அந்தணர்கள் கூறிய வாக்குக்கு அமைய சிவகாமி அம்பாள் எனப் பெயர் மாற்றப்பட்டு வழிபடப்பட்டு வருகின்றது.

மதுரையை எரித்த கண்ணகி கோபம் தணிந்து கடல் கடந்து திருவடி நிலையை வந்தடைந்ததாகவும், திருவடி நிலையில் இருந்து மாகியப்பிட்டியில் காட்சி கொடுத்து அதன்பின் ஊரெழுவில் காட்சி கொடுத்து அதன்பின் அச்செழுவில் காட்சி கொடுத்ததாகவும் கர்ணபரம்பரைக் கதைகள் உலவி வருகின்றன. அச்செழு கண்ணகை அம்மன், மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன், வரணி சுட்டிபுரம் அம்மன், வற்றாப்பளை அம்மன் ஆலயங்களை தொடர்புபடுத்திய நிலையில் வந்தடைந்ததாகவும், திருவடி நிலையில் இருந்து மாகியப்பிட்டியில் காட்சி கொடுத்து அதன் பின் ஊரெழுவில் காட்சி கொடுத்து அதன்பின் அச்செழுவில் காட்சி கொடுத்ததாகவும் கர்ணபரம்பரைக் கதைகள் பேசுகின்றன. அச்செழு கண்ணகை அம்மன் மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன், வரணி சுட்டிபுரம் அம்மன், வற்றாப்பளை அம்மன் ஆலயங்களைத் தொடர்புபடுத்திய நிலையில் பூர்வீகமான கதைகளும் பாடல்களும் ஏடுகளில் இருக்கின்றன எனக் கூறப்படுகின்றது. இதனை அச்செழுவில் வசிக்கும் மூத்த பிரஜைகள் உறுதி செய்கின்றனர். ஆதியில் இருந்தே கண்ணகி அம்மன் என வழிபடப்பட்டு வந்தபோதிலும் கடந்த 25 வருடங்களாக சிவகாமி அம்பாள் என வழிபடப்படுகின்றது.

அம்பாள் ஆலயத்துக்கு வலது பக்கத்தில் பிள்ளையார் கோயில் அமைந்துள்ளது. ஆரம்பகாலத்தில் கோயிலாக கட்டடம் அமைக்கும்போதே பிள்ளையார் கோயிலும்

நிர்மாணிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இரண்டு ஆலயங்களுக்கும் உள்வீதியும், வெளிவீதியும் ஒன்றாக அமைந்துள்ளன. ஆனால் இரண்டு ஆலயங்களும் தனித்தனி ஆலயங்களாக வேதாகம முறைப்படி பூசை வழிபாடு செய்யப்படுவதோடு, தனித்தனியாக வருடாந்தப் பெருந் திருவிழாக்களும் நடைபெறுகின்றன. அம்பாளுக்கு ஆடிப்பூரம் தீர்த்தத் திருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது. 11 தினங்கள் திருவிழா நடைபெறும். பிள்ளையாருக்கு வைகாசிப் பூரணையை தீர்த்தத் திருவிழாவாகக் கொண்டு 10 தினங்கள் திருவிழா நடைபெறுகின்றது.

ஒரே உட்பிரகாரம், ஒரே வெளிப்பிரகாரம் என்பனவற்றை உள்ளடக்கியதாக இரண்டு ஆலயங்கள் அமைவது வழக்கத்தில் மிக மிகக் குறைவு. அந்த வகையில் அச்செழு சிவகாமி அம்பாள் பெருமை பெறுகின்றாள். இரண்டு ஆலயங்களுக்கும் தனித்தனியாக சித்திரத்தேரும் அமைக்கப்பட்டுள்ளன.

1995ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கையை அடுத்து அச்செழுப் பிரதேசம் இராணுவ மத்திய பிரதேசமாக இருந்தமையினால் ஆலயமும் அந்தப் பிரதேசத்தில் உள்ளடங்கியது. அம்பாள் பாதுகாப்புத் தரப்பினருக்கு பாம்பாக வெளிப்பட்டு அற்புதங்கள் செய்தமையினால் மக்கள் நடமாட்டத்துக்கு தடை செய்யப்பட்ட பகுதியாக இருந்த போதிலும் ஆலயத்தில் பூசை நடைபெறுவதற்கு அனுமதி வழங்கப்பட்டதாக பொது மக்கள் கூறி வியந்தனர்.

கிராமியச் சூழலில் கோயில் கொண்டு அடியவர்களுக்கு நல்லருள் பாலிக்கும் சிவகாமி அம்பாள் அடியவர்கள் குறையிரந்து வேண்டுவதை வழங்குபவள். அடியவர்களுக்கு ஒரே நேரத்தில் கண்ணகை அம்பாளாகவும் சிவகாமி அம்பாளாக வும் வழிபட வாய்ப்புள்ளது. அது மட்டுமன்றி வலது புறத்தில் கோயில் கொண்டுள்ள பிரணவப் பரம்பொருள் விநாயகரை வழிபடவும் வாய்ப்புண்டு.

1814ஆம் ஆண்டில் இருந்து 1986 வரையுள்ள 172 ஆண்டுகள் கண்ணகை அம்பாளாகவும், 1986ஆம் ஆண்டில் இருந்து 27 வருடங்கள் சிவகாமி அம்பாளாக வும் பூசை வழிபாடு செய்யப்பட்டுவரும் இவ்வாலயம் ஏறத்தாழ 199 ஆண்டுகள் வரலாற்றுப் பெருமை வாய்ந்த புராதன ஆலயமாகும். ஆரம்ப காலத்தில் ஆலய உரிமையாளர்களால் பரம்பரை பூசை வழிபாடு, பொங்கலோடு வழிபடப்பட்டு வந்த ஆலயத்தில் காலத்துக்கு காலம் திருப்பணி வேலைகளும் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

1928ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட புனரமைப்பை அடுத்து நடைபெற்ற ஆலய கும்பாபிஷேகத்தோடு வைதீக முறைப்படி பூசை வழிபாடு

நடைபெறத் தொடங்கியது. அதைத் தொடர்ந்து 1964ஆம் ஆண்டு, 1986ஆம் ஆண்டு மற்றும் 2004ஆம் ஆண்டு காலப்பகுதியில் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. அந்தக் காலப்பகுதிகளில் ஆலய புனரமைப்பு திருப்பணி வேலைகளும் நடைபெற்று ஆலயம் இன்று இருக்கும் கவர்ச்சிகரமான நிலைக்கு உயர்வு கண்டது.

ஆரம்ப காலங்களில் ஆலயத்தில் பொங்கல் பூசை வழிபாடுகளுடன் ஒரு நாள் மட்டும் திருவிழா நடைபெற்று வந்தது. 1964ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்றதை அடுத்து நித்திய, நைமித்திய பூசைகள் கிரமமாக நடைபெற்றன. 1986ஆம் ஆண்டு ஆலயம் புனரமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் செய்தபோது பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ சா.சோமதேவசர்மா, ஆலய மூலமூர்த்தியாக இருப்பது கண்ணகை அம்மன் அல்ல சிவகாமி அம்மனே எனக் கூறினார். அது பேராசிரியர் சுவாமி சுப்பிரமணிய தேசிகர் மூலம் உறுதிசெய்யப்பட்டதை அடுத்து மூலமூர்த்தி சிவகாமி அம்பாள் என அழைக்கப்படுகின்றது.

1986ஆம் ஆண்டுக்கு முந்திய காலப்பகுதியில் ஆனிமாத புனர்பூசத்தில் திருவிழா நடைபெற்றது. சிவகாமி அம்பாள் என அழைக்கத் தொடங்கியதால் கொடியேற்றி வேதாகம முறைப்படி திருவிழா செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டது. அம்பாள் அருள் கூடிவந்து 1991ஆம் ஆண்டு தொடக்கம் கொடியேற்றத் திருவிழா ஆரம்பமாகியது. அந்த வருடத்தில் இருந்து ஆடிப்பூரத்தை தீர்த்தத் திருவிழாவாகக் கொண்டு 11 தினங்கள் வருடாந்த மகோற்சவம் நடைபெற்று வருகின்றது. அந்த நடைமுறை இன்றுவரை பின்பற்றப்பட்டு வரப்படுகின்றது.

1995ஆம் ஆண்டு இடப்பெயர்வை அடுத்து ஆலயம் புனரமைப்பு செய்யப்பட்டு திருப்பணி வேலைகள் நடைபெற்றன. 2004ஆம் ஆண்டு குடமுழுக்குப் பெருவிழா சிவஸ்ரீ.இ.கிருஷ்ணசாமிக் குருக்கள் தலைமையில் நடைபெற்றது. இளையதம்பி அருளையா என்பவர் முன்னின்று கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்தார். 2009ஆம் ஆண்டு அம்பாளுக்கு புதிய சித்திரத்தேர் நிர்மாணிக்கப்பட்டது.

வருடாந்த பெருந்திருவிழா 11 தினங்கள் நடைபெறுவதோடு தைப்பொங்கல், சிவராத்திரி, பங்குனித் திங்கள், வருடப்பிறப்பு, வைகாசி விசாகப் பொங்கல், ஆனி உத்தரம், நவராத்திரிபூசை, கந்தசஷ்டி, கார்த்திகைத் தீபம், மார்கழி திருவெம்பாவை உள்ளிட்ட விசேட உற்சவங்களும் கிரமப்படி நடைபெறுகின்றன.

தற்பொழுது நித்திய, நைமித்திய பூசைகள் சிறப்புற நடைபெறுவதோடு காலை, மாலை, சாயந்திரம் என்ற வகையில் மூன்று காலப் பூசைகள் நடைபெற்று வருகின்றன. தல விருட்சமாக அரசமரம் உள்ளது. திருவூஞ்சல் பாடலை சிவஸ்ரீ

வீரமணி ஐயர் பாடியுள்ளார். ஆலயம் தொடர்பான வரலாற்றுக் குறிப்புகள் ஏடுகளில் குறிக்கப்பட்டிருப்பதோடு. ஆங்கிலேயரது ஆட்சிக் காலத்தில் ஆட்சியாளர்களால் வழங்கப்பட்ட வரலாற்றுக் குறிப்பிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் கர்ண பரம்பரைக் கதைகள் மூலமும் கோவில் வரலாற்றை அறியக்கூடியதாக உள்ளது. ஆலயத் திருப்பணிகளை பரம்பரை உரிமையாளர்களோடு பொதுமக்களும் ஒன்றுபட்டு மேற்கொண்டு வருகின்றனர்.

தேர்த்திருப்பணி உள்ளிட்ட விசேட திருப்பணிகள் நடைபெறும்போது திருப் பணிச்சபை அமைக்கப்பட்டு திருப்பணிகள் அம்பாளின் அருளால் சிறப்பாக மேற்கொள்ளப்படுகின்றன. அம்பாளின் அருள் அடியவர்களுக்கு கிட்டுவதாக.

உதயன் - 22.02.2013, 02.03.2013



## 62 கண்ணகை அம்மனின் அவதாரப் பெருமையுடைய இடைக்காடு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள்

உழுதுண்டு உயிர் ஓம்பிய ஒப்பிலாத்துறவி படிமத்தார் வேலரிடம் தன்பசி தீர்க்க மதியநேரம் வந்த வெள்ளைத்துகில் உடுத்த மூதாட்டி "எனக்கு பசிக்கிறது அமுது பொங்கித் தா" எனக் கேட்டாள். படிமத்தார் வேலர் உடனே நல்லிக்கப்பன் வயலில் விளைந்த புது நெல்லில் குற்றிய அரிசியில் அமுது பொங்கி வயல் நடுவே அமைந்த குளக்கரையில் வடலி நிழலில் வடலி ஓலையில் செய்த தட்டுவங்களில் படைத்து அன்னைக்கு நிவேதித்தவேளை, அமுதுண்ட அன்னை தன்மடியில் வைத்திருந்த சிவலிங்கத்தையும், செம்பினால் செய்யப்பட்ட சிலம்பையும், கல்லால் உருவாக்கிய அம்மன் சிலையையும் படிமத்தாரிடம் கொடுத்து "எனக்குத் தண்ணீர் தா குடிக்க" எனக் கேட்டு, தான் அமுது உண்ட தட்டுவத்தைக் கொடுத்தாள். படிமத்தார் வேலரும் அருகில் உள்ள கிணற்றில் நீர் எடுத்து தட்டுவத்தில் கொண்டு வந்தவேளை அந்த மூதாட்டி மறைந்து விட்டாள்.

தெய்வீக மூதாட்டியை நான்கு திசைகளிலும் தேடிய படிமத்தார் வேலர் நீர் அருந்தக் கொடுக்கவில்லையே என்ற கவலையில் கண்ணீர் விட்டு கதறி அரற்றி தெய்வீக மூதாட்டியாக தனக்கு தரிசனம் தந்து அமுதுண்டது அம்மன் தான் எனத் தேறி மூதாட்டியின் கால்பட்ட இடங்களில் விழுந்து வணங்கித் தேறினார். அந்த

இடத்திலேயே இரவு படுத்து உறங்கினார். அன்று இரவு படிமத்தார் வேலரின் கனவில் தோன்றிய அம்பாள் "நீ கவலை அடையாதே நீ அமுது தந்த இடத்தில் அரசும், வேம்பும் இணைந்த விருட்ச நிழலில் நான் உன்னிடம் தந்த மூன்று மூர்த்தங் களையும் வைத்து எனக்கு நித்திய பூசை செய்து வா" எனத் திருவாய் மலர்ந் தருளினாள்.

அன்று படிமத்தார் வேலரினால் பிரதிஷ்டை செய்து வழிபட்ட குடிசைக் கோயில்தான் இன்று பெரும் ஆலயமாக விளங்கும் இடைக்காடு புவனேஸ்வரி அம்மன் ஆலயம். கோயில் வாசலில் நின்று வடகிழக்குத் திசையில் நோக்கினால் அன்னதானக் கந்தன் தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் கோயில். பசுமையான சூழலில் அமர்ந்து அற்புதங்கள் பல செய்து அருளாட்சி புரியும் இடைக்காடு புவனேஸ்வரி அம்மன் கோயில் அச்சுவேலி - தொண்டமானாறு நெடுஞ்சாலையில் அச்சுவேலி பஸ் நிலையத்தில் இருந்து வடக்கே மூன்று கிலோமீற்றர் தூரத்தில் வீதிக்கு மேற்குப் புறத்தில் அமைந்துள்ளது.

ஆரம்பத்தில் இருந்து படிமத்தார் வேலர் மற்றும் அவரின் வழிவந்த சந்ததியினரி னால் நிர்வகிக்கப்பட்டு வந்த ஆலயம் 22.09.1982ஆம் திகதியில் இருந்து படிமத்தார் வேலரின் சந்ததி வாரிசு சு.ஞானசபேசனால் பொதுமக்களை கொண்டு அமைக்கப்பட்ட ஆலய பரிபாலன சபையிடம் சட்ட ரீதியாகப் பொறுப்பளிக்கப்பட்டது. அன்றிலிருந்து ஆலய நிர்வாகத்தினை "இடைக்காடு ஶ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய பரிபாலன சபை" பரிபாலித்து வருகின்றது.

1801ஆம் ஆண்டில் இருந்து ஆலய மகோற்சவம் ஆடி மாதத்தில் 15 தினங்கள் நடைபெற்று வருகின்றன. 1839ஆம் ஆண்டு எழுதப்பட்ட உறுதியில் சிவகாமி அம்பாள் கோயில் என எழுதப்பட்டுள்ளது. 1872ஆம் ஆண்டு யாழ்.கச்சேரியில் செய்யப்பட்டுள்ள கோயில் பதிவு இடாப்பில் கைலாசநாத புவனேஸ்வரி அம்பாள் ஆலயம் எனப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. 1882ஆம் ஆண்டு, 1892ஆம் ஆண்டுகளில் யாழ்.கச்சேரியின் கோயில்கள் மடங்கள் பதிவு இடாப்பில் புவனேஸ்வரி அம்பாள் ஆலயம் என பதிவுசெய்யப்பட்டுள்ளது.

படிமத்தார் வேலர் அன்னையின் அருளால் குறிப்பிட்ட தினங்களில் சன்னதம் ஆடி அருள்வாக்கு சொல்வதால் அடியார் கூட்டம் நாளும் பொழுதும் அதிகரிக்கத் தொடங்கியதோடு அம்மனின் அருள்வியாபகம் ஊரெல்லாம் பேசப்பட்டது. அன்னை யின் கட்டளைப்படி அவர் கொடுத்த சிவலிங்கத்தை சிவனாகவும், செப்பினால் செய்யப்பட்ட சிலம்பை கற்புத் தெய்வம் கண்ணகி அம்பாளாகவும், கல்லினால் செய்யப்பட்ட உருவத்தை அன்னை புவனேஸ்வரியாகவும் பிரதிஷ்டை செய்து ஆரம்பத்தில் இருந்து வழிபாடு செய்யப்படுகின்றது.

படிமத்தார் வேலர் இறைபதம் அடைந்த பின்னர் அவரது தம்பியார் தனிமை தீர்த்தார். அண்ணன் செய்த திருத்தொண்டை அணுவளவும் பிசகாமல் மேற் கொண்டு வந்தார். தனிமை தீர்த்தார். வயோதிபம் அடைந்த பின்னர் வல்லியார் பூசகராக இருந்து ஆலயக் கடமைகளை நிறைவு செய்தார். வல்லியார் உடையார் பதவியை குறித்த காலப்பகுதியில் வகித்தமையினால் உடையார் வல்லியார் எனவும் அழைக்கப்பட்டார். வல்லியாருக்குப் பின்னர் சுப்பர், ஞானர் என்போரும் பரம்பரை பரம்பரையாகப் பரிபாலனம் செய்தனர்.

உடையார் வல்லியார் காலத்தில் ஓலைக்கொட்டில் அம்மன் கோயிலாக இருந்த ஆலயம் புனரமைப்புச் செய்யப்பட்டு சுண்ணாம்பும் கல்லும் கொண்டு நிரந்தர கட்டுமானங்களுடனான ஆலயமாகக் கட்டப்பட்டது. அந்தக் காலப்பகுதியில் திருக்குளமும் நிர்மாணிக்கப்பட்டது.

ஊர் பொதுமக்கள் வருடந்தோறும் தமது தோட்டங்களில் விளைந்த விளை பொருள்களான வெங்காயம், புகையிலை, மிளகாய், மற்றும் தானிய வகைகளை ஆலயத்துக்குக் காணிக்கையாக செலுத்தி வருவது வழமையாக இருந்து வந்தது. இந்தக் கருமத்தை வருமான அடிப்படையில் நிறைவு செய்யாமல் ஆலயத்தை வழிபடும் மற்றும் ஆலய பரிபாலன எல்லைப் பரப்பில் வாழ்வோர் அனைவரும் பிசகாமல் ஆண்டுதோறும் மேற்கொண்டு வருவது "ஊர்வழமை". இதன் மூலம் பெறப்பட்ட நிதியையும், மற்றும் ஊரவர் வழிபடுவோரிடம் திரட்டப்பட்ட நிதியையும் பயன்படுத்தி 1920ஆம் ஆண்டு ஆலயம் விரிவுபடுத்தப்பட்டு கட்டுமானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆலயத்தின் மூல மூர்த்தியாக புவனேஸ்வரி அம்பாளுக்கும், பரிவார மூர்த்தங்களாக சந்தான கோபாலர், கண்ணகை அம்பாள் ஆகியோருக்கும் தலவிருட்சத்தின் கீழ் நாகதம்பிரானுக்கும் கோயில்கள் அமைக்கப்பட்டன. 1974ஆம் ஆண்டு ஆலயத்திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு 1974.05.03ஆம் திகதி மஹாகும்பாபிஷேகம் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து 1979 காவல் தெய்வமாகிய வைரவருக்கும் தனிக் கோயில் அமைக்கப்பட்டது.

செந்நெல் விளையும் வயல் நிலங்கள் மற்றும் தோட்டப் பயிர்கள் செழித்து வளரும் விளை நிலங்கள் சூழ்ந்த பிரதேசத்தில் ஊருக்கு வெளியே அமர்ந்து அருள்மாரி பொழியும் புவனேஸ்வரி அம்பாளின் அருள் வியாபகம் அடியவர்களை ஈர்த்து அடிமைகொள்ளும். படிமத்தார் வேலர் பிரதிஷ்டை செய்த பூர்வீகமான வேம்பும் அரசும் இணைந்த மரம் ஆலய வாசலுக்கு சமாந்தரமாக தெற்குப் பக்கத்தில் அமைந்துள்ளது. அதுவே தலவிருட்சமாக கொள்ளப்படுகின்றது. தலவிருட்சமானது

மிகப்பெரிய மரமாக 20 அடிக்கு குறையாத சுற்றளவு கொண்டதாக அரச மரமா? வேப்பமரமா? என்று வேறுபடுத்தி அறியமுடியாத அளவு சிவமும் - சக்தியும் இணைந்த நிலையில் நிழல்பரப்பி நிற்பது பார்ப்பவர்களை பரவசம் கொள்ளச் செய்யும் தலவிருட்சத்தின் கீழ் நாகதம்பிரான் கோயில் அமைந்துள்ளது.

பலாலி இராணுவத்தளத்துக்கு கிழக்குப் புறமாக ஏறக்குறைய இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்திருக்கும் ஆலயம் இராணுவ நடவடிக்கையின்போதும் இராணுவத்தளத்தில் இருந்து மேற்கொள்ளப்பட்ட ஷெல் வீச்சுக்களின்போதும் பல்வேறுவிதமான சேதங்களுக்கு உள்ளாகியது. அந்தவகையில் 1987ஆம் ஆண்டு சேதமடைந்த ஆலயத்தைப் பாலஸ்தாபனம் செய்து புனருத்தாரணம் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. புனருத்தாரண வேலைகள் பூர்த்தியடைந்ததை அடுத்து 1989-06-08ஆம் திகதி வியாழக்கிழமை மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. குடமுழுக்கைத் தொடர்ந்து 45 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்றது.

1991ஆம் ஆண்டு மார்கழியில் உக்கிரமடைந்த போரைத் தொடர்ந்து கிராம மக்கள் முழுமையாக இடம்பெயர்ந்து ஊரே வெறுமையான சூழலில் ஆலயத்தின் நித்திய. நைமித்திய பூசைகள் ஆறு வருட காலம் முற்றாகத் தடைப்பட்டு இருந்தன. இந்தக் காலப்பகுதியில் ஆலயம் பல்வேறுவிதமான சேதங்களுக்கு உள்ளாகிய போதிலும் ஆலயத்தின் பெறுமதிமிக்க உடைமைகளும் காணாமல் போயின. 1997இல் இருந்து கிராமத்தில் வாழ்ந்த மக்கள் மீளக்குடியமர்ந்ததை அடுத்து ஆலயத்தின் பூசை வழிபாடுகள் இயல்பு நிலையில் மேற்கொள்ளப்பட்டு புதிய கட்டுமானப் பணிகளும் நடைபெற்றன. 2005.04.22ஆம் திகதி அன்று மகாகும்பாபிஷேகமும் அதைத் தொடர்ந்து மண்டலாபிஷேகமும் நடைபெற்றன.

போர் அழிவுகளின்போது ஆலயத்தில் பிரதிஷ்டை செய்து வழிபட்ட பெறுமதிமிக்க ஐம்பொன்னால் செய்யப்பட்ட அம்மன் விக்கிரகம் காணாமல் போனதோடு பரிவார மூர்த்தங்களும் சேதமடைந்தும், இல்லாமலும் போயிருப்பது கண்டு துன்பமடைந்த அடியார்கள் மற்றும் உபயகாரர்கள் பரிபாலன சபையினர் பெரும் பொருள் செலவில் ஆலயத்துக்குத் தேவையான அனைத்தையும் குறுகிய கால இடைவெளியில் சீர்செய்து ஆலய பூசை வழிபாடுகளை இயல்பு நிலைக்குக் கொண்டு வந்தனர்.

ஆலயத்துக்கு சித்திரத்தேர் இல்லாத குறைபாட்டை போக்கும்வகையில் இடைக்காட்டைச் சேர்ந்த நில அளவையாளர் எம்.சிவஞானசுந்தரம் குடும்பத்தினர் புதிய சித்திரத்தேரையும் அதற்கான தேர்முட்டியையும் பல லட்சம் ரூபா செலவில் நிர்மாணம் செய்து உபயமாக்கியுள்ளனர்.

பூர்வீகமாக ஆலயத்தின் உரிமையாளராகவும் பரிபாலகராகவும் இருந்துவந்த படிமத்தார் வேலரின் வழித்தோன்றல்கள் வரிசையில் வந்த சு.ஞானசபேசன் 1982.09.22ஆம் திகதி ஆலயத்தின் உரிமைகள் உடைமைகளைச் சட்டரீதியாக ஊர்ப் பொதுமக்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட பரிபாலனசபையிடம் கையளித்தார். முதலாவது பரிபாலன சபையின் தலைவராக மின்பொறியியலாளர் வே.சுவாமிநாதன் பொறுப்பேற்றுக்கொண்டார். பரிபாலன சபையின் செயலாளராக எஸ்.ஆறுமுகசாமி பொறுப்பேற்றுக்கொண்டார்.

தற்பொழுது இரண்டாவது பரிபாலனசபை ஆலயத்தைப் பரிபாலனம் செய்து வருகின்றது. அதன் தலைவராக என்.சுவாமிநாதனும் செயலாளராக கே.ரகுநாதனும் செயற்பட்டு வருகின்றனர். இரண்டாவது பரிபாலனசபை 2009ஆம் ஆண்டில் இருந்து பணியாற்றி வருகின்றது. பரிபாலனசபையில் பிரதான நிர்வாகப் பொறுப்பில் இருப்பவர்கள் திருவிழா உபயகாரர்களில் ஒருவராக இருக்க வேண்டும் என்ற நடைமுறை ஒழுங்கு பின்பற்றப்பட்டு வருகின்றது.


ஆலயத்தின் பரம்பரை உரிமையாளர் ஆலயத்தை பரிபாலனசபையிடம் ஒப்படைக்கும் போது நூற்றுக்கணக்கான பரப்பு நன்செய் புன்செய் நிலங்களையும் ஆலயத்தின் சொத்தாக கையளித்துள்ளார். அவற்றில் இருந்து பெறப்படும் வருமானமும் ஆலய பரிபாலனத்துக்கான செலவில் உள்ளடக்கப்பட்டு பரிபாலனம் செய்யப்பட்டு வருகின்றது.

2009ஆம் ஆண்டு வரை அலங்கார உற்சவமாக நடைபெற்று வந்த ஆலய வருடாந்த உற்சவம் 2009ஆம் ஆண்டில் இருந்து வேதாகம விதி முறைப்படி கொடிமரம் நாட்டி கொடியேற்றி திருவிழா நடைபெறுகின்றது. சித்திரைப் பௌர்ணமி அன்று தீர்த்தோற்சவமாகக் கொண்டு பத்துத் தினங்கள் வருடாந்த மகோற்சவங்கள் நடைபெற்று வருகின்றன. வருடாந்த உற்சவத்தோடு மாதப்பிறப்பு, தைப்பொங்கல், தைப்பூசம், அபிராமிப்பட்டர்விழா, அமாவாசைப்பூசை, சதுர்த்தி, நவராத்திரி, கண்ணகை அம்பாள் பொங்கல், வரலட்சுமி விரதம், கேதாரகௌரி விரதம், தீபாவளி, திருக்கார்த்திகை, திருவெம்பாவை உள்ளிட்ட விஷேட காலப்பகுதியில் விஷேட உற்சவங்களும் பூசை வழிபாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

படிமத்தார் வேலரிடம் தெய்வீகப் பெண் கையளித்த செம்பினாலான சிலம்பை கண்ணகை அம்மனுக்கு உரியதாகக் கருதி கண்ணகை அம்மன் வழிபாடு அம்மனோடு தொடர்பான உற்சவங்களும் விஷேட உற்சவங்களாக நடைபெற்று வருகின்றன. வைகாசி மாதத்தில் வரும் கண்ணகை அம்மன் உற்சவத்தில் வழுந்து வைத்தல், பொங்கல் செய்தல், விஷேட உற்சவம் செய்தல் என்பன சிறப்பான முறையில் நடைபெற்று வருகின்றன.

ஆலயத்தோடு இணைந்த நிலையில் கல்விப்பணி, சமூகப்பணி, அறநெறிப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புவனேஸ்வரி அம்மன் பெயரில் அறநெறிப் பாடசாலையும், பாலர் முன்பள்ளியும் அமைத்து சிறுவர் கல்வியும், அறநெறியும் போதிக்கப்படுவதோடு பாடசாலை மாணவர் மட்டத்தில் பேச்சுப்போட்டி, மனனப்போட்டி, கட்டுரைப்போட்டி, மாலைகட்டுதல், கோலம் போடுதல் உள்ளிட்ட நிலையில் சமய அறிவைத் தூண்டி வளர்க்கும் போட்டிகளும் அதற்கான பரிசளிப்பு விழாவும் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்றன. மாதர் சங்கம் திருத்தி அமைக்கப்பட்டு மாதர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி மற்றும் குடும்ப மேம் பாட்டுக்கான தொழிற்பயிற்சி கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த வகையான பணி முன்னெடுப்புகள் இந்துநெறிக் கழகத்தோடு இணைந்த நிலை யில் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆலயமும் சமூகமும் ஒன்றிணைந்த நிலையில் செயற்பட்டு வருவது அறநெறிசார் நிலையில் சமூகத்தை மேம்படுத்துவதற்கும் கல்வி முன்னெடுப்புக்களை உயர்நிலையில் பேணிக்கொள்வதற்கு வாய்ப்பாக அமைந்துள்ளன. அம்பாள் அருள் பெற்று உய்வோமாக.

உதயன்-10.08.2012, 17.08.2012



# 63 அந்நியராட்சியிலும் அழிவடையாத கன்னாரையம்பதி ஸ்ரீராஜ ராஜேஸ்வரி

நெல் விளையும் வயல்களும் உப உணவுப் பயிர்கள் செய்கை பண்ணப்படும் தோட்ட நிலமும் சூழ்ந்திருக்க தாமரைத் தடாகத்துக்கு அருகே எழுந்தருளி இருந்து அருளாட்சி செய்கின்றார் ஆவரங்கால் கன்னாரையம்பதி ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி அம்பாள். இவரது அருள் வியாபகம் அன்று தொட்டு இன்று வரை அடியார்களை ஈர்த்து வருகின்றது.

அந்நியராட்சிக் காலத்தில் இந்து ஆலயங்கள் எல்லாம் இடித்தழிக்கப்பட்டு வந்த அந்நிய நாட்டு சிப்பாய்கள் "மாதா" என பூசித்து ஜெபம் செய்து நல்லருள் வேண்டிதியானித்தனர்.

அன்னியர் ஆட்சியில் ஆலயங்கள் பற்றிய தகவல்களைப் பதிவுசெய்த வேளையில் "மாதா கோயில்" என பதிவுசெய்யப்பட்டது. மாதா வழிபாடு கத்தோலிக்க சமயத்திலும் பிரதானமானது. எனவே தமது சமயத்துக்குரிய வழிபாட்டு தலம் என நம்பி ஆலயத்தை அழிக்காமல் வழிபட்டனர். இந்துக்கள் அம்பாளின் அற்புதத்தை வியந்து ஆலயச் சூழலில் கத்தோலிக்க சிப்பாய்கள் இல்லாததை அவதானித்துவிட்டு பக்திபூர்வமாக வழிபட்டு அருள்பெற்றனர். அம்பாளின் அருள் வியாபகத்தை வியந்தனர். யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியில் பத்தாம் கட்டையில் நன்செய்யும் - புன்செய்யும் நிறைந்த அமைதியான சூழலில் வீதிக்குக் கிழக்குப்

புறத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது. வீதியால் செல்லும் போதே அம்பாளை அடியவர்கள் நெஞ்சாரத் தியானிப்பதற்கு ஏதுவாக வீதியோரத்தில் பல இலட்சம் ரூபா செலவில் அம்பாளின் திருவுருவங்களை உள்ளடக்கிய பெரியளவிலான வளைவு நிர்மாணிக்கப்படுகின்றது.

கன்னன் என்ற வம்சத்தினர் வாழ்ந்து வந்த சூழலில் ஆரம்பகால ஆலயம் அமைந்திருந்தமையினால் கன்னாரையம்பதி எனப் பெயர்வரக் காரணமாயிற்று என்பர். நெல்லி மரத்தை தலவிருட்சமாகக் கொண்டு நெல்லி மரநிழலில் அமையப்பெற்ற ஆலயத்தின் பூர்வீக உரிமை ஞானசேகர முதலியாரின் வழித் தோன்றல்கள் என்றும் ஞானசேகர முதலியார் காலத்திற்கு பின்னர் நீலாயதாஷி அம்மாவுக்கு தருமசாதனமாக கொடுக்கப்பட்டது. அதனை அடுத்து நீலாயதாஷி அம்மாவின் பரம்பரை வாசிகள் ஆலயத்தை அடியவர்களின் உதவி ஒத்துழைப்புடன் நிர்வகித்து வருவதாகவும் கூறப்படுகிறது.

அம்பாளுக்கு தீர்த்தக் கிணறு இல்லாமையினால் தெய்வதிரை என்னும் தோட்டத்தில் இருந்தே தண்ணீர் கொண்டுவரப்பட்டு அபிஷேகம் நடைபெற்று வந்தது. பிரபல வர்த்தகரான பொன்னையா ஆலயத்தில் கிணற்றை வெட்டுவித்து வைரக்கல்லினால் கட்டுவித்து கொடுத்துள்ளார். அன்றிலிருந்து அந்தக்கிணறு பயன் படுத்தப்பட்டு வருகின்றது. ஆலயத்தைப் புனரமைத்து கல்லினால் கட்டுவதற்கு அம்பாள் அருள்கூர்ந்தமையால் 1975ஆம் ஆண்டு பாலஸ்தானம் செய்யப்பட்டு ஆலயப்புனரமைப்பு திருப்பணிகள் நடைபெற்றன. வைரக்கல் கொண்டு கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

1995ஆம் ஆண்டு ஆவணி மாதம் கோப்பாய் சிவஸ்ரீ வை.மு. பரமசாமிக் குருக் கள், சிவஸ்ரீ ப.முத்துக்குமாரசுவாமிகள் தலைமையில் நவகுண்டபஷ யாகசாலை அமைத்து மிகச் சிறப்பாகக் கும்பாபிஷேகக் குடமுழுக்கு சிறப்பாக நடைபெற்றது.

2012ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் பாலஸ்தானம் செய்யப்பட்டு 2012ஆம் ஆண்டு ஜனவரி 5ஆம் நாள் சிவஸ்ரீ. வே. சரணிய புரீஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ வே. நடராசக் குருக்கள் ஆகியோரின் தலைமையில் நவகுண்டபஷ கும்பாபிஷேக நீராட்டு விழா நடைபெற்றது.

விசாலமான உட்பிரகாரத்தோடு கூடியதும், மூடு மண்டபங்களைக் கொண்டது மான ஆவரங்கால் கன்னாரையம்பதி ஸ்ரீராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயம் யாழ். மாவட்டத்தில் உள்ள முக்கியமான அம்பாள் ஆலயங்களில் ஒன்றாக விளங்கு வதோடு நம்பிக்கை வைத்து வழிபட்டு நேர்த்தி செய்பவர்களின் குறைபாடுகளை நீக்கி நேர்த்தியை நிறைவுசெய்யும் ஆலயமாக விளங்குகின்றது. ஆவரங்கால்

நடராஜ இராமலிங்கேஸ்வரர் ஆலயத்துக்கும் (ஆவரங்கால் சிவன் கோயில்) ஆவரங்கால் கன்னாரையம்பதி இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்துக்கும் நெருக்கமான தொடர்புகள் உள்ளன. அந்நியரின் ஆட்சிக்காலத்தில் மாதாவாக வீற்றிருந்து ஆலயத்தை அழிக்க வந்தவரை மயக்கி தன்னை வழிபடச்செய்து தான் வீற்றிருந்த சிறுகோயிலை அழிக்கவிடாமல் பாதுகாத்தாள். அதுமட்டுமல்லாது கன்னாரைக் குளத்தருகே வெள்ளைத்துகில் உடுத்த வயோதிப மாதாவாக வீற்றிருந்து அடியவர்களுக்கு காட்சி கொடுத்து ஆலயத்துக்குள்ளே சென்று மறைபவள். மெய்யடியார்கள் நம்பிக்கை வைத்து முறையிடும் குறைப்பாட்டைப் போக்கி நல்லருள் பாலிப்பவள் ஆவரங்கால் கன்னாரையம்பதி ஸ்ரீராஜராஜேஸ்வரி அம்பாள்.

தலவிருட்சமான நெல்லி மரத்தில் ஏறி நெல்லிக் காய்களைப் பறிக்க முனைந்த பெண்மணிக்கு தவறை உணர்த்தியதோடு பெருமளவில் காய்த்துக் குலுங்கி வந்த நெல்லிமரமே காய்ப்பதை கைவிட்ட கதை ஆலயத்தின் அற்புதத்தோடு இணைந்த வரலாறு.

ஆலயத்துக்கு அருகில் பூர்வீகமாகக் குடியிருந்து வந்த தங்கச்சியம்மா, நீலாயதாட்சியம்மா, பராசக்தி அம்மா மூவரில் நடுவீட்டு அம்மாவாகிய நீலாயதாட்சி அம்மாவுக்குக் காட்சி கொடுத்து அருளினார். ஆலயத்தின் உரிமையையும் அதனோடு இணைந்த சொத்தையும் ஆலயத்தின் பரம்பரை உரிமையாளர் ஞானசேகர முதலியார் வழிவந்தவர்கள் நீலாயதாட்சி அம்மாவுக்கு வழங்க அருள் செய்த பெருமாட்டி, ஆவரங்கால் கன்னாரையம்பதி ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரியம்மாள்.

ஆலயத்தில் ஆண்டுதோறும் நவராத்திரி விழா பெருவிழாவாக பக்தர்களால் கொண்டாடப்படுவதோடு மானம்பூ திருவிழாவன்று அம்பாள் அடியார்கள் புடைசூழ எழுந்தருளிச் சென்று ஆவரங்கால் மேற்கு உன்னி வைரவர் கோயிலில் வாழை வெட்டி வைரவர் ஆலயத்தில் தங்கி வருவது வழமை. அம்பாள் தனது ஆலயத்துக்கு பிற்பகல் திரும்பும்போது பெருமழை பெய்து கன்னாரைக்குளம் உட்பட வயல்வெளி நீரால் நிரம்பி கடல்போல் காணப்படும். இது பூர்வீகமாக நடந்துவந்த உண்மை எனக்கூறி வியந்தார் ஆலயத்தின் பரம்பரை உரிமையாளர்களில் ஒருவராக விளங்கும் சிரேஷ்ட பூசகர் சிவஸ்ரீ வே.நடராசக்குருக்கள்.

தினசரி இரண்டுகால பூசைகளும் அம்பாளுக்கான விசேட காலங்களான பங்குனித் திங்கள், வைகாசி விசாகம், நவராத்திரி காலங்களில் விசேட உற்சவங்களும் பூசை வழிபாடுகளும் நடைபெறுவது உண்டு. பங்குனித் திங்கட்கிழமைகளில் அடியார்கள் அம்பாளுக்கு பொங்கல் செய்து நேர்த்திக் கடன்களை நிறைவு செய்வர். வைகாசி விசாகத்தில் வழுந்து வைத்து பெருமளவில் பொங்கல் நடைபெறுவது ஆண்டுதோறும் நடைபெறும் நிகழ்வாகும்.


நடுவீட்டு அம்மாவாகிய நீலாயுதாட்சி அம்மா காலத்தில் இருந்த அந்தணர்களே ஆலயத்தின் உரிமையாளர்களாக இருந்தபோது அடியவர்கள், உள்ளூர் பொது மக்கள் மற்றும் புலம்பெயர் உறவுகள் ஒன்றிணைந்து ஆலயத்திருப்பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். ஆலயத்தின் திருப்பணி வேலைகளை மேற் கொள்வதற்கு உள்ளூர் பிரமுகர்களை உள்ளடக்கிய திருப்பணிச்சபை ஒன்று தெரிவு செய்யப்பட்டு ஆரோக்கியமான சூழ்நிலையில் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன.

மேற்படி ஆலய திருப்பணிச் சபையின் ஒன்றுபட்ட முயற்சியினாலும் உள்ளூர் பொதுமக்கள் மற்றும் புலம்பெயர் உறவுகளின் நிதியுதவியினாலும் 2011 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு குறுகிய காலத்தில் திருப்பணி வேலைகள் நிறைவு செய்யப்பட்டன. 2012ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5ஆம் திகதி மகாகும்பாபிஷேக நீராட்டுவிழா நடைபெற்றது.

அம்பாளுக்கான திருப்பணியைத் தொடர ஏற்பாடுகள் நடைபெறுவதோடு மகாகும்பாபிஷேக தினமான தைத்திங்கள் திருவாதிரையை தீர்த்த உற்சவமாகக் கொண்டு 2013ஆம் ஆண்டு தொடக்கம் பத்துத் தினங்களுக்கு பெருந்திருவிழாவை நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. வேதாகம விதிமுறைப்படி வருடாந்த மகோற்சவத்தை நடத்துவதற்கு வசதியாக கொடிமரம் அமைப்பதற்கு முன்னேற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. அத்துடன் ஆலயத் திருப்பணி தொடரில் இராஜகோபுரம் அமைப்பதற்கும் அம்பாளின் அனுக்கிரகம் கிடைத்திருப்பதால் அதற்கான ஏற்பாடுகளும் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆவரங்கால் நடராஜ இராமலிங்கேஸ்வரர் பர்வத பத்தினி சமேதரர் (ஆவரங்கால் சிவன் கோவில்) ஆலயத்துக்கும் கன்னாரையம்பதி ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்துக்கும் நெருக்கமான தொடர்புகள் உண்டு. இரண்டு ஆலயங்களும் குறுகிய இடைத்தூ ரத்தில் அமைந்துள்ளன.

நடராஜ இராமலிங்கேஸ்வரர் வேட்டைத் திருவிழா அன்று அடியார்கள் புடைசூழ ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்துக்கு எழுந்தருளி வேட்டை முடித்து அம்பாள் சந்நிதியில் குறிப்பிட்டளவு நேரம் தரிந்திருந்து திரும்புவது வழமையான உற்சவமாக உள்ளது. ஊரே திரண்டு வேட்டைத் திருவிழாவில் கலந்து கொண்டு மாறி மாறி இரண்டு ஆலயங்களையும் தரிசிப்பது கண்கொள்ளாக் காட்சியாகும்.

உதயன் - 14.12.2012, 21.12.2012



# 64 அற்புதங்களால் அடியார்களை வசப்படுத்தும் சிறுப்பிட்டி மேற்கு ஞான வைரவர் ஆலயம்

**வை**ரவமூர்த்தமானது சிவாம்சமூர்த்தமாகும். சம்ஹாரருத்திரர் எனக் கூறப்படும் வைரவக்கடவுள் சத்துவ தாமசத்தவர் உடற்பற்றை துறத்தல் என்ற வகையில் நிர்வாணக் கோலத்துடன் உள்ளார். ஈழத்தில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் உள்ளிட்ட அன்னியராட்சிக் காலத்தில் சைவ ஆலயங்கள் இடித்தழிக்கப்பட்டு ஆட்சியாளர்களால் இந்துமத வழிபாட்டு முறைகள் புறந்தள்ளப்பட்டன. அந்தக் காலப்பகுதியில் மக்கள் வைரவர் கையில் ஏந்தும் சூலத்தை மறைவிடங்களிலும், கொல்லைப்புறங்களிலும் வைத்து வழிபட்டு வந்தனர்.

ஈழத்தில் வைரவர் வழிபாடு இயற்கையோடு இணைந்த ஒரு வழிபாடாகக் கொள்ளப்பட்டு வருகின்றது. கிராம பாலகர், ஊர்காவலர், காவற்தெய்வம் என்ற வகையில் வழிபடப்படும் வைரவருக்கும் ஆலயங்களிலும், இல்லங்களிலும் கிராமங்கள் தோறும் இலகுவான முறையில் கோயில் அமைத்து வழிபட்டு வருகின்றனர். ஆலயங்களில் விசேட கிரியைகள் ஆரம்பமாகும் போது வைரவருக்கு சிறப்புக் கிரியைகள் செய்யப்பட்டு வைரவரை சாந்தப்படுத்தி வைரவருக்கு உரிய

முறையிலான வழிபாடுகள் செய்யப்பட்டு அவரது அனுக்கிரகத்தைப் பெற்ற பின்பே ஏனைய கிரியைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சிவாலயங்களில் மட்டுமன்றி விநாயகர், முருகன், சக்தி ஆலயங்கள் உட் பட்ட ஆலயங்களில் உட்பிரகாரத்தில் கோபுரத்துக்கு வடக்குப் புறமாக மேற்கு நோக்கி யவாறு வைரவரை பிரதிஷ்டை செய்து வழிபட வேண்டும் என சைவ ஆகமங்கள், ஆலய வாஸ்துசாத்திரம் என்பன குறிப்பிடும் வைரவரை சேத்திர பாலகர் என அழைப்பர். சேஷத்திரமாகிய கோயிலைப் பாதுகாப்பவர் என கொள்ளப்படும். ஆலயங்களில் அர்த்தஜாம பூசையின் பின்னர் ஆலயக்கதவுகளைப் பூட்டி திறப்புகளை வைரவர் முன்வைத்து ஆலயத்தையும் ஊரையும் பாதுகாத்துக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்வர்.

யாழ். குடாநாட்டில் வைரவரை காவல் தெய்வமாக, குல தெய்வமாகப் போற்றி கிராமங்கள், வீடுகள்தோறும் சிறு ஆலயங்கள் அமைத்து நாளாந்தம் வழிபட்டு வருவது நடைமுறையாகவுள்ளது. எனினும் வைரவரை மூலமூர்த்தமாகக் கொண்டு ஆலயம் அமைத்து தேர்த்திருவிழா நடத்துவதும் மிகக் குறைந்த அளவிலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வீமன்காமம், சுதுமலை, காரைநகர், விழிசிட்டி, நுணாவில், கவுணாவத்தை, நல்லூர், கொண்டலடி, கரம்பொன், கொக்குவில், தலையாழி, சங்கானை, சிறுப்பிட்டிமேற்கு பகுதியில் அமைந்துள்ள வைரவர் ஆலயங்கள் குறிப்பிடத்தக்கன.

சிறுப்பிட்டி மேற்கு ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம் வரலாற்றுச் சிறப்புமிக்கது. வலி. கிழக்கில் அமைந்துள்ள வைரவர் ஆலயங்களில் பெரியது. தேர்த்திருப்பணியோடு கூடியது. வருடாந்தம் பெரும் திருவிழா நடைபெறும் சிறப்பு மிக்க ஆலயமாகும். புத்தூர் நிலாவரைச் சந்தியில் இருந்து தெற்கு நோக்கிச் செல்லும் இராசவீதியில் கிழக்குப் புறமாகச் செல்லும் சிறுப்பிட்டி மேற்கு ஒழுங்கையில் 1500 மீற்றர் தூரத்தில் சிறுப்பிட்டி ஞானவைரவர் ஆலயம் பனங்கூடல், தென்னை, மாஞ்சோலை, வாழைத் தோட்டம் சூழவுள்ள சுற்றாடலைக் கொண்ட விசாலமான நிலப்பரப்பில், அழகுற மூடிய உட்பிரகாரத்துடன் அமைந்துள்ளது. ஆலய அமைவிடம் பக்திபூர்வமான அமைதியான சூழலில் ஊரின் நடுவிடத்தில் அமைந்துள்ளது.

சிறுப்பிட்டி ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தின் வரலாறும், வளர்ச்சி தொடர்பாகக் கூறப்படும் கதைகளும் அற்புதங்கள் நிறைந்தவை. அடியவர்களை ஆலயத்தின் அருள்வியாபகத்தில் ஈடுபாடு கொள்ளச் செய்வன.

சிறுப்பிட்டி மேற்கில் வாழ்ந்த மக்கள் பூர்வீகமாக தாங்கள் வாழ்ந்துவரும் சூழலில் பனந்தோப்பின் மத்தியில் உள்ள வேப்பமரத்தின் அடியில் வைரவர் சூலத்தை வைத்து தமது இஷ்ட தெய்வமாக வழிபட்டு வந்தனர். தமது நேர்த்திகளை நிறைவுசெய்து பொங்கல், மடை செய்து வழிபட்டதோடு வைரவப் பெருமானில் வைராக்கியமான நம்பிக்கையும் கொண்டிருந்தனர். சூலத்தை வைத்து வழிபட்டு வரும் காலப்பகுதியில் ஆலய ஸ்தாபகர்களின் வழித்தோன்றலான இளையதம்பி வேலுப்பிள்ளை என்பவர் அயலவர்களின் ஆலோசனை ஒத்துழைப்புடன் சுண்ணாம்புக் கலவை கொண்டு கல்லினால் சிறுகோயில் கட்டி அதில் ஞானவைரவர் விக்கிரகத்தை வைத்து பூசை வழிபாடு செய்துவந்தார். இவ்வாறு நடைபெற்று வரும் காலப்பகுதியில் குறிப்பிட்ட காலம் பூஜை வழிபாடுகள் ஸ்தம்பிதம் அடைந்தன. இந்தக் காலப்பகுதியில் ஆலயச்சூழல் புதர் மற்றும் புற்றுகள் கொண்டனவாக மாறியது.

ஆலயம் அநாதரவான நிலையில் இருப்பதை அடியவர்களுக்கு எடுத்துணர்த்தி அவர்களின் ஆணவத்தை அடக்கும் பொருட்டு திருவுளம் கொண்டார். வைரவப்பெருமான். தினமும் நண்பகல் 12 மணிக்கு ஆலயத்தின் மணி ஒலிக்க பூசை நடப்பது போன்றும், உணர்த்தத்தலைப்பட்டதோடு தினசரி மாலை ஆறு மணிக்கு பின்னர் கறுத்த நிறம் கொண்ட கம்பீரமான ஒருவர் நாயுடன் ஆலயச் சூழலில் வலம் வருவதைக் கண்ணால் நேரடியாகக் கண்டு உணரப்படுவதும் ஊர் முழுவதும் வியந்து பேசப்பட்டது. இரவில் அச்ச உணர்வும் உருவாகத் தொடங்கியது.

இதனால் ஊர் முழுவதும் இறைபக்தியோடு கூடிய அச்சம் நிலவியது. இரவுவேளையில் ஆலயத்திற்கு அண்மையில் செல்வதற்கு மக்கள் பயந்தனர். ஊரில் எதிர்பாராத அமைதி நிலவியது. மக்கள் இரவுவேளையில் வீட்டுக்குள்ளே முடங்கிக் கிடந்தனர். இந்தச் சூழ்நிலையில் ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்து பூசைவழிபாடு, பொங்கல் செய்யவேண்டும் என்ற எண்ணம் மக்கள் மனதில் மேலோங்கத் தொடங்கியது.

இதே காலப்பகுதியில் மலேசியா நாட்டில் வனத்திணைக்களத்தில் பணிபுரிந்த சிறுப்பிட்டி மேற்கைச் சேர்ந்த கார்த்திகேசு செல்லப்புவுக்கு விபத்தினால் இடதுபக்க இடுப்புப் பகுதியில் ஊனம் ஏற்பட்டது. தனது சொந்த இடமாகிய சிறுப்பிட்டிக்கு திரும்பி வந்து தனது சகோதரி குஞ்சுப்பிள்ளையுடன் வசித்து வந்தார். அவர் சிறுப்பிட்டியில் தங்கியிருந்த வேளையில் வைரவர் ஆலயச் சூழலில் நிகழ்ந்துவரும் நிதர்சனமான

அற்புதங்களை நேரில் கண்டறிந்து ஆலயத்தைப் புனரமைக்க வேண்டும் என்பதில் தீராத ஆர்வம் கொண்டார்.

சிவாம்ச மூர்த்தமாகிய வைரவரைக் காவல் தெய்வமாகவும், கிராம பாலகர் என்ற வகையில் இல்லங்களிலும், ஊரின் மத்தியில் உள்ள வேப்பமரத்தின் கீழ் பிரதிஷ்டை செய்து வழிபடுவதைச் சாதாரணமாகக் கண்டுகொள்ளலாம். வைரவர் வழிபாடு வேதாகம விதி முறைகளுக்கு உட்பட்ட வகையிலும் அதற்கு உள்ளடங்காத சாதாரண நடைமுறையிலும் மேற்கொள்ளப்படுவதுண்டு. இந்த வகையில் ஊரே கூடி பொங்கல் செய்வதும் மடை வைத்து வழிபடுவதோடு சில இடங்களில் ஆடு, கோழி என்பனவற்றைப் பலி கொடுத்தும் தமது நேர்த்தியை நிறைவுசெய்து கொள்வர்.

ஊரையே ஒன்று கூட்டி, கோயில் அமைத்து குடமுழுக்கு செய்வித்த சிறுப்பிட்டி மேற்கு ஸ்ரீ ஞான வைரவரின் அருள்வியாபகம் அற்புதமானது. அடியார்களை வசப்படுத்துவது. மலேசியாவில் இருந்து ஊருக்குத் திரும்பிய கார்த்திகேசு செல்லப்பு வைரவரின் அருள்வியாபகத்தை கேட்டறிந்ததோடு நேரடியாகக் கண்டு வியந்தார். ஊரையே ஒன்றுகூட்டி ஆலோசித்து ஆலயத்திருப்பணியை மேற்கொள்ள திருவருளால் சித்தம் கொண்டார்.

ஞானவைரவருக்கு அண்மையில் சிறு கோயில் அமைத்து வழிபாடு செய்துவந்த இ.வேலுப்பிள்ளையுடன் கலந்தாலோசித்து ஆலயத் திருப்பணியை மேற்கொள்வதற்கு ஆலயமுன்றலில் ஒன்றுகூடிய கூட்டத்தில் பரிபாலனசபை உருவாக்கப்பட்டது. பரிபாலன சபையின் தலைவராக க.செல்லப்புவும் உறுப்பினர்களாக இ.வேலுப்பிள்ளை, வ.சின்னையா, க.வல்லிபுரம், வே.கனகசபை, ச.இளையதம்பி, கு.இராசா, கு.சின்னத்துரை, க.தம்பிப்பிள்ளை, வ.தம்பிமுத்து ஆகியோர் பொதுமக்களினால் தெரிவுசெய்யப்பட்டனர்.

ஆலய பரிபாலனசபை முன்னெடுக்க முற்பட்ட அனைத்து திருப்பணிகளுக்கும் ஊர் பொதுமக்கள் தங்களால் இயன்றளவு நிதியுதவி வழங்கியதோடு உடல் உழைப்பையும் ஒத்துழைப்பையும் வழங்கி உதவினர். கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம், ஸ்தம்ப மண்டபம் என்பன கட்டி முடிக்கப்பட்டதோடு ஆலயத்தின் பாவனையில் இருந்து திருமஞ்சனக் கிணறுக்குப் பதிலாக புதிய திருமஞ்சனக் கிணறும் அமைக்கப்பட்டது. பூர்வீகமாக வழிபட்டு வந்த ஸ்ரீ ஞான வைரவர் விக்கிரகம் கருவறையில் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

அத்துடன் புதிய ஆலயத்தின் உள்ளே வலப்பக்கத்தில் பிள்ளையார் விக்கிரகமும் இடது பக்கத்தில் முருகன் விக்கிரகமும் பிரதிஷ்டை செய்யப்பட்டு 1954ஆம் ஆண்டு தைத்திங்கள் நான்காம்நாள் திங்கட்கிழமை அத்த நட்சத்திரத்தில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. கும்பாபிஷேகத்தை தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெற்றது. 1986ஆம் ஆண்டு புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் விடப்பட்டது.

1954ஆம் ஆண்டுக்குப் பின்னர் வேதாகம முறைப்படி உரிய காலப்பகுதியில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு ஆலயப் புனரமைப்புடன் தொடர்ந்து மகா கும்பாபிஷேகங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. 2007ஆம் ஆண்டு ஆனி உத்தரத்தில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு ஆலயத் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டதோடு 2008ஆம் ஆண்டு தை மாதம் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (10.02.2008) புனராவர்த்தன நவகுண்டபக்ஷ மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து 45 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று சங்காபிஷேகத்துடன் நிறைவடைந்தது.

காலத்துக்குக் காலம் ஆலய பரிபாலனத்தைக் கண்காணித்துக் கொண்டுவரும் பரிபாலன சபையினரின் முயற்சியினாலும் ஊர் பொதுமக்கள் மற்றும் புலம்பெயர் உறவுகளின் ஒத்துழைப்பினாலும் மடைப்பள்ளி, வசந்தமண்டபம், பிள்ளையார் ஆலயம், முருகன் ஆலயம், மணிக்கூட்டுக் கோபுரம், நவக்கிரகங்களுக்கான ஆலயம், சிவன் ஆலயம், வாகனசாலை, ஆலயத்தைச் சுற்றி மதில், கிணறு, வெளிமண்டபம், தேர், தேர்முட்டி, உள்வீதி, மூடு மண்டபம், நீர்விநியோக இணைப்புகள் போன்ற திருப்பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

ஆலயத்தின் திருப்பணியிலும், ஊரோடு இணைந்த அபிவிருத்திப் பணியிலும் ஆரம்பகாலம் தொட்டு இன்று வரையும் இரண்டு மூத்த பிரஜைகள் தொடர்ந்து உழைத்து வருகின்றனர். 90 வயது நிரம்பிய நிலையிலும் ஊருக்காக உழைத்து வரும் "சொத்தியப்பா" என்று செல்லமாக அழைக்கப்படும் க. செல்லப்புவும் "சைவப்பா" என்று செல்லமாக அழைக்கப்படும் தம்பு இராமநாதனும் பாராட்டப்படுகின்றனர்.

ஊரவர்களினால் சமகாலத்தில் பொதுவைபவங்களில் நன்றியறிதலோடு இவ்விருவரும் கௌரவிக்கப்படுகின்றனர். அவர்களின் அறிவுரையையும் வழிப்படுத்தலையும் உரிய முறையில் ஏற்று இளைய தலைமுறையினர் இணைந்து செயற்படுகின்றனர். இது ஏனைய கிராமங்களுக்கு எடுத்துக்காட்டாகவும்

முன்மாதிரியாகவும் கொள்ளப்படுகின்றது. இவர்களுக்கு அண்மையில் ஊரே ஒன்றுகூடி விழா எடுத்து பொற்கிழி வழங்கிக் கௌரவித்தது.

வைரவருக்கு நித்திய, நைமித்திய பூசை வழிபாடுகளுடன் வருடாந்தம் பெருந்திருவிழாவும், வெள்ளிக்கிழமை, சித்திரைமாதப்பரணி, ஐப்பசிப் பரணி, கார்த்திகை மாத கால வைரவ அஸ்டமி, தைமாத செவ்வாய்க்கிழமைகளில் விசேட பூசை வழிபாடுகளும் நடைபெற்று வருகின்றன. வைகாசி பூரணையை தீர்த்தத் திருவிழாவாகக் கொண்டு 11 தினங்கள் வருடாந்த மகோற்சவம் நடைபெறும்.

குழந்தைப் பேறு வேண்டிய தம்பதிகள் தொடர்ச்சியாக ஆறு தேய்பிறை அட்டமியில், சிவப்பு அலரி மாலை சாத்தி அர்ச்சனை பூசை வழிபாடு செய்தும், வியாழக்கிழமைகளில் சந்தணக்காப்பு செய்வித்தும், அன்னதானம் செய்தும் வழிபடுவார்கள். வறுமை நீங்கி செல்வம் பெருக வெள்ளிக்கிழமைகளில் வில்வம் இலையால் அர்ச்சனை செய்து வழிபடுபவர். இழந்த சொத்துக்களை மீளப்பெற மிளகைத் துணியில் முடிச்சுக்கட்டி சிட்டியில் வைத்து நல்லெண்ணையில் தீபமேற்றி நேர்த்தி செய்வர். திருமணம் விரைவில் நிறைவேற ஞாயிற்றுக்கிழமைகளில் ராகுகாலத்தில் மாலை நேரத்தில் உருத்திர அபிஷேகம் செய்து வடை மாலை சாத்தி வழிபாடு செய்வார்கள்.

உதயன் - 16.11.2012, 23.11.2012



# 65 தமிழ்நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டு தாபிதம் செய்யப்பட்ட வளலாய் பிள்ளையார்

**15**ஆம் நூற்றாண்டில் தமிழ்நாடு கன்னியாகுமாரி மாவட்டத்தில் உள்ள நாகர்கோயிலில் இருந்து நிலப்பிரபு வாள வீரமாணிக்கம் தன்னுடன் எடுத்துவந்து தான் தங்கியிருந்த அச்சுவேலி வளலாய் பகுதியில் பிரதிஷ்டை செய்து வழிபட்டதோடு கோயிலும் அமைத்தார்.

அந்த மூலவிக்கிரகமான அருவுருவ மூர்த்தமான கல்லே இன்னும் மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. 1950ஆம் ஆண்டு வேதாகம முறைப்படி உருவாக்கப்பட்ட பிள்ளையார் விக்கிரகத்தை மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்து அருவுருவ மூர்த்தத்தை இரண்டாவது மண்டபத்தில் வைத்து மகாகும்பாபிஷேகம் செய்தவேளையில் குடமுழுக்கு நடத்திய முத்துக்குருக்களின் கனவில் இரவு தோன்றிய விநாயகப்பெருமான் அதிருப்தி தெரிவித்ததையடுத்து காலையில் மீண்டும் அருவுருவ விக்கிரகம் மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

வேதாகம முறைப்படி உருவாக்கப்பட்ட விக்கிரகம் இரண்டாம் மண்டபத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இன்றும் மூலஸ்தானத்தில் அருவுருவ வடிவமே பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

அச்சுவேலி வளலாய்ப் பிள்ளையார் அச்சுவேலி தொண்டமானாறு பிரதான வீதியில் தம்பாலைச் சந்தியில் இருந்து மேற்கு நோக்கிச் செல்லும் பலாலி விமான நிலைய வீதியில் இரண்டு கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. அண்மைக்கால யுத்த நடவடிக்கையால் சேதமடைந்த நிலையில் உள்ள ஆலயம் பெரும்பொருள் செலவில் புனரமைப்புச் செய்யப்படுகின்றது.

ஆலயத்தின் மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள அருவுருவ மூர்த்தம் நிலப்பிரபுவான வீரமாணிக்கம் கைகளுக்கு கிடைத்ததே அற்புதம்.

தமிழ்நாடு கன்னியாகுமாரி மாவட்டத்தில் உள்ள நாகர் கோயில் பகுதி சேரமரபினரான திருவிராங்கூர் மன்னர் ஆட்சியில் இருந்த காலப்பகுதியில் நிலப்பிரபுவான வீரமாணிக்கம் உணவுப் பொருள்களைக் களஞ்சியப்படுத்தி வைத்து பற்றாக்குறை ஏற்படும் காலத்தில் விநியோகம் செய்வதற்கு பொறுப்பாக இருந்தவர். அவர் தனது விளைநிலங்களை ஒருநாள் பார்வையிடச் சென்றவேளையில் கேணி ஒன்றில் சிறுவன் ஒருவன் நீச்சல் அடித்து விளையாடிக் கொண்டிருந்தான். புதியவனான சிறுவன் கேணியில் நீச்சல் அடிப்பதை அவதானித்த வீரமாணிக்கம் சிறுவனை அதட்டி, "நீ யார், என வினாவினார். குறும்புத்தனமாக பதில் கூறாமல் சிறுவன் விளையாடினான். கோபம் அடைந்த வீரமாணிக்கம் சிறுவனைப் பிடித்து தண்டனை வழங்கவேண்டும் என்ற எண்ணத்தோடு கேணியில் இறங்கினார். சிறுவன் நீரில் மூழ்கி மறைந்தான். வீரமாணிக்கம் நீரில் மூழ்கி சிறுவனைத் தேடினார். சிறுவனைக் கண்டுகொள்ள முடியவில்லை வித்தியாசமான கல் ஒன்று கையில் சிக்கியது.

சிறுவனுக்கு என்ன நடந்தது என்ற ஆழமான சிந்தனையோடு கவலை அடைந்த வீரமாணிக்கம் சிறுவனை கேணிக்கு வெளியேயும் தேடியதோடு கையில் சிக்கிய வித்தியாசமான கல்லை மரஅடியில் வைத்துவிட்டு மறைந்த சிறுவனை எண்ணியவாறு வீட்டிற்குள் வந்து கவலையோடு இருந்தார். அன்று இரவு வீரமாணிக்கத்தின் கனவில் தோன்றி "கேணியில் சிறுவனாக நின்றது தான் என்றும், வித்தியாசமான கல்லாக இருப்பது தானே என்றும், அதனை பிரதிஷ்டை செய்து வழிபாடு செய் என்றும்" பிள்ளையார் கூறினார். கனவில் கேட்டதை சிரமேற்கொண்டு தன்னுடன் எடுத்துச் சென்று வழிபாடு செய்து வந்தார்.

சில தினங்களில் அரசருக்கும் அவருக்கும் ஏற்பட்ட மனக்கசப்பை அடுத்து புலம்பெயர்ந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். யாழ்ப்பாண அரசனை சந்தித்து தனது நிலையை எடுத்துக்கூறி தனக்கு கௌரவமான வாழ்வு வழங்குமாறு விண்ணப்பித்தார்.

யாழ்ப்பாண அரசன் வளம்பெற்று விளங்கிய வளலாய் பகுதியை வீரமாணிக்கத்துக்கு வழங்கி தமிழ்நாட்டில் மேற்கொண்ட பணியை மேற்கொள்ளுமாறு பணித்ததாகவும் வளலாயில் தங்கி தனது பணியை மேற்கொண்ட வீரமாணிக்கம் தன்னோடு எடுத்துவந்த அருவுருவ மூர்த்தமாகிய கல்லை வளலாயில் பிரதிஷ்டை செய்து சிறுகோயில் அமைத்து வழிபாடாற்றிவந்தார்.

குடிசைக் கோயிலுக்கு சுண்ணாம்பினால் கட்டடம் அமைத்து வழிபட்டார். கோயில் அமைத்த பின்னர் அவரது வாழ்வு மேலும் சிறந்தது. மக்கள் பிள்ளையாரை வியந்து வழிபட்டனர். நேர்த்திகள் நிறைவேறின. வீரமாணிக்கத்துக்குப் பின்னர் அவரது சந்ததியினரும் வளலாய்ப் பகுதியில் வசித்துவந்த நகரத்தார் எனப்படும் வர்த்தசமூகத்தினரும் கோயிலை பராமரித்தனர்.

போர்த்துக்கீசரது ஆட்சியில் இந்து ஆலயங்கள் இடித்தளிக்கப்பட்டவேளையில் வளலாய்ப் பிள்ளையார் மூலவிக்கிரகமான அருவுருவ மூர்த்தம் இந்துக்களினால் பொருத்தமான முறையில் மறைக்கப்பட்டு வைக்கப்பட்டதோடு மதஅடக்குமுறை ஒழிந்து மீண்டும் சைவ ஆலயங்கள் வழிபாட்டுக்கு நிர்மாணிக்கப்பட்ட வேளையில் மறைத்துவைத்த மூலவிக்கிரகத்தை மீண்டும் வைத்து மக்கள் வழிபட்டதோடு கோயில் கட்டி வழிபட்டனர். வளலாய் பகுதியில் வாழ்ந்த நகரத்தாரும். வேதாரணியக் குருக்கள்மாரும் ஆலயத்தை உரியமுறையில் பராமரித்து பூசை வழிபாடுகள் உற்சவங்களை மேற்கொண்டு வந்தனர்.

வளலாய் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் உள்ள பகுதி "குருக்கள் வளவு" என இன்றும் அழைக்கப்படுகின்றது. குருக்கள் வளவில் இருந்து கோயிலுக்கு வழிநடைப்பாதை இருந்து வந்தது. அந்தப் பகுதி இன்றும் 'வழிநடை' என்றே அழைக்கப்படுகின்றது. நகரத்தார் வாழ்ந்த பகுதி "நகரத்தார் வளவு" செட்டிவளவு என்றே இன்றும் அழைக்கப்படுகின்றது. கோயில் அமைந்திருக்கும் காணியும் அதன் சுற்றாடலும் "வீரமாணிக்கம் புலம்" என்றே அழைக்கப்படுவதோடு காணிகளின் உறுதி ஆவணங்களிலும் அவ்வாறே குறிப்பிடப்பட்டுள்ளது.

வலி. கிழக்கில் உள்ள புராதனமான ஆலயங்களில் ஒன்றாக விளங்கும் வளலாய் பிள்ளையார் கோயில் மூர்த்தி. தலம். தீர்த்தம் என்பவற்றில் சிறந்து விளங்குவதோடு அற்புதங்கள் நிறைந்த தலமாகவும் விளங்குகின்றது. கல் வரலாற்றில் 500 ஆண்டுகளுக்கு முற்பட்டது. அருவுருவமான வித்தியாசமான

கல்லும் வேதாகம முறைப்படி செய்யப்பட்ட விநாயகர் விக்கிரகமும் மூலமூர்த்தமாக பிரதிஷ்டை செய்யப்பட்டு உள்ளமை சிறப்பம்சமாகும்.

யாழ்ப்பாண அரசரின் பிரதானியாக வளலாய் பகுதியில் இருந்து அரச நிர்வாகம் மேற்கொண்ட தமிழ்நாடு நாகர் கோயிலைச் சேர்ந்த நிலப்பரப்பு வீரமாணிக் கத்துக்கு விநாயகர் கனவில் கூறிய அருள்வாக்கின் பிரகாரம் தன்னுடன் எடுத்துவந்து வளலாயில் பிரதிஷ்டை செய்யப்பட்டதோடு குறித்த காலப்பகுதியில் கட்டுமானத் துக்கு பயன்படுத்தப்பட்ட சுண்ணாம்புக் கல்லும் கொண்டு நிரந்தர கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு வழிபடப்பட்டது.

போர்த்துக்கேயர் காலத்தில் ஆட்சியாளரால் ஏனைய ஆலயங்கள் போல இடித்த ழிக்கப்பட்ட போதிலும் ஆங்கிலேயரது ஆட்சியில் புராதனமான அருவுருவம் உரிய முறையில் பழைய ஆலயம் இருந்த இடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டு ஆலயம் கட்டப்பட்டது. வணிகப் பிரமுகர்களான நகரத்தாரும் தமிழ்நாடு வேதாரணயத்தில் இருந்து வந்து வளலாயில் குடியேறி இருந்த வேதாரணியம் மடக்குருமாரும் இணைந்து கோயிலைப் பராமரித்து பூசை வழிபாடு செய்தனர். வளலாய் மக்கள் தங்களின் இஷ்ட தெய்வமாக ஏற்று பிள்ளையாரை வழிபட்டு ஆலயத்துக்குத் தேவையான அனைத்தையும் வழங்கி உதவினர்.

முதலாம் உலக மகாயுத்தம், இரண்டாம் உலக மகாயுத்தம் என்பன காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டதை அடுத்து வளலாயில் இருந்த நகரத்தாரும் வேதாரணியம் மடக்குருமாரும் இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை சிவன்கோயில் சுற்றாடலில் குடியேறி வாழ்ந்தனர். இந்த நிலையில் ஊர் மக்கள் திருமுறைகளை ஓதி வழிபட்டனர். 1945ம் ஆண்டு ஆசிரியர் வீரகத்தி கணபதிப்பிள்ளையைத் தலைவராகக் கொண்டு அறங்காவல் சபை உருவாக்கப்பட்டு ஆலய பரிபாலனத்தை மேற்கொண்டதோடு ஆலயத்தை புனரமைத்து திருப்பணிகளையும் மேற்கொண்டனர். வேதாகம முறைப்படி கிரியைகள் நித்திய, நைமித்திய பூசைகளையும் செய்வித்தனர். புதிதாக அமைக்கப்பட்ட ஆலயத்தின் மகாகும்பாபிஷேகம் 1960ஆம் ஆண்டு நடைபெற்றது. அதைத் தொடர்ந்து 1975,1989ஆம் ஆண்டுகளில் குடமுழுக்கு சிறப்பாக நடைபெற்றது.

ஆலயத்தின் திருப்பணிகளை திட்டமிட்ட முறையில் மேற்கொள்வதற்கு அறங்காவல் சபையினர் தலைவரின் சகோதரி பள்ளி ஆச்சி என அழைக்கப்பட்ட செல்வி வீ.சரஸ்வதி தனது முழு வருமானத்தையும் வழங்கி உதவினார். அத்துடன் கே.பார்வதி தனது மரண சாதனத்தின் படி தனது சொத்துக்கள் அனைத்தையும் ஆலயத்துக்கு வழங்கி ஆலயத்திருப்பணி மற்றும் பூசை வழிபாடுகள் சிறப்பான

முறையில் நடைபெறுவதற்கு வகை செய்தார். ஆலய அறங்காவல் சபை திருவெம்பாவை உற்சவ உபயகாரர்களின் குடும்ப உறுப்பினர்கள் மத்தியில் இருந்து தெரிவு செய்யப்படுகின்றனர். அறங்காவல் சபை ஆலயமுன்றலில் கூடும் பொதுச்சபையில் இருந்து தெரிவுசெய்யப்படுகின்றது. தற்போதைய அறங்காவல் சபை ஆலயமுன்றலில் கூடும் பொதுச்சபையில் அறங்காவல் சபையின் தலைவராக சண்முகநாதன் ஞானரூபனும், செயலாளராக வடிவேலு யோகநாதனும் பணியாற்றி வருகின்றனர்.

பலாலி இராணுவத்தளத்துக்கு கிழக்குப் பக்கத்தில் மிக அண்மையில் இருக்கும் (இராணுவப் பாதுகாப்பு வேலியில் இருந்து 300 மீற்றர்) ஆலயம் அண்மைக்கால இராணுவ நடவடிக்கையால் பெருமளவு சேதத்துக்கு உள்ளாகி உள்ளது. ஆலயமதில்கள், மண்டபங்கள், பிரகாரங்கள் பெருமளவில் சேதமடைந்த நிலையில் உள்ளன. 1990ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் தொடக்கம் 1998 நடுப்பகுதி வரை ஆலயத்துக்கு செல்வதற்கு பாதுகாப்புத் தரப்பினரால் அனுமதிக்கப்படவில்லை. அந்தவகையில் பூசை வழிபாடு இன்றி ஆலயம் இருந்தது. 1998ஆம் ஆண்டு நடுப்பகுதியில் இருந்து 2003ஆம் ஆண்டு அதுவும் நிறுத்தப்பட்டு பூசைவழிபாடு இன்றி புதர்மண்டிக் கிடந்த ஆலயம் கடந்த வருடம் நவம்பர் 29ஆம் திகதி முதல் நாளாந்த பூசை வழிபாட்டிற்கு அனுமதி வழங்கப்பட்டதை அடுத்து நித்திய, நைமித்திய பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

இராணுவநடவடிக்கைகளினால் பல்வேறு சேதங்களுக்கு உள்ளாகிய ஆலயத்தின் பூசகருக்கான தங்குமிடம் "குருக்கள் மனை" விமானகுண்டுத் தாக்குதலுக்கு உள்ளாகி முற்றாகச் சேதமடைந்துள்ளது. 2011.11.29 முதல் பூசைவழிபாடு நடைபெற்றபோதிலும் இந்த வருட முற்பகுதியில் பூசையில் கலைவந்து ஆடிய பெண்மணியின் வாக்கின் ஊடாக "புனிதமில்லாத நிலையில் இருக்கின்றேன்" எனத் தெரிவித்து பிள்ளையார் இட்ட கட்டளைக்கு அமைய கடந்த மே மாதம் பாலஸ்தானம் செய்யப்பட்டு புனருத்தாரணத் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன. "இராணுவ நடவடிக்கையால் சேதமடைந்த ஆலயத்தின் திருப்பணியை உரிய முறையில் மேற்கொள்வதற்கு பெருமளவு நிதி தேவைப்படுவதால் ஆலயத்திருப்பணிக்கு உதவ விரும்புவோர் அச்சுவேலி இலங்கை வங்கி கணக்கு இலக்கம் 73254360இற்கு செலுத்தி உதவலாம் என அறங்காவல் சபையின் தலைவர் ச.ஞானரூபன் தெரிவித்தார்.

வைகாசி பௌர்ணமியை தீர்த்தத் திருவிழாவாகக் கொண்டு 10 தினங்கள் வருடாந்த பெருந்திருவெம்பாவை, சதுர்த்தி, ஆவணிச்சதுர்த்தி, பிள்ளையார்கதை, வருடப்பிறப்பு, தைப்பொங்கல், மாதப்பிறப்பு, நவராத்திரி உள்ளிட்ட விசேட கால உற்சவங்களும் நடைபெற்று வருகின்றன. பரிவாரத் தெய்வங்களாக முருகன், வைரவர், சந்தான கோபாலர், அம்மன் ஆகிய தெய்வங்களும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

கடந்த வருடம் நவம்பர் மாதம் ஆலயத்தை 8 வருடங்களின் பின்னர் சுத்தப்படுத்திய வேளையில் ஐம்பொன்னால் செய்யப்பட்ட ஒரு அடி உயரமான விக்கிரகம் ஆலயத்தில் கண்டெடுக்கப்பட்டு ஆலய உட்பிரகாரத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

உதயன் - 24.08.2012, 01.09.2012



# 66 வலி. கிழக்கில் காலத்தால் முந்திய அச்சுவேலி புனித சூசையப்பர்

இலங்கைக்கு போர்த்துக்கேயர் வரும்வரையும் சமயங்கள் என்ற வகையில் இந்து மதமும், பௌத்த மதமும், இஸ்லாம் மதமும் மக்களின் வழிபாட்டுக்கு உரியனவாக இருந்துவந்தன. 1505ஆம் ஆண்டு எதிர்பாராத வகையில் இலங்கையை வந்தடைந்த போர்த்துக்கேயர் இலங்கையைத் தமது ஆளுகைக்கு உட்படுத்துவது என்ற நோக்கோடு கத்தோலிக்க சமயத்தை சுதேசிகள் மத்தியில் பரப்பத் தலைப்பட்டனர். சமயம் பரப்புவதற்கு, கல்வியைப் பயன்படுத்தியதோடு சமயத்தோடு இணைந்த நிலையில் சமூகப்பணியையும் முன்னெடுத்தனர்.

குறித்த காலப்பகுதியில் யாழ்ப்பாண இராச்சியம் தமிழ் மன்னர்களின் ஆளுகைக்கு உட்பட்டிருந்ததோடு சைவமும், தமிழும் தனித்துவத்தோடு நிலைபெற்றிருந்தது. இந்தக் காலப்பகுதியில் யாழ்ப்பாண இராச்சிய ஆளுகைப் புலத்தில் கத்தோலிக்க மதத்தைப் பரப்புவதற்கு மேற்கொண்ட முயற்சிகள் யாழ்ப்பாண இராச்சிய மன்னர்களால் நேரடியாக எதிர்க்கப்பட்டதோடு பல நூற்றுக்கணக்கானோர் இந்த வகையில் உயிர்ப்பலியானதும் யாழ்ப்பாண இராச்சியத்தை போர்த்துக்கீசர் கைப்பற்றித் தமது ஆளுகைக்கு உட்படுத்தவும் செய்தது.

போர்த்துக்கீசர் ஆட்சிக்காலத்தில் கல்வி ஊடாகச் சமயம் பரப்பப்பட்டதோடு சமயப் பணியில் ஈடுபட்டவர்கள் சமூகப்பணியிலும் ஈடுபட்டு மக்கள் மத்தியில் சமயத்தைப் பரப்பியதோடு வழிபாட்டுக்கான தேவாலயங்களையும் நிறுவினர். கத்தோலிக்க சமயத்தில் இணைந்துகொண்டவர்கள் சமய விசுவாசிகளாக வாழத்தலைப்பட்டனர். அச்சுவேலி மேற்கில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையானோர் கத்தோலிக்க மதத்தில் இணைந்து வாழ்ந்தனர். அச்சுவேலி மேற்கில் அச்சுநகரில் கத்தோலிக்க சமயத்தில் குறிப்பிட்ட சில குடும்பத்தினர் இணைந்து கொண்டது தொடர்பான அச்சுநகர் அபிவிருத்திச் சபையின் தலைவரும். மூத்த பிரஜையுமான எஸ்.சீ. இம்மானுவேல் தகவல் தெரிவிக்கையில்.

குறித்த காலப்பகுதியில் கத்தோலிக்க சமயத்தில் சேர்ந்த சிற்றம்பலம் முதலியார் ஆவரங்காலில் வசித்த வட்டுக்கோட்டையைச் சேர்ந்த மரியம்செட்டியார் என்ற கத்தோலிக்க வர்த்தகர் சிற்றம்பலம் முதலியாரின் மகள் காக்கைப்பிள்ளையைத் திருமணம் செய்ததாகவும். இவர்களின் குடும்பத்தில் ஏற்பட்ட சில பிரச்சினைகள் காரணமாக மீண்டும் சைவசமயத்தில் சேர்ந்துகொண்டனர். பின்னர் மனவருத்தம் அடைந்து தோலகட்டியில் வாழ்ந்த வெள்ளைக்கார மதகுருவிடம் மன்னிப்புக்கேட்டு கத்தோலிக்க மதத்தில் இணைந்துகொண்டதாகவும் இது 1750 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிகழ்ந்ததாகவும் அதன் பின்பு வேறு சிலரும் அந்தக் குடும்பங்களின் வழித்தோன்றல்களுமே கத்தோலிக்கர்களாக வாழ்வதாகத் தெரிவித்தார். மேலும் காக்கைப்பிள்ளைக்கு இடப்பட்ட கத்தோலிக்க நாமம் "மரியா" என்பதாகும். ஆங்கிலேயர் காலத்தில் வழங்கப்பட்ட "சேர்" பட்டத்துக்கு சமமானதாக அந்தக் காலப்பகுதியில் மரியாவுக்கு "டொன்" பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டு காக்கைப்பிள்ளை "டொன் மரியா" என மரியாதையோடு அழைக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

ஆரம்பகாலத்தில் கத்தோலிக்க சமயத்தில் இணைந்துகொண்டவர்கள் வழிபடுவதற்கு அச்சுவேலி பொதுச்சந்தைக்கு அருகில் சிறு தேவாலயம் அமைக்கப் பட்டிருந்தது. 1800 ஆம் ஆண்டு தற்போதைய புனித சூசையப்பர் ஆலயத்தின் வடகிழக்கு மூலையில் ஓலைக்கொட்டிலில் புனித சூசையப்பரை வைத்து வழிபட்டதோடு பெரிய குருசுமரம் நடப்பட்டிருந்தது.

இந்த இடம் பிற்காலத்தில் பழைய குருசுமரத்தடி என்று அழைக்கப்பட்டது. ஆரம்ப சூசையப்பர் தேவாலயம் சிற்றம்பல முதலியார் காலத்தில் அவரின் அனுசரணையுடன் நிறுவப்பட்டது.

அச்சுநகர் புனித சூசையப்பர் ஆலயம் அச்சுவேலி சங்கானை வீதியில். வடக்குப் புறத்திலும் அச்சுவேலி பொலிஸ் நிலையத்துக்கு வடமேற்குப் பக்கத்திலும்

அமைந்துள்ளது. இது வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் காலத்தால் முந்தியதும் அளவுப் பிரமாணத்தில் மிகப்பெரிய தேவாலயமாகவும் விளங்கி வந்தது. அச்சுவேலி பங்குத்தந்தைக்கான வதிவிடத்துடன் மிக விசாலமான பரப்பளவு கொண்ட காணியில் இது அமைந்துள்ளது.

ஆலய வளாகத்தில் சுவாமி ஞானப்பிரகாசர் படிப்பகமும், வாசகர்சாலையும், கலை அரங்கமும் அமைந்துள்ளன. அச்சுவேலி மண்ணுக்குப் பெருமை சேர்த்தவர்களில் முன்னணியில் திகழ்பவரும், ஈழத்தின் முதுபெரும் தமிழ் அறிஞரும், பாவலருமான தம்பிமுத்து என்பவர் பிறந்து வாழ்ந்து தமிழ்ப் பணிபுரிந்த இடம், அச்சுநகர் ஆகும். ஈழத்தில் முதன்முதல் தமிழ்அச்சுக்கூடம் தம்பிமுத்து புலவரால் அச்சுவேலியில் நிறுவப்பட்டது. பழைய அச்சுக்கூடத்தின் அழிவுகளும், சிதைவடைந்த அடித்தளமும் இன்று காணக்கூடியதாக உள்ளது. பாவலர் தம்பிமுத்து சுவாமி ஞானப்பிரகாசரின் வளர்ப்புத் தந்தையார் ஆவார். சுவாமி ஞானப்பிரகாசர் வாழ்ந்த இடம் சூசையப்பர் கோயில் சூழல். ஞானப்பிரகாசரை சுவாமி ஞானப்பிரகாசராக உருவாக்கி ஆத்மீக உலகுக்கு வழங்கிய பெருமை பாவலர் தம்பிமுத்துப்பிள்ளைக்கும், அச்சுவேலி மண்ணுக்கும் உரியது. அச்சுவேலி மேற்கில் கிறிஸ்தவ பாரம்பரியம் நிலைபெறுவதற்கு உதவியவர்கள் என்றவகையில் பாவலர் தம்பிமுத்துப்பிள்ளையும் சுவாமி ஞானப்பிரகாசரும் நினைவு கூரப்படுகின்றனர். அந்தவகையிலேயே அச்சுவேலி புனித சூசையப்பர் தேவாலய வளாகத்தில், தேவாலயத்து தெற்குப்பக்கத்தில் சுவாமிஞானப்பிரகாசரை நினைவுகூரும் வகையில் நிரந்தரமான கட்டடங்களோடு கூடிய அமைப்புக்கள் நிறுவப்பட்டுள்ளன. சூசையப்பர் தேவாலயத்தின் வளர்ச்சியிலும் சுவாமிஞானப்பிரகாசரும், அவரின் வளர்ப்புத்தந்தையார் பாவலர் தம்பிமுத்துப்பிள்ளையும் இணைந்து பெரும்பங்கு பணியாற்றியுள்ளனர்.

அச்சுவேலி புனித சூசையப்பர் தேவாலயம் கட்டட வடிவமைப்பில் தனித்துவமான கலை அம்சங்கள் கொண்டதாக மிளிர்கின்றது. யாழ். மறை மாவட்டத்தில் வேறு எந்த தேவாலயத்திலும் காணமுடியாத "டோம்" மிக உயரமான தூபியைக் கொண்டது. கோட்டைமன்னார் சென் செபஸ்ரியார் மற்றும் நீர்கொழும்பு சென். செபஸ்ரியார் தேவாலயங்களில் மட்டும்தான் இந்தக் கட்டட வடிவமைப்பு உள்ளது. அங்கிருந்து மாதிரி வடிவமைப்பு எடுக்கப்பட்டே இங்கும் நிறுவப்பட்டது.

மிகவிசாலமான பெரிய தேவாலயமான அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயம் வரலாற்றுப் புதுமை கொண்டதும், நம்பி வழிபடுவோரினதும் அச்சுவேலிப்பகுதி மக்களினதும் பெரும் நம்பிக்கைக்கும் உரியது. 4 ஏக்கருக்கு மேற்பட்ட விஸ்தீரணமான வளாகத்தில் கோயில்கொண்டு அருள்பாலிக்கும் புனித சூசையப்பருக்கு

வருடாந்த உற்சவங்கள் ஒன்பது தினங்கள் நடைபெறுகின்றன. வருடாந்த திருவிழாவின் இறுதிநாள் மே முதலாம் திகதி. தொழிலாளர் தினத்தில் மிக விமர்சையாகக் கொண்டாடப்படுகின்றது.

அச்சுவேலிப் பங்கு ஆரம்பத்தில் கரவெட்டிப் பங்குடன் இணைந்திருந்தது. பின்னர் அச்சுவேலி புத்தூர்ப் பகுதியை உள்ளடக்கியதாக அச்சுவேலிப் பங்கு உருவாக்கப்பட்டது. தற்பொழுது உள்ள அச்சுவேலிப் பங்கில் புனித சூசையப்பர் ஆலயம், புனித அந்தோனியார் ஆலயம், நவக்கிரி புனித றீட்டம்மா ஆலயம் என மூன்று தேவாலயங்கள் அமைந்துள்ளன. அச்சுவேலி பங்குத்தந்தைக்கான வதிவிட குருமனை புனித சூசையப்பர் தேவாலய வளாகத்தில் அமைந்துள்ளது.

1505ஆம் ஆண்டு இலங்கைக்கு எதிர்பாராதவிதமாக வந்து சேர்ந்த போர்த்துக்கீசரால் இலங்கையில் றோமன் கத்தோலிக்க கிறிஸ்தவ சமயம் பரப்பப்பட்டது. அதை அடுத்து 1618இல் இலங்கையைக் கைப்பற்றிய டச்சுக்காரரால் (ஒல்லாந்தரால்) கிறிஸ்தவ சமயம் பரப்பப்பட்டது. போர்த்துக்கீசரும், ஒல்லாந்தரும் சமயங்களை சுதேசிகளுக்கு பரப்புவதில் மாறுப்பட்ட நடைமுறைகளைக் கையாண்ட போதிலும் றோமன் கத்தோலிக்க. கிறிஸ்தவ சமயங்களில் நம்பிக்கை வைத்து மக்கள் தத்தமது சமயங்களாக ஏற்றுக்கொண்டதோடு சமரச சன்மார்க்கத்தை ஏற்றுக்கொண்ட நிலையில், தத்தமது மனக்குறையைப் போக்கும்வகையில் விரும்பியவர்கள் விருப்பத்துக்கு ஏற்ப வழிபடுவதைக் காணலாம். அச்சுவேலியில் றோமன் கத்தோலிக்க சமய ஸ்தாபிதம் சிற்றம்பல முதலியாரின் மகள் திருமதி மரியம் செட்டியார் காக்கைப்பிள்ளை (டொன்மரியா) ஆகியோருடன் ஆரம்பமாகிய போதிலும் 1995ஆம் ஆண்டுக்கு முந்திய காலப்பகுதியில் அச்சுவேலி நகரை உள்ளடக்கிய அச்சுவேலிப் பங்கில் 400 குடும்பங்கள் வரையில் வாழ்ந்தனர். 1996 இற்கு முந்திய இடப்பெயர்வை அடுத்து கணிசமான தொகையினர் புலம்பெயர்ந்த நிலையில் தற்பொழுது புனித சூசையப்பர் ஆலயத்திற்குரிய குடும்பங்கள் என்ற வகையில் 80 குடும்பங்கள் வரையில் உள்ளனர். தொடர்ச்சியாக ஐந்து முதலியார் பரம்பரையால் நிர்வகிக்கப்பட்டுவந்த சூசையப்பர் ஆலயத்தில் 50 இற்கு மேற்பட்ட குருமார் அருட்பணியாற்றியுள்ளனர். ஆரம்ப காலத்தில் வெள்ளைக்கார வெளிநாட்டு குருமாரும் பிற்காலத்தில் சுதேசிகளும் பணியாற்றி உள்ளனர்.

அச்சுவேலி புனித சூசையப்பர் தேவாலயத்தின் குருக்களாக சட்டமேதை ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் உடன்பிறந்த சகோதரர் வணபிதா ஜீ.ஜீ. பாலசுந்தரம் பணியாற்றிய 1940-1949 காலப்பகுதியில், பாலசுந்தரம் அடிகளாரின் வழிகாட்டலோடு சேர் சிற்றம்பலம் காடினர் (சிலோன் தியேட்டர் ஹாக்கிலீஸ் பூட்சிற்றி நிறுவனங்களின் உரிமையாளரும் பிரபல தொழிலதிபர்) அச்சுவேலி ஆஸ்பத்திரி, அச்சுவேலி

புனித திரேசாள் மகளிர் கல்லூரி. அச்சுவேலி லங்காமாதா மடம் என்பனவற்றை நிறுவியதோடு. வறிய மக்களின் வாழ்வாதாரத்துக்கும் சமய. சமூகப்பணிகளையும் பெருமளவில் அச்சுவேலியில் மேற்கொண்டார். அத்துடன் அச்சுவேலி புனித சூசையப்பர் தேவாலய திருப்பணிப் பணியை மேற்கொண்டு தற்போதைய கட்டடக் கட்டமைப்புக்கு கொண்டுவந்தார். அத்துடன் ஆலயத்துக்கும். விளையாட்டு மைதானத்துக்குமான காணிகளையும் கொள்வனவுசெய்து வழங்கியுள்ளார். இந்தக் காலப்பகுதி புனித சூசையப்பர் தேவாலய வளர்ச்சியிலும் அச்சுவேலி அபிவிருத்தியிலும் பொற்காலம் எனக் கொள்ளத்தக்கது.


1968-1972 காலப்பகுதியில் தேவாலயக் குருக்களாகப் பணியாற்றிய வணபிதா வெண்டக்கோன் காலத்தில் தேவாலயத்தின் விசாலமான முன் மண்டபம் நிர்மாணிக்கப்பட்டது. ஆலய வளாகத்தில் வாசகர்சாலையும் ஞானப்பிரகாசர் படிப்பகமும். கலை அரங்கமும் நிறுவப்பட்டன. 1988ஆம் ஆண்டு வணபிதா றொக்ளோ அடிகளின் காலத்தில் ஆலயம் புனரமைக்கப்பட்டது.

அந்தக் காலப்பகுதியில் தேவாலய அருள்பணிச்சபையின் செயலாளராக ஸ்ரெனிஸ்லஸ் மாஸ்ரர் பணியாற்றியுள்ளார். 2005ஆம் ஆண்டு தேவாலயத்தில் 175ஆவது ஆண்டுவிழா கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

அச்சுவேலி புனித சூசையப்பர் தேவாலயத்தின் குருமாராகப் பலரும் அரும்பெரும் பணியாற்றிய போதிலும் அவர்களின் பட்டியலைப் பெற்றுக்கொள்ளமுடியவில்லை. வணபிதா குளாஸ் அடிகள். வில்வராஜசிங்கம். ஒ.எம்.ஐ. டெலகேயம். நல்லையா. பஸ்தியாம்பிள்ளை. நோபேட். குரூஸ் ஒ.எம்.ஐ. பெரிய சிங்கராஜர். சிங்கராஜர். மென்போட். யோகரத்தினம். கருணாரத்தினம். சோதிநாதன். பீற்றர் துரைரத்தினம் உள்ளிட்ட பலரும் காலத்துக்கு காலம் ஆலயத்தின் குருக்கள்மாராக இருந்து அரும்பணியாற்றியுள்ளனர். தற்பொழுது வணபிதா அன்ரனிபாலா அடிகள் பணியில் உள்ளார்.

தேவாலயத்தின் அருட்பணிச்சபையின் தலைவராக வணபிதா அன்ரனிபாலாவும். செயலாளராக கொ.கொட்பிறிவில் யோசேப் (ஜீவன்) பொருளாளராக பி. மரியதாஸ் ஆகியோரும் குடும்ப ரீதியில் நிர்வாகக்குழு உறுப்பினர்களும் பணியாற்றி வருகின்றனர். ஆலயப் பராமரிப்பாளர் பணியை யோன்ராஜா ஜீவரன் மேற்கொண்டு வருகிறார். தேவாலயப் பணிகள் மேலும் சிறப்பதாக.

உதயன் - 15.02.2012, 23.02.2012



# 67 நாடியவர்களுக்கு நல்லருள் நல்கும் அச்சுவேலி புனித அந்தோனியார்

அச்சுவேலிப் பகுதியில் அமைந்துள்ள மூன்று கத்தோலிக்க தேவாலயங்களில் இரண்டாவது பெரிய தேவாலயமாக விளங்குவது அச்சுவேலி வடக்கு புனித சூசையப்பர் ஆலயம். இந்த ஆலயம் அச்சுவேலி பஸ் நிலையத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கிச் செல்லும் பிரதான வீதியில் 750 மீற்றர் தூரத்தில் வீதிக்கு வடக்குப் புறத்தில் கம்பீரமாக றோமன் கத்தோலிக்க கட்டடக் கலை அம்சங்களை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது.

நாடியவர்களுக்கு நல்லருள் பாலிக்கும் அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயத்தை, சமயம்சார் நிலையில் இல்லாமல் பெருமளவில் இந்துக்களும் தரிசனம் செய்வதும் தமது குறைகளை, தேவைகளை நிறைவு செய்யும் வகையில் நேர்த்தி வைத்து வழிபாடு செய்வதும் சூசையப்பர் மீது அடியவர்கள் கொண்டுள்ள நம்பிக்கையை வெளிப்படுத்துவதாக உள்ளது.

யாழ். குடாநாட்டில் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் என்ற மூன்று பெரும் பிரிவுகளுக்கும் ' அச்சு'ப்போல மைய இடத்தில் அமைந்துள்ள கிராமமாகிய அச்சு வேலியில் புனித சூசையப்பர் ஆலயம், நவக்கிரி அன்னம்மாள் ஆலயம், புனித அந்தோனியார் ஆலயம் என்பன அமைந்துள்ளன.

இலங்கைக்கு 1505இல் போர்த்துக்கீசரின் வருகை, 1618இல் ஒல்லாந்தரின் வருகை என்பனவற்றை அடுத்தே றோமன் கத்தோலிக்க கிறிஸ்தவ சமயங்களின் வியாபகமும், அந்தச் சமயங்கள்சார் நிலையில் ஆலயங்களும் அமைக்கப்பட்டு குறித்த காலகட்ட ஆட்சியாளர்களின் தனித்துவமான செல்வாக்கோடு சுதேசிகள் மத்தியில் பரப்பப்பட்டன. அதற்கு முந்திய காலப்பகுதியில் வடபகுதியில் பெருமளவில் இந்து மதமும், குறிப்பிட்ட நகரக் குடியிருப்புக்களை அண்டிய நிலையில் இஸ்லாம் மதமும் வழிபாட்டுக்குரியனவாக இருந்து வந்தன.

அச்சுவேலிப் பகுதியில் முதன்முதலாக 1800ஆம் ஆண்டுக்குப் பின்னர் றோமன் கத்தோலிக்க சமயம் அச்சுவேலி மேற்கில் சிற்றம்பலமுதலியரின் மகள் திருமதி மரியம்செட்டியார் காக்கைப்பிள்ளை (டொன்மரியா) குடும்பத்தினர் சார்நிலையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அந்தவகையில் புனித சூசையப்பர் ஆலயமும் அச்சுவேலி மேற்கில் (அச்சுநகர்) நிறுவப்பட்டது. 1995ஆம் ஆண்டு இடப்பெயர்வுக்கு முன்னர் அச்சுவேலிப் பங்கில் 400 குடும்பங்கள் வரையில் கத்தோலிக்க குடும்பங்களாகப் பதிவுசெய்யப்பட்டிருந்தன.

யாழ்ப்பாணத்தில் நிலவிய சாதி சமூக வேறுபாடுகள் குறித்த காலப்பகுதியில் இந்து ஆலயங்களில் மட்டுமல்ல, கத்தோலிக்க தேவாலயங்களிலும் நிலவியதோடு பின்தங்கிய சமூகங்களைச் சேர்ந்தவர்களுக்கு சமத்துவமான வழிபாட்டு உரிமை மறுக்கப்பட்ட நிலையும் காணப்பட்டது. அத்தகைய நிலை அச்சுவேலி சூசையப்பர் தேவாலயத்திலும் காணப்பட்டதை அடுத்து, அச்சுவேலி வடக்கில் புதிய தேவாலயம் ஒன்றை நிறுவுவது என்ற முன்மொழிவு வலுப்பெற்றது.

அந்தக் காலப்பகுதியில் அச்சுவேலி புனித சூசையப்பர் தேவாலயத்தின் குருக்களாக கடமையாற்றியவர் வணபிதா ஜீ.ஜீ. பாலசுந்தரம் (1940-1949). இவர் சட்டமேதை ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் உடன்பிறந்த சகோதரர்.

ஜீ.ஜீ. பாலசுந்தரம் அடிகள் காலத்தின் தேவையைக் கருத்திற்கொண்டு அச்சுவேலியில் இரண்டாவது தேவாலயமாக அச்சுவேலி வடக்கில் புனித சூசையப்பர் ஆலயத்தை அமைப்பதற்கான அனுமதியை மறை மாவட்ட ஆயரிடம் பெற்றுக்கொடுத்ததோடு, தேவாலய ஸ்தாபிதத்துக்கான சகல வழிகாட்டல் ஆலோசனைகளையும் வழங்கி உதவினார். புதிய ஆலயத்தின் முதலாவது குருவாகவும் பொறுப்பேற்று பூசை வழிபாடுகளை மேற்கொண்டார்.

குறித்த பகுதியில் சூசையப்பர் தேவாலயத்தைத்தான் அமைக்கவேண்டும் என்ற விடயம் தொடர்பாக பொதுமக்கள் கருத்து அறியப்பட்ட வேளையில் ஏழைகளின் ரட்சகர் புனித அந்தோனியார் தேவாலயமே அமைக்கப்படவேண்டும் என்ற

கோரிக்கை பொதுமக்களால் முன்வைக்கப்பட்டதோடு, அதற்கு குறித்த பிரதேசத்தில் வசிக்கும் இந்துக்களும் தமது மனப்பூர்வமான ஒத்துழைப்பை வழங்கினர். கட்டுமானப்பணிகளுக்கும் உதவினர்.

புனித அந்தோனியார் கண்கண்ட தெய்வம் அடியவர்களுக்கு ஏற்படுகின்ற துன்பதுயரங்களைக் கூடிய விரைவில் போக்குபவர். களவு மற்றும் தமக்கு ஏற்படுகின்ற துயரங்கள் குறித்து விண்ணப்பம் செய்து நேர்த்தி வைத்தால் குறிப் பிட்ட சில தினங்களில் அவை தீரும். கைவிட்டு விலகிய பொருள் வந்து சேரும் என்ற நம்பிக்கை சமூகத்தில் வலுப்பெற்றுள்ளது. இந்தவகையில் இந்துக்கள் பெருமளவில் நேர்த்திவைத்து பக்திபூர்வமாக வழிபடுவதையும், அந்தவகையில் செவ்வாய்க்கிழமையிலும், ஞாயிற்றுக்கிழமையிலும் அடியவர் கூட்டம் சமய வேறு பாடுகளைக் கடந்து சமரச சன்மார்க்க நிலையில் பெருமளவில் காணப்படும். அச்சுவேலிப் பங்கின் இரண்டாவது பெரிய தேவாலயமான அச்சுவேலி வடக்கு புனித அந்தோனியார் தேவாலயம் 1945ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. ஆரம்பத்தில் 3 1/2 பரப்பு காணியில் நிறுவப்பட்ட தேவாலயம் இன்று பத்துப் பரப்புக்கு மேற்பட்ட வளாகத்தில் கம்பீரமான தோற்றத்துடன் காட்சியளிக்கின்றது.

தன்னை நாடி வந்து நம்பிக்கை வைத்து வழிபடுகின்ற, நினைக்கின்றவர்களின் உள்ளக்கோயிலில் உறைந்து அருள்பாலிக்கும் அச்சுவேலி வடக்கு புனித அந்தோ னியாரை சமரச சன்மார்க்க கோட்பாடோடு இந்துக்கள் பெருமளவில் வழிபட்டுத் தங்களது இடர்களை போக்கிக்கொள்கின்றனர். ஆலயத்தில் கூடும் அடியவர்களில் பெருமளவானோர் இந்துக்கள்.

சமயங்கள் கடந்த நிலையில் சகலரும் புனிதர் அந்தோனியாரைத் தமது உள்ளக் கோயிலில் நினைத்து வழிபடுகின்றனர். தாம் தொடரும் பயணமோ கருமமோ, தமக்கு ஏற்பட்ட இடர்களோ, இன்னல்களோ இல்லாமல் ஒழியும் தமது வாழ்க்கையில் ஒளிபிறக்கும் என்ற நம்பிக்கையுடன் காணிக்கை செலுத்தி வழிபடுகின்றதோடு தமது பொருள்களைக் கள்வர்கள் கவர்ந்தவேளையில் மற்றும் கையிழந்தவேளையில் அந்தோனியாரிடம் பொறுப்புக்கொடுத்துக் காணிக்கை செலுத்துகின்றனர். அந்தவகையில் "இழைகட்டுதல்" என்ற கருமத்தையும் மேற்கொள்கின்றனர். 'இழை கட்டுதல்' என்பதை கேட்ட மாத்திரத்திலேயே பொருளைக் கையாடியவர்கள் அதனைக் கைவிடவேண்டும். சம்பந்தப்பட்டவர்களிடம் ஒப்படைத்துவிடவேண்டும் அல்லது பொருளை இழந்தவர்களின் கண்பார்வையில் வீசிவிடவேண்டும் என்ற மனச்சோர்வுக்கு உள்ளாவதோடு அவ்வாறு இல்லாவிடில் அந்தோனியார் வழங்கும் பெரும் துன்பத்தை எதிர்கொள்ளவேண்டும் என்ற நம்பிக்கைக்கு உள்ளாகி விடுகின்றனர்.

அச்சுவேலிப் பங்கில் காலத்தின் தேவையைக் கருத்திற்கொண்டு அச்சுநகர் புனித சூசையப்பர் தேவாலயத்துக்கு அடுத்த நிலையில் அச்சுவேலி வடக்கு புனித அந்தோனியார் தேவாலயமும் நவக்கிரி புனித நீற்றம்மா தேவாலயமும் கட்டப்பட்டன.

1945ஆம் ஆண்டு கட்டப்பட்ட அச்சுவேலி வடக்கு புனித அந்தோனியார் ஆலய த்தைச் சார்ந்த நிலையில் ஆரம்பத்தில் 35 குடும்பங்கள் மட்டில் வாழ்ந்தனர். பின்னர் இருநூறுக்கு மேற்பட்ட குடும்பங்கள் இணைந்திருந்தபோதிலும் கடந்தகால போர்ச் சூழ்நிலை மற்றும் இடப்பெயர்வுகளை அடுத்து, அச்சுவேலியில் இருந்து பெருமளவில் புலம்பெயர்வு ஏற்பட்ட நிலையில் தற்பொழுது நூறு குடும்பங்கள் வரையிலேயே தேவாலயம்சார் நிலையில் கத்தோலிக்க குடும்பங்களாக வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் தேவாலயத்தின் அனைத்துத் தேவைகளிலும் தமது பங்களிப்பைச் செலுத்தி அமைதியாக வாழ்கின்றனர்.

குறித்த காலப்பகுதியில் ஆலயக் கட்டுமானப் பணிக்கான காணியைத் தேடிய வேளையில் பிரதான வீதியோரமாக உள்ள தமது 3 1/2 பரப்பு தோட்ட நிலத்தை அச்சுவேலியைச் சேர்ந்த அகஸ்தீன் என்பவரின் மகன் ஞானஆதிக்கம் எலியாஸ் அன்பளிப்பாக வழங்கி உதவினார். அந்த இடத்தில் சிறிய தேவாலயம் ஒன்று அமைக்கப்பட்டது. அதனை உரியமுறையில் அமைப்பதற்கான ஏற்பாடுகளை வணபிதா ஜி.ஜி பாலசுந்தரம் அடிகளார் நேரடியாக கவனித்ததோடு புதிய தேவால யத்தில் திருப்பலி வழிபாடுகளையும் மேற்கொண்டார். அனைத்து கத்தோலிக்க குடும் பங்களும், இந்துக்களும் நிதி வழங்கியதோடு மட்டுமல்லாது உடல் உழைப்பையும் வழங்கி தேவாலயத்தை நிர்மாணிப்பதற்கு உதவினர். ஆரம்பத்தில் அந்தோனியார் தேவாலயத்துக்கான கொடி மரம், ஒலி எழுப்புவதற்கான 'மணி' என்பனவற்றை சின்னப்பு எலியாஸ் குடும்பத்தினர் வழங்கி உதவினார்.

1965ஆம் ஆண்டு அந்தோனியார் தேவாலயம் புனரமைக்கப்பட்டு தற்போது காணப்படும் கட்டுமான அமைப்பில் திருத்தியமைக்கப்பட்டது. அதை அடுத்து ஆண்டுதோறும் நடைபெறும் திருவிழாவை முன்னிட்டு ஆலயத்தை வர்ணம் பூசி புதுப்பொலிவடையச் செய்வதோடு காலத்தின் தேவைக்கேற்ப கட்டுமானப் பணிகளும் திருத்தவேலைகளும் நடைபெற்று வருகின்றன.

2012ஆம் ஆண்டு ஆலயத்துக்கு மிக அவசியமான 'குருமனையை' நிறுவிமுடிக்கவேண்டும் என்ற இலக்கோடு ஆலயத்துக்கு கிழக்குப்புறமாக உள்ள காணி நான்கு பரப்பைக் கொள்வனவு செய்து குருமனைக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்றன.

காணிக்கொள்வனவு மற்றும் குருமனை அமைப்பதற்கான நிதி உதவியை சமய வேறுபாடுகளைக் கடந்த நிலையில் இந்துக் குடும்பங்களும், அனைத்துக் கத்தோலிக்க குடும்பங்களும் வழங்கி உதவின. குருமனை அமைப்பதற்கான ஏற்பாடுகளை அப்போது பிரான்சிஸ் (அழகர்) தலைமையிலான குழுவினர் மேற்கொண்டனர். குருமனை அமைப்பதற்கான வழிகாட்டலை அப்போது அச்சுவேலி பங்குத்தந்தையாக கடமை புரிந்த அருட்தந்தை ஜெபநேசரட்ணம் அடிகளார் வழங்கியதோடு அதற்கான நிதிவளத்தைத் தேடுவதிலும் பங்குமக்களோடு முன்னின்று உழைத்தார்.

26 இலட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட குரு மனையை இந்த வருட முற்பகுதியில் யாழ். மறை மாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை திறந்து வைத்து ஆசீர்வதித்தார்.

உதயன் - 29.05.2012, 06.07.2012



# 68 வலிகாமம் கிழக்கின் வாழ்வாதாரத்தில் கூட்டுறவு அமைப்புக்களின் பங்களிப்பு

கூட்டுறவு "ஐக்கியம்", "ஒன்று கூடி வாழ்தல்" , "ஒன்றுபட்டு உழைத்தல்" எனப் பொருள்படும். ஒருவரால் ஆற்றுவதற்கு கடினமான செயலைப் பலா் ஒன்று கூடி மிக இலகுவாகவும் சிக்கனமாகவும் செய்து முடித்தல் என்பதே அதன் உட்பொருள். ஒருவா் பலருக்காகவும், பலா் ஒருவருக்காகவும் உழைப்பதென்பதே கூட்டுறவின் அதியுன்னத இலட்சியமாகும். உயிரிகளின் வாழ்வுடனும் வளர்ச்சியுடனும் கூட்டுறவுப் பண்புகள் இரண்டறக் கலந்துள்ளன. அந்தவகையில் மனிதன் தோன்றிய காலம் முதல் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருந்து இன்றைய உயா்நிலைக்கு மனித இனத்தை மேல் நிலைப்படுத்தி நிற்கின்றது எனக்கொள்ளப்படுகின்றது.

1844 ஆம் ஆண்டு கூட்டுறவுக் கொள்கையை "றொச்டேல்" முன்னோடிகள் ஒழுங்கமைத்து, வடிவமைத்து உலகுக்கு பிரகடனப்படுத்தினா். தடையற்ற அங்கத்துவம் ஜனநாயக நிர்வாகம், ஆண், பெண் இருபாலாருக்கும் சமஉரிமை, தரமான கலப்படம் அற்ற பொருள்களை விநியோகித்தல் , சங்க விடயங்களில் இரகசியம் பேணாத பகிரங்கத் தன்மை உள்ளிட்ட 13 கொள்கை விதிகளைக் கொண்ட பிரகடனத்தின் ஊடாகக் கூட்டுறவு உலகின் பல்வேறு துறைகளிலும் பரந்து விரிந்துள்ளது.

இலங்கையில் 1906ஆண்டு கூட்டுறவு அம்சம் பொருந்திய கடன் கொடுக்கும் கூட்டுறவு அமைப்பு தெல்தெனியாவில் உள்ள தும்பறை கிராமத்தில் முதன்முதல் உருவாக்கப்பட்டுச் செயற்பட்டது. 1911ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க முதலாவது கூட்டுறவுச் சட்டத்தின் பிரகாரம் இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட முதலாவது ஐக்கிய நாணயச் சங்கம் 1912ஆம் ஆண்டு மாத்தறை மாவட்டத்தில் என்ன வெல்லப்படபத்த கிராமத்தில் உருவாக்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் 1916 ஆம் ஆண்டு முதலாவது ஐக்கிய நாணய சங்கம் கரவெட்டியில் உருவாக்கப்பட்டுப் பதிவுசெய்யப்பட்டது. யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சங்கத்தின் செயற்பாடுகள் "ஐக்கிய நாணய சங்கங்கள்" என்ற வகையில் கிராமிய மட்டத்தில் பலம் பொருந்திய அமைப்புக்களாகச் செயற்பட்டுவந்தன.

1916ஆம் ஆண்டில் இருந்து 1940ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதி ஐக்கிய நாணயச் சங்கங்களின் காலப்பகுதி எனக் கூறும் வகையில் ஐக்கிய நாணய சங்கத்தின் செயற்பாடுகள் விரவிக் காணப்பட்டன.யாழ். மாவட்டக் கூட்டுறவு அமைப்பின் தந்தை எனப் போற்றப்படும் பெரியார் எஸ். வீரசிங்கம் அவர்களின் அயராத முயற்சியினால் யாழ்ப்பாணத்தில் உள்ள புகையிலைச் செய்கையாளர்களையும் ஒன்றுசேர்த்து யாழ் மாவட்ட மலையாளப் புகையிலை உற்பத்தியாளர் சங்கம் 1933ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

இதில் யாழ்ப்பாணத்தில் புகையிலைச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் அனைவரும் உறுப்புரிமை பெற்றிருந்ததோடு, பிரதேச ரீதியாகவும் சங்கத்தின் கிளைகள் அமைக்கப்பட்டு செயற்பட்டன. இதன் செயற்பாடுகள் 1945 வரை உறுதியான நிலையில் இருந்தன. 1945இல் யாழ்ப்பாணத்தில் இருந்து இந்தியாவின் கேரளத்துப் புகையிலை ஏற்றுமதி செய்வது தடைசெய்யப்பட்டதை அடுத்து சங்கத்தின் செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைந்தன. யாழ்ப்பாணத்தின் முதலாவது பணப்பயிர் புகையிலையே.

மலையாளப் புகையிலை செய்கை ஸ்தம்பிதம் அடைந்ததைத் தொடர்ந்து யாழ். மாவட்டத்தில் சிகரெட் புகையிலைச் செய்கை, பீடிப் புகையிலைச் செய்கை முன்னெடுக்கப்பட்டன. மலையாளப் புகையிலைச் செய்கை மேல்நிலை பெற்றிருந்த காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் பிரதான கைத்தொழிலாக சுருட்டுக் கைத்தொழில் விளங்கியது. ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் சுருட்டுச் சுற்றும் தொழிலில் ஈடுபட்டனர். நிறுவனமயப்படுத்தப்பட்ட நிலையில் சுருட்டுத் தொழிற்சாலைகள் செயற்பட்டன. தனியார் துறையினர் இதில் ஆதிக்கம் செலுத்தினர்.

சுருட்டுத் தயாரிக்கும் தொழிலில் தனியார் செலுத்திய ஆதிக்கம் தொழிலா ளர்களுக்குப் பாதகமாக இருந்தமையினால் சுருட்டுத் தொழிலாளர்களின் வாழ்வாதார மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு 1940ஆம் ஆண்டு கோப்பாயில் 'சுருட்டுத் தொழிலாளர்களுக்கான ஐக்கிய சங்கம்' நிறுவப்பட்டது. இது தொழிலாளர்களுக்கான வசதிகளை மேம்படுத்துவதில் அக்கறையுடன் செயற்பட்டது. கோப்பாய் சுருட்டுத் தொழிற்சாலையில் 200இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் சுருட்டு சுற்றும் பணியில் ஈடுபட்டனர். சுருட்டுத் தொழிற்சாலையாக இயங்கிய பழைய கட்டடம் கோப்பாய் நாற்சந்தியில் வடமேற்கு மூலையில் தற்பொழுதும் உள்ளது.

இரண்டாம் உலக மகா யுத்த காலத்தில் ஏற்பட்ட உணவுப் பஞ்சத்தை அடுத்து இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருள்கள் மொத்த வியாபாரிகள் மூலமும் தனியார் வியாபாரிகள் மூலமும் பொதுமக்களுக்குக் கூப்பன்முறை மூலம் விநியோகிக்கப்பட்டன. 1942-1943 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இந்த நடை முறை எதிர்பார்த்தளவுக்கு வெற்றியளிக்கத் தவறியதோடு. அந்த நடைமுறை பொது மக்களுக்கு பாதிப்பானவையாகவும் காணப்பட்டதையடுத்து 1944ஆம் ஆண்டு பங்கீட்டு உணவுப்பொருள் விநியோகத்துக்குக் கிராமிய மட்டத்தில் கூட்டுறவுப் பண்ட கசாலைகள் நிறுவப்பட்டன. இந்த வகையில் வலி.கிழக்கில் 60 இற்கும் மேற்பட்ட பண்டகசாலைகள் பங்கீட்டு உணவு விநியோகத்தில் ஈடுபட்டன.

வலி. கிழக்கின் வாழ்வாதார மேம்பாட்டுக்குக் கூட்டுறவுத்துறை ஆரம்பகாலத்தில் இருந்து இடையறாத தொடர்ச்சியான பங்களிப்பை வழங்கி வந்துள்ளது. 1942-1944 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 60இற்கு மேற்பட்ட பண்டகசாலைகள் பங்கீட்டு உணவுப் பொருள்களை விநியோகித்து வந்த நிலையில் பண்டகசாலைகளுக்கு உணவுப் பொருள்களைச் சீராக விநியோகிப்பதைக் கருத்திற் கொண்டு 1944.09.25 ஆம் திகதி 877 ஆம் இலக்கத்தில் பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுப் பண்டகசாலைகளின் சமாசத்துக்கான களஞ்சியம் நீர்வேலியில் நிறுவப்பட்டு உணவுப்பொருள் விநியோகம் செய்யப்பட்டது. சமாசத்தின் நிர்வாகக் குழுவில் 9 பேர் இடம்பெற்றிருந்தனர். அதன் தலைவராக அச்சுவேலியைச் சேர்ந்த வீ.வீரசிங்கம் செயற்பட்டு வந்தார்.

நீர்வேலியில் அமைந்திருந்த சமாசத்தில் இருந்து வளலாய் , இடைக்காடு உள் ளிட்ட பகுதிகளுக்கு மாட்டு வண்டிகள் மூலம் வாராந்தம் உணவுப் பொருள்களை எடுத்துச் செல்வதில் உள்ள சிரமங்களைக் கருத்திற் கொண்டு வலி.கிழக்கு வடபகுதியின் மத்திய இடமான ஆவரங்காலில் இரண்டாவது களஞ்சியம் நிறுவப்பட்டது.

1955ஆம் ஆண்டு இந்தக் களஞ்சியங்களில் இருந்து 16 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் 28 பண்டகசாலைகளுக்கும் 20 தனியார் கூப்பன் கடைகளுக்கும் உணவு விநியோகம் செய்யப்பட்டன. களஞ்சிய முகாமையாளருக்கு 180ரூபாவும் எழுதுவினைஞருக்கு 160ரூபாவும் தொழிலாளருக்கு 130ரூபாவும் மாதாந்த சம்பளமாக வழங்கப்பட்டன.

**விவசாய விருத்தி விளைபொருள் விற்பனைக் கூட்டுறவுச் சங்கம்**

யாழ்.மாவட்டத்தின் பொருளாதார நிலையில் 1940ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் ஏற்பட்ட மாறுதல்களை அடுத்து வலிகாமத்தின் விவசாய கூட்டுறவுச் சங்கம் செயற்படத் தொடங்கியது. 1942.03.06ஆம் திகதி ஸ்தாபிதம் செய்யப்பட்ட சங்கத்தின் மூலம் யாழ். மாவட்ட விவசாய உற்பத்திகளை தென்னிலங்கைக்குப் புகையிரதம் மூலம் ஏற்றிச் செல்வதற்கு வசதியாக வலிகாமம் வடக்கு, கிழக்குப் பகுதியை உள்ளடக்கியதாக விவசாயக் கூட்டுறவாளர் சங்கத்தின் தலைமைக் காரியாலயமும் களஞ்சியமும் சுன்னாகம் புகையிரத நிலையத்துக்கு அருகில் செயற்படத் தொடங்கியது. வெங்காயம் உள்ளடங்கலாக விவசாய உற்பத்திகள் தென்னிலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இதன்மூலம் விவசாயிகளின் வாழ்க்கைத்தரம் மேம்பட்டது. சங்கமும் லாபம் அடைந்தது. சங்கத்தின் பணியாளர் களுக்கு அரச ஊழியர்களுக்குச் சமமான ஊதியமும் வழங்கப்பட்டன.

குறித்த காலப்பகுதியில் வலி.கிழக்குப் பிரதேசத்தில் வெங்காயப் பயிர்ச்செய்கை பெருமளவில் மேற்கொள்ளப்பட்டதால் விவசாயிகளின் நலனைக் கருத்திற்கொண்டு 1948 ஆம் ஆண்டு வலி.கிழக்குக்குத் தனியாக "விவசாய விளைபொருள் விற்பனைக் கூட்டுறவுச் சங்கம்" நிறுவப்பட்டது. 1952.11.13ஆம் திகதி J/1055 இலக்கத்தில் பதிவுசெய்யப்பட்டு செயற்பட்டு வந்தது. வலி.கிழக்கில் உற்பத்தி செய்யப்பட்ட வெங்காயம் முழுவதையும் சங்கம் கொள்வனவு செய்து சந்தைப்படுத்த முடியாத நிலையில் விவசாயிகளிடம் இருந்து பங்கீட்டு அடிப்படையில் வெங்காயத்தைக் கொள்வனவு செய்யவேண்டி இருந்ததால் அச்சுவேலி, இடைக்காடு, பத்தமேனி, உரும்பிராய், ஊரெழு, கோப்பாய், நீர்வேலி எனக் கிராம மட்டத்தில் விவசாய விளைபொருள் விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு தனித்தனியாக விவசாய உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதில் ஈடுபட்டு வந்தன. இந்தக் காலப் பகுதியில் வெங்காயம் பனை ஈக்கினால் பின்னப்பட்ட கூடுகளில் போடப்பட்டு கூடுகள் சாக்கில் அடுக்கிக் கட்டப்பட்டுச் சந்தைப்படுத்தப்பட்டதால் வெங்காயக்கூடு பின்னும் தொழில் யாழ்ப்பாணத்தில் குடிசைக் கைத்தொழிலாகச் செயற்பட்டது. இதனால் குடும்பங்களின் வாழ்வாதாரம் மேம்பாடடைந்தது. ஒரு வெங்காயக் கூடு இரண்டு சதம் வீதம் கொள்வனவு செய்யப்பட்டது. கூடுகளில் வெங்காயம் நிரப்பும்

தொழிலில் மாணவர்கள் மற்றும் வயோதிபர்கள் ஈடுபட்டனர். 100 கூடுகளுக்கு வெங்காயம் நிரப்பினால் 50 சதம் கூலியாக வழங்கப்பட்டது. வறிய குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் விடுமுறைக் காலங்களில் வெங்காயக் கூடுகளில் வெங்காயத்தை நிரப்பி பெற்றுக்கொள்ளும் ஊதியத்தின் மூலம் தமது கல்விச் செலவின் கணிசமான அளவை ஈடுசெய்யக் கூடியதாக இருந்தது.

வெங்காயச் செய்கைக்கு ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயிகளுக்குக் கடன் அடிப்படையில் விவசாய உபகரணங்கள் மற்றும் உள்ளீடுகள், விதைகள் வழங்கி விவசாயிகளின் வாழ்வாதார மேம்பாட்டுக்கு ஆக்கபூர்வமான பங்களிப்பினை நல்கியுள்ளன.

உணவு விநியோகத்தில் காலத்துக்குக் காலம் ஏற்பட்ட மாற்றங்கள் கூட்டுறவு அமைப்பு முறையிலும் மாற்றங்களையும் மறுசீரமைப்புக்களையும் ஏற்படுத்தியது. இந்தவகையில் தனித்தனியாகவும் கிராம மட்டங்களிலும் செயற்பட்டு வந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒன்றிணைக்கப்பட்டு 1971ஆம் ஆண்டு வலி. கிழக்கில் வலி.கிழக்கு வடபகுதி ( அச்சுவேலி) பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், வலி.கிழக்குத் தென்பகுதிப் (நீர்வேலி) பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் எனத் தனித்தனியாக இரண்டு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களாகச் செயற்படத் தொடங்கின.

1971ஆம் ஆண்டு அரசினால் மேற்கொள்ளப்பட்ட கூட்டுறவு மறுசீரமைப்பின் பிரகாரம் வலி கிழக்கில் கிராம மட்டத்தில் செயற்பட்டு வந்த 58 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் வலி. கிழக்கு வடபகுதி, வலி.கிழக்குத் தென்பகுதி என இரண்டு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களாக மறுசீரமைப்புச் செய்யப்பட்டன.

**அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்**

வலி.கிழக்கு வடபகுதியில் கிராமமட்டத்தில் செயற்பட்டுவந்த 40 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களையும் உள்ளீர்ப்புச் செய்து 1971.03.10ஆம் திகதி வ/1546ஆம் பதிவு செய்யப்பட்டது. வலி.கிழக்கு வடபகுதி (அச்சுவேலி) பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைக் காரியாலயம் அச்சுவேலி இராசவீதியில் செயற்பட்டு வந்தது. 1995ஆம் ஆண்டு இடப்பெயர்வை அடுத்து சங்கத்தின் தலைமை அலுவலகக் கட்டடத்தில் பாதுகாப்புத் தரப்பினரின் முகாம் செயற்படுவதால் யாழ்ப்பாணம் - பருத்தித்துறைப் பிரதான வீதியில் புத்தூரில் சங்கத்தின் தலைமைப் பணிமனை செயற்பட்டு வருகின்றது.

யாழ்.மாவட்டத்தில் முதன்மை இடத்தில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் 36 கிளை நிலையங்களும் கிராமிய வங்கி,

எரிபொருள் நிரப்பு நிலையம் என்பனவற்றுடன் செயற்பட்டுக் கொண்டிருக் கின்றன. 8 கோப்சிற்றி விற்பனை நிலையங்கள் செயற்படுகின்றன. சங்கத்தின் பொதுமுகாமை யாளராக த.கவீந்திரதாஸ் பணியாற்றுகின்றார். க. பேரின்பநாயகம் தலைமையில் நெறியாளர் குழு செயற்படுகின்றது. 23 ஆயிரத்துக்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. இதில் 11 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் 100ரூபாவுக்கு மேற்பட்ட பங்கு உரிமையைக் கொண்டவர்கள். 29 கட்டடத்தொகுதிகள் சொந்தமாக உள்ளன. 6 கோடி ரூபா நிரந்தர வைப்பில் உள்ளது. 3 லொறி உட்பட நான்கு வாகனங்கள் உள்ளன. 100இற்கு மேற்பட்ட பணியாளர்களைக் கொண்டது. 37 ஆயிரத்துக்கு மேற்பட்ட நிரந்தர நுகர்ச்சியாளர்களைக் கொண்டுள்ளது.

**வலி. கிழக்குத் தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்**

நீர்வேலி கந்தசாமி கோயிலுக்கு முன்பாக யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியோரத்தில் அமைந்துள்ள வலி.கிழக்கு (நீர்வேலி) பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தனது பிராந்தியத்தில் கிராம மட்டத்தில் செயற்பட்ட 18 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை உள்ளீர்ப்புச் செய்து 1971.02.22ஆம் திகதி ஜே/1554 இலக்கத்தில் பதிவுசெய்துள்ளது.

நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுமுகாமையாளராக க. சிவலிங்கம் கடமை ஆற்றுகின்றார். நெறியாளர் குழு நா. சுந்தரலிங்கம் தலை மையில் செயற்படுகின்றது. 3 கிராமிய வங்கிகள், எரிபொருள் நிரப்பு நிலையம் என்பனவற்றோடு 34 கிளை நிலையங்களும் செயற்படுகின்றன. 25 ஆயிரத்துக்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டது. 10 ஆயிரம் பேர் வரையில் 100 ரூபாவுக்கு மேற்பட்ட பங்கு உரிமையைக் கொண்டுள்ளனர். 5 கோப்சிற்றிகள் செயற்படுகின்றன. 3 லொறி உட்பட நான்கு வாகனங்கள் உள்ளன. 22 விற்பனை நிலையக் கட்டடத் தொகுதிகள் சொந்தக் கட்டடத்தில் செயற்படுகின்றன. 18 மில்லியன் ரூபாவை நிரந்தரவைப்பில் கொண்டுள்ளது. 100 ஊழியர்கள் பணியாற்றுகின்றனர். 35 ஆயிரத்துக்கு மேற்பட்ட நிரந்தர நுகர்ச்சியாளர்களைக் கொண்டது.

**சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள்**

கூட்டுறவு அமைப்பின் தோற்றமே சிக்கன சேமிப்பு கடனுதவி என்ற வகையில் அறிமுகமாவதைச் சர்வதேச ரீதியிலும் இலங்கையிலும் கண்டுகொள்ள முடிகின்றது. யாழ். மாவட்டத்தில் வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச்சபை செயற்பட்டு வந்த காலப்பகுதியில் கூட்டுறவு மாகாண வங்கி அமைக்கப்பட்டது. அதன்மூலம் ஐக்கிய நாணய சங்கங்கள் தமது நிதித் தேவையைப் பூர்த்திசெய்து வந்தன.

வலிகாமம் கிழக்குப் பிரிவில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் கூட்டுறவு அமைப்புக் கள் ஒவ்வொன்றும் வளர்ச்சிக்கும் மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கு அடிமட்ட த்தில் இருந்து உதவுவனவாகவே உள்ளன. அதனடிப்படையில் தனிமனித முன்னேற்றத்திலும். குடும்ப முன்னேற்றத்திலும் கைகொடுத்து உதவும் கால்நடை வளர்ப்பை மேம்படுத்தும் வகையில் வலி.கிழக்குக் கால்நடை வளர்ப்போர் கூட்டுற வுச்சங்கம் செயற்பட்டு வருகின்றது.

### வலி. கிழக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்

விவசாயமும்-கால்நடை வளர்ப்பும் இணைந்த அம்சங்கள் என்பதனை பண் டைய வரலாற்றில் இருந்து கண்டுகொள்ள முடிகின்றது. விலங்கு வேளாண்மை எனச் சிறப்பித்துக் கூறப்படும் இந்தத்துறை மனிதனின் போஷாக்கு நலனுக்கும் அத்தியாவசியமானது. பால்.இறைச்சி என்பனவற்றோடு பயிர் வளர்ச்சிக்கான பசளையையும் வழங்கி வருகின்றது. வலி.கிழக்குக் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியில் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களப் பிரதேச வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு அண்மையில் அமைந்துள்ளது. ஜே/2062ஆம் இலக்கத்தில் 1989.09.08ஆம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ளது. ரூபா 100 பங்குரிமைகளைக் கொண்ட 1667 அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது. கால்நடை வளர்ப்புக்கான உணவு பொருள்களை கட்டுப்பாட்டு விலையில் வழங்கல், கால்நடைகளுக்கான நோய பரிகார முயற்சி, நோய்த் தடை மருந்து வகைகளை கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்தல் , கோழிகளுக்கான நோய்த் தடை மருந்து விநியோகம், கோழிக்குஞ்சு விநியோகம், பண்ணையாளர்கள் மற்றும் கால்நடை வளர்ப்போருக்கான கருத்தரங்குகள், ஆலோசனைகள் மற்றும் பயிற்சிகளை வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு கருமங்களை மேற்கொண்டு வருகின்றது.

சங்கத்தின் விற்பனை நிலையம் வலி.கிழக்கு வடபகுதி மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு அச்சுவேலியில் செயற்பட்டு வருகின்றது. அத்தோடு இணைந்த நிலையில் கோப்பாயில் பிராந்திய கால்நடை வைத்திய அதிகாரி பணிமனையின் உப அலுவலகமும் செயற்பட்டு வருகின்றது. சங்கத்தின் நெறியாளர் குழுவின் தலைவராக மு.சிவசுந்தரலிங்கமும் பொருளாளராக மா.ஞானலிங்கமும் பொதுமுகாமையாளராக செல்வி எஸ்.சாமினியும் பணிபுரியத் தலைவர், பொருளாளர் உள்ளடங்கிய 7 பேர் கொண்ட நெறியாளர் குழுவும் செயற்பட்டு வருகின்றது.

### பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள்

வலி. கிழக்குப் பிரிவில் வலி.கிழக்கு வடபகுதி (அச்சுவேலி), வலி.கிழக்கு தென்பகுதி (கோப்பாய்) என்ற வகையில் இரண்டு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. மரபு ரீதியாகச் செயற்பட்டு வந்த மரவரிமுறையை நீக்கி 1972ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தில் நிதியமைச்சர் என்.எம்.பெரேராவின் முன்மொழிவு மூலம் செயலுருப் பெற்றவை தான் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள்.

### கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

கோப்பாய் பனை. தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் து/1573 ஆம் இலக்கத்தில் 1972.02.18ஆம் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியில் கோப்பாய் தெற்கில் பிரதான வீதிக்கு கிழக்குப் புறமாகத் தலைமைப் பணிமனை அமைந்துள்ளது. 1400இற்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட இந்தச்சங்கம் 15இற்கு மேற்பட்ட விற்பனை நிலையங்களைக் கொண்டுள்ளது. சங்கத்தின் பொதுமுகாமையாளராக கி.கிருஷ்ணராசா கடமையாற்றுகின்றார். பல மில்லியன் ரூபாக்களைச் சொத்து மூலதனமாகக் கொண்டது. சங்கத்தின் கிளை நிலையங்களில் பெரும்பாலானவை சொந்தக் கட்டடங்களில் செயற்படுகின்றன.

### அச்சுவேலி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

அச்சுவேலி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் அச்சுவேலி - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அச்சுவேலியில் தனது தலைமைக் காரியாலயத்தைக் கொண்டு செயற்படுகின்றது. ஜே/1554 பதிவு இலக்கத்தில் 1972.02.29ஆம் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ளது. சங்கத்தின் பொதுமுகாமையாளராக பொ.செல்வராசா கடமை புரிகின்றார். 1700இற்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட இந்தச் சங்கத்தின் பணி முன்னெடுப்புக்கள் சங்க உறுப்பினர்களின் வாழ்வாதார மேம்பாட்டையும் பிரதேசத்தின் மூலவளங்களைப் பயன்படுத்திப் பல்வேறு தொழில் முன்னெடுப்புக்களைக் கொண்டதாகவும் இருந்து வருகின்றது. சொத்து மூலதனமாகப் பல மில்லியன் ரூபாக்களைக் கொண்டு செயற்படுகின்றது.

வலி.கிழக்கு வாழ்வாதாரத்தின் உறுதியான நிலைக்கு உந்து சக்தியாக இருந்து வரும் கூட்டுறவு அமைப்புக்கள் இங்குள்ள கூட்டுறவாளர்களின் அர்ப்பணிப்புமிக்க சேவையாலும் அங்கத்தவர்களின் நம்பிக்கைத் தன்மைமிக்க பங்களிப்பினாலும் வளர்ந்து நிற்கின்றன. அதேநேரம் மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்குப் பல்வேறு நிலையிலும் ஒன்றிணைந்து உதவி வருகின்றன.

### சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள்

கூட்டுறவு அமைப்பின் தோற்றம் சிக்கன சேமிப்புக் கடனுதவி என்ற வகையில் அறிமுகமானதைச் சர்வதேச ரீதியிலும் இலங்கை சார்ந்த நிலையிலும் கண்டுகொள்ள முடிகின்றது. யாழ்.மாவட்டத்தில் வடபகுதி ஐக்கிய மேற்சபை இயங்கி வந்த காலப்பகுதியில் கூட்டுறவு மாகாண வங்கி அமைக்கப்பட்டு அதன்மூலம் ஐக்கிய சங்க ங்கள் தமது நிதித்தேவையைப் பூர்த்தி செய்து வந்தன. 1972ஆம் ஆண்டு அரசு இந்த வங்கியை அரசுடமை ஆக்கியதால் ஐக்கிய நாணய சங்கங்கள் கவனிப்பாரற்ற நிலைக்குத் தள்ளப்பட்டன. ஏனைய வங்கிகளும் இந்த அமைப்புக்களுக்குக் கடன் வழங்க மறுத்தன. இந்த நிலையில் யாழ்.மாவட்டத்தில் சிக்கன கடன்வழங்கும் சங்கங்களின் செயற்பாடுகள் உறங்கு நிலையில் காணப்பட்டன.

1982ஆம் ஆண்டு ஆற்றல்மிக்க கூட்டுறவாளர்களின் அர்ப்பணிப்புமிக்க சேவையின் மூலம் சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின்சமாசம் உருவாக்கப்பட்டது. அதனுடன் இணைந்த நிலையில் கிராமிய மட்டத்தில் சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் பணிகள் சிறப்பான முறையில் முன்னெடுக்கப்பட்டன.

யாழ்.மாவட்டத்தில் 525 இற்கும் மேற்பட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் செயற்படுகின்றன. அவற்றில் வலி.கிழக்கில் மட்டும் 70இற்கு மேற்பட்ட சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் சமாசத்தில் பதிவுசெய்யப்பட்ட நிலையிலும் 15 இற்கும் மேற்பட்ட சங்கங்கள் பதிவுசெய்யாத நிலையிலும் செயற்பட்டு வருகின்றன. சில சங்கங்கள் தனிப்பட்ட நிலையில் வங்கிச் செயற்பாடுகளைப் பொருத்தமான நிதிவளத்துடன் முன்னெடுத்து அங்கத்தவர்களுக்கு உதவி வருகின்றன.

சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் அங்கத்தவர்கள் சாதாரண கடன், சுயமுயற்சிக் கடன், விவசாயக் கடன், வீடமைப்புக் கடன் , வெளிநாட்டுக் கடன், உயர் கல்விக் கடன், குறுங்காலக் கடன், வியாபாரக் கடன் என 22 வகையான கடன் வசதிகளைப் பெறமுடியும்.

### பாடசாலைக் கூட்டுறவுச் சங்கங்கள்

வலி.கிழக்குப் பிரதேசத்தில் உள்ள 1 ஏ.பி மற்றும் 1 சீ பாடசாலைகளில் பாடசா லைக் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவுசெய்யப்பட்டு குறிப்பிட்ட காலப்பகுதியில் மாண வர்களுக்கான பல்வேறு வசதிகளையும் வழங்கியது உண்டு.

இந்த வகையில் அச்சுவேலி மத்திய கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, உரும்பிராய் இந்துக் கல்லூரி, இடைக்காடு மகா வித்தியாலயம், அத்தியார் இந்துக் கல்லூரி, புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி, அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி ஆகியவற்றில் பாடசாலைக் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகளை உரிய முறையில் செயல்முறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைக் குறித்த பிரதேசங்களுக்குப் பொறுப்பான கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

பாடசாலைக் கூட்டுறவுச் சங்கங்களைச் செயற்பட வைப்பதன் மூலம் பாடசாலைத் தேநீர்ச்சாலை மற்றும் பாடசாலை விற்பனை நிலையங்களை உரிய முறையில் செயற்பட வைத்து மாணவர்களுக்கு சிற்றுண்டி வகைகளையும் கற்றல் உபகரணங்களையும் நியாய விலையில் தரக் கட்டுப்பாட்டுடன் வழங்க முடியும்.

அதன் மூலம் கிடைக்கும் இலாபத்தின் மூலம் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான நலன்புரி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

வலி.கிழக்கு ஐக்கிய வாழைக்குலை விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் நீர்வேலி, பதிவு இலக்கம் து-1073, பதிவுத்திகதி 1951.01.31, யாழ் மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச்சங்கம் - கோண்டாவில் கிழக்கு , பதிவிலக்கம் ஜே-1609, பதிவு 1972, காமாட்சி அம்பாள் ஐக்கிய கைத்தொழில் கூட்டுறவுச் சங்கம் - நீர்வேலி, பதிவிலக்கம் ஜே-1017, பதிவுத் திகதி 02.11.1949 ஆகியன வலி.கிழக்குப் பிரதேசத்தில் சிறந்த முறையில் செயற்பட்டு வருகின்றன. வலிகிழக்கு மக்களின் பல்வேறு வகையான தொழில் முயற்சிகளுக்கும் வாழ்வாதார மேம்பாட்டிற்கும் கூட்டுறவு அமைப்புக்கள் பொருத்தமான செயற்றிட்டங்கள் மூலம் ஆரோக்கியமான முறையில் பங்களிப்புச் செய்து வருகின்றன.

கூட்டுறவு நாட்டுயர்வு.

உதயன் - 11.02.2011, 10.02.2011, 17.02.2011



# 69 வலி கிழக்கு ஐக்கிய வாழைக்குலை விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் - நீர்வேலி

யாழ்.மாவட்டத்தில் வாழைப்பயிர்ச் செய்கையில் முன்னணி வகிப்பது வலி. கிழக்குப் பிரதேசம். நீர்வளமும் நிலவளமும் கொண்ட இந்தப் பிரதேசத்தின் பெரும்பகுதி செம்மண்ணால் ஆனது. இந்தப் பிரதேசம் வாழை, வெற்றிலை, திராட்சை உள்ளிட்ட பயிர்ச் செய்கை நடவடிக்கைகளிலும் ஏனைய விவசாயப் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளிலும் சிறந்து விளங்குகின்றது. இந்தப் பிரதேச மக்கள் விவசாயத்தையே தமது பிரதான தொழிலாகக் கொண்டுள்ளனர்.

வலி.கிழக்கில் வாழைப்பயிர்ச்செய்கை நீர்வேலியை மையமாகக் கொண்டு வலிகிழக்கின் ஏனைய பகுதிகளிலும் மேற்கொள்ளப்படுகின்றது. வாழைப் பயிர்ச்செய்கை பெருமளவில் மேற்கொள்ளப்படும் அதேவேளை வீட்டுக்காணிகளிலும் மேற்கொள்ளப்படுவதும் உண்டு. வாழை இல்லாத வீடுகள் இல்லை எனக் கூறுமளவிற்கு வாழைக்கும் வலி. கிழக்கிற்கும் நெருக்கமான பிணைப்பு உண்டு.

யாழ். மாவட்டத்தில் வாழைப்பழத்தின் தன்னிறைவுக்கும் வெளிமாவட்டத்தின் பயன்பாட்டிற்கும் வலி கிழக்குப் பிரதேச விவசாயிகளே உதவுகின்றனர். இந்த மாவட்டத்தில் வாழைப் பயிர்ச்செய்கை தொடர்பான மதிப்பீடுகளோ நவீன உத்திகளோ திட்டங்களோ மேற்கொள்ளப்படும் வேளைகளில் வலி கிழக்கில்

நீர்வேலியை மையமாகக் கொண்டே மேற்கொள்ளப்பட்டு வந்ததோடு சமகாலத்திலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்பொழுது "வாழைப் பயிர்ச்செய்கை முக்கோண வலயம்" இந்த வகையிலேயே விவசாயத் திணைக்களத்தினால் அடையாளம் காணப்பட்டு அபிவிருத்திக்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளது. வாழைப் பயிர்ச்செய்கையாளர்களின் நலனையும் விற்பனை வசதியையும் கருத்தில்கொண்டு உருவானதே "வலி கிழக்கு ஐக்கிய வாழைக்குலை விற்பனைக் கூட்டுறவுச் சங்கம்". மேற்படி சங்கம் யாழ்ப்பாணம் பருத்தித்துறை பிரதான வீதியில் நீர்வேலி வாய்க்கால் தரவைப் பிள்ளையார் கோயிலுக்குத் தெற்குப் புறத்தில் அமைந்துள்ளது.1951.01.31 இல் 1073 என்ற பதிவிலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சங்கம் பதிவுசெய்வதற்கு நான்கு வருடங்களுக்கு முன்னரே 1947ஆம் ஆண்டு காலப்பகுதியில் செயற்படத் தொடங்கிவிட்டது. வலி. கிழக்கு விவசாயிகளின் நலனையும் பொருளாதார வளத்தையும் கருத்தில் கொண்டு கோப்பாய்த் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் கோப்பாய் கோமான் அமரர் கு. வன்னியசிங்கம் அவர்களினால் பதிவுசெய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டது. இன்று தனக்கே உரிய தனித்துவத்துடன் தலைநிமிர்ந்து நிற்கின்றது.

யாழ். மாவட்டத்தில் மட்டுமல்ல அகில இலங்கையிலும் இது ஒன்று மட்டும்தான். "வாழைக்குலை விற்பனை கூட்டுறவுச் சங்கம்" என்ற வகையில் பதிவுசெய்யப்பட்டு செயற்படுகின்றது. அமரர் கு.வன்னியசிங்கம் தனது தொகுதி மக்களின் பொருளாதார மேம்பாட்டில் எவ்வளவு தீர்க்க தரிசனத்தோடு செயற்பட்டார் என்பதை இது எடுத்துக்காட்டி நிற்கின்றது. அரசியல் அமைதி நிலவிய காலப்பகுதியில் அவரது நினைவு தினத்தை ஆண்டுதோறும் கொண்டாடி வந்த இந்தச் சங்கம் கடந்த 30 வருடங்களின் பின் அண்மையில் இவரது 51ஆவது நிறைவு தினத்தை கொண்டாடி தனது நன்றிக்கடனை நினைவுகூர்ந்து கொண்டது. யாழ் மாவட்டத்தில் வாழைப் பயிர்ச்செய்கையாளர்களின் நலனையும் விற்பனை வசதியையும் கருத்தில் கொண்டு உருவானதே வலி.கிழக்கு ஐக்கிய வாழைக்குலை விற்பனைக் கூட்டுறவுச் சங்கம்.

இந்தச் சங்கம் கூட்டுறவுத்துறையின் செயற்பாடுகளில் வலி.கிழக்குக்கு தனியிடம் உண்டு. அந்தவகையில் நீர்வேலியில் அமைந்துள்ள வாழைக்குலை விற்பனைக் கூட்டுறவுச் சங்கத்தின் செயற்பாடுகளும் தனித்துவமானதாகும். இலங்கையில் தனிய ஒரே ஒரு சங்கமாக விளங்குவதோடு வாழைப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவோரின் தொழில் ரீதியான முன்னேற்றத்தையும் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

சங்கத்தின் நோக்கம் என்ற வகையில் கூட்டுறவுக் கொள்கைக்கு அமைய சங்க உறுப்பினர்களின் சமூக பொருளாதார நலன்களை ஊக்குவித்தலும்

உறுப்பினர்களிடையே சிக்கனம், ஒருவருக்கொருவர் உதவி, தன்னுதவி ஆகியவற்றை உற்சாகப்படுத்துவதுமே சங்கத்தின் நோக்கமாய் இருத்தல் வேண்டும் எனக் குறித்துரைக்கப்பட்டுள்ளது.

சங்கம் செயற்படத் தொடங்கிய காலத்தில் இருந்து 63ஆண்டுகள் வரையில் தொடர்ந்து செயற்பட்டுவரும் சங்கத்தின் நிர்வாக எல்லைப்பரப்பு 'யாழ் மாவட்டத்தில் உள்ள வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவு' என்ற போதிலும் வாழைப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவோரின் உற்பத்தியைச் சந்தைப்படுத்தும் தனது பணிக்கட்டமைப்பில் கூட்டுறவு ஆணையாளரின் முன் அனுமதியுடன் அவரால் விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக வேறு எந்தத் தொழில் பரப்பிலும் சங்கம் செயற்படலாம். ஆணையாளரின் தீர்மானப்படி குறிக்கப்படும் கால எல்லையில் அந்த மேலதிக தொழில் பரப்பும் சங்கத்தின் தொழில் பரப்புக்கு உட்பட்டதாகக் கருதப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. சங்கத்தின் உப விதியில் :

கூட்டுறவுத்துறையில் ஏனைய தொழில்சார் சங்கங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட நிலையில் இருப்பதால் அவற்றுக்கென உருவாக்கப்பட்ட சங்க விதியானது பொதுமைப்படுத்தப்பட்ட நிலையில் பயன்படுத்தப்படுவது உண்டு. ஆனால் வாழைக்குலை விற்பனைக்கூட்டுறவுச் சங்கம் ஒன்று மட்டுமே இருப்பதனால் அதற்கென உருவாக்கப்பட்ட உபவிதிகள் கூட்டுறவுத் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டு சிறப்பான முறையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

சங்கத்தில் குறிப்பிட்ட பங்குகளைக் கொண்ட 380க்கு மேற்பட்டவர்கள் உறுப்பினராக உள்ளனர். உறுப்பினர்களின் தொழில் மற்றும் வாழ்வாதார மேம்பாட்டைத் தனித்தும் ஒருமித்தும் உயர்நிலைப்படுத்துவதில் சங்கம் உறுப்பினர் மத்தியிலும், பொதுமக்கள் மத்தியிலும் கூட்டுறவுத் திணைக்கள மட்டத்திலும் குறிப்பிடத்தக்க உயர் நிலையில் வைத்து மதிக்கப்படுகின்றது.

சங்க உறுப்பினர்களதும், வாழைக்குலைச் செய்கையாளரதும் பாவனை யாளர்களதும் நலனை முதல் நிலைப்படுத்தி தனது செயற்பாடுகளை மேற்கொண்டுவரும் சங்கம் உறுப்பினர்களுக்கான சேமிப்புத் திட்டங்களைக் கையாளுதல், சிக்கனச்சேமிப்பு ஊடாக சேமிப்பை ஊக்கப்படுத்தல், உறுப்பினர்களின் குடும்ப விவசாய கைத்தொழில் தேவைகளைப் பூர்த்தி செய்தல், எல்லாவகையான பொருள்களிலும் மொத்த, சில்லறை வியாபாரத்தை நடத்துதல், நிதி திரட்டுதல், உறுப்பினர்களுக்கு கடன்களையும் , முற்பணத்தையும் வழங்குதல், வேறு கூட்டுறவுச் சங்கங்களில் முதலீடு செய்தல், விளைபொருள் , கால்நடை வளர்ப்பினால் பெறப்பட்ட பொருள்கள், குடிசைக் கைத்தொழில் பொருள்கள் ஆகியவற்றைக் களஞ்சியப்படுத்தல், பதனிடுதல், விற்பனை செய்தல் , உறுப்பினர்களுக்கு

வேலைவாய்ப்பை வழங்கும் பொருட்டு ஒப்பந்தங்கள் அல்லது வேறு வகைகளில் வேலைகளை மேற்கொள்ளுதல் , காணிகள் , கட்டடங்கள், இயந்திர வகைகளைச் சொந்தமாக்குதல் , வாங்குதல் , விற்றல், வாழைக்குலைகளைக் களஞ்சியப்படுத்தல், விற்பனை செய்தல், வாழையில் இருந்து பெறப்படும் பயன்படுத்தக்கூடிய பொருள்களில் இருந்து உற்பத்தி செய்யப்படும் கைத்தொழில் உற்பத்தியை ஊக்குவித்தல் , வேறு வியாபார முயற்சியை மேற்கொள்ளுதல் என்ற வகையில் தனது பணி முன்னெடுப்புக்களை ஆரோக்கியமான நிலையில் மேற்கொண்டு வருகின்றது.

சங்கத்தின் நடப்பு நிர்வாகத்தின் தலைவராக சி.சுந்தரலிங்கம் கடமைபுரிகின்றார். இவர் குறிப்பிடத்தக்க காலத்துக்கு மேல் தொடர்ந்து தலைவராக இருந்து வருவது சங்கத்தின் ஆரோக்கியமான செயற்பாட்டையும் உறுப்பினர்கள் அவர் மீது கொண்டுள்ள நம்பிக்கையையும் வெளிப்படுத்தி நிற்கின்றது. சங்கத்தின் செயலாளராக சி. திருநாவுக்கரசுவும் முகாமையாளராக ஆ. லோகரத்தினமும் 5பேர் கொண்ட நிர்வாகக் குழுவுமாக ( 7பேர் கொண்ட பணிப்பாளர் சபை) செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது.

சங்கத்தின் அபிவிருத்திக்கு காலத்துக்கு காலம் தொண்டு நிறுவனங்களும் உதவிகளை வழங்கி வருகின்றது. கட்டடத் தொகுதியை நிர்மாணிப்பதற்கும், வாகனங்களை வழங்கி புதிய கட்டடத் தொகுதியான மாடிக் கட்டடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப் படுகின்றன. சங்கத்தின் நிதி நிலை இலாபத்தில் இருப்பதோடு மாதாந்தம் தற்பொழுது சகல செலவுகளும் நீக்கி உயர் இலாபத்தில் இருப்பதாக முகாமையாளர் ஆ. லோகரத்தினம் தெரிவித்தார்.

சங்கத்தின் செயற்பாடுகளில் அண்மைக்கால இராணுவ நடவடிக்கை கணிசமான அளவு பாதிப்பை ஏற்படுத்தி இருப்பதோடு அண்மைக்காலத்தில் தென்னிலங்கையில் இருந்துவரும் வியாபாரிகள் கட்டுப்பாடின்றித் தோட்டங்களுக்குச் சென்று வாழைக்குலையைக் கொள்வனவு செய்வதும் பாதிப்பை ஏற்படுத்தி வருவதாகத் தலைவர் சி.சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

உதயன் - 14.10.2010, 21.10.2010



# 70 யாழ் மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்

வலி. கிழக்குப் பிரதேசசெயலர் பிரிவில் அமைந்துள்ள யாழ் மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் இராசவீதி, இருபாலை வீதி நாற்சந்திக்கு வடமேற்குப் பக்கத்தில் 50 பரப்பு நில சுற்று மதில் வளாகத்தில் நிறுவனக் கட்டமைப்புடன் கூடிய ஒழுங்கமைப்பில் அமைந்துள்ளது. மிக நீளமான மண்டபங்கள் கொண்ட இந்த இயந்திர நெசவுசாலையில் 60 இற்கு மேற்பட்ட இயந்திர நெசவுகள் , நூல் பதனிடும் நிலையம், சாயம் இடும் கூடம், இரசாயனக் கூடம், நிர்வாக அலகுக் களஞ்சிய மண்டபம், நூல் பாவிடும் கூடம் எனப் பல்வேறு வகையான அமைப்புக்களுடன் காணப்படுகின்றன.

யாழ்.மாவட்டத்தில் கைத்தறி மூலமும் இயந்திர நெசவு மூலமும் தயாரிக்கப்பட்ட துணிகள், ஆடை வகைகளுக்கு உள்நாட்டிலும் இந்தியா உள்ளிட்ட வெளிநாடுகளிலும் நன்மதிப்பு உண்டு. யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்பட்ட பருத்திநூல் கைத்தறிச் சேலைக்கு தமிழ்நாட்டில் காஞ்சிபுரம் பட்டுச்சேலைக்கு சமமான மதிப்பு உண்டு. இதற்குப் பண்டமாற்றாகக் காஞ்சிபுரம் பட்டுச் சேலையை பெற்றுக்கொள்ள முடியும்.

1972ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அம்மையாரின் தலைமையில் ஆட்சி செய்த ஐக்கிய முன்னணி அரசு வெளிநாட்டு இறக்குமதிக்கு

தடை விதித்து உள்ளூர் உற்பத்திக்கு முன்னுரிமை கொடுத்த காலப்பகுதியில் யாழ் மாவட்ட விவசாயிகளும் யாழ் மாவட்ட நெசவாளர்களும் தொழில் ரீதியாக ஸ்திரமடைந்தனர்.யாழ் மாவட்டத்தின் கல்வீடுகள் பல அந்தக் காலப்பகுதியில்தான் கட்டப்பட்டன என்பதில் உண்மையில்லாமல் இல்லை.

யாழ். மாவட்டத்தில் உள்ளூர் நெசவு ஆலைகளில் தயாரிக்கப்பட்ட காற்சட்டைத் துணி வகைகள் . சேலைகள் மற்றும் துணிகள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஊடாகப் பங்கீட்டு அடிப்படையில் விநியோகிக்கப்பட்டன. பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் தமது நுகர்ச்சிக் கிளைகள் ஊடாக குடும்ப அடிப்படை "லொத்தர் முறையில்" வழங்கியதுண்டு. லொத்தரில் துணி கிடைத்த குடும்பங்கள் அடைந்த மகிழ்ச்சியும் சொல்லும் தரமன்று. இந்த வகையில் பண்டத்தரிப்பு பரீஸ் கோப் . சங்கானை நெசவு என்பன தனியிடம் பெற்றிருப்பதோடு வல்லை நெசவும் முன்னணியில் இருந்தது. வல்லை நெசவுத் துவாய்க்கு தனித்துவமான இடமுண்டு . பிற்காலத்தில் புத்தூர் சந்தியில் 24 மணி நேரமும் செயற்பட்ட லிங்கம் நெசவுத் தயாரிப்புக்களும் மக்களின் வரவேற்புக்கு உரியனவாக விளங்கின.

ஜே/1609ஆம் பதிவிலக்கத்தில் 1973.01.19ஆம் திகதி பதிவுசெய்யப்பட்ட புடைவை நெசவாளர் சங்கம் அந்தக் காலப்பகுதியில் யாழ். மாவட்டத்தில் முதன்மை பெற்றிருந்ததோடு அகில இலங்கை ரீதியிலும் தனித்துவம் பெற்றிருந்தது. 1987ஆம் ஆண்டு இந்திய இராணுவம் அமைதிப்படை என்ற பெயரில் யாழ். மாவட்டத்தில் முகாமிடுவதற்கு முந்திய காலப்பகுதி மிக உச்சம் பெற்ற காலமாகும். இந்தச் சங்கம் 508 பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களையும் கொண்டிருந்தது.

குறித்த காலப்பகுதியில் 117 நெசவு நிலையங்களும் நூல் வகைகளையும். துணைச் சாதனங்களையும் வழங்கி வந்தன. 350இற்கு மேற்பட்ட நெசவுத் தொழிலாளர்களைக் கொண்டு 8 மணி நேரத்தை கொண்ட மூன்று வேலைமாற்று அட்டவணையின் பிரகாரம் 24 மணி நேரமும் செயற்பட்டது. 36 அங்குல அகலம் தொடக்கம் 60 அங்குல அகலம் வரையிலான பல்வேறு துணி ரகங்களையும் தனது தயாரிப்பாக உயர்தர நிலையில் மக்களுக்கு வழங்கி வந்தது.

350இற்கும் மேற்பட்ட நெசவாளரைக் கொண்டு 24 மணி நேரமும் புடைவை நெசவை மேற்கொண்ட நிறுவனம் கடந்த சில வருடங்களாக 12 நெசவாளர்களுடன் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இயங்கி வருகின்றது. 12 தறிகள் மட்டும்தான் செயற்படுகின்றன. ஏனைய நெசவு இயந்திரங்கள் "எங்களை யார் இயக்குவார்கள்" என ஏங்கிய நிலையில் காத்துக்கிடக்கின்றன. இந்த வகையில் 60 இற்கு மேற்பட்ட இயந்திரங்கள் இருப்பதை அவதானிக்க முடிகிறது. நூல்களைப் பதப்படுத்தி சாயமிடும் கூடத்தில் மிகப் பெரிய நாற் சதுரப்பெட்டி ஒன்று திறக்கப்படாத நிலையில்

உள்ளது. அதில் உள்ளடங்கியிருப்பது என்ன? ஒப்புநோக்கப்படாத நிலையில் உள்ளது.

சங்கத்தின் நிர்வாகப் பொறுப்புக்கள் 2002 ஆம் ஆண்டு கூட்டுறவு உதவி ஆணையாளரினால் மூவர் கொண்ட குழு நியமிக்கப்பட்டு அவர்களிடம் தற்போதைய செயற்பாட்டுடன் கூடிய மட்டுப்படுத்தப்பட்ட பணிகளை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு கையளிக்கப்பட்டுள்ளது. (தலைவர் ப.இராசரத்தினம் உறுப்பினர்கள் த.கந்தசாமி, செ.கந்தையா).

தற்பொழுது 12 நெசவாளர்களும் பதில் முகாமையாளர், முகாமைத்துவ உதவியாளர் மற்றும் பணியாளர்கள் என்ற வகையில் 8 பேருமாக 20 பேர் கடமை புரிகின்றனர்.

யாழ். மாவட்ட நெசவாளர் சங்கம் 1942 ஆம் ஆண்டு யாழ். மணிக்கூட்டு வீதியில் நெசவாளர் நூல் விற்பனை நிலையமாகவும் பின்னர் யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபார நெசவு சங்கமாகவும் செயற்பட்டு 1973ஆம் ஆண்டில் இருந்து யாழ். மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரில் பதிவுசெய்யப்பட்டு செயற்பட்டு வந்தது. இது தற்பொழுது தனது சகல செயற்பாடுகளையும் முழுமையாகச் செயற்படுத்துவதற்குரிய எதிர்காலம் இல்லாமல் முடக்கப்பட்ட நிலையில் உள்ளது. சங்கம் தனது பணியை உச்சநிலையில் மேற்கொண்ட 1987 இற்கு முந்திய காலப்பகுதியில் 26 வகையான தயாரிப்புக்களை மிக உயர்ந்த ரகத்தில் உற்பத்தி செய்தது. யாழ்.மாவட்டம் உள்ளடங்கலாக நாடளாவிய ரீதியிலும் இந்த தயாரிப்புகளுக்கு தனிப்பட்ட தரநிலையுடன் கூடிய மரியாதை இருந்தது. மக்களால் விரும்பிப் பயன்படுத்தப்பட்டது. 508 உறுப்பினர்கள் நூல்வகைகளை சங்கத்தில் கொள்வனவு செய்து தமது இல்லங்களில் கைத்தறி நெசவு வேலைகளை மேற்கொண்டனர். அத்துடன் 117 கைத்தறி நெசவுசாலைகளுக்கு நூல் வகைகளும் துணைச்சாதனங்களும் வழங்கப்பட்டன.

சங்கத்தின் விற்பனை நிலையங்கள் சாவகச்சேரி, சுன்னாகம், நெல்லியடி, பளை, வேலணை, சித்தங்கேணி போன்ற இடங்களில் செயற்பட்டன. யாழ் நகரிலும் வியாபார நிலையம் செயற்பட்டது. தற்பொழுதும் ஜி.எஸ்.துவாய், வைத்தியசாலை கட்டில் விரிப்புக்கள், பெற்சீற்றுக்கள் என்பன தனித்துவத்துடன் உற்பத்தி செய்யப்படுவதால் வைத்தியசாலைகளின் பாவனைக்கு விருப்பத்துடன் கொள்வனவு செய்யப்படுவதாக பதில் பொதுமுகாமையாளர் தெரிவித்தார்.

தற்போதைய பதில் பொதுமுகாமையாளர் கணபதிப்பிள்ளை ஜெயக்குமார் சங்கத்தின் சமகாலச் செயற்பாடுகள் தொடர்பாக கருத்துத்தெரிவிக்கையில், தாம்

1991ஆம் ஆண்டிலிருந்து கடமை ஆற்றுவதாகவும் அங்கு கடமை புரியும் அனைத்து ஊழியர்களும் மிக மிகக் குறைவான சம்பளத்துடன் கடமை புரியும் நிலையில் (ரூபா.4500 இல் இருந்து 10 ஆயிரத்துக்குக் குறைந்தது) உள்ளனர் என்றார்.

சங்கத்தின் உற்பத்திகளை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மேற்கொள்ள வேண்டியுள்ளது. நெசவாளர்களுக்கு அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களின் அடிப்படையில் ஊதியம் வழங்க வேண்டியுள்ளது. குறைந்த ஊதியத்தில் வேலை செய்ய நெசவாளர் முன்வராத நிலை, சங்கத்தின் உற்பத்திப் பொருள்களை வெளியிடங்களுக்கு எடுத்துச் சென்று விற்பதற்கு வாகனம் இல்லாத நிலை இருந்தும்கூட வருமானத்தைப் பொறுத்தவரையில் ஊழியர்களின் சம்பளத்துடன் முன்னெடுத்து செல்லப்படுகின்றது.

1987ஆம் ஆண்டு இந்திய அமைதிப் படையினர் வருகையுடன் சங்கத்தின் அனைத்துச் செயற்பாடுகளும் முடக்கப்பட்டது. இந்த வகையில் சங்கத்தின் இழப்பீடுகளுக்கு எந்தவிதமான நட்டஈடும் வழங்கப்படவில்லை. சங்கத்தின் ஆதனம் பெருமளவு தொகைக்கு மக்கள் வங்கியிடம் கடன்பட்ட நிலையில் உள்ளது எனத் தெரிவித்த அவர், மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:

"அரசாங்கம் உரிய நட்டஈடும் வழங்கி பொருத்தமான நிவாரணமும் வழங்கினால் சங்க செயற்பாடுகளை மீண்டும் உயிர்ப்படையச் செய்யலாம். ஆனால் இதுவரை எமக்கு எந்த விதமான உதவியும் கிடைக்கவில்லை. வடக்கின் வசந்தம் கூட எமது சங்கத்தின் பக்கம் வீசவில்லை.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கண்காட்சிகள் - விற்பனைகளில் எமது காட்சியறை பலரையும் கவர்ந்ததுடன் இத்தகைய நிறுவனம் ஒன்று செயற்படுகின்றது என்பது வெளிச்சத்திற்கு வந்திருக்கின்றது. எமது சங்கத்தின் செயற்பாடுகளை நேரில் பார்வையிட வருவதாக வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி வாக்குறுதி வழங்கியுள்ளார். சமகால அரசியல் சமூக சூழல் எமது சங்கத்தின் வளர்ச்சிப் போக்கிலும் வசந்த காலமாக மாறும் எனக் காத்திருக்கிறோம்" எனப் பலத்த எதிர்பார்ப்புடன் அவர் மேலும் தெரிவித்தார்.

உதயன் - 03.06.2010, 10.06.2010



# 71 நீர்வேலி ஸ்ரீ முருகன் மாதர் சி.க.வ.கூ சங்கம்

"கூட்டுறவு" என்ற சொல் புனிதமும் வாழ்வியலோடு இணைந்த வலிமையும் கொண்டது. உயிரிகளின் வாழ்வுடனும் வளர்ச்சியுடனும் கூட்டுறவுப் பண்புகள் இரண்டறக் கலந்துள்ளன. அந்த வகையில் மனிதன் தோன்றிய காலம்முதல் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருந்து இன்றைய உயர்நிலைக்கு மனிதஇனத்தை மேல்நிலைப்படுத்தியது. கூட்டுறவு இயக்கத்தின் தந்தையாக இங்கிலாந்தைச் சேர்ந்த 'றொபேட் ஓவன்' (1771-1858) போற்றப்படுகின்றார்.

றொபேட் ஓவனின் கூட்டுறவுச் சிந்தனையில் உள்ள உயர்ந்த கருத்துக்களை 'றொச்டேல்' முன்னோடிகள் ஒருங்கமைத்து 1844ஆம் ஆண்டில் கூட்டுறவுக் கொள்கையாக உலகுக்குப் பிரகடனப்படுத்தினர். இலங்கையில் 1906ஆம் ஆண்டு கூட்டுறவு அம்சங்கள் பொருந்திய கடன்கொடுக்கும் கூட்டுறவு அமைப்பு தெல் தெனியாவில் உள்ள தும்பறைக் கிராமத்தில் முதலில் உருவாக்கப்பட்டது. 1911ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க முதலாவது கூட்டுறவுச் சட்டத்தின் பிரகாரம் இலங்கையில் முதலாவது ஐக்கிய நாணய சங்கம் 1912ஆம் ஆண்டு மாத்தறை மாவட்டத்தில் உள்ள வெல்லப்படபத் கிராமத்தில் உருவாக்கப்பட்டது. யாழ் மாவட்டத்தில் முதலாவது ஐக்கிய நாணய சங்கம் 1916ஆம் ஆண்டு கரவெட்டியில் உருவாகிப் பதிவுசெய்யப்பட்டது.

1911 ஆம் ஆண்டில் இருந்து 1940ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியை யாழ். மாவட்டத்தில் ஐக்கிய நாணய சங்கங்களின் காலப்பகுதி எனக் கருதும் அளவுக்கு ஐக்கிய நாணய சங்கங்கள் கிராமிய மட்டத்தில் செயற்பட்டு வந்தன. யாழ்.மாவட்டத்தின் கூட்டுறவு அமைப்பின் தந்தை எனப் போற்றப்படும் பெரியார் வீ.வீரசிங்கம் அவர்களின் முயற்சியினால் "யாழ் மாவட்ட மலையாளப் புகையிலை உற்பத்தியாளர் சங்கம்" 1933 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. மலையாளப் புகையிலைச் செய்கை யாழ்.மாவட்டத்தில் மேல்நிலை பெற்றிருந்ததையடுத்து சுருட்டுக் கைத்தொழிலில் கணிசமான அளவு மக்கள் ஈடுபட்டனர். 1940ஆம் ஆண்டு காலப்பகுதியில் "கோப்பாய் சுருட்டுத் தொழிலாளர் ஐக்கிய சங்கம்" நிறுவப்பட்டது. சங்கத்துடன் இணைந்த நிலையில் 200இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் சுருட்டுக் கைத்தொழிலில் ஈடுபட்டு வந்தனர்.

இரண்டாம் உலக மகாயுத்த காலத்தில் உணவுப் பஞ்சம் ஏற்பட்டதையடுத்து இறக்குமதி செய்யப்பட்ட உணவுப்பொருள்கள் 'கூப்பன் முறைமூலம்' பங்கீட்டு அடிப்படையில் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டன. வலி.கிழக்குப் பிரிவில் 60இற்கும் மேற்பட்ட நிலையங்களுக்கூடாகப் பங்கீட்டு உணவுப் பொருள்கள் விற்பனை செய்யப்பட்டன. கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் உணவுப் பொருள்களை விநியோகிப்பதற்கு வசதியாக வலி. கிழக்கு கூட்டுறவுப் பண்டகசாலைகளின் சமாஜம் ஆரம்பிக்கப்பட்டு 1944.09.25இல் பதிவு செய்யப்பட்டதோடு பண்டகசாலைகளின் சமாஜத்துக்கான களஞ்சியம் நீர்வேலியில் நிறுவப்பட்டு அதனூடாகக் கூப்பன் பங்கீட்டு உணவுப்பொருள்கள் விநியோகம் செய்யப்பட்டன. 1955ஆம் ஆண்டு வலி.கிழக்கில் 16 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் 28 பண்டகசாலைகளும் 20 தனியார் கூப்பன் கடைகளும் செயற்பட்டன. 1940-1948 காலப்பகுதியில் வலி.கிழக்கில் "விவசாய அபிவிருத்தி விளைபொருள் விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்கள்" ஆரம்பிக்கப்பட்டு விவசாய உற்பத்திகளைச் சந்தைப்படுத்தலில் தனித்துவமான பங்களிப்பை மேற்கொண்டன. வலி.கிழக்கில் கூட்டுறவுத் துறைக்குத் தனியிடம் உண்டு.

பொன்விழாக் கண்டு ஓங்கி உயர்ந்து நிற்கும் நீர்வேலி ஸ்ரீ முருகன் மாதர் சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கம் நீர்வேலி கந்தசாமி கோயில் வடக்கு வீதியில் வீதிக்கு வடக்குப் பக்கத்தில் அமைந்துள்ளது.

மாதர் கூட்டுறவு அமைப்புக்களின் முன்னோடியாக விளங்கும் நீர்வேலி ஸ்ரீ முருகன் மாதர் சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கம் 1958.12.22ஆம் திகதி ஜே/1456ஆம் இலக்கத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. பொன்விழாவைக் கொண்டாடி 53 ஆவது ஆண்டில் தனது செயற்பாடுகளை மேற்கொண்டு வரும்

இந்த நிறுவனத்தின் செயற்பாடுகள் பல நூற்றுக்கணக்கான குடும்பங்களின் நல்வாழ்வுக்கு உறுதுணையாக அமைந்துள்ளன.

நீர்வேலி சமுதாய முன்னேற்றக் கழகம் 1955ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. சமுதாய வளர்ச்சிக்குப் பெண்களின் பங்களிப்பு அவசியம் தேவை என்ற கருத்து வலுப்பெற்றதையடுத்து அந்தக் காலப்பகுதியில் சமூக முன்னோடிகளாக விளங்கிய சமூக சேவையாளர்கள் ஈ.கே.சண்முகநாதன், வி.எஸ்.அப்புத்துரை, எஸ். கே. முத்துவேற்பிள்ளை ஆகியோர் எஸ்.கே. கந்தையா, திருமதி வேதவல்லி கந்தையா தம்பதிகளின் அனுசரணையுடன் பாலர் பகல் விடுதி அமைத்துச் செயற்பட வைத்தனர். திருமதி வேதவல்லி கந்தையாவின் அயராத முயற்சியினால் 1956ஆம் ஆண்டு நீர்வேலி தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் உருவாக்கப்பட்டது. காலத்துக்கு காலம் மகளிருக்கான பயிற்சிகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்தப்பட்ட வகையில் சமுதாய வளர்ச்சியில் கூடுதலான பங்கு கொண்டவர்களாகப் பெண்கள் உருவாக்கப்பட்டனர்.

மாதர் பலம் மேலும் வலுவடையும் வகையில் 1958 ஆம் ஆண்டு 15 அங்கத்தவர்களுடன் நீர்வேலி 'ஸ்ரீ முருகன் ஐக்கிய நாணய சங்கம்' ஆரம்பிக்கப்பட்டது. "பெண்கள் சமூகப்பணியில் ஈடுபடுவது மிக அரிதாக இருந்த காலப்பகுதியிலேயே மாதர்களைச் சமூகப் பணியில் ஆர்வத்தோடு ஈடுபடச் செய்ததோடு குடும்ப வளர்ச்சியும் கிராமநலனும் ஒன்றித்த நிலையில் வளர்ந்து செல்வதற்கு வழிவகுத்த அமரர் திருமதி வேதவல்லி கந்தையாவின் பணிகள் இன்னும் பசுமையோடு நினைவு கூரப்படுகின்றன.

நீர்வேலி ஸ்ரீ முருகன் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் இடையறாத தொடர் வளர்ச்சி, அதன் பங்கு, பணியின் சிறப்பு, இடர் உதவி, முகாமைத்துவம் என்பன ஆரம்பத்தில் இருந்தே தொடர்நிலையாகப் பேணப்பட்டு வந்தன. இது சங்கத்தின் ஆரம்பகாலத் தலைமையினாலும் 1982ஆம் ஆண்டு தலைமைப் பதவியை ஏற்றுக்கொண்ட கூட்டுறவுப் பரிசோதகர் திருமதி ருக்குமணி ஆனந்தவேல் அவர்களினாலும் வழங்கப்பட்ட பயிற்சியின் உயர்ச்சியாக விளங்குகின்றது. சங்கத்தின் தற்போதைய தலைவராக திருமதி புவனேஸ்வரன் சித்திராவும், செயலாளராக திருமதி யோகானந்தா உமாதேவியும் பொருளாளராக திருமதி வி. இராஜேஸ்வரியும் கடமை புரிகின்றனர்.


மாதர் கூட்டுறவு அமைப்புக்களின் முன்னோடியாக விளங்குவது நீர்வேலி ஸ்ரீ முருகன் மாதர் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கம் ஆகும். இந்தச் சங்கம் 1958 ஆம் ஆண்டு ஜே/1456 ஆம் இலக்கத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இந்தச் சங்கத்தின் செயற்பாட்டிற்கும் வழிப்படுத்தலுக்கும் உரியவராகத் திருமதி ருக்குமணி ஆனந்தவேலின் பங்களிப்பு முழுமையாகப் பயன்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

350 இற்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கம் உறுப்பினர்களின் நலனைக் கருத்தில்கொண்டு தனக்கென வங்கி ஒன்றையும் நடத்துகின்றது. வங்கியின் முகாமையாளராக செல்வி சின்னத்துரை தயாதேவி கடமையாற்றி வருகின்றார். 12 வீதம் வட்டிக்கு அங்கத்தவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபா வரை இலகு கடன் வழங்கப்படுகின்றது. சங்கத்தின் கொடுக்கல், வாங்கல்கள் வங்கி ஊடாக மேற்கொள்ளப்படுவதோடு அங்கத்தவர்களின் சாதாரண சேமிப்பு. நிலையான சேமிப்பு. வயது முதிர்ந்தோர் வைப்பு , வயோதிபரின் மரணப் பாதுகாப்பு நிதியம், மாணவர்களுக்கான சேமிப்பு, சிறுவர்களுக்கான சேமிப்பு, மாணவர்களுக்கான சேமம் உள்ளிட்ட பல்வேறு நிதி முகாமைத்துவ சேவைகள் திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சங்கத்தின் நிர்வாகக் குழுக்கூட்டம் வாரந்தோறும் சனிக்கிழமைகளில் நடைபெறும். அதே போன்று மாதாந்த பொதுக்கூட்டம் பூரணை விடுமுறை நாளில் நடைபெறும். இதில் நிர்வாகிகளும் அங்கத்தவர்களும் நியமப்படுத்தப்பட்ட முறையில் கலந்துகொள்ளும் திறன் சங்கத்தின் மக்கள் மயப்படுத்தப்பட்ட செயற்பாட்டுத்திறனை வெளிப்படுத்தி நிற்கின்றது.

சங்கத்தின் பன்முகப்படுத்தப்பட்ட சேவை நிலையால் சங்க உறுப்பினர்களும் சங்கமும் உயர்வுபெற்று வருவது சகல தரப்பினராலும் பாராட்டப்படுகின்றது. சங்கத்தின் சேவை நிலை மேலும் வளம்பெற பிரதேசத்தில் கிடைக்கும் மூலப்பொருள்களைக் கொண்டு இயங்கும் நிரந்தரமான தொழிற்சாலைகளை நிறுவி மகளிர் தொழில்முயற்சியை மேலும் உறுதி செய்ய வேண்டும்.

"கூட்டுறவே நாட்டுயர்வு" உதயன் - 06.01.2011, 13.01.2011



## 72 தும்புப்பொருள் உற்பத்தியில் அச்சுவேலி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

யாழ் மாவட்டக் கூட்டுறவுத் துறையில் 1972ஆம் ஆண்டு காலப்பகுதியில் உருவாகி வளர்ந்து, உயர்ந்து பின்தங்கிய மக்களின் வாழ்க்கைத்தரத்தை நிறுவனப்படுத்தப்பட்ட முறையில் மேல்நிலைப்படுத்தி வரும் அமைப்புத்தான் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள். மரபு ரீதியாக இருந்துவந்த மரவரி முறையை இரத்துச்செய்து 1971 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஐக்கிய முன்னணி அரசின் நிதியமைச்சர் என்.எம்.பெரேரா சீவல் தொழிலாளர்களுக்கு புதிய ஒரு செய்தியை தெரிவித்தார். "வடபகுதியில் மரவரி முறை இரத்துச் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகக் கூட்டுறவுத் தவறணை முறை அமுல் செய்யப்படும்" என்பதே அந்தச் செய்தி. 1972 ஆம் ஆண்டு 'மே' தினத்தன்று அப்போது கூட்டுறவு அபிவிருத்தி ஆலோசகராக இருந்த கே. சண்முகலிங்கம் கூட்டுறவுத் தவறணை முறையை உத்தியோக பூர்வமாக அங்குரார்ப்பணம் செய்துவைத்தார். 45 வருடங்களுக்கு மேலாக நடைமுறையில் இருந்துவந்த மரவரி முறையை நீக்கியது அன்றைய சூழலில் வரவேற்புக்குரியதாக கொள்ளப்படாவிடிலும் இன்று 20 ஆயிரம் குடும்பங்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கு உறுதுணையாக உள்ளதால் மக்களின் வரவேற்பைப் பெற்றுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் நான்கு கொத்தணி அமைப்புக்குள்ளே 19 பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் சிறந்த முறையில் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன. வலிகாமக் கொத்தணியில் 6 சங்கங்களும் வடமராட்சிக் கொத்தணியில் 3 சங்கங்களும், தென்மராட்சிக் கொத்தணியில் 4 சங்கங்களும் யாழ்ப்பாணக் கொத்தணியில் 6 சங்கங்களும் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன. 19 சங்கங்களையும் கொத்தணியையும் உள்ளடக்கியதாக 'சமாஜம்' என்ற கட்டமைப்புச் செயற்படுகின்றது.

பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களில் 19 ஆயிரம் வரையிலான உறுப்பினர்களும் 700 இற்கும் மேற்பட்ட பணியாளர்களும் உள்ளனர். இவர்களின் வாழ்வாதாரத்துக்கும் வளமான வாழ்க்கைக்கும் ஏற்புடைய வகையில் ஓய்வூதியம், விபத்து மற்றும் மரணப் பணிக்கொடை, ஓய்வுக்கு பிந்திய கௌரவிப்பு என்ற வகையில் பல்வேறு நலத் திட்டங்களும் உதவிகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் இரண்டு பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் செயற்படுகின்றன. ஒன்று வலி.கிழக்குத் தென்பகுதி என்ற வகையில் கோப்பாயிலும் மற்றையது வலி.கிழக்கு வடபகுதி என்ற வகையில் அச்சுவேலியிலும் தலைமைக் காரியாலயங்களைக் கொண்டு செயற்படுகின்றன.

அச்சுவேலி பனை, தென்னை வள அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கம் 1972ஆ ஆண்டு பெப்ரவரி மாதம் 29ஆம் திகதி முதல் J/ 1554ஆம் இலக்கத்தில் பதி செய்யப்பட்டு சிறப்பான முறையில் செயற்பட்டு வருவதோடு 88ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட தரமான சங்கங்களுக்கான போட்டியில் யாழ் மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளதோடு அதற்கான விருதையும் பெற்றுள்ளது.

அச்சுவேலி பனை, தென்னை வள அபிவிருத்திச் சங்கம் முன்னெடுத்து வரும் வேலைத்திட்டங்களில் ஒன்றாகவும் யாழ் மாவட்டத்தில் உள்ள ஏனைய 18 சங்கங்களும் முன்னெடுக்காத பயன்தரும் புதிய முயற்சியாகவும் விளங்குவது தும்புப்பொருள் உற்பத்தித் தொழிற்சாலை.

அச்சுவேலி பஸ் நிலையத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கிய பிரதான வீதியில் அச்சுவேலி வடக்கில் பிரதான வீதிக்கு வடக்குப் பக்கத்தில் வீதியோரத்தில் அமைந்துள்ளது. 30 இற்கும் மேற்பட்ட யுவதிகளுக்கு வேலைவாய்ப்பும் கவர்ச்சிகரமான ஊதியமும் வழங்குகின்றது.

யாழ் மாவட்டத்தில் முதல் நிலையில் செயற்பட்டுக்கொண்டிருக்கும் அச்சுவேலி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் 350 இற்கு மேற்பட்ட உறுப்பினர்களின் ( பனம் தொழில் வல்லுநர்கள்) தொழில்விருத்தி மற்றும் நலன் ஒப்பும் நடவடிக்கைகளுடன் கிராமிய வங்கி புத்தகசாலை, வெஸ்ரேன் யூனியன் பணப்பரிமாற்ற சேவை, நிழற்படப் பிரதிச்சேவை, வாடகைக் கதிரைச்சேவை, மகளிருக்கான தொழிற்பயிற்சி சேவை , போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலை, பாலர் முன்பள்ளி ஊக்குவிப்பு, உறுப்பினர் , பணியாளர்களின் பிள்ளைகளுக்கான கல்வி அபிவிருத்தி உள்ளிட்ட பல்வேறு சேவைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

மகளிர் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் யுவதிகளுக்கு தொழிற்பயிற்சி வழ ங்கி பயிற்சி பெற்ற யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் நோக்குடன் உள்ளூர் மூலப்பொருள்களைப் பயன்படுத்துவதுடன் அதனோடு இணைந்த தொழிலாளர் களுக்கான வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் தூர நோக்குடன் தும்புப்பொருள் தொழிற்சாலையை ஆரம்பித்து வெற்றிகரமாக நடத்தி வருகின்றது. தும்புத் தொழிற்சாலையின் அமைவிடம் தொழில்விருத்திக்கான பின்புலத்தில் அமைந்திருப்பதோடு தொழிற்சாலை 50 பரப்பு நிலப்பரப்பைக் கொண்டுள்ளது. தொழிற்சாலைக்குப் பின்புலத்தில் வல்லைப் பாலத்தோடு இணைந்த பரவைக் கடல் உள்ளது.

பரவைக்கடலில் தேங்காய் மட்டையை ஊற வைத்து பொருத்தமான முறையில் தும்பு வகைகளைப் பெறக்கூடியதாக இருக்கும். 45 லட்சம் ரூபா முதலீட்டில் நிறுவப்பட்ட தும்பு உற்பத்தித் தொழிற்சாலையில் 30 யுவதிகள் தொழில் முயற்சி களில் ஆர்வத்தோடு ஈடுபட்டிருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

தொழிற்சாலையில் தும்புத்தடி வகைகள், வீடு தூசு தட்டி, சுவர்களுக்கு நிறம் பூசும் தூரிகை வகைகள், பாசி உரஞ்சி, நிலம் உரஞ்சி, மேசை துடைப்பான், கயிறு திரித்தல், கால்மிதி பின்னல் உள்ளிட்ட பல்வேறு தொழில்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

"பனம்தும்பு, தென்னம்தும்பு ஆகியவற்றைப் பயன்படுத்தி நாளாந்தம் ஒவ்வொரு வகையிலும் 200வரையான உருப்படிகள் தயாரிக்கப்படுவதாகத்" தொழிற்சாலை மேற்பார்வையாளர் செல்வி என்.வனிதா தெரிவித்தார்.

"தற்பொழுது இங்கு உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் சங்கத்தின் விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்படுவதோடு "ஒமேகா" ஸ்தாபனத்துக்கூடாக சந்தைப்படுத்தல் செய்யப்படுவதாகவும் எதிர்காலத்தில் வெளிமாவட்டங்களுக்கும்


எடுத்துச்சென்று விற்பனை செய்வதற்கும் திட்டமிட்டிருப்பதாகவும்" தெரிவித்த சங்கத்தின் பொதுமுகாமையாளர் பொ.செல்வராசா "தொழிற்சாலை அமைந்துள்ள வளாகத்தில் பல்வேறு கைத்தொழில் முயற்சிகளை உள்ளூர் மூலப்பொருட்களை கொண்டு மேற்கொள்ளவிருப்பதாகவும் அதற்கான முன்மொழிவுகள் தொழில்நுட்ப ஆலோசனைகள் பரிசீலனையில் இருப்பதாகவும். இந்தவகையில் நூற்றுக் கணக்கான இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்க முடியும் என மேலும் தெரிவித்தார்.

கவர்ச்சிகரமான அமைப்புடன் கூடிய தரமான தயாரிப்புக்கள் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. வெளிமாவட்டங்களில் இருந்து எடுத்துவரப்படுவனவற்றோடு ஒப்பிடும்போது நீண்டகாலப் பாவனையுடன்கூடியது எனக் கூறப்படுகின்றது.

"தொழிற்சாலையின் உற்பத்திப் பொருள்களுக்கு உள்ளூரில் நல்ல வரவேற்பு இருப்பதாகவும் உரிய தரக்கட்டுப்பாட்டுடன் தரமான முறையில் உறுதி யானவையாகத் தயாரிக்கப்படுவதால் உற்பத்திச் செலவு கூடியதாக இருந்தாலும் பணிபுரியும் அனைவருக்கும் பொருத்தமான அளவு ஊதியம் வழங்கப்படுவதோடு சேமிப்புப் பழக்கத்தோடு கூடியதாக கிராமிய வங்கிக்கு ஊடாகக் கொடுப்பனவுகள் வழங்கப்படுவதாக" உற்பத்தி முகாமையாளர் கி.வரதராசன் தெரிவித்தார்.

தொழிற்சாலையின் எதிர்காலம் தூரநோக்கோடும் கிராமிய மட்டத்தில் இளைஞர், யுவதிகளின் குறிப்பாக சங்கத்தின் உறுப்பினர்களான "பனம் தொழில் வல்லுநர்களின்" குடும்ப உறுப்பினர்களுக்கு முன்னுரிமையுடன் வழங்கி முன்னெடுக்கப்பட்டு வருவதோடு எதிர்கால வளர்ச்சியை நோக்கியதாக உள்ளது. தொழிற்சாலையின் வளர்ச்சி நவீன தொழில்நுட்ப உத்திகளுடன் கூடியதாக மேலும் முன்னெடுக்கப்படுவது குறித்த நோக்கத்தின் உயர் எல்லையை எட்டக்கூடியதாக இருக்கும். தொடர்ந்தும் இச்சங்கத்தின் புதிய தொழில்முயற்சிகளுக்கு அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் பொருத்தமான உதவிகளை வழங்க முன்வரவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உதயன் - 16.12.2010, 23.12.2010



# 73 "ஈழத்துக் காந்தி"யின் பெயருடன் குடியேற்றத்திட்டம் - செல்வநாயகபுரம்

'தந்தை செல்வா' என எல்லோராலும் செல்லமாக அழைக்கப்பட்ட தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகரும், தலைவருமான எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்களின் பெயரில் உள்ளூராட்சி உதவி அமைச்சர் மு. திருச்செல்வம் கியூ.சி அவர்களின் திட்டமிடலில் நிர்மாணிக்கப்பட்டு 1968ஆம் ஆண்டு யூன் மாதம் 14ஆம் திகதி அப்போதைய உள்ளூராட்சி அமைச்சர் ரணசிங்க பிரேமதாஸ அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது 'செல்வநாயகபுரம்'.

வலி. கிழக்குப் பிரதேசசபையின் அச்சுவேலி உப அலுவலகப் பிரிவின் தென் மேற்கில் அச்சுவேலி சங்கானை வீதியில் கைத்தொழிற்பேட்டை சந்தியிலிருந்து செல்லும் வீதியில் செல்வநாயகபுரத்துக்குச் செல்வதற்கு என அமைக்கப்பட்ட ஒழுங்கை செல்வநாயகபுரத்துக்கான பிரதான பாதையாக விளங்குகின்றது. யாழ். மாவட்டத்தில் குறிப்பிடத்தக்கதும் வலி. கிழக்கில் திட்டமிட்டமுறையில் நிர்மாணிக்கப்பட்ட முதலாவது குடியேற்றத்திட்டமாகவும் வீடமைப்புத் திட்டமாகவும் விளங்கியது.

ஒவ்வொரு குடியிருப்பாளருக்கும் வீட்டுத்தோட்டம் முதலிய வீட்டுக்கான அமைப்புக்களை உருவாக்கக்கூடியதாக 4 பரப்புக் காணியில் இரண்டு அறைகள்,

சமையலறை, விறாந்தை ஆகியவற்றைக் கொண்ட ஓட்டுக்கூரை அமைப்புடன்கூடிய வீடு, வீட்டுக்கான சகல அலகுகளையும் உள்ளடக்கியது. குறிப்பிட்ட எண்ணிக்கையான குடும்பங்களின் பாவனைக்குப் பொதுக்கிணறு, பொது விளையாட்டு மைதானம், வீடுகளுக்குச் செல்வதற்கு வசதியாக அகலமான வீதிக்கட்டமைப்பு (தார் போட்ட வீதி), சனசமூக நிலையம் உள்ளடங்கலாக சாதாரண மக்களுக்குப் போதுமான குடியிருப்பு. 110 வீடுகளைக் கொண்ட செல்வநாயகபுரத்துக்கான வீடமைப்புத் திட்டம் இரண்டு கட்டங்களாக முதலாம் கட்டத்தில் 52 வீடுகளும், இரண்டாம் கட்டத்தில் 58 வீடுகளையும் கொண்டது. செல்வநாயகபுரம் வீடமைப்புத் திட்ட திறப்புவிழா யாழ். மாவட்டத்தில் மிகக் கோலாகலமாக நடைபெற்ற நிகழ்வுகளில் ஒன்று. அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தது, மிக அமைதியான சூழலில் நடைபெற்றது.

திறப்பு விழாவில் 17 வயது நானும் கலந்துகொண்டு பார்வையிட்ட நினைவுகள் பளிச்சிடுகின்றன. வீடுகளைப் பெற்றுக்கொண்ட பயனாளிகளுக்கு திறப்புக்கள் கையளிப்பு உள்ளிட்ட முழு இரவும் கலைநிகழ்வும் மக்கள் எந்தவிதமான பாதுகாப்புக் கெடுபிடியும் இல்லாமல் நடமாடிய சூழல். தமிழரசு, தமிழ் காங்கிரஸ், ஐக்கிய தேசியக்கட்சி, சுதந்திரக்கட்சி, சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ் கட்சி எனப் பிரதானமான ஆறு, ஏழு கட்சிகள் மட்டும் அரசியலில் ஆதிக்கம் செலுத்திய காலம். தொகுதி வாரியான நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோப்பாய்த் தொகுதி எம்.பியாக சி. கதிரவேற்பிள்ளை பணியாற்றினார்.

செல்வநாயகபுரத்தில் உள்ள 110 வீடுகளிலும் மக்கள் குடியிருந்த காலம் 98 வீதமான வீடுகளில் விவசாயக் குடும்பங்கள் வாழ்ந்தமையால் பயிர்ச்செய்கைக்கான ஆரவாரங்களோடு மிக அமைதியாக வாழ்ந்த குடும்பங்கள் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பமானதை அடுத்து பலாலி முகாமுக்கு அண்மையில் இருந்தமையால் தொடர்ச்சியான குண்டுத்தாக்குதலுக்கும் ஷெல்வீச்சுக்கும் உள்ளாகியது. மக்கள் கையில் அகப்பட்ட பொருள்களுடன் இடம்பெயர்வதும், பின்னர் வீடுகளுக்குத் திரும்புவதும் குடும்பங்கள் இடம்பெயர்ந்த வேளையில் வீடுகளின் கூரைகள், கதவுகள் அப்புறப்படுத்தப்படுவதும் மக்கள் மீளக்குடியேறி சீர்ப்படுத்துவதுமாக இருந்து வந்தது.

யுத்தநிலை மேலும் அதிகரிக்கத் தொடங்கி 1995ஆம் ஆண்டு ஒக்ரோபர் இடப்பெயர்வை அடுத்து மக்கள் வசிக்காத இடமாகவும் சூனியப் பிரதேசமாகவும் மாறியது.

செல்வநாயகபுரத்துக்கு வேறு ஒரு வகையிலும் முக்கியம் உண்டு. அச்சுவேலி சிறுவர் சீர்திருத்தப் பாடசாலை (மக்கோனா) செல்வநாயகபுரத்துக்கு வடக்குப்

பக்கத்தில் அமைந்திருந்தது. மேற்படி பாடசாலைக் கட்டடம் முற்றாகத் தகர்க்கப்பட்டு இருந்த இடமும் இல்லாமல் காணப்படுகின்றது. இப்பொழுது குறித்த சிறுவர் சீர்திருத்தத் திணைக்களம் காணியின் எல்லையைப் பாதுகாப்பதற்கு தூண்களை நாட்டி முள்ளுக்கம்பி இணைப்புச் செய்வதற்கு ஏற்பாடுசெய்து வருகின்றது.

அந்தச் சூழலில் செல்வநாயகபுரம் குடியேற்றத் திட்டத்தில் அரைகுறையாக உள்ள வீடுகளின் அத்திபாரங்களிலும் குடிசைகளை அமைத்து 22 குடும்பங்கள் மட்டும் குடியிருக்கின்றன.

செல்வநாயகபுரம் குடியேற்றத்திட்டத்தில் குடியிருக்கும் அனைத்துக் குடும்ப ங்களும் வருமானநிலையில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளன. தந்தை செல்வா சனசமூக நிலையம், தந்தை செல்வா பாலர் முன்பள்ளி, தந்தை செல்வா விளையாட்டுக்கழகம், தந்தை செல்வா மாதர் சங்கம் போன்ற அமைப்புக்கள் செயற்படுகின்ற போதிலும் அவர்களின் வாழ்க்கைநிலை எதிர்பார்த்தளவுக்கு சராசரி நிலையில்தானும் இல்லை என்பது வெளிப்படையாக உள்ளது. 8 குடும்பங்கள் விவசாயிகள். மிகுதிக் குடும்பங்கள் நாளாந்தக் கூலிவேலை செய்பவர்கள். குடியேற் றத்திட்டத்தில் குடியிருக்கும் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள் அச்சுவேலி மத்திய கல்லூரியிலும், குட்டியப்புலம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலும் தமது கல்வியைத் தொடர்கின்றனர். ஆரம்பக்கல்வியுடன் இடைவிலகுவதையே அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

கிராமத்தில் இருந்து உயர்கல்வியைத் தொடருவோர் எண்ணிக்கை மிகமிகக் குறைவு என்றாலும் தற்பொழுது ஒரு மாணவன் யாழ். பல்கலைக்கழகத்தில் கலைப்பிரிவில் கல்வியைத் தொடர்வது உண்மை. அவர் தனது தனிப்பட்ட முயற்சியினால் கிராமத்திற்குப் பெருமை சேர்த்து நிற்கின்றார்.

செல்வநாயகபுரம் கிராமத்தை உள்ளூராட்சி அமைச்சர் மு. திருச்செல்வம் கியூசி ஆரம்பித்துவைத்த வேளையில் கிராமம் முழுவதற்கும் மின்சார இணைப்புக்கள் செய்யப்பட்டிருந்ததோடு அனைத்து வீடுகளுக்கும் மின்இணைப்புச் செய்யப்பட்டு 100 வீதமும் மின்சார வசதியைக்கொண்ட இல்லங்களாக இருந்தன. ஆனால் இன்று அச்சுவேலிப் பிரதேசத்தில் மின்சார இணைப்பு முழுமையாக இல்லாத கிராமமாக ஒளியிழந்து காணப்படுகின்றது.

செல்வநாயகபுரம் குடியேற்றத்திட்டத்திற்கு மீண்டும் மின்சார இணைப்பைப் பெறுவதற்கு தந்தை செல்வா சனசமூக நிலையத்தினர் தங்களால் இயன்றளவுக்கு முயற்சிசெய்த போதிலும் இன்றுவரை அது கைகூடவில்லை. மின்சார இணைப்பைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக தந்தை செல்வா சனசமூக நிலையத்தின் செயலாளர் வ. ரூபவதனனும் பொருளாளர் து. ஜெகதீஸ்வரனும் கூட்டாகக் கருத்துத் தெரிவிக்கையில்,

"எமது கிராமத்துக்கு மின்சாரம் கிடைக்குமானால் மாணவர்களின் கல்வி வசதியை மேம்படுத்த முடியும். மின்விநியோகம் எமது கிராமத்திற்கு மட்டும்தான் இல்லை. கிராமத்தைச் சுற்றிவர உள்ளது. எமது கிராமத்திற்கு மின்சார விநியோகம் பெற்றுக்கொள்வதற்கு வலி. கிழக்குப் பிரதேச செயலகம், கச்சேரி, இலங்கை மின் சாரசபை ஆகியவற்றுடன் பல தடவைகள் கோரிக்கை முன்வைத்த போதிலும் ஒருவரை ஒருவர் மாறிமாறி குறைகூறித் தட்டிக்கழிக்கின்றனர். இதுவரை காரியம் கைகூடவில்லை. இந்தவகையில் வடக்கின் வசந்தம் வேலைத்திட்டம்கூட எமது கிராமத்தை எட்டிப்பார்க்கவில்லை". எனச் சோர்வடைந்த நிலையில் கவலை தெரிவித்தனர். தொடர்ந்து அவர்கள் தமது கிராமத்தின் சமகாலநிலை தொடர்பாகக் கருத்துத்தெரிவிக்கையில்,

110 வீடுகளைக் கொண்ட குடியேற்றத்திட்டத்தில் 22 வீட்டு உரிமையாளர்களுக்கு மட்டும் காணி உறுதி கிடைத்துள்ளது. ஏனைய காணித்துண்டுகளுக்கு "உறுதி", "பொமிட்" போன்ற ஆவணம் எதுவும் இல்லாத நிலையில் உள்ளன. இதனை வழங்கி உதவுவதற்கு சம்பந்தப்பட்ட திணைக்களம் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இது தொடர்பாக எமது சனசமூக நிலையம் கோரிக்கைகளைச் சமர்ப்பித்துள்ள போதிலும் காரியம் கைகூடவில்லை.

உலக வங்கி வீடமைப்புத்திட்டத்தின் கீழ் ஒரு வீடு மட்டும் கிடைத்துள்ளது. GTZ நிறுவனம் லட்சம் ரூபா பெறுமதியில் 20 வீடுகள் நிர்மாணித்துக் கொடுத்துள்ளது. 10 மலசலகூடங்கள் தொண்டு நிறுவனம் ஒன்றினால் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. எமது கிராமம் தொடர்பாக பாராமுகநிலை மாறும். எதிர்காலத்தில் ஏனைய கிராமங்கள் போன்று மின்சாரவசதி, வீடமைப்பு, அடிப்படைத் தேவைகளைத் தானும் பெற்றுக்கொள்ளும் என்ற நம்பிக்கையுடன் காத்திருக்கின்றோம் எனக் கவலையுடன் தெரிவித்துக்கொண்டனர்.

அச்சுவேலி செல்வநாயகபுரத்துக்கு சமகாலத்தில் கிடைக்கக்கூடிய வசதி களைத்தானும் வழங்குகின்ற விடயத்தில் அதிகாரிகளோ, அரசியல் தலைமைகளோ முன்வராதது ஏன் என்ற ஏக்கப் பெருமூச்சு அங்கு குடியிருக்கும் அனைத்துக் குடும்பங்களிலிருந்தும் வெளிவந்து கொண்டிருக்கின்றது.

உதயன் - 05.03.2010, 10.03.2010




# 74 வாதரவத்தைக் கிராமம்

**வ**லி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவின் வடகிழக்கு மூலையில் அமைந்துள்ள தனித்துவமான கிராமம் வாதரவத்தை. பெரிய பொக்கணை, வீரவாணி ஆகிய பகுதிகளையும் உள்ளடக்கி வாதரவத்தை என அழைக்கப்படும் இந்தக் கிராமம் J/280 ஆம் இலக்க கிராம சேவையாளர் பிரிவையும், வாதரவத்தை சமுர்த்தி அலுவலர் பிரிவையும் கொண்டது.

கிழக்கு தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவு வடக்கு கப்பூது, ஆட்டுப்பட்டி, பன்னாரை வெளிமேற்கு, தகரம்பிள்ளையார் கோயில் வெளி, தெற்கு மட்டுவில் – புத்தூர் பிரதான வீதி ஆகியவற்றை எல்லையாகக் கொண்ட பரந்தவெளி, மாரிகாலத்தில் சுற்றிவர நீரால் சூழப்பட்டு சிறுதீவு போலக் காணப்படும். இந்தப் பிரதேச மக்களின் வாழ்வும் வளமும் ஏனைய கிராமங்களிலும் வேறுபட்டது. தன்னம்பிக்கையோடும் உறுதியான உடல் உழைப்போடும் விரவியது.

உவர்க்களி மண்ணும், மணலும் கொண்ட இந்தப்பிரதேசம் நீர்வளமோ, நிலவளமோ பயிர்ச்செய்கை நடவடிக்கைக்கு ஏற்றதாக இல்லாதபோதிலும் மாரிமழையை நம்பி நெல், மிளகாய் மற்றும் மரக்கறிப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும், மனித

முயற்சியின் உயர்ச்சியை அந்தப் பயிர்களில் கண்டு மகிழ்வர். கோடைக் காலத்தில் பயிர்ச்செய்கை நடவடிக்கை எதனையும் காணமுடியாது. உவர்நிலத்தில் வளரும் புல், பூண்டுகளின் பசுமையை மட்டும் காணமுடியும்.

இந்தப் பகுதியில் இயற்கையாகக் கிடைக்கக்கூடியது யாழ். குடாக்கடல் நீரேரி மீன்வகையும் குடாக்கடலில் கோடையில் விளையும் உப்பும்தான். இத்தகைய வளங்குறைந்த பிரதேசத்தில் ஏன் தங்களது மூதாதையர் குடியேறினர் என்பதற்கு ஐதீகமாகக் கூறப்படும் காரணம் "அமைதியான சூழலை விரும்பிய அவர்கள் மிகக்குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளக்கூடிய நிலம் போட்டியில்லாத சமூக சூழலில் விரும்பிக் குடியேறி இருக்கலாம். யாழ். குடாநாட்டு சமூக சாதிக்கட்டமைப்பில் 'வேளாளர்' என்ற சாதியினர் மட்டுமே இங்கு தனித்துவத்துடன் வாழ்வதாகவும் தங்களிடம் உயர்வு தாழ்வு. பொருளாதார ரீதியிலான ஏற்றத்தாழ்வு எதுவும் இல்லை. எல்லோரும் ஒரே குடும்பம், எல்லோரும் உறவினர் என்ற உணர்வுடன் போட்டி, பொறாமை இன்றி வாழ்வதாகவும், வாழ்க்கையில் நிகழக்கூடிய நன்மை தீமைகள் எல்லா நிகழ்வுகளிலும் எல்லோரும் ஒன்றுகூடி மனிதநேயத்துடன் வாழ்ந்து வருவதாக 90 வயது முதியவர் ஒருவர் கூறினார். அவரது கூற்று உண்மையானது என்பதை ஒப்புநோக்கும்போது உணரக்கூடியதாக உள்ளது. சமய ரீதியிலும் மறுசமயங்களுக்கு இடம்இல்லாமல் வைதீகமான சைவசமயம் சார்ந்தவர்களாகவே உள்ளனர்.

இற்றைக்கு 100 வருடங்களுக்கு முன்னர் சமயத்தைப் பரப்பும் நோக்கி மிசனரிமாரினால் உருவாக்கப்பட்ட பாடசாலையை உரியநோக்கம் நிறை வேறாதமையினால் அவர்கள் கைவிட்டுத் திரும்பியதாகவும், ஊர்ப்பிரமுகர்களால் திண்ணைப்பள்ளியாக நடத்திவந்த பாடசாலை இன்று விக்னேஸ்வரா வித்தியாலயம் என்ற பெயரோடு இந்த வருடம் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வாதரவத்தைப் பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்கள் தரம் 1 தொடக்கம் தரம் 11 வரையும் வெளியிடங்களிலுள்ள பாடசாலைகளுக்குச் செல்லாமல் அங்கேயே கல்வி கற்று வருகின்றனர். பாலர் முன்பள்ளிகள் என்றவகையில் பெரிய பொக்கனையில் 'கணேஸ்வரன்' வீர வாணியில் 'இந்திரன்' வாதரவத்தை மத்தியில் "விக்னேஸ்வரா" என மூன்றும் செய ற்பட்டு வருகின்றன. பாலர் முன்பள்ளிகளில் 62 மாணவர்களும் விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் 280 இற்கும் மேற்பட்ட மாணவர்களும் கல்விகற்று வருகின்றனர்.

உடல் உழைப்பையும் தன்னம்பிக்கையையும் மூலதனமாககொண்டு முன்னேறிவரும் கிராமங்களில் வாதரவத்தைக் கிராமத்தை முதன்மையாகக் கொள்ளலாம். கல்வியால் முன்னேறவேண்டும் என்ற உயிர்த்துடிப்புடன் முயன்று

கற்றுவரும் மாணவர்கள் தமது கிராமத்தில் உள்ள விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் நம்பிக்கை வைத்து கல்விகற்று வருகின்றனர். தரம் 1 முதல் தரம் 11 வரை ஊருக்கு வெளியே சென்று கற்கின்றனர் எனக் குறிப்பிடத்தக்க தொகையினர் இல்லை. இந்தவகையில் விக்கினேஸ்வரா வித்தியாலயத்தின் பெறுபேறுகளும் உயர்நிலையில் வைத்து மதிப்பீடு செய்யப்படுகின்றன. கோப்பாய்க் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் இந்தப் பாடசாலை விளையாட்டு உள்ளிட்ட சகல நிகழ்வுகளிலும் தனது தனித்துவத்தைப் பேணிவருகின்றது. அண்மைக்கால போர்ச்சூழலால் குறிப்பிடத்தக்க பாதிப்பு ஏற்பட்ட போதிலும் மீண்டும் அது தனது நிலையை கல்வி அடைவு மட்டத்திலும் காப்பாற்றிக்கொள்ளும் என பாடசாலைச் சமூகம் உறுதிகொண்டுள்ளது.

அரசாங்க உத்தியோகத்தரின் எண்ணிக்கையும் ஏனைய கிராமங்களுடன் ஒப்பிடும்போது இங்கே உயர்நிலையிலேயே உள்ளது. ஒரு காலப்பகுதியில் "குட்டி இங்கிலாந்து" என அழைக்கப்பட்ட இந்தக் கிராமம் கடந்த 30 வருட காலச் சூழலில் பெரும் தாக்கங்களுக்கு உள்ளாகியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

அசைக்கமுடியாத உடல் உறுதியுடன்கூடிய இந்தப் பிரதேச மக்கள் செய்யும் தொழிலை மறைக்காமல் வெளிப்படையாகக் கூறுவதன்மூலம் அவர்களில் காணப்படும் தொழிலின் மகத்துவத்தை உணரமுடிகின்றது. "கூலித்தொழிலாளர்" என்றவகையில் பெருந்தெருக்கள், வீதிகளைச் செப்பனிடுவதில் இந்தக் கிராமத்தைச் சேர்ந்த தொழிலாளர்களின் மேன்மையும் தொழில்நுட்பச் சிறப்பும் வெளி இடங்களில் எல்லாம் உணரப்பட்டுள்ளது.

சாதாரணமாக இரண்டுபேர் சேர்ந்து தூக்கமுடியாத கல்லுச் சுமையை ஒருவர் தூக்கித் தோளில் வைத்துச் சுமந்து வீதிகள் அமைக்கும் பணியிலும் வேறு பணியிலும் காட்டிக்கொள்ளும் திறமை வியந்து கொள்ளத்தக்கது. வாதரவத்தை கிராமத்தில் பிள்ளையார், நாச்சிமார், அம்மன், காளிகோவில், வைரவர் கோவில் என்றவகையில் பத்து கோயில்கள் வரையில் அமைந்துள்ளன. இவற்றில் பல கோயில்கள் பரம்பரைப் பூசகரினாலும் ஒன்று இரண்டு கோயில்கள் வைதீக முறைப்படியும் பூசைவழிபாடு நடைபெறுகின்றது.

இந்த ஆலயங்களில் தினசரி பூசைவழிபாடு நடைபெறும் அதேவேளையில் வைகாசி மாதத்தில் ஊரின் மேற்குத் திசையில் உள்ள வைரவர் கோயிலில் ஆரம்பிக்கும் வழிவெட்டுப் பொங்கல் வழிபாடு வாரத்துக்கு ஒரு கோயிலாகக் கொண்டு செல்லப்பட்டு இறுதியாகக் கிழக்குத்திசையில் உள்ள வைரவர் கோயிலில் முடிவடையும் ஊரில் உள்ள துஷ்ட தேவதைகளை ஊரில் இருந்து அப்புறப்படுத்துவது என்றவகையில் ஆண்டுதோறும் இது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. யாழ்ப்பாணக்

கூத்து மரபில் வாதரவத்தைக் கிராமத்துக்கெனத் தனித்துவமான "பப்பரவராயன்" ஆடற்கூத்து குறிப்பிடத்தக்கது. இது மரபுவழியாக அதற்கே உரிய அண்ணாவிமாரால் பராமரிக்கப்பட்டு வந்தது. திறந்தவெளி அரங்கில் இரவு முழுவதும் "பப்பரவராயன்" கூத்து நடைபெறும். ஊர்முழுவதும் திரண்டிருந்து பார்த்து மகிழ்வர். இதனை அயல்கிராமத்தைச் சேர்ந்தவர்களும் சென்று பார்த்து மகிழ்வர். அத்துடன் அந்தக் காலத்து வண்டில் பயணத்தில் வன்னிக்குச் செல்பவர்களும் வண்டில் மாடுகளுடன் இளைப்பாறும் வேளையில் இதனைப் பார்த்து ரசிப்பது உண்டு.

இந்தவகையில் பார்த்து மகிழ்ந்தவர்கள் இந்த நாடகக் கலைஞர்களை அழைத்துச்சென்று தங்களது கிராமங்களிலும் காட்சிப்படுத்துவது உண்டு. இது கடந்த 30 வருடத்துக்கு முந்திய நிலைப்பாடு. தற்பொழுது இந்த ஆடற்கூத்துக் கலை வடிவத்தைக் காணமுடியாது. இந்தக் கிராமத்தில் ஐந்து குளங்கள் உள்ளன. இவற்றில் நீரைத் தேக்கி மழைகாலத்தில் பாதுகாத்த போதிலும் கோடை காலத்தில் இவை முற்றாக வற்றி வரண்டுபோவதும் உண்டு.

சில காலங்களில் வாதரவத்தை பெரியகுளத்தில் மட்டும் தண்ணீர் காணப்படும். அதுவும் சிலவேளைகளில் வற்றிவரண்டு விடுவது உண்டு. குளங்களில் மழைநீரைத் தேங்கி வைப்பதால் தரைக்கீழ் நீரில் மாறுபாடு காணப்படுவதுடன் குளத்தை அண்டிய பகுதியில் தரையின் இயல்புகளும் மாறலாம் என நம்பப்படுகின்றது.

வலி. கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் மிகவும் காலம் தாழ்த்தி மின்சார விநியோகத்தைப்பெற்ற கிராமங்களில் வாதரவத்தையும் ஒன்று. கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்பே இந்தக் கிராமத்துக்கான மின்சார விநியோகம் ஆரம்பமாகியது. காலம் தாழ்த்தி தமது கிராமத்துக்கு மின்சார விநியோகம் கிடைத்தாலும் தமது கிராமத்துக்கு மின்சார விநியோகம் கிடைத்தது தொடர்பாக இவர்கள் நன்றியறிதலுடன் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர். வலி. கிழக்கில் வாதரவத்தைக் கிராமத்தை முன்வைத்தே முதன்முதலில் குடிதண்ணீர் விநியோகத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. புத்தூர் சத்திரத்தடி கிணற்றில் இருந்து குழாய்மூலம் குடிதண்ணீர் வாதரவத்தைக் கிராமத்திலுள்ள பத்துக்கும் மேற்பட்ட தொட்டிகளில் நிரப்பப்பட்டு நாளாந்தம் குறிப்பிட்ட சில மணிநேரம் நீர் விநியோகிக்கப்பட்டு வந்தது. 2009ஆம் ஆண்டு தொடக்கம் வாதரவத்தையில் யுனிசெவ் நிறுவனத்தின் உதவியுடன் நிறுவப்பட்ட பெரிய நீர்த்தாங்கியில் நீர் நிரப்பப்பட்டு அதன்மூலம் தேசிய குடிதண்ணீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை நீர் விநியோகத்தை மேற்கொண்டு வருகின்றது.

தற்பொழுது தனித்தனியான வீடுகளுக்கும் குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்தக் குடிதண்ணீர் விநியோகத்துக்கு அறவிடப்படும் ஆரம்பக்கட்டணம் தொடர்பாக வாதரவத்தைக் கிராமத்தின் மூத்த

விவசாயி எம். இரத்தினசிங்கம் கருத்துத் தெரிவிக்கையில், சமுர்த்தி முத்திரை பெறும் குடும்பங்களுக்கு 5882/= ரூபாவும் சமுர்த்திக் குடும்பங்கள் தவிர்ந்த ஏனைய குடும்பங்களுக்கு 16620/= ரூபாவும் அறவிடப்படுகின்றன. இதனால் கணிசமான அளவு குடும்பங்கள் குடிதண்ணீர் விநியோக வசதிகளை அனுபவிக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சமுர்த்தி தொடர்பான நிலைப்பாடு இந்த விடயத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது எனத் தெரிவித்தார். கிராமத்துக்குச் செல்லும் பிரதான வீதி தார்போடப்பட்டு செப்பனிடப்பட்டுள்ளது. ஏனைய வீதிகள் களிமண் வீதிகளாக உள்ளன. இந்த வீதிகளில் மாரிகாலத்தில் பயணம் செய்வது என்பது பொதுமக்களையும், மாணவர்களையும் பெரும் வதைக்கு உள்ளாக்குவதாகக் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

உயர்தர வகுப்பு மாணவி செல்வி எஸ். தாரணியா கருத்துத் தெரிவிக்கையில் "மாரி காலத்தில் சீருடை, சப்பாத்து அணிந்து பாடசாலைக்குச் செல்வது பெரும் வேதனைக்குரிய விடயமாகும். களிமண் வீதி சேறாக உள்ளதால் நீர்ச்சதுப்பல் வீட்டிலிருந்து பிரதான வீதிக்கு வந்து பாடசாலைக்குப் பயணத்தைத் தொடர்வது பெரும் சிக்கலாகி விடுகின்றது. இந்த விடயத்தில் சம்பந்தப்பட்டோர் தமது கவனத்தைத் திருப்புவது கிராமத்தின் வளர்ச்சிக்கு வளமூட்டுவதாக அமையும். வலி. கிழக்கின் தனித்துவமான கிராமமான வாதரவத்தை மக்களின் வாழ்க்கை நிலையும் வளநிலையும் மேலும் மேம்பட சகல தரப்பினரதும் கடைக்கண் பார்வை மிகமிக அவசியமாகும்.

உதயன் - 13.05.2010, 20.05.2010, 27.05.2010




# 75 புத்தூர் மேற்கு கலைமதிக் கிராமம்

கிராமங்களின் வளர்ச்சியில் சனசமூகநிலையம் உள்ளிட்ட சமூக அமைப்புக்கள் மற்றும் தனிமனிதர்கள் எந்தவகையில் உதவமுடியும்; குறித்த கிராமத்தின் சமூக கட்டுமானங்களை, மற்றும் குடும்பங்களை, குடும்ப உறுப்பினர்களை எத்தகைய மாற்றத்துக்குள்ளாக்கமுடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக முன்னுதாரணமாகக் கொள்ளத்தக்கவகையில் விளங்கும் கிராமங்களில் ஒன்று புத்தூர் மேற்கு கலைமதிக் கிராமம்.

1975ஆம் ஆண்டுக்கு முந்திய காலப்பகுதியில் புத்தூர் மேற்கு வேம்பிராய் என்ற பெயருடன் மிகமிகப் பின்தங்கிய கிராமமாக நிலமானிய சமூக கட்டு மானங்களை உள்ளடக்கியதாக இருந்த கிராமம் 1975இற்குப் பின்னர் சகல சமூக கட்டுமானங்களிலும் தனித்துவமான தோற்றத்துடன் வளர்ந்து முன்னேறி வருகின்றது. இந்த முன்னேற்றத்துக்கு அடித்தளமாக அமைந்தது 1975.05.25ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட "கலைமதி" சனசமூக நிலையத்தின் தோற்றமாகும். புத்தூர் மேற்கு கலைமதிக் கிராமம் புத்தூர் சிவன் கோயிலுக்கு மேற்குப் புறத்தில் புத்தூர் - சுன்னாகம் பிரதான வீதியை வடக்கு எல்லையாகவும், சிறுப்பிட்டி ஜனசக்தி கிராமத்தை தெற்கு எல்லையாகவும், கமநலசேவை நிலையத்துக்கு

முன்னால் தெற்கு நோக்கிச்செல்லும் விவசாய வீதியை மேற்கு எல்லையாகவும் கொண்ட பரந்த நிலப்பரப்பாகும். செம்மண்ணும் சுண்ணக்கற்பாரும் சிறந்த நீர்வளமும் கொண்ட பிரதேசமாகும். 425 குடும்பங்களையும் 3800 இற்கு குறையாத மக்கள் தொகையையும் கொண்டு விளங்கும் இந்தக் கிராமம் 1975இற்கு முந்திய காலப்பகுதியில் திறந்தவெளிக் குடியிருப்புக்கள் 90இற்கு மேற்பட்ட வீதத்தினர் மதுப்பழக்கம்; குடியிருக்கும் நிலம்கூட சொந்தமில்லாத நிலை, நாளாந்தக் கூலித்தொழில், பாடசாலைக்குச் செல்லும் சிறுவர்களின் எண்ணிக்கை மிகமிகக்குறைவு; சென்றாலும் ஆரம்பக்கல்வியுடன் இடைவிலகல். கிராமத்தின் தலைமைப்பொறுப்பை ஏற்பதற்கு யாரும் இல்லாதநிலை ஏற்றாலும் கட்டுப்பாடுகளை நிலைநிறுத்தக்கூடிய நிலையில்லை; நிரந்தர வருமானம் இல்லாமல் மிகக்குறைந்த வாழ்க்கைத்தரம் கொண்டதாக இருந்தது. நாளாந்தம் அடிதடிசண்டை, சச்சரவுகளுக்கும் உள்ளாகியதாக சாதி, சமூக கட்டுமானங்களால் ஒடுக்கப்பட்ட கிராமமாக விளங்கியது.

கலைமதி சனசமூகநிலையத்தின் தோற்றத்தை அடுத்து ஒழுங்கமைக்கப்பட்ட கிராம கட்டமைப்பும் குடியிருப்பு நிலங்களைச் சொந்தமாக்கி, கூலித்தொழில் செய்வதோடு விவசாய முயற்சி, சிறுகைத்தொழில் முயற்சியில் ஆர்வம் கொள்ளச்செய்தது கலைமதி சனசமூக நிலையத்தின் நிர்வாகம். கிராமத்தில் உள்ள எல்லோராலும் "தலைவர் செல்வம்" என அன்புடன் அழைக்கப்படும் கே. கதிர்காமநாதன் கலைமதி சனசமூக நிலையத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுத் தொடர்ந்து 25 வருடங்களுக்கு மேலாக சனசமூக நிலையத்துக்கு மட்டுமல்ல கிராமத்துக்கும் தலைவராக இருந்து உயர்ந்த நிலையில் வழிகாட்டியமையே இன்று கலைமதிக் கிராமம் சராசரி நிலைக்கு முன்னேறி வருவதோடு ஏனைய கிராமங்களுக்குச் சமமான நிலையில் வளர்ந்து வருவதற்கும் காரணமாகியது எனலாம். "தலைவர் செல்வம்" பஞ்சாயத்து தலைவர் போன்று கிராமத்துக்கு தலைமை தாங்கியதோடு உள்ளூர் பிணக்குகளையும் பிரச்சினைகளையும் பஞ்சாயத்துமுறையில் தீர்த்துவைத்ததும் செல்வத்தின் ஆலோசனைகளை வயது வேறுபாடின்றி சகலரும் ஏற்றுக்கொண்டு கட்டுப்பாட்டோடு நடந்துகொள்வதும் இன்றும் கண்டுகொள்ளக்கூடியது. இத்தகைய ஓர் அமைப்பு ஒழுங்குமுறைகளை யாழ். மாவட்டத்தில் எந்தக் கிராமத்திலும் கண்டுகொள்ளமுடியாது.

இன்று கலைமதி சனசமூகநிலையம், மக்கள் பொதுமண்டபம், கலைமதி விளையாட்டுக்கழகம், கலைமதி சிக்கனக் கூட்டுறவுச்சங்கம், கலைமதி பாலர் முன்பள்ளி, கலைமதி விளையாட்டுக்கழகம், கலைமதி சிக்கனக் கூட்டுறவுச்சங்கம், கலைமதி பாலர் முன்பள்ளி, கலைமதி கிராம அபிவிருத்திச் சங்கம், கலைமதி கல்வி

அபிவிருத்திக்கழகம் போன்ற பல்வேறு அமைப்புக்கள் கலைமதி என்றபெயருடன் இணைந்து செயற்படும் கட்டமைப்பும் மிகப்பெரிய விளையாட்டு மைதானமும் யாழ். மாவட்டத்திற்கே முன்மாதியாக எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.

1975ஆம் ஆண்டு காலப்பகுதியில் காணப்பட்ட கிராமத்தின் அங்க அடை யாளங்கள் முழுமையாக மாற்றப்பட்டு வேம்பிராய்க் கிராமம் என இனங்காண முடியாதவகையில் கலைமதிக் கிராமம் மாற்றமடைந்துள்ளது. கலைமதிக் கிராமத்தின் சமகால பொருளாதார வலுவூட்டலுக்கு இலங்கை வங்கியின் அச்சுவேலிக் கிளை எல்லா வகையிலும் உதவிவருகின்றது. 2008ஆம் ஆண்டு கலைமதிக் கிராமத்தை அச்சுவேலி இலங்கை வங்கி பொறுப்பேற்று "இலங்கை வங்கி எழுச்சிக் கிராமமாக அறிமுகம் செய்தது" இந்தக் கிராமத்தின் வளர்ச்சிக்கு இலங்கை வங்கி மேலிடம் சகல மட்டத்திலும் உதவுவதற்கு வழங்கிய முன் அனுமதியின் பேரில் இலங்கை வங்கி அச்சுவேலி கிளையின் முகாமையாளர் த. புவனேந்திரன் சகல மட்டத்திலும் உதவி வருகின்றார்.

இது தொடர்பாக கா. கதிர்காமநாதன் கருத்துத் தெரிவிக்கையில், "கலைமதிக் கிராமத்தின் சகல மட்டத்திலும் இலங்கை வங்கி அச்சுவேலிக் கிளையின் பொருளாதார வலுவூட்டல் இளையோடி உள்ளது. விவசாயக்கடன், சுயதொழில் முயற்சி, இலகுகடன், வடக்கின் வசந்தம் அபிவிருத்திக்கடன், பால் உற்பத்தி பசுமாடு வளர்ப்புக் கடன், கல்வி அபிவிருத்திக்கான உதவி, கிராமியக் குழுக்கடன் திட்டம்.

குடியிருப்புக் காணி கொள்வனவுக்கான கடன் உதவியென எல்லா நிலையிலும் பல மில்லியன் ரூபா இலகுகடன் வழங்கப்பட்டுள்ளது. இந்தவகையில் இலங்கை வங்கி அச்சுவேலிக் கிளைக்கு கிராமம் பெரும் கடமைப்பாட்டிற்கு உரியதாக உள்ளது. இந்தவகையில் எமது கிராமம் இலங்கை வங்கி நிர்வாகத்துக்கு நன்றிகூறி மகிழ்கின்றது எனக் கூறிய அவர் ஹற்றன் நஷனல் வங்கியும் 50 விவசாயிகளுக்கு விவசாயக்கடன் உதவியை வழங்கியிருப்பதாகத் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில், 425 குடும்பங்களைக் கொண்ட எமது கிராமத்தில் தனித்துவமானதாக அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை நிலையத்தைச் செயற்பட வைப்பதற்கு எடுத்த முயற்சிகள் இதுவரை பலன்தரவில்லை. எதிர்காலத்தில் மேற்கொண்டு முயற்சிகளை மேற்கொள்ளவிருப்பதாகத் தெரிவித்தார்.

தற்போதைய யாழ்ப்பாணச் சமூகச் சூழலில் காணப்படும் கலாசாரச் சீர்குலைவு, பாதுகாப்பு இன்மை, கிராமத்தின் விழிப்புணர்வு, செயற்றிட்ட முன்னெடுப்பு, சிறுவர்களுக்கான கட்டாயக்கல்வி முன்னெடுப்பு என்பனவற்றை

உரியமுறையில் முன்னெடுப்பதற்கு 50 இளைஞர்களைக் கொண்ட அணி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இளைஞர் அணி திட்டமிட்டமுறையில் தமது பணியை மேற்கொண்டு வருகின்றது.

ஒரு காலகட்டத்தில் 90 வீதத்துக்குக் குறையாமல் இருந்த மதுப்பழக்கம் தற்பொழுது 20 வீதத்துக்குக் குறைந்ததாக வந்துள்ளது. மதுப்பழக்கம் இளைஞர் மட்டத்தில் இல்லாமல் அருகிவருவதால் அது மேலும் குறையலாம்.

கிராமங்களின் அபிவிருத்தியும் மறுமலர்ச்சியும் நாட்டின் அபிவிருத்தியாகவும் மறுமலர்ச்சியாகவும் பரிணமிப்பதால் எல்லாக் கிராமங்களும் இந்தவகையில் திட்டமிட்டமுறையில் குறுகியகால வேலைத்திட்டங்களின் அடிப்படையில் மாற்றத்துக்கு உள்ளாக்கப்படுவது காலத்தின் கட்டாயமாகும்.

உதயன் - 29.04.2010, 26.05.2010



# 76 மக்களின் வாழ்வாதார மேம்பாட்டில் சிறுப்பிட்டி ஜனசக்தி ச.ச. நிலையம்

**பொ**ருளாதாரத்திலும் கல்வியிலும் பின்தங்கிய தமது உறுப்பினர்களின் குடு வாழ்வாதார மேம்பாட்டில் சிறுப்பிட்டி மேற்கு ஜனசக்தி சனசமூக நிலையத்தி பணி முன்னெடுப்புக்கள் காத்திரமானவை. மக்களும் சனசமூக நிலையமும ஒன்றுபட்டநிலையில் செயற்படுவதோடு. ஏனைய கிராமங்களுக்கும் சனசமூக நிலையங்களுக்கும் எடுத்துக்காட்டாகவும் முன்னோடியாகவும் விளங்குவது ஜனசக்தி சனசமூக நிலையம்.

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியில் சிறுப்பிட்டி மடத்தடி கலைவாணி சனசமூக நிலையத்துக்கு அருகில் மேற்கு நோக்கிச்செல்லும் ஒழுங்கையில் 1500 மீற்றர் தூரத்தில் ஜனசக்தி சனசமூக நிலையம் அமைந்துள்ளது. சனசமூக நிலையத்தின் பெயரிலேயே ஜனசக்தி கிராமம் என குறித்த கிராமம் அழைக்கப்படுவது சனசமூக நிலையத்துக்கும், கிராமத்துக்கும் இடையே உள்ள ஒன்றிப்பை வெளிப்படுத்தி நிற்கின்றது.

1971 ஆம் ஆண்டு ஸ்தாபிதம் செய்யப்பட்ட ஜனசக்தி சனசமூக நிலையம் இதுவரை காலமும் சாதாரண கட்டடத்தில் செயற்பட்டபோதிலும், தற்பொழுது

பொருளாதார அமைச்சின் நிதி உதவியுடனும் பொதுமக்களின் நிதிஉதவியுடனும் 36 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அதனோடு இணைந்து சமூக மேம்பாட்டுக்கான ஏழு அமைப்புக்கள் செயற்படுவதும் ஜனசக்தி சனசமூக நிலையத்தின் காத்திரமான செயற்பாட்டுத்திறனை துலாம்பரப்படுத்தி நிற்கின்றது.

வடமராட்சிப் பகுதியிலிருந்து வந்து சிறுப்பிட்டிப் பகுதியில் வாழ்க்கைத்துணையை தேடிக்கொண்டவர் வை.கந்தசாமி. அவர் குறித்த கிராமத்தில் வாழும் பின்தங்கிய மக்களின் நிலையைக் கண்டு கிராமத்தில் உள்ள மக்களோடு கலந்துரையாடி சனசமூக நிலையம் ஒன்றை நிறுவவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையில் பணிபுரிந்த கந்தசாமியின் விசுவாசமான ஆலோசனையையும் கரிசனையையும் ஏற்றுக்கொண்ட முன்னோடிகள் சனசமூக நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியத்தை ஏற்றுக்கொண்டனர். அத்துடன் ஊருக்கு நடுவிடத்தில் சனசமூக நிலையத்தை அமைப்பதற்கு காணியையும் வழங்கி உதவினர்.

1971 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 09 ஆம் திகதி பதிவுசெய்யப்பட்டு J/VC/38CC/111 பதிவிலக்கம் கொண்ட ஜனசக்தி சனசமூக நிலையத்தின் செயற்பாட்டு எல்லைப் பரப்பில் 315 குடும்பங்களைச் சேர்ந்த 1055 மக்கள் வாழ்கின்றனர்.

சனசமூக நிலையத்தின், ஒழுங்கமைக்கப்பட்ட மேற்பார்வையின் கீழ் ஜனசக்தி விளையாட்டுக்கழகம், ஜனசக்தி சிக்கனக்கடன் கூட்டுறவுச் சங்கம், ஜனசக்தி சமூக அபிவிருத்தி மன்றம், ஜனசக்தி விண்மீன் சிறுவர் கழகம், ஜனசக்தி அபிவிருத்தி அமைப்பு, ஜனசக்தி சபை, கந்தசாமி பாலர் முன்பள்ளி, பெருதலை பார்வதி பரமேஸ்வரன் ஆலயம், ஜனசக்தி கிராம அபிவிருத்திச் சங்கம் உள்ளிட்ட 8 அமைப்புக்கள் செயற்படுகின்றன.

கிராமத்தில் செயற்படும் பொது அமைப்புக்கள் அனைத்தினதும் செயற்பாடுகளும் ஜனசக்தி சனசமூக நிலையத்தின் கண்காணிப்பிலும் மேற்பார்வையிலும் வழிப்படுத்தலிலும் செயற்படுவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. குறித்த ஒவ்வொரு அமைப்புக்களின் செயற்பாடுகளும் கிராமத்தினதும் அங்கு குடியிருக்கும் குடும்பங்களின் வாழ்வாதார மேம்பாடுதான் தமது குறிக்கோள் என்ற உயர்நோக்கோடு மேற்கொள்ளப்படுகின்றன. சனசமூக நிலையத்திற்கு முன்பாக அமைந்திருக்கும் விளையாட்டு அரங்குக்கு கிழக்குப்புறத்தில் அமைந்துள்ள ஜனசக்தி அபிவிருத்தி அமைப்பு அலுவலகத்தில் இவற்றைத் துல்லியமாக அவதானிக்கமுடிந்தது.கிராமத்தின் இலங்கை வங்கியூடாக மேற்கொள்ளக்கூடிய அனைத்து உதவிகளையும் அச்சுவேலி இலங்கை வங்கியின் முகாமையாளர் த. புவனேந்திரன் வழங்கி வருவதாக ஜனசக்தி சமூகம் நன்றி கூறுகின்றது.

செம்மண் நிலமும், நீர்வளமும் கொண்ட ஜனசக்தி கிராம விவசாயிகள் உடல் உழைப்பில், முயற்சியில் மேம்பட்டவர்கள். கிராமமட்டத்தில் தலைமைக்கு கட்டுப்பட்டவர்கள். கிராமத்தில் ஏற்படக்கூடிய பிரச்சினைக்கு பொலிஸ் நிலையத்துக்கோ வேறு தலையீட்டுக்கோ இடமளியாது கிராமிய மட்டத்தில் "பஞ்சாயத்து முறையில்" நடாத்தப்படும் விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர். பஞ்சாயத்தால் வழங்கப்படும் தீர்ப்பை ஏற்றுக்கொண்டு கட்டுப்படுவார்கள்.

கிராம மட்டத்தில் ஏற்படும் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான தீர்ப்பாயத்தின் தலைவராக சனசமூக நிலையத்தின் தலைவரும் சனசமூக நிலையத்தினால் தெரிவுசெய்யப்பட்ட கிராமத்தின் மூத்த பிரஜைகளும் அங்கம் வகிக்கின்றனர். அங்கு வழங்கப்படும் தீர்ப்பு பக்கச்சார்பானது என்றோ மேன்முறையீட்டுக்குரியது என்றோ யாரும் கருத்துக்கூறாமல் ஏற்றுக்கொள்வதோடு மேற்கொண்டு பிரச்சினைக்கு இடமளியாமல் குறித்த பிரச்சினைக்கு அன்றே முடிவு காணப்படுகின்றது.

இந்த வகையில் பொலிஸ் நிலையத்துக்குச் செல்வது, நீதிமன்றத்தை நாடுவது என்பது இல்லாமல் உள்ளூரிலே பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுகிறது. மேலும் அது தொடர்பாக ஏற்படக்கூடிய மேலதிக செலவு மற்றும் தொடர் பகைமையை வளர்த்துக் கொள்வதும் இல்லாமல் போய்விடுகின்றது.

சுண்ணாம்புக்கல் நிறைந்த கலட்டியாக இருந்த சிறுப்பிட்டி மேற்கிற்கு செல்வதற்கான சகல ஒழுங்கைகளும் கடந்த காலங்களில் திருத்தி அமைக்கப்படாமல் கல், முள் நிறைந்த பகுதிகளாக இருந்துவந்தன. கடந்த சில வருடங்களுக்கு முன்பு குறித்த கிராமத்துக்குச் செல்வது என்றால் 'முகம் சுழித்து' முடியாது எனக் கூறப்பட்டது உண்டு. அந்தவகையிலேயே ஜனசக்தி கிராமத்தில் அமைந்துள்ள சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதி கஷ்டப் பிரதேச பாடசாலையாக பாடசாலைக் கட்டமைப்பில் உள்ளீர்க்கப்பட்டது.

ஜனசக்தி கிராமம் மீள்எழுச்சித் திட்டத்தில் இணைக்கப்பட்டிருப்பதால் இன்று கிராமத்துக்குச் செல்லும் அனைத்துப் பாதைகளும் செப்பனிடப்பட்டு தார் போடப்பட்டு திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. இந்த வசதியை அயல்கிராம மக்களும் பயன்படுத்தக்கூடிய நிலையில் உள்ளனர்.

மேற்படி கிராமத்துக்கு இராசவீதியில் இருந்துவரும் விவசாயவீதி மண் போடப்பட்டு தற்காலிகமாக செப்பனிடப்பட்டுள்ளது. தற்பொழுது சனசமூக நிலையத்தின் கோரிக்கையை அடுத்து மீள்எழுச்சித் திட்டத்தின் கீழ் தார்போடப்பட்டு செப்பனிடப்படவுள்ளது.

கல்வியிலும், பொருளாதாரத்திலும், பின்தங்கிய கிராமமாக இருந்துவந்த சிறுப்பிட்டி மேற்கு ஜனசக்தி கிராமம், ஜனசக்தி சனசமூக நிலையத்தின் அயராத பணி முன்னெடுப்புக்கள்மூலம் படிநிலையாக ஆண்டுதோறும் முன்னேறி வருகின்றது.

தற்பொழுது கிராமத்தின் வளர்ச்சி சராசரிநிலைக்குக் குறையாத நிலைக்கு மாறியிருப்பதோடு, பின்தங்கிய கிராமம் என்று கூறுவதற்கான அடையாளங்கள் குறிகாட்டிகள் முற்றாக மாறியுள்ளன.

கல்வியால் முன்னேற முடியும் என்பதைக் கருத்திற்கொண்டு ஜனசக்தி சன சமூக நிலையத்தின் வழிப்படுத்தலில் இலவச ஆங்கில வகுப்புக்கள், இலவச கணினிக் கல்வி போதனை வகுப்புரீதியாக மேலதிக வகுப்புக்கள், முதியோர் கல்வி முன்னெடுப்பு, உயர்கல்வி கற்கும் மாணவர்களுக்கான ஊக்குவிப்பு, புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பாராட்டும் ஊக்குவிப்பும் வழங்கிக் கௌரவித்தல் உள்ளிட்ட பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

பாடசாலைக்குச் செல்லாத மாணவர்களைக் கண்காணித்தல், பாடசாலையிலிருந்து இடைவிலகிய மாணவர்களுக்கான கல்வி வேலைத்திட்டம் என்பன மேற்கொள்ளப்படுகின்றன. ஜனசக்தி பாலர் முன்பள்ளிக்கு ஊடாக கல்விக்கான அடித்தளமும் ஆரோக்கியமான முறையில் இடப்படுகின்றது. சனசமூக நிலைய வளவில் பாலர் முன்பள்ளி செயற்படுகின்றது. பாலர் முன்பள்ளியில் ஐம்பது சிறார்கள்வரை கல்வி பயில்கின்றனர். முன்பள்ளிச் சிறார்களுக்கு சீருடை, கல்வி போதிக்கும் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு என்பன திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்படுகின்றது. சிறுவர்களுக்கான சத்துணவு வழங்கல், பாலர் முன்பள்ளியின் செயற்பாடு தொடர்பான மேற்பார்வை கண்காணிப்பு என்பனவும் திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களின் கல்வி நடவடிக்கையை ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் மேற்பார்வை செய்துவருவதோடு, ஆண்டுதோறும் வருடத் தொடக்கத்தில் பாடசாலை மாணவர்களுக்கு பயிற்சிப் புத்தகங்கள் மற்றும் கற்றல் துணைச்சாதனங்கள் இலவசமாக வழங்கப்பட்டு ஊக்குவிக்கப்படுகின்றனர். இந்தவகையில் கல்வியில் வறுமைக்கு இடமில்லை "கல்விக்கான வளவசதிகள் தாராளம்" என்ற நிலையில் கல்விமுன்னெடுப்புக்கள் கல்வி விடயத்தில் மூத்தபிரஜைகளும் இளைய தலைமுறையினரும் ஒன்றுபட்ட சிந்தனையோடு செயற்பட்டு வருகின்றனர்.

கிராம மீள்எழுச்சித்திட்டத்தின்கீழ் இணைத்துக்கொள்ளப்பட்டதை (2010.04.01) அடுத்து சனசமூக நிலையத்துக்கான கட்டடத் தொகுதி மாடிக்கட்டடமாக மறுசீரமைப்புச் செய்யப்பட்டிருப்பதோடு குடிதண்ணீர் தாங்கி மற்றும் அமைப்புக்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. மீள்எழுச்சித் திட்டவேலைகளுக்கு ஒவ்வொரு குடும்பமும் தங்களால் இயன்றளவு நிதிஉதவியையும், உடல் உழைப்பையும் வழங்கி வேலைத்திட்டங்களைத் திட்டமிட்ட முறையில் நிறைவுசெய்து வருகின்றனர். இதனை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பாராட்டி இருப்பதோடு யாழ். மாவட்டத்தில் "மீள் எழுச்சித் திட்டத்தில் முதன்நிலை கிராமமாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

மீள்எழுச்சித் திட்டத்தில் மாவட்ட நிலையிலான நிகழ்வுகள் ஜனசக்தி சனசமூக நிலைய முன்றலில் நடைபெற்றன. 2012.11.17 ஆம் திகதி நடைபெற்ற நிகழ்வில் உலகவங்கி பணிப்பாளர், உலக வங்கிக்கான இலங்கை வதிவிடப்பிரதிநிதி மற்றும் உயர்அதிகாரிகள் கலந்துகொண்டனர். 4 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கிராமிய பந்தலில் கண்காட்சி உள்ளிட்ட நிகழ்வுகள் வெகு சிறப்பாக நடைபெற்றன.

ஜனசக்தி சனசமூக நிலையம் 1971ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 9ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து கிராமத்தில் வளர்ச்சிப் பணியில் ஆர்வத்தோடு ஈடுபட்டு வருகின்றது. சனசமூக நிலையத்தை ஸ்தாபித்து கிராம மக்களை வழிப்படுத்தியவர்கள் என்றவகையில் வை.கந்தசாமி, வெ.சபாரத்தினம் என்போரின் பங்குபணி இன்றும் பசுமையுடன் கிராம மக்களினால் நினைவு கூரப்படுகின்றது.

ஜனசக்தி சனசமூகநிலையத்தின் தலைவர்களாக இருந்து உழைத்தவர்கள் என்றவகையில் காலஞ்சென்றவர்களான வெ. சபாரத்தினம் க.வைத்தி, சி.வல்லி, சி.சின்னத்தம்பி மற்றும் சி.துரை, செ.தியாகு, சி. வைத்தியலிங்கம், வை. மாணிக்கம், தருமராசா, க.தம்பிஐயா, ந.தம்பித்துரை, க.தங்கராசா, கி.ரவீந்திரன், மா.மனோராசா, சி.பாஸ்கர், வ. கிருஷ்ணகுமார், கு.சுதாகரன் ஆகியோரின் பணி முன்னெடுப்புக்கள் நன்றியறிதலோடு நினைவுகூரப்படுவதோடு முன்னு தாரணமாகக் கொள்ளப்படுகின்றன. தற்பொழுது தலைவராக து. சுகிர்தனும் செயலாளராக சி. இந்துநேசனும் நிர்வாகக் குழுவினரும் காலமாற்றத்துக்கு ஏற்ப சனசமூக பணி முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வருகின்றனர்.

சனசமூக நிலையத்தின் பணி முன்னெடுப்புக்கள் ஊடாக ஜனசக்தி சமூகத்தின் வளர்ச்சிக்கு உழைத்தவர்கள் நன்றியறிதலோடு நினைவுகூரப்படுகின்றனர். நிலையத்தின் ஸ்தாபிதத்துக்கு அயராது உழைத்து ஆடி அமாவாசை தினத்தில் காலமான வை. கந்தசாமியின் நினைவுநாள் ஆண்டுதோறும் விமரிசையாகக் கொண்டாடப்படுகின்றது. அத்துடன் நிலையத்தின் நிர்வாகிகளாக இருந்து அயராது உழைத்து மறைந்தவர்களின் நினைவு தினமும், ஆடி அமாவாசை தினத்தில் ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகின்றது.

உதயன் - 28.07.2011, 28.07.2012, 04.08.2012




# 77 இடைக்காடு மாணிக்க இடைக்காடர் சனசமூக நிலையம்

**வ**லிகாமம் கிழக்குப் பிரதேசத்தில் உள்ள 85 கிராமங்களில் தனித்துவமான சிறப்புவாய்ந்த கிராமம் "இடைக்காடு". கல்வி. விவசாயம் இரண்டும் இரண்டறக் கலந்த நிலையில் உயர்பொருளாதாரக் கட்டமைப்பைக் கொண்ட இந்தக் கிராமம் கடந்த 30 வருடகால யுத்தத்தினால் பெரும்பாதிப்பைச் சந்தித்துள்ளபோதிலும் "மீண்டும் தொடங்கும் மிடுக்கு" என்பதற்கு ஏற்ப முயற்சியால் உயர்ந்து வருகின்றமை அந்த மக்களின் உழைப்பின் பெருமையை எடுத்துக்காட்டுகின்றது.

இந்தக் கிராமம் அச்சுவேலி பஸ் நிலையத்தில் இருந்து வடமேற்குத் திசையில் மூன்று கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது. கிராமத்தின் நுழை வாயிலில் அழகான ஓங்கி உயர்ந்த மாடிக் கட்டடத்தில் நூல்நிலையம், வாசிக சாலை இரண்டும் தனித்தனித் தளங்களில் செயற்பட்டுக் கொண்டிருப்பதுதான் இடைக்காடு மாணிக்க இடைக்காடர் சனசமூக நிலையம்.

இடைக்காடு வாழ் கல்விமான்கள், சமூகப் பிரமுகர்களின் ஒருமித்த சிந்தனையின் செயற்பாடாக 1939 ஆண்டு "இடைக்காடு வாலிபர் சங்கம்" உதயமாயிற்று. இதன் பணிகள் பன்முகப்பட்ட நிலையில் சமூக மேம்பாட்டைக் கருத்திற்கொண்டு

முன்னெடுக்கப்பட்டன. அதன் வெளிப்பாடாக 24.02.1948 முதல் இடைக்காடு சனசமூக நிலையம் என்ற நாமத்துடன் தற்போதைய மாடிக்கட்டடம் அமைந்துள்ள இடத்தில் அமைக்கப்பட்ட சிறிய கொட்டகையில் செயற்படத் தொடங்கியது.

இடைக்காடு வாழ்மக்களின் ஒருமித்த உழைப்பினாலும் பங்களிப்பினாலும் 1954ஆம் ஆண்டு சனசமூக நிலையத்துக்கென நிரந்தரமான கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு அதில் புதிய உத்வேகத்துடன் செயற்படத் தொடங்கியது.

நிலையத்தின் காப்பாளரும் சர்வதேச ரீதியில் புகழ்பெற்ற புள்ளிவிபரவியலாளரும் ஐக்கிய நாடுகள் சபையின் அங்கமான உலக உணவு விவசாய நிறுவனத்தில் உயர்பதவி வகித்தவரும் தனது நாமமாகப் பிறந்த ஊரின் பெயரை இணைத்துக் கொண்டவருமான என். மாணிக்க இடைக்காடரின் மறைவை அடுத்து 1997 ஆம் ஆண்டு முதல் "மாணிக்க இடைக்காடர் சனசமூக நிலையம்" என்ற பெயருடனும் இயங்கி வருகின்றது.

இந்தநிலையில் போஷகரின் பங்குப் பணிகளையும் உலகளாவிய ரீதியிலான அவரது புகழையும் ஊரின் சிறப்பையும் எடுத்துக்காட்டுவதுடன் நன்றியறிதலுக்கு அடையாளமாகவும் விளங்குகின்றது. மறைந்த பேராசிரியர் கே. கைலாசபதி அவர்களின் தாய்மாமன்தான் என். மாணிக்க இடைக்காடர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு சனசமூகநிலையம் தான் இயங்கிவரும் பிரதேச மக்களின் வாழ்வாதாரத்திலும் மேம்பாட்டிலும் எத்தகைய பங்குப் பணிகள் முன்னெடுப்புக்களை மேற்கொள்ளவேண்டுமோ அவற்றையெல்லாம் சிறந்தமுறையில் பூர்த்திசெய்து வலி. கிழக்கில் பாராட்டப்பட்டிருப்பதோடு சனசமூகநிலையத்துக்கு உரிய உயர் விருதையும் பெற்றுச் சேவையால் உயர்ந்து நிற்கின்றது மாணிக்கர் இடைக்காடர் சனசமூகநிலையம்.

1939ஆம் ஆண்டு இடைக்காடு வாலிபர் சங்கம் என்ற பெயரில் தனது பணி முன்னெடுப்புக்களை ஆரம்பித்த இந்த நிலையம் படிநிலை வளர்ச்சியில் பல்துறை சார்ந்த பொதுநல நிறுவனங்களின் அனுசரணையுடன் விவசாயம், விளையாட்டுத்துறை. உள்ளூர் குற்றச்செயல்களைத் தடுக்கும் வகையில் தொண்டர்சபை, சைவ இளைஞர் சங்கம், நூலகம், வாசிகசாலை எனப் பல்வேறு சேவைகளை வழங்கி வருகின்றது. தொழில் உபகரண உற்பத்தி நிலையம் என்ற அமைப்பு ஊடாக விவசாய முன்னெடுப்புக்களுக்கான ஆலோசனை, வளப்படுத்தல்கள், உதவி வழங்கல்கள், ஆய்வு ரீதியிலான அறிவூட்டல். நலன்ஓம்பு நடவடிக்கைகள் என்பனவற்றை முன்னெடுத்துச் செல்கின்றது.

கல்வி முன்னேற்றத்துக்கான செயற்பாடுகள் என்றவகையில் இடைக்காடு மகா வித்தியாலயத்தையும் பிரதேச மாணவர்களையும் கருத்திற்கொண்டு சனசமூக நிலையத்தைக் களமாகக்கொண்டு முன்னெடுத்துவருவதோடு மாணவர்களின் கல்வி முன்னேற்றத்துக்கு உறுதுணையாக இருந்து உதவி வருகின்றது.

ஆத்மீக ஈடேற்றத்துக்கான பணிகளைப் புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தைக் களமாகக்கொண்டு செயற்படுகின்றது. சனசமூக நிலையத்தின் வாசகர்சாலை பொது மண்டபத்தில் மாலை நேரத்தில் கூடியிருக்கும் மூத்த ஓய்வு நிலையாளர்களின் கலந்துரையாடலும் காத்திரமான சந்திப்பும் பல்துறை சார்ந்த சிறப்பான நிகழ்வாகும். இடைக்காடு மக்களின் வாழ்வாதார மேம்பாட்டில் இந்தச் சனசமூக நிலையத்தின் பங்கு பணிகள் பலநோக்குச் சிந்தனையுடன் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன. அதேபோன்று நிலையத்தின் வளர்ச்சிக்கும் மக்கள் தமது உழைப்பில் குறிப்பிட்ட தொகையை வழங்கி வந்துள்ளனர். ஆரம்பகாலத்தில் புகையிலைச் செய்கை, வெங்காயச் செய்கை மேம்பட்டிருந்த காலப்பகுதியில் இவற்றை அறுவடை செய்யும்போது பத்துப் புகையிலைக்குக் குறையாத புகையிலைக் கட்டையும், பெரிய வெங்காயப் பிடியையும் சனசமூக நிலையத்துக்கு அன்பளிப்பாக வழங்குவது என்ற வேலைத்திட்டம் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் முன்னெடுக்கப்பட்டு வந்தது. பின்னர் மிளகாய் மற்றும் விவசாயப் பயிர்கள் உற்பத்திசெய்யப்பட்ட காலப்பகுதியில் அவற்றின் வருவாயில் குறிப்பிட்ட தொகை நிலையத்துக்கு ஒவ்வொருவராலும் வழங்கப்பட்டு வந்துள்ளது.

இவை நிலையத்தின் படிநிலை வளர்ச்சிக்கும் மக்கள் நிலையத்துடன் கொண்டிருந்த இடையறாத தொடர்புக்கும் எடுத்துக்காட்டாகக் கொள்ளப்படுகின்றன. இடைக்காடு மாணிக்க இடைக்காடர் சனசமூக நிலையத்தின் பணிகளை 1970ஆம் ஆண்டு காலப்பகுதியில் இளைஞர் அணி பொறுப்பேற்று உத்வேகத்துடன் செயற்பட்டது.

குறித்த காலப்பகுதிக்குப் பின்னர் ஐக்கிய முன்னணி அரசு திருமதி ஸ்ரீமாவோ பண்டார நாயக்கா தலைமைப் பொறுப்பேற்றதை அடுத்து வெளிநாட்டுப் பொருள்களின் இறக்குமதிக்குத் தடைவிதிக்கப்பட்டது. இதனால் யாழ். மாவட்டத்தில் விவசாயிகளின் உற்பத்திக்கு எதிர்பாராத சந்தைவாய்ப்பும் மவுசும் ஏற்பட்டன.

மிளகாய், வெங்காயம், பீற்றூட் ஆகியவற்றின் உற்பத்தி மேம்பாடடைய நமது விவசாயிகளின் வாழ்க்கை நிலையும் மேம்பட்டது. பெருமளவில் விவசாயக் குடும்பங்கள் தமது சொந்த வருமானத்தில் நிரந்தரமானதும் ஆடம்பரமானதுமான வீடுகளை நிர்மாணித்தனர். தற்பொழுது யாழ். மாவட்டத்தில் உள்ள வீடுகளில் 50 வீதத்துக்குக் குறையாதவை, அந்தக் காலப்பகுதியில் கட்டியெழுப்பப்பட்டவையாகும்.

சாதாரணமாகப் பாடசாலைகளில் விளையாட்டு மைதானங்களே தோட்டங்களாக மாறி மரவள்ளி மற்றும் பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தப்பட்டதும் வீடுகளில் பூச்சாடிகளில் மிளகாய்ப்பயிர் வளர்த்ததும் இந்தக் காலப்பகுதியில்தான்.

இந்தக் காலத்தின் "விவசாய வசந்தத்தை" திட்டமிட்ட முறையில் பயன்படுத்தி இடைக்காடு மாணிக்க இடைக்காடர் சனசமூக நிலையம் தனது உறுப்பினர்கள் மற்றும் அயல் பிரதேசங்களுக்குப் பயன்தரக்கூடிய பல்வேறு பணி முன்னெடுப்புக்களை மேற்கொண்டது.

1977ஆம் ஆண்டு காலப்பகுதியில் மிளகாய்ப் பயிர்களையும், வெங்காயப் பயிர்களையும் புதிய பூச்சி இனங்களும் தண்டு கோதிப்புழுவும் தாக்கத்தொடங்கின. அந்தவேளையில் மாணிக்க இடைக்காடர் சனசமூக நிலையம் எடுத்த முன்னோடி முயற்சி யாழ். மாவட்ட விவசாயிகளுக்குக் கைகொடுத்து உதவியது. இந்தக் கைங்கரியத்தை "வீரகேசரி, தினகரன், டெய்லி மிரர்" உட்பட தேசிய ரீதியிலான பத்திரிகைகள் மூன்றுமொழியிலும் பாராட்டுச் செய்திகள், கட்டுரைகளை வெளியிட்டதோடு விவசாயிகளின் பேட்டிகளையும் பிரசுரித்தன.

சர்வதேச ரீதியிலான ஆய்வுகளுடன் எந்தக் கிருமிநாசினி கொண்டும் அழிக்கமுடியாத தாள் கோதிப்புழுவையும் இலை அரிப்புழுவையும் அந்தப் புழுவினத்தின் குடும்பக் குழுமத்தையும் இல்லாமல் அழிப்பதற்கு ஏற்றவகையில் கொழும்புத் திட்ட நுண்ணுயிர் நிபுணர் றொக்ஸ் போலோஸ் (நியூசிலாந் திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலைய ஆய்வாளர் எம்.கே.ரவல், இடைக்க மற்றும் பிரதேசங்களில் மேற்கொண்ட ஆய்வுகளை அடுத்து "சுமிசிடின், அம்புள ஆகிய இரண்டு கிருமிநாசினிகளும் யாழ். மாவட்ட விவசாயிகளின் பாவனைக்கு அறிமுகம் செய்யப்பட்டன. இதன்மூலம் வெங்காயப் பயிர்களும் மிளகாய்ப் பயிர்களும் காப்பாற்றப்பட்டன.

இடைக்காடு மற்றும் அதனோடு சேர்ந்த அயல் கிராமங்களின் கல்வி மற்றும் வாழ்வாதார மேம்பாடு என்பனவற்றுக்குத் தனது பங்களிப்பை யதார்த்தபூர்வமாக வழங்கிவரும் மாணிக்க இடைக்காடர் சனசமூக நிலையச்சேவை முன்னெடுப்புக்கள் பல்வேறு வகையிலும் பாராட்டப்படுகின்றன. ஏனைய சனசமூக நிலையங்களுக்கு முன்மாதிரியாக உள்ளன. சனசமூக நிலையத்தின் கீழ்தளத்தில் பொது மண்டபமும் வாசகர்சாலையும் மேற்தளத்தில் நூலகமும் செயற்பட்டு வருகின்றன.

மாணிக்க இடைக்காடர் நூலகம் வலிகிழக்குப் பிரதேசத்தில் முதலாவது இடத்தைப் பெறத்தக்க வகையில் செயற்பட்டு வருகின்றது. இதற்கான சான்றாதாரங்களும் முன்வைக்கப்பட்டுள்ளன. நூலகத்துக்குப் பொறுப்பாக நூலகர் ஒருவர் நியமிக்கப்பட்டு

வாரத்தில் முழுநாளும் நூலகம் முழுஅளவில் செயற்பட்டு வருகின்றது. ஆயிரக்கணக்கான தமிழ் ஆங்கில நூல்களைக் கொண்டுள்ள இந்த நூலகம் உடன் உதவும் பகுதி, இரவல் கொடுக்கும் பகுதி என்பனவற்றைக் கொண்டிருப்பதோடு ஒரு பிரதேச சபையின் நூலகத்துக்கு ஒப்பான முறையில் தனது முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வருகின்றது.

நூலகத்தை மக்கள் உரியமுறையில் பயன்படுத்தவேண்டும் என்ற உயர் நோக்குடன் 1991ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் நூலகத்தில் உள்ள சகல நூல்களின் விவரங்களையும் சஞ்சிகைகளின் விவரங்களையும் உள்ளடக்கி சனசமூக நிலையக்கையேடு வெளியிடப்பட்டது. அதன் பிரதிகள் சகல உறுப்பினருக்கும் வழங்கப்பட்டுள்ளன. அந்தக் கையேட்டில் எதிர்காலத்தில் புதிய நூல்களின் பெயர் விவரங்களைக் குறித்துக் கொள்வதற்கு ஏற்றவகையில் தொடர்வுவெற்றுப் பக்கங்கள் பல இணைப்புச் செய்யப்பட்டுள்ளன. அத்துடன் சனசமூக நிலையத்தின் சேவை முன்னெடுப்புக்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்தக் கையேடு B -5 தாள் அளவு கொண்டது. 500 பக்கங்கள் வரையில் உள்ளன. இத்தகைய ஒரு வழிகாட்டல் கையேடு சாதாரண சனசமூக நிலையங்களினால் வெளியிடப்பட்டதில்லை. இதுவும் எடுத்துக்காட்டான முன்னெடுப்பாகும்.

1962ஆம் ஆண்டு மூன்று தினங்கள் தொடர்ந்து திருக்குறள் மாநாடு நடத்தப் பட்டது. 1971 கிராமத்தில் ஏற்பட்ட பெரும் தீ விபத்தை அடுத்து சனசமூக நிலையம் மேற்கொண்ட துரித நடவடிக்கையினால் பொதுமக்களுக்கான பல்வேறு நிவாரணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு மக்கள் இயல்பு வாழ்க்கை நிலைக்குக் கொண்டுவரப்பட்டனர். 1978 சூறாவளியின்போது பொதுமக்களுக்கு நிவாரண முன்னெடுப்புக்களை மேற்கொண்டது. விவசாய அறுவடையின்போது "காவல் தொண்டர் அணி" மூலம் விவசாய அறுவடைகளைப் பாதுகாக்கும் பணியை மேற்கொண்டு வருகின்றது.

1977ஆம் ஆண்டு முதல் நிலையத்தின் காப்பாளராக நா. மாணிக்க இடைக்காடர் செயற்பட்டு வந்துள்ளார். இவரின் அக்கறைமிக்க முயற்சியினால் "சர்வலோக தர்ஷணம்" தாபனத்தின் நிதி அனுசரணையுடன் பயிற்சிபெற்ற 8 தொழில்நுட்பவியலாளர்களைக் கொண்ட தொழிற்கூடம் நிறுவப்பட்டு விவசாயிகளுக்கான கருவி சாதனங்கள் என்றவகையில் மண்வெட்டி தயாரித்தல், கத்தி மற்றும் கருவிசாதனங்கள் உளி, நீர்ப்பம்பி, தெளிகருவிகள் தயாரித்தல் மற்றும் திருத்தி அமைத்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. நியாயமான கட்டணத்தில் மேற்கொள்ளப்பட்டமையால் 2500இற்கும் மேற்பட்ட விவசாயிகள் இதன்மூலம் பயன் அடைந்தனர். இதன்மூலம் தொண்டமானாறு, வசாவிளான் மற்றும் யாழ்.

குடாநாட்டின் பல்வேறு பகுதியிலும் வாழும் ஆயிரக்கணக்கானோர் பயன்பெற்றனர். பிற்காலத்தில் இதன்பணி முன்னெடுப்புக்கள் காலச் சூழலால் தடைப்பட்டன.

செல்வச்சந்நிதி முருகன் ஆலய உற்சவ காலங்களில் நிலையம் அடியார் களுக்கு பல்வேறு வசதி வாய்ப்புக்கள் ஏற்பாடு செய்து வழங்கி வருகின்றது. விளை யாட்டுத்துறையில் நிலையம் மேற்கொண்ட முன்னெடுப்புமூலம் விளையாட்டு ரீதியாக அணிகள் உருவாக்கப்பட்டு இளைஞர்களின் உடல் உள வளர்ச்சிக்கு உதவி வருகின்றது. தாய், சேய்நல மருத்துவ சேவை, சிறுவர் முதியோர்களுக்கான நலசேவைகளையும் சனசமூக நிலையம் சுகாதார மற்றும் மருத்துவ சேவையினரின் ஆலோசனைபெற்று மேற்கொண்டு வருகின்றது. நிலையத்தின் சகோதர அமைப்புக்களாக விவசாய இளைஞர் சங்கம், விளையாட்டுக்கழகம், தொண்டர்சபை, புத்தாக்கக்குழு, இளைஞர் விவசாயக் கழகம், தரிசிக்கும் மருந்தகம் என்பன செயற்பட்டு வருகின்றன.

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற மகுட வாக்கியத்திற்கு அமைய சனசமூக நிலையத்தின் சகல பணி முன்னெடுப்புக்களும் நிலைய எல்லைப் பரப்பின் பல்வேறுபட்ட வளர்ச்சியை நோக்காகக்கொண்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நிலையத்தின் பணிகள் மேலும் தொடர்வதாக.

உதயன் - 17.03.2013, 24.03.2013, 31.03.2013




# 78

## ஞான பாஸ்கரோதய சங்கம் சனசமூக நிலையம்

**வ**லி. கிழக்கில் இருபாலை பழைய வீதி, 3ஆம் கட்டை குறுக்கு வீதியைச் சந்திக்கும் முச்சந்தியில் வீதியோரமாக மேற்குப் பக்கத்தில் அமைந்துள்ளது ஞான பாஸ்கரோதய சங்கம் - சனசமூக நிலையம். ஓங்கி உயர்ந்த பெருமரங்களின் நிழலில் அமைந்துள்ள இந்த விசாலமான கட்டடத்தில் ஞானபாஸ்கரோதய சங்கம் - சனசமூக நிலையம் செயற்பட்டு இதன் உறுப்பினர்களாக உள்ளவர்களுக்கும் ஊரவர்களுக்கும் பல்வேறு விதத்திலும் உதவுகின்றது.

இதில் 423 பேர் பதிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களாக உள்ளனர். 1919ஆம் ஆண்டு பதிவுசெய்யப்பட்ட ஞானபாஸ்கரோதய சங்கத்துடன் இணைந்தநிலையில் ஞானபாஸ்கரோதய சனசமூக நிலையம் 1948இல் பதிவுசெய்யப்பட்டது. ஞானபாஸ்கரோதய இளைஞர் விவசாயச் சங்கம் - 1954ஆம் ஆண்டு பதிவுசெய்யப்பட்டது. அத்துடன் ஞானபாஸ்கரோதய விளையாட்டுக் கழகம், ஞானபாஸ்கரோதய மங்கையர்கழகம், ஞானபாஸ்கரோதய பாலர் முன்பள்ளி என்பவற்றை எல்லாம் உள்ளடக்கி உயர்ந்த நிறுவனமாகத் திகழும் இந்த அமைப்பு வலி.கிழக்கில் உள்ள சிறந்த பொது அமைப்புகளில் ஒன்றாகும்.

வலி. கிழக்கில் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 113 சனசமூக நிலையங்களில் 57 சனசமூக நிலையங்கள் பாலர் பாடசாலையையும் தன்னகத்தே கொண்டு விளங்குவதோடு பாலர் முன்பள்ளிகளில் முன்னணியில் உள்ளவற்றில் ஞானபாஸ்கரோதய பாலர் முன்பள்ளியும் ஒன்று. கிராமங்கள் பிரதேசங்களின் அபிவிருத்தியில் சனசமூக நிலையங்களின் பங்களிப்பு பல்வேறு விதத்திலும் வலியுறுத்தப்பட்டு வருகிறது. இந்தவகையில் வலி.கிழக்கில் உள்ள சனசமூக நிலையங்களின் பங்கு பணியும் காத்திரமான வகையில் உணரப்பட்டுள்ளது.


தற்பொழுது முன்னெடுக்கப்படவுள்ள உட்கட்டுமாண வேலைத்திட்டத்தில் (நெல்சீப்) கிராமங்களின் அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, மயான அபிவிருத்தி மற்றும் மக்கள் சார்புடைய அபிவிருத்தி வேலைகளிலும் பிரதேச ரீதியாக முன்மொழிவுகள் ஆலோசனைகள் சனசமூக நிலையங்கள் ஊடாகப் பெறப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வரும்போது தமது கிராமம் தொடர்பான அபிவிருத்தி முன்னெடுப்புகளை உரியமுறையில் வழங்கி வருவதாக ஞானபாஸ்கரோதய சனசமூக நிலையத்தின் செயலாளர்.த.பாலச்சந்திரன் தெரிவித்தார்.

1 1/2 பரப்பு காணியில் மண்டபம் உள்ளது. அதேவேளையில் பொதுமக்களின் பரிபூரணமான ஒத்துழைப்புடன் 16 பரப்பு விஸ்தீரணத்தில் விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டு விளையாட்டுப் பயிற்சிகளும், ஆண்டுதோறும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியும் நடத்தப்படுவதாகத் தெரிவித்த அவர் கடந்தகால யுத்த அனர்த்தத்தினால் சனசமூக நிலையத்தின் நூல்நிலையம் முற்றாக அழிக்கப்பட்டதோடு, அங்கிருந்த ஆயிரக்கணக்கான புத்தகங்களும் அழிவடைந்து போய்விட்டதாகக் கூறினார்.

புலம்பெயர்ந்த உறவுகளின் உதவியுடன் கொள்வனவுசெய்யப்பட்ட கணினிகளைப் பயன் படுத்தி மாணவர்களுக்குக் கணினி ஆரம்பப் பயிற்சி அளித்து வந்ததாகவும் அண்மையில் அதுவும் தொடரமுடியாமல் போய்விட்டதாகவும் தெரிவித்தார்.

ஞானபாஸ்கரோதய சங்கம் மற்றும் ஞானபாஸ்கரோதய சனசமூக நிலையங்களின் வளர்ச்சி அதனைச்சார்ந்த உறுப்பினர்களின் குடும்பங்களின் வளர்ச்சிக்கு பல்வேறு வகையிலும் உதவி வருகின்றது. கடந்தகால சூழ்நிலையில் எதிர்பார்த்தளவுக்கு சமூக வளர்ச்சியோடு இணைந்த முன்னெடுப்புக்களை மேற்கொள்வதற்கு முடியாதநிலை ஏற்பட்டிருப்பதால் சனசமூக நிலையத்தின் பணிகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே முன்னெடுக்கப்பட்டு வருவதாகச் செயலாளர் த. பாலச்சந்திரன் தெரிவித்தார்.

உதயன் - 20.05.2010, 27.05.2013



# 79 சொந்த மண்ணில் மீண்டும் வளமோடு வாழ்வதற்காக பேராவலுடன் காத்திருக்கும் வளலாய் பகுதி மக்கள்

நீண்டகாலத் தமிழ் பாரம்பரியமும் இந்துப்பண்பாடும் கொண்டு கல்வி வேள்வியால் மூத்த உழைப்பால் உயர்ந்தவர்கள் வளலாய் வாழ் மக்கள். கடந்த 27 வருடங்களுக்கு மேலாக இடம்பெயர்ந்த நிலையில் தமது சொந்தப்பிரதேசத்தில் எப்போது குடியேறுவோம். மீண்டும் வளமோடு வாழ்வோம் என்ற திடமான நம்பிக்கையுடன்கூடிய ஏக்கப்பெருமூச்சுடன் மீள்குடியேற்றத்தை எதிர்பார்த்துக் காத்துக்கிடக்கின்றனர்.

வடக்கின் வசந்தம் வந்தது. புதுவீதிகள் பிறந்தன. பல தேர்தல்கள் முடிந்து உள்ளூராட்சித் தேர்தலும் வந்தது. பல வீதிகள் திறந்தன. எங்களின் வாழ்வில் ஏன் மாறுதல் இல்லை? எப்போது வீசும் புது வசந்தம் என்ற ஏக்கச் சூறாவளி எண்ணக் கனவுகளுடன் மக்கள் உள்ளனர்.

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவின் வடமேற்கு எல்லையில் அமைந்துள்ள வளலாய் கிராமத்தின் வளமான பெரும்பகுதி பாதுகாப்பு அரண்கள். தடுப்பு அரண்கள். முட்கம்பிச் சுருள்களுக்கு உள்ளே முடங்கிக் கிடக்கின்றது.

கண்ணுக்கு எட்டிய தூரம்வரை பச்சைப் பசேல் என ஓங்கி உயர்ந்த மரங்கள் அதன் மண்வளத்தைப் புலப்படுத்துவதைப் பார்த்து ஏங்குகின்றனர் வளலாய்ப் பகுதி மக்கள். இன்று 25 வயதை நிறைவுசெய்து ஏங்கி நிற்கும் இளைஞர்களுக்கு தமது சொந்த இடத்தின் நிழல்கூடப் படவில்லை.

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் உள்ளடங்கும் வளலாய் கிராமத்தின் வளலாய் மேற்கும் வளலாய் வடக்கும் கிராம அலுவலர் பிரிவு ஜே/284. ஜே/283

என்ற இரண்டு பிரிவுகளிலும் உள்ளடங்குகின்றன. ஜே/284 கிராம அலுவலர் பிரிவு வளலாய் கிராமத்தை முழுமையாகவும், ஜே/283 கிராம அலுவலர் பிரிவு வளலாய் வடக்கையும் இடைக்காடு கிராமத்தையும் உள்ளடக்கியதாக உள்ளது.

தற்போதைய உள்ளூராட்சி அமைப்பான பிரதேச சபைக்கு முந்திய உள்ளூ ராட்சி அமைப்பாகிய அச்சுவேலி கிராம சபையின் 6ஆம், 7ஆம் வட்டாரங்களை உள்ளடக்கியது. நீண்டு பரந்த நிலவளமும், நீர் வளமும் கொண்டது. செம்மண், மணல்மண், இருவாட்டி மண், கிரவல்மண், வண்டல் நிறை குளமண் எனப் பல்வேறு வகையான மண்வளம் கொண்டது. நெய்தலும் மருதமும் இணைந்த வளம்கொழிக்கும் கிராமம்.

வளலாயின் மேற்கு எல்லை வலி. வடக்கு (தெல்லிப்பழை) பிரதேச செயலர் பிரிவு. கிழக்கு எல்லை இடைக்காடு கிராமமும் யாழ். குடாக்கடல் நீர் ஏரியும். வளலாயின் வடக்கு எல்லை வடகடல் என மக்களால் அழைக்கப்படும் பாக்குநீரிணை, தெற்கு எல்லை பத்தமேனி, தம்பாலை கிராமங்கள்.

வளலாய் கிராமத்தின் இன்றைய நிலைக்கும், கடந்த 27 வருட பாதிப்புக்களுக்கும் காரணமாக இருப்பது கிராமத்தின் மேற்கு எல்லையில் பாதுகாப்புத் தரப்பினரின் பலாலி படைத்தளமும், பலாலி விமான நிலையமும் அமைந்திருப்பதுதான். அத்துடன் வடக்கு எல்லையில் வட கடலான பாக்குநீரிணையும் அமைந்திருப்பதும் இதற்குக் காரணம். வளலாய் கிராமத்தின் வடக்குப் பகுதியை பலாலி வீதியும் தெற்கு எல்லையை ஊடறுத்து விமான நிலைய வீதியும் செல்கின்றன. மனிதனின் வாழ்வியலில் கிராமங்களின் அமைவு எத்தனை தாக்கத்தை ஏற்படுத்துமோ அதேபோன்று வளலாய் கிராமத்தின் அமைவிடம் அங்கு பரம்பரை பரம்பரையாக வளமோடு வாழ்ந்து வந்த பல நூற்றுக்கணக்கான குடும்பங்களின் நல்வாழ்வில் துன்ப துயரங்களை உண்டாக்கி நிலை தளம்ப வைத்துவிட்டது.

பாதுகாப்பு அரணுக்கு வெளியே உள்ள வளலாய் கிராமத்தின் சமகால அமைப் பைப் பார்ப்போர் கண்ணீர்விட வேண்டும். நிரந்தரமான கல்வீடுகள் எதனையும் காணமுடியாது. நூற்றுக்கணக்கான சேதமடைந்த வீடுகளின் அடித்தளத்தை மட்டும் கண்டுகொள்ளமுடியும். வீடுகளின் எச்சமிச்சங்கள் கற்குவியலாகக் காட்சி யளிக்கின்றன. வீடுகளின் சிதைவடைந்த சுவர்களைக் காணலாம். கூரையைக் காணமுடியாது.

வளலாய் கிராமத்தின் கல்விக்கு வளம்சேர்ந்த நூற்றாண்டுக் கல்விப் பாரம்பரியத்தைக் கொண்ட வளலாய் அமெரிக்கன்மிஷன் பாடசாலையின் அடித்தளம்கூட சிதைவடைந்த நிலையில் காணப்படுகின்றது. இருக்கின்ற ஒரு சில குடிசை வீடுகளும் தப்பிப்பிழைத்த கல்வீடுகளும் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நிரந்தர வீடுகளும் பெரும்பகுதி வேலி மறைப்புக்கள் இன்றி திறந்தவெளிக் குடியிருப்பாகவே உள்ளன. வளலாய் கிராமம் வளம்கொண்ட பிரதேசம் மட்டுமல்ல பலரின் நல்வாழ்வுக்கு வளம்சேர்க்கும் பகுதியாகவும் விளங்கியது. இந்த வகையில் வளலாய் கிராமத்தின் வடக்குப் பகுதியை ஊடறுத்துச் செல்லும் தொண்டைமானாறு பலாலி நெடுஞ்சாலைக்கு வடக்குப் பக்கமாக வடகடலுக்கு இடையே உள்ள ஒடுங்கிய நீண்ட பிரதேசம் சுகஸ்தலங்கள் பலவற்றை உள்ளடக்கியதாக இருந்தது. இந்த வசதி வாய்ப்புக்கள் 1985ஆம் ஆண்டு காலப்பகுதியோடு அற்றுப் போகத் தொடங்கின.

யாழ். மாவட்டத்திலேயே தலைசிறந்த விருந்தினர் விடுதி ஒன்றும் உல்லாசப் பயணிகளின் விருப்பத்துக்கு உரியது என அறிமுகம் செய்யப்பட்டதுமான "பாம் பீச் ஹோட்டல்" அமைந்திருந்தது. இது யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல இலங்கையிலேயே தலைசிறந்த விடுதிகளில் ஒன்றாகக் குறிப்பிடப்பட்டது. இது யாழ்ப்பாணம்வரும் வெளிநாட்டவர்களின் மற்றும் வசதிபடைத்த தலைவர்களின் வசிப்பிடமாகவும் விளங்கியது. இதனை நிறுவி நிர்வகித்தவர் அச்சுவேலி அச்சு நகரைச் சேர்ந்த தனவந்தர் ஏபிரகாம் காடினர் சேர் சிற்றம்பலம். அவரின் யாழ். வாசஸ்தலமாக இது விளங்கியது.

யாழ். நகரத்தின் வர்த்தகப் பிரமுகரும் வளலாய் கிராமத்தில் திருமணம் முடித்த வருமான ப.சி.ஐயாத்துரை உருணி என அழைக்கப்படும் நன்னீர் ஊற்றுக்கு அருகில் ஆடம்பர மாளிகை ஒன்றை அமைத்து அங்கேயே வாழ்ந்து வந்தார். யாழ். மறைமாவட்டத்தின் ஆயர்இல்லமும் அந்தக் காலப்பகுதியில் இந்தப் பிரதேசத்தில் அமைந்திருந்தது. அதில் புனித வளனார் சனசமூக நிலையமும் நூலகமும் செயற்பட்டதுண்டு. அங்கு தங்கியிருந்து தமிழ்த்தூது வணக்கத்துக்கு உரிய பிதா தனிநாயகம் அடிகளார் தமிழ்ப் பணியும் அருள்மறைப் பணியும் ஆற்றியதுண்டு.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் புகழ்பூத்த அதிபர்களில் ஒருவரான நைல்ஸ் வளலாய் கடற்கரையின் அழகால் கவரப்பட்டு விசாலமான காணியை கொள்வனவுசெய்து அதில் அழகானவீட்டை நிர்மாணித்து அமைதியாக வாழ்ந்து வந்தார். இந்தவகையில் வசதிபடைத்த அமைதியை விரும்பிய தலைவர்களின்

வாசஸ்தலமாகவும் விளங்கிய அழகிய கடற்கரை. வளலாய் கடற்கரை கடலை அண்டிய பிரதேசம் முழுவதும் ஓங்கி உயர்ந்த தென்னை மரங்கள் நிறைந்த தோப்பாகக் காணப்பட்டது.

கடல் வளத்தைப் பயன்படுத்த விரும்பிய மயிலிட்டி, கதிரிப்பாய், வளலாய் பகுதி மீனவர்கள் வாடிவீடு அமைத்து வருடம் முழுவதும் தொழில் செய்தனர். நூற்றுக் கணக்கான சம்மட்டியரின் கீழ் ஆயிரக்கணக்கான மீனவர்கள் தொழில்புரிந்து தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தினர். மாமிசப் பிரியர்களின் விருப்பத்துக்குரிய சுவைமிக்க நண்டு, இறால், சிங்க இறால் உள்ளிட்ட பல்வேறு வகையான மீன் வகைகள் இரவிலும் பகலிலும் மீனவர்களால் பிடிக்கப்படுவதும் உண்டு. இவை உள்ளூர் பாவனையை நிவர்த்தி செய்து வெளிமாவட்டங்களுக்கும் சென்றன.

இலங்கைக்கும் - இந்தியாவுக்கும் இடையே இயல்பு வழி கடல்பயணம் நடை பெற்ற காலப்பகுதியில் மரியன் எல்லையில் அமைந்துள்ள வளலாய் துறை ஊடாகப் படகுப் போக்குவரத்து நடைபெற்றதுண்டு. தமிழ் நாட்டுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையே ஒரு சிலமணிநேரத்தில் பயணப் பரிமாற்றங்கள் நிறைவு பெற்றதுண்டு. இந்தவகையில் வளலாய்த்துறை பிரபல துறையாக விளங்கியது. கடற்கரையில் இருந்து கடல்நீர் தரைப்பகுதிக்கு உள்ளே வராமல் அமைக்கப்பட்ட மண்பிட்டி அணை கொற்றவன் பிட்டி என அழைக்கப்படுகின்றது. இந்த அணையை அமைப்பதற்கு மண் அகழப்பட்ட இடம் இந்துப் பள்ளம் என்று அழைக்கப்படுகின்றது. இது பண்டைக்கால அரண் அமைப்பு முறையில் அமைந்துள்ளது. இதனை பாண்டிய மன்னர்கள் அமைத்ததால் கொற்றவன் பாண்டியன் பிட்டி என அழைக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது.

நெய்தலும், மருதமும் இணைந்த வளலாய் பிரதேசம் இன்று அந்த இயல்புகளை இழந்து மக்கள் நடமாட்டம் இல்லாத முல்லை நிலமாக சோபை இழந்து காணப் படுகின்றது.

பல்வேறு வகையிலும் வளம்கொண்ட பகுதியாக விளங்கிய வளலாய் பிரதேசம் கடந்த 1985ஆம் ஆண்டு காலப்பகுதியோடு செழிப்பிழந்து பாலைவனமாகக் காட்சியளிக்கின்றது.

கண்ணுக்கு எட்டிய தூரம்வரை பச்சைப் பசேலென ஓங்கி உயர்ந்த மரங்கள் நிறைந்த சோலைக்காடாகக் காணப்படுகின்றது வளலாய் வடக்கு, வளலாய் மேற்குப்

பகுதியின் பெரும் பகுதி. இந்தப் பகுதியில் வாழ்ந்த மக்கள் மீண்டும் எப்போது தமது சொந்த வாழ்விடங்களில் கால்பதிப்போம் என ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் தமது மீள்குடியேற்ற உரிமையை வலியுறுத்தி கடந்த 15 வருடங்களுக்கு மேலாக எழுத்து மூலமும் நேரடியாகவும் பல்வேறு கோரிக்கையை விடுத்தபோதிலும் சம்பந்தப்பட்ட கோரிக்கை சாதகமாகப் பரிசீலிக்கப்படவில்லை எனக் கூறிக் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தப் பகுதியில் அமைந்துள்ள ஆலயங்கள் பலவும் புனரமைப்புச் செய்யப்படாமலும் உரியமுறையில் உற்சவங்கள், பூஜை வழிபாடுகள் இன்றியும் காணப்படுவதாகக் கூறப்படுகின்றது. இங்குள்ள வளலாய் கடற்கரை முருகன் கோயில், வளலாய் காளிகோயில், வளலாய் வைரவர், வளலாய் பிள்ளையார் கோயில் உள்ளிட்ட பத்துக்குமேற்பட்ட ஆலயங்கள் உரியமுறையில் பராமரிக்கப்படாமல் இருப்பதாகவும் கவலை தெரிவிக்கின்றனர். வளலாய் பாரதி சனசமூக நிலையம் நூறு வருடங்களுக்கு மேற்பட்டது. ஆரம்ப காலத்திலேயே நூல்கள் இரவல் கொடுக்கும் பகுதி உட்பட பல்வேறு பகுதிகளுடன் செயற்பட்டது. ஆயிரக்கணக்கான அரிய நூல்களைக்கொண்ட அந்த நிலையத்தைப் பயன்படுத்திக் கல்வியால் முன்னேறிய முதியவர்கள், தாம் உயிர் வாழும் காலத்தில் மீண்டும் அதனைப் பழைய நிலைக்குப் புனரமைப்புச் செய்யவேண்டும். தமது இளைய தலைமுறை உரிய முறையில் பயன்படுத்தி முன்னேறவேண்டும் என்ற எண்ணப்பாட்டுடன் காத்திருக்கின்றனர். வளலாயைச் சேர்ந்த வயது 83 உடைய முதியவர் ஒருவர் "இந்தக் காத்திருப்பு இறுதிக்கால ஏக்கப்பெருமூச்சு" எனக் கூறினார். வளலாய் மேற்கைச் சொந்த இடமாகக் கொண்ட எஸ். பாலசுப்பிரமணியம் (வயது 70) கூறியபோது,

"எனது இறுதிக்காலத்தில் நானும் பிறந்த இல்லத்தை ஒரு தடவை பார்த்து விடமுடியுமா? என்ற பெருவிருப்போடு காத்துக் கிடக்கின்றேன். கடந்த 15 வருடங்களாக மீளக்குடியமர்வு தொடர்பாகப் பாதுகாப்புத் தரப்பை சிவில் நிர்வாகத் தரப்பை பல்வேறு வகையில் சந்தித்த போதிலும் காரியம் கைகூடவில்லை. இறுதியாகத் தொண்டமானாறு செல்வச்சந்நிதி, அச்சுவேலி வீதி திறப்புவிழா நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மேடையில் வாக்குறுதி வழங்கினார். "வலி.கிழக்கில் வலியுறுத்தப்பட்ட அச்சுவேலி சந்நிதி வீதி திறப்பு, வளலாய் வடக்கு மேற்கு மீள்குடியமர்வு, இரண்டில் ஒன்று இன்று நிறைவேறுகின்றது. மீள்குடியமர்வும் விரைவில் நடைபெறும்" என்றார்.

இதுவரை நடைபெறவில்லை. உள்ளூராட்சித் தேர்தலும் முடிந்துவிட்டது. இனி எப்போது என ஏக்கப் பெருமூச்சுடன் கூறிய அவர் "இதுவரை ஒன்பது இடங்களில் குடியிருந்துவிட்டேன். தற்போது இடைக்காட்டில் குடியிருக்கின்றேன். நிச்சயமாக மீளக்குடியமர்வேன்" எனக் கூறினார்.

இடம்பெயர்ந்த நிலையில் ஆவரங்காலில் வசித்துவரும் 65 வயது முதியவர் கே. நாயகம் வளலாய் மீளக்குடியமர்வு தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில்: "கடந்த 27 வருடங்களுக்கு மேலாக 10 இற்கு மேற்பட்ட இடங்களில் குடியிருந்து நிரந்தர தொழில்வாய்ப்பின்றி 10 லட்சம் ரூபா வரையில் கடன்காரனாக வாழ்ந்து வருகின்றேன். எனது சொந்த இடத்தில் மீளக்குடியமர்ந்து மீண்டும் விவசாய நடவடிக்கையில் முழுமூச்சுடன் ஈடுபட்டால் எனது கடன் தொல்லையை முற்றாகத் தீர்க்கமுடியும் என்ற திடமான நம்பிக்கையுடன் காத்திருக்கிறேன்" எனக் கூறினார். சம்பந்தப்பட்ட மக்கள் கடந்த கால இழப்புக்களை எல்லாம் மறந்து தாங்கள் மீண்டும் தமது சொந்த இடத்தில் மீளக்குடியமர்ந்து நிம்மதியாக வாழவேண்டும் என்ற பெருவிருப்புடன் வாழ்ந்து வருகின்றனர். வளலாய் வாழ்மக்களின் எண்ணங்கள் நிறைவேற, அவர்களின் வாழ்வு சிறக்கப் பிரார்த்திப்போமாக.

உதயன் - 21.07.2011, 28.07.2011, 04.07.2011



# 80 குதிரையின் காற்றடம் போலக் காட்சியளிக்கும் சங்கிலி மன்னன் நீராடிய கோப்பாய் குதியடிக்குளம்

**யா**ழ்ப்பாண இராச்சியத்துக்கும் வலி. கிழக்குக்கும் நெருக்கமான தொடர்புகள் உண்டு. யாழ்ப்பாண இராச்சியத்தின்போது தமிழ்நாட்டிற்குச் செல்வதற்குப் பாக்குநீரிணை வழியாகக் கடல்வழிப் படகுச்சேவை இடம்பெற்றது. இதன் காரணமாக இருபகுதி மக்களிடையேயும் குடும்ப உறவு மிக நெருக்கமாக இருந்தது.

வலி. கிழக்கின் வடக்கு எல்லையில் பாக்குநீரிணைக் கடல் இருப்பதால் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிசெய்துவந்த யாழ்ப்பாண இராச்சிய மன்னர்கள், பிரதானிகள் என்போர் தமிழ்நாட்டுக்கு நாளாந்தம் சென்று திரும்பியதும் குடும்ப உறவுகளைத் தமிழ்நாட்டுடன் நிலைநிறுத்தி இருந்ததும் வரலாற்று உண்மையாகும்.

நல்லூரின் வடக்குப் புறமாக அமைந்துள்ள வலி. கிழக்குப் பிரதேசம் தமிழ் மன்னர்களின் பாதுகாப்புக்கும் அந்தரங்க அரசியல் நடவடிக்கைகளுக்கும் ஏற்புடையனவாகவும் பாதுகாப்பானவையாகவும் இருந்து வந்துள்ளன. இந்தவகையில் வலி. கிழக்கில் உள்ள புராதன ஆலயங்கள் தமிழ் மன்னர்களின் நம்பிக்கைக்குரிய வழிபாட்டுத் தலங்களாகவும் நேர்த்திகளை நிறைவுசெய்யும் புனித இடங்களாகவும் திகழ்ந்துள்ளன.

நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் கோயில் நிறுவப்பட்டமையும் அதன் பூசை வழிபாடுகளில் யாழ்ப்பாண இராச்சியத் தமிழ் மன்னர்களும் அமைச்சர்களும் பிரதானிகளும் கலந்துகொண்டு வழிபட்டு வந்தமையும் வரலாற்று ஆதாரங்களால் நிரூபணமாகின்றன. நல்லூர்க் கந்தசாமி கோயிலின் மேற்கு வீதியில் இருந்து வடக்கு நோக்கிச் சென்று அச்சுவேலியில் முடிவடையும் "இராசவீதி" யாழ்ப்பாணத் தமிழ் மன்னர்களின் அந்தரங்க வழிப்பாதையாக உபயோகிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் இருந்து தமிழ்நாட்டிற்குச் செல்வதற்கும் இந்த வீதி பயன்படுத்தப்பட்டது. மன்னர்களின் பயன்பாட்டில் இருந்தமையால்தான் "இராச வீதி" என்ற நாமம் வந்ததாகவும் கூறப்படுகின்றது. யாழ்ப்பாண மன்னர்கள் தமது பாதுகாப்புக் கருதி பல மறைவிடங்களைக் கொண்டிருந்தனர். கோப்பாய் "மாவடி வளவு" இது அவர்களது விசுவாசமான பயன்பாட்டுக்குரிய இடமாக விளங்கியது. மாவடி வளவில் சங்கிலி மன்னன் தங்கியிருக்கும் சந்தர்ப்பங்களில் நீராடுவதற்குப் பயன்படுத்திய தடாகமே குதியடிக்குளம் ஆகும்.

குளத்தின் வடிவமைப்பு குதிரையின் கால் அடிக் குளம்புபோல் காணப்படுவதால் அதற்கு "குதியடிக்குளம்" எனப் பெயர் வந்ததாகக் கூறப்படுகின்றது. குதியடிக்குளம் யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியில் கோப்பாய்ச் சந்திக்கும் பிரதேச செயலகத்துக்கும் இடையே வீதிக்குக் கிழக்குப் புறமாக இருக்கும் பரந்த பிரதேசத்தை உள்ளடக்கிய கோப்பாய் சந்திக்கு வடக்குப் பக்கத்தில் அமைந்துள்ள உணவகத்துக்கு முன்பாகக் கிழக்கு நோக்கிச் செல்லும் ஒழுங்கையில் 150 மீற்றர் தூரத்தில் தாமரைகள் நிரம்பிய தடாகமாகக் காணப்படுகின்றது.

குதியடிக் குளத்தைச் சூழவுள்ள பிரதேசம் மக்கள் இயல்பு நிலையில் நடமாட முடியாதவாறு முட்புதர்களால் சூழப்பட்டுக் காணப்படுகின்றது. தற்பொழுது கால்நடைகள் நீர் அருந்துவதற்கு ஏற்றவகையில் மறுசீரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. முக்கால் வட்ட வடிவமாகக் குதி அமைப்பில் சீமெந்தினால் சுவர் அமைக்கப்பட்டு 2004ஆம் ஆண்டு கமநலசேவைத் திணைக்களத்தினால் நீர்ப்பாசனக் குளங்கள் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. நீர் வளமும் நிலவளமும் கொண்ட இந்தப் பிரதேசம் புதர் மண்டிக் காணப்படுகின்றது. யுத்த நடவடிக்கைக்கு உட்பட்ட பிரதேசமாக இருந்தமையால் அந்தப் பிரதேசம் பாதுகாப்புக்குட்பட்டதாகவும் இருந்தது. அண்மைக் காலத்தில் இந்த இடத்தில் வெடிகுண்டுகள் அகற்றப்பட்டுள்ளபோதிலும் பொதுமக்களின் இயல்பான பயன்பாட்டுக்கு உட்படுத்தப்படாமல் புதர் மண்டிக் காணப்படுகின்றது. அங்கு சமகாலச் சந்ததியினர் அறியவேண்டிய வரலாற்று உண்மைகள் பல மறைந்து கிடக்கின்றன.

யாழ்ப்பாண இராச்சிய மன்னர்களின் தலைநகரான நல்லூருக்கு வடக்குப் பக்கமாக அமைந்திருந்த வலி.கிழக்குப் பிரதேசம் மன்னர்களுக்கு வளம்சேர்க்கும் பெருநிலப்பரப்பாக அமைந்திருந்தது. வலி.கிழக்கின் கிழக்கு எல்லையான குடாக்கடல் நீரேரியில் உப்பும் அதை அண்டிய தாழ்நிலங்களில் பெருமளவில் செந்நெல்லும் விளைந்தன. அதை அடுத்த பிரதேசங்களில் தென்னையும் மேட்டுநிலங்களில் பல்வேறு வகையான உணவுப் பயிர்களும் செய்கை பண்ணப்பட்டு. வளங்கொழிக்கும் பிரதேசமாக விளங்கியது. யாழ்ப்பாண இராச்சியத்தில் அமைந்துள்ள சைவக் கோயில்களில் பூசை வழிபாடுகளைச் செய்வதற்கும் மன்னர்களின் யாகங்கள் மற்றும் ஹோமங்களை நிறைவுசெய்வதற்கும் அந்தணர்கள் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டு வளமான வசதியான இடங்களில் குடியமர்த்தப்பட்டனர். அவ்வாறு குடியமர்த்தப்பட்ட அந்தணர் குடியிருப்பு குதியடிக் குளத்தை உள்ளடக்கிய பிரதேசத்தில் இருந்ததாகக் கூறப்படுகின்றது.

கோப்பாயில் விசாலமான பிரதேசத்தை உள்ளடக்கிய "பிராமணக் குடியிருப்பு" அமைந்திருந்தது என்பதற்கு ஆதாரமாக இன்றும் அந்தணர் பெயர் விளங்கும் "பிராமண ஓடை", "குருக்கள் குடியிருப்பு", குருக்கள் ஒழுங்கை" போன்ற பெயர்கள் தற்பொழுதும் வழக்கில் உள்ளன. அத்துடன் அந்தப் பகுதியில் உள்ள காணிகளின் பெரும்பகுதி அந்தணர்களுக்குச் சொந்தமாக இருந்தன. சமகாலத்திலும் சில பிராமணக் குடும்பங்கள் குடியிருப்பது அவதானிக்கத்தக்கது.

இந்தப் பகுதியில் அமைந்திருந்த ஆலயங்களின் பூசகர்களாக இருந்த அந்தணர்களின் சந்ததியினர் இந்துக்களுக்கான கிரியைகளை மேற்கொண்டனர். இந்தப் பிரதேசங்களில் அமைந்திருந்த வைரவர், நாச்சிமார், காளி அம்மன், வீரபத்திரர் ஆலயங்கள் மன்னர்களின் வீரம் சார்ந்த செயற்பாடுகளை முன்னெடுக்கும் களங்களாகவும், போர் வீரர்கள் பயிற்சிபெறும் இடங்களாகவும் விளங்கின எனக் கூறப்படுகின்றது. அந்தணர்களுக்கும் மன்னன் சங்கிலியனுக்கும் நெருக்கமான தொடர்பு இருந்தமையினால் குதியடிக்குளம் சார்ந்த குடியிருப்பில் பாதுகாப்புக் கருதி மன்னன் வந்து தங்கியிருந்து செல்வதாகவும் தங்கியிருந்த காலங்களில் குதியடிக் குளத்தை நீராடும் தடாகமாகப் பயன்படுத்தியதாகவும் கூறப்படுகின்றது. சங்கிலி மன்னனின் பாவனைக்கு உரியது என்பதை வேறுபடுத்திக் காட்டுவதற்காகவும் அதனை நினைவுகூரவும் குதியடிக் குளத்துக்குச் செல்லும் ஒழுங்கையில் "வளைவு" அமைக்கப்பட்டதாகவும் அது பிற்காலத்தில் சேதமடைந்ததாகவும் கூறப்படுகின்றது.

குதியடிக் குளத்தோடு சேர்ந்த அயல் பிரதேசங்களை நேரில் சென்று அவதானித்தால் பெருமளவில் செங்கல் மேடுகள், அகழிகள் காணப்படுகின்றன. இதன்மூலம் இந்தப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த கட்டடங்கள் செங்கல் கொண்டு

நிர்மாணிக்கப்பட்டிருந்தமையும் அவற்றின் அழிபாடுகள்தான் செங்கல் மேடுகள் என்பதையும் வெளிப்படையாகக் கண்டுகொள்ளக்கூடியதாக உள்ளது.

1987ஆம் ஆண்டு இந்திய அமைதிப்படை யாழ் - பருத்தித்துறை பிரதான வீதியூடாக யாழ். நகர் நோக்கி முன்னேறியபோது குதியடிக் குளத்துடன் சேர்ந்த பகுதியில் பெரும் எதிர்ப்பைச் சந்திக்க நேர்ந்ததால் அந்தப் பிரதேசம் பெரும் தாக்குதலுக்கும் சேதத்திற்கும் உள்ளாகியது. அங்கு அமைந்திருந்த பழைய கட்டடத்தொகுதிகள் மற்றும் வீடுகள் அனைத்தும் முற்றாகச் சேதமாக்கப்பட்டு தரைமட்டமாகின என்று கூறப்படுகின்றது.

தற்போதும் இந்தப் பகுதியில் மக்கள் முழுமையாக மீளக்குடியேறவில்லை. யுத்த அழிபாடுகளுடன் முழுமையாக புதர் மண்டிய பிரதேசமாகக் காணப்படுகின்றது. இங்கு கால்நடைகளின் நடமாட்டத்தைத்தான் கண்டுகொள்ள முடிகின்றது. “குதியடிக்குளம் நன்னீர்த் தடாகமாக இருப்பதால் அதனைப் பயன்படுத்தி அந்தப் பிரதேசத்தில் மீண்டும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ள போதிலும் அவை இதுவரையும் செயல்வடிவம் பெறவில்லை” எனக் கிராம அலுவலர் செ.தி. வரதராசன் தெரிவித்தார்.

தமிழர் வரலாற்றுப் பின்னணியுடன் கூடிய குதியடிக்குளம் வரலாற்றுச் சின்னமாகப் பேணிப் பாதுகாக்கப்படுவதோடு அந்தப் பிரதேசம் மீண்டும் வளம்பெற வேண்டும்.

உதயன் - 05.05.2011, 12.05.2011



# 81 வல்லை பரவைக்கடல் மீன்பிடி

வலி. கிழக்குப் பிரதேச செயலர் பிரிவின் கிழக்கு எல்லையாகத் தம்பாலையில் இருந்து செம்மணிவரை விரிந்து கிடப்பது வல்லை பரவைக்கடல். இவ்வல்லைப் பரவைக் கடலில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பிடிக்கப்படும் இறால், நண்டு, மீ வகைகளின் தனிச்சுவை அதனை உண்டு மகிழ்ந்தவர்களுக்கு மட்டும்தால தெரியும்.

வல்லைப் பரவைக்கடலில் பிடிக்கப்படும் உவர் நீருணவை என்ன விலை கொடுத்தும் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதை அச்சுவேலி தெற்கு நெருப்புழுட்டி கள்ளுத்தவறணை முன்றலில் மாலை வேளையில் காத்திருக்கும் மக்கள் கூட்டத்தின் தொகையைக் கொண்டே அதனை உண்ணாதவர்கள் ஊகித்து அறிந்துகொள்ளமுடியும்.

வலைவீசியும், கண்டி எனக் கூறப்படும் வேலி மறிப்பில் மீன் கூடு வைத்தும் வலைவிரித்தும் தூண்டில் போட்டும் அத்தாங்கு என்று கூறப்படும் வலைக்கூடையால் வாரியும் பிடிக்கப்படும் வெள்ளை இறால், சருக்கன் இறால், நரப்பு இறால், நண்டு, மீன்வகைகள் வருடத்தில் முழுநாளும் வல்லைப் பரவைக்கடலில் பிடிக்கப்படுவது உண்டு. பரம்பரைக் கடற்றொழிலாளர் அல்லாதவர்கள் இந்த மீன்பிடித்தொழிலைப் பகுதிநேரத் தொழிலாக மேற்கொள்ளுவது உண்டு. இந்தவகையில் அவர்கள்

நாளாந்தம் கணிசமான வருமானத்தைப்பெற்று வருகின்றனர். அச்சுவேலி நெருப் பமூட்டியில் மாலை வேளையில் அலுவலகக் கடமை முடிந்து வீடுசெல்லும் அரச அலுவலகர்களும் தவறணைக்கு மது அருந்த வருபவர்களும் பொதுமக்களும் காத்திருந்து வாங்கிச்சென்று இரவு உணவுக்குப் பயன்படுத்துவர். இந்தவகையில் பிரதான வீதியோரத்தில் பெரும் கூட்டம் கூடிநிற்பதும் இங்கு மீன் விற்பதும், மீன்வாங்குவதும் தனிரகம். அத்துடன் மதுபோதையில் மீன் வியாபாரத்தில் தலையீடும், தரகும் தனியழகும். ஒருவித இரசனையோடு கூடியதாகவும் இருக்கும்.

வல்லைப் பரவைக்கடல் என்பது மாரியில் பாக்கு நீரிணையில் இருந்து தொண்டைமானாறு குடாக்கடல் நீரேரி வல்லைப்பாலத்தைக் கடந்து கிழக்கே வடமராட்சி கிழக்கு நோக்கி மருதங்கேணிவரை செல்லுகின்றது.

தெற்கே செம்மணிவரை பரந்து நாவற்குழி கைதடிப்பாலத்துக்கு ஊடாக ஆனையிறவு வரை செல்கின்றது. கோடையில் இதன் அளவு குறைவடையும், இதில் வல்லைப் பாலத்துடன் இணைந்தநிலையில் உள்ள குறிப்பிடத்தக்களவு பிரதேசமே வல்லைப் பரவைக்கடல் என்றவகையில் நோக்கப்படுகின்றது.

இங்கே பிடிக்கப்படும் இறால், மீன், நண்டு வகைகள் வடமராட்சி கிழக்கு கண்டல் காட்டு சதுப்புநீரில் உற்பத்தியாகி வல்லைப் பரவைக்கடலில் வளர்வதால்தான் அதன் சுவை தனிரகம் எனக் கூறப்படுகின்றது. இதில் உண்மை இல்லாமல் இல்லை.

வல்லைப் பரவைக்கடலில் பகுதிநேர மீன்பிடித் தொழிலில் நூறுபேருக்குக் குறைவான எண்ணிக்கையானோர் ஈடுபடுவது உண்டு. கண்டிவேலி மறியல் மூலம் மீன்பிடிப்பது என்பது ஒருவகையில் கைத்தொழில் முயற்சியாகும். தென்னோலை வேலியால் மறியல் செய்து தென்னை ஈர்க்குமூலம் செய்யப்படும் மீன்பிடிப்பதற்கான கூடு (கெம்மின்) வைத்து பிடிப்பது இந்த முயற்சியாகும். வேலியைக் கண்டு ஒதுங்கிச் செல்லும் மீன், இறால், நண்டு வகை கெம்மின் கூட்டுக்குள்ளே செல்லும். கூட்டுக்குள்ளே சென்ற உயிரினங்கள் மீண்டும் இயல்பு நிலையில் திரும்பிட முடியாது. இந்த நிலையில் அதனை வைத்தவர் உரியநேரத்தில் கூட்டைத் திறந்து உள்ளே இருப்பவற்றைக் கூடையில் நிரப்பிக் கொள்வார். இங்கே இறால், நண்டு, மீன் வகை பிடிப்பதும் அவற்றின் சுவையும் தனித்தனி ரகம்தான்.

வல்லைப் பரவைக்கடலில் பெரும்பகுதி மாரிகாலத்தில் கடலாகவும் கோடையில் மேய்ச்சல் தரவையாகவும் காணப்படும் நிலப்பரப்பாகும். வருடத்தில் பெரும்பகுதி உவர் நிலமாகவும் வைகாசி, ஆனி மாதங்களில் உப்பு விளை நிலமாகவும் விளங்கும். இயற்கையான நிலவுருவம் அதன் சுற்றாடலில் உள்ளவருக்கு கணிசமான அளவு வருமானம்தரும் தொழில் வாய்ப்பையும் மாமிசப் பிரியர்களுக்கு

மாறுபட்ட சுவையுடன் கூடிய கடல் உணவு வகைகளையும் வழங்கி வருவது இயற்கையின் கொடையாகும்.

வல்லைப் பரவைக்கடல் மீன்பிடியில் நவீன கடற்றொழில் உத்திகளுக்கோ படகு, கட்டுமரம் போன்ற மீன்பிடிச் சாதனங்களுக்கோ இடமே இல்லை. முழுவதும் மரபு ரீதியிலான மீன்பிடிச் சாதனங்கள், மனித முயற்சியுடன் கூடியதாகப் பயன்படுத்தப்பட்டு வருவது உண்டு. அங்கு வீச்சுவலையாகவும் படுக்கை வலையாகவும் பயன்படுத்தப்படும் "நைலோன்" வலை மட்டும்தான் வெளியில் இருந்து பெறப்படுவது. மற்றவை எல்லாம் உள்ளூரில் பெறப்படுபவை.

சம்பந்தப்பட்ட தொழிலாளர்களின் முயற்சியின் வெளிப்பாட்டால் உருவாக்கப் படுபவை. தென்னோலை, தென்னோலையில் இருந்து பெறப்படும் ஈர்க்கு, ஈச்சம்மட்டை, தாழைவிழுதுநார், சூழலில் கிடைக்கும் புல்லாந்திச்செடியின் கம்புத்தடி மற்றும் சிறுகம்புகள், பனை ஓலையினால் பின்னப்படும் மீன் வைக்கும் கூடை, இது தற்பொழுது மறைந்து உரப்பசளை எடுத்துவரப்படும் "பை" என்பன பயன்படுத்தப்படுகின்றன. நூற்றுக்கு நூறு வீதம் மனிதவலுவுடன் கூடிய இந்த மீன்பிடி முயற்சியில் பிடிக்கப்படும் மீன்வகை ஐஸ் மற்றும் இரசாயனக் கலவைகளுக்கு உட்படாமல் துடிக்கத்துடிக்கச் சந்தைப்படுத்தப்படுவதும் அதன்சுவைக்கு சிறப்பாக உரிய காரணமாகும்.

வல்லைப் பரவைக்கடலில் மீன்பிடிக்கப்படும் இடங்களுக்கும், கண்டிகளுக்கும் இடப்பெயரும் காரணப்பெயரும் பயன்படுத்தப்படுவது உண்டு. அடியாறு, உப்புக்கழி, மேற்கு மாதுவில், கிழக்கு மாதுவில் ஆனைமிரிகல்லு, பாலத்தடி, முன்வளை கண்டி, பின்வளைகண்டி, அலவாய்க்கடல், பருக்குவெட்டி, முழக்கன், வாய்க்கால், மண்டான், மலையடி, பாலையடி, ஒற்றைப்பனை, காட்டுவாய்க்கால், பேராறு உள்ளிட்ட பல பெயர்களில் வழங்குவது உண்டு. தற்பொழுது இந்தப் பெயர்வகைகூட மறைந்து செல்கின்றன.

வல்லைப் பரவைக்கடல் மீன்பிடியில் அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர்ப் பகுதிகளைச் சேர்ந்த குடும்பங்களுக்கு வழிவழியாக சந்ததி உரிமை பேணப் பட்டதோடு, ஆங்கிலேயரது ஆட்சிக்காலத்தில் அந்த உரிமைகளுக்கு உறுதிகள் மற்றும் பதிவுகளும் உண்டு. இந்தக் கடலில் மீன்பிடிப்பது யாழ். குடாநாட்டின் மரபு ரீதியிலான "சாதி குலம்" சார்ந்த தொழில்முறையைக் கடந்து அந்தணர் அல்லாத மாமிசம் உண்ணும் சகல தரப்பினராலும் ஆரம்ப காலத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்ததாகவும், அது சுயதேவையை அடிப்படையாகக் கொண்டு நாளாந்த உணவுக்காக எல்லோரும் பயன்படுத்தியதாகவும் கூறப்படுகின்றது.

இது தொடர்பாக ஆரம்பகாலப் பதிவுகளில் உள்ளது என்றும் பிற்காலத்தில் உரிமைகள் பணக் கொடுப்பனவுகளுடன் கைமாறியதாகவும் கூறப்படுகின்றது. இதனை அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த 76 வயதிலும் பகுதிநேர மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுவரும் து.குணராசா பொருத்தமான ஆதாரங்களுடன் முன்வைத்தார்.

குறித்த காலப்பகுதியில் பரவைக்கடல் மீன்பிடி தொடர்பான அடிபிடி சண்டைகளும், தலைமைக்காரர்களின் சமாதானத் தீர்வுகளும், நடுத்தீர்ப்புக்களும் மேற்கொள்ளப்பட்டதோடு அவை தற்பொழுதும் நடைமுறையில் உள்ளன.

சமகாலத்திலும் கண்டி அமைக்கும் இடங்களில் படுக்கை வலை விரிப்பது, வலை வீசுவது குறித்த எல்லையை மீறி மீன்பிடியில் ஈடுபடுவது தொடர்பாக பிணக்குகள், கைப்பரிமாறல்கள் ஏற்படாமல் இல்லை.

வல்லைப் பரவைக்கடல் மீன்பிடியில் ஈடுபடும் தொழிலாளர்கள் தமது உரிமைகளையும் தொண்டு நிறுவனங்கள் இடையே உதவிகளையும் பெறுவதைக் கருத்திற்கொண்டு "பரவைக்கடல் மீன்பிடித் தொழிலாளர் சங்கங்களை" உருவாக்கி நிர்வகித்து வருகின்றனர். இந்தவகையில் அச்சுவேலியிலும், புத்தூர், ஆவரங்கால் பகுதிகளை உள்ளடக்கியும் தனித்தனியாகச் சில அமைப்புக்கள் செயற்படுகின்றன.

இந்த அமைப்புக்களில் உறுப்புரிமை பெற்றவர்களுக்குச் சில உதவிகளைத் தொண்டு நிறுவனங்கள் வழங்கியுள்ளபோதிலும் தொடர்ந்து காத்திரமான உதவிகள் கிடைப்பதில்லை எனக் கவலை தெரிவிக்கின்றனர்.

ஆழம் குறைந்த ஆபத்து இல்லாத பரவைக்கடலில் தனிமனித சுயமுயற்சியாக மேற்கொள்ளப்படும் தொழில் முயற்சிக்குப் பொருத்தமான முறையில் தொழில்நுட்ப ஆலோசனை வழிகாட்டலும் உதவிகளும் வழங்கினால் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் மேலும் உயர்வடையும்.

உதயன் - 16.12.2010, 23.12.2010



# 82 யாழ். மாவட்டத்தில் முதலாவது இருவழிப்பாதை அமைப்பு வலி.கிழக்கில்

வலி. கிழக்குப் பிரதேசத்தை ஊடறுத்துச் செல்லும் பிரதான வீதி யாழ்ப்பாணம் / பருத்தித்துறை நெடுஞ்சாலை ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் வலிகாமம் பெருநிலப்பரப்புடன் வடமராட்சிப் பகுதியை இணைப்பதற்காக நிர்மாணிக்கப்பட்டது. வலி.கிழக்கில் இருந்து வடமராட்சியைச் சென்றடைவதற்கான நுழைவாயிலாக அமைவது வல்லைப்பாலம்.

வல்லைப்பாலம் முழுமையாக முதிரைக்கல்லால் நிர்மாணிக்கப் பட்டிருந்தது. அதன் பாவனைக்காலம் மேலும் பல ஆண்டுகளுக்கு உரியதாக இருந்தபோதிலும் காலத்தின் தேவை கருதி அகலமாக்கப்பட்டு நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய நிலையில் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் மறுசீரமைக்கப்பட்டது. இருவழிப் பாதைக்கு ஏற்புடையதாக அகலமாக்கப்பட்டுள்ள வல்லைப்பாலத்தில் இருந்து புத்தூர் சந்தி வரையும் உள்ள 5.8 கிலோமீற்றர் தூரம் இருவழிப்பாதைக்கு ஏற்ற வகையில் அகலமாக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

வீதியின் நடுப்பகுதியிலிருந்து தலா 7 மீற்றர் தூரம் (22அடி) வீதியின் இரண்டு பக்கங்களும் அகலப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

44 அடி அகலமான வீதியின் பயன்பாடு இருவழிப்பாதைக்கு ஏற்புடையதாக மறுசீரமைக்கப்படுகின்றது. வீதி அகலமாக்கும் பணியின்போது நூற்றுக்கணக்கான பயன்தரும் தென்னை மரங்கள் மற்றும் மதில்கள் உடைக்கப்பட்டுள்ளது. பொது மக்கள் வீதி அகலமாக்குவதற்கு தங்களது காணியில் எவ்வளவு தேவையாயினும் விட்டுக்கொடுப்பதற்குத் தாராள சிந்தையுடன் ஒத்துழைக்கின்றனர். பல மதிற் சுவர்கள், வீடுகளின் முன்பக்கம், கிணறு, வியாபார நிலையங்கள் என பல்வேறு வகையான அமைப்புக்களும் உடைக்கப்பட்டு வீதி அகலமாக்கும் பணிக்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்டு வருகின்றது. 'எல்லைக்கதியால் ஒரு சில அங்குலம் அரக்குப்பட்டாலும் அடிபிடி சண்டை, நீதிமன்றம் என அலைந்து தனது நிலத்தை விட்டுக்கொடுக்காமல் பாதுகாக்கும்" யாழ்ப்பாண மரபில் பெரியளவில் நிலத்தை வீதி அபிவிருத்திக்காக விட்டுக் கொடுக்கும் வலி.கிழக்கு மக்களின் பெரும் தன்மை பாராட்டுக்குரியதுதான். இது தொடர்பாக வீதி அகலமாக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் தொழில்நுட்ப அதிகாரி ஒருவர் தனது உள்ளத்தில் இருந்து வெளியிட்ட கருத்து எல்லோரும் அறிந்துகொள்ள வேண்டியதாகும்.

கொழும்பில் கடமையாற்றிய எனக்கு யாழ் - பருத்தித்துறை வீதி அகலமாக்கும் பணிக்கு நியமிக்கப்பட்டிருப்பதாக அறிவித்தல் கிடைத்தபோது எனக்கு எதிர்பாராத மனக்குழப்பம் ஏற்பட்டது. வீதி அகலமாக்குவதற்கு எந்தவிதமான நஷ்டஈடும் வழங்காத நிலையில் கணிசமான அளவு நிலத்தை விடும்படி கேட்கும்போது பொதுமக்களோடு முரண்பட வேண்டிவருமே என சேவைக்காலத்தின் இறுதிப் பகுதியில் இந்தச் சிக்கல்வேலையைப் பொறுப்பேற்போமா? விடுவோமா? எனக் குழம்பிய நிலையில் எது எப்படி என்றாலும் எனது ஊருக்குச் செல்லும் வீதியை அபிவிருத்தி செய்வோம் என்ற நிறைவுடன் இருக்கலாம் என்ற சுயநலத்தோடு கூடிய நம்பிக்கையுடன் பொறுப்பேற்றேன்.

எனது பணியை ஆரம்பித்த போதுதான் தெரிந்தது நான் நினைத்தது தவறானது என்று. இந்த வீதியோரக் காணிக்காரர் எல்லோரும் மனம் கோணாமல் மிகவும் மகிழ்ச்சியான மனநிலையில் காணிகளை விட்டுத் தருவதற்காக வேலிகளை வெட்டி, மதில்களை இடித்துப் பூரணமான ஒத்துழைப்பை வழங்கினர். இவர்கள் வழங்கிய ஒத்துழைப்பு என்றும் நினைவுகூரத்தக்கது. எனக் கூறினார். வீதியை அகலமாக்கும் பணியின்போது அகலமாக்கும் வீதியிலுள்ள 18இற்கு மேற்பட்ட மதகுகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. கடந்தகாலத்தில் வெள்ளம் பாயாமல் மூடப்பட்டிருந்த மதகுகள் முழுமையாகத் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன.

மதகுகள் ஊடாக நீர் பாய்ந்தோடுவதற்கான வெள்ள வாய்க்கால் அமைப்பை பிரதேசசபை உரியமுறையில் பேண முன்வருமானால் எதிர்காலத்தில் வெள்ளப்

பெருக்கு அபாயம் ஏற்படமாட்டாது. இந்த விடயத்தில் வலி.கிழக்குப் பிரதேசசபை தனது பங்களிப்பை வழங்குவது கடந்த காலங்களில் அச்சுவேலி, புத்தூர் பகுதியில் ஏற்பட்டுவந்த வெள்ள அபாயம் அதனுடன் கூடிய பயிர் அழிவுகளை இல்லாமல் செய்யமுடியும். இது தொடர்பாக வலி.கிழக்குப் பிரதேசசபை மேற்கொள்ளும் நடவடிக்கையில்தான் எதிர்காலம் தங்கியுள்ளது.

வீதி மறுசீரமைப்பு பணிமூலம் அகலமாக்கப்படும் யாழ்ப்பாணம், பருத்தித்துறை வீதி, யாழ். மாவட்டத்தில் முதலாவது இருவழிப்பாதைப் போக்குவரத்துக்குரிய வீதியாகப் பயன்படுத்தப்படவுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் யாழ். மாவட்டத்தில் ஐந்து பிரதான வீதிகளை அகலமாக்குவதற்கு கடந்த சில வருடங்களுக்கு முன்னர் திட்டமிடப்பட்டபோதிலும் அந்த முயற்சி கைகூடவில்லை. அதில் ஒரு வீதியான யாழ் - பருத்தித்துறை வீதி வலி. கிழக்குப் பிரதேசத்தில் அகலமாக்கப்படுவது பொதுமக்களின் ஒத்துழைப்பினால் ஆகும். அந்தவகையில் வலி.கிழக்குப் பிரதேசம் பெருமை பெறுகின்றது.

உதயன் - 04.03.2010



ஊரை விட்டு, உறவு பிரிந்து, சிதறி வாழும் ஈழத்தமிழ் மக்களின் பூர்வீகம், பாரம்பரியம் மற்றும் வரலாற்றை ஆவணப்படுத்துவதும் அறிந்துணர வைப்பதும் காலத்தின் தேவையாகவுள்ளது. ஓய்வு பெற்ற ஆசிரியர் மாணிக்கம் ஞானலிங்கம் அவர்கள் எழுதியுள்ள 'விதைத்ததில் விளைந்தது" வலிகாமம் கிழக்குப் பிரதேச வலம் - பாகம் 1 என்ற இந்த நூல் அந்தப்பணியில் ஒரு புது வரவு.

2010 - 2013 காலப்பகுதியில் உதயன் நாளிதழில் வாராந்தம் வெளியான 82 கட்டுரைகள் நூலில் உள்ளன. வலிகிழக்குப் பிரதேசத்தில் உள்ள கல்விக்கூடங்கள், வழிபாட்டிடங்கள், சேவை நிலையங்கள், கூட்டுறவு அமைப்புக்கள் சனசமூக நிலையங்கள், நிர்வாக அலகுகள் மற்றும் கிராமங்களின் ஆரம்பம் முதல் கட்டுரை வெளியான காலம் வரையான தோற்றம், வளர்ச்சி மற்றும் சமூகப் பங்களிப்பை இக்கட்டுரைகள் விளக்குகின்றன.

நாம் போகிற போக்கில் தாண்டிச் செல்லும் அமைப்புகள் மற்றும் நிறுவனங்கள் பற்றி ஆழமான வியக்க வைக்கும் தகவல்களில் நூலாசிரியர் மாணிக்கம் ஞானலிங்கம் அவர்களின் தேடல் மற்றும் ஆய்வின் உழைப்பு துலாம்பரமாகத் தெரிகிறது.

39 ஆண்டு காலம் ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற இவர் 1982 இல் தினபதி - சிந்தாமணி பத்திரிகைகளின் கோப்பாய் பிரதேச செய்தியாளராக ஊடகத்துறையில் கால்பதித்து, பின்னர் ஈழநாடு நாளிதழில் பணியாற்றினார். இப்போது உதயன் நாளிதழில் தொடர்கிறார். அத்துடன் சமூக சேவையிலும் ஈடுபாடு கொண்டவர். இவற்றின் மூலம் இவர் பெற்ற அனுபவங்கள் நூலின் உள்ளடக்கம் மூலம் பரிணமிக்கின்றன.

இலகுவான மொழிநடை - துல்லியமான தகவல்கள் - ஒழுங்கு படுத்தப்பட்ட கட்டமைப்பு - இவை யாவற்றுக்கும் மேலாக தேடிப் பெற்ற அரிய ஆவணங்கள் எனப் பலவற்றைக் கொண்டு அமைப்புகளின் வரலாற்றை அற்புதமாக வெளிக்கொண்டு வந்துள்ளார் நூலாசிரியர்.

**ம.ஜனகேஸ்வரன்.**
முன்னாள் உதவி ஆசிரியர் - "உதயன்"
பயிற்றுநர்,
ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மையம்.
யாழ் பல்கலைக்கழகம்.

அபிராமி பதிப்பகம்

AnDRA Printers, Jaffna - 021-221 7279